மத்தேயு

மத்தேயு சுவிசேஷம் புதிய ஏற்பாட்டின் முதல் புத்தமாக வைக்கப்பட்டிருப்பது சாலப்பொருந்தும், ஏனெனில், இச்சுவிசேஷத்தின் பொருளடக்கம் பழைய, புதிய ஏற்பாடுகளை இசைவாய் இணைப்பதாக உள்ளது. இதன் ஆக்கியோன், அவர் வலியுறுத்தும் விஷயங்கள், சிறப்பு அம்சங்கள், பொருளடக்கம் ஆகியவை பற்றி நாம் படிப்போம்.

ஆக்கியோன்

மத்தேயு சுவிசேஷம் வரிவசூலிக்கும் ஆயக்காரனும், இயேசுவின் பன்னிரு சீஷர்களில் ஒருவருமாகிய மத்தேயுவினால் எழுதப்பட்டது (மத்தேயு 9:9-13;10:3). இவர் இதனை கி.பி.50-கி.பி.70க்கும் இடையில் எழுதியிருக்கக் கூடும்.

வலியுறுத்தும் விஷயங்கள்

இயேசு இன்னார் என்பதையும், அவரது போதனைகளையும் மத்தேயு வலியுறுத்தியிருக்கிறார். இயேசு தாவீது ராஜாவின் குமாரன் என்பதையும், மேசியாவைக் குறித்த பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றிய யூதரின் ராஜா என்பதையும் சுட்டிக் காட்டி, 60-க்கும் மேற்பட்ட பழைய ஏற்பாட்டு வசன ஆதாரங்களை இவர் குறிப்பிடுகிறார். இவர் குறிப்பிடும் மேசியாவைப் பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்க்கதரிசனங்களில் சில பின்வருமாறு.

அ. 1:23-இயேசுவின் பிறப்பு

ஆ. 2:6-அவரது பிறப்பின் இடம்

இ. 2:23-அவரது நாசரேத்து வீடு

ஈ. 3:3- அவரது முன்னோடியாகிய யோவான்.

உ. 8:17- அவரது குணமாக்கும் ஊழியம்

ஊ. 12:18-21- அவர் ஊழியம் செய்தல்

எ. 13:35- உவமை வாயிலாக அவர் போதிக்கும் முறைமை.

ஏ. 21:5- இஸ்ரவேலரிடத்தில் அவர் வரும் விதம்.

இவ்விதமாக, பழைய புதிய ஏற்பாட்டு மெய்ப்பொருளுக்கு இடையே அத்யாவசியமானப் பாலமாக மத்தேயு சுவிசேஷம் அமைந்துள்ளது. மற்றொரு தீர்க்கதரிசியாகவோ அல்லது போதகராகவோ அல்லாமல், ஓர் நாளில் பரலோக மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, ஜாதிகளை நியாயந்தீர்க்கவிருக்கும் தேவகுமாரனாகவே இயேசு இச்சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார் (16:13-20; 25:31,32). இவ்விதம் வலியுறுத்திக் கூறப்பட்டிருப்பதால், யூதர்களால் வெகுகாலமாக எதிர்பார்க்கப்பட்டவரும், அவருடைய வருகையைக் குறித்து அவர்களுடைய தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டவருமாகிய மேசியா இயேசுவே என்பதை யூதர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கு மத்தேயு சுவிசேஷம் பயனுள்ளதாயிருக்கிறது. இயேசுவின் ஊழியத்தின் முழு அர்த்தத்தையும் புறஜாதியிலிருந்து குணப்பட்டவர்கள் விளங்கிக் கொள்வதற்கும் இச்சுவிசேஷம் உதவியாயிருக்கிறது.

இயேசுவே மேசியா என வலியுறுத்துவதோடு கூட, இயேசுவின் போதனைகளுக்கும் மத்தேயு கவனத்தை ஈர்க்கிறார். உண்மையில், இச்சுவிசேஷத்தில் பாதிக்குமேல் போதனைகளை வலியுறுத்துகிறார்.

மத்தேயு

இயேசு சீஷர்களுக்குக் கொடுத்த கடைசி கட்டளையில் போதனைகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது மாத்திரமல்ல, இதுவரை சீஷர்களுக்குப் போதித்தவைகள் எல்லாவற்றையும் மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டியதின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. "நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி.. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" *(28:19,20)*.

சிறப்பு அம்சங்கள்

1. ராஜரீகமும், ராஜ்யமும் வலியுறுத்தப் பட்டுள்ளது. இயேசுவின் ராஜரீகத்தையும், ராஜ்யத்தையும் தெளிவுபடுத்துவது மத்தேயு சுவிசேஷம். இச்சுவிசேஷத்தின் துவக்கத்திலேயே, ராஜரீக யூதா வம்சத்தில், தாவீது ராஜாவின் கோத்திரத்தில் இயேசு பிறந்தார் என விளங்கப்படுத்தப்பட்டுள்ளது *(மத்தேயு 1:1,3)*. இயேசு அவதரித்தபொழுது அவரைத் தேடி வந்த சாஸ்திரிகள், "யூதருக்கு ராஜாவாகப்" பிறந்தவரைக் குறித்து விசாரித்தார்கள் *(2:1,2)*. மனுஷகுமாரன் "தன்னுடைய ராஜ்யத்தில்" வருவாரென இயேசு கூறினார் *(16:28)*. மத்தேயு சுவிசேஷம் முழுவதிலும் *38* இடங்களில் "பரலோக ராஜ்யம்" அல்லது "தேவனுடைய ராஜ்யம்" பற்றி கூறப்பட்டுள்ளன. சிலுவையில் அறையப் படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன் சகரியா 9:9-இல் கூறப்பட்டத் தீர்க்கதரிசனத்தை இயேசு நிறைவேற்றி எருசலேமின் ராஜாவாக அதற்குள் பிரவேசித்தார் *(மத்தேயு 21:1-11)*.

இயேசுவை ராஜாவாக ஏற்றுக் கொள்ள யூதர்கள் தவறிய போதிலும், மற்றவர்கள் அவரை அங்கீகரித்தார்கள். சுகவீனமாயிருந்த தன் குமாரத்திக்காக கிறிஸ்துவிடம் வந்த கானானிய ஸ்திரீ, "தாவீதின் குமாரனே" என ராஜரீகப் பட்டப் பெயருடன் அவரை அழைத்தாள் *(15:21)*. இயேசு சிலுவையில் அறையப்பட்ட பொழுது பிலாத்து, "இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு" என எழுதி அதை இயேசுவின் சிரசுக்கு மேலாக வைக்கும்படிச் செய்தான்.

2. புறஜாதிகளின் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மத்தேயு புறஜாதிகளிடத்தில் ஆர்வங்காட்டுவதற்கு ஏதுவாயிருந்த உண்மைச் சம்பவங்களைத் தனது சுவிசேஷத்தில் சேர்த்திருக்கிறார். இயேசுவின் மூதாதையர்களைப் பற்றி எழுதும்பொழுது இரண்டு புறஜாதிப் பெண்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார் *(1:5, ராகாப், ரூத்)*. இயேசு பாலகனைப் பணிந்து கொள்ளும்படி கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகளைப் பற்றி எழுதியிருக்கிறார் *(2:1-2)*. தேவனுடைய ராஜ்யம் யூதர்களிடமிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் (புறஜாதிகளுக்கு) கொடுக்கப்படும் என்று இயேசு கூறிய வார்த்தைகளை மத்தேயு எடுத்தெழுதியிருக்கிறார் *(21:43)*. "சகல ஜாதிகளையும் சீஷராக்கும்படி" தமது சீஷர்களுக்கு இயேசு கொடுத்த மகத்தான கட்டளையுடன் இவர் தனது சுவிசேஷத்தை முடிக்கிறார் *(மத்தேயு 28:19)*

3. சபை குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு சுவிசேஷங்களிலும் மத்தேயு சுவிசேஷத்தில் மாத்திரமே "சபை" என்றும் வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளது *(16:18; 18:17)*.

4. இதர சிறப்பு அம்சங்கள். மற்ற சுவிசேஷங்களில் சொல்லப்படாத ஒன்பது சம்பவங்களும், பத்து உவமைகளும், மூன்று அற்புதங்களும் மத்தேயு சுவிசேஷத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றில், இயேசுவின் தகப்பனாகிய யோசேப்பின் சொப்பனம் *(1:20-24)*, பிசாசு பிடித்த ஊமை குணமடைந்தது *(9:32,33)*, களைகளும் *(13:24-30, 36-43)*, தாலந்துகளும் *(25:14-30)* பற்றிய உவமைகள் ஆகியவை அடங்கும்.

மத்தேயு

பொருளடக்கம்

மத்தேயு சுவிசேஷத்தின் பொருளடக்கம் இரண்டு முக்கிய அம்சங்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது. ஒன்று, இயேசுவின் வாழ்க்கைச் சம்பவங்கள், மற்றொன்று, இயேசுவின் போதனைகள். இவ்விரண்டு அம்சங்களின் பிரிவுகளைக் குறிக்கும் விதத்தில் மத்தேயு சுவிசேஷத்தில் குறிப்பிட்ட வாசகங்கள் மீண்டும், மீண்டும் கூறப்பட்டுள்ளன. இதனைக் கீழே காண்போம்.

இயேசுவின் வாழ்க்கைச் சம்பவங்கள் இரண்டு அடிப்படைக் காலங்களாகப் பிரிக்கப் படுகின்றன. 1) பகிரங்கமாக அங்கீகரிக்கப்பட்டு கீர்த்தி பெற்ற காலம் (மத்தேயு 4:17-16:20). 2) பகிரங்கமாகப் புறக்கணிக்கப்பட்டு வீழ்ச்சியடைந்த காலம் (16:21-28:10) இப்பிரிவுகள் ஒவ்வொன்றும், "அதுமுதல் இயேசு...தொடங்கினார்" (4:17; 16:21) என்னும் வார்த்தைகளுடன் அறிமுகப்படுத்தப் படுகின்றன. தமது ஊழியத்தின் குறிப்பிட்டக் காலத்திற்குப் பிறகு, தம் சீஷர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் இயேசு கவனம் செலுத்தினார் என்பதை இந்தப் பிரிவு வெளிப்படுத்துகிறது.

மத்தேயு சுவிசேஷத்தில் சேர்க்கப் பட்டுள்ள இயேசுவின் போதனைகள் ஐம்பெரும் பகுதிகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. (அதிகாரங்கள் 5:7,10; 13; 18; 24,25).

இப்பகுதிகள் ஒவ்வொன்றும் இந்த வாசகத்துடன் முடிவடைகின்றன. "இயேசு இந்த வசனங்களை சொல்லி முடித்த பின்பு (7:28; 11:1; 13:53; 19:1; 26:1).

வகைப்படுத்தப்பட்ட இந்த ஐம்பெரும் போதனைப் பகுதிகளோடுங்கூட, போதனையுடன் சம்பந்தப்பட்ட வேறு இரு பகுதிகளும் உள்ளன. அவையாவன: யோவான் ஸ்நானனின் பிரசங்கம் (3:1-12), மகத்தான கட்டளை (28:18-20). இயேசுவின் போதனைகளுடன் சம்பந்தப்பட்ட இந்த ஏழு பகுதிகளும் கீழ்க்கண்டுள்ள சுவிசேஷக் குறிப்புகளின் உபதலைப்புகளின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

மத்தேயு: மேசியா-ராஜாவின் சுவிசேஷம்

1. ராஜா அறிமுகப்படுத்துகிறார் (1:1-4:11).

   யோவான் ஸ்நானனின் பிரசங்கம் (3:1-12)

2. ராஜா ராஜ்யத்தைப் பற்றி அறிவிக்கிறார் (4:12-15:20).

   மலைப்பிரசங்கம் (5:1-7:29).

   சீஷர்களுக்கு ஊழியம் செய்தல் (10:1-42).

   உவமைகள் (13:1-52).

3. ராஜா புறக்கணிக்கப்படுகிறார் (15:21-20:34).

   மன்னிப்பின் அர்த்தம் (18:1-35).

4. ராஜாவின் ஜெயம் (21:1-28:20).

   கடிந்து கொள்ளுதலும், தீர்க்கதரிசனமும் (23:1-25:46).

   மகத்தான கட்டளை (28:18-20).

நாம் மத்தேயு சுவிசேஷத்தை வாசிக்கும்பொழுது ஆண்டவராகிய கிறிஸ்துவை மகிமைவாய்ந்த, வெற்றி சிறந்த ராஜாவாகக் காண்கிறோம்.

மத்தேயு

சாத்தான் அவரை மேற்கொள்ள முடியவில்லை. அவருடைய சத்துருக்கள் அவரைத் தடைசெய்ய இயலவில்லை. மரணம் அவரைக் கட்டக் கூடாதிருந்தது. கிறிஸ்துவின் ராஜரீகத்தை நாம் ஒருபோதும் சந்தேகிக்காமல் இருப்போமாக. இதற்கு மாறாக, இராஜாவும், ஆண்டவருமாக அவர் நம் இருதயங்களில் ஆளுகை செய்யும்படி நாம் அவரை அழைப்போமாக. அப்படியானால் அவர் வரும்போது நாம் அவருடைய ராஜ்யத்தில் சேர்க்கப்படுவோம்.

முக்கியமானத் தகவல்களின் மறுபார்வை

1. பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவராகிய ஆயக்காரனாகிய மத்தேயுவினால் மத்தேயு சுவிசேஷம் எழுதப்பட்டது.

2. மத்தேயுவலியுறுத்தும் முக்கியமானவைகள்:

அ. ராஜாவாகிய தாவீதின் குமாரனாகவும் பழைய ஏற்பாட்டின் மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றிய யூதர்களின் ராஜாவாகவும் இயேசுவை அடையாளங் காட்டுதல்.

ஆ. இயேசுவின் போதனைகள் (சுவிசேஷத்தில் பாதிக்கு மேற்பட்டவை).

3. மத்தேயுவில் அடங்கும் சிறப்பு அம்சங்கள்:

அ. இயேசுவின் "ராஜரீகமும்", "ராஜ்யமும்".

ஆ. புறஜாதிகளிடம் கவனம் செலுத்தப் படுதல்.

இ. சபை பற்றி குறிப்பிடப்படுதல்.

ஈ. இதர சுவிசேஷங்களில் இடம்பெறாத சம்பவங்கள், உவமைகள், அற்புதங்கள்.

4. மத்தேயு சுவிசேஷத்தில் இயேசுவின் வாழ்க்கைச் சம்பவங்கள் இரண்டு அடிப்படைக் காலங்களாகப் பிரிக்கப்படுகின்றன. 1. வெளியரங்கமாக அங்கீகரிக்கப்பட்டு, கீர்த்தி பெற்ற காலம் *(4:17-16:20)* 2. வெளியரங்கமாகக் புறக்கணிக்கப்பட்டு, வீழ்ச்சியுற்ற காலம் *(16:21-28:10)*. இவ்விரண்டு பிரிவுகளும், "அது முதல் இயேசு... தொடங்கினார்" என்னும் வார்த்தைகளுடன் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

5. மத்தேயுவில் இயேசுவின் போதனைகள் ஐந்து முக்கியப் பிரிவுகளாகப் பகுக்கப் பட்டுள்ளன. இப்பிரிவுகள் ஒவ்வொன்றும், "இயேசு இவைகளைச் சொல்லி முடித்த பின்பு..." என்னும் வாசகத்துடன் முடிவடைகிறது.

அ. மலைப்பிரசங்கம் *(5:1-7:29)*.

ஆ. சீஷர்களுக்கு ஊழியங் கையளிக்கப் படுதல் *(10:1-42)*.

இ. உவமைகள் *(13:1-52)*.

ஈ. மன்னிப்பின் அர்த்தம் *(18:1-35)*.

உ. கடிந்து கொள்ளுதலும், தீர்க்கதரிசனமும் *(23:1-25:46)*

6. மத்தேயு மேசியா-ராஜாவைப்பற்றிய சுவிசேஷம் ஆகும்.

அ. ராஜா அறிமுகப்படுத்தப்படுகிறார் *(1:1-4:11)*.

ஆ. ராஜா ராஜ்யத்தைப் பற்றி அறிவிக்கிறார் *(4:12-15:20)*.

இ. ராஜா புறக்கணிக்கப்படுகிறார் *(15:21-20:34)*.

ஈ. ராஜாவின் ஜெயம் *(21:1-28:20)*.

ஞானிகளும் இயேசுவின் நட்சத்திரமும்
மத்தேயு 2:1-12

முன்னுரை

அ. யூதேயாவில், எருசலேமுக்கு சுமார் ஐந்து மைல் தூரத்திலுள்ள பெத்தலெகேம் என்ற சிற்றூரில் இயேசு பிறந்தார். ரோம பேரரசர் அதிகாரத்தின் கீழ் அரசாண்ட ஏரோது இராஜாவின் காலத்தில் (37-4 கி.மு.) அவர் அவதரித்தார். அவன் தன்னுடைய மனைவி, மூன்று குமாரர்கள், மாமியார், கொழுந்தன், மாமன், மற்றும் அநேகரும், பெத்லேகேமின் குழந்தைகள் உட்பட, இவர்கள் யாவரையும் கொலை செய்த இரக்கமற்ற, கொலைகார அரசன். (வசனம் 16)

ஆ. கிழக்கிலிருந்து (ஒரு சமயம் பெர்சியா அல்லது அரேபியா பாலைவன பக்கங்களிலிருந்து) வானத்தில் இயற்கைக்கு மேலாக (அற்புதமாக) காணப்பட்ட நட்சத்திரத்தைக் கண்ட மாகூஃஸ் என்று அழைக்கப்பட்டவர்கள், (புனித சன்மார்க்கப் பரம்பரையைச் சார்ந்த, முதன் முதலில் தோன்றிய மத அடிப்படையில் உள்ள விஞ்ஞானிகள், மற்றும் உயர்ந்த கல்வி அறிவையுடைய வானசாஸ்திரிகள் - பல பரம்பரையில் தோன்றிய ஞானிகள்) இயேசு பிறந்த சில காலத்திற்குப் பின் எருசலேமிற்கு வந்தார்கள்.

இ. எருசலேமிற்கு அவர்கள் வந்து சேர்ந்தபோது இவ்வாறு கேட்டார்கள். "யூதர்களுக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" அவர்கள் இந்த நட்சத்திரத்தைக் குறித்தும், தாவீது இராஜாவின் சிம்மாசனத்திலிருந்து அரசாளப்போகும், வெகு காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் யூதர்களின் அரசன் பிறப்பின்போது அது தோன்றும் என்றும், எப்படியோ அறிந்திருந்தனர்.

ஈ. எண்ணாகமம் 24:17, உள்ள தீர்க்கதரிசனம் இந்த நட்சத்திரத்தைக் குறித்தது என்றும், பாபிலோனிய சிறையிருப்பின்போதும், அதற்குப் பின்னும் அவர்களுடைய சொந்த நாட்டில் வாழ்ந்த யூதர்களிடமிருந்து, இந்த ஞானிகள் இதை அறிந்திருக்கக்கூடும் என்றும் சிலர் நினைக்கின்றனர்.

1. மதியீனர்கள் இந்த நட்சத்திரத்தை ஒருபோதும் பார்க்க முடியாது. (2:3-8)

அ. வசனம் 3. "ஏரோது இராஜா அதைக் கேட்ட போது, அவனும் அவனோடே கூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள்". அவனுடைய அரசாட்சிக்கு எதிராக அச்சுறுத்துபவர் எவராக இருப்பினும் அவர்களை கொலை செய்யும் மற்றொரு வன்முறை சம்பவம், அரசனால் மேற்கொள்ளப்படும் என்பதை அறிந்து, எரிச்சலடைந்தனர், சினமுற்றனர். கலக்கமடைந்தனர், குழம்பினார்கள். அத்துடன் மிகவும் பயப்பட்டனர். "எருசலேம் நகரத்தார் அனைவரும்"

ஆ. வசனம் 4-8, அவன், பிரதான ஆசாரியர், ஜனத்தின் வேதபாரகர், எல்லாரையும் கூடிவரச் செய்து கிறிஸ்துவானவர், (மேசியா-தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவர்) எங்கே, பிறப்பார் என்று அவர்களிடத்தில் விசாரித்தான். அவனுடைய இராஜ்ஜியத்திற்கும், அரசாட்சிக்கும், அச்சுறுத்தும் இக்காரியத்தை முற்றிலும் தன்னை விட்டு நீங்கிப் போவதற்கான நடவடிக்கைகளை, இப்பொழுது ஏரோது எடுத்துக் கொண்டிருந்தான்.

1. ஆசாரியர்களிடமிருந்தும், நியாய சாஸ்திரிகளிடமிருந்து, யூதர்களுக்கு இராஜாவானவர் எங்கே பிறப்பார் என்பதை கண்டுபிடித்தான். (வேதபாரகர்கள்-மல்கியா 5:2 வசனத்தை மேற்கோளகக் காட்டினர். வசனம் 5-6 பார்க்கவும்)

ஞானிகளும் இயேசுவின் நட்சத்திரமும்

மத்தேயு 2:1-12

2. மாகஃஸ் என்பவர்களிடமிருந்து, இழக்கிலே நட்சத்திரம் முதலில் தோன்றின காலத்தை அறிந்து கொண்டான் (வசனம் 7)

3. குழந்தையைக் கண்டுபிடித்து, எருசலேமிற்கு திரும்பி வந்து, குழந்தை எங்குள்ளது என்பதைப் பற்றிய விபரங்களை தனக்கு அறிவிக்கும்படி, அறிவுறுத்தி மாகஃஸ் (வான சாஸ்திரிகள்) என்பவர்களை பெத்லகேமிற்கு (மல்கியா 5:2, கூறப்பட்ட இடம்) அனுப்பினான். (வசனம் 8) அவன் அங்கு போய் குழந்தையை வணங்க விரும்புவதாகக் கூறி மாகஃஸ் என்பவர்களை ஏரோது ஏமாற்ற முயற்சித்தான்-உண்மையில் அவன் குழந்தையைக் கொல்ல விரும்பினான். (வசனம் 8)

இ. 1. முடிவாக மாகஃஸ் என்பவர்கள் கிழக்கிலிருந்து சென்ற இரண்டு வருடங்களில் நல்ல நாட்களில் எருசலேமிற்கு செல்வதற்கு செலவிட்டனர். அவர்களுக்கு எருசலேமிற்குச் செல்ல வழிதெரிந்ததோ அல்லது அந்த நட்சத்திரம் இந்த பட்டணத்திற்கு அவர்களை வழி நடத்திச் சென்றதோ என்பது திட்டமாக தெரியப்படவில்லை, இரண்டு வருட பிரயாணம் என்பது ஏரோது, "தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த காலத்தின் படியே, (நட்சத்திரம் தோன்றின காலம்) பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதிற்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளையும் கொலை செய்தான்" என்ற ஏரோதின் கட்டளையின், அடிப்படையில் தெரியவருகிறது. (2:16)

ஈ-எப்படியோ, ஏரோது அரசனுக்கு அந்த நாட்சத்திரமும், குழந்தை இயேசுவும் ஒரு போதும் அவன் பார்க்கும்படியாகக் காணப்படவில்லை. குழந்தை இயேசுவைக் கண்டு, அவரை வணங்கி, விலையேறப்பெற்ற வெகுமதிகளை அவருக்குக் கொடுத்த பின் மாகஃஸ் சொப்பனத்தில் அறிவுறுத்தப்பட்டனர்.

1. எருசலேமிற்குத் திரும்பிச் சென்று ஏரோதுவிற்கு அறிவிக்கக் கூடாது.

2. அவர்களுடைய தேசத்திற்கு (கிழக்கிலுள்ள) வேறு வரியாகத் திரும்பிச் செல்ல வேண்டும். (2:12)

உ. ஏரோது இராஜாவைப் போல் இயேசுவுக்குத் தீங்கிழைக்கும்படியாக தேடுகிறவர்களும் பின்பற்ற விரும்புகிறவர்களும், குழந்தை இயேசுவுக்கு வழிநடத்தும் நட்சத்திரத்தைப் பார்க்க முடியும். ஆனால், தங்களுடைய சொந்த நன்மைக்காக அவரைத் தேடுபவர்கள், அவனைக் கண்டு பிடிப்பது மட்டுமல்லாமல், அவர்கள் பாவ மன்னிப்பையும், பிதாவாகிய தேவனுடன் ஐக்கியப்படும் ஒரு புதிய வாழ்க்கையையும் பெற்றுக் கொள்வார்கள்! (ஏசாயா 55:6, எரேமியா 29:13)

2. ஞானிகளை, நட்சத்திரம் இயேசுவிடம் வழிநடத்துகிறது 2:9-10

அ. வசனம் 9. "இராஜா சொன்னதை அவர்கள் கேட்டுப் போகையில், இதோ, அவர்கள் கிழக்கில் கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும்வரைக்கும், அவர்களுக்கு முன் சென்றது." இயேசுவைக் காண அவர்கள் தேடிச்சென்றபோது, அந்த நட்சத்திரம், அவர்களுக்கு முன்பாக மறுபடியும் தோன்றினது, தற்செயலாக நிகழ்ந்த ஒரு காரியமல்ல. அவர்களுடைய நோக்கங்கள் உன்னதமானது.

ஞானிகளும் இயேசுவின் நட்சத்திரமும்
மத்தேயு 2:1-12

நட்சத்திரத்தைப் பின்பற்றிச் சென்றதின் அவர்களுடைய முதல் காரணம், குழந்தையைக் கண்டுபிடித்து, அவரை வணங்கி, அவருக்குக் கனமும், மகிமையும் செலுத்துவதற்காகும்.

ஆ. வசனம் 9-10. "பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நின்றது". ஞானிகள், இயேசுவை முன்னணையில் சென்று பார்த்ததாக அநேகர் இன்னும் நினைக்கின்றனர். உண்மையில், சில மாதங்களுக்கு பின், பெத்லெகேமில் அவருடைய வீட்டில் சிறு பிள்ளையாகக் கண்டனர். ஆகவே, அந்த நட்சத்திரம், இயேசுவும் அவருடைய தாயாரும் தங்கியிருந்த வீட்டின் மேல் நின்றது. அது இயேசு பிறந்த முன்னணியின் மீது அல்ல. (வசனம் 11, லூக்கா 2:7,16 பார்க்கவும்)

இ. வசனம் 10. "அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்ட போது மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்". அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள், மிகவும் களிப்புற்றனர், தங்களுக்குள் நல்ல ஈவைக் கண்டனர்.

ஈ. நட்சத்திரத்தைப் பின் சென்று, இந்த நட்சத்திரத்தைப் பின்பற்றி, பிள்ளையாகிய இயேசுவைக் கண்டவர்கள், இவ்வாறே தங்கள் உள்ளங்களில் உண்மையாகவே உணர்ச்சி பெறுகி, கிரியை நடப்பிப்பார்கள். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுடன் புதிய ஐக்கியத்திற்குள் வருவதைக் கண்டவர்கள் கீழ்க்கண்ட ஈவுகளைப் பெற்றுக் கொள்வார்கள்.

1.அவர்களுடைய இருதயத்திலும், மனதிலும், சமாதானத்தை அனுபவிப்பார்கள்.

2. சன்மார்க்க காரியங்களில் தவறிழைத்தவர்கள், மேலும் குற்ற உணர்வுடையவர்களாக, இருக்க மாட்டார்கள்.

3. கோரமான மரணத்திற்கும், நித்தியமாக தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு தண்டிக்கப்படும் நியாயத் தீர்ப்பு இனி அவர்களுக்குக் கிடையாது என்பதை அறிந்து கொள்வார்கள்.

3. ஞானிகள் நட்சத்திரத்தைப் பின் சென்று, இயேசுவை வணங்குகிறார்கள் 2:11-12

அ. வசனம் 11. "அவர்கள் வீட்டிற்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டார்கள்". இயேசுவையும், அவருடைய தாயாராகிய மரியாளையும் சேர்ந்துக் கூறும்போது, இயேசுவை எப்போதும் முதலாவது வைத்துக் கூறுவதின் மூலம், அவருக்கு மிக மேன்மையான கனத்தைக் கொடுப்பது குறிப்பிடத்தக்கது. (வசனம் 13-14, 20-21 பார்க்கவும்) ஞானிகள், நட்சத்திரத்தைப் பின் சென்று காணச் சென்றது யூதர்களின் ஒரே இராஜாதி இராஜாவாகிய இயேசுவை மாத்திரமேயன்றி, அவருடைய தாயாரை அல்ல.

ஆ. வசனம் 11. "சாஷ்டாங்கமாய் விழுந்து அவர்கள் பணிந்து கொண்டார்கள்". ஆகவே, அவர்கள் சாஷ்டாங்கமாய் விழுந்து அவரைப் பணிந்து கொண்டார்கள்; அவருடைய தாயாரை அல்ல. அவருக்கு முன்பாக, எழுதப்பட்டதின் படியே, கீழே விழுந்து பணிந்து கொண்டார்கள். அவருக்கு மிகுந்த கனத்தையும், பயபக்தியையும், காட்டி அவரை மகிமைப்படுத்தினார்கள். தன்னுடைய எஜமானுக்கு கீழ்ப்படியும்படியாக அணுகும்போது, எஜமானுடைய கைகளை முத்தமிட்டு, வாலை ஆட்டும் நாய் போல் அவர்கள் நடந்து கொண்டார்கள்.

ஞானிகளும் இயேசுவின் நட்சத்திரமும்

மத்தேயு 2:1-12

இ. வசனம் 11. "தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப் போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்". மூன்று பரிசுகள் கொடுக்கப்பட்டதினால், மூன்று ஞானிகள் இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. உண்மையில் இதற்கு அதிகமாக அல்லது குறைவாக இருக்கக் கூடும். அநேகமாக அதிகமாக இருக்கலாம். ஒரு அரசனுக்குத் தகுதியான பரிசுகளை அவர்கள் வித்தியாசமின்றி வெகுமதியாக அளித்தனர்:

1. பொன்-விலையேறப்பட்ட உலோகம்

2. தூபவர்க்கம்-சாம்பிராணி மரங்களின் பட்டையில் துளையிடும் போது வெளிவரும் பளபளப்பான வாசனைவீசும் பசை.

3. வெள்ளைப்போளம்-அரேபியா மற்றும் ஒரு சில இடங்களில் காணப்படும் ஒரு வகையான மரத்திலிருந்து மெதுவாக ஒழுகும் வாசனைப் பொருள். இது மிக அதிகம் மதிக்கப்படும் வாசனைப் பொருள் மற்றும் நறுமணம் வீசும் திரவம். இது மரித்த உடல் பாதுகாக்கப்பட சுகந்த வர்க்கமிட பயன்படும். வசனம் 11. சங்கீதக்காரனும், ஏசாயா தீர்க்கதரிசியும் கூறின தீர்க்கதரிசன வார்த்தைகளின் நிறைவேறுவதாக இருக்கலாம். (சங்கீதம் 72:10-11; ஏசாயா 60:6)

ஈ. இந்த நட்சத்திரத்தைப் பின்சென்று இயேசுவைக் கண்டடைந்த மற்ற யாவரும் கூட அவரை இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதிக் கர்த்தராகவும் அறிந்து தாழ கீழே விழுந்து வணங்கி, முடிவில் அவருக்கு விலையேறப்பட்ட பரிசுகளை வெகுமதியாகக் கொடுப்பார்கள். (ரோமர் 12:1)

அவர்கள் இதைச் செய்வதற்கான இரண்டு காரணங்கள்:

1. ஏனெனில் அவர் அப்படிப்பட்டவர். ஏனெனில் அவர் நித்திய அரசர் இராஜாதி இராஜா; கர்த்தாதி கர்த்தா (1தீமோத்தேயு 1:7; 6:15; வெளிப்படுத்தின விசேஷம் 15:3, 17:14, 19:16)

2.அவர்களுக்கு அவர் செய்தவைகளுக்காக- அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்டு, பிதாவாகிய தேவனுடன் ஐக்கியப்படும் புதிய வாழ்க்கையைக் கொடுத்ததற்காக(1நாளாகமம்16:29,சங்கீதம் 95:6)

முடிவுரை

அ. ஒரு நல்ல தெளிவான நிலவொளி இரவில், நட்சத்திரங்களை நாம் நோக்கிப் பார்க்கும்போது, ஞானிகளுக்கு இயேசுவின் பிறப்பையும், அவர் இருக்கும் இடத்தையும் அறிவித்த அற்புத நட்சத்திரத்தைக் குறித்து தியானிக்கலாம்.

ஆ. அந்த நட்சத்திரம் நமக்கு என்ன செய்தியைக் கொண்டு வந்தது என்பதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கலாம். கிறிஸ்துவைக் கண்டடையாமல் நாம் யாவற்றையும் இழந்து விடுவோம், நம்முடைய உழைப்பெல்லாம் வீணாகும். இந்த ஞானிகளுக்காவும், இயேசுவின் நட்சத்திரத்திற்காகவும் தேவனைத் துதி:

1. மதியற்றவர்கள் ஒருபோதும் நட்சத்திரத்தைப் பார்க்க மாட்டார்கள்.

2. ஞானிகள், அப்படியாயினும் நட்சத்திரத்தைப் பின்பற்றுவார்கள்.

3. அவர்கள், அந்த நட்சத்திரம் நடத்திச் சென்று காட்டும் அந்த ஒருவரைக் காணும் போது, அவர் முன்பாக தாழ விழுந்து, அவரைப் பணிந்து கொண்டு, அவர்களுடைய உலக செல்வங்களை அவரக்கு வெகுமதியாக படைப்பார்கள்!

இயேசுவின் ஞானஸ்நானம்
மத்தேயு 3:13-17

முன்னுரை

அ. இந்த சம்பவம், கிறிஸ்துவின் மேசியா ஊழியத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. இது இயேசுவுக்குத், தம்மைத் தாமே பிதாவுக்கும், அவருடைய சித்தத்திற்கும், யாவரும் அறிய அர்ப்பணிக்க ஒரு தருணம் கொடுத்தது. அது கீழ்க்கண்ட காரியங்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது:

1. அவரை மேசியா என்றும், தேவ ஆட்டுக்குட்டி என்றும் யோவான் அறிக்கையிட்டதை இயேசு இங்கு மற்றவர்களுக்கு அடையாளம் காட்ட முடிந்தது.

2. பரிசுத்த ஆவியானவரும், பிதாவும் இயேசுவோடும் அவருடைய ஊழியத்தோடும் ஒன்று சேர்ந்து தங்களை வெளிப்படுத்தினார்கள்.

1. எல்லா நீதியையும் நிறைவேற்ற இயேசு ஞானஸ்நானம் பெற்றார். (3:13-15)

அ. வசனம் 13. "அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு, இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அவனிடத்தில் வந்தார்". "ஞானஸ்நானம்" பெறுவதற்கு என்பது, தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதைக் குறிக்கிறது. இது, முழுவதும் நீரில் நனைந்து ஈரமாவது என்று அர்த்தப்படும், அல்லது நீரில் முற்றிலும் மூழ்கி இருப்பது. நன்றாக நனைந்து ஊறிப்போவது. (ஒரு துண்டு துணியின் நூல்கள் அனைத்தும் சாயம் ஏறி இருப்பது போல்)

ஆ. இயேசு கலிலேயாவில் இருந்தார் என்று தெளிவாகத் தெரிகிறது. எகிப்திலிருந்து திரும்ப வந்த பிற்பாடு, நாசரேத் ஊரில், யோசேப்புடனும் மேரியுடனும் வசித்து வந்தார் என்று, மாற்கு, தனிப் பட்டமுறையில் குறிப்பிட்டுக் கூறுகிறார். (மாற்கு 1:9; மத்தேயு 2:19-21, 23) "அப்பொழுது இயேசு வந்தார்" என்பது "எல்லா மக்களும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டிருக்கும்போது" என்று பொருள்படும் (யோவானால் யோர்தான் நதியில்) இயேசுவும் கூட ஞானஸ்நானம் பெறும்படி வந்தார். (லூக்கா 3:21)

இ. வசனம் 14. "யோவான் அவருக்குத் தடை செய்து—" "தடை" என்பது, அது நடைபெறுவதை தடுப்பது அல்லது நிறைவேறாமல் போக முயற்சிப்பது, என்று பொருள்படும். இதை தொடர்ந்து இதற்கான காரணம் தெளிவாகத் தெரிகிறது. (யோவான் இயேசுவிடம் கூறுவதிலி ருந்து)

ஈ. வசனம் 14. "நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?" (ஞானஸ்நானம் பெற) இயேசு அவருடைய தெய்வீகத் தன்மையோடு, மானிட தன்மையை இணைத்திருந்த போதிலும் அவர் பாவம் இல்லாதவராக இருந்தார். (பிலிப்பியர் 2:7-8; 2கொரிந்தியர் 5:1; எபிரெயர் 4:15) அடுத்தபக்கம் யோவான், தான் ஒரு பாவி என்றும், மேசியாவிற்கு ஞானஸ்நானம் கொடுக்கதான் தகுதியற்றவன் என்றும் அறிந்திருந்தான். ஆகவே அவன் இயேசுவால் பெற, தன் விருப்பத்தைத் தெரிவித்தான்.

1. தன்னுடைய பாவங்களுக்காக அவன் மனந்திரும்பியதற்கு அடையாளமாக.

2. தன்னைத் தான் தாழ்மைப் படுத்தவும், அவனுடைய சேவையை அவருக்கு அளிக்கவும். (3:1-3,11)

இயேசுவின் ஞானஸ்நானம்

மத்தேயு 3:13-17

உ. யோவான், இயேசுவால் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதையும் அறிந்திருந்தார், என்று இது பொருள்படும். (3:11; மாற்கு 1:8; அப்போஸ்தலர் 2:1-4 பார்க்கவும்) இது அவருடைய மக்களுடைய வாழ்க்கை தமக்குச் சொந்தம் என்பதை முத்திரையிட்டு காட்டுகிறது. இது கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய நித்திய சுதந்திரத்திற்கு உறுதியளிப்பதாகவும் இருக்கிறது. (எபேசியர் 1:13-14; 2கொரிந்தியர் 1:22; 5:5) அத்துடன் கிறிஸ்துவுக்கு சாட்சியாயிருக்க வல்லமையும் வருகிறது. (பரிசுத்த ஆவியின்) (அப்போஸ்தலர் 1:8)

ஊ. வசனம் 15. "இயேசு அவனுக்குப் பிரதியுத்திரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார்". இது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதால், இதற்கு இதுவே ஏற்ற நேரம் அத்துடன் இதுவே செய்ய வேண்டிய காரியம். (எல்லா நீதியையும்-கலாத்தியர் 4:4-5) இயேசு, யோவானால் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றது:

1. அவரை யோவானுடைய ஊழியத்துடன் ஒன்றுபடுத்தி அறிமுகப்படுத்தியது.

2. பிதாவின் சித்தத்தை செய்யவும், இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே, அவர் அர்ப்பணிக்கப்பட்டவர் என்பதற்கு சாட்சி கொடுத்தது.

3. நீதிபாவதற்குரிய அளவுகளை, அவர் முழுமையாய் (ஒரு நேர்மையான, கபடமற்ற, பரிசுத்தவானாக அவர்முன் நிற்க) தேவனுக்கு சாட்சியானார் (வசனம் 13, எபிரெயர் 9:26-28; ரோமர் 3:24-26; 4:25)

யோவான் மறுத்துக்கூறியது மதிப்பற்றது என்று இயேசு கூறவில்லை (வசனம் 15) எப்படியிருப்பினும் அங்கே அதற்குமேலான தனிச் சிறப்புடைய ஒரு காரியம் நடைபெற்றது. இதன் அடிப்படையில் யோவான் சம்மதித்து, இயேசுவிற்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

எ. இந்த சந்தர்ப்பம், கீழ்க்கண்ட காரியங்கள் நடைபெற சந்தர்ப்பம் அளித்தது:

1. இயேசுதான், மேசியா என்று யாவரும் அறிய அடையாளம் காட்டி, யோவான் அறிவிக்க முடிந்தது.

2. மானிட வர்க்கத்தின் பாவத்திற்கு கிறிஸ்து பிராயச்சித்த பலி என்பதை யோவான் யாவருக்கும் அறிவிக்க முடிந்தது. (யோவான் 1:31-34)

3. இயேசு, மனித இனத்தில் ஒருவராக தம்மை ஒன்றுபடுத்தி காட்ட முடிந்தது (எபிரெயர் 2:17; பிலிப்பியர் 2:7)

4. தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவதற்குத் தம்மைப் பின்பற்றும், முன்மாதிரியாக இயேசு இருந்தார். (மத்தேயு 28:19)

2. இயேசு பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஊழியம் செய்வார் என்பது இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது வெளிப்பட்டது (3:16)

அ. "இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே..." இது தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவது.

இயேசுவின் ஞானஸ்நானம்
மத்தேயு 3:13-17

நீரில் மூழ்கி எடுப்பது என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. யோவானால் ஞானஸ்நானம் பெற்றபோது இயேசு நீரில் முழுவதும் நனைந்து போனார். நீரில் முற்றிலும் ஊறிவிட்டார். அவர் நீரிலிருந்து வெளியே மேலே வந்தார். (அப்போஸ்தலர் 8:38-39 வசனங்களையும் பார்க்கவும்)

ஆ. "இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது..." "திறக்கப்பட்டது" என்பது எழுத்தின்படியே உண்மையாக இருக்கலாம் அல்லது ஒப்புவுவமையாக, "திறக்கப்பட்டது" என்று, அர்த்தப்படும். இது மற்ற தரிசனங்களில் பரலோகம் திறக்கப்பட்டதை நினைவுகூர அழைக்கிறது. (ஏசாயா 64:1; எசேக்கியேல் 1:1; யோவான் 1:51; அப்போஸ்தலர் 7:56; வெளிப்படுத்தின விசேஷம் 4:1; 19:11)

இ. "தேவ ஆவி புறாவைப்போல் இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்". "அவர் கண்டார்" என்பது, இயேசு பார்த்தார் என்று குறிக்கிறது. (மாற்கு 1:10) அது ஒரு சமயம் யோவானும் பார்த்ததாகப் பொருள்படும். (யோவான் 1:33-34) இது, இயேசுதான் மேசியா மற்றும் தேவகுமாரன் என்று யோவானுக்கு உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக இருந்தது. "புறா" என்பது, காற்று, நெருப்பு போல (அப்போஸ்தலர் 2:2-3) சுவாசம் (யோவான் 20:22) ஜீவ நதிகள், (யோவான் 7:38-39) ஆகிய இவைகள் எல்லாம், பரிசுத்த ஆவியானவரின், ஆளுமைக்கும், பிரசன்னத்திற்கும் புதிய ஏற்பாட்டில் உள்ள அடையாளங்கள்.

ஈ. தேவனாக எப்போதும் இருந்த இயேசுவானவர், மானிட ரூபத்தில் தோன்றி, மனிதனாக வளர்ந்தார்.

மேசியாவாக மற்றும் ஆட்டுக்குட்டியானவராக அவருடைய ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக, அற்புதமாக தகுதியாக்கப்பட, அவருடைய ஞானஸ்நானத்தின் போது, பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்யப்பட்டார். (ஏசாயா 42:1; மத்தேயு 12:15-21 பார்க்கவும்) தேவனுடைய தன்மையில் (ஆவிக்குரியவராக) குமாரனும், பரிசுத்த ஆவியானவரும், (பிதாவுடன்) நித்தியமாக ஒன்றாக இருப்பதையும் இது உறுதிப்படுத்துகிறது.

3. இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது இயேசுவின் தெய்வீக குமாரத்துவமும் பிதாவின் இரட்சிப்பின் திட்டமும் வெளிப்படுத்தப்பட்டது. (3:17)

அ. "அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், என்று உரைத்தது". பரலோகத்திலிருந்து வந்த இந்த பிதாவின் சத்தம், அவர் மறுபடியுமாக அமைதியைக் கிழித்துக் கொண்டு, மானிடர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துவதற்கு ஒரு அடையாளமாக இருக்கிறது. இந்த முறை மாத்திரமே அவர் இதை அவருடைய குமாரன் மூலமாகச் செய்கிறார். (எபிரெயர் 1:1-3) மேசியாவின் காலம் உதயமாவதற்கும் இது ஒரு அடையாளம் (மத்தேயு 17:5; யோவான் 12:28 வசனங்களையும் பார்க்கவும்) "இவரில் பிரியமாயிருக்கிறேன்" இது அன்பை வெளிப்படுத்துவது மட்டும் அல்லாமல், இயேசு, எப்போதும் தேவகுமாரனாக இருந்தார் என்பதையும் அறிவிக்கிறது. இவர், இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா என்று ஆதியில் முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டவர் என்றும் தெரிவிக்கிறது. (யோவான் 1:34)

இயேசுவின் ஞானஸ்நானம்
மத்தேயு 3:13-17

ஆ. இந்த சத்தத்தை யோவானும், ஒரு சமயம் அந்நாளில் அங்கு கூடியிருந்த மக்கள் கூட்டமும், சந்தேகமின்றி கேட்டார்கள். பரிசுத்த ஆவியானவர் இறங்கிவந்து, இயேசுவானவர் மீது அமர்ந்தது, யோவானுக்கு, இயேசுதான் திட்டமாக மேசியா என்றும், இஸ்ரவேலுக்கு வெளிப்படுத்தப்பட்ட இருக்கப்போகிற "ஒருவர்" என்றும் உறுதிப்படுத்தப்பட்டது. (யோவான் 1:29-31). இது, யோவானுக்கு, அவனுடைய ஊழியம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்பதையும் சுட்டிக்காட்டியது. இயேசுவானவர் பெருகவும், தான் சிறுகவும் வேண்டும் என்றான். (யோவான் 3:28-30)

இ. "இவரில் பிரியமாயிருக்கிறேன்" "இவரில் என் மகிழ்ச்சி இருக்கிறது" அல்லது இன்னும் நன்றாகக் கூறினால், "மானிடர்களின் என்னுடைய இரட்சிப்பின் திட்டம், இவரில் மையமாக இருக்கிறது" பிதா கூறின இந்த வார்த்தைகள் ஏசாயா கூறின வார்த்தைகளைப் பிரதிபலிக்கிறது. (ஏசாயா 42:1) மேசியாவைக் குறித்த சங்கீதங்களில், பிதா குமாரனிடம் பேசின வார்த்தைகளும் இதில் அடங்கியுள்ளது. (சங்கீதம் 2:7)

ஈ. மத்தேயு 3:16-17, வசனங்களில் தேவனுடைய திரித்துவத்தை மிக உன்னதமாகப் போதிக்கும் வார்த்தைகள் உள்ளது. தேவன் ஒருவர் எண்ணிக்கையில் ஒன்று, (உபாகமம் 4:35,39; 6:4) தெய்வீகத் தன்மையுடையவர் ஒருவர். இருந்தாலும் ஆளுமையில் திரியேகர். அல்லது திரித்துவர். ஒருவரில் (தன்மையில் ஆவிக்குரிய நிலையில்) மூவராக இருக்கிறார்கள். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் (மத்தேயு 28:19; யோவான் 14:16-17; 1கொரிந்தியர் 12:4-6; 2 கொரிந்தியர் 13:14; 1பேதுரு 1:2 வசனங்களையும் பார்க்கவும்) மூவரும் ஒருவருக்கொருவர் சம்பந்தப்பட்டவர். ஒவ்வொருவரும், தெய்வீகத்தன்மையை முழுமையாக வெளிப்படுத்துகிறார்கள்.

முடிவுரை

அ. மனித வர்க்க வரலாற்றில் இயேசுவானவரின் ஞானஸ்நானம் மிகப் பெரிய தனிச் சிறப்பான சம்பவம். இது:

1. எல்லா நீதியும் நிறைவேறிற்று. (பிதாவின் நீதி நிறைந்த சித்தம்) அத்துடன், கிறிஸ்துவைக் குறிப்பிட்டுக் காட்டியது.

அ. யோவானின் ஊழியத்துடன் ஒன்றுபடுத்தி அறிமுகப்படுத்தியது மற்றும் யோவான் அவருக்கு வழியை ஆயத்தப்படுத்தினான் என்பதை எடுத்துக் கூறியது.

ஆ. அவருடைய சித்தத்தையும், இரட்சிப்பின் திட்டத்தையும் நிறைவேற்ற பிதாவுக்கு முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்டவர் என்பதற்கு சாட்சி கூறியது.

இ. நீதிக்குரிய தகுதிகள் யாவையும் அவர் மூலமாக நிறைவேற்றப் பட்டதற்கு, தேவனுக்கு முன்பாக சாட்சியாக இருந்தது.

2. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன், மேசியா மற்றும் ஆட்டுக்குட்டியானவராக, இயேசு ஊழியம் செய்வார் என்பது வெளிப்படுத்தப்பட்டது.

3. இயேசு தெய்வீகக் குமாரன் என்பதையும், பிதாவுடைய இரட்சிப்பின் திட்டத்தையும் வெளிப்படுத்தியது.

இயேசுவின் ஞானஸ்நானம்

மத்தேயு 3:13-17

ஆ. இயேசுவின் ஞானஸ்நானம், ஒவ்வொரு விசுவாசிக்குமுரிய கருத்துக்களுக்கும் (செய்தியும்) உண்டு. நாமும் இயேசுவைப்போல தண்ணீரில் ஞானஸ்நானம் எடுக்க நம்மைத் தாழ்த்த வேண்டும். இது கர்த்தருக்கு, நாம் நம்மை முழுவதும் அர்ப்பணிப்பதை வெளிப்படுத்துவதுடன் இது கீழ்க்கண்ட காரியங்களுக்கு ஒரு தருணத்தைக் கொடுக்கிறது.

1. கிறிஸ்துவுடன் அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் நாம் இணைக்கப்பட்டுள்ளதைக் காட்டுகிறது. (ரோமர் 6:3-11)

2. திரித்துவத்தை; பிதா, குமாரன், பரிசுத்த ஆவியை நமக்குச் சொந்தமாக்கிக் கொண்டதை அறிவிக்கிறது.

தம்முடைய சீடர்களுக்கு இயேசுவின் போதனை

மத்தேயு 5:1-12

முன்னுரை

அ. இயேசுவானவர் கலிலேயா முழுதிலும், பிரசங்கித்துக் கொண்டும், உபதேசித்துக் கொண்டுமிருந்தார். அவர், நோயுற்றவர்களுக்கும், சுகவீனமானவர்களுக்கும் சுகமளித்துக் கொண்டும், மக்களிடமிருந்த பிசாசுகளை துரத்திக் கொண்டும் இருந்தார். இக்காரணத்தினால் மக்களின் திரள் கூட்டம் அவருக்குப் பின்சென்றது.

ஆ. ஆனால் அவர், அவருடைய சீடர்களுடன் தனிமையாக சிறிது நேரம் செலவிட்டு, அவர்கள் அறியவேண்டிய காரியங்களை, அவர்களுக்குப் போதிக்க விரும்பினார். ஆகவே அவர் திரள் கூட்ட மக்களை விட்டு தூரமாக மலை நாட்டிற்குச் சென்று, அங்கு உட்கார்ந்தார். அவருடைய சீடர்கள் அவருக்குப் பின் சென்று, அவர் உபதேசித்துக் கூறியவைகளுக்கு கவனமாக செவிசாய்த்தார்கள்.

இ. இந்த போதனைகளின் தொகுதி மலைப் பிரசங்கம் என்று கூறப்படுகிறது. இது, மத்தேயு 5:1; ஆரம்பமாகி, மத்தேயு 7:29; முற்றுப்பெறுகிறது. இது மத்தேயு சுவிசேஷத்திலுள்ள இயேசுவின் ஐந்து பிரசங்கங்களில் ஒன்று. (மத்தேயு அதிகாரங்கள் 5-7,10,13,18,24-25)

1. இயேசு அவருடைய சீடர்களுக்குப் போதிக்கிறார்.

அ. வசனம் 1. "அவருடைய சீடர்கள், அவரிடத்தில் வந்தார்கள்". "இயேசுவின் சீடர்கள்" எனப்பட்டவர்கள், கற்றுக் கொள்கிறவர்கள், ஒரு சிறிய மாணவர், ஒரு கல்லூரி மாணவர், இயேசுவானவர் போதிக்கும் காரியங்களைக் கற்றுக் கொள்ள விரும்பும் ஒருவர். ஆகவேதான், 'அவருடைய சீடர்கள் அவரிடம் வந்தார்கள்" என்று வேதம் கூறுகிறது. அவர் உபதேசங்களைக் கற்றுக்கொள்ள அவர்கள் விரும்பினார்கள்.

ஆ. ஆகவே இயேசுவின் இந்த போதனைகள், அவரிடமிருந்து கற்றுக் கொள்ள விரும்புகிறவர்களையும், அவரைப் பின்சென்று, அவரை, அவர்களுடைய வாழ்க்கைக்குக் கர்த்தாவாக ஏற்றுக்கொள்ள தீர்மானித்தவர்களையும் கருத்தில் கொண்டு கூறப்பட்டது.

இ. அவர்கள் கடினமான காலங்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை, அவர்கள் அறியவேண்டுமென்று அவர் விரும்பினார். ஆனால், அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களைவிட, அவர்கள் பெற்றுக்கொள்ளப் போகும் ஆசீர்வாதங்கள் அதிகமாக இருக்கும் என்று, அவர்களுக்கு மறுபடியும் உறுதிப்படுத்தினார். மற்றவர்களுடன் அவர்களுடைய வாழ்க்கையிலுள்ள தொடர்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்று கூறினார்.

2. இயேசு அவருடைய சீடர்களிடம், அவர்களை எதிர்நோக்கியிருக்கும் துன்பங்களையும், மற்றவர்களுடனுள்ள அவர்கள் தொடர்பில் அவர்கள் எவ்வாறு வாழவேண்டுமென்பதையும் போதித்தார் (5:2-12அ)

அ. வசனம் "அப்பொழுது அவர் அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது...", இயேசு அவருடைய சீடர்களிடம், அவர்களை எதிர்நோக்கியிருக்கும் துன்பங்களையும், மற்றவர்களுடனுள்ள அவர்கள் தொடர்பில் எவ்வாறு வாழவேண்டுமென்பதையும் போதித்தார்.

தம்முடைய சீடர்களுக்கு இயேசுவின் போதனை

மத்தேயு 5:1-12

அவர்கள் கீழ்க்கண்டவாறு இருக்கவேண்டும்.

1. ஆவியில் எளிமையுள்ளவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் 'எளிமையாக' என்பது அவர்கள் இயேசுவின் உதவியின்றி எந்த நன்மையான காரியத்தையும் செய்ய முடியாது. அவர் விரும்பின காரியங்களை அவர்கள் செய்யவேண்டுமானால், அவர் விரும்பின பிரகாரம் வாழ்க்கை வாழவேண்டுமானால், அவர்கள் அவ்வாறு செய்ய, அவர் அவர்களுக்கு அதைச் செய்ய வல்லமை கொடுக்கவேண்டும்'

2. ஏழையாக இருக்கவேண்டும்-அவரைப் பின்பற்றுவதைத் தெரிந்து கொண்டவர்கள் ஏழையாவார்கள், அழகானவர்கள் அவர்களுக்கு இராது, இந்த உலகத்தில், மற்றவர்களைப்போல் நல்ல உணவு உட்கொள்ள முடியாது. உண்மையில் கிறிஸ்துவிடம் வருகிற பெரும்பான்மையான மக்கள் இவ்வாறுதான் இருக்கிறார்கள்.

3. துயரப்பட்டு, அழுகிறவர்கள்-அவர்கள் தாங்கள் நடப்பித்த பாவங்களுக்காக துக்கப்படுவார்கள். மற்றவர்களுக்கு துன்பத்தையும், வேதனையையும் கொடுக்கிற, உலகமெங்கும் பரவிக் காணப்படும் பொல்லாப்பிற்காகவும் அவர்கள் துக்கப்படுவார்கள். மற்றவர்களால் ஒதுக்கப்படுவதினாலும், கேவலமாக நடத்தப்படுவதினாலும், சரீரப் பிரகாரமாக தீங்கிழைக்கப்படுவதினாலும், அவர்கள் துயரப்பட்டு அழும்படியான நேரங்களும் ஏற்படும்.

4. சாந்த குணமுள்ளவர்களாயிருக்க வேண்டும்-இவர்கள் தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாங்களே தாழ்த்தி, முற்றிலும் அவரை மட்டும் சார்ந்திருப்பார்கள். மற்றவர்களுடன் சாந்தமாகவும், கருணையுடனும் தொடர்பு கொள்வார்கள்.

5. நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்களாயிருக்க வேண்டும். தீயசக்தியின் மீதும் அவனுடைய இராஜ்ஜியத்தின் மீதும் தேவனுடைய முடிவான வெற்றியையும், அவருடைய இராஜ்ஜியம் உலகத்தில் நிலைநாட்டப்படுவதையும் பார்க்க மனப்பூர்வமாக இவர்கள் வாஞ்சிக்கிறார்கள். மற்றவர்களுடனுள்ள தொடர்பில் எது நேர்மையானதோ அதையே செய்ய அவர்கள் விரும்புகிறார்கள்.

6. இரக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ள தாங்கள் தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள் என்பதை அறிந்துள்ளார்கள். ஆகவே மற்றவர்களுடன் தொடர்பு கொள்கையில் இரக்கத்தைக் காட்டுகிறார்கள்.

7. இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவனையும், அதே சமயத்தில் உலகத்தையும் சேவிக்கிற இரு மனதுடையவர்களாயிருப்பதிலிருந்து விடுதலை பெற்று, ஒரே மனமுடையவர்களாயிருக்கிறார்கள்.

8. சமாதானம் பண்ணுகிறவர்களாயிருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் ஒத்துப் போக முடியாமல் இருக்கிறவர்களுக்கிடையே சமாதானத்தை உண்டாக்க முயற்சி செய்து, தேவனுடன் ஐக்கியம் உடையவர்களாயிருப்பார்கள்.

9. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர் களாயிருப்பார்கள். இவர்கள், தேவனுடைய சத்தியத்தின் அளவுகளையும், நியாயத்தையும், பரிசுத்தத்தையும் உயர்த்திக் காட்டி, உலகத்தோடு ஒத்துப்போக மறுப்பதினால், உபத்திரவப் படுத்தப்படுவார்கள்.

தம்முடைய சீடர்களுக்கு இயேசுவின் போதனை

மத்தேயு 5:1-12

10. இவர்களை, நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையானவைகளைப் பொய்யாய் கூறுவார்கள். இயேசுவானவரோடு அவர்களுடைய ஐக்கியத்தினிமித்தமும், அவர்களுடைய அசைக்க முடியாத, அவர்மீதுள்ள தேவபக்தியினிமித்தமும், அவர்கள், நிந்தைக்கும், அவமானத்திற்கும், உபத்திரவத்திற்கும், உட்படுத்தப்படுவார்கள்.

3. அவர்கள், அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப் போகும் ஆசீர்வாதங்களைக் குறித்து, இயேசு அவருடைய சீடர்களுக்குப் போதிக்கிறார் (5:2-12அ)

அ. வசனம் 2-12, "அவர் உபதேசித்துச் சொன்னது..." அவர்கள் பெற்றுக் கொள்ளப் போகிற ஆசீர்வாதங்களைக் குறித்தும் போதித்தார். "பாக்கியவான்கள்" என்றால் அதிக நற்பேறு பெற்றவர்கள், நல்ல செல்வாக்குடன் மகிழ்ச்சியாக இருப்பவர்கள். இயேசுவானவரின் சீடர்கள் மிகுந்த ஆனந்த களிப்புடன் இருந்தார்கள். ஏனெனில்:

1. தேவனுடைய இராஜ்ஜியம் அவர்களுடையது - இயேசுவின் சீடர்கள், பிசாசினால் இனிமேலும் ஆளுகை செய்யப்பட மாட்டார்கள். பரலோகத்திலிருக்கும் பிதாவினாலும் இயேசுவினாலும் இப்பொழுது ஆளுகை செய்யப்படுகிறார்கள்.

2. அவர்கள் ஆறுதலடைவார்கள் - இயேசு, பரிசுத்த ஆவியானவரை, அவருடைய சீடர்களிடத்தில் அனுப்புவார். அவர் அவர்களில் வாசம் பண்ணுவார். கடினமான சூழ்நிலைகளிலும், துன்பங்களிலும், பரீட்சைகளிலும் பலவிதமான சோதனை நேரங்களிலும், அவர் அவர்களிடம் ஆறுதலான வார்த்தைகளைப் பேசுவார். (யோவான் 14:16-17)

3. அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். இந்த உலகம் அழிக்கப்பட்டதற்குப் பிற்பாடு தேவன் ஒரு புதிய வானத்தையும், ஒரு புதிய பூமியையும் உண்டாக்குவார். (2 பேதுரு 3:13; வெளிப்படுத்தின விசேஷம் 21:1-2) இந்த சுதந்தரம், இயேசுவின் சீடர்களுக்கு ஆயத்தமாயிருக்கிறது.

4. அவர்கள் நீதியினால் நிறைந்திருப்பார்கள் - அவர்கள் இயேசுவை, அவர்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொண்டதினால், பரமபிதா அவர்களை, சன்மார்க்கமாக கபடற்றவர்களாகவும், பரிசுத்தமுள்ளவர்களாகவும், பார்க்கிறார். தேவனோடு உள்ள தொடர்பில் அவர்கள் சரியானபடி இருக்கிறார்கள்.

5. அவர்கள் இரக்கம் பெறுவார்கள் - தேவன் அவர்கள் மீது இரக்கமாயிருந்து, அவர்களுடைய துன்பநேரங்களில் கருணை காட்டுவார். இவ்வாறு அவர் செய்யக்கூடும். ஏனெனில், அவர் உலகத்தில் இருக்கும்போது, எல்லா இந்த பரீட்சைகள், சோதனைகள் வழியாக நாம் செல்வது போல் சென்று சகித்திருக்கிறார். (எபிரெயர் 4:15-16)

6. அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் - நம்முடைய நினைவுகள் தேவனைப் பற்றியதாக இருக்கும். நாம் அவரை நேசித்து, நம்மிடம் அவர் எவ்வாறு அதிசயமாக கிரியை நடப்பிக்கிறார் என்பதை விளங்கிக் கொள்வதினால், நமது ஆவிக்குரிய கண்கள் எப்போதும் அவரை நோக்கி இருக்கும்.

7. அவர்கள் தேவனுடைய புத்திரர் என்று அழைக்கப்படுவார்கள் - நாம் "தேவனுடைய குமாரர்" என்று அழைக்கப்படுகிறோம்.

தம்முடைய சீடர்களுக்கு இயேசுவின் போதனை

மத்தேயு 5:1-12

ஏனெனில் நமது சன்மார்க்க நடத்தையிலும், மற்றவர்களோடு உள்ள நமது தொடர்புகளிலும், நாம் தேவனைப் போலாகிறோம்.

8. பரலோகத்தில் அவர்கள் பலன் மிகுதியாயிருக்கும். இயேசுவின் ஒவ்வொரு சீடனுக்கும், நித்திய ஜீவனாகிய பரலோக பலன் ஆயத்தமாயிருக்கிறது. நம்முடைய மாம்ச சரீரம் உருமாற்றமடைந்து, அவருடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மாறும். நாம் நித்திய காலமாக புதிய எருசலேமில், கிறிஸ்து மற்றும் பிதாவின் சமூகத்தில் எப்போதும் இருப்போம். (வெளிப்படுத்தின விசேஷம் 21:1-22:5)

ஆ. வசனம் 12 இயேசு அவருடைய சீடர்களிடம் "சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்" என்று கூறினார். "சந்தோஷப்பட்டு", என்றால் மகிழ்ச்சியுடன் அமைதியாக ஆனந்தமாயிருப்பது, நல்ல செல்வாக்குடன், ஆவியிலும், உணர்ச்சிகளிலும் சுகமுள்ளவர்களாக இருப்பது, என்று பொருள்படும். "களிகூருங்கள்" என்பது, மிக மகிழ்ச்சியாக, சந்தோஷத்தில் குதித்து, வெற்றிக் களிப்பை, வெளிப்படையாக யாவரும் காணும்படியாகக் காட்டுவது, என்று பொருள்படும்.

இ. வசனம் 12 "பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாக இருக்கும்". இயேசுவின் சீடர்கள், நிந்தனைகள், உபத்திரவம், பொய்யாய் குற்றஞ்சாட்டப்படுவது, ஆகிய இவைகளின் மத்தியிலும், சந்தோஷப்பட்டு களிகூருவார்கள். ஏனெனில் அவர்கள் பரலோகத்தில் மிகுந்த பலனைப் பெறுவார்கள். (லூக்கா 6:20-23; யாக்கோபு 1:12 வசனங்களையும் பார்க்கவும்.)

ஈ. சபை மகிமையாக மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொண்டபின், இயேசு, நியாயாசனத்தில் உட்கார்ந்து, சீடர்களுக்கு அவர்கள் செய்த ஊழியத்திற்கேற்ப, சம்பளம் கொடுப்பார். (2 கொரிந்தியர் 5:10). ஒருவன் இரட்சிக்கப்பட்ட பின், கிறிஸ்துவைச் சேவிக்கிறான். நற்கிரியைகள் அவனைப் பின்தொடரும். அவை கீழ்க்கண்டவற்றை உறுதிப்படுத்துகிறது.

1. தேவனுடைய ஆவியினால், ஒருவனுடைய ஆவி புதிய பிறப்பைக் காட்டும் (யோவான் 3:3-8)

2. அவன் தன்னுடைய வாழ்க்கையை ஆளுகை செய்வதற்கும், உலக முழுவதின் மீதும் வரப்போகும். தேவனுடைய கோபாக்கினையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவும் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கிறான். (யாக்கோபு 2:14, 17, 26; 1 தெசலோனிக்கேயர் 5:9).

முடிவுரை

அ. அவருடைய சீடர்களுக்கு கீழ்க்கண்டவற்றைப் போதித்தார்.

1. அவர்களை எதிர்நோக்கியிருக்கும் துன்பங்கள்.

2. மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும்போது, எவ்வாறு வாழவேண்டும்.

3. அவரிடமிருந்து அவர்கள் பெற்றுக் கொள்ளப்போகும் ஆசீர்வாதங்கள். இயேசு அவருடைய சீடர்களிடம், "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள், என்று கூறினார். "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கும் உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" என்றும் கூறினார். (மத்தேயு 5:13,16)

தம்முடைய சீடர்களுக்கு இயேசுவின் போதனை

மத்தேயு 5:1-12

ஆ. இயேசுவின் சீடர்கள், அவர் போதித்த வண்ணமாக வாழ்க்கை நடத்துவார்களானால், இருளில் வாழும் மக்களுக்கு ஒளியாக இருப்பார்கள். அவர்கள் நடப்பிக்கும் நற்கிரியைகளும், அவர்கள் நடத்துகிற நல்ல ஜீவியமும், அவர்களுடைய பரலோகப் பிதாவிற்கும், இயேசுவுக்கும், துதியையும், கனத்தையும் கொண்டுவரும்.

இ. மற்றவர்கள் இதைப் பார்க்கும்போது:

1. நீ நடப்பிக்கும் நற்கிரியைகளையும், நீ வாழும், நல்வாழ்க்கையையும் பார்க்கும்போது,

2. நீ நிந்திக்கப்படும்போதும், உபத்திரவப்படுத்தப்படும் போதும், கிறிஸ்துவுக்காகப் பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்படும்போதும், நீ எப்படி பதில் கிரியை செய்கிறாய் என்பதைக் கண்டு, அவர்கள் அவரைப் பின் செல்ல விரும்புவார்கள்.

இயேசுவின் சீடர்கள், உப்பாகவும் ஒளியாகவும் இருக்கிறார்கள்

மத்தேயு 5:13-16

முன்னுரை

அ. இயேசுவானவர் இன்னமும் அவருடைய சீடர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். பெருங்கூட்ட மக்களை விட்டு, போவதற்காக தூரமாக மலை நாட்டிற்குச் சென்றார்.

அவருடைய சீடர்கள், அங்கே அவரிடம் சென்றார்கள். அவர், அவர்களுக்குப் போதித்தார். (மத்தேயு 5:1-2)

1. இயேசுவின் சீடர்கள் உலகத்திற்கு உப்பாயிருக்கிறார்கள் (5:13)

அ. கிறிஸ்து, அவருடைய சீடர்களிடம், "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்", என்று கூறி, தொடர்ந்து உபதேசித்தார். உப்பு உணவிற்கு நறுமணச் சுவை கொடுப்பதற்கும், உணவைப் பாதுகாப்பதற்கும் பயன்படுகிறது. ஆகவே விசுவாசிகள் உலகத்தில் ஒன்றுக்கும் அதிகமான வழிகளில் சேவை செய்கிறார்கள்:

1. தேவன் மற்றும் கிறிஸ்துவைப் பற்றி அறிகிற அறிவும், நீதி, ஆகிய நறுமணத்தை உலகிற்குத் தருகின்றனர்.

2. பொல்லாப்பிலிருந்தும், பொல்லாத மனிதர்கள், தேவன் மற்றும் கிறிஸ்துவைப் பற்றி அறிகிற அறிவை, பூமியிலிருந்து அகற்ற செய்யும் முயற்சிகளிலிருந்தும், உலகத்தைப் பாதுகாக்கின்றனர். பரிசுத்த ஆவியானவரும், யாரிடம் அவர் வாசம் செய்கிறாரோ, அவர்களும், தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படும் வரை அந்திக் கிறிஸ்துவின் வருகையும், அவன் அழிக்கப்படுவதும் நிறுத்தி வைக்கப்படுகிறது. (2 தெசலோனிக்கேயர் 2:7)

3. விசுவாசிகளும், கிறிஸ்துவின் இரட்சிக்கும் வல்லமையைக் குறித்து கூறும் அவர்களுடைய சாட்சியினால், உலகத்திலுள்ள அநேகரை பொல்லாப்பிலிருந்து திருப்புவார்கள்.

ஆ. "உப்பானது சாரமற்றுப் போனால் எதினால் சாரமாக்கப்படும்" கிறிஸ்து இன்னமும் தம்முடைய சீடர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார். அவர்கள் தங்களுடைய சாரத்தை இழந்து போகக்கூடும். அதாவது அவர்கள் பாவத்திலும், இந்த உலகத்தின் பொல்லாப்பிலும் மறுபடியுமாக சிக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் சாரத்தை மறுபடியும் பெற்றுக்கொள்ள அவர்கள், தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு கிறிஸ்துவிடம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதே வழியாகும். யோவான் இவ்வாறு கூறுகிறார். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9)

இ. "வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது". உப்பை பிரித்தெடுத்த பின் மீந்திருக்கும் கழிவைக்குறித்து, இங்கு ஒருசமயம் கூறப்பட்டிருக்கலாம். அகவே இது, நறுமணச் சுவை தருவதையும், உணவைப் பாதுகாப்பதையும் ஆகியவற்றிற்கான சக்தியை இழந்து போயிருப்பதினால், மனிதர் அங்கும், இங்கும் நடமாடும் தெருவில், வெளியே கொட்டப்படும். இவ்வாறாகவே,

இயேசுவின் சீடர்கள், உப்பாகவும் ஒளியாகவும் இருக்கிறார்கள்

மத்தேயு 5:13-16

உப்பின் சாரத்தை இழந்துபோன, கிறிஸ்துவின் சீடர்கள், மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவிடம் திரும்ப மறுக்கும்போது, கழிவு உப்பைப்போல, தேவன் ஆட்சிசெய்யும் இராஜ்ஜியத்திலிருந்து, பொல்லாத மனிதர்கள் உள்ள உலகத்திற்குள் தூக்கியெறியப்படுவார்கள்.

ஈ. இயேசு லவோதிக்கேயா சபையை நோக்கி இவ்வாறு கூறுகிறார், "இப்படி நீ குளிருமின்றி, அனலுமின்றி வெது, வெதுப்பாயிருக்கிறபடியினால், உன்னை என் வாயிலிருந் வாந்திப்பண்ணிப் போடுவேன்". (வெளி. 3:16) மற்றும் பேதுருவும் கூட இவ்வாறு கூறுகிறார். "நாய்தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி, சேற்றிலே புரளவும், திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின் படியே, அவர்களுக்கு, (மறுபடியும் உலகத்தின் அசுத்தங்களில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டவர்களுக்கு) சம்பவித்தது (2பேதுரு 2:22, மத்தேயு 13:18-22, யாக்கோபு 4:5-10, கலாத்தியர் 5:4, எபிரெயர் 10:26-38 வசனங்களையும் பார்க்கவும்)

உ. மலைப்பிரதேசத்திலிருந்து கிறிஸ்து உபதேசித்தவை களைக் கேட்டபோது, அவருடைய சீடர்களில் அநேகர், தாங்கள் மறுபடியும் இந்த உலகத்தின் அசுத்தங்களிலும், பொல்லாப்புகளிலும் சிக்கிக் கொண்டதற்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினார்கள், என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இந்நாட்களில் கூட, உலகத்தின் அசுத்தங்களிலும், பொல்லாப்புகளிலும் சிக்கியிருக்கும் அவருடைய சீடர்கள், இக்காரியத்தைச் செய்யவேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

ஊ. இதே வேத வசனம், மாற்கு சுவிசேஷத்தில் மறுபடியும் கூறப்பட்டுள்ளது. (மாற்கு 9:49-50). எப்படியிருப்பினும், இத்துடன், இங்கு கூறப்படாத, கிறிஸ்துவின் வார்த்தைகள் இரண்டு இங்கு சேர்க்கப்படுகிறது.

அ. கிறிஸ்துவைப் புறக்கணிக்கும் ஒவ்வொருவரும், அடிபாதாள அக்கினிக் கடலிலும், நரகத்திலும் நெருப்பினால் வேதனைபடைவார்கள். (லூக்கா 3:17 மற்றும் யோவான் ஸ்நானனின் வார்த்தைகளையும் பார்க்கவும்)

ஆ. ஒவ்வொரு விசுவாசியும், இந்த உலகத்தில் அவர்கள் அனுபவிக்கும் அக்கினி பரீட்சைகளினாலும், சோதனைகளினாலும் சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுவார்கள்.

2. "உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயும் இருங்கள்" - பிரிவினைகளையும், சண்டையையும், சுயநலத்துடன் குழுவில் வேற்றுமைகளையும், உண்டாக்குகிறவர்களும், மற்ற விசுவாசிகளுக்கு விரோதமாக இருதயத்தில் மன்னிக்க முடியாமல் அதை பேணிவைத்திருப்பவர்களும், தங்களுடைய உப்பாகிய சாரத்தைஇழந்து போனார்கள். சபை ஐக்கியத்தின் சமாதானத்தை திரும்பக் கொண்டுவர, மனஸ்தாபத்துடன் மனந்திரும்புவது அவசியம்.

2. இயேசுவின் சீடர்கள் உலகிற்கு வெளிச்சமாயிருக்கிறார்கள் (5:14-16)

அ. வச. 14 "நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்". 1 தெச 5:5 வசனங்களில் பவுல் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறீர்கள்." உலகத்திற்கு ஒளியாயிருக்கிற கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாய்,

இயேசுவின் சீடர்கள், உப்பாகவும் ஒளியாகவும் இருக்கிறார்கள்

மத்தேயு 5:13-16

விசுவாசிகள் இருப்பதினால், அவர்கள், பொல்லாப்பும் இருளும் உள்ள உலகத்தைப் பிரகாசிப்பிக்கிறார்கள். (யோவான் 8:12) இவர்கள் நற்குணத்திலும், வாழ்க்கை நடையிலும், பேச்சிலும் அவரைப் போலாகிவிடுவதால், அவர் உபதேசித்த, இருளிலிருந்து ஒளிக்குள் வரும், அதே செய்தியையே இவர்களும் கூறுகிறார்கள். (எபேசியர் 5:8-9, பிலிப்பியர் 2:15)

ஆ. வச. 14 "மலையின் மேல் இருக்கிறபட்டணம் மறைந்திருக்க மாட்டாது". ஒரு பிரயாணி மலையின் மேல் இருக்கிற பட்டணத்தைப் போய் சேருவதற்கு முன்பாகவே, அதைப் பார்க்க முடியும். ஏனெனில் அப்பட்டணத்தின் தெருக்களிலும் வீடுகளிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கிறது. இவ்வாறாக, இருளுக்குள்ளும், பொல்லாப்பிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் மத்தியில் நடமாடும் இயேசுவின் சீடர்களும், காணப்படுவார்கள்.

இ. வசனம் 15 "விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல் ..." நம்மை நாம் ஒளித்துக் கொள்வதையோ, இந்த உலக மக்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள மறுப்பதையோ, கிறிஸ்து விரும்பவில்லை. ஒரு இருண்ட அறையில், தண்டின்மீது ஏற்றப்பட்ட விளக்கைப்போல், நாம் இருள் மற்றும் பொல்லாப்பு நிறைந்த இடத்தின் மத்தியில் இருப்பதையே, இயேசு விரும்புகிறார். பாவிகள் மத்தியில் நடப்பவராகவே அவர் அறியப்பட்டார். (யோவான் 4:7-8, மத்தேயு 9:10-11) பாவிகளாயிருந்தவர்களே அவருடைய நண்பர்களில் அநேகர் இருந்தனர் என்று தெரிகிறது. (மத்தேயு 11:19)

ஈ. வசனம் 16 "இவ்விதமாய்," மலையின் மேலுள்ள பட்டணம் மறைந்திராது, மக்கள் விளக்கை மரக்காலால் மூடிவைக்க மாட்டார்கள், இவ்வாறாகவே, இயேசுவின் சீடர்களும், இந்த உலகத்திலுள்ள இருள் மற்றும் பொல்லாப்பு நிறைந்த மக்களிடமிருந்து தங்களைப் பிரித்து, தனித்து வாழமாட்டார்கள்.

உ. அத்துடன், இரண்டு மிக நல்ல காரணங்களுக்காக நாம் இதைச் செய்ய வேண்டும்:

1. துன்மார்க்கர், நமது நற்கிரியைகளைக் காணவேண்டும் - நம்முடைய நீதியான வாழ்க்கையையும், ஒருவரிலொருவர் நாம் அன்பு கூருவதையும்.

2. பரலோகத்திலிருக்கும் நமது பரம பிதாவை, ஒரு சமயம் அவர்கள் துதிக்கலாம் - நம்மிலும், நமது மத்தியிலும் அவர்கள் பார்க்கும் காரியங்களினால், அவர்கள் தேவன் பக்கமாக மனந்திரும்பி, தேவனை மகிமைப்படுத்துவார்கள்.

ஊ. கிறிஸ்துவின் வார்த்தைகள் உலகத்திற்குள் சென்று, இழந்து போன ஆத்துமாக்கள் இரட்சிப்படைய ஊழியம் செய்வதில் உற்சாகப்படுத்தி, விசுவாசிகள் மத்தியில் மட்டும் நாம் நம்முடைய நேரங்களை செலவிடுவதை நிறுத்த நம்மை வழிநடத்தவேண்டும். சுகமுள்ளவர்களுக்கு (ஆவியில்) அல்ல, வியாதிப்பட்டவர்களுக்கே வைத்தியர் தேவை.

இது என்ன பொருளுடையது என்பதைப் போய் கற்றுக்கொள்ளுங்கள்: "இரக்கத்தையே விரும்புகிறேன் (நீங்கள் மற்றவர்களுக்குக் காட்டும்படியாக) (ஏனெனில்) நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" (மத்தேயு 9:12-13)

முடிவுரை

இயேசுவின் சீடர்கள், உப்பாகவும் ஒளியாகவும் இருக்கிறார்கள்

மத்தேயு 5:13-16

அ. கிறிஸ்து நமது மத்தியில் இருப்பாரானால், திரள் கூட்டமான மக்களைவிட்டு மறுபடியுமாக, மலைப்பிரதேசத்திற்கு அழைத்துச்சென்று, நமக்கு உபதேசிப்பார். ஆனால் அவர் பரலோகத்தில் நமக்கு ஒரு இடத்தை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார்.

ஆ. இருப்பினும், அவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்பியிருக்கிறார். அவர் நம்மை ஜனக்கூட்டத்திலிருந்து தனியான இடத்திற்கு அழைக்கிறார். ஏனெனில், இயேசு அவருடைய சீடர்களுக்கு ஆரம்பகாலத்தில் போதித்தவைகளை, அவர் (பரிசுத்த ஆவியானவர்) நமக்குக் கற்றுக்கொடுக்க விரும்புகிறார்.

1. நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்.

2. நீங்கள் உலகிற்கு ஒளியாயிருக்கிறீர்கள்.

3. நீங்கள் போய், எல்லா மனிதர்களையும் சீடர்களாக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து கிறிஸ்து, உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும், அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.

கிறிஸ்து, பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை நிறைவேற்ற வந்தார்

மத்தேயு 5:17-20

முன்னுரை

அ. இயேசு, அவருடைய உபதேசங்கள், பழைய ஏற்பாட்டு வேத வசனங்களிலுள்ள, சன்மார்க்க போதனைகளுக்கு எதிராகவோ, அல்லது அவைகளுக்கு பதிலாகவோ கூறப்பட்டவை அல்ல என்பதைத் திட்டவட்டமாக கூறுவதைப் பற்றி, இன்று நமது வேத பாட பாகம் உள்ளது. இருப்பினும், கீழ்க்கண்டவற்றில் அவர் எதிராகவே இருக்கிறார்.

1. பழைய ஏற்பாட்டு சன்மார்க்க கற்பனைகளை, சட்டபடி மற்றும் சொல்லுக்குச் சொல்மட்டும் சரியாக (எழுத்தின்படி), வேதபாரகர்கள், பரிசேயர்களால் கூறப்படும் விளக்கம்.

2. பழைய ஏற்பாட்டு வேத வசனங்களுடன், வேத பாரகர்கள் மற்றும் பரிசேயரால் மேலும் உருவாக்கப்பட்ட (சேர்த்துக் கொள்ளப்பட்ட), விளக்கப்பட்ட சட்டபூர்வமான சமயவழிபாடுகள்.

ஆ. சில நேரங்களில், மலைப் பிரசங்கம், கீழ்க்கண்டவற்றுடன் சம்பந்தப்பட்டவைகளைப் பார்க்கும்போது, கிறிஸ்து பழைய ஏற்பாட்டு வேத வசனங்களுக்கு எதிராக இருப்பது போல் காணப்படும்.

1. கொலை *(மத்தேயு 5:21-22)*
2. விபச்சாரம் *(5:27-28)*
3. மணமுறிவு *(5:31-32)*
4. ஆணையிடுதல் *(5:33-34)*
5. கண்ணுக்குக் கண் *(5:38-39)*
6. சத்துருக்களை சிநேகித்தல் *(5:43-44)*

எப்படி இருப்பினும், தேவன் ஆரம்பகாலத்திலிருந்து என்ன நோக்கத்துடன் இவை கொடுக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்களை அவர் நமக்கு கொடுத்திருக்கிறார்!

1. கிறிஸ்து, நியாயப்பிரமாணங்களையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்ற வந்தார் (மத்தேயு 5:17).

அ. "நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங் களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்". "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகளும்", பழைய ஏற்பாடு முழுவதையும் குறிப்பிடும். "அழிக்கிறதற்கு" என்றால், அழிவுக்கு ஏதுவான மாறுதல்கள், கிழித்து எடுத்துவிடுவது, கிழித்து எறிந்து விடுவது, ஒன்றுமில்லாமல் செய்வது, அது ஒன்றுக்கும் உதவாது என்று அறிவிப்பது. பழைய ஏற்பாட்டில் உள்ள தீர்க்கதரிசன வசனங்களையாவது, சன்மார்க்க கட்டளையையாவது, மாற்றவோ, அல்லது அவைகளை அழிக்கவோ கிறிஸ்து வரவில்லை.

ஆ. "அவைகளை, நிறைவேற்றவே நான் வந்தேன்" "நிறைவேற்ற" என்றால், அதை முற்றுப்பெறச் செய்ய மற்றும் பரிபூரணமாக்க, சரிபார்ப்பது என்று பொருள்படும். பழைய ஏற்பாடு வேதவசனங்களைச் சரிபார்த்து, அதன் முழுநோக்கத்தையும், சரியான அர்த்தத்தையும், கொடுக்கவே கிறிஸ்து வந்தார். தாமும் அவைகளில் அநேகமானவற்றை நிறைவேற்றினார்.

இ. யோவான் 10:35, வசனத்தில் இயேசு இவ்வாறு கூறுகிறார்: "வேதவாக்கியம் தவறாததாயிருக்கிறது" மற்றும் ரோமர் 3:31, வசனத்தில் பவுல், "நாம் விசுவாசத்தினாலே (கிறிஸ்துவில்) நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல."

கிறிஸ்து, பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை நிறைவேற்ற வந்தார்

மத்தேயு 5:17-20

ஈ. "பழைய ஏற்பாட்டு சன்மார்க்கக் கற்பனைகளைக் கைக்கொள்வதினாலே அல்ல, இரட்சிப்பு விசுவாசத்தினால் மாத்திரமே உண்டு" என்ற நற்செய்தியே தேவனுடைய சுவிசேஷமாக இருந்தபோதிலும், பழைய ஏற்பாட்டிலுள்ள சன்மார்க்க கற்பனைகளும், தீர்க்கதரிசன வாக்கியங்களும் ஒருபோதும் மாற்றப்படவோ, அழிக்கப்படவோ, அல்லது பயனற்றது என்று அறிவிக்கப்படவோ முடியாது என்பதை பவுல் அறிந்திருந்தான். கிறிஸ்துவில் தாங்கள் புதிதாகக் கண்டடைந்த இந்த சுதந்தரத்தை, துன்மார்க்கத்தில் பங்கு கொள்ள தங்களுக்கு அனுமதி கிடைத்துவிட்டதாகத் தவறாக பயன்படுத்த விரும்பும், சபையிலுள்ள நபர்கள், இதை தங்கள் மனதில் பதித்துக் கொள்வது நல்லது.

2. நியாயப்பிரமாணத்தில் உள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் ஒன்றும் ஒழிந்து போகாது (5:18)

அ. "மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன்," என்பது "நான் உங்களுக்குக் கூறுவது, நம்பகமானது. நீங்கள் அதை சார்ந்து இருக்கலாம்" என்று பொருள்படும். பின்னால் கூறப்போகிறவைகள் எவ்வளவு அதிக முக்கியத்தும் வாய்ந்தவைகள் என்பதை நாம் தெரிந்து விழிப்படையுமாறு இவ்வார்த்தைகள் கிறிஸ்துவால் கூறப்பட்டது.

ஆ. "வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் ..." காலத்தின் முடிவில், அக்கினியினால் வானமும் பூமியும் அழிக்கப்படப் போவதை இது குறிக்கும். பேதுரு இவ்வாறு கூறுகிறார்: "வானங்கள், மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (வெறுமையாகிவிடும்) (2பேதுரு 3:10; மத்தேயு 24:29, 35; ஏசாயா 13:10, யோவேல் 2:1-2, 30-31 வசனங்களையும் பார்க்கவும்.)

இ. "நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது". "ஒழிந்து போகாது" என்றால், மறைந்து போய்விடாது அல்லது அழிந்து போகாது. "ஒரு சிறு எழுத்தாகிலும்", என்றால் மிகச் சிறிய எபிரெய உயிரெழுத்து, இதை சேர்த்தாலும் அல்லது நீக்கிவிட்டாலும், எழுதப்பட்ட அவ்வாக்கியத்தின் அர்த்தம் சாதாரணமாக மாறாது. (ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் எபிரெய பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் சில எழுத்துக்களின் மீது ஒரு சிறு கோடு போடப்படும்.)

ஈ. "நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும்", "நிறைவேறுமளவும்" என்றால், வந்து சம்பவிக்கும், நடைபெறும், செய்து முடிக்கப்படும். "உள்ளதெல்லாம்" சன்மார்க்கப் பிரமாணங்கள் யாவும் மற்றும் பழைய ஏற்பாட்டில் அடங்கியுள்ள எல்லா தீர்க்கத்தரிசன வார்த்தைகளும்.

உ. பழைய ஏற்பாட்டு வேதவசனங்களில் கூறப்பட்ட, தீர்க்கத்தரிசனங்களில் மிகச்சிறிய கட்டளையாய் இருப்பவைகளும், கிறிஸ்துவுக்குள் தேவனுடைய தெய்வீக திட்டங்களும், தற்போதுள்ள வானங்களும், பூமியும் ஒழிந்து போனாலும், அவைகள் மறைந்து போய்விடவோ அல்லது பயனற்றது என்று அறிவிக்கப்படுவதோ இல்லை. பழைய ஏற்பாட்டு வேத வசனங்களை, இயேசு உறுதிப்படுத்துகிறார்.

கிறிஸ்து, பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை நிறைவேற்ற வந்தார்

மத்தேயு 5:17-20

ஊ. அப்போஸ்தலனாகிய பவுல் கீழ்க்கண்டவாறு கூறும்போது, இதை அறிந்திருந்தார். "காலங்கள் நிறைவேறும்போது, விளங்கும் நியமத்தின்படி, பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்." (எபேசியர் 1:9-10; எபேசியர் 1:20-23, எபிரெயர் 2:7-8, பிலிப்பியர் 2:8-11 வசனங்களையும் பார்க்கவும்)

எ. பழைய ஏற்பாட்டில் உள்ள தீர்க்கதரிசனங்களில் கூறப்பட்ட; கிறிஸ்துவுக்குள் தேவனுடைய திட்டங்கள் யாவும், கீழ்க்கண்டவற்றில் கூறப்பட்டுள்ளவைகள் நடைபெற்ற பின்பே முழுவதும் நிறைவேறும் என்று, நம்முடைய தற்சமய குறிப்புகளிலிருந்து அறியலாம்.

1. சபை மகிமையாக மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

2. ஏழு வருட மகா உபத்திரவகாலம் முடிவு பெறவேண்டும்.

3. கிறிஸ்து எருசலேமிலிருந்து 1000 வருடங்கள் செய்யப்போகும் ஆட்சி.

4. வெள்ளை சிம்மாசன நியாயத்தீர்ப்பு

5. புதிய வானங்களும், பூமி மற்றும் புதிய எருசலேம் தோன்றுவது (எசேக்கியேல் 48:30-35 சகரியா 2:1-5, ஏசாயா 60:11, 65:17-18, வெளிப்படுத்தின விசேஷம் 21:1-22:5)

ஏ. வெளிப்படுத்தின விசேஷம் 21:6 வசனத்தில் "ஆயிற்று" என்று வாசிக்கிறோம் என்றால், "அவைகள் நிறைவேறப்பட்டது" என்று பொருள்படுகிறது. கிறிஸ்துவுக்குள், தேவனுடைய நோக்கங்கள் எல்லாம் செய்து முடிக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டு வேத வசனங்களில் எழுதப்பட்ட தீர்க்கதரிசன வாக்கியங்களும், கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நித்தியமான நோக்கங்கள் முதலியன இதில் அடங்கும்!

3. இந்தக் கற்பனைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனெவனோ அவன் பரலோக இராஜ்ஜியத்தில் பெரியவன் எனப்படுவான். (5:19-20)

ஆ. அ. வச. 19. "இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக இராஜ்ஜியத்தில் எல்லாரிலும் சிறியவன் எனப்படுவான்". பழைய ஏற்பாட்டு வேத வசனங்களிலுள்ள, "சிறிதானதொன்றையாகிலும்" மீறி, அதைக் குறித்துத் தவறில்லை என்று போதிக்கிறவன், இராஜ்ஜியத்தைவிட்டு புறம்பாக்கப்பட மாட்டான். இருந்தாலும் அவர்கள், தேவனுடைய இராஜ்ஜியத்தில், மற்றவர்களைவிட குறைவான உரிமைகளையும், குறைவான கனத்தையும் பெறுவார்கள்.

ஆ. வச. 19 "இந்தக் கற்பனைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ பரலோக இராஜ்ஜியத்தில் பெரியவன் எனப்படுவான். "பெரியவன்" என்றால், மிகப்பெரிய, உயர்ந்த, மற்றவர்களைவிட அதிக தனிச்சிறப்புடைய பதவியில் இருக்கிறதாக அறியப்படுவது.

கிறிஸ்து, பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை நிறைவேற்ற வந்தார்

மத்தேயு 5:17-20

தேவனுடைய இராஜ்ஜியத்தின் மேன்மையின் அளவுகளில் வேறுபாடு உள்ளது என்பதை, பொது ஆராய்ச்சி சுவிசேஷங்களிலும், புதிய ஏற்பாட்டு வேத வசனங்களிலும் எழுதப்பட்டுள்ளது. (மத்தேயு 16:27, 20:20-23; லூக்கா 12:47-48, 1 கொரிந்தியர் 3:8, 12-15, 4:5, 2 கொரிந்தியர் 5:10, எபேசியர் 6:8) ஆகவே, இயேசுவானவர் கூறியதைக் குறித்து நாம் ஆச்சரியப்படவேண்டிய அவசியமில்லை.

இ. வசனம் 20 "வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால்..." "பரிசேயர், வேதபாரகர் என்பவர்களின் நீதியைவிட அதிகமாயிராவிட்டால்", என்றால் ஒழுங்குமுறையாக, வெளிப்படையாக ஆசரிக்கப்படும். சமய பழக்க வழக்கங்களுக்கு மேலாக செல்லும் நீதி. இது, இருதயத்தின் உட்கருத்தையும், நினைவுகளையும் சம்பந்தப்பட்டது. அத்துடன் ஆதியிலிருந்து வேத வசனங்களின் முதன்மையான நோக்கங்களை, கிறிஸ்து அவருடைய மலைப் பிரசங்கத்தில் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தவைகளும் அடங்கும்:

1. கொலைக்கு வழிநடத்தும் கோபம். (மத்தேயு 5:22)

2. விபச்சாரத்திற்கு எடுத்துச் செல்லும் இச்சை (5:28)

3. மணமுறிவிற்குக் காரணமான இருதயக்கடினம். (5:32)

4. ஆணையிடுவதற்கு அடிப்படையான பொல்லாத நோக்கம். (5:37)

5. பொல்லா மனிதரை எதிர்த்து போராடாமல் இருத்தல் (5:39)

6. விரோதிகளிடம் அன்பு கூருவது (5:44)

ஈ. பரிசேயர்களாலும், வேதபாரகர்களாலும் கூறப்படாத ஆனால், பழைய ஏற்பாட்டில் உள்ள சன்மார்க்க கட்டளைகளுக்கு அதிகமாக இயேசுவானவரால் இவைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டவைகள். இக்கற்பனை, அவர்களால் (வேதபாரகர் பரிசேயர்கள்) போதிக்கப்பட்ட நீதியோடு (தேவனோடு சரியான தொடர்புடன் இருத்தல்) சம்பந்தப்பட்டவைகளை விட "அதிகமாக" (மிகைப்பட) கூறப்பட்டவைகள். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒருவன் பழைய ஏற்பாட்டு சன்மார்க்க போதனைகளில் அநேகமானவைகளை மீறலாம் (அது அவ்வளவு கவனிக்கவேண்டிய தனிச்சிறப்பு வாய்ந்ததல்ல. ஆகவே விட்டுவிடலாம்) என்று அவர்கள் (பரிசேயர், வேதபாரகர்) போதித்தார்கள்.

உ. வச. 20 "நீங்கள் பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்" ஒருவன் பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கும்முன், பழைய ஏற்பாட்டு வேதவசனங்களின் நோக்கம், மற்றும் அது சம்பந்தப்பட்டவைகளின் சரியான விளக்கத்தின்படி நடக்கவேண்டும் என்று, ஒரு அடி மேலும் உயர்வாக இயேசு அவருடைய போதனைகளைக் கொடுத்தார். கல்வாரியில் கிறிஸ்துவின், சிந்தப்பட்ட இரத்தத்தின் முழு பலன்களை விசுவாசத்தினால் பெற்றுக் கொண்டு (ரோமர் 3:21, 8:3-4), தனக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் (யோவான் 3:3-8, 2 கொரிந்தியர் 3:18) முற்றிலும் மாறுதலடைந்த ஒருவனால் மட்டுமே இது சாத்தியமாகும் என்று விசுவாசிகள் யாவருக்கும் தெரியும். இவர்கள் மட்டும்தான், தேவனுடைய இராஜ்ஜியத்தில் பெரியவர்கள் என்று அறிவிக்கப்படுவார்கள்.

கிறிஸ்து, பழைய ஏற்பாட்டு வேதவசனங்களை நிறைவேற்ற வந்தார்

மத்தேயு 5:17-20

முடிவுரை

அ. பழைய ஏற்பாட்டு சன்மார்க்கக் கட்டளைகள், தீர்க்கதரிசனங்கள், தீர்க்கதரிசிகள், நியாயப்பிரமாணம் ஆகிய இவைகளை மாற்றவோ, அல்லது பயனற்றவை என்று அறிவிக்கவோ இயேசு வரவில்லை. மாறாக அவர், கீழ்க்கண்டவற்றிற்காக வந்தார்:

1. அவைகளில் அடங்கியுள்ள சரியான விளக்கம் மற்றும் சன்மார்க்க குறிப்புகளின் முழு நோக்கத்தையும் நமக்குக் கொடுக்கிறார்.

2. அவைகளில் கூறப்பட்ட கடைசி கால தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்படுவதற்கு ஆரம்பமாக இருந்தார்.

ஆ. இந்த வேத பாகத்தில் அவர் கீழ்க்கண்டவைகளையும் கூறுகிறார்.

1. பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களின் முழு நோக்கத்தையும் கைக்கொள்ளாமல், அவ்வாறு போதனை செய்பவர்களுக்கு செவிகொடுப்பதைக் குறித்து கவனமாக இருக்கும்படி கூறினார்.

2. பரலோக இராஜ்ஜியத்தில் நாம் பிரவேசிக்க வேண்டுமானால், பரிசேயர், வேதபாரகர்கள் ஆகிய இவர்களால் பின்பற்றப்பட்டு, போதிக்கப்படும் நீதிக்கு மேலான நீதியுடையவர்களாக, நாம் இருக்க வேண்டும்.

இ. கிறிஸ்துவைத் தங்களுடைய கர்த்தரும், இரட்சகருமாய் ஏற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே, வேதபாரகர்களும், பரிசேயர்களும் உபதேசிக்கும் நீதிக்கு அதிகமான நீதியை நடப்பிக்க முடியும். கல்வாரியில் சிந்தப்பட்ட இரத்தத்தில் நாம் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகவே நாம் தேவனுடைய சமூகத்தில் நீதிமான்களாக அறியப்படுகிறோம். அவரில் வைக்கும் நம்முடைய விசுவாசத்தினாலும், நமக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் முதன்மையான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நீதியுள்ள வாழ்க்கையை நாம் வாழமுடியும்.

கோபமும், மறுபடியும் ஒப்புரவாதலும்
மத்தேயு 5:21-26

முன்னுரை

அ. அவருடைய உபதேசங்கள், மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு எதிராக இல்லை என்று இயேசு, மத். 5:17-19 வசனங்களில் அழுத்தமாகக் கூறுகிறார். இருந்தாலும், நியாயசாஸ்திரிகளினாலும், பரிசேயர்களினாலும், நியாயப்பிரமாணத்திற்குக் கொடுக்கப்பட்ட விளக்கங்களுக்கு அவர் எதிராக இருந்தார். ஆகவே, சட்டத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட விளக்கங்களுக்கும், முதன்முதலாக அவைகளுக்கு இருந்த நோக்கங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அவர் எடுத்துரைத்தார்.

ஆ. கோபம், விபச்சாரம், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், விரோதிகளை வெறுத்தல் ஆகிய இவைகள் சம்பந்தமாக, வேத வசனங்களில் கொடுக்கப்பட்ட முதன்மையான நோக்கங்களையும், விளக்கங்களையும், கிறிஸ்து, மத்தேயு அதிகாரம் 5, சரியான விளக்கத்தைத் தருகிறார். (மத்தேயு 5:21-48) இன்றைய நம்முடைய பாடம், கோபம் குறித்த விளக்கத்தைக் கொடுக்கும்.

1. கோபம் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவானது (5:21-22)

அ. வச. 21 "பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்." பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் போதனைகளைத் திருத்தி மேன்மையாக்க வேண்டுமென்று இயேசு, முயற்சிக்கவில்லை. ஆனால், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்கு, வேத பாரகர்களும், பரிசேயர்களும் கொடுத்த வெளிப்படையான விளக்கங்களுக்கும், அவருடைய சரியான விளக்கங்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமைகளைக் காட்டுகிறார்.

ஆ. வசனம் 21 "கொலை செய்யாதிருப்பாயாக என்றும் கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்..." இது பத்துக் கற்பனைகளிலிருந்தும், மற்ற பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணங்களிலிருந்தும் மேற்கோளாக எடுக்கப்பட்டது. (யாத்திராகமம் 20:13, எண்ணாகமம் 35:16-21) இதுவே வேதபாரகர்களும், பரிசேயரும், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்குக் கொடுத்த வெளிப்படையான விளக்கம் "நியாயத்தீர்ப்பிற்கு ஏதுவாயிருப்பான்", என்றால், உள்ளூரில் உள்ள, இருபத்து மூன்று பேர் அடங்கிய யூத நீதி மன்றம். (லேவியராகமம் 16:18)

இ. வசனம் 22 "தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்ளுகிறவன் நியாயத்தீர்ப்பிற்கு ஏதுவாயிருப்பான்." பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்திற்கு எழுத்தின்படியும், வெளிப்படையாகவும் கொடுக்கப்பட்ட விளக்கங்களுக்கு, மேலாக இயேசு சென்று, இருதயத்தின் உள்கருத்து மற்றும் நோக்கங்களைப் பார்க்கிறார். (நீதிமொழிகள் 16:2; 1 கொரிந்தியர் 4:5; எபிரெயர் 4:12) இயேசுவானவர் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் முழு நோக்கத்தையும் அவருடைய சீடர்களுக்கு விவரிக்கிறார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஜீவிப்பது என்பது, தேவனுடைய மக்களின் வெளிப்படையான கிரியைகளைவிட மேலானது

ஈ. வசனம் 22 "தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" "ஆலோசனை சங்கம்" என்பது, எருசலேமிலுள்ள, 71 அங்கத்தினர்கள் அடங்கிய யூதர்களின் உயர்நீதிமன்றம்.

கோபமும், மறுபடியும் ஒப்புரவாதலும்
மத்தேயு 5:21-26

"வீணனே" என்றால், மதியற்றவன், ஒன்றுக்கும் உதவாதவன் என்று அழைப்பது.

உ. ஒருவன், அவனுடைய சகோதரன் மேல் கோபமடைந்து, மதியற்றவன், ஒன்றுக்கும் உதவாதவன் என்று அழைத்தால் அவன், எருசலேமிலுள்ள உயர்நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு, தண்டிக்கப்படும்படியாக நியாயந்தீர்க்கப்படுகிறான். காரியம் மிகவும் ஆபத்தான நிலைக்கு வந்துவிட்டது. கோபம் எரிந்து விழும்படியான நிலைக்கு கொண்டுபோய் விட்டது. இந்தக் காரியம், உள்ளூர் நீதிமன்றத்திலிருந்து, உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது!

ஊ. "மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" மிறுதலின் விளைவு கடுமையாக உயர்கிறது. ஒருவன் "மூடனே" என்று அழைக்கப்படும்போது, அவனுடைய சன்மார்க்க நடத்தை, கேள்விக்கு (சந்தேகத்திற்கு) இடமாகிறது. அவன், அசுத்தன் என்றும் தன் இனத்திலிருந்து தள்ளப்பட்டவன் என்றும் நியாயந்தீர்க்கப்படுகிறான். ஒருவன், கோபமடைந்து இந்த வார்த்தைகளைக் கூறினால், அவன் வெள்ளை சிம்மாசனத்தின் முன் நியாயந்தீர்க்கப்பட்டு, நரக அக்கினியில் தள்ளப்படுவான்.

எ. கோபமே, கொலை மற்றும் வன்முறையான குற்றங்களுக்கு பின்னால் மறைந்திருக்கும் உணர்ச்சி என்பதைக் காட்ட கிறிஸ்து இந்த எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துகிறார். பழிவாங்கும்ஆவியினால், வன்முறையாகக் கொலை செய்ய முடிவெடுத்து நடப்பிக்கப்படுகிறது.

ஆகவே தேவன், "கோபப்படுவதை" கொலை செய்வது எவ்வளவு அபாயகரமானதோ அந்த அளவிற்கு, பாவமாகக் கருதுகிறார். ஆகவே அதைப்போலவே நியாயந்தீர்க்கிறார். எனவே கிறிஸ்துவின் சீடர்களால், இது இந்த மாதிரியாக விளங்கிக் கொள்ளப்படவேண்டும்.

ஏ. கோபம், பழிவாங்குதல், சினந்து எரிந்து விழுவது, கொலை ஆகிய இவற்றிற்குப் பதிலாக கிறிஸ்துவின் சீடர்கள், மற்றவர்களை மன்னிக்கவேண்டும். தேவனுடைய வேலைகளாகிய நியாயந்தீர்ப்பது, மற்றும் பழிவாங்குவது ஆகிய இவற்றில் அவர்கள் ஈடுபடக்கூடாது. (மத்தேயு 18:21-22; ரோமர் 12:19-21) அவர்கள் இவைகளைச் செய்வார்களானால், அவர்களே நியாயந்தீர்க்கப்படுவார்கள் (மத்தேயு 7:1).

2. ஒப்புரவாகுதல் விடுதலையைக் கொண்டுவரும் (5:23-26)

அ. வசனம் 23. "ஆகையால்" இது வசனங்கள் 21-22 ஆகியவைவுடன் வசனங்கள் 23-26 ஆகியவற்றை இணைக்கிறது. ஒரு விசுவாசி, பொங்கிவரும் கோபத்தால், மற்றொருவனுடைய நடத்தைக்கு அவகீர்த்தி கொண்டுவருவானானால் அவன் நியாயத்தீர்ப்பின் அபாயத்தில் இருக்கிறான். அதுபோலவே, மற்ற வழிகளில் தன் சகோதரனுக்கு தீங்கிழைக்கிறவனும் இருப்பான்.

ஆ. வசனம் 23-24 "நீ பலிபீடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூறுவாயாகில்... முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி ..." பொங்கி எழும் கோபத்தினால் அல்லது மற்ற வழிகளில் நீ, அவமானம் கொண்டுவந்த ஒருவனிடம் நீ ஒப்புரவாக வேண்டும் என்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் இருக்கிறது.

கோபமும், மறுபடியும் ஒப்புரவாதலும்
மத்தேயு 5:21-26

1. கிறிஸ்துவுக்கும், தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும், நீ தேவனுடைய வீட்டிற்கும் படைக்கும் எல்லா காணிக்கைகளையும்விட, ஒப்புரவாகுதல் மிக முக்கியமானது. (ஓசியா 6:6)

2. ஒப்புரவாகாத, மற்றவர்களுக்கு விரோதமாக செய்த தவறுகள், விடுதலையோடு, மனப்பூர்வமாக தேவனை ஆராதிப்பதற்கு தடைசெய்கிறது. (சங்கீதம் 66:18; உபாகமம் 1:43-45)

இ. வசனம் 25. "நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே, சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து", "சீக்கிரமாய்" என்றால் உடனே, வெகு விரைவில், தாமதமில்லாமல் என்று பொருள்படும். "உன் எதிராளி", நீ யாருடன் போராடுகிறாயோ அவனிடம் தீங்கிழைத்த ஒருவன். உன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கும், கிறிஸ்துவுடன் நடப்பதற்கும், அதிகப்படியான சேதம் வருவதற்கு முன், சீக்கிரமாய் அந்த மனிதனிடம் சென்று ஒப்புரவாகு.

ஈ. வசனம் 25-26 "எதிராளி உன்னை நியாயாதிபதியிடத்தில் ஒப்புக்கொடாமலும்..." மற்றொருவருக்கு தீங்கிழைத்த ஒருவன், நீதிமன்றத்திற்கு போகும் வழியில் இருக்கிறான். அவர்கள், அந்த மனிதனிடம் சீக்கிரமாய் சென்று ஒப்புரவாகாவிட்டால் நியாயாதிபதிமுன்பாக வந்து, குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, ஆவிக்குரிய சிறைச்சாலைக்கு நியாயந்தீர்க்கப்படுவான்.

உ. வசனம் 26 "நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும், அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய்." மற்றவர்களுக்குத் தீங்கிழைத்து, ஆவிக்குரிய சிறையில் அடைக்கப்பட்டவர்கள், தங்களைத் தாழ்த்தி ஒப்புரவாகும் வரை விடுதலை பெற முடியாது. அநேக காலங்கள் கடந்து செல்வதும் புண்ணை ஆற்றும். ஆனால் இது இந்த வழியில் இருக்காது.

ஊ. பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து கடந்த வாரங்கள், மாதங்கள் அல்லது வருடங்களாக உன்னை செய்யும்படி வருந்தி கூறியவைகளை நீ செய்வாயானால் இப்பொழுது எல்லாம் உன் பின்னால் இருக்கும்! நீ சிறையின் வெளிச் செல்லும் வாசலின் வழியாக, விடுதலையாகக் கடந்து செல்லுவாய்!

முடிவுரை

அ. தங்கள் இருதயத்திலுள்ள கோபத்தினால் மற்றவர்களுக்குத் தீங்கிழைத்த விசுவாசிகள், பரிசுத்த ஆவியானவரால் நியாயந்தீர்க்கப்பட்டு, குற்றவாளிகள் என்று அறிவிக்கப்படுவார்கள். நியாயத்தீர்ப்பு நடைபெற வேண்டியதில்லை. சீக்கிரம் தீர்மானித்து முயற்சி செய்து ஒப்புரவாகும்போது, இது (நியாயத்தீர்ப்பு) தடுக்கப்படும்.

ஆ. ஒப்புரவாகமல் இருக்கும் தவறுகள் விடுதலையோடு மனப்பூர்வமாக தேவனை ஆராதிப்பதற்குத் தடையாக இருக்கும். அது நமது ஆவிக்குரிய வாழ்க்கையையும் தேவனுடன் நடப்பதையும் சேதப்படுத்தும்.

இ. பொங்கி எழும் கோபத்தினால் அல்லது மற்றவழிகளில் நீங்கள் தீங்கிழைத்த நபர்களைக் குறித்து, பரிசுத்த ஆவியானவர் அநேகருடன் பேசியிருக்கிறார். ஆகவே, நம்மில் ஒவ்வொருவரும் சீக்கிரமாய் சென்று, அவர்களோடு ஒப்புரவாகலாம்!

பாலின இச்சை விபச்சாரம் மற்றும் மணமுறிவு

மத்தேயு 5:27-32

முன்னுரை

அ. கிறிஸ்து பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களை அழிப்பதற்கல்ல நிறைவேற்றவே வந்தார். (5:17). ஆகவே, மோசேயின் நியாயப்பிரமாணங்களுக்கு எதிராக ஒருபோதும் இருக்கவில்லை. வேதபாரகர்களும், பரிசேயரும், நியாயப்பிரமாணங்களுக்குக் கொடுத்த தவறான, சிலவேளைகளில், கட்டுப்பாட்டைத் தளர்த்தி கொடுத்த விளக்கங்களைத் திட்டமாக அவர் எதிர்த்தார். கலிலேயாக் கடலுக்கு அருகிலுள்ள மலைநாட்டில், அவருடைய சீடர்களுக்குப் போதித்தவற்றை நாம் ஆழமாகப் பார்க்கும்போது இதை அறிந்து கொண்டவர்களாக நாம் இருக்கவேண்டும்.

1. ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று (5:27-28)

அ. வசனம் 27 "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்." இது, பழைய ஏற்பாட்டு வேதவசனங்களிலிருந்து, சிறப்பாக பத்துக் கற்பனைகளிலிருந்து மேற்கோளாக எடுக்கப்பட்டது. (யாத்திராகமம் 20:14, உபாகமம் 5:18)

ஆ. வசனம் 28 "ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்." ஏழாவது கற்பனையை நாம் புறக்கணித்துவிடலாம் அல்லது அது செல்லத்தக்கது அல்ல என்று, இயேசு கூறவில்லை.

அவர் என்ன சொல்ல விரும்புகின்றார் என்றால், மற்ற எல்லா பாவங்களையும் போல விபச்சாரமும், சரீரத்தில் நடப்பிக்கும் கிரியைக்கும் அப்பாற்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டினார். அது சிந்தனைகளோடும், இருதயத்தின் உள்நோக்கத்தோடும் ஈடுபாடுடையது. இவை இரண்டையும் பிரிக்க முடியாது. உன்னிடம் விபச்சார பாவம் இருக்கும்போது, உனக்கு விபச்சாரம் முதலில் உன் இருதயத்தில் இருக்கிறது. இது மற்ற எல்லா பாவங்களுக்கும் பொருந்தும்'

இ. வசனம் 28 "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ்செய்தாயிற்று". நம்முடைய சரீரத்தில் நாம் செய்கிறவைகள், எவ்வளவு பெரிதாக முக்கியமானவைகளாக இருக்கிறதோ, அந்த அளவிற்கு நம்முடைய சிந்தனைகளில், உணர்ச்சிகளில் மற்றும் சித்தத்தில் என்ன நடைபெறுகிறதோ அவை, தேவனுக்கு இருக்கிறது.

ஈ. எபிரெயர் நிருபத்தை எழுதியவர் இவ்வாறு கூறுகிறார்: "தேவனுடைய வார்த்தையானது..... இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாய் இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும்..... வெளியரங்கமாயுமிருக்கிறது (எபிரெயர் 4:12-13).

உ. அவர் பாலின இச்சையையும் அதனுடன் சம்பந்தப்பட்ட விபச்சாரத்தையும் குறித்து விவரிக்கும்போது, பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்கு, வேதபாரகர்களாலும், பரிசேயர்களாலும் கொடுக்கப்பட்ட, குறைந்த அளவுகளுடன் தவறாகக் கொடுக்கப்பட்ட விளக்கங்களைக் குறித்தும் பேசுகிறார். அவர், அவர்களிடம் இவ்வாறு கூறுகிறார்.

பாலின இச்சை விபச்சாரம் மற்றும் மணமுறிவு

மத்தேயு 5:27-32

"யாத்திராகமம் 20:14 வசனத்திற்கு நீங்கள் கொடுக்கும் விளக்கம், சரீரத்தில் நடப்பிக்கும் விபச்சாரத்தை மட்டும் கூறுகிறது. அவருடைய வார்த்தை ஒருவனுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய முழு ஆளுமைக்கு செயல்படுத்துமாறு இருக்கவேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது!"

2. உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். (5:29-30)

அ. வச. 29-30 "உன் வலது கண் ... உன் வலது கை உனக்கு இடறலுண்டாக்கினால் ... இயேசுவானவர், கண் மற்றும் கையை தனியாக முக்கியப்படுத்தி பேசுகிறார். ஏனெனில் ஒரு நபருக்கு சோதனை கண் மூலமாக வருவதாகவும், கை பாவத்தை நடப்பிக்கும் கருவியாகவும் கருதப்படுகிறது. இக்காரணத்தினாலேயே, பேதுரு, அவனுடைய நாட்களில் இருந்த பொய் தீர்க்கதரிசிகளை, விபசாரமயக்கத்தால் நிறைந்த ... கண்களையுடையவர்கள், என்று குறிப்பிட்டு கூறுகிறார். (2 பேதுரு 2:14)

ஆ. ஆகவே நம்முடைய சிந்தனைகள், நமது உணர்ச்சி உறுப்புகளாகிய, கண்கள், காதுகள், மூக்கு, வாய் மற்றும் கைகள், கால்கள் ஆகியவைகளால் உணரப்படுபவைகள் மூலமாக வருகிறது. இந்த உலகத்தில், நாமும், நம் குடும்பத்தினர்களும், பார்த்து அனுபவிப்பவைகளை நிதானித்து தனிப்படுத்தி, அனுமதிப்பது குறித்து, இது அதிகமாகக் கூறுகிறது. நம்முடைய பிள்ளைகளும் இளைஞர்களும், போதைப் பொருட்கள் மற்றும் பாலின சம்பந்தமான காரியங்களைக் குறித்து என்ன போதிக்கப்பட்டுள்ளனர்?

இ. வசனம் 29-30 "அதைப் பிடுங்கி எரிந்து போடு ... அதைத் தறித்து எரிந்து போடு". இங்கு, தன்னைத் தானே அங்கவீனப்படுத்திக் கொள்வதைக் குறித்து இயேசுவானவர் பேசவில்லை. நமது வாழ்க்கையிலுள்ள பாவப் பிரச்சனையை, சீக்கிரமாக துணிவுடன் அகற்றிப்போட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதே அவருடைய நோக்கம். இந்த குறிப்பிட்ட வேத பாகத்தில், விபச்சாரப் பாவத்தைக் குறித்து அவர் பேசுகிறார். எப்படியும், இது எல்லா பாவங்களுக்கும் பொருந்தும்.

ஈ. பெதஸ்தா குளத்தண்டை குணமாக்கப்பட்ட மனிதன், இயேசுவானவரை இரண்டாம் முறை சந்தித்தபோது, இயேசு அவனிடம் இவ்வாறு கூறினார். "அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவம் செய்யாதே" (யோவான் 5:14) வெள்ளை சிம்மாசன நியாயத்தீர்ப்பில் ஒருவன் நரகத்தில் தள்ளப்படுவதைக் குறித்து இயேசு இங்கு கூறுகிறார். (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15) ஆகவேதான், சீக்கிரமாக, துணிவுடன், நம் வாழ்க்கையிலுள்ள பாவத்தை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்!

உ. வசனம் 29-30 "உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். வேதம், ஒருவன் நரகத்தில் தள்ளப்படுவதைக் குறித்து கூறும்போது, அது அவன் ஆவி, சரீரம் ஆகிய இரண்டையும் குறிக்கும். மற்றொரு இடத்தில் இயேசு இவ்வாறு கூறுகிறார். "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல்,

பாலின இச்சை விபச்சாரம் மற்றும் மணமுறிவு

மத்தேயு 5:27-32

சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத்தேயு 10:28)

ஊ. இயேசு, நரகத்தை "இரண்டாம் மரணம்" என்று அழைக்கிறார். (வெளிப்படுத்தின விசேஷம் 2:11, 20:14, 21:8) இது தண்டிக்கப்படும் இடம். இங்கு வாழுபவர்கள், தேவனை விட்டு நித்தியமாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். தேவன் ஒருவரே, "நரகத்தில் தள்ள", அதிகாரமும் வல்லமையும் உடையவர். (லூக்கா 12:5) இது முதன்முதலில், பிசாசிற்காகவும் அவனுடைய பொல்லாத தூதர்களுக்காகவும் ஆயத்தம் செய்யப்பட்டது. (மத்தேயு 25:41, வெளிப்படுத்தின விசேஷம் 20:10) ஆனால் எல்லா காலங்களில் மரித்த துன்மார்க்கரும் ஒருநாள் இத்துடன் சேர்க்கப்படுவார்கள். இந்த தண்டனை நம் மனதினால் சிந்தித்து விளங்குவதற்கு அப்பாற்பட்டது.

எ. நித்திய அக்கினி (மத்தேயு 18:8) அவியாத அக்கினி (மாற்கு 9:44) அங்கே புழு சாகாது. (மாற்கு 9:48) அங்கு மக்கள், "இரவும் பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்." (வெளிப்படுத்தின விசேஷம் 20:10) என்று நரகம் விவரிக்கப்படுகிறது. "அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்." இவ்வாறு இது அறியப்படுகிறது. இது "நித்திய ஆக்கினை", அடையும் இடம் (மத்தேயு 25:46), "நித்திய அழிவு" மற்றும் "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து நீக்கப்படுவார்கள்" (2 தெசலோனிக்கேயர் 1:9) "என்றென்றைக்குமுள்ள காரிருள்," (2பேதுரு 2:19) என்றும், "கந்தகம் எரிகிற அக்கினிக் கடல்" என்றும் இது (நரகம்) அழைக்கப்படுகிறது. (வெளிப்படுத்தின விசேஷம் 19:20)

ஏ. இப்பொழுது, இயேசு கீழ்க்கண்டவாறு ஏன் கூறுகிறார் என்று நாம் அறிந்து கொள்ளலாம். "உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்". இந்த பயங்கரமான, நித்தியமான தூர்ப்பனை அடைந்து ஒருவராவது துன்பப்படுவதை அவர் விரும்பவில்லை. போவான் அப்போஸ்தலர் மூலமாக பரிசுத்த ஆவியானவர் இப்படி நமக்குக் கூறுகிறார்: "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1போவான் 1:9) அவர், இதையும் கூட சேர்த்திருக்கக் கூடும்: "உங்கள் சரீரமும் ஆவியும், நரகத்தில் தள்ளப்பட முடியாது."

3. வேசித்தன முகாந்திரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபச்சாரஞ் செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான். (5:31-32)

அ. வசனம் 31 "..என்று உரைக்கப்பட்டுள்ளது". மறுபடியும், இது பழைய ஏற்பாட்டு வேதவசனங்களிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு மேற்கோள், மணமுறிவிற்குக் கொடுக்கப்படும். "தள்ளுதல் சீட்டை"க் குறித்த வேதபாகத்தை மையமாகக் கொண்டு இந்த குறிப்பிட்ட காரியம் உள்ளது. (உபாகமம் 24:1-4)

பாலின இச்சை விபச்சாரம் மற்றும் மணமுறிவு

மத்தேயு 5:27-32

ஆ. வசனம் 31 "தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது." மற்றொரு சந்தர்ப்பத்தில், இந்த தள்ளுதல் சீட்டை கொடுக்க, இஸ்ரவேலருக்கு தேவன் அனுமதித்ததின் காரணத்தை இயேசுவானவர் விவரிக்கிறார்: "உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாம் என்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார். ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை" (மத்தேயு 19:8; இவ்வசனங்களுடன் மத்தேயு 19:3-6, ஆதியாகமம் 1:27, 2:24 பார்க்கவும்)

இ. மணமுறிவு குறித்து உண்மையில் அனுமதிக்கப்பட்ட கட்டுப்பாட்டைக் கூறும் பழைய ஏற்பாட்டு சட்டத்தை, அதிகமாக தளர்த்தி தங்களை நியாயப்படுத்திக் கொள்வது பரிசேயருடைய வழக்கம். இந்த வேத வசனத்தை இயேசு மேற்கோளாக எடுத்து, அதை விளக்குகிறார். "இது இவ்வாறு உரைக்கப்பட்டது" என்று அவர் கூறுவது பரிசேயர் கூறினவைகளைக் குறிக்கும். தேவன் ஒருபோதும் மணமுறிவை அனுமதிக்கவில்லை என்பதே எல்லா பழைய ஏற்பாட்டு கற்பனைகளின் உண்மையான விளக்கம். இது நடைபெறுவது ஒருபோதும் அவர் நோக்கமல்ல. ஆகவே, பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களின் அவர்களுடைய தவறான விளக்கங்களை, இயேசு தொடர்ந்து எதிர்க்கிறார்.

ஈ. வசனம் 32. "வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ் செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்" மறுபடியும், இயேசு பழைய ஏற்பாடு வேதவாக்கியங்களின் முழு நோக்கத்தையும் எடுத்துரைக்கிறார்.

வேசித்தனம் செய்ததின் காரணத்திற்காக மாத்திரம், அவர் மணமுறிவிற்கு அனுமதிக்கிறார். ஏனெனில், அந்த நபர் ஏற்கெனவே ஐக்கியத்தை விட்டு விலகி விபச்சாரம் செய்து விட்டான். பாவக்கிரியை ஏற்கனவே நடப்பிக்கப்பட்டாயிற்று, அந்த நபர் தேவனைவிட்டு பிரிக்கப்பட்டான்.

உ. இந்த ஒரே காரணத்திற்காக மட்டும் இதை, அவர் அனுமதிக்கிறார். ஏனெனில் ஒருவன் தன்னுடைய மனைவி/கணவன் எந்த ஒரு காரணத்திற்காக அல்லது வேறு பலவித காரணங்களுக்காக மணமுறிவு செய்யும் போது மேலும் அதிக தீங்கு ஏற்பட ஏதுவுண்டு. விபச்சாரம் செய்யாத ஒருவரை, தள்ளிவிடும்போது, அவர் மறுமணம் செய்தால், புதிய துணையுடன் பாலின தொடர்பு கொள்ளும்போது, விபச்சாரம் செய்கிறவராகிறார்!

ஊ. வசனம் 32. "தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும், விபச்சாரஞ்செய்கிறவனாயிருப்பான்." ஒருவர் முந்தின திருமணத்தில் தள்ளிவிட்ட அவனை/அவளை மணந்து கொள்ளும்போது, விபச்சாரப் பாவம் அவனுக்குக் கடத்தப்படுகிறது. வேசித்தனம் செய்த காரணத்தினாலோ அல்லது வேறு பலவித காரணங்களுக்காக தள்ளிவிடப்பட்டவர்களை திருமணம் செய்து கொள்ளும் யாவருக்கும் இது பொருந்தும்.

முடிவுரை

அ. பாலின இச்சை மற்றும் விபச்சார பாவம் ஆகியவற்றைக்குறித்து கிறிஸ்து கருத்துள்ளவராயிருக்கிறார். (கவலைப்படுகிறார்) இவை, அம்மனிதனையும் தேவனையும் பிரிக்கக் காரணமாயிருக்கிறது. இவற்றில் ஈடுபட்டவர்கள் மனந்திரும்பாவிட்டால், நித்திய நரக அக்கினியில் அவர்கள் வாழ்க்கை முடிவுபெறும்.

பாலின இச்சை
விபச்சாரம் மற்றும்
மணமுறிவு
மத்தேயு 5:27-32

ஆ. ஆகவே இப்படிப்பட்டவர்கள் கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுக்கவேண்டும்:

1. திருமணத்திற்கு முன் வேசித்தனஞ் செய்தவர்கள், மனந்திரும்ப வேண்டும்.

2.திருமணமானவர்கள், மணவாழ்க்கையில் நிலைத்திருந்து, தங்கள் துணைவருக்கு உண்மையாயிருக்கவேண்டும்.

3. திருமணமான நிலையில், விபச்சாரம் செய்தவர்கள், கடவுளுக்கு விரோதமாக செய்த பாவத்திற்கு மனந்திரும்ப வேண்டும்.

4. முதல் திருமணத்துணையை விட்டுவிட்டு மற்றொருவரை மணந்து கொள்பவர் விபச்சாரம் செய்கிறார். ஆகவே மனந்திரும்பவேண்டும்.

5. முதல் திருமண துணைவர்களை விட்டு, திருமணமான தம்பதிகள், விபச்சாரம் செய்கிறவர்கள். இவர்கள் அவசியம் மனந்திரும்ப வேண்டும்.

இ. சபையில், மணமுறிவு தொடர்பாகவுள்ள கட்டுப்பாடு மிகவும் தளர்த்தப்பட்ட நிலைக்கு நாம் வந்துள்ளோம். சட்டத்திற்குட்பட்டவர்களாக நம்மை நாமே அனுமதித்துக் கொள்ளக்கூடாது. ஆனால் தள்ளிவிடுவதை கிறிஸ்து காண்கிற அதே வெளிச்சத்தில் நோக்கவேண்டும். கூடுமானவரை இதைத் தவிர்க்கவேண்டும். இது பாவத்தையும், பிரிவினையையும் உண்டாக்குகிறது.

ஆணையிடுதல்

மத்தேயு 5:33-37

முன்னுரை

அ. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்ட, ஆணையிடுதலைப் பற்றிய கற்பனைகள், இயேசுவானவர் தோன்றிய காலக் கட்டத்தில், கவலையீனமாகப் பயன்படுத்தப்பட்டது. மற்ற எல்லா மாறுபட்ட கற்பனைகளிலும் செய்ததுபோல இந்தக் காரியத்திலும் அவர் தேவையான திருத்தங்களை செய்தார்.

1. ஆணையிடுதல் தேவனுடைய மக்களைப் பாவத்திற்குட்படுத்துமானால், முழுவதுமாக ஆணையிடுதலை விட்டுவிடுவது மிக நல்லது. (5:33-36)

அ. வசனம் 33. "பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்." இயேசு இவ்வாறு கூறுகிறார்: "தள்ளுதற்சீட்டை கொடுக்கும்படியாக, எவ்வாறு போதிக்கப்பட்டீர்களோ, அவ்வாறே கர்த்தர் இடும் ஆணைகளைக் கைக்கொள்வது பற்றியும் போதிக்கப்பட்டிருக்கிறீர்கள்:"

ஆ. "பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தருக்கு முன்னிலையாய்ச் செலுத்துவாயாக". இது உண்மையில், பழைய ஏற்பாட்டு வாக்கியங்களில் கூறப்பட்டவைகளின் தொகுப்பு. (யாத்திராகமம் 20:7, லேவியராகமம் 19:12, எண்ணாகமம் 30:2, உபாகமம் 5:11, 6:3, 22:21-23) ஒருமுறை யெகோவாவின் நாமத்தில் இடப்படும் ஆணை, கர்த்தருக்கு முழுமையாகச் செலுத்தப்படவேண்டிய கடன்.

இ. இருந்தாலும், வேதபாரகர்கள் ஆணைகளிடையே, ஒன்றிலிருந்து மற்றவற்றை வேறுபடுத்தி தனிச்சிறப்பியல்களை உண்டாக்கிக் கொண்டார்கள். வானம், பூமி, எருசலேம் அல்லது ஒருவனுடைய சிரசு ஆகியவைகளின் மீது இடப்படும் ஆணை கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டியதில்லை. (நிறைவேற்றப்பட வேண்டும் என்று கட்டாயம் இல்லை). தெய்வீக நாமத்தில் கூறப்படாவிட்டால், அது கவனிக்கத்தக்கது அல்ல.

ஈ. மற்றொரு சந்தர்ப்பத்தில், தேவன், அவருடைய சிருஷ்டிப்பின் இடங்கள் எங்கும் பிரசன்னமாயிருக்கிறார் என்று கிறிஸ்து தெளிவாக எடுத்துக் காட்டினார். எல்லாம் தெய்வீகத்தோடு சம்பந்தப்பட்டது. ஆகவே, ஒருவன் செய்யும் எந்த ஆணையும் நிறைவேற்றப்படவேண்டும். (மத்தேயு 23:16-22)

உ. வசனம் 34-36 "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பரிசேதம் சத்தியம் பண்ண வேண்டாம்." எல்லா மாய்மாலங்களும் உண்மையற்ற தன்மைகளும், ஆணையிடுவதுடன் சம்பந்தப்பட்டிருப்பதால், முழுவதுமாக ஆணையிடுவதை, மக்கள் அப்படியே விட்டு விட்டால் அது அதிக நல்லதாக இருக்கும் ஒருவன் ஆணையிடாமலே இருந்து விட்டால், அவன் பொய்யாய் ஆணையிட முடியாது!

ஊ. இருதயத்தின் நினைவுகளும், நோக்கங்களும் மற்றும் தேவனுடன் ஒருவனுடைய தொடர்பும், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தைப் போலவே, கிறிஸ்துவினுடைய முதல் கவனமாக (நோக்கமாக) இருந்தது. மனிதர் ஆணையிடுவதை முற்றிலும் நிறுத்திவிட்டால், தேவனுடன் அவர்களுடைய தொடர்பு, அவர்களுடைய மாயம், மற்றும் அவர் மீதுள்ள இருதயக் கடினம் ஆகியவைகளால் தடைபடாது.

ஆணையிடுதல்

மத்தேயு 5:33-37

2. "உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்" (5:37)

அ. "உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்". ஆணையைக் குறித்த கிறிஸ்துவின் போதனை முழுவதையும் சுருக்கி நமக்குத் தொகுத்துக் கொடுத்த யாக்கோபும் இதே சொற் தொடரை பயன்படுத்துகிறார். "வானத்தின் பேரிலாவது பூமியின் பேரிலாவது, வேறெந்த ஆணையினாலாவது சத்தியம் பண்ணாதிருங்கள். நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் (தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டு, தண்டிக்கப்படல்) தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக் கடவீர்கள்.

ஆ. ஒருவன் செய்யும் ஆணையின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த, தேவனுடைய நாமத்தையும், பரிசுத்தமான பொருட்களையும் பயன்படுத்துவதை யாக்கோபு கண்டிக்கிறார். அவர், அவருடைய எஜமானிடமிருந்து (இயேசுவிடமிருந்து) எவ்வாறு தேவனுடைய மக்கள், இருதயத்தின் தவறான உள்கருத்துக்கள், மற்றும் நோக்கங்களுடன் ஆணையிடுவதால், தங்களைத் தாங்களே தேவனுடைய நியாயத் தீர்ப்பிற்குள் கொண்டு வருகிறார்கள் என்பதைக் கற்றறிந்தார்.

இ. "இதற்கு அப்பாற்பட்டது பொல்லாங்கனால் உண்டாயிருக்கும்". சாத்தான் "பொய்க்குப் பிதாவாக" இருப்பதினால், அவன், நாம் நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கம் இல்லாத ஆணைகளை செய்யும்படி நம்மைச் சோதிக்கிறான். (யோவான் 8:44)

ஈ. நியாய சாஸ்திரிகளும், பரிசேயரும், மக்கள் கூட்டத்திற்குமுன் உயர்வாகக் கருதப்பட்ட மிகக் கருத்துள்ளவர்களாயிருந்தபடியால், அவர்கள் பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தின் கற்பனைகளின் கட்டுப்பாட்டைக் குறைப்பதும் கூட்டுவதுமாக இருந்தனர்.

1. தங்கள் சொந்த நோக்கங்களை நிறைவேற்ற.

2. மக்களின் செவித்தினவுள்ள காதுகளை திருப்தி செய்து தங்களை பின்பற்றுமாறு செய்ய.

உ. அவர்கள் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திலுள்ளவைகளைக் குறைத்தும், அத்துடன் சிலவற்றை கூட்டியும் தங்களுக்கு பயன்படுத்திக் குற்றம் செய்ததுமல்லாமல், மற்ற மக்களுக்கும், அவ்வாறு செய்வது முற்றிலும் நியாயமானது என்றும் போதித்து குற்றம் செய்தார்கள். இந்த 20ஆம் நூற்றாண்டு சபையிலும் இந்தப் பிரச்சினை தொடர்வதைத் தெளிவாகக் காணலாம்!

ஊ. இன்று, இந்தக் காரியத்தைக் குறித்து சபையிலுள்ள கிறிஸ்துவின் சீடர்களும், போதகர்களும், தங்களை நியாயந்தீர்த்துக் கொள்வது நல்லது. தெய்வீக நியாயத்தீர்ப்பின் கீழ் மறுபடியும் வருவதற்கும், மற்றும் பாவத்திற்கும், தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்ததற்கும் தண்டிக்கப்படுவதற்கும் நாம் விரும்பவில்லை.

முடிவுரை

அ. ஆணையிடுதல் நம்மைப் பாவத்திற்குட் படுத்துமானால், ஆணையிடுவதை முற்றிலும் நிறுத்திவிடுவது மிகவும் நல்லது. நாம் மற்றொருவருக்கு பதிலளிக்கும்போது, "ஆம்" அல்லது "இல்லை" என்று மட்டும் கூறினால் போதுமானது.

ஆணையிடுதல்

மத்தேயு 5:33-37

ஒரு சமயம் நமக்கு இருக்கும் அதிகஞானம் அல்லது புத்திக்கூர்மை ஆகியவற்றால், அதிக ஆழமாக அழுத்தி, அவர்களிடம் கூறவேண்டிய அவசியமில்லை.

ஆ. இவ்வாறு செய்வதினால், நம்முடைய இருதயத்திலுள்ள தவறான உள்கருத்துக்கள் மற்றும் நோக்கங்களுடன் செய்யும் ஆணைக்கு, வரவேண்டிய தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கீழ், நம்மைக் கொண்டு வருவதிலிருந்து நாம், நம்மைத் தப்புவித்துக் கொள்ளலாம்!.

இ. சுயநலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மற்றும் நம்மைச் சுற்றிலுமுள்ள மற்ற விசுவாசிகள் மத்தியில் உயர்வாக கருதப்படுவது, ஆகியவற்றைக் காட்டிலும், தேவனுடன் உள்ள நமது தொடர்பு அதிக முக்கியமானது!

துன்மார்க்கரைக் குறித்து கிறிஸ்துவின் சீடர்களின் மனப்பான்மை

மத்தேயு 5:38-48

முன்னுரை

அ. அவர்களுடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் சாயலை அதிகமதிகமாக பிரதிபலித்துக் காட்டும் தன்மையில், விசுவாசிகள் வளரும் பருவத்தில் இருக்கிறார்கள் பரிசுத்த ஆவியானவர், இதை முடிவாக அவர்கள் பெற்றுக் கொள்ள தொடர்ந்து கிரியை செய்கிறார்.

ஆ. நாம், நமது விரோதிகளை, கிறிஸ்துவுக்குள் நமது சகோதர, சகோதிரிகளை நேசிப்பதுபோல், நேசிக்கவேண்டும் இது நடைபெற ஆரம்பித்தால், அது, அவர்களிடம் நாம் காட்டும் நற்கிரியைகள் மற்றும் அன்பான செய்கைகள் மூலம் வெளிப்படும்.

இ. உலக முழுவதற்கும் வரப்போகும் தேவ கோபாக்கினையிலிருந்து, பாவிகளைத் தப்புவிக்கவே, இவை எல்லாவற்றிலும் கிறிஸ்து முயற்சிசெய்கிறார். இது அவருக்கு மிக முக்கியமானது, ஆகவே நமக்கும் அவ்வாறே மிக முக்கியமாகயிருக்க வேண்டும்.

1. துன்மார்க்கன் ஒருவனை எதிர்த்து நிற்காதே (5:38-42)

அ. வசனம் 38. "கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள்" இது பழைய ஏற்பாட்டு வேத வசனத்திலிருந்து எடுக்கப்பட்ட குறிப்பு (யாத்திராகமம் 21:24 லேவியராகமம் 24:20; உபாகமம் 19:21)

வேதபாரகர்களும், பரிசேயரும் பழைய ஏற்பாட்டின் இந்தக் கற்பனையை, தங்கள் சொந்த பழிவாங்கும் மற்றும் பதிலுக்குபதில் செய்யும் காரியங்களுக்காகப் பயன்படுத்தினார்கள். அநேகர் தங்கள் இருதயக் கடினத்தினிமித்தம், இந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டார்கள். இருந்தாலும், இது நியாயப்பிரமாணத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. (லேவியராகமம் 19:18)

ஆ. குற்றத்திற்கேற்ற தண்டனையைக் குறைப்பதற்காக மட்டுமே, இந்தக் கற்பனை நோக்கம்-உண்மையில் கண் அல்லது பல் எடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை அல்லது இவ்வாறு நடைபெற்றதற்கான உண்மை சம்பவம் எதும் ஒருபோதும் காணப்படவில்லை. இம்மாதிரியான சந்தர்ப்பதில், அதற்கு வேறுவிதமாக ஈடு செய்யப்பட்டதாக, அதற்குபதில் கூறப்பட்டுள்ளது. (யாத்திராகமம் 21:26-27)

இ. வசனம் 39. "நான் உங்களுக்குச் சொல்கிறேன், தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்". "எதிர்த்து நிற்கவேண்டாம்", ஒருசமயம் இவ்வாறு பொருள்படலாம், "நீதிமன்றத்தில் எதிர்த்து நிற்கவேண்டாம்" "துன்மார்க்கன்", நம் சொந்த வாழ்க்கையில், காயம், வேதனை, துக்கம் ஆகியவற்றிற்குக் காரணமாக இருந்த ஒருவன், இங்கே கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தின் சரியான விளக்கத்தை மட்டுமின்றி, ஆதியிலிருந்து தேவன், அவருடைய மக்களுக்கு என்ன நோக்கம் வைத்திருந்தார் என்பதையும், கிறிஸ்து வெளிப்படுத்துகிறார். அவர்களுடைய பரமபிதா, அவர்களில் அன்புகூருவது போலவே, அவர்களும், தங்களுக்குத் தீமை மற்றும் தீங்கான காரியங்களைச் செய்தவர்களை நேசிக்க வேண்டும். இதுவும் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின் ஒரு பாகம். (லேவியராகமம் 19:18)

ஈ. வசனம் 39-42. துன்மார்க்கன் ஒருவனை எதிர்த்து நிற்காதே,

துன்மார்க்கரைக் குறித்து கிறிஸ்துவின் சீடர்களின் மனப்பான்மை

மத்தேயு 5:38-48

என்று அவர் கூறுவதின் அர்த்தத்தை, மிகத் தெளிவாக விளக்குகின்ற எடுத்துக் காட்டு ஒன்று கூறுகிறார். அவைகள் எல்லாம் நம்முடைய நேரம், மற்றும் நாட்களுக்குப் பொருத்தமாக இல்லாமல் இருக்கலாம். எப்படியும், நமக்கு காயம் மற்றும் தீங்கிழைத்த துன்மார்க்கனுக்கு எதிராக பழிவாங்காமல், அதற்குப்பதில் நேர்மாறான காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதை நமக்கு வெளிப்படுத்துவதே அவைகளின் நோக்கம்:

1. ஒருவன் உன்னைக் கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தை திருப்பிக்காட்டு-புறக்கையினால் அறைவது மிகவும் வேதனை தருவது மட்டுமின்றி, அது ஒரு பெரிய அவமானம். (2கொரிந்தியர் 11:20) நீதிமன்றத்தின் மூலமாக அதற்குச் சரியான இழப்பீடு பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக, அந்த அவமானத்தை இயேசுவின் சீடர்கள் மகிழ்ச்சியுடன் சகித்துக் கொள்ளவேண்டும். சனகெரிப் சங்கத்தின் முன்பாக இயேசு நிற்கும்போது அவருக்கு இதே காரியம் நேரிட்டது.

2. உன்னோடு வழக்காடி, உன் ஆடையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. வஸ்திரம் என்பது முழு நீள கால்சட்டை போன்றது. ஆனால் உன் ஆடையாக, தோலுக்கு மேல் அணியக் கூடியது.. அங்கி என்பது வெளி ஆடை. சட்டத்தின்படி எந்த ஒரு காரணத்திற்காகவும், இதை ஒருவனிடமிருந்து எடுக்கக் கூடாது. (யாத்திராகமம் 22:26; உபாகமம் 24:13) இயேசுவின் சீடர்கள், தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுவதை தவிர்த்து, சட்டப்படி அவர்கள் வைத்துக் கொள்ளக் கூடியவைகளையும் மகிழ்ச்சியுடன், தங்களிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட ஆயத்தமாயிருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல், சபையிலுள்ள விசுவாசிகளுக்கிடையே, இதேபோல் இந்தக் கொள்கையைச் செயல்படுத்துகிறார். (1கொரிந்தியர் 6:7)

3. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ. "பலவந்தம் பண்ணினால்" என்றால் "சேனைவீரர்களுக்குரிய கண்டிப்பு" என்று பொருள்படும். ரோமர்கள், குடிமக்களைப் பிடித்து, சேனை வீரர்களுக்குச் சொந்தமான சாமான்களை, ரோமர்களின் ஒரு "மைல்" தூரத்திற்குச் சுமந்து செல்லும்படி கட்டாயப்படுத்துவது, வழக்கம். மற்றவர்களுக்கு வேலைசெய்யும்படி கட்டாயப்படுத்தப்படுவது, சினமடைந்து, வெகுண்டெழும் படியாகத் தூண்டும். ஏனெனில் நமது சொந்த உரிமைகள் வன்முறையாக பாதிக்கப்படுகிறது. எப்படியிருப்பினும், இயேசுவின் சீடர்கள், எச்சமயத்திலும் உதவிசெய்யும் மனப்பான்மையைக் காத்துக் கொள்கிறவர்களாக, இரண்டு மைல்கள் தூரத்திற்கு அவர்களுடைய சுமையைச் சுமந்து சென்று, அப்பண்பைக் காட்டவேண்டும்.

4. உன்னிடத்தில் கேட்கிறவனுக்கு கொடு, உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகம் கோணாதே, ஏழைகள் சார்பாக, ஒரு தாராள மனப்பான்மையை எப்போதும் காத்துக் கொள்கிறவர்களாக இயேசுவின் சீடர்கள் இருக்க வேண்டும். (உபாகமம் 15:7-11) அவர்கள் மத்தியிலுள்ள எளியவர்களுக்கு, வட்டி இல்லாமல் கடன் கொடுக்கிறவர்களாயும் இருக்கவேண்டும். (யாத்திராகமம் 22:25; லேவியராகமம் 25:35-37) இக்காரியங்கள் நமக்குத் தீங்கிழைப்பதற்கும் காயப்படுத்த நோக்கமாயிருப்பவர்களுக்கும்கூட செயல்படுத்தப் படவேண்டும்/

2. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். (5:43-48)

துன்மார்க்கரைக் குறித்து கிறிஸ்துவின் சீடர்களின் மனப்பான்மை

மத்தேயு 5:38-48

அ. வசனம் 43. "உனக்கடுத்துவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக..." "உனக்கடுத்தவனைச் சிநேகிப்பாயாக", என்ற கற்பனை பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தில் உள்ளது. (லேவியராகமம் 19:18) இருப்பினும், எந்த ஒரு பழைய ஏற்பாட்டு வேத வசனமும், "உன் சத்துருக்களைப் பகைப்பாயாக..." என்று கூறவில்லை. இந்த இரண்டாவது பாகம் யாரால் சேர்க்கப்பட்டது என்று அறியப்படவில்லை. ஆனால், இதுவே கிறிஸ்துவின் காலத்தில் லேவியராகமம் 19:18 வசனத்திற்கான பொதுவான விளக்கம்.

ஆ. வசனம் 44. "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களுக்கு ஜெபியுங்கள்" "சிநேகியுங்கள்" என்றால், இங்கு தேவன் மனுக்குலத்தின்மீது கொண்டுள்ள தன்னையே தியாகம் செய்யும் அன்பு, என்று பொருள்படும். இது மற்றவர்களுக்குச் செய்யும் அன்பின் கிரியைகளில் வெளிப்படும். (யோவான் 3:16)

"ஜெபம்" என்றால், அவர்களுக்காகப் பிதாவிடம் விண்ணப்பம் செய்வது, அல்லது வேண்டிக்கொள்வது. கிறிஸ்துவின் சீடர்கள் அவர்களுடைய விரோதிகளுக்கு தன்னையே தியாகம் செய்யும் அன்பை வெளிப்படுத்த வேண்டும். அவர்களுக்காக பிதாவிடம் ஜெபிக்க வேண்டும்.

இ. வசனம் 45,48. "இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள், அவர் தீயோர் மேலும், நல்லோர் மேலும், தமது சூரியனை உதிக்கப்பண்ணி... மழையைப் பெய்யப் பண்ணுகிறார்." இந்த எடுத்துக்காட்டு, எல்லா மனுக்குலத்தின் மீதும் தேவனுடைய "சம்பூரணத்தை" வெளிப்படுத்துகிறது. அவர், அவருடைய அன்பை, நீதியுள்ளவர்கள் மீதும், அநீதியுள்ளவர்கள் மீதும் சம்பூரணமாய் பொழியப் பண்ணுகிறார். "எல்லா மானிடர்களின் பாவத்திற்காகவும், கிறிஸ்துவைக் கிருபாதார பலியாக அனுப்பினார். ஒருவராவது கெட்டுப்போவது தேவனுடைய விருப்பம் அல்ல. (ரோமர் 3:25; 2பேதுரு 3:9)

ஈ. நீதிமானையும், அநீதிமானையும், பரிசுத்தவான்களையும், பாவிகளையும், சிநேகிதனையும், பகைஞனையும், ஒன்றுபோல் அன்புகூர்வதின் மீதும், கிறிஸ்துவின் சீடர்களும், "பூரணராக" இருக்க வேண்டும். "உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்", இந்த உபதேசங்களைக் குறித்த லூக்காவின் தொகுப்பில், கிறிஸ்து இவ்வாறு கூறுகிறார். "அவர் நன்றியறியாதவர்களுக்கும், துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே. உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, (அவர்களுக்கு), நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள். (நம்மை பகைக்கிறவர்களுக்கும், துன்மார்க்கருக்கும்) (லூக்கா 6:35-36)

உ. வசனம் 46. "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன:" தங்களுடைய விரோதிகளை நேசிப்பவர்கள் பெற்றுக் கொள்ளும் பெரிய வெகுமதியோடு, ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்களின் பரிசு சிறியதாகவே இருக்கும். (லூக்கா 6:35; மத்தேயு 6:20)

ஊ. வசனம் 46-47. அவருடைய கருத்தை முழுவதும் விளங்கிக் கொள்ள, கிறிஸ்து மேலும் இரண்டு எடுத்துக்காட்டுகளை அவருடைய சீடர்களுக்குக் கொடுக்கிறார்:

துன்மார்க்கரைக் குறித்து கிறிஸ்துவின் சீடர்களின் மனப்பான்மை

மத்தேயு 5:38-48

1. வரிவசூலிப்பதற்காக, ரோம ஒப்பந்தக்காரர்களால் நியமிக்கப்படும் வரிவசூலிப்பவர்கள். அவர்கள் ரோமர்களுக்காக வேலை செய்வதால், அடிக்கடி சட்டப்படி வாங்க வேண்டியதற்கு அதிகமான வரியை கட்டாயத்தின்பேரில் பெற்றனர். ஆகவே பகைக்கப்பட்டனர். அத்துடன் பாவிகளாகவும், அநீதிமான்களாகவும் கருதப்பட்டனர்.

2. அநாகரீக மக்கள் (பாவிகள்) பொது இடங்களிலேயும், அணைத்துக் கொள்வதினாலும், ஒருவருக்கொருவர் வாழ்த்துதல் கூறிக்கொள்வதினாலும், அவர்களுடைய அன்பை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

எ. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக, நாம் இந்த வெளிப்படையாக அன்பைக் காட்டுவதற்கு மேலாக இருக்கவேண்டும். அவர்கள் அவர்களுடைய நண்பர்களை மட்டும், அதாவது தங்களில் அன்புகூருகிறவர்களை, நேசிக்கிறார்கள். நாம், நம்முடைய விரோதிகளையும், அவ்வாறே நம்மை நேசிக்கும் சகோதரர் மற்றும் சகோதரிகளையும் நேசிக்க வேண்டும். நம்முடைய பரம தந்தை அன்பில் பூரணமாக இருப்பதுபோல நாமும் அன்பில் பூரணர்களாக இருக்க வேண்டும்!

முடிவுரை

அ. நமக்குக் காயம் உண்டாக்கி, வேதனை மற்றும் துக்கத்திற்குக் காரணமாயிருந்தவர்களிடம் நம்முடைய மனப்பான்மை மற்றும் கிரியைகள்,

நாம் எந்த அளவிற்கு நமது பரம பிதாவைப்போல் மாறியுள்ளோம் என்பதை வெளிப்படுத்தும்.

ஆ. தமக்கு விரோதமாகக் கலகஞ் செய்தவர்களுக்காகவும், போர் செய்தவர்களுக்காவும், அவருடைய ஒரே பேறான குமாரனை, அவர்களுடைய பாவங்களுக்காகப் பலியாகக் கொடுக்கும் அளவிற்கு அவர்களில் அன்பு கூர்ந்தார். இன்றைய நமது பாடத்தில், நம்முடைய பரலோகத்தை தந்தையைப் போல நாம் அதிகமதிகமாக மாற, கிறிஸ்து நம்மை அழைக்கிறார்!

எளியவர்களுக்குக் கொடுத்தல்
மத்தேயு 6:1-4

முன்னுரை

அ. ஜெபம், உபவாசம் (6:5-18) மற்றும் எளியவர்களுக்குக் கொடுப்பதற்கு முன்னுரையாக இயேசுவின் இந்த உபதேசம் பயன்படுகிறது. (6:1-4)

ஆ. மற்ற மனிதர்கள் காணும்படியாக இக்காரியங்களை செய்வதில் கவனமாயிருக்கும்படியாக ஒவ்வொருமுறையும், இயேசு அவருடைய சீடர்களுக்குக் கூறுகிறார். (6:1-2,5,16). ஒவ்வொருமுறை கூறும்போதும், அவர்கள், அவ்வாறு செய்யும்போது பரமபிதாவினால் பலனளிக்கப்படுவார்கள் என்று கூறுகிறார். (6:4,6,18). அவர் அவருடைய இக்காரியத்தைக் குறித்த உரையாடலைத் துவங்கும் ஒவ்வொரு முறையும், "நீங்கள் செய்யும் போது" என்ற வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். இது, அவர் அவருடைய சீடர்கள் திட்டவட்டமாக இந்த மூன்று காரியங்களையும் அடிக்கடி செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறார், என்று பொருள்படுகிறது.

1. மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதிருங்கள். (6:1)

அ. "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்." "எச்சரிக்கையாயிருங்கள்", என்றால் மனுஷர்களுக்கு முன்பாக, அவர்கள் காணவேண்டும் என்று உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு,

அதிக கவனமாக, அதிக எச்சரிக்கையாயிருக்க ஆழமாக மனதில் பதித்துக் கொள்ளவேண்டும். நாம் ஜெபிக்க, உபவாசிக்க மற்றும் தர்மம் செய்வது ஆகியவைகளை அடிக்கடி செய்யவேண்டும். இக்காரியங்களைச் செய்ய நம்மால் இயலுமாகையால், அதை மனிதர் காணவேண்டும் என்பதற்காகச் செய்யக்கூடாது.

ஆ. "நீதியின் கிரியைகள்" இங்கு "நீதி" என்ற சொல், நீதியுள்ள கிரியைகள், அதாவது ஜெபித்தல், உபவாசித்தல், மற்றும் எளியவர்களுக்குச் கொடுத்தல் என்று பொருள்படும்.

இ. "செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை". நீங்கள் மனிதர் காணும்படி உங்கள் தர்மங்களைச் செய்தால், உங்கள் பரலோகப் பிதாவிடமிருந்து மேலும் அதிகமான பலன், இந்த வாழ்க்கையிலும், வரப்போகும் வாழ்க்கையிலும் இல்லை. மற்ற மனிதர்கள் பார்வையில் மேன்மையாக எண்ணப்படுவதே "நிறைவான பலன்". நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதற்கு இதுவே பெற்றுக்கொண்டதற்கான "சீட்டு".

ஈ. எப்படியிருப்பினும் இந்த "சீட்டு", பரலோகத்தில் கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் அங்கீகரிக்கப்படமாட்டாது. நீ இரட்சிக்கப்படுவாய். ஆனால் நீதியின் கிரியைகளாகிய, மரம், வைக்கோல், புல், ஆகிய இவைகள் அக்கினியினால் பட்சிக்கப்படும். (1 கொரிந்தியர் 3:12-15, 2 கொரிந்தியர் 5:10)

உ. நாம் மனிதர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் வெகுமதிகளுக்கும், நாம் பரலோகப் பிதாவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் வெகுமதிகளுக்குமிடையே உள்ள வேற்றுமையை கிறிஸ்து ஒப்பிட்டு அழிவுடையதுமாயிருக்கிறது. இரண்டாவது தாராளமாகக் கொடுக்கப்பட்டதும், தெய்வீகமானதும் நித்தியமாய் நிலைத்திருக்கிறதுமாயிருக்கிறது.

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

எளியவர்களுக்குக் கொடுத்தல்

மத்தேயு 6:1-4

2. நீ தர்மம் செய்யும்போது யாவருக்கும் தெரியும்படி அறிவிக்காதே. (6:2)

அ. "நீ தர்மம் செய்யும்போது... உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே". "தாரை ஊதி அறிவியாதே", என்பது பழமொழி போன்ற, நடைமுறைச் சொற்தொடர். இது யாவரும் அறிய பரப்புவது அல்லது மற்றவர்களுடைய கவனத்தைக் கவருவது என்று பொருள்படும். ஆகவே, எளியவர்களுக்குத் தர்மம் செய்யும்போது யாவருக்கும் தெரியும்படி அறிவிப்பதும், அவர்கள் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்பதையும் தவிர்க்கவேண்டும் என்று இயேசுவானவர், அவருடைய சீடர்களுக்குக் கூறுகிறார்.

ஆ. யூதர் சமுதாயத்தில், தர்மம் செய்வது, ஜெப ஆலயத்தில் நடத்தப்படும் ஒரு சிறப்பு நிகழ்ச்சி. ஆகவே, யூதர்கள், எளியவர்களுக்கு தர்மம் செய்யவிரும்பினால், அவர்கள் அதை ஜெப ஆலயத்தலைவர்களிடம் கொடுக்க, அவர்கள் அதை எளியவர்கள் மத்தியில் பங்கிடுவார்கள். கிரேக்க மற்றும் யூத விதவைகளுக்கிடையே பிரச்சனை எழும்பினதிலிருந்து, இந்த சிறப்பு நிகழ்ச்சியும், பொறுப்பும், ஆதி திருச்சபை மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வந்தது என்பதை நாம் பார்க்கலாம். (அப்போஸ்தலர் 6:1)

இ. ஜெப ஆலயத்தில், எளியவர்களுக்கு எவ்வளவு தர்மம் செய்கிறார்கள் என்பதை யாவரும் அறிய அறிவிப்பவர்களுக்கு எதிராக இயேசு கண்டனம் செய்வதாக இருக்கலாம். அவர்கள் உள் நோக்கம், தாங்கள், மற்ற மனிதர்களால் மேன்மையாக எண்ணப்படவேண்டும் என்றும், உயர்வாக புகழப்படவேண்டும் என்பதாக இருக்கிறது.

ஈ. "மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல்..." யாவரும் பார்க்கும்படி பகட்டாக காட்சியளிப்பது அல்லது உண்மை ரூபத்தை முகமூடியால் மறைத்துக்கொள்வது அல்லது நடிப்பவர் ஒருவர் மேடையில், ஒருவருடைய பாகத்தை நடிப்பது ஆகிய இவற்றைப்போல் இருக்கும் ஒருவனை, "மாயக்காரன்" என்று கூறலாம். இது ஒருசமயம் பரிசேயர், வேதபாரகர் ஆகியவர்களைக் குறிக்கும்படி கூறப்பட்டிருக்கலாம். (மத்தேயு 23:1)

உ. இயேசுவானவர் இவ்வாறு கூறுகிறார்: "தங்கள் கிரியைகளையெல்லாம் மனிதர் காணவேண்டுமென்று செய்கிறார்கள். தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி, (வேதவசனங்கள் அடங்கிய சிறிய மூடியுள்ள பெட்டி, இது நெற்றியிலும், புயத்திலும் கட்டப்படும்). தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களை பெரிதாக்கி, விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனிதர்களால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்." (மத்தேயு 23:5-7)

3. நீயோ தர்மம் செய்யும்போது உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக் கடவது. (6:3-4)

அ. வச. 3 "நீயோ தர்மஞ்செய்யும்போது, ... உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக் கடவது". இவ்வாறு எடுத்துக் கூறுவது, நாம் தர்மஞ்செய்யும்போது, நாம் அதை எவ்வளவு பூரண இரகசியமாகக் காத்துக் கொள்ளவேண்டும் என்பதை விளக்குகிறது. இந்த இரகசியத்துக்கான காரணங்கள் இரண்டு:

எளியவர்களுக்குக் கொடுத்தல்
மத்தேயு 6:1-4

1. எளியவர்கள் வெட்கப்படத்தக்கதாகவோ, உணர்ச்சிவசப்படத்தக்கதாகவோ இருக்கக்கூடாது.

2. தேவன், நாம் இதை இரகசியமாக செய்கிறதைக் கண்டு நமக்கு பலனளிப்பார்.

ஆ. இம்முறையில் நீ தர்மஞ்செய்யும்போது, "உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார். தேவன் உனக்கு ஒரு அற்புதத்தைச் செய்து, உனக்கு திரும்பக் கொடுப்பார், பலனளிப்பார், அதிகமாகச் செய்வார்."

இ. மலைப் பிரசங்கத்திற்கு இணையான வேதவாக்கியத்தை இயேசு கூறும்போது இது பொருள்படக் கூறுகிறார். அவர் இவ்வாறு கூறுகிறார்: "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்." (லூக்கா 6:38)

ஈ. தர்மம் செய்கிறவர்களுக்குத் தேவன் பலனளிக்கிறார் என்ற எண்ணத்தை நாம் அலட்சியம் செய்யக்கூடாது. புதிய ஏற்பாட்டு முழுவதிலும் பலனளிக்கப்படுவது என்பது மத்திய கருத்தாக இருக்கிறது. அத்துடன், இந்த ஜீவியகாலத்திலும், அவ்வாறே, வரப்போகும் நித்திய வாழ்க்கையில் பெற்றுக்கொள்ளும் பலன்களைப் பற்றியும் சேர்க்கப்பட்டுள்ளது. (மத்தேயு 16:27; மாற்கு 10:29-30; லூக்கா 6:23; 1 கொரிந்தியர் 3:14; எபேசியர் 6:18; எபிரெயர் 11:6,26; வெளிப்படுத்தின விசேஷம் 22:12)

உ. மலைப் பிரசங்கத்தில் மட்டும் பலனளிக்கப்படுவதைப் பற்றி ஒன்பது முறைகள் கூறப்பட்டுள்ளது. (மத்தேயு 5:12,46; 6:1,2,4,5,6,16,18)

ஊ. எபிரெயருக்கு எழுதியவர், இதை நமக்கு ஞாபகப்படுத்துகிறார்: "ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்கிறதினாலும், செய்து வருகிறதினாலும் நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும், தேவன் மறக்கமாட்டார். (எபிரெயர் 6:10; கொலோசெயர் 13:23-24 வசனங்களையும் பார்க்கவும்). பவுல் நமக்கு இதை ஞாபகப்படுத்துகிறார்: "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்". (கலாத்தியர் 6:10)

முடிவுரை

அ. சமயப் பழக்கங்களான, ஜெபித்தல், உபவாசித்தல், தர்மம் செய்தல், ஆகியவற்றை அவருடைய சீடர்கள் கடைபிடிக்கவேண்டுமென்பதில் கிறிஸ்துவானவர் கருத்துள்ளவராயிருந்தார். அவர்கள் இக்காரியங்களை போதுமான அளவு அடிக்கடி செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறார். அத்துடன், அவர்களுடைய பரலோகப் பிதாவிடமிருந்து வெகுமதியைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக சரியான உள்நோக்கத்துடன் இவைகளைச் செய்யவேண்டும் என்று கருத்துள்ளவராயிருக்கிறார். வரப்போகும் வாழ்க்கையில் மட்டுமின்றி இப்பொழுதுள்ள வாழ்நாள் காலத்திலும் பலன்களைப் பெறவேண்டும்'

எளியவர்களுக்குக் கொடுத்தல்

மத்தேயு 6:1-4

ஆ. ஆகவே இரண்டு காரியங்களை நாம் கவனிக்கவேண்டும்:

1. நாம், ஜெபித்தல், உபவாசித்தல், தர்மம் செய்தல் ஆகியவற்றைச் செய்கிறோமா?

2. இந்தக் காரியங்களைச் சரியான நோக்கத்தோடு செய்கிறோமா?

இ. நாம் இக்காரியங்களைச் சரியான நோக்கத்தோடு செய்வோமானால் நம் பரமபிதாவிடமிருந்து வெகுமதிகளைப் பெறுவோம். அவர் நமக்குக் கொடுப்பார், அதிகம் செய்வார், பதிலளிப்பார்.

அனுதின ஜெபம்

மத்தேயு 6:5-15

முன்னுரை

அ. ஜெபத்தைக் குறித்து, சுவிசேஷங்களிலுள்ள அப்போஸ்தலர்களுக்கும் சீஷர்களுக்கும் அறிவுரைகள் வழங்கினார். (மத்தேயு 6:5-15; மாற்கு 11:24-26; லூக்கா 11:1-13, 18:1-14; யோவான் 16:23-28) அவர்கள் இவற்றை, ஆதித்திருச்சபையிலுள்ள சீடர்களுக்கு அடுத்தடுத்து கடத்திச் செல்லப்பட்டது. (அப்போஸ்தலர் 2:42; 3:1; 13:3; 14:23). அப்போஸ்தலாகிய பவுல், தான் நிலைநாட்டின சபைகள் ஜெபிக்கவேண்டுமென்று அறிவுறுத்தினார். (ரோமர் 12:12; 1 கொரிந்தியர் 7:5; 14:13-15; எபேசியர் 6:18-20; பிலிப்பியர் 4:6; கொலோசெயர் 4:2; 1 தெசலோனிக்கேயர் 5:17). பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியவர்களும் ஜெபத்தைக்குறித்த போதனைகளைக் கொடுத்துள்ளனர். (1பேதுரு 4:7, யாக்கோபு 5:13-16, 1 யோவான் 1:9, 5:16).

ஆ. ஒரு விசுவாசி ஜெபிக்கும்போது, அவன்:

1. மாயக்காரரைப்போல் இருக்கக்கூடாது.

2. பயபக்தியுடன் அவருடைய இராஜரீகத்தையும், அதிகாரத்தையும் ஆழமாக உணர்ந்து பரலோகத் தந்தையை அணுகவேண்டும்.

3. தனிமையில் எளிமையாகத் தன்னுடைய வேண்டுதல்களைத் தேவனிடம் வைக்கவேண்டும்.

4. பரமப்பிதாவிடம், தேவனுடைய சித்தம் உலகத்தில் செய்யப்படவேண்டுமென்றும், பரலோகஇராஜ்ஜியம் வரவேண்டும் என்றும் வேண்டிக் கொள்ளவேண்டும்.

5. அவனுடையப் பரலோகப் பிதாவிடம் அவனுடைய அனுதின சரீரம் மற்றும் ஆவிக்குரியத் தேவைகளைக் கேட்கவேண்டும்.

இ. "கர்த்தருடைய ஜெபத்தில்" "எங்களுடைய" "எங்களுக்கு" என்ற பதங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டிருப்பது, நாம் இந்த ஜெபத்தைத் தனிஜெபமாகவும், பொதுவாக சபையிலும் பயன்படுத்தப்படலாம் என்பதைக் காட்டுகிறது. (மத்தேயு 6:9-13, லூக்கா 11:1-4)

அ. "நீ ஜெபம் பண்ணும்போது" பிற்கால யூதசமயத்தாரின், குறிப்பிட்ட மூன்று ஜெப நேரங்களை மனதில் கொண்டவராக, ஜெபத்தைப் பற்றிய இந்த பிரசங்கத்தை, இயேசு, ஒருசமயம் துவங்கியிருக்கலாம். (முற்பகல் 9, பிற்பகல் 3 மற்றும் சூரியன் மறையும் நேரம் - அப்போஸ்தலர் 3:1; 10:3,30) கிறிஸ்து தனி ஜெபம் செய்கிறவராகவே இருந்தார். (மத்தேயு 14:23, 26:36,39, மாற்கு 1:35, லூக்கா 9:18,29) அவருடைய சீடர்களும் அவ்வாறே ஜெபிக்கிற மனிதர்களாக இருக்கவேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். அவருடைய பிதாவின் வீடு "ஜெப வீடாக" இருக்கவேண்டுமென்று அவர் கூறினார். (மத்தேயு 21:13, ஏசாயா 56:7)

ஆ. "மாயக்காரரைப் போலிருக்கவேண்டாம்" "மாயக்காரர்" என்றால் இந்த வசனத்தில், மற்றொரு மனிதனின் நடத்தையை தன் சொந்த பண்பைப்போல் எடுத்து நடப்பது, நடிப்பது, அடுத்தவர்களைப் போலவே செய்வது என்று பொருள்படும். இன்று, இப்படிப்பட்டவனை நாம் "ஏமாற்றுகிறவன்" அல்லது "மோசம் செய்பவன்" என்று கூறுவோம்.

அனுதின ஜெபம்

மத்தேயு 6:5-15

நாம் ஜெபிக்கும்போது, நாம், நாமாகவே இருக்கவேண்டும். நம்மைப்போலவே காட்டவேண்டும். நாம் நம்மைப்போலவே பேசவேண்டும். மற்றும் கர்த்தரிடத்தில் உரையாடவிரும்பும்போது, நம்மைப் பற்றியும், மற்ற காரியங்களைப் பற்றியும் உண்மையானவற்றையே பேசவேண்டும்.

இ. ஜெ ஆலயங்களில் ஜெபிக்கும்போது நின்று கொண்டு ஜெபிப்பது யூதர்களின் சாதாரண வழக்கமாயிருந்தது. (மாற்கு 11:25). சிலர், நியமிக்கப்பட்ட ஜெ நேரத்தில், தாங்கள் நிற்கிற இடம் யாவராலும் பார்க்கும்படியானதுதானா என்று நிச்சயப்படுத்திக் கொள்வது வழக்கம். இதைத்தான் மாயக்காரர்கள் செய்கிறார்கள்!

ஈ. "அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தது" மாயக்காரர் பெற்றுக் கொள்ளும், யாவராலும் மேன்மையாக எண்ணப்படுவதும், கனப்படுத்தப்படுவது மாத்திரமே, அவர்கள் ஜெபித்துப் பெற்றுக் கொள்வது. தேவன் அவர்களுக்கு ஒன்றும் தரமாட்டார்.

2. நீங்கள் ஜெபிக்கும்போது, உங்கள் வேண்டுதல்களைச் சாதாரணமாக தேவனுக்குமுன் வையுங்கள். (6:6-8)

அ. வச. 6 "நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற (காணாக் கூடாத) உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு". நாம் ஜெபிக்கும் போது, அவரோடு தனிமையாக இருப்பதே நம்முடைய பரலோகத் தந்தையின் விருப்பம்.

இது ஒரு தனிப்பட்டவரின் சொந்த விவகாரம். ஒரு தகப்பனும், பிள்ளையும் மட்டும் தனிமையில் விவாதிப்பதற்கு ஒத்ததாக, சொந்த மிக நெருங்கியக் காரியங்களைக் குறித்து உரையாடுவதாக கிறிஸ்து உரிமையுடன் எடுத்துக் கூறுகிறார். அநேக விசுவாசிகள் கூடியிருக்கும் இடத்தில் ஏறெடுக்கப்படும் ஜெபமாக இருக்குமானால், கிறிஸ்துவுக்குள் இராதவர்களின் செவிகளுக்கு இது இல்லை என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஆ. மற்றும், நாம் காணக்கூடாத பரமபிதாவிடம் நாம் ஜெபிக்கும்போது, நாம் நமது விசுவாசத்தைப் பயிற்சி செய்கிறோம். அத்துடன் அவர் சம்பந்தமாக கீழ்க்கண்டவற்றை நிச்சயப்படுத்துகிறோம்:

1. அவர் ஜீவிக்கிறார்.
2. நம்முடைய ஜெபங்களைக் கேட்கிறார்.
3. ஏதாவது ஒருவழியில் பதிலளிப்பார்.

இ. வசனம் 6 "அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்". "பலனளிப்பார்" என்றால், கொடுப்பார், திரும்பக் கொடுப்பார், அதிகமாய் தருவார், உனக்குப் பலனளிப்பதற்காக அற்புதத்தை நடப்பிப்பார். அவர் ஜீவிக்கிறார் என்றும், செவி கொடுப்பார் என்றும், ஏதாவது ஒரு வழியில் பதில் செய்வார் என்றும் அவரை விசுவாசித்து, அவரிடம் தனிமையில் வரும் அவருடைய மக்களுக்கு, தேவன் கொடுப்பார் என்று பொருள்படும்.

ஈ. வசனம் 7. "அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்" "அலப்பாதேயுங்கள்", என்பது, தொடர்ச்சியாக, இடைவிடாமல் நன்றாக அறியப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான பழமொழிகளைக் கூறுவது.

அனுதின ஜெபம்

மத்தேயு 6:5-15

மற்றும் மூடத்தனமான அர்த்தமற்றப் பேச்சுக்களை, மற்றொரு மனிதர் சாகும் அளவிற்கு சலிப்படைய செய்யும் வரை ஓயாமல் வெள்ளப் பெருக்குபோல் கூறுவது. அவிசுவாசிகள், மற்றொருவருடன் உரையாடும்போது இதைத்தான் செய்கிறார்கள். என்னை ஆச்சரியத்தில் மூழ்கவைக்கும் காரியம் என்னவென்றால், இவ்வகையான பேச்சுத் திறமைக்காக இவர்கள் ஒருவரையொருவர் வாழ்த்தி பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்வது! எப்படியிருப்பினும் உங்களுடைய பரலோகத் தந்தையிடம் பேசுவதற்கு இம்முறை சரியானது அல்ல. இது அவரைச் சிறிதேனும் மகிழ்விக்காது.

உ. வசனம் 8. “நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்”. நம்முடைய பரம பிதா, நம்முடைய ஒவ்வொரு தேவைகளையும், தனிமையில் நம்முடன் பேச விரும்புகிறார். நாம் அவரில் நம்பிக்கை வைத்து அவர்பேரில் சார்ந்து கொள்ளவேண்டுமென ஆசீர்வதிக்கிறார். தொடர்ச்சியான ஜெப நேரங்களையும், குறிப்பிட்ட காரியங்களுக்கான ஜெபத்தைத் திரும்பத் திரும்ப ஜெபிக்கவேண்டுமென்றும் அவர் எதிர்பார்க்கிறார். (லூக்கா 6:12, மத்தேயு 26:44, 2 கொரிந்தியர் 12:8)

ஊ. நம்முடைய கவலைகள், உள்நோக்கங்கள், மகிழ்ச்சி, மனக்காயம், விருப்பங்கள், மற்றும் நம்முடைய கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம், ஆகிய நம்மைப்பற்றிய யாவற்றையும், அவர் அறிந்திருக்கிறார் என்பதை நாம் நினைவு கூறவேண்டும். அவருக்கு உன்னைப் பற்றித்தெரியாது.

அல்லது உன்னைக் குறித்த எந்த விதமான கரிசனையும் இல்லை என்பதுபோல் கூறியவற்றையே வீணாக மறுபடியும், மறுபடியும் சொல்லி, மரிக்கும் அளவிற்குச் சலித்துப்போகும்படி செய்யாதே!

எ. பிலிப்பியருக்குப் பவுல் அப்போஸ்தலன் எழுதிய நிருபத்திலுள்ள ஜெபத்தைக் குறித்த முடிவான வாக்கியம், இங்கே பொருத்தமானதாக இருக்கும்: “நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்” (பிலிப்பியர். 4:6) சங்கீதக்காரன் இவ்வாறு கூறுகிறார்: “உங்கள் கவலைகளையெல்லாம் கர்த்தர் மீது போட்டுவிடுங்கள். அவர் உங்களை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்”. (சங்கீதம் 55:22). பேதுரு நமக்கு இவ்வாறு கூறுகிறார்: “அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்” (1பேதுரு 5:7)

3. நீங்கள் ஜெபிக்கும்போது உங்கள் பரமபிதாவை கனம்பண்ணி அவருடைய இராஜ்ஜியம் வரவேண்டும் என்றும் உலகத்தில் அவர் சித்தம் செய்யப்படவேண்டுமென்று கேளுங்கள். (6:9-10)

அ. வசனம் 9. “பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே”. “கர்த்தருடைய ஜெபத்தில்” முதல் பாகம் பிதாவைக்குறித்தும், அவருடைய இராஜ்ஜியம் வருவதைக் குறித்தும் உள்ளது. பிதாவானவர் பரிசுத்தர் (பாவம், பொல்லாப்பிற்கு அப்பாற்பட்டவர்) என்றும் அவர் பரலோகத்திலிருக்கிறார் என்றும் ஜெபிக்கிற ஒருவன் நினைவு கூரவேண்டும்.

அனுதின ஜெபம்

மத்தேயு 6:5-15

ஆ. நாம் தேவனுடைய பிள்ளைகள் (கலாத்தியர் 4:5-7, எபேசியர் 1:5) ஆகவே சுதந்திரத்துடனும், திட நம்பிக்கையுடனும் அவரை அணுகவேண்டும். (எபேசியர் 3:12). நாம் அவரைக் கனம்பண்ணி நமது தேவைகளை அவரிடம் வைக்கும்போது, நாம் "பிதாவே, பிதாவே" என்று கதறுகிறோம்.

இ. வச. 9. "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக". நாம், "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்று சொல்லும்போது, நாம் இவ்வாறு கூறுகிறோம்: "எங்கள் மத்தியில் உமக்கு உரிய சரியான இடத்தைப் பெற்றுக்கொள்ளும். எங்கள் மத்தியில் நீர் ஒருவரே கனத்திற்கும், பயபக்திக்கும் பாத்திரமானவர்" ஆகவே நாம் அவர் ஒருவரே தேவன், அவரையன்றி வேறொருவருமில்லை, என்பதை உறுதிப்படுத்துகிறோம். (லேவியராகமம். 4:35, 6:4)

ஈ. வச. 10 "உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதைப்போல், பூமியிலும் செய்யப்படுவதாக". ஆதியில் இருந்ததுபோல், மனிதர்கள் மத்தியில், அவருடைய பூலோக இராஜ்ஜியம் நிலைநாட்டப்பட்டு, ஆளுகை செய்யப்படவேண்டுமென்பது பிதாவினுடைய சித்தமாயிருக்கிறது. இது கீழ்க்கண்டவற்றில் குறிப்பிடப்படுகிறது:

1. இயேசுவினுடைய சீடர்கள், பிசாசினுடைய ஆளுகையிலிருந்தும், அதிகாரத்திலிருந்தும் எடுக்கப்பட்டு, தேவனுடைய ஆளுகைக்குள்ளும், அதிகாரத்திற்கடியிலும் வைக்கப்படுகிறார்கள். (கொலொசெயர் 1:13)

2. இயேசுவானவர் திரும்பவந்து, அவருடைய இராஜ்ஜியத்தை பூமியில் நிலைநாட்டுவார். (1தெசலோனிக்கேயர் 4:13-17, வெளிப்படுத்தின விசேஷம் 20:1-6)

3. கிறிஸ்து, அவருடைய பரிசுத்தவான்களுடன் ஆயிரவருடகாலம் ஆட்சிசெய்தபிற்பாடு, சகலமும் பிதாவானவருக்கு ஒப்புக்கொடுக்கப்படும். (1கொரிந்தியர் 15:24-25)

4. நீ ஜெபிக்கும்போது, உன்னுடைய அன்றாட சரீரம் மற்றும் ஆத்தும தேவைகளை, உன்னுடைய பரலோகத் தந்தையிடம் வைத்துவிடு. (6:11-15)

அ. வச. 11 "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" இங்கு "ஆகாரம்" என்பது வாழ்க்கையின் எல்லா தேவைகளையும் குறிக்கும்-உணவு, நீர், உடை, மற்றும் உறைவிடம். நெருங்கும் அடுத்து வரப்போகும் காலத்திற்கான தேவைகளை கொடுக்கும்படியாக நம்முடைய பரலோகத் தந்தையை அணுகி தினந்தோறும் கேட்கவேண்டும். அடுத்து அவர், நம்முடைய தேவைகளை, வனாந்தரத்தில் இஸ்ரவேலரை மன்னாவைக் கொண்டு போஷித்ததுபோல், நம்மை நமது அனுதின தேவைகள் அளவில் கொடுத்துக் காத்துக் கொள்வார். (யாத்திராகமம் 16:4). அவர்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டை அடைந்தவுடன், இந்தத் தேவை முற்றுப்பெற்றதைக் காணும்போது நம் உள்ளம் ஆச்சரியத்தில் உள்ளக் கிளர்ச்சியடைகிறது! (யோசுவா 5:12). ஆகவே இது நம்மிடமும் அவ்வாறே இருக்கும்!! நாளுக்கு, நாள் தொடர்ந்து, அவருடைய மக்கள் அவர் மீது சார்ந்து இருக்கவேண்டுமென்று அவர் ஆசீர்வதிக்கிறார்.

ஆ. வச. 12 "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்". நாம் கீழ்க்கண்ட காரியங்களுக்காக, நம்முடைய பரம பிதாவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்:

அனுதின ஜெபம்

மத்தேயு 6:5-15

1. அவருடைய எதிர்பார்ப்புகளுக்குக் கீழாக விழும்போது.

2. நம்முடைய வாழ்க்கையில் சன்மார்க்க நெறியில் தவறும்போது.

3. அவரைக் கனப்படுத்துவதிலும், அவரிடம் பயபக்தியாய் நடந்து கொள்வதிலும் தவறும்போது எப்படி இருப்பினும், விசுவாசிகள் அடங்கிய ஒரு சபையில், ஒருவருக்கொருவர் மன்னிக்காவிட்டால், அவர்கள் தவறுதல்களை அவர்களுடைய பரமபிதா மன்னிக்கவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கக்கூடாது. (மாற்கு 11:25-26, லூக்கா 6:37 வசனங்களிலும் காணலாம்.)

இ. தேவன், எந்த அளவிற்கு நம்முடைய பாவங்களை மன்னித்தார் என்பதைக் கருத்தில் கொண்டோமானால், மற்றவர்களை மன்னிக்கும் ஆவி இலகுவாக்கப்படுகிறது. (எபேசியர் 4:32). ஒரு மன்னிக்கமுடியாத ஆவி, பாவமாக அறிக்கை செய்யப்படவேண்டும்.

ஈ. வசனம் 13. "எங்களைச் சோதனைக்குட்பட பண்ணாதேயும்". சாத்தான் நமக்கு முன்பாக பரீட்சைகளையும், சோதனைகளையும் அல்லது நாம் தாங்கிக்கொள்ள இயலாத வாழ்க்கைச் சூழ்நிலைகளையும் கொண்டுவராதபடிக்கும், நாம் அவைகளிலிருந்து தப்பிக்கொள்ளும்படியாகவும், இவ்வாறு நாம் கேட்கவேண்டும் (1 கொரிந்தியர் 10:13). இது உண்மையில் இவ்வாறு பொருள்படும்: "ஆவியில் மரித்துப்போகும் அளவிற்கு ஈட்டியினால் அல்லது பட்டயத்தால் நாங்கள் உருவகுத்தப்பட அனுமதிக்க வேண்டாம்". பாவத்தில் விழும்படியான சோதனை, தேவனிடமிருந்து அல்ல, அது சாத்தானின் வேலை என்று, இயேசுவானவரும் வெளிப்படுத்தியுள்ளார். (யாக்கோபு 1:13)

எ. வச. 13. "பொல்லாங்கனிடமிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்" நாம் "பொல்லாங்கனிடமிருந்து எங்களை இரட்சித்துக் கொள்ளும்" என்று கேட்கும்போது, நாம் மறுபடியும் சாத்தானிடம் ஏற்படுத்திய சங்கிலிக் கட்டுகளையும், அடிமைத்தனத்தையும் உடைத்துவிடும் படியாகவும் அவனுடைய கையிலிருந்து விடுவிக்கப்படும் படியாகவும் கேட்கிறோம்.

ஏ. சாத்தான் நம்மைக் கிறிஸ்துவின் கரங்களினின்று பிடுங்கமுடியாது. ஆனால் நாம், சில நேரங்களில், நம்முடைய வாழ்க்கையின் சில பாகங்களைச் சாத்தான் ஆதிக்கம் செய்ய அனுமதித்துவிடுகிறோம். நாம் ஜெபிக்கும்போது இதை அறிந்திருக்க வேண்டியது அவசியம். இதுவே யாக்கோபு நிரூபம் முழுவதும் உள்ளது! நம்முடைய ஆவி, நாம் இரட்சிக்கப்பட்ட பின்னால் கூட, இந்த உலகத்தின் காரியங்களை தீவிரமாக வாஞ்சிக்கிறது. (யாக்கோபு 4:4-5, 5:19-20)

முடிவுரை

அ. அப்போஸ்தலர்களின் புத்தகத்தில் கிறிஸ்தவர்கள் கீழ்க்கண்டவைகளுக்காக ஜெபித்தனர்.

1. தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வழிநடத்தப்பட (1:24, 6:6)

2. சுவிசேஷ செய்தியைப் பரப்பும்போது பயமுறுத்தப்படும்போது. (4:24)

3. அன்புக்குரிய சகோதரர் ஒருவர் ஐக்கிய சகவாசம் செய்யும் இடத்திலிருந்து பயணமாய் செல்லும்போது. (21:5)

4. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்வற்காக. (8:15)

அனுதின ஜெபம்

மத்தேயு 6:5-15

5. தெய்வீக சுகமளிக்கப்பட, (28:8)

6. சுவிசேஷத்தை எடுத்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்காக (13:3)

7. சுவிசேஷத்தினிமித்தம் சிறையிலடைக்கப்பட்டவர்களுக்காக (12:5)

ஆ. புதிய ஏற்பாட்டு நிருபங்களில் கிறிஸ்தவர்கள் மற்ற காரியங்கள் செய்வதற்கு மத்தியில் ஜெபிக்கவும் செய்தார்கள்.

1. சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்பவர்களுடைய பாதுகாப்பிற்காகவும், கனி தரும் ஊழியத்திற்காகவும் (ரோமர் 15:31, எபேசியர் 6:19, கொலொசெயர் 4:4, 2 தெசலோனிக்கேயர் 3:1-2, எபிரெயர். 13:19)

2. நல்ல சுகத்திற்காக, (3 யோவான் 2)

3. பல மொழிகளின் பொருளை விளக்க. (1கொரிந்தியர் 14:13)

4. துன்பமான சூழ்நிலைகளில் (யாக்கோபு 5:13)

5. சரீர சுகத்திற்காக (யாக்கோபு 5:14)

6. பாவத்தில் விழுந்த சகோதர, சகோதரிகளுக்காக. (1யோவான் 5:16)

7. உணவிற்கு நன்றி கூறும் போது. (1தீமோத்தேயு 4:5)

இ. இன்று, நீ உன் பரலோக தந்தையிடம் எதைக் குறித்துப் பேச விரும்புகிறாய்? இன்று நாம் விசுவாசிகளாகக் கூடியிருக்கும் கூட்டத்தில் நமக்காக எதைக் குறித்து ஜெபிக்க விரும்புகிறாய்?

உபவாசம்

மத்தேயு 6:16-18

முன்னுரை

அ. இந்தக் கருத்தின் அடிப்படையில் உரை நிகழ்த்துவதிலிருந்து, கிறிஸ்து உபவாசம் செய்தார் என்றும், அவருடைய சீடர்களும் உபவாசிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இந்தக் கருத்தின் பேரில் அவர் கொடுத்த விளக்க உரையின் ஆரம்பமாக, "நீங்கள் உபவாசிக்கும்போது" என்று கூறுவதிலிருந்து இதை நாம் அறிந்து கொள்ளலாம். இன்றைய நமது வேதபாகம், இது சம்பந்தமாக இயேசுவானவர் கொடுத்த ஆலோசனைகள்:

1. நாம் உபவாசிக்கும் போது எவ்வாறு காணப்படவேண்டும்.

2. உபவாசத்திற்குத் தவறான மற்றும் சரியான நோக்கங்கள்.

1. நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல் முகவாடலாய் இராதேயுங்கள். (6:16)

அ. "நீங்கள் உபவாசிக்கும்போது". உபவாசம் என்பது, ஆவிக்குரிய நோக்கங்களுக்காக உணவைத் தவிர்ப்பது. இத்துடன், பானங்கள் அருந்தாமல் இருப்பதும், சில அரிதான சந்தர்ப்பங்களில் உண்டு. (எஸ்தர் 4:16; அப்போஸ்தலர் 9:9). உணவை முற்றிலுமாக உண்ணாமல் இருப்பதை தவிர்த்து, திட்ட உணவைக் குறைத்து, ஒரு பகுதி (உணவு) சார்ந்த உபவாசம் செய்வது உண்டு. (தானியேல் 10:2,3)

ஆ. உபவாசம் கீழ்க்கண்டவைகளோடு சம்பந்தப்பட்டது:

1. ஜெபம் (லூக்கா 2:37, 5:33, அப்போஸ்தலர் 13:2-3, 14:23)

2. ஆராதனை. (லூக்கா 2:37, அப்போஸ்தலர் 13:2).

ஆகவே நாம் உபவாசம் செய்யும் போது ஜெபம் மற்றும் ஆராதனை செய்வது நல்லது. (ஏதாவது ஒன்று மட்டுமாவது, அல்லது இரண்டும் இருப்பது விரும்பத்தக்கது)

இ. இது யூதர்கள் மத்தியில் ஒரு சாதாரண வழக்கம். (1 இராஜாக்கள் 21:12, 2 நாளாகமம் 20:3, எஸ்றா 8:21, எஸ்தர் 4:15-16, சங்கீதம் 69:10) மற்றும் வருடத்தில் ஒருநாள், பாவ நிவாரண தினம், அந்த நாளில், இதை (உபவாசம்) அனுசரிக்க வேண்டுமென்று, மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. (பாவத்திற்காக - லேவியராகமம் 16:29)

இது புதிய ஏற்பாட்டுக் காலத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டு, கீழ்க்கண்ட மக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

1. பரிசேயர்களும், அவர்களுடைய சீடர்களும். (மாற்கு 2:18, லூக்கா 18:12). வாரத்தில் இரண்டு முறை, இது ஒருசமயம் திங்கள் கிழமைகளிலும், வியாழக்கிழமைகளிலும் இருந்திருக்கலாம். அது நாள் முழுவதும் அல்லது ஒரு நாளில் ஒரு வேளை மட்டும்.

2. யோவான் ஸ்நானன் மற்றும் அவனுடைய சீடர்கள். (மாற்கு 2:18)

3. கிறிஸ்துவின் முதல் சீடர்கள் (மாற்கு 9:29, லூக்கா 2:37)

4. ஆதி திருச்சபையில் இருந்த சீடர்கள். (அப்போஸ்தலர் 13:2-3, 14:23)

உபவாசம்

மத்தேயு 6:16-18

ஈ. "மாயக்காரரைப்போல் முகவாடலாய் இராதேயுங்கள்". "முகவாடல்," என்பது, கோபமாக அல்லது சோகமாக துக்கத்தில் மூழ்கியிருப்பது போல் காணப்படுவது. இங்கு "மாயக்காரனைப்போல்" என்றால் மற்றொரு மனிதனின் நடத்தையைத் தான் எடுத்துக் கொள்வது, நடிகனாக பாவனை செய்வது, என்று பொருள்படும். அவனுடைய நோக்கங்கள் தவறானவைகள். அவன், புகழுக்காகவும், பணத்திற்காகவும், ஒரு உண்மையான நீதிமானைப் போல் பாவனை செய்கிறான். அவர்கள் உபவாசிக்கும்போது, "மரணத்திற்குச் சமீபமாய்" இருப்பதுபோல் காணப்படுவதற்காக, அவர்களுடைய முகங்களில் ஒரு வகைத் தைலங்களைப் பூசிக் கொள்வார்கள் என்று பரிசேயர்களைப் பற்றிக் கூறப்படுகிறது.

உ. "அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" ஒருவர், உபவாசிக்கும்போது அவருடைய சாதாரண உடை, முகபாவனை, தோற்றம், அல்லது நடத்தை ஆகியவைகளை புகழ் மற்றும் பணத்தை ஆதாயம் செய்வதற்காக மாற்றிக் கொள்ளுவதினால், உபவாசத்தினால் தேவனிடமிருந்து அவர்கள் பெற்றுக் கொள்ளும் நன்மைகளுக்கு தடை செய்கிறார்கள்! இந்த மனிதன் மனிதர்களிடமிருந்து கனத்தையும், உயர்வையும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அவன் இதை மாத்திரமே பெற்றுக் கொள்வான். தேவன் அவனுக்கு வெகுமதி கொடுக்கமாட்டார்!

2. நீ உபவாசிக்கும்போது அந்த உபவாசம் மனிதர்களுக்குக் காணப்படக்கூடாது. (6:17-18)

அ. வசனம் 17. "நீயோ உபவாசிக்கும் போது". இயேசுவானவர் உபவாசித்தார். அவர் தம்முடைய சீடர்களும் அவ்வாறே உபவாசிக்கவேண்டும் என்று எதிர்பார்த்தார்.

ஆ. வசனம் 17. "உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு". நம்முடைய பசியை நம்முடைய தோற்றம் பிரதிபலிக்க அனுமதிக்கக் கூடாது. யூதர்களுக்கு அவர்களுடைய தலைக்கு எண்ணெய் தேய்ப்பதும், முகத்தைக் கழுவுவதும், மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டவை.

இ. வசனம்18 "மனிதர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக..." உபவாசம் என்பது திட்டவட்டமாக, ஒரு தனி நபருக்கும், அவர் விசுவாசிக்கும் தேவனுக்கும் இடையே உள்ளது. ஆகவே அது இரகசியமாகச் செய்யப்படவேண்டும்.

ஈ. வசனம்18. "அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்". "பலனளிப்பார்" என்றால் கொடுப்பார், திரும்பக் கொடுப்பார், அதிகமாய்க் கொடுப்பார் என்று பொருள்படும். உபவாசத்தின் மூலமாக அவர்கள், தங்களுடைய மிகுந்த தேவையை வெளிப்படுத்தும்போது, நமது பரமபிதா, அவருடைய மக்களுக்காக அற்புதமான கிரியைகளைச் செய்வார். நாம் உபவாசிக்கும்போது, நமக்காக அவர் கிரியை நடப்பிக்க வேண்டுமென்று நாம் ஆவலோடு இருக்கிறோம் என்று தேவனுக்கு நாம் அறிவிப்பதாக ஏசாயா நமக்குக் கூறுகிறார். (ஏசாயா 58:2)

ஊ. 1. தானியேல் உபவாசிக்கும் போது (மற்றும் கொடுக்கும்போது) தெய்வீக ஞானத்தை அவனுக்குக் கொடுக்கும்படியாக ஒரு தூதனையும், வான மண்டலங்களில் நடந்த ஆவிக்குரிய யுத்தத்தை நடத்த பிரதான அதிபதியாகிய மிகாவேல் தூதனைக் கர்த்தர் அனுப்பினார். (தானியேல் 10:2-3, 12-13, 20-21)

உபவாசம்

மத்தேயு 6:16-18

2. சவுல் மூன்று நாட்கள் உபவாசித்த (மற்றும் ஜெபித்த) பின்பு, அவன் குணமடையும்படியாகவும், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறும்படியாகவும், கர்த்தர் அனனியாவை அவனிடத்திற்கு அனுப்பினார்.

3. அவர்கள் உபவாசித்து (மற்றும் ஜெபித்து) பின்பு பரிசுத்த ஆவியானவர், ஞான வசனத்தின் மூலம் அல்லது தீர்க்கதரிசனமாக அந்தியோகியாவிலுள்ள சபையை நோக்கி இவ்வாறு கூறினார்: "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக (சுவிசேஷகர்களாக) அவர்களைப் பிரித்துவிடுங்கள்". (அப்போஸ்தலர் 13:2)

4. பவுலும் பர்னபாவும் உபவாசித்த (மற்றும் ஜெபம் செய்த) பின்பு ஊழியத்தினால் உண்டாக்கப்பட்ட சபைகளில் போதகர்களாக நியமிக்கப்பட வேண்டியவர்களை உறுதிப்படுத்தினார். (அப்போஸ்தலர் 14:23)

எ. அநேக விசுவாசிகள் தங்களுக்காகவும், தங்களுடைய குடும்பங்களுக்காகவும், தேவன் அற்புதமாக கிரியை செய்யவேண்டிய அவசியம் இருந்தபோதிலும், அவர்கள் ஜெபிக்கும் போது, இன்னும் அதிகமாக உபவாசிக்காமல் இருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. இன்னும் அநேக மக்களுக்கு, அவர்களுடைய, சரீர, மன ஆரோக்கியம், அவர்கள் வேலை மற்றும் நிதிநிலை, வீடு, கார் (CAR) இழந்து போனவர்களுக்காக புதிய தரிசனம், அவர்கள் சொந்த ஊழியங்கள், சபை ஊழியம் ஆகிய இத்தேவைகளுக்காக (தேவனிடம்) உதவி கேட்க வேண்டும். அவருடைய சீடர்களுக்குக் கிறிஸ்துவுடைய வார்த்தைகளின் உண்மையைப் பார்க்க தேவன் நமக்கு உதவி செய்வார்!

ஏ. இயேசுவானவர் வானாந்தரத்தில் 40 நாட்கள் உபவாசித்தது போல் நாம் செய்ய வேண்டும் என்றும், உபவாசிக்கும் போது நீர் அருந்தாமல் இருக்கவேண்டும் என்றும் அவசியமில்லை. ஆதித் திருச்சபையில் உபவாசம் கீழ்க்கண்டவாறு நடைபெற்றது.

1. விசுவாசிகள் அடங்கிய கூட்டத்தில்

அ. குறிப்பிட்ட ஆராதனைகளுக்கு முன்னும், ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதும்.

ஆ. சில குறிப்பிட்ட உணவு அருந்தும் வேளைகளில் மட்டும்.

இ. ஒரு நாள் முழுவதும்.

2. தனி விசுவாசிகள் உபவாசம்:

அ. ஆராதனைக்கு முன் அல்லது ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது.

ஆ. சில குறிப்பிட்ட உணவு அருந்தும் வேளைகள் மட்டும்.

இ. இரண்டு அல்லது மூன்று நாட்கள்

ஈ. ஒவ்வொரு வாரத்திலும் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் (பரிசேயர் திங்கள் மற்றும் வியாழன், ஓர்நாள் முழுவதும் அல்லது குறிப்பிட்ட உணவு வேளை மட்டும்)

உ. தானியேலைப் போல், அவர்கள் அப்பம் மட்டும் உண்டு, தண்ணீர் மட்டும் குடித்து, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உபவாசம் செய்திருக்கக் கூடும். (தானியேல் மூன்று வாரங்கள் உபவாசம் செய்தான்)

உபவாசம்

மத்தேயு 6:16-18

ஊ. இதில் முக்கியமான காரியம், என்னவென்றால், நீ ஒரு மிக அபாயகரமான அல்லது குறிப்பிட்ட காரணத்திற்காக, இரகசியமாக உன்னையே வெறுக்கிறாய். உனக்கு அல்லது மற்றொரு விசுவாசிக்கு அல்லது நீ மிகவும் நேசிக்கும் ஒருவருக்கு, தேவன் ஏதாவது ஒரு அற்புதம் செய்யவேண்டும் என்று நீ விரும்புகிறாா். ஆனால் அது திட்டமாக தேவனுடைய சித்தத்திற்குள்ளும், கிறிஸ்துவின் போதனைகளுக்குட்பட்டதாயும் மற்றும் வேதவாக்கியங்களுக்கு ஒத்ததாகவும் இருக்கவேண்டும்.

முடிவுரை

அ. ஆகவே நாம் உபவாசிக்கும்போது முகவாடலாக மாயக்காரரைப் போல் இருக்கக்கூடாது. ஆனால் தேவனுக்கு முன்பாக சுத்தமான நோக்கங்களோடு தனிமையில் இரகசியமாய் இதைச் செய்யவேண்டும்.

ஆ. உன்னுடைய வாழ்க்கையில் அல்லது சரீரத்தில் மற்றொரு விசுவாசியின் வாழ்க்கையில் அல்லது சரீரத்தில், உன் குடும்பத்தில் ஒருவர், ஒரு சிநேகிதர், உறவினர் அல்லது அயல்வீட்டுக்காரர் ஆகிய இவர்கள், தேவனின் உடனடியான கவனத்திற்கும், அற்புத கிரியை நடப்பிக்கிறதற்கும் அவசியமான தேவைகளோடு இருக்கிறார்களா?

இ. நீ கிறிஸ்து, நமக்குக் கூறியவற்றை செய்வாயானால், இந்த சரீரமாகிய சபை மற்றும் நீ ஓர் தனி நபராக இன்று அற்புதங்கள் நடைபெறுவதைக் காணலாம்.

அவர் தனிமையில் மலைப் பிரதேசங்களுக்குச் சென்று, அவருடைய முதல் சீடர்களுக்குப் போதிக்கும்போது உபவாசத்தைக் குறித்துக் கருத்துள்ளவராயிருந்தார். இது நமக்கும் அவ்வாறே இருக்கவேண்டும்!.

பொக்கிஷங்களைச் சேமித்து வைத்தல்
மத்தேயு 6:19-24

முன்னுரை

அ. இந்த அதிகாரத்தின் 6-8,11 வசனங்களில், நமக்குத் தேவையான காரியங்களை, நாம் ஜெபத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்று உபதேசம் செய்தார். ஆகவே, நமது உரையாடல், அடிப்படையான மனிதர்களுக்கு அவசியமானவைகளைப் பற்றி அல்ல. இது நாம் உயிரோடு ஜீவிப்பதற்கு அவசியமல்லாத பணம் மற்றும் உலகப் பொருட்களை ஏராளமாகக் குவித்து, சேமித்து வைப்பது தொடர்பானது.

ஆ. இன்றைய வேதபாகத்தில், கிறிஸ்து கீழ்க்கண்டவற்றை அழுத்தமாகக் கூறுகிறார்.

1. உங்களுக்காக, பொக்கிஷங்களை உலகத்தில் சேமித்து வைக்க வேண்டாம்.

2. பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்.

3. உங்கள் கண்களின் நோக்கு, உங்கள் பொக்கிஷம் இருக்கும் இடத்தைத் தீர்மானிக்கிறது.

1. பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம் (6:19)

அ. "வேண்டாம்". இயேசுவானவர் "வேண்டாம்" என்று கூறும்போது, அவர் அதில் கண்டிப்பாயிருக்கிறார். இது ஆலோசனையைவிட மேலாக ஒரு கட்டளையாக இருக்கிறது. "பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதை நிறுத்துங்கள்" என்று ஒரு சமயம் பொருள்படலாம்.

ஆ. "பூமியில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்". பூமியில் உங்களுக்குப் பொக்கிஷங்களை "சேர்த்து வையுங்கள்" என்றால் என்ன பொருள்தரும்? இது உலகப் பொருட்களை பத்திரமாக சேமித்து வைப்பது, பாதுகாப்பு பெட்டகங்களில் சேர்த்து வைப்பது, அவற்றை பெரிய சரக்குகள் சேமிக்கும் அறைகளில் அடைத்து பாதுகாப்பாக வைத்தல் என்று பொருள்படும். நாம் இவற்றை நமக்காகவே செய்கிறோம். இதில் தன்னலமான நோக்கங்கள் அடங்கியுள்ளது.

இ. கிறிஸ்து "பொக்கிஷங்கள்" என்றால் என்ன கருதுகிறார்? தங்கம், வெள்ளி மற்றும் விலையேறப்பட்ட ஆடைகள் ஆகியவைகள் ஆதிகாலத்தில் பொக்கிஷங்களாகக் கருதப்பட்டது. (2 இராஜாக்கள் 15:23). இன்று நாம், பாதுகாப்பான வங்கிகளில் சேர்த்து வைப்பது பற்றியும், ஏராளமான பொருட்களைச் சேர்த்து வைப்பதைப் பற்றியும், ஒப்பந்த பத்திரங்கள் பற்றியும் மற்றும் சொத்து, ரொக்கப்பணம், உலக ஆஸ்திகளாகிய வீடு, சிறிய நான்கு சக்கர மோட்டார் வண்டிகள் (CARS), வீட்டு மரச்சாமான்கள், ஆடைகள், நகைகள், நல்ல உணவு நீண்ட பயணங்கள், உல்லாச பொழுது போக்கு ஆகிய இவைகளைப் பற்றிப் பேசுவோம்.

ஈ. "இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்... திருடர் கன்னமிட்டுத் திருடுவார்கள்". பூமியில் நாம் சேர்த்து வைக்கும் பொக்கிஷங்களைக் குறித்து, இயேசு என்ன கூறுகிறார்? அவை எப்போதும் அபாயத்திலிருக்கின்றன. முதலாவது, அவைகள் பொருட்களாகயிருந்தால் உடைந்து போகும் அல்லது இயற்கையிலுள்ள மூலப்பொருட்களால் பாதிக்கப்பட்டு சிதையுண்டு போகும்".

பொக்கிஷங்களைச் சேமித்து வைத்தல்
மத்தேயு 6:19-24

இரண்டாவதாக, அவை திருடப்பட்டுவிடும் என்பது இன்று சாதாரணமாக நடக்கக்கூடியது. இது விலைபேறப்பட்ட பத்திரங்கள், பாதுகாப்பில் வைக்கப்பட்டவைகள் மற்றும் பலவிதமான பொருட்கள் ஆகியவற்றிற்கும் நடக்கக்கூடும்.

உ. கவனமாகக் கண்காணிக்கும் படம் எடுக்கும் கருவிகள் **(CAMARAS),** அபாய அறிவிப்புக் கருவிகள், போர் தளவாடங்கள் அணிந்த காவலர்கள், நில அறைகள், சுவரில் பதித்த பாதுகாப்புப் பெட்டகம், பொருட்களையும் மற்றும் விலைபேற்றப்பட்டவைகளையும் நீண்டகால பாதுகாப்பு சங்கத்தில் வைத்தல், அதிகப்படியான ஒளிவிளக்குகள், பணத்தையும், விலையேற்றப்பட்டவைகளையும் கையாளுவதில் விரிவான முறைகள், முதலிய விரிவான பாதுகாப்பு முறைகளை, நம்முடைய வீடுகள், வங்கிகள், மற்றும் சேர்த்துவைக்கும் பாதுகாப்பு இடங்களில் காணப்படுவதற்கு இதுவே காரணம்.

ஊ. ஆகவே, ஏராளமான உலக பொக்கிஷங்களைச் சேமித்து வைத்திருப்பவர்கள், அவற்றை இழந்து விடுவோமோ என்ற பயத்தில் எப்போதும் இருக்கிறார்கள் அல்லது ஏதாவது ஒரு வழியில் அவைகள் மதிப்பு குறைந்து போவதையும் காண்கிறார்கள். பயம், அதனுடைய பொறியில் அவர்களைப் பிடித்துக் கொண்டது. அது அவர்களை போகவிடாது. இரவும் பகலும் அது அவர்கள் சிந்தனையை முழுவதும் ஆட்கொண்டு விடுகிறது. ஆகவே, அவர்கள் பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைப்பது குறித்து சிந்திக்கமுடியாது.

2. பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். (6:20-21)

அ. வசனம் 20. "பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள். "பரலோகம்" என்பது தேவனுடைய வீட்டைக் குறிக்கும். அது, மகிழ்ச்சி, வல்லமை மற்றும் நித்திய முழுவதும் நிலைத்திருக்கும் பொருட்களையுடைய இடம் என்று பொருள்படும்.

ஆ. பரலோகத்தில் நாம் எவ்வாறு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கமுடியும். நாம் கீழ்க்கண்டவாறு பரலோகத்தில் சேமித்து வைக்கலாம்:

1. நமது நண்பர்கள், மற்றும் விரோதிகளுக்கு நீதியுள்ள கிரியைகள் நடப்பிக்க வேண்டும்.

2. கிறிஸ்துவுக்காக உபத்திரவம் அனுபவிக்க வேண்டும்.

3. ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டும்.

4. எளியவர்களோடு நன்மையானவைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

5. தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு நம்மிடம் உள்ள பொருட்களை செலவழிப்பதின் மூலம் பரலோகத்தில் சேர்த்து வைக்க வேண்டும்.

இ. வசனம் 20. "அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுவதும் இல்லை". பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதுபோல் அல்லாமல், நம்முடைய பரலோகப் பொக்கிஷங்கள் திருடப்பட்டுப்போவதும் இல்லை. உலகத்தின் மூலப் பொருட்களால் சிதைவுண்டு அல்லது அதன் விலைமதிப்புக் குறைந்து போவதும் இல்லை. நாம் அதிகமாக விலைபேறப்பட்டதாக மதிக்கும் பொருட்களைப் பாதுகாப்பாக வைக்க அங்கே ஒரு இடத்தைக் கொடுத்ததற்காக தேவனுக்குத் தோத்திரம்!

பொக்கிஷங்களைச் சேமித்து வைத்தல்
மத்தேயு 6:19-24

ஈ. இந்தக் காரியத்தில், எப்படியோ நாம் தேர்ந்தெடுப்பதற்கு உரிமையுண்டு. இவ்விரண்டில் ஒன்றை நாம் செய்யவேண்டும்.

1. பூமியில் நமக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டும்.

2. பரலோகத்தில் நமக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டும்.

உ. வசனம் 21. அது நம்முடைய தீர்மானம். ஆனால் நாம் இதை நினைவில் வைத்துக் கொள்வது நல்லது: "உங்களுடைய பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ, அங்கே உங்களுடைய இருதயமும் இருக்கும்". நம்முடைய பொக்கிஷங்கள் எவை என்பது நமக்குத் தெரியும். ஆனால், இயேசு "இருதயம்" என்றால் என்ன பொருள்படக் கூறுகிறார்? நம்முடைய, மனதளவான மற்றும் உணர்ச்சி சம்பந்தமானவைகளின் மொத்தக் கூட்டுத் தொகையுடன், நம்முடைய சரீரப்பிரகாரமான வாழ்க்கையையும் சேர்த்துப்பொருள்படக் கூறுகிறார். அவர் நம்முடைய இருதயத்தின் விருப்பங்கள், நோக்கங்கள் மற்றும் உள்கருத்துக்களையும் குறித்துக் கூறுகிறார்.

ஊ. ஆகவே பொக்கிஷங்களின் இடம், இருதயம் இருக்கும் இடத்தைத் தீர்மானிக்கிறது. நம்முடைய பொக்கிஷங்கள் பூமியில் சேர்த்து வைக்கப்பட்டு இருக்குமானால், நம்முடைய இருதயங்களும் அங்கேதான் இருக்கும். கிறிஸ்து, நம்முடைய இருதயங்கள் பரலோகப் பொருட்கள் மீது இது இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்; பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேமிக்கவேண்டும்'

3. உங்கள் கண்களின் தன்மை உங்கள் பொக்கிஷங்களின் இடத்தைத் தீர்மானிக்கிறது. (6:22-24)

அ. வசனம் 22. "கண்ணானது சரீரத்தின் விளக்காய் (ஒளி) இருக்கிறது". ஆதி மானிடர்கள், கண்களை, சரீரத்திற்குள் ஒளி செல்லும் சன்னல்களாகக் கண்டார்கள்.

ஆ. வசனம் 22. "உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும்". ஆகவே, "தெளிவான கண்கள்", "சரீரம்", "ஒளி" ஆகியவைகளை இயேசுவானவர் என்ன பொருள்பட கூறுகிறார் என்பதை விளக்கமாகப் பார்க்கலாம்.

1. நல்ல கண்கள், சரீரத்திற்குள் ஒளியை தங்களுக்கு ஊடாக செல்ல விடும் அளவிற்குத் தெளிவாக இருக்கும்.

2. சரீரம் என்பது முழு மனிதன், ஒருவனின் முழு ஆளுமை, ஒருவனின் முழு வாழ்க்கை.

3. ஒளி என்பது ஆதிகால மனிதர்களால் எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்படும் விளக்கு. அது ஒருவனின் கண்களின் வழியாகச் சென்று அவன் வாழ்க்கை முழுவதையும் பிரகாசிக்கும்படி செய்கிறது. இயேசு கூறிய ஆவிக்குரிய சத்தியம் இவ்வாறு இருக்கிறது: "நம்முடைய ஆவிக்குரிய கண்கள் தெளிவாகவும், நல்ல நிலையிலும் இருந்தால், நாம் ஆவிக்குரிய சத்தியங்களைப் பெற்று, அதன்படி நம்முடைய வாழ்க்கையை நடத்துவோம்."

இ. வசனம் 23. "உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்" நம்முடைய ஆவிக்குரிய கண்கள் பங்கலாக கெட்டு இருக்குமானால், அப்பொழுது நாம் வெளிச்சமின்றி, ஆவிக்குரிய இருளில் வாழுவோம். ஆவிக்குரிய இருளின் தன்மை எவ்வளவுக்கு அதிக அழிக்கும் தன்மையை கிறிஸ்து அழுத்தமாகக் கூற இவ்வாறு சொல்கிறார்,

பொக்கிஷங்களைச் சேமித்து வைத்தல்
மத்தேயு 6:19-24

"அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!"

ஈ. ஆகவே நாம் ஒன்று ஒளியில் அல்லது இருளில் வாழுவோம். ஆவிக்குரிய சத்தியத்தினால் அல்லது ஆவிக்குரிய இருளினால், மற்றும் பரிசுத்த ஆவியினால் அல்லது பிசாசுகளினால், நாம் வாழும் வாழ்க்கை வழிநடத்தப்படும்.

உ. வசனம் 24. "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது". "ஊழியஞ்செய்வது", என்றால் அடிமையாக இருப்பது, மற்றொரு மனிதனுக்குக் கட்டுப்பட்டு, அவனுக்கு உழைப்பது கிறிஸ்து நாதரின் காலத்தில் ஒரு சமயம் ஒரு அடிமை இரண்டு எஜமான்களால் பகிர்ந்து வேலை வாங்கப்பட்டான்.

ஊ. இந்த எடுத்துக்காட்டைப் பயன்படுத்தி, இயேசு தம்முடைய கருத்தை விளக்குகிறார். ஒரு அடிமை இரண்டு எஜமான்களுக்கு வேலை செய்யக் கூடாதது போல, நாமும் ஆவிக்குரிய வெளிச்சத்திற்கும், ஆவிக்குரிய இருளுக்கும் ஊழியஞ்செய்யமுடியாது. நாம் ஏதாவது ஒன்றை சேவிப்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் இரண்டிற்கும் ஒரே சமயம் அடிமையாயிருப்பது கூடாத காரியம்.

1. நீ ஒருவரை நேசித்தால் அடுத்தவரைப் பகைப்பாய்.

2. நீ ஒருவரைப் பற்றிக் கொண்டால் மற்றொருவரை விட்டுவிடுவாய்.

எ. வசனம் 24. ஒரு அடிமையும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய முடியாதது போல், "நாம் தேவனுக்கும், உலகத்திற்கும் சேவை செய்ய முடியாது" என்று மறுபடியும் பார்க்கிறோம். கிறிஸ்து இந்தக் குறிப்பையும் மற்ற சத்தியங்களையும் வெகு தெளிவாக எடுத்துக் காட்டுகிறார்:

1. நீ உனக்காகப் பொக்கிஷங்களை ஒன்று பூமியில் அல்லது பரலோகத்தில் சேர்த்து வைப்பாய்.

2. உன்னுடைய மனதையும், இருதயத்தையும் பூமியிலுள்ள பொருட்களின் மீதோ அன்றி பரலோகப் பொக்கிஷங்களின் மீதோ வைத்திருப்பாய்.

3. நீ பூமியில் பொக்கிஷங்களைச் சேமித்து வைக்க ஆசைப்படுவாயானால், பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதைக் குறித்து சிந்திப்பதை வெறுப்பாய்.

4. நீ பூலோகப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதை விடாமல் பற்றிக் கொண்டால், பரலோகத்தில் சேர்த்து வைப்பதை அசட்டை செய்வாய்.

5. நீ ஆவிக்குரிய இருளுக்கு அடிமையாகக் கட்டப்பட்டிருப்பதைத் தெரிந்து கொள்வாயானால், ஆவிக்குரிய ஒளிக்கு பிணைப்பு அடிமையாக இருக்கமுடியாது.

முடிவுரை

அ. 1. உங்களுக்காக பூலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்.

2. அதற்குப் பதிலாக பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்.

3. உன்னுடைய கண்களின் நிலை, உன்னுடைய பொக்கிஷங்கள் இருக்கும் இடத்தைத் தீர்மானிக்கிறது.

பொக்கிஷங்களைச் சேமித்து வைத்தல்

மத்தேயு 6:19-24

ஆ. எடுத்துச் செல்லக்கூடிய விளக்கின் ஒளி, அவருடைய மக்களின் சரீரங்களுக்கு வெளிச்சம் தரத்தக்கதாக, அவர்களுடைய கண்கள் ஒளியை ஊடுருவிச் செல்ல அனுமதிக்கும் அளவிற்குத் தெளிவாக இருக்கும் என்று கிறிஸ்து நம்பினார். அவர்கள், தங்களுடைய கண்களை மூடிக் கொள்ளும்படியாகச் சோதிக்கப்படுவார்கள் அல்லது, இந்த உலகத்தின் அசுத்தத்தால் கண்கள் மங்கலாகிவிட விட்டுவிடுவார்கள் என்றும் அவருக்குத் தெரியும். ஆனால் இவ்வாறு இருக்கவேண்டிய அவசியமில்லை.

இ. விளக்கின் ஒளி, நம்முடைய சரீரத்திற்குள் செல்ல நாம் அனுமதிக்கவில்லை என்று அவருடைய வார்த்தைகள் நமக்கு உணர்த்தியிருக்குமானால், நாம் மனம் வருந்தி, முற்றிலும் மாற அவர் ஆசீர்வதிக்கிறார். நம் பிணைப்பு அடிமைகளாக மறுபடியும் மாற, நம்முடைய வாழ்க்கைக்குள் ஆவிக்குரிய சத்தியங்கள் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓட, நம்முடைய கண்கள் தெளிவாகயிருக்க அவர் விரும்புகிறார்.

1. அவர் விரும்புவது போல் வாழ்ந்து, அவர் விருப்பப்படி எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டும்.

2. நமக்குண்டான யாவற்றையும், பூலோகத்தில் அல்ல, பரலோகத்தில் பாதுகாப்பாகச் சேர்த்து வைக்க வேண்டும்.

நாம் எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுத்துவோம் என்று நம்முடைய சரீரங்களுக்காகக் கவலைப்பட்டுக் கலங்குவது

மத்தேயு 6:25-34

முன்னுரை

அ. இந்த உலகத்தில் செல்வந்தர்களாக இல்லாத விசுவாசிகள், தங்களுடைய அன்றாடத் தேவைகளுக்காகக் கவலைப்பட்டு கலங்குகிறார்கள். இக்காரணத்தினால், இயேசு தம்முடைய சீடர்களுக்கு இவ்வாறு கூறுகிறார்: "என்னத்தை உண்போம்; என்னத்தைக் குடிப்போம்; என்னத்தை உடுப்போம்; என்று உங்கள் சரீரத்துக்காக.... கவலைப்படாதிருங்கள்", அத்துடன் நாம் ஏன் அவ்வாறுயிருக்கவேண்டும் என்றும் கூறுகிறார்!

ஆ. முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுவதினால், வாழ்க்கையில் முதலாவது வைக்கவேண்டியவைகளின் ஒழுங்குபடி வரிசைப்படுத்துவோமானால், இந்த எல்லா தேவைகளும் நமக்குக் கிடைக்கும்படியாக, பரமபிதா பார்த்துக்கொள்வார்.

இ.நம்முடைய சரீரங்களை நமக்குக் கொடுத்து, நமக்குள் ஜீவசுவாசத்தை ஊதிய அதே தேவன், நமக்கு உணவும் உடையும் கொடுப்பார்!

1. எதை உண்போம், எதைக் குடிப்போம் என்று கவலைப்படாதிருங்கள் (6:26-27)

அ. வசனம் 26 "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை". கிறிஸ்துவின் முதல் உதாரணம், ஆகாயத்துப் பறவைகள். அவைகள், வருங்காலத் தேவைகளுக்காக, விதைப்பு, அறுப்பு, மற்றும் சேமித்து வைத்தல் ஆகிய இவைகளைக் குறித்துஅவைகள் கவலைப்படுவது இல்லை. அவைகள் தங்களுடைய தேவைகளுக்கு முழுவதும் தேவனைச் சார்ந்திருக்கின்றன.

ஆ. வசனம் 26 "அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்" பறவைகளைக் குறித்துத் தேவன் அலட்சியமாக இல்லை. அவர் இடைவிடாமல் அவைகளுக்கு உணவு தருகிறார்.

இ. வசனம் 26 "அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? நிச்சயமாக அவ்வாறு நாம் இருக்கிறோம். ஆகவே அவர் பறவைகளுக்குக் கொடுக்கும்போது, நிச்சயமாகவே, நமக்கு அவ்வாறே கொடுப்பார்!

ஈ. வசனம் 27 "கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?" "கவலை" என்றால் நம்பிக்கையற்று துக்கமாயிருப்பது, அளவுக்கு அதிகமாக ஏதேனும் ஒன்றைக்குறித்து சிந்தித்து வருந்துவது என்று பொருள்படும். இந்த உலககாரியங்களைக் குறித்து தேவைக்கு அதிகமாக சிந்தித்துக் கவலைப்படுவது பயனற்றது. ஒருவன் இதிலிருந்து எந்த நன்மையையும் பெற்றுக்கொள்ள முடியாது. உண்மையில், இது நம்முடைய வாழ்நாட்களைக் குறைக்குமே தவிர கூட்டிக்கொடுக்காது என்று நாம் கற்று அறிந்திருக்கிறோம்!

உ. ஆகவே எதை உண்போம், அல்லது எதைக்குடிப்போம் என்று கவலைப்படவேண்டாம். ஆகாயத்துப் பறவைகளைப்போல், தேவன் உனக்கும் இடைவிடாமல் (உன் தேவைகளைக்) கொடுப்பார்.

நாம் எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுத்துவோம் என்று நம்முடைய சரீரங்களுக்காகக் கவலைப்பட்டுக் கலங்குவது

மத்தேயு 6:25-34

2. எதை உடுத்துவோம் என்று கவலைப்படாதிருங்கள். (6:28-30)

அ. வசனம் 28 "காட்டுபுஷ்பங்கள்" ஆகாயத்துப்பறவைகளுக்கு உணவு கொடுப்பதை எடுத்துக்காட்டாகக் கூறி, அவருடைய பிள்ளைகளுக்கு உணவு கொடுத்து போஷிப்பதை, இயேசு விளக்கினார். இப்பொழுது, காட்டுப்பூக்களுக்குக் கொடுப்பதை எடுத்துக்காட்டாகக் கூறி அவருடைய பிள்ளைகளுக்கு உடை கொடுப்பதாகக் கூறுகிறார்.

ஆ. "பூக்கள்" என்று பொதுவாகக் கூறுகிறார். ஹாலண்ட் (HOLLAND) நாட்டில் ஏராளமான பூக்களுடன் கூடிய பிரதேசங்களை நான் பார்த்திருக்கிறேன். டியூலிப் (TULIP) மற்றும் பிக்கோனியா (BEGONIA) போன்ற பூக்கள் எவ்வளவு பெரிதாகவும், அழகாகவும் இருக்கின்றன!

இ. வசனம் 28 "அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை" எந்த விதமான சுயமுயற்சியுமின்றி பூக்கள் மிக அழகாக வளர்கின்றன. தேவன் அவைகள் வளர்வதற்குத் தேவையான சூரியனையும் (வெப்பம், ஒளி) மழையையும் தருகிறார்.

ஈ. வசனம் 29 "என்றாலும் சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை". மிக நேர்த்தியான பொருட்களைக் கொண்டு, அவனுடைய நாட்களிலிருந்த மிகச்சிறந்த தையல்காரர்களை பயன்படுத்தியும், சாலொமோன் காட்டுப்பூக்களுக்கு ஒத்ததாக உடுத்தியிருந்ததில்லை.

உ. வசனம் 30 "அற்பவிசுவாசிகளே.... உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?" காட்டுப்பூக்கள் அழகாக வளர்வதற்கு, தேவன் கொடுப்பதுபோலவே, அவருடைய பிள்ளைகளுக்கு இப்பொழுது, வரப்போகும் நாட்களுக்கும் அவசியமானவைகளைத் தந்து போஷிப்பார். அவருடைய பிள்ளைகளுடைய தேவைகள் சந்திக்கப்படுவதைப் பார்ப்பதற்கு முழு பொறுப்பையும் தேவன் எடுத்துக் கொள்ளுகிறார்.

ஊ. கிறிஸ்துவின் சீடர்கள் எதைக் குறித்தும் கவலைப்பட்டுக் கலங்க அவசியமில்லை. அதற்குப் பதிலாக ஜெபத்திலும் வேண்டுதல்களிலும் அவர்களுடைய தேவைகளை பரமபிதாவிற்குத் தெரியப்படுத்தவேண்டும் பிலிப்பியர் 4:6 அவர், அவர்களுக்குப் பதிலளிப்பார். பேதுரு நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியினால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்" (1பேதுரு 5:7) எசேக்கியேல் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "ஒரு மேய்ப்பன் சிதறுண்ட..... தன் மந்தையைத் தேடிக்கொண்டிருக்கிறதுபோல நான் என் ஆடுகளைத் தேடுகிறேன்" (எசேக்கியேல் 34:12).

எ. இந்த வசனத்தில் "அற்பவிசுவாசம்" என்றால் உங்களுடைய அடிப்படை வாழ்க்கைத்தேவைகளைத் தேவன் கொடுப்பார் என்ற மிகச் சிறிதளவு விசுவாசம் அவர் மீது வைப்பது, என்று பொருள்படும். கவலைப்பட்டுக் கலங்குவது, "அற்பவிசுவாசத்திற்கு" அடையாளம். இது கீழ்க்கண்ட காரணங்களினிமித்தம் ஏற்படும்.

நாம் எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுத்துவோம் என்று நம்முடைய சரீரங்களுக்காகக் கவலைப்பட்டுக் கலங்குவது

மத்தேயு 6:25-34

1. பரமபிதாவின் மீது நம்பிக்கையின்மை.

2. நாம் சிறிது முன்னால் பார்த்ததுபோல் வாழ்க்கையில் மிக முக்கியமான காரியங்களை முதலாவது வைக்காமல் இருப்பது.

3. தேவனுடைய இராஜ்ஜியத்தை, நீ முதல்லாவது தேடினால், நீ இவைகள் யாவற்றையும் பெற்றுக்கொள்ளுவாய் (6:31-34).

அ. வசனம் 31 "என்னத்தை உண்போம், குடிப்போம் உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்" இதில் நிச்சயமாக வசிக்கும் ஓர் இடமும் சேர்த்துக் கொள்ளப்படும். மற்றொரு சந்தர்ப்பத்தில் இயேசுவானவர், இவ்வாறு கூறுகிறார்: "நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப்பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" (மத்தேயு 8:20) ஆகவே, நாம் வசிக்க ஓர் இடம் அவசியம் என்பதை அவர் அறிந்திருந்தார் என்பதை நாம் நிச்சயமாகக் கூறலாம்!

ஆ. வசனம் 32 "இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்" "அஞ்ஞானிகள்" என்றால், கிறிஸ்துவுக்குப் புறம்பாக இருக்கும் அவிசுவாசிகள் உண்ணவும், குடிக்கவும், உடுத்தவும் இவர்கள், தேடி அலைந்து, உரிமையோடும் அதிகாரத்துடனும் கேட்டு, ஆசையோடு பற்றிக்கொள்கின்றனர். தொலைக்காட்சி பெட்டியில் வெளியிடப்படும் காட்சிகள், விளம்பரங்கள், நவீன உடைகள், அரங்கங்களிலிருந்து விளையாட்டு முதலியனவற்றை கண்டு களித்தல், பூங்காக்களில் நேரங்களைச் செலவிடுதல் ஆகிய இவைகளை விட்டுவிடுவது அல்லது நிறுத்திவிடுவது என்பது இவர்களால் கூடாத காரியம்! ஆனால் நாம் அவர்களைப்போலிருக்க வேண்டியதில்லை!!

இ. வசனம் 32 "இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்". உங்கள் தலையிலுள்ள மயிர்களின் எண்ணிக்கையை அறிந்தவரும், கீழே வாழும் ஒவ்வொரு குருவியைப்பற்றி கவலைப்படுகிறவருமாகியவர், திட்டமாக அவருடைய பிள்ளைகளின் தேவைகளை அறிவார்! (லூக்கா 12:6-7).

ஈ. வசனம் 33 "முதலாவது அவருடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்" நம்முடைய வாழ்க்கையின் முக்கியமானவைகளை, அவற்றின் ஒழுங்குவரிசைப்படி வைக்கவேண்டும் என்று கூறப்பட்டோம். "தேவனுடைய இராஜ்ஜியம்" என்றால் தேவனுடைய ஆளுகை. "அவருடைய நீதி" என்பது, மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்து எடுத்துக் கூறிய ஒழுங்கின்படி வாழ்வது. இந்தக் காரியங்களையே விசுவாசிகள், இடைவிடாமல் தங்களுக்காகத் தேடி, உரிமையோடு கேட்டு பெற்றுக்கொண்டு, விடாமல் வாஞ்சையுடன் பற்றிக்கொள்ளவேண்டும். இவைகள் இல்லாமல், இந்த அல்லது அடுத்த வாழ்க்கையில் மேன்மையான காரியம் ஒன்றுமில்லை.

நாம் எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுத்துவோம் என்று நம்முடைய சரீரங்களுக்காகக் கவலைப்பட்டுக் கலங்குவது

மத்தேயு 6:25-34

உ. வசனம் 33 "அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" உணவு, உடை, உறைவிடம் ஆகிய இந்த எல்லா உன்னுடைய தேவைகளும் உனக்குக் கொடுக்கப்படும். ஆனால் நீ உன் வாழ்க்கையின் முக்கியமானவைகளை, முதன்மையானவைகளை ஒழுங்கு வரிசைப்படி முதலாவது வைத்து அதன்படி வாழ்க்கை நடத்தவேண்டும்நாம், இடைவிடாமல் தேவனுடைய இராஜ்ஜியத்தையும், நீதியுள்ள வாழ்க்கையையும், மற்றெல்லாவற்றிற்கும் முதலாவதாக வைத்து வாழ்க்கை நடத்தவேண்டும்.

ஊ. சாத்தானுக்கும் இது தெரியும். அப்பத்திற்கு அளவுக்கு அதிகமாக கரிசனை கொள்ளவும், தேவனுடைய வார்த்தைக்கு இரண்டாவது இடத்தைக்கொடுக்கும்படியாக இயேசுவானவரை சோதிக்க இதுவே காரணம். (மத்தேயு 4:2-4). உலக வாழ்க்கையின் தேவைகளை, தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும், நீதியுள்ள வாழ்க்கைக்கும் முன்பாக வைக்கும்படி, நம்மையும் அவ்வாறே அவன் சோதிப்பான்!

எ. வசனம் 34 "ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்.... அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்". ஒரு நேரத்தில் ஓர்நாளுக்குரிய காரியங்களை மட்டும் நாம் பார்ப்போம். நாம் என்னத்தை உண்போம், உடுப்போம், எங்கு வாழுவோம் என்று நாளையதினத்தைக் குறித்து கவலைப்படுவோமானால், சமாதானத்தையும், மனநிறைவையும் இன்றையதினம், நாம் ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய வருங்காலத் தேவைகளை தேவன் கொடுப்பார் என்று, நம்முடைய விசுவாசத்தையும் நாம் ஒருபோதும் நிச்சயமாக பயிற்சி செய்து பார்க்கமுடியாது.

முடிவுரை

அ. ஒவ்வொரு நாளும் கீழ்ப்படிந்து, தேவன் பேரில் நம்பிக்கை வைக்க, இஸ்ரவேலர்களுக்குப் போதிப்பதற்காக, அந்தந்த நாளுக்குரிய மன்னா மட்டும் கொடுக்கப்பட்டது. (யாத்திராகமம் 16:4) நாற்பது ஆண்டுகள், தேவன் அவர்களுக்கு உணவு கொடுத்தார். அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை அடையும்வரை மன்னா நிறுத்தப்படவில்லை. (யோசுவா 5:12). கர்த்தருடைய நாள் வரும் வரை தேவன் நமக்காக கரிசனையுள்ளவராயிருக்கிறார் என்பதை, இந்த பழைய ஏற்பாட்டு சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக்கொண்டால் நன்மையாயிருக்கும்.

ஆ. நம் வாழ்க்கையில் முதன்மையானவைகளை, சரியான ஒழுங்கு வரிசையில் வைத்திருக்கிறோமா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவேண்டும்.

1. நம்முடைய வாழ்க்கையில் இடைவிடாமல் தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தேடவேண்டும்.

2. கிறிஸ்து விரும்பும் நீதியுள்ள வாழ்க்கையை நாம் வாழும்படியாக, பரிசுத்த ஆவியானவர் நம்மை மேலும் அதிகமாக மாற்ற அனுமதிக்கவேண்டும்.

ஆ. 3. உணவு, உடை மற்றும் நம் சரீரம் இளைப்பாற ஓர் இடம் ஆகியவைகளை தேவன் கொடுப்பார் என்று நம்பவேண்டும்.

மற்றவர்களை நியாயந்தீர்ப்பது
மத்தேயு 7:1-6

முன்னுரை

அ. "மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்". இது தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழுவதற்குரிய கிறிஸ்துவின் பன்னிரெண்டாவது உதாரணத்திற்கு முன்னுரையாக உள்ளது. மலைப்பிரசங்கத்திலுள்ள மற்ற உதாரணங்கள்:

1. உன் சகோதரனிடம் கோபம் கொள்ளாதே *(5:21-26)*.

2. மற்றொருவரை இச்சையுடன் பார்க்காதே *(5:27-30)*.

3. உன் கணவன்/மனைவியைத் தள்ளிவிடாதே *(5:31-32)*.

4. ஆணையிடாதே *(5:33-37)*.

5. பொல்லாத மனிதனுடன் எதிர்த்து நிற்காதே *(5:38-42)*.

6. உன் சத்துருக்களில் அன்புகூருவாயாக *(5:43-48)*.

7. எளியவர்களுக்கு தர்மம் செய்வாயாக *(6:1-4)*

8. ஜெபம் *(6:5-13)*.

9. உபவாசம் *(6:16-18)*

10. பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பாயாக *(6:19-24)*.

11. வாழ்க்கையின் தேவைகளைக் குறித்து கலக்கங் கொள்ளாதிருப்பாயாக *(6:25-34)*.

ஆ. தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழுவதற்குரிய இந்தக் கொள்கைகள், பரிசேயர் வேதபாரகர்களுடைய நீதியைக்காட்டிலும் மிக உன்னதமாக இருக்கிறது (மத்தேயு 5:20). கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் இவைகளைக் கைக்கொள்வது பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதை நிச்சயப்படுத்துகிறது.

1. நீ மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்ப்பாயானால் நீயும் குற்றவாளியாகத் தீர்க்கப்படுவாய் (7:1-2).

அ. வசனம் 1 "குற்றவாளியாகத் தீர்க்காதே" என்றால் நியாயந்தீர்க்கும் மனப்பான்மையோடு மற்றவர்களிடம் குற்றம் கண்டுபிடித்து, கடூரமாக குறைகூறிக்கொண்டிருப்பதையே வழக்கமாக செய்து கொண்டிருப்பது என்று பொருள்படும். கீழ்க்கண்ட காரணங்களுக்காக, இவ்வாறு மற்றவர்களை குற்றவாளிகளாகத் தீர்ப்பவர்களை கிறிஸ்துவானவர் கண்டிக்கிறார்.

1. இது யாருக்கு விரோதமாகப் பேசப்படுகிறதோ, அவர்கள் மனப்பாரப்பட்டு கவலையடைச் செய்கிறது மற்றும் தரக்குறைவாக எண்ணப்படுவார்கள்.

2. யார் இதைக் கூறுகிறார்களோ அவர்களுடைய சுயநீதி வெளிப்படுத்தப்படுகிறது (சுயத்தை மேன்மைப் படுத்துவது, புண்படுத்தப்படும்போது எதிர்த்து நிற்பது)

மற்றவர்களை நியாயந்தீர்ப்பது
மத்தேயு 7:1-6

3. இதேவிதமான குற்றம் கண்டுபிடிக்கும் பழக்கத்திற்கு மற்றவர்களையும் அழைப்பதில் மகிழ்ச்சியடைவது.

ஆ. வசனம் 1 நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படுவீர்கள். நியாயந்தீர்க்கும் மனப்பான்மையோடு மற்றவர்களில் கடூமாக குற்றம் கண்டுபிடித்துக் குறை கூறுவதை வழக்கமாகக் கொண்டிருப்பவர்கள், மற்ற மனிதர்களால் அல்ல தேவனால் நியாயந்தீர்க்கப்படுவார்கள். மற்றவர்களுக்குத் தன்னையே நியாயாதிபதியின் இடத்தை எடுத்துக்கொள்ளும் சீடர்கள் தேவனுடைய அதிகாரத்தையும், பதவியையும் கவிழ்த்துப்போடுகிறார்கள். (யாக்கோபு 4:11-12, ரோமர் 14:10-13). ஆதியிலிருந்து இதுவே சாத்தானுடைய விருப்பம். ஆகவே இத்தன்மையான மனப்பாங்கு சாத்தானால் உண்டானது! (ஏசாயா 14:12-14).

இ. வசனம் 2 "ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்" நியாயந்தீர்க்கும் பண்பையுடைய சீடன், அவனைக்குறித்து இயேசு விரும்புகிறபடி மன்னிக்கிறவனாகவும், அன்பு கூருகிறவனாகவும், இனி ஒருபோதும் இருக்கமுடியாது. அவன் மனமேட்டிமையும், சுயநீதியையுமுடையவனாக மாறி, கடினப்பட்ட, மனந்திரும்பமுடியாத இருதயமுடையவனாக வளர்ந்துவிட்டான். ஆனபடியினால், அவன் தேவனால் நியாயந்தீர்க்கப்படவேண்டிய நிலைமையில் மறுபடியுமாக தன்னைத் தானே வைத்துவிட்டான்.

ஈ. வசனம் 2 "நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்". இரக்கமின்றி நடவடிக்கையெடுத்து நியாயத்தீர்ப்பு செய்யும்படி வற்புறுத்துகிற ஒருவன் திட்டமாக இரக்கத்தை அவனும் பெற்றுக்கொள்ள முடியாது (யாக்கோபு 2:13).

உ. இரக்கமற்ற ஊழியக்காரனைப்பற்றிய உவமையில் கிறிஸ்து இந்த சத்தியத்தைப் பளிங்குபோல் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார் (மத்தேயு 18:23-35).

2. மற்றவர்களை நியாயந்தீர்க்க நினைப்பதற்கு முன் உன்னையே நியாயத்தில் நிறுத்து (7:3-5).

அ. வசனம் 3 "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை (மரத்தால் ஆன) உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" நியாயந்தீர்க்கும் தன்மையையுடைய ஒரு சுய நீதியுள்ள மனிதனுடைய மனப்பான்மை இதுதான். "துரும்பு" என்பது நடத்தையில் வெளிப்படையாகயில்லாத ஒரு தவறு. "உத்திரம்" (அல்லது பெரிய மரத்துண்டு) என்பது நடத்தையிலுள்ள வெளிப்படையாகத் தெரியக்கூடிய பெரிய குற்றம்.

ஆ. வசனம் 4 உன் கண்களில் எப்போதும் ஒரு உத்திரம் இருக்கும்போது, நீ உன் சகோதரனை நோக்கி, "உன்னுடைய கண்ணிலுள்ள துரும்பை நான் எடுத்துப்போடவிடு" என்று எப்படிக் கேட்க முடியும்? ஒருவனுடைய நடத்தையில் வெளிப்படையான குற்றம் இருக்கும்போது, நடத்தையில் வெளிப்படையாகத் தெரியாத தவறு இருக்கும் ஒருவனுக்கு எவ்வாறு உதவி செய்ய முடியும்? அவனால் கூடாது! அவன் மற்றவர்களுடைய தவறுகளைத்திருத்தி உதவிசெய்ய முயற்சி செய்வதற்கு முன்பாகத், தன்னுடைய பெரிய குற்றத்திற்கு ஏற்ற ஏதாவது ஒரு நடவடிக்கையை முதலாவது எடுக்கவேண்டும்.

மற்றவர்களை நியாயந்தீர்ப்பது
மத்தேயு 7:1-6

இ. வசனம் 5 "மாயக்காரனே". இங்கே "மாயக்காரன்" என்றால் நடிகனாக மாறும் ஒருவன், மற்றொருவருடைய நடத்தைப் பண்பைத் தான் எடுத்துக்கொண்டு மேடையில் நடிப்பவன், என்று பொருள்படும். தன்னிடத்தில் இல்லாத ஒன்றை தன்னில் இருப்பதுபோல் உயர்த்திக் காட்டும் ஒருவன். நாம் மிக அதிக மோசமான குற்றத்தை நம்மில்தானே சரிசெய்ய ஒரு முயற்சியும் எடுக்காமல் இருக்கும் நிலையில் பக்திவிணையத்தோடு மற்றொருவரிடம் காணப்படும் மிகச் சிறிய தவறை சரி செய்ய முயற்சிக்கும்போது, நாம் அவ்வாறு (மாயக்காரராக) இருப்பதாக இயேசு கூறுகிறார்.

ஈ. அடுத்தபக்கம் பார்ப்போமானால், ஒரு விசுவாசி, தாழ்மையும், தன்னையே நியாயந்தீர்க்கும் ஆவியுடன், தன் சொந்த கண்ணிலிருந்து உத்திரத்தை நீக்கிப்போடுவானாகில், அவன், அவனுடைய சகோதரனுக்கு உதவிசெய்ய முடியும். அவன், இதை நியாயந்தீர்க்கும் ஆவியுடனோ, அல்லது தான் ஓர் உயர்ந்தவன் என்ற மனப்பான்மையோடும் செய்யக்கூடாது. ஆனால் கிறிஸ்துவுக்குள் அவனுடைய சகோதரர்கள், சகோதரிகளுக்கு தான் பொறுப்புள்ளவனாயிருப்பதால் அதை உணர்ந்து செய்யவேண்டும். அத்துடன் அவன் நிலைத்திருப்பது தேவனுடைய கிருபையால் மட்டுமே என்பதையும் அறிந்திருக்கவேண்டும். (யாக்கோபு 5:16,19-20 கலாத்தியர் 16:1).

உ. இது எவ்வாறு கிரியை செய்கிறதென்பதற்கு தாவீது ஓர் நல்ல உதாரணம் (சங்கீதம் 51:1-13).

3. சுவிசேஷத்திற்கு விரோதமாக கடினப்பட்டவர்கள் என்று நீங்கள் நிதானித்து அறிந்தவர்களுக்குத் தொடர்ந்து சுவிசேஷம் கொடுக்கவேண்டாம்.

அ. "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்" "நாய்கள்", தெருக்களில் அலையும் நாய்கள். அவைகள் அடங்காதவைகள், நஞ்சுத்தன்மையுடைவைகள், மற்றும் அசுத்தமானவைகள். பரிசுத்தமானவைகளை, அவைகளுக்கு நாம் கொடுக்கக்கூடாது. "பரிசுத்தமான" ஒன்று, மிகவும் விலைபெறப்பட்டது, கர்த்தருக்கு என்று அர்ப்பணிக்கப்பட்டது.

ஆ. "உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்" இந்த மிருகம் கீழ்தரமானவைகளோடு வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தொடுவதும், உண்ணுவதும் அசுத்தமானது என்று யூதர்கள் நினைக்கின்றனர். இவைகளும், நாய்களைப்போலவே, அடக்கமுடியாதவைகளும், விஷமுள்ளவைகளும் மற்றும் மனிதர்களிடம் முரட்டுத்தனமாக நடந்துகொள்ளுபவை என்றும் கருதப்படுகிறது. "முத்துக்கள்" என்பது, முத்துச் சிப்பிகளிலிருந்து பிரித்தெடுக்கப்படுபவை. இவைகள் எக்காலத்திலும் மிக விலைபெறப்பட்டதாகக் கருதப்படுகின்றன.

இ. "போட்டால், தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்". இங்கு கிறிஸ்து பொதுவாக மக்களைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை நாம் பார்க்கிறோம். "நாய்கள்", மற்றும் "பன்றிகள்" என்று அவர் கூறுவது மக்களைக் குறிக்கும். "பரிசுத்தமானவை", மற்றும் "விலைபெறப்பட்டவை" என்பவைகள் இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் குறிக்கும்.

மற்றவர்களை நியாயந்தீர்ப்பது
மத்தேயு 7:1-6

ஈ. சுவிசேஷத்திற்கு எதிராகக் கடினப்பட்டவர்களுக்கும், அதை முழுவதும் புறக்கணிப்பவர்களுக்கும், சுவிசேஷம் அறிவிக்க முயற்சிப்பதைக் குறித்து இயேசுவின் சீடர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். நாம் தொடர்ந்து அவர்களுக்கு சுவிசேஷம் கொடுத்தால், அதைக் குறித்து அசுத்தமான, விரும்பத்தகாத காரியங்களை அவர்கள் சொல்லுவார்கள். நாம் வற்புறுத்திக் கூறுவோமானால், அடக்கப்படமுடியாத, அபாயகரமான மிருகத்தைப்போல நமக்கு எதிராகத் திரும்பி நம்மை அழிக்கத் தேடுவார்கள். "பரியாசக்காரனைக் கடிந்து கொள்ளாதே, அவன் உன்னைப் பகைப்பான்". நீதிமொழிகள் இவ்வாறுகூறுகிறது (நீதிமொழிகள் 9:8).

உ. பயிற்சி ஊழியர்களாக அனுப்பும்போது, கிறிஸ்து 12 சீடர்களையும் இவ்வாறு எச்சரித்தார். (மத்தேயு 10:11-15) யூதர்கள், "பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி தூஷித்தார்கள்", இதைக்கேட்டு, அவர்கள் விளக்கமாகக் குறிப்பிட்டுக் கொடுத்த பதிலிலிருந்து, பர்னபாவும் பவுலும், இந்தச் சத்தியத்தை விளங்கிக்கொண்டார்கள் என்பதை நாம் காணலாம். (அப்போஸ்தலர் 13:44-46, அப்போஸ்தலர் 18:5-6, தீத்து 3:10 பார்க்கவும்).

ஊ. நாம் சுவிசேஷத்தை அறிவிப்பவர்களாக இருக்கவேண்டும். ஆனால் எப்பொழுது சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும் என்பதை நன்றாக நிதானித்து பகுத்தறியவேண்டும்:

1. ஒவ்வொரு தருணம் கிடைக்கும்போது.

2. மனிதர்கள் காணப்படும் எல்லா இடங்களிலும்

3. சிறப்பாக ஆவியில் எளிமையுள்ளவர்கள் மத்தியிலும், இந்த உலகத்தில் எளியவர்களாக இருப்பவர்கள் மத்தியிலும் சுவிசேஷம் கூறவேண்டும்.

ஆனால் நம்மை தீவிரமாக எதிர்ப்பவர்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கும் முயற்சியை தொடர்ந்து செய்யக்கூடாது!

முடிவுரை

அ. நாம் நம்மையே முதலாவது நியாயத்தீர்க்காமல் இருக்கும்போது, மற்றொருவருடைய நடத்தையில் காணப்படும் ஒரு தவறை, குற்றமாக எடுத்துக்கூறி நியாயம் தீர்க்காமல் இருப்பதே ஞானமாகக் கருதப்படும். நாம் நம்மையே முதலாவதாக நியாயந்தீர்த்திருந்தாலும் கூட, ஒரு சகோதரன் அல்லது சகோதரியை அவர்களுடைய குற்றத்தை சரிசெய்ய அணுகும்போது கீழ்க்கண்ட மனப்பான்மையுடன் மட்டும் செல்லவேண்டும்: "அங்கே, தேவனுடைய கிருபையால் மட்டுமே நான் போகிறேன்" மற்றும் "நாம் ஒருவருக்கு மற்றொருவர் பொறுப்புள்ளவர்களாயிருப்பதால் மட்டும் செய்கிறேன்".

ஆ. சுவிசேஷத்திற்குக் கடினப்பட்டவர்களுக்கும், அதை தூஷிப்பவர்களுக்கும், சுவிசேஷத்தினிமித்தம் நம்மை தனிப்பட்ட முறையில் பகைப்பவர்களுக்கும், சுவிசேஷம் அறிவிப்பதை நாம் நிறுத்திவிடவேண்டுமென்று கிறிஸ்து நமக்கு போதித்திருக்கிறார். நாம் தொடர்ந்து அறிவிப்போமானால், அவர்கள் நமக்கு எதிராகத் திரும்பி, பயங்கரமாக எதிர்த்து, நம்மைத் தாக்கி, நம்மை அழிக்கத் தேடுவார்கள்.

மற்றவர்களை நியாயந்தீர்ப்பது

மத்தேயு 7:1-6

இ. இந்த நியாயத்தீர்ப்பை நாம் செய்யக்கூடியவர்களாக இருக்கவேண்டும் என்று கிறிஸ்து விரும்புகிறார். நம்முடைய சகோதரர்களையும், சகோதரிகளையும் நியாயம் தீர்ப்பது அல்ல!

நமது பரலோகப்பிதா நமக்குச் செய்வதுபோல், மற்றவர்களுக்குச் செய்யவேண்டும்

மத்தேயு 7:7-12

முன்னுரை

அ. லூக்கா சுவிசேஷத்தில், இந்த வேதவாக்கியம், கிறிஸ்து அவருடைய சீடர்களுக்கு "எவ்வாறு" ஜெபிக்கவேண்டும் என்று போதிக்கும்போது சிறிது வித்தியாசமான முறையில் உள்ளது. (லூக்கா 11:1-13) அவர் தினந்தோறும் ஜெபிக்கவேண்டிய காரியங்கள் ஒவ்வொன்றாகக் கூறி துவங்கினார். அதன் பிறகு, எடுத்துக்காட்டுகள் மூலமாகவும், விளக்க உரைகள் மூலமாகவும், விடாப்பிடியாகத் தொடர்ந்து ஜெபிப்பது எப்பொழுதும் பதிலைப்பெற்றுக் கொள்கிறது, எப்போதும் நல்ல பதிலைப் பெற்றுக் கொள்கிறது என்று உபதேசித்தார். மத்தேயுவிலுள்ள நமது வேதபாகத்தில், நம்முடைய பரலோகத் தந்தையோடு நமக்குள்ள தொடர்பு, மற்றவர்களோடு உள்ள நமது தொடர்பில் அப்படியே பின்பற்றப்படவேண்டும் என்று கூறி முடிக்கிறார்.

1. நல்ல ஈவுகளுக்குகாக பரமபிதாவிடம் இடைவிடாமல் கேட்கவேண்டும் (7:7-8).

அ. வசனம் 7-8 "கேள், தேடு, தட்டு". தொடர்ந்து கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்று இந்த வசனங்களில் இது பொருள்படும். "இடைவிடாமல்" என்றால் உண்மையுடன், விடாப்பிடியாக, நிச்சயத்துடன் கேட்பது, தடையின்றி, சுதந்திரத்துடன் கேட்பது, ஒரு தடவைக்கு மேல் என்று பொருள்படும்.

ஆ. நாம் தொடர்ந்து கேட்டு, தேடி, தட்டினால், நம்முடைய ஜெபங்களுக்கு பதிலைப் பெற்றுக்கொள்ளுவோம். ஒரு சமயம் கிறிஸ்து இங்கு இரண்டு காரியங்களை, வற்புறுத்திக் கூறுகிறார். நம்முடைய பரலோகத் தந்தை கீழ்க்கண்ட குறிப்புக்களின்படி நாம் செய்ய ஆசிக்கிறார்:

1. நமக்குத் தேவையான மற்றும் நாம் விரும்புகிற காரியங்களுக்கு அவரை இடைவிடாமல் சார்ந்து இருக்கவேண்டும்.

2. நமக்கு அவசியமான மற்றும் விரும்புகிற காரியங்களுக்காக அவரை இடைவிடாமல் கேட்கவேண்டும் (லூக்கா 11:9-10).

இ. அப்பத்திற்காக, தன் அயலானிடம் இடைவிடாமல் கேட்ட மனிதன், அப்பத்தைப் பெற்றுக்கொண்டான். அம்மனிதன், அவனுடைய சிநேகிதனாயிருந்ததினால் அல்ல அவன் இடைவிடாமல் கேட்டதினிமித்தம் பெற்றுக்கொண்டான் (லூக்கா 11:5-8). "இடைவிடாமல் கேட்ட விதவையின்" உவமானமும் இடைவிடாமல் கேட்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு (லூக்கா 18:1-7). இடைவிடாமல் கேட்டதினால், அந்தப் பெண் நியாயத்தைப் பெற்றுக்கொண்டாள்.

16. அதின் பட்டணங்கள் நாற்பது வருஷம் பாழாய்க் கிடக்கும்.

ஈ. இருந்தபோதிலும், அநேக தருணங்களில் நாம் விரும்பி கேட்டதுபோல் இல்லை. "ஆம்", "இல்லை" "சிறிது காத்திரு", "என் கிருபை உனக்குப்போதும்" என்று கர்த்தர் சொல்லக்கூடும். சில நேரங்களில் நாம் தவறான காரியங்களுக்காக அல்லது தவறான நோக்கத்தோடு கேட்கிறோம் (யாக்கோபு 4:3).

நமது பரலோகப்பிதா நமக்குச் செய்வதுபோல, மற்றவர்களுக்குச் செய்யவேண்டும்

மத்தேயு 7:7-12

உ. சில நேரங்களில் நாம் இடைவிடாமல் கேட்டிருந்தபோதிலும், கர்த்தர் "இல்லை" அல்லது "என் கிருபை உனக்குப்போதும்" என்று சொல்லவேண்டிய நிலை ஏற்படும். ஏனெனில் "ஆம்" என்று கூறினால் அது நமக்குத் தீங்கிழைப்பதாக இருக்கக்கூடும் அல்லது நாம் கிருபையிலிருந்து விழுவதற்கு அது காரணமாயிருக்க நேரிடும், (பவுல் 2கொரிந்தியர் 12:7-9) அல்லது அவர் பதில் "ஆம்" என்றிருக்குமானால் அவருடைய நோக்கங்கள் நிறைவேறாமல் தடைபட காரணமாக இருக்கும் (கிறிஸ்து, மத்தேயு 26:39-44).

இ. இருந்தாலும், கிறிஸ்துவின் வார்த்தைகள், அநேக வருடங்களுக்கு முன், மலைப்பிரதேசத்தில் இருந்த சீடர்களுக்கு எப்படியிருந்ததோ அதே வண்ணமாக இன்றும் அவருடைய சீடர்களுக்கு இருக்கிறது: "இடைவிடாமல் ஏறெடுக்கப்படும் ஜெபத்திற்கு எப்போதும் ஓர் பதில் உண்டு. ஆகவே, (தொடர்ந்து) உனக்குத் தேவையானமற்றும் விருப்பமான காரியங்களுக்காக பரலோக வாசலண்டையிலிருந்து கேட்கவேண்டும், தேடவேண்டும் தட்டவேண்டும்".

ஈ. உனக்குத் தேவையானது என்ன? உன் பரலோகத் தந்தை உனக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறாய்? உனக்கு அவசியமான மற்றும் விரும்பும் காரியங்களுக்கு நீ இடைவிடாமல் அவரைச் சார்ந்திருக்கவேண்டும் என்று அவர் ஆசிக்கிறார்.

நீ விரும்பும் மற்றும் உனக்குத் தேவையானவைகளுக்காக நீ இடைவிடாமல் அவரைக் கேட்கவேண்டுமென்று அவர் வாஞ்சிக்கிறார்.

2. உன் பரலோகப் பிதா, அவரிடம் இடைவிடாமல் கேட்பவர்களுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்கிறார்.

அ. வசனம் 9-10 "உங்களில் எந்த மனுஷனானாலும் (தகப்பன்) தன்னிடத்தில் அப்பத்தை கேட்கிற தன் மகனுக்கு கல்லைக் கொடுப்பானா? உலக தந்தைகள் தீங்கிழைக்கும் அல்லது கீழ்த்தரமான காரியங்களை அவர்களுடைய பிள்ளைகளுக்கு சாதாரணமாகக் கொடுக்கமாட்டார்கள். அவர்கள், அவர்களுடைய பிள்ளைகளுக்கு, அவர்கள் வளர்வதற்கு உதவும் நல்ல காரியங்களைக் கொடுக்கிறார்கள்.

ஆ. நம்முடைய பரலோகத் தந்தையும் அவ்வாறே செய்வார். விடாமுயற்சியுடன் ஏறெடுக்கப்படும் ஜெபம் எப்போதும் நல்ல பதிலைப் பெற்றுக்கொள்ளும். நமக்கு நன்மையானவைகளையும், நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி அவசியமானவைகளையும் நாம் எப்போதும் பெற்றுக்கொள்வோம். "நாம் அப்பத்தைக் கேட்டால், அவர் கல்லை நமக்குக் கொடுக்கமாட்டார். நாம் மீனைக்கேட்டால், அவர் நமக்குப் பாம்பைக் கொடுக்கமாட்டார்", என்று அவர் கூறும்போது, இப்பொருள்படவே கூறுகின்றார்.

இ. வசனம் 11 "ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கிறீர்கள்" "பொல்லாத" என்றால் தீங்கிழைப்பது, தீச்செயல்புரிவது, கவலையீனமான, பாவக்கறைப்பட்ட, பிசாசினால் தூண்டப்பட்டு செயல்புரிகிற என்று பொருள்படும். ஈவு, என்பது வெகுமதி, தியாகம் செய்து கொடுக்கப்படும் ஓர் அன்பளிப்பு. தேவனுடைய ஆவியினால் மாற்றப்படாத தகப்பன்மார்கள்கூட அவர்களுடைய பிள்ளைகளுக்கு,

நமது பரலோகப்பிதா நமக்குச் செய்வதுபோல, மற்றவர்களுக்குச் செய்யவேண்டும்

மத்தேயு 7:7-12

தங்களை தியாகம் செய்து, நல்ல ஈவுகளைக் கொடுக்கும் பண்புடையவர்களாக இருக்கிறார்கள்.

ஈ. வசனம் 11 "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா, தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? கிறிஸ்து இங்கு மூன்று காரியங்களைக் கூறுகிறார்:

1. தேவன் நல்லவர். அவர் பொல்லாதவர் அல்ல.

2. ஆகவே, தம்மிடம் கேட்பவர்களுக்கு நல்ல ஈவுகளை மட்டுமே தருகிறார். (யாக்கோபு 1:13,17) அவர் பொல்லாத அல்லது தீங்கிழைக்கும் ஈவுகளைத் தரமாட்டார்.

3. பூலோகப் பிதாக்கள் கொடுக்கக்கூடியவைகளைவிட, அவர் தம்மிடம் வேண்டிக்கொள்பவர்களுக்கு அதிகமான ஈவுகளையும், மற்றும் அதிக நன்மை தரும் வெகுமதிகளையும் கொடுக்கிறார்.

உ. இந்த போதனையின் காலக்கட்டத்தில், இயேசுவானவர் இவ்வாறு கூறியதாக லூக்கா அறிவிக்கிறார்: "(நம்முடைய) பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது (கொடுப்பார்) அதிக நிச்சயம் அல்லவா, என்றார்" (லூக்கா 11:13) நம்முடைய பரலோகப் பிதா,

நம்முடைய பூலோகத் தகப்பன்மார்கள் கொடுக்கமுடியாத ஒரு காரியத்தை நமக்குக் கொடுப்பதற்காக வைத்திருக்கிறார். நாம், நம்முடைய முழு நம்பிக்கையையும் அவர்மீது வைத்திருப்பதை வெளிப்படுத்தி, இடைவிடாமல் கேட்போமானால், அவர் நமக்கு பரிசுத்த ஆவியானவரைக் கொடுப்பார். நீங்கள் பார்ப்பதுபோல் இது, அவருடைய பிள்ளைகளுக்கு சிறப்பாக நன்மை தருவதாயிருக்கிறது.

ஊ. "பரிசுத்த ஆவியானவரைக் கொடுப்பார்" என்றால் என்ன? பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்று இது பொருள்படும் (அப்போஸ்தலர் 2:1-4) நீ கேட்டால், முதலிருந்த அடையாளங்களோடு பரிசுத்த ஆவியானவரால் நீ ஞானஸ்நானம் பெறுவாய். அதாவது, பெந்தெகொஸ்தே நாளில் சீடர்களுக்கு நடந்ததுபோலவே, நீ கற்றுக்கொள்ளாத மொழியில் பேசுவாய்!

எ. கீழ்க்கண்ட முடிவான கருத்துக்களை அறிவிக்க, அவருடைய சீடர்களைப் படிப்படியாக வழிநடத்தினார் என்பதை, லூக்கா சுவிசேஷத்திலுள்ள தொகுப்பை ஆழ்ந்து நோக்கும்போது அறியலாம்:

1. எக்காரியங்களுக்காக அவர்கள் ஜெபிக்கவேண்டும் என்பதைக் கூறி ஆரம்பிக்கிறார். (லூக்கா 11:2-4).

2. இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும் என்று வற்புறுத்தி தொடர்ந்து கூறுகிறார் (லூக்கா 11:5-10).

3. பின் இவ்வாறு கூறுகிறார், "பரமபிதாவானவர், தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பார்" அவருடைய ஒவ்வொரு சீடர்களும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதே அவருடைய வாஞ்சை.

நமது பரலோகப்பிதா நமக்குச் செய்வதுபோல், மற்றவர்களுக்குச் செய்யவேண்டும்

மத்தேயு 7:7-12

ஏ. அவருடைய சீடர்கள் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று, கிறிஸ்து விரும்புவதற்கு அநேகக் காரணங்கள் உண்டு:

1. விசுவாசிகள் சாட்சி கூறுவதற்கு வல்லமையைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள் (அப்போஸ்தலர் 1:4-8).

2. ஆவியின் வரங்களை வெளிப்படையாகக் காட்ட துவங்குகிறார்கள் (ரோமர் 12:3-8, 1கொரிந்தியர் 12:7-10,28).

3. அவர்களுடைய ஆவியில் ஜெபிக்கவும், பாடவும் ஆரம்பிக்கிறார்கள். (1 கொரிந்தியர் 14:14-15, 18-19, எபேசியர் 6:18-20, யூதா 20).

4. அவர்களுடைய செய்தியையும், ஊழியங்களையும் உறுதிப்படுத்த, அடையாளங்களையும், அற்புதங்களையும் நடப்பிக்க இயேசுவானவர் தங்களோடு இருக்கிறார் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள முடிந்தது (மாற்கு 16:20).

5. இழந்துபோனவர்கள் மற்றும் மரித்துக் கொண்டிருப்பவர்களுக்காக எப்போதும் அதிகரித்துக் கொண்டிருக்கும் அன்பை, அவர்கள் வெளிப்படுத்தினார்கள். (மாற்கு 16:20, அப்போஸ்தலர் 4:19-20, 7:60).

6. தேவனுடைய வார்த்தையின் மீதும், இயேசுவானவரின் உபதேசங்களின் மீதும் ஆழமான வாஞ்சையைப் பெற்றுக்கொண்டனர்.

யாவரும் ஒன்றாக உணவுண்டு, ஜெபித்து, ஐக்கியத்திற்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர் (அப்போஸ்தலர் 2:42-43).

ஒ. சீனா தேசத்திலுள்ள மக்கள், தாங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காக வேண்டிக்கொள்ளப் பயப்படுகிறார்கள் ஏனெனில், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காகக் கேட்கும்போது, தாங்கள் ஏதாவது ஒரு பொல்லாங்கான காரியத்தையோ அல்லது பொல்லாத ஆவியையோ பெற்றுக் கொள்வார்களென்று பயப்படுகிறதினால் என்று, சீனாவிலிருந்து அறிக்கைகள் எனக்குவந்தது. இந்த வேத வசனங்களிலிருந்து, நாம் நம் பரமபிதாவிடமிருந்து நல்ல காரியங்களை மட்டுமே பெற்றுக் கொள்ளுவோம் என்று பார்க்கிறோம். நாம் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று கேட்கும்போது, நாம் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவோம். தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு தீங்கிழைக்கும் எதுவொன்றையும் தரமாட்டார்.

3. மனிதர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் (7:12).

அ. "எல்லாக் காரியங்களிலும் மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் செய்யுங்கள்" மற்றவர்கள் நம்மை எவ்வாறு நடத்தவேண்டுமென்று விரும்புகிறோமோ, அவ்வாறே நாமும் அவர்களை நடத்தவேண்டும். இவைகள், கிறிஸ்துவானவர் மலைப்பிரசங்கத்தில், உபதேசித்த சன்மார்க்க நடத்தையின் விதிகளைச் சுருக்கித் தொகுத்துக் கூறிய வாக்கியங்கள் (5-7 அதிகாரங்கள்) இந்தத் "தங்கச் சட்டம்" யூதர் முறையில் எதிர்மறையில், இவ்வாறு கூறப்பட்டுள்ளது: "நீ உனக்கு எது செய்யப்படக்கூடாது என்று விரும்புகிறாயோ அதை நீயும் மற்றொருவருக்கும் செய்யக்கூடாது."

நமது பரலோகப்பிதா நமக்குச் செய்வதுபோல், மற்றவர்களுக்குச் செய்யவேண்டும்

மத்தேயு 7:7-12

ஆ. இன்றைய வேதபாகத்தில் கிறிஸ்துவானவரின் தொடர்ச்சியான உபதேசம் முக்கிய உள்நோக்கத்தையுடையது. நமக்கும் நமது பரலோகத் தந்தைக்கும் உள்ள தொடர்பு *(7:7-11)* அவ்வாறே மற்றவர்களோடுள்ள நம்முடைய தொடர்புகளில் எடுத்துக் காட்டப்படவேண்டும் *(7:12)*.

1. நாம் இடைவிடாமல் நல்ல ஈவுகளுக்காக அவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வதுபோலவே, நாமும் மற்றவர்கள் நம்மிடம் கேட்கும்போது நல்ல ஈவுகளைக் கொடுக்கவேண்டும்.

2. நம்முடைய பரம தகப்பன் நமக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ அவ்வாறே நாமும் மற்றவர்களுக்குச் செய்யவேண்டும்.

இ. "இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கத்தரிசனங் களுமாம்" "மலைப்பிரசங்கத்தில்" இயேசு பழைய ஏற்பாட்டு வேதவசனங்களிலுள்ள சன்மார்க்க கற்பனைகளைத் தொகுத்துக் கூறுவதுமட்டுமின்றி, சரியான விளக்கங்களையும், ஆவிக்குரிய பலதரப்பட்ட கருத்துக்களையும் சேர்த்து (இருதயத்தின் நினைவுகள், உள்நோக்கங்கள்) ஆதியில், எந்த நோக்கத்துடன் உண்மையில் கொடுக்கப்பட்டதோ, அவற்றை நமக்குத் தருகிறார்.

ஈ. உதாரணங்கள் சேர்க்கப்பட்டுள்ளது

1. "கொலை செய்யாதிருப்பாயாக" என்பது, "கோபப்படுகிற எவனும்" என்று கூறப்படுகிறது.

2. "ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கிற எவனும்", "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக" என்ற கற்பனையை மீறுகிறான்.

3. "தள்ளுதல் சீட்டைக் கொடுக்கக்கடவன்" என்பது "வேசித்தன முகாந்தரத்தினால் மாத்திரமேயன்றி தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன்" என்றாகிவிடுகிறது.

4. "ஆணையிட்டதை தவறாமல் நிறைவேற்றவேண்டும்" என்பது "ஆணையிட வேண்டாம்" என்றாகிவிட்டது.

5. "கண்ணுக்குக்கண், பல்லுக்குப் பல்" என்பது, "தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம் என்றாகிவிட்டது.

6. "உன் சத்துருவை பகைப்பாயாக", என்பது, "உன் சத்துருக்களிடம் அன்புகூருவாயாக என்றாகிவிட்டது. இது நாம் மற்றவர்களுக்கு, நம் பரம பிதா நமக்குச் செய்வதுபோல் செய்வது.

உ. பழைய ஏற்பாட்டு காலத்து யூதர்களிடம், அவருடைய சன்மார்க்க நடத்தைக் கொள்கைகளின்படியே அவர்கள் நடக்கவேண்டும் என்று உரிமையுடன் கேட்க தேவனால் முடியவில்லை. அவர்கள் இருதயம் கடினப்பட்டு இருந்தது (மத்தேயு 19:8). கிறிஸ்துவின் மன்னிக்கும் கிருபையினால் மிருதுவாக்கப்பட்ட இருதயங்கள் அவர்களுக்கு இருக்கிறது! மற்றும் அவர்களுக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் தேவனுடைய சன்மார்க்கக் கற்பனைகளின் உள்நோக்கங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்ற முடிவாக அவர்களால் கூடும் (ரோமர் 8:4, 2பேதுரு 1:3).

நமது பரலோகப்பிதா நமக்குச் செய்வதுபோல், மற்றவர்களுக்குச் செய்யவேண்டும்

மத்தேயு 7:7-12

ஊ. மற்றவர்கள் நம்மை எப்படி நடத்தியிருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல், அவர்கள் நமக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறோமே அவ்வாறே அவர்களுக்குச் செய்ய நமக்கு முடியும். இது, நம்முடைய இருதயத்தின் நினைவுகளுக்கும், உள் கருத்துக்களுக்கும் பொருந்தும்.

முடிவுரை

அ. நமக்குத் தேவையானவைகளுக்காகவும், விரும்புகிறவைகளுக்காகவும் நாம் இடைவிடாமல் நம்முடைய பரலோகத் தந்தையைச் சார்ந்திருக்கிறோம். இவைகளுக்காக இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும். நாம் இவ்வாறு செய்வதினால் பரமபிதா இடைவிடாமல் நல்ல ஈவுகளை நமக்குத் தருகிறார். மிகமுக்கியமாக பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறார்.

ஆ. நமக்கும், பரம பிதாவுக்குமுள்ள இந்த தொடர்பு, அவ்வண்ணமாகவே, மற்றவர்களோடுள்ள நம்முடைய தொடர்புகளில் காட்டப்படவேண்டும். நமக்கு நமது பரம தந்தை என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ அவ்வாறே நாம் அவர்களுக்குச் செய்யவேண்டும். கிறிஸ்து இதை இவ்வாறு கூறுகிறார்: "நீ மற்றவர்கள் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறாயோ அதையே நீயும் அவர்களுக்குச் செய்".

இ. நம்முடைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் மத்தியிலும், அவ்வாறே தம்முடைய விரோதிகளுக்கும், கிறிஸ்து நமக்குக் கூறியதுபோல் நாம் செய்வோமானால், நன்மை செய்கிறவர்களாயிருப்போம். நாம் இதைச் செய்ய முடியும்! நம்மில் சிலர் இதை ஞாபகப்படுத்தினால்போதும், மறுபடியும் இவ்வாறு செய்ய ஆரம்பித்துவிடுவார்கள்!

விரிவான மற்றும் குறுகிய வாசல்கள்

மத்தேயு 7:13-14

முன்னுரை

அ. கிறிஸ்துவின் சீடர்களுக்குப் "பொற்சட்டம்", வசனம் 12 எடுத்துக்கூறப்பட்டுள்ளது. "எல்லாவற்றிலும் மனிதர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளும் போதித்தவைகள் யாவும் இதில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது என்று இயேசு கூறுகிறார். இந்த நல்நடத்தையின் விதி, மத்தேயு 22:37-40 வசனங்களில் சிறிது வித்தியாசமாகக் கூறப்பட்டுள்ளது: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில், உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக.... உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக".

ஆ. இந்த வாழ்க்கைக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னால், அவன், உபத்திரங்களைக் தாங்கி சுயத்தை வெறுத்து, கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து, குறுகிய வாசல்வழியாகப் பிரவேசித்து, குறுகலான நீதியின் பாதையில் நடக்க, ஆயத்தமாயிருக்கவேண்டும். இந்தப்பாதை எப்படியும் (நிச்சயமாக) நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும்.

1. அழிவுக்கு வழிநடத்தும் விசாலமான வாசல் ஒன்று உள்ளது (7:13).

அ. "வாசல் விரிவும், வழி விசாலமாகவும் இருக்கிறது" "விரிவும்" என்பது தட்டையாகப் பரந்து இருப்பது என்று பொருள்படும். "விசாலமாக" என்றால் அதிகமான இடம் எனப்படும். இந்த வாசல் வழியாகப் பிரவேசித்து, இந்த பாதை வழியாகப் பயணம் செய்வது ஒருவனுக்குச் சுலபம். அது செய்வதற்குச் சரியான காரியமாகவும் காணப்படுகிறது.

1. இந்த வாசல் வழியாய் நுழைவதற்கும், இந்த பாதை வரியாக நடப்பதற்கும் எந்தவிதமான இடையூறும் இல்லை.

2. அநேகர் இந்தப் பாதைவழியாகத்தான் பயணம் செய்கிறார்கள்.

3. இந்த பாதையின் இரு பக்கங்களிலும், இந்த உலகத்திலுள்ள மக்கள், பெற்றுக்கொள்ள மற்றும் செய்ய விரும்பும் காரியங்கள் வைக்கப்பட்டுள்ளது.

ஆ. தேவ பயமுள்ள வாழ்க்கை நடத்தமுடியாத, தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறக்காத, கிறிஸ்து இல்லாமல், இந்த உலகத்தில் வாழும் மக்கள், அகன்ற பாதையில் பயணம் செப்பவர்களைக் குறிக்கிறார்கள் (யோவான் 3:3-8, ரோமர் 7:14-24).

இ. பவுல் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: 16. அதின் பட்டணங்கள் நாற்பது வருஷம் பாழாய்க் கிடக்கும்.

1. அவர்கள் சத்தியத்தை (தேவனுடைய) அவர்களுடைய துன்மார்க்கத்தினால் அடக்கி வைக்கிறார்கள்.

2. அவர்கள் தேவனை மகிமைப்படுத்தவோ அல்லது துதிக்கவோ மாட்டார்கள்.

விரிவான மற்றும் குறுகிய வாசல்கள்

மத்தேயு 7:13-14

3. அவர்கள் சிந்தனைகள் அசுத்தமாகவும் அவர்கள் இருதயம் இருளடைந்தும் இருக்கிறது.

4. அவர்கள் தேவனுடைய மகிமையை, மனிதர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும்பிராணிகள், ஆகிய இவைகளுடைய ரூபங்களக்கு ஒப்பாக மாற்றினார்கள்.

5. தேவனை அறியும் அறிவை, இந்த உலகத்தில் பற்றிக்கொண்டிருப்பது நன்மையானது என்று உணராதிருக்கிறார்கள்.

ஈ. பவுல் மேலும் இவ்வாறு கூறுகிறார்:

1. அவர்கள் சகலவித பொல்லாப்பினாலும், துன்மார்க்கத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும், பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களாயிருக்கிறார்கள்.

2. புறங்கூறுகிறவர்களாயும், அவதூறு பண்ணுகிறவர்களாயும், தேவ பகைஞர்களுமாயும், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாயும், அகந்தையுள்ளவர்களாயும், வீம்புபேசுகிறவர்களாயுமிருக்கிறார்கள்.

3. பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர் களும், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாயிருக்கிறார்கள்.

4. உணர்வில்லாதவர்களாயும், உடன்படிக்கையை மீறுகிறவர்களாயும், இணங்காதவர்களுமாயும், இரக்கமில்லாதவர்களுமாயிருக்கிறார்கள்.

5. இப்படிப்பட்டவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்திலும் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள். இவர்கள் மரணத்துக்குப் பாத்திரராயிருக்கிறார்கள் (ரோமர் 1:18-32, கலாத்தியர் 5:19-21, 1 கொரிந்தியர் 6:9-10, எபேசியர் 5:5, வெளிப்படுத்தின விசேஷம் 22:15) இது அப்படியே அவர்களுக்கு நடக்கும் என்று இயேசு கூறுகிறார்.

உ. "கேட்டுக்கு போகிறவாசல்" "கேடு" என்றால் ஆவிக்குரிய மற்றும் நித்திய அழிவு அல்லது இழப்பு. நித்திய நரக அக்கினியில் தேவனைவிட்டு பிரிக்கப்பட்டு இருக்கப்போவதைக் இது குறிக்கும். விரிவான வாசல் வழியாகப் பிரவேசித்து, விசாலமான பாதையில் பயணம் செய்வதில் ஏற்படும் பிரச்சனை.

ஊ. "அதன் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்" ஒவ்வொரு தலைமுறையிலும் ஏராளமான மக்கள், விரிவான வாசல் வழியாய் பிரவேசித்து, விசாலமான பாதையில் பயணம் செய்வது, வருந்தத்தக்க காரியம். இன்றைய உலகத்தில் 3-10% மக்கள் மட்டும் கிறிஸ்துவைக் கண்டடைந்து, அவரைத் தங்களுடைய கர்த்தரும் இரட்சகருமாய் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்வது கடினமாயிருக்கிறது.

எ. பாவத்திலும், பொல்லாப்பான காரியங்களிலும் ஈடுபடுவதின் மூலமாக, மனதை இறுகக்கட்டுவதின் மூலமாகவும், பொய்யான மத மார்க்கங்கள், சாத்தானை ஆராதிக்கும் முறைகள், பிசாசினால் ஆட்கொள்ளப்படுவது, மற்றும் கொடூரமாக ஆளும் அரசாங்கங்கள் மூலமாகவும், உலகத்திலுள்ள பெரும்பான்மையான மக்களை சாத்தான் தன் பிடியில் வைத்துள்ளான். இவர்கள் கிறிஸ்துவைக் கண்டடையாவிட்டால், முடிவில் நரக அக்கினியே இவர்கள் முடிவு!

2. ஜீவனுக்குப்போகிற இடுக்கமான வாசல் ஒன்று உண்டு (7:13அ,14)

விரிவான மற்றும் குறுகிய வாசல்கள்

மத்தேயு 7:13-14

அ. 7:13 அ. "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்". எச்சரிக்கை அதிகாரத்துடன் உள்ளது. "விரிவான வாசலைவிட்டு விலகி (உலக நேசம்), இடுக்கமானவாசலைத் தேடி கண்டுபிடியுங்கள்! "இடுக்கமான" என்றால் மலைகளிலுள்ள கணவாய் போல் இருபக்கங்களிலும் பல இடையூறுகளுடன் கூடிய நெருக்கமான பாதை ஏராளமான மக்கள் இடுக்கமான வாசல் வழியாக பிரவேசிக்க முடியவில்லை. ஏனெனில் அவர்கள் தங்களைத் தாழ்த்தவும், உள்ளே நுழைய கீழே தாழ்ந்து குனியமறுக்கிறார்கள் (மாற்கு 10:15, லூக்கா 18:17).

ஆ. நித்திய ஜீவனுக்கான வழி வெகு தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவே அந்த இடுக்கமான வாசல். பிதாவிடம் சேரவும்

நித்திய ஜீவனைக் கண்டுபிடிக்கவும், வேறு ஒரு வழியும் இல்லை. மற்றொரு சந்தர்ப்பத்தில் இயேசுவானவர் அவருடைய சீடர்களிடம் இவ்வாறு கூறுகிறார்: "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6). பேதுரு இவ்வாறு கூறுகிறார்: "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்போஸ்தலர் 4:12, தீமோத்தேயு 2:5).

இ. 7:14 "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது" "ஜீவன்" என்றால், ஜீவியகாலம், உயிரோடு வாழ்வது. இது இடுக்கமான வாசல் வழியாகப் பிரவேசித்து, நெருக்கமான பாதை வழியாக நடக்கிற யாவருக்கும், இயேசுவானவர் வாக்குத்தத்தம் செய்த, நித்திய ஜீவனை இது குறிப்பிடுகிறது. இது,

1. கிறிஸ்துவைக் கண்டடைவது

2. சிறு குழந்தையைப்போல் அவரைக் கர்த்தாவாகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3. தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறக்கவேண்டும்.

4. பதில் விளைவுகளைக் கவனிக்காமல், கிறிஸ்தவ வாழ்க்கையை முடிவுமட்டும் வாழவேண்டும். "நானே வாசல் (இடுக்கமான) என் மூலமாக உட்பிரவேசிக்கிறவனெவனோ; அவன் இரட்சிக்கப்படுவான்", கிறிஸ்து இவ்வாறு கூறும்போது, இந்த பொருள்படவே சொல்கிறார் (யோவான் 10:9).

ஈ. 7:14 "அதைக்கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" யூதர்கள், அவர்தான் (இயேசு) அவர்கள் வெகுகாலமாக எதிர்பார்த்துக் காத்திருந்த மேசியா என்று ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று கிறிஸ்து அறிந்திருந்தார். ஒவ்வொரு தலைமுறையிலும் மிகச் சிலரே அவரைக் கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுவார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

உ. இது, பெரிய விருந்தைக் (கல்யாண) குறித்த உவமானத்தில், தெளிவாக வரைபடம்போல் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது. அநேகர் அழைக்கப்பட்டனர். ஆனால் ஒரு சிலரே வந்தனர். ஆகவே எஜமான், அவருடைய வேலைக்காரர்களை மற்ற விருந்தினரை அழைத்துவரும்படி, பட்டணத்திற்குள் அனுப்பினார்.

விரிவான மற்றும் குறுகிய வாசல்கள்

மத்தேயு 7:13-14

தெருக்களிலும், வேலிகளருகிலுள்ள நடைபாதைகளிலும், பெருவழிகளிலும், மற்றும் கிராமப்புற சந்துகளிலும், பட்டணத்தின் தெருக்களிலும் சென்று, ஏழைகளையும், ஊனரையும் குருடரையும், சப்பாணிகளையும் அழைத்துக்கொண்டு வந்த வேலைக்காரர், எஜமானை நோக்கி," ஆண்டவரே நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று இன்னும் இடம் இருக்கிறது" என்றார்கள் (லூக்கா 14:15-23).

ஊ. மற்றொரு சந்தர்ப்பத்தில், ஒருவன் இயேசுவானவரிடம் இவ்வாறு கேட்டான்: "ஆண்டவரே இரட்சிக்கப்படுகிறவர்கள் சில பேர் தானோ?" அவர், கூடியிருந்த மக்கள் கூட்டத்தை நோக்கி, "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள். அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும், என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா 13:22-24). அந்த கூட்டத்தில் திரளான மக்கள் இருந்தனர், ஆனால் ஒரு சிலர் மட்டுமே, அவர்களுடைய பொல்லாத வழிகளைக் குறித்து மனந்திரும்பி, இரட்சிக்கப்பட உண்மை மனதுடன் விரும்பினார்கள்!

முடிவுரை

அ. ஒருவன், இடுக்கமான அல்லது விரிவான வாசல் வழியாய் பிரவேசிக்கிறான். அவன் நெருக்கமான அல்லது விசாலமான பாதைவழியாக நடக்கிறான். ஒரு வாசல், தேவன் மற்றும் கிறிஸ்துவானவருடைய சமுகத்தில் நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும்,

அடுத்த வாசல் தேவன் மற்றும் கிறிஸ்துவைவிட்டு நித்தியமாகப் பிரிக்கப்பட்டு, நரக அக்கினியின் வேதனைக்கு வழிநடத்தும்.

ஆ. ஆகவே, ஒருவன் பிரவேசிக்கும் வாசல், அவன் பயணம் செய்யும் சாலை ஆகிய இவை திட்டமாக ஒரு வேற்றுமையை உண்டாக்குகிறது! ஒவ்வொருவரும், அவரைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டு, நீ இடுக்கமான நீதியின் பாதையில் நடந்து, உபத்திரவங்களைச் சகித்து தன்னையே தியாகம் செய்து, அவருக்குத் தன்னை அர்ப்பணிக்கவேண்டும். நரக அக்கினியில் ஒருவரும் அழிந்துபோவது அவர் விருப்பம் அல்ல, ஆனால் ஒவ்வொருவரும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்பதே அவர் வாஞ்சை.

இ. கர்த்தர் எரேமியா மூலமாகப் பேசி இவ்வாறு கூறுகிறார்: "பின்னையும் அவர், இந்த ஜனங்களை நோக்கி: இதோ, நான் உங்கள் முன்னே ஜீவவழியையும், மரணவழியையும் வைக்கிறேன்" (எரேமியா 21:8). நீ எந்த வழியில் செல்ல தீர்மானித்திருக்கிறாய்? விரிவான அல்லது இடுக்கமான, ஆகிய இவற்றில் எந்த வாசலைத் தெரிந்து கொள்வாய்? எந்த பாதையில் நடக்க தீர்மானித்துள்ளாய்?

பொய்த் தீர்க்கதரிசிகள்
மத்தேயு 7:15-23

முன்னுரை

அ. இயேசுவானவர் அவருடைய சீடர்களிடம் உரையாடிக்கொண்டிருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறோம். அவர்கள் கீழ்க்கண்ட பண்புடையவர்கள்:

1. இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசித்தவர்கள்.

2. நெருக்கமான பாதையில் நடந்து கொண்டிருப்பவர்கள்.

3. நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுவார்கள். குறுகலான பாதையில் நடந்து கொண்டிருக்கும்போது, எப்படியிருப்பினும், அவர்கள் பொய்த் தீர்க்கத்தரிசிகளைக் குறித்து விழிப்புடன் கவனமாயிருக்கவேண்டும்.

ஆ. கிறிஸ்து இருந்த காலத்தில் வீட்டுக்கூரைகள் மீது நின்றும், வீதிகளிலிருந்தும் சப்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். இன்று அவர்கள், தொலைக்காட்சி பெட்டியிலிருந்தும், ஒளி நாடா (VIDEOS), ஒலிநாடா (CASSETTE TAPES), வானொலி (RADIO), ஆகிய இவற்றின் மூலமாக சப்தமிடுகிறார்கள். எண்ணிக்கைக்கு அடங்காத புத்தகங்களையும், குறிப்பிட்ட காலங்களில் வெளிவரும் பத்திரிகைகளையும் இவர்கள் எழுத, அவை பத்தாயிரக்கணக்கில் அச்சிடப்பட்டு வெளியாகிறது. அதற்கு ஒரு முடிவிருப்பதாகத் தெரியவில்லை.

1. கள்ள தீர்க்கதரிசிகள் ஆட்டுத்தோலைப் போர்த்தவர்களாகத் தோன்றுகிறார்கள் (7:15).

அ. "கள்ளத் தீர்க்கத்தரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்" "எச்சரிக்கையாயிருங்கள்" என்றால், அவர்களை உன்னிப்பாகக் கவனம் செலுத்துங்கள். ஏனெனில் மந்தையை அவர்கள் அச்சுறுத்துகிறார்கள். இடைவிடாமல் அவர்களைக் குறித்து விழிப்பாக இருந்து, அவர்கள் என்ன செய்ய முயற்சிக்கிறார்கள் என்பதைக் குறித்துக் கவனம் செலுத்தி ஜாக்கிரதையாயிரு.

ஆ. பழைய ஏற்பாட்டில் கள்ளத்தீர்க்கதரிசிகள் கீழ்க்கண்டவாறு இருந்தனர்.

1. உண்மையைக் கூறுவதைக் காட்டிலும் பொது மக்களிடையே தங்களுடைய செல்வாக்கை வளர்த்துக் கொள்வதிலேயே அதிக ஆர்வமுடையவர்களாக இருந்தனர் (எரேமியா 6:14).

2. தங்கள் சொந்த ஆதாயத்தை பெற்றுக்கொள்வதில் ஊக்கமுடையவர்களாயிருந்தனர் (மீகா 3:11).

3. துன்மார்க்கமான வாழ்க்கை வாழ்ந்தனர் (எரேமியா 23:14,32).

4. மனிதர்கள் தேவனை நெருங்கிச் சேர வழிநடத்துவதற்குப் பதிலாக, அவரைவிட்டு விலகிச் செல்லும்படியாக வழிநடத்தினர் (உபாகமம் 13:1-5).

5. விக்கிரக ஆராதனைக்கு வழிநடத்தினர் (எசேக்கியேல் 8:1-15).

பொய்த் தீர்க்கதரிசிகள்
மத்தேயு 7:15-23

6. அவர்கள் பொய்பராயிருந்து, துன்மார்க்கமாக ஜீவிப்பது குறித்து கவலைபடவேண்டிய அவசியமில்லை என்று கருதி, சமாதானம் இல்லாதிருந்தும், "சமாதானம், சமாதானம்" என்று சொல்லுகிறார்கள் (எரேமியா 8:10-11).

7. அவர்களுடைய மனோபாவனையின் ஆவியின் ஏவுதலால் தீர்க்கதரிசனம் கூறி, அதைக் கர்த்தர் உரைத்தார் என்று அறிவித்தார்கள் (எசேக்கியேல் 13:2,6).

இ. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்ததுபோல, ஆதி திருச்சபையிலும் இப்படிப்பட்டவர்கள் (கள்ளத்தீர்க்கதரிசிகள்) அநேகர் இருந்தனர்.

1. மற்றொரு சந்தர்ப்பத்தில் கிறிஸ்து தம்முடைய சீடர்களை இவ்வாறு எச்சரித்தார்:

அ. "... கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். ஆகையால், அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் (கிறிஸ்து) என்று சொல்வார்களானால் புறப்படாதிருங்கள். இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள்" (மத்தேயு 24:24-26).

ஆ. "அநேகர் வந்து, என் நாமத்தைக் கொண்டு: "நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். (மாற்கு 13:6; லூக்கா 21:8).

2. எபேசுவிலுள்ள மூப்பர்களை பவுல் இவ்வாறு எச்சரித்தார்: "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" (அப்போஸ்தலர் 20:29).

ஈ. ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு அவர்கள் உங்களிடத்தில் வருவார்கள் "இயேசு, அவருடைய சீடர்களுக்கு, கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்து இவ்வாறு எச்சரிக்கிறார். ஏனெனில் அவர்கள் முதலாவது இவ்வாறு காணப்படுவார்கள்:

1. உண்மை பேசுவார்கள்.

2. ஆட்டைப்போல் தீமைசெய்யாமலும் கபடற்றவர்களாகவும் இருப்பார்கள்.

3. சபைக்குக் கிறிஸ்துவின் வரங்களைக் கொடுப்பவர்களாயிருப்பார்கள்.

உ."ஆனால் உள்ளானபடி பட்சிக்கிற ஓநாய்களாயிருப்பார்கள்". அவர்களை நெருங்கி கூர்ந்து நோக்கினால், அவர்கள் இப்படிப்பட்டவர்கள் என்று எப்படியும் வெளிப்படும்:

1. பொல்லாத நோக்கத்தோடு பொய்பாய் பேசுவார்கள்.

2. ஆடுகளின் மத்தியிலுள்ள ஓநாய்கள் போல் அபாயகரமாகவும், அழிவை உண்டாக்குகிறவர்களாகவும் இருப்பார்கள். புதிய மாமிசத்திற்காக அவர்கள் பசி ஒருபோதும் திருப்திபடையாது.

3. பிசாசின் கருவியாயிருப்பார்கள்.

ஊ. நம்முடைய காலத்தில், இந்த உலகத்தில் சில குறிப்பிடத்தக்க முதன்மையான கள்ளத்தீர்க்கத்தரிசிகள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகள். அவர் திரும்ப வரும்வரை தொடர்ந்து காணப்படும் என்று, கிறிஸ்து நமக்குக் கூறியவைகளிலிருந்து நாம் அறியலாம்.

பொய்த் தீர்க்கதரிசிகள்
மத்தேயு 7:15-23

6. அவர்கள் பொய்பராயிருந்து, துன்மார்க்கமாக ஜீவிப்பது குறித்து கவலைபடவேண்டிய அவசியமில்லை என்று கருதி, சமாதானம் இல்லாதிருந்தும், "சமாதானம், சமாதானம்" என்று சொல்லுகிறார்கள் (எரேமியா 8:10-11).

7. அவர்களுடைய மனோபாவனையின் ஆவியின் ஏவுதலால் தீர்க்கதரிசனம் கூறி, அதைக் கர்த்தர் உரைத்தார் என்று அறிவித்தார்கள் (எசேக்கியேல் 13:2,6).

இ. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்ததுபோல, ஆதி திருச்சபையிலும் இப்படிப்பட்டவர்கள் (கள்ளத்தீர்க்கதரிசிகள்) அநேகர் இருந்தனர்.

1. மற்றொரு சந்தர்ப்பத்தில் கிறிஸ்து தம்முடைய சீடர்களை இவ்வாறு எச்சரித்தார்:

அ. "... கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். ஆகையால், அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் (கிறிஸ்து) என்று சொல்வார்களானால் புறப்படாதிருங்கள். இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள்" (மத்தேயு 24:24-26).

ஆ. "அநேகர் வந்து, என் நாமத்தைக் கொண்டு: "நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். (மாற்கு 13:6; லூக்கா 21:8).

2. எபேசுவிலுள்ள மூப்பர்களை பவுல் இவ்வாறு எச்சரித்தார்: "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" (அப்போஸ்தலர் 20:29).

ஈ. ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு அவர்கள் உங்களிடத்தில் வருவார்கள் "இயேசு, அவருடைய சீடர்களுக்கு, கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்து இவ்வாறு எச்சரிக்கிறார். ஏனெனில் அவர்கள் முதலாவது இவ்வாறு காணப்படுவார்கள்:

1. உண்மை பேசுவார்கள்.

2. ஆட்டைப்போல் தீமைசெய்யாமலும் கபடற்றவர்களாகவும் இருப்பார்கள்.

3. சபைக்குக் கிறிஸ்துவின் வரங்களைக் கொடுப்பவர்களாயிருப்பார்கள்.

உ."ஆனால் உள்ளானபடி பட்சிக்கிற ஓநாய்களாயிருப்பார்கள்". அவர்களை நெருங்கி கூர்ந்து நோக்கினால், அவர்கள் இப்படிப்பட்டவர்கள் என்று எப்படியும் வெளிப்படும்:

1. பொல்லாத நோக்கத்தோடு பொய்பாய் பேசுவார்கள்.

2. ஆடுகளின் மத்தியிலுள்ள ஓநாய்கள் போல் அபாயகரமாகவும், அழிவை உண்டாக்குகிறவர்களாகவும் இருப்பார்கள். புதிய மாமிசத்திற்காக அவர்கள் பசி ஒருபோதும் திருப்திபடையாது.

3. பிசாசின் கருவியாயிருப்பார்கள்.

ஊ. நம்முடைய காலத்தில், இந்த உலகத்தில் சில குறிப்பிடத்தக்க முதன்மையான கள்ளத்தீர்க்கத்தரிசிகள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகள். அவர் திரும்ப வரும்வரை தொடர்ந்து காணப்படும் என்று, கிறிஸ்து நமக்குக் கூறியவைகளிலிருந்து நாம் அறியலாம்.

பொய்த் தீர்க்கதரிசிகள்
மத்தேயு 7:15-23

ஆகவே, "அவர்களைக் குறித்து விழிப்பாயிருங்கள்", என்று இன்றும் உண்மையாக உள்ளது! இது உள்ளூர் சபைக்கும் அப்படியே பொருந்தும்!

2. கள்ளத்தீர்க்கத்தரிசிகளை அவர்களுடைய கனிகளிலிருந்து அறிந்து கொள்ளலாம் (7:16-20).

அ. வசனம் 16 "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" "கனிகள்" என்றால் கிரியைகள் என்று பொருள்படும். கள்ளத்தீர்க்கதரிசியினுடைய காணக்கூடிய அவனுடைய நடத்தை, மற்றும் போதனைகள், அவற்றை உண்டாக்கும், அவனுடைய வாழ்க்கையில் கிரியை செய்யும் பொல்லாதவல்லமைக்கு ஒப்பாக இருக்கும்.

ஆ. கள்ளத்தீர்க்கத்தரிசிகளை நாம் இனம் கண்டறியலாம் என்று கிறிஸ்து கூறியிருக்கிறார்! அவர்களுடைய நடத்தையும், போதனைகளும், முதல் நோக்கில் உண்மையை ஒத்திருக்கும். ஆனால், நெருங்கிக் கூர்ந்து பார்ப்போமானால், அவர்களுடைய உண்மையான நடத்தைப் பண்பையும், தவறான போதனைகளையும் இனங்கண்டு, அவர்கள் உண்மையில் எப்படிப்பட்டவர்கள் என்பதை வெளிப்படுத்திவிடலாம்.

இ. வசனம் 16-18 "முட்செடிகளில் திராட்சைப் பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?" திட்டமாக "இல்லை" என்பதே பதில். ஆகவே ஒரு கள்ளத்தீர்க்கத்தரிசி நல்ல கனிகளைக் கொடுக்க முடியாது.

அவனைப் பின்பற்றுகிறவர்களும், நடத்தையிலும், போதனையிலும் அவனைப்போல்தான் இருப்பார்கள். அவர்கள் வேதவாக்கியங்களின் சன்மார்க்க போதனைகளையும் கிறிஸ்தவ விசுவாசத்தையும் பற்றிக்கொள்ளுகிறவர்களாயிருக்க மாட்டார்கள்.

ஈ. வசனம் 19 "நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" கெட்ட கனிகளைக் கொடுக்கிற மரங்கள் வியாதிப்பட்டு மரிக்கிறதாயிருக்கும். அவைகள் நீக்கப்படாவிட்டால், அருகிலுள்ள மற்ற அநேக மரங்களுக்கும் வியாதி தொற்றும்படியாகச் செய்வதுடன், அதைச் சூழ்ந்துள்ள மற்ற நல்ல மரங்களையும் அவற்றின் தன்மையுடன் இருக்குமோ என்று சந்தேகப்படும்படியாகச் செய்கிறது. இக்காரணத்தினால்தான் அவைகள் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படவேண்டும்.

உ. நாம் கள்ளத் தீர்க்கதரிசிகளையும், அவர்கள் போதனைகளையும் யாவரும் அறிய வெளியே கொண்டு வந்து, சபையிலிருந்து அகற்றிவிட்டு மற்ற விசுவாசிகள் அவர்களை விட்டு விலகியிருக்கும்படி செய்ய வேண்டும். மந்தையிலுள்ள மற்ற ஆடுகள் வியாதிப்பட்டு மரிப்பதையும், எரியும் அக்கினிக் கடலில் தள்ளப்படுவதையும் பார்த்துக்கொண்டிருக்க நாம் விரும்பவில்லை. (2 பேதுரு 2:3-4,9,17 வெளிப்படுத்தின விசேஷம் 2:14-15,20) இது, ஒரு மேய்ப்பன் எப்போதும் செய்கிற, முடிவுபெறாத ஒரு வேலை (சங்கீதம் 23:4, அப்போஸ்தலர் 20:29-31, 1 தீமோத்தேயு 4:16, வெளிப்படுத்தின விசேஷம் 2:2).

3. கள்ளத்தீர்க்கதரிசிகள் தேவனுடைய சித்தத்தைச் செய்யமாட்டார்கள் (7:21-23).

அ. வசனம் 21 "என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை"

பொய்த் தீர்க்கதரிசிகள்
மத்தேயு 7:15-23

கள்ளத்தீர்க்கதரிசிகளையும், அவர்களைப் பின்பற்றி செல்லுபவர்களையும் (கனி), அவர்கள் எந்தவிதமான வாழ்க்கை வாழுகிறார்கள் என்பதிலிருந்தும் அவர்கள் போதிக்கும் காரியங்களிலிருந்தும் நாம் அவர்களை இனங்காண முடிவது மட்டும் அல்லாமல், நியாயத்தீர்ப்பு நாளில் கிறிஸ்துவும் அவர்களை இனங்கண்டுகொள்ளுவார். அவர்கள் "கர்த்தாவே, கர்த்தாவே" என்று கூறலாம். ஆனால் அவர்கள், கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு அரசாட்சி மற்றும் புதிய எருசலேமிலும் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்!

ஆ. வசனம் 21 "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே....." பிதாவின் சித்தம் என்ன?:

1. இயேசுவானவரை விசுவாசித்து நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2. இயேசுவிடம் வந்த ஒருவரும், பொல்லாங்கன் மூலமாய் இழக்கப்படக்கூடாது. (யோவான் 6:39-40)

இ. "சித்தம்" என்பது, ஒரு தீர்மானம் செய்வதற்கு மனதை இசைந்து கொடுக்கச் செய்வது, ஒரு காரியத்தைத் தேர்ந்தெடுக்க நம்மெல்லாருக்கும் கொடுக்கப்பட்ட சுதந்திரம். இரட்சிப்புக்கு இயேசுவை விசுவாசித்து, தேவ கோபாக்கினையிலிருந்து விடுவிப்பதே, "பிதாவின் சித்தப்படி செய்வது". இந்த வாழ்நாள் காலத்தில் தேவனால் ஆளுகை செய்யப்பட்டு, முடிவில், இப்பொழுது எல்லா அதிகாரத்தோடும், வல்லமையோடும் கிறிஸ்து அரசாட்சி செய்து கொண்டிருக்கும் பரலோகத்தில் பிரவேசிப்பார்கள்.

ஈ. வசனம் 22. "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே!..." அந்த "அநேகர்" என்று சொல்லப்படுகிறவர்கள், கள்ளத்தீர்க்கதரிசிகளும் அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் மற்றும் இரட்சிப்புக்கு இயேசுவின் மீது விசுவாசம் வைப்பதைத் தெரிந்து கொள்ளாதவர்களுமே. நியாயத்தீர்ப்புக்காக அவர் முன் நிற்கும் போது, "கர்த்தாவே, கர்த்தாவே, (மிக உருக்கமான வேண்டுகோள்) நாங்கள் கீழ்க்கண்ட காரியங்களைச் செய்யவில்லையா?

1. உமது நாமத்தினால் தீர்க்கதரிசனம் உரைத்தோமல்லவா?

2. பிசாசுகளை உமது நாமத்தினால் விரட்டினோம் அல்லவா?

3. அநேக அற்புதங்களை உமது நாமத்தினால் செய்தோம் அல்லவா? என்று கூறுவார்கள்.

உ. அநேகர் வஞ்சிக்கப்படுகின்றனர். இவர்கள் தாங்கள் இடுக்கமான வாசல் வழியாகப் பிரவேசித்து நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும் குறுகலான பாதையில் நடப்பதாக நம்புகின்றனர், ஆனால் உண்மையில், அது சரியல்ல. இவர்கள் மார்க்க சம்பந்தமான சொற்தொடர்களை அறிந்திருக்கிறார்கள், சரியான கொள்கைகள் திரும்பத் திரும்பக் கூறுவார்கள், விசுவாசப் பிரமாணத்தை திருப்பித் திருப்பிச் சொல்வார்கள், பக்தி சம்பந்தமான காரியங்களில் சுறுசுறுப்பாக ஈடுபடுவார்கள். ஆனால், கிறிஸ்துவைத் தங்கள் சொந்த கர்த்தாவாகவும், இரட்சகராகவும் அறிந்திருக்க மாட்டார்கள்.

ஊ. இரட்சிப்பு என்பது, சரியான சில காரியங்களை மட்டும் கூறுவதற்கு மேலாக இன்னும் முக்கியமானவைகள் உண்டு. ஒருவன், தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறந்து,

பொய்த் தீர்க்கதரிசிகள்
மத்தேயு 7:15-23

உள்ளத்தில் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்க்கை வாழ வேண்டும். (யோவான் 16:8-11; 3:3-8; ரோமர் 8:3-4,9; கலாத்தியர் 5:16,22-25; தீத்து 2:11-12) அத்துடன், அவன் இருதயத்திலிருந்து விசுவாசிக்க வேண்டும். (ரோமர் 10:9; மாற்கு 7:6) பவுல் இவ்வாறு கூறுகிறார்: "கிறிஸ்து இயேசுவுக்குள்... (தேவனுடன்) புது சிருஷ்டியே காரியம் (வாழுவது) (கலாத்தியர் 6:15; 2கொரிந்தியர் 5:17).

எ. வசனம் 23. "அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை... என்னை விட்டு அகன்று போங்கள்". கிறிஸ்து, சங்கீதம் 6:8 வசனத்தை இங்கு மேற்கோள்காட்டி பேசுகிறார். அவர் உண்மையிலேயே இதைக் கூறமுடியும். ஏனெனில் அவர்கள் உண்மையிலேயே ஒருபோதும் அறிந்ததில்லை. அவர்கள், தங்களுடைய பாவங்களை மன்னிக்கப்பட அவர், அவர்களுடைய கர்த்தாவும், இரட்சகருமாக இருக்கவேண்டும் என்று ஒருபோதும் அவரிடம் வந்து கேட்கவில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஏவிதலினாலும் வல்லமையினாலும் வாழ்க்கை நடத்தவில்லை. அவர்கள், அவர்களுடன் சேர்ந்து அடி எடுத்து ஒருபோதும் நடக்கவில்லை. (கலாத்தியர் 5:16,25) அவர்கள், இந்த உலகத்தின் இருள் மற்றும் பொல்லாப்பான காரியங்களை சேர்ந்து, தொடர்ந்து கிரியை செய்தனர்.

ஏ. இது, கிறிஸ்துவைத் தங்கள் சொந்த கர்த்தாவாகவும் இரட்சகருமாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத கள்ளத் தீர்க்கதரிசிகளையும், அவர்களைப் பின்பற்றினவர்களும், மற்றும் வேறு அநேக மக்களும் இத்துடன் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முடிவுரை

அ. கள்ளத் தீர்க்கதரிசிகள் ஆட்டுத்தோல் போர்வையில் தோன்றுவார்கள். ஆனால், உள்ளத்தில், சொந்த ஆதாயத்திற்காகவும், அழிப்பதற்காகவும் இருக்கும் பட்சிக்கிற ஓநாய்கள் இருந்தாலும், அவர்களுடைய கனிகளினால், நாம் அவர்களை அறிந்துகொள்ளலாம். அவர்களைப் பின்பற்றுகிறவர்களும், அவர்களைப்போல்தான் இருப்பார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளும், அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் தேவனுடைய சித்தத்தைச் செய்யமாட்டார்கள். அவர்கள் தங்களுடைய இருதயத்தில், கிறிஸ்துவை கர்த்தாவாகவும், இரட்சகருமாய் ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை.

ஆ. நெருக்கமான பாதையில் நடக்கிற விசுவாசிகளும், மற்ற விசுவாசிகளை மேய்ப்பனைப் போல் வழிநடத்த, தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளைக் குறித்தும், அவர்கள் போதனைகளைக் குறித்தும் இடைவிடாமல் விழிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும். கள்ளத்தீர்க்கதரிசிகளின் போதனைகள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டு, கள்ளத்தீர்க்கதரிசிகள் தூக்கியெறியப்பட வேண்டும்.

இ. கிறிஸ்துவின் பக்கமாகத் திரும்பி, அவரைத் தங்களுடைய கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக் கொண்டாலொழிய, பரலோகத்திற்குள் பிரவேசிக்க முடியாத, கள்ளத்தீர்க்கதரிசிகளைப் பின்பற்றுகிற அநேகர் இருக்கிறார்கள். இவர்கள் பக்திமார்க்க சம்பந்தமான கிரியைகள் பலவற்றில் பங்கெடுத்து, சத்திய வார்த்தைகளைப் பேசுவார்கள். ஆனால், கடைசி நியாயத்தீர்ப்பில் கிறிஸ்துவால் புறக்கணிக்கப்படுவார்கள்.

இயேசுவின் உபதேசங்களைக் கேட்பதும், நடைமுறைப்படுத்துவதும் மத்தேயு 7:24-29

முன்னுரை

அ. மலைப் பிரசங்கத்திற்கு முடிவுரையாக, "கட்டடம் கட்டும் இரண்டு மனிதர்களின் உவமானத்தை"க் கூறுகிறார். புத்தியுள்ள கட்டடம் கட்டுபவன், இயேசுவை கர்த்தரும் இரட்சகருமாக விசுவாசித்து ஏற்றுக்கொண்டு, அவருடைய உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்து, இந்த விசுவாசத்தின் மீது கட்டுகிறான். புத்தியற்றவன், கிறிஸ்துவைப் புறக்கணித்து, அஸ்திவாரம் இல்லாமல் கட்டுகிறான்.

ஆ. இந்த உவமானத்தில் அடங்கியுள்ள நித்தியமான சத்தியங்கள், ஆழ்ந்து சிந்தித்து ஆராய்ந்து கொடுக்கப்பட்ட முடிவுரையாக உள்ளது:

1. கிறிஸ்துவை, கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக் கொண்டவர்கள், காலத்தின் முடிவில், திடமான கற்பாறையிலான அஸ்திவாரத்தின் மீது நிற்பார்கள்.

2. கிறிஸ்துவை, கர்த்தரும் இரட்சகருமாக ஏற்க மறுப்பவர்கள், நிற்க அஸ்திவாரமின்றி, கீழே உருண்டு, நித்திய அழிவிற்குள் இழுத்துச் செல்லப்பட்டு விழுவார்கள்.

1. புத்தியுள்ளவன் கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்டு அவைகளைச் செயல்முறைப்படுத்துகிறான். (7:24-25)

அ. வசனம் 24. "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின் படி செய்கிறவன் எவனோ,... "அவருடைய உபதேசங்களை, அவர்கள் வாழ்நாள் முழுவதும் பயிற்சி செய்யவேண்டிய தம்முடைய சீடர்களை, கிறிஸ்து இங்கு குறிப்பிடுகிறார். அவர்கள், தங்களுடைய விசுவாசத்தை அவர் மீது வைத்துள்ளனர். தேவனுடைய ஆவியினால் அவர்களுடைய ஆவி புத்துயிர் பெற்றிருப்பதினால் மற்றவர்களோடு உள்ள அவர்களுடைய தொடர்புகளில் அவருடைய உபதேசங்களை நிறைவேற்ற முடியும். (யோவான் 3:3-8; ரோமர் 8:4)

ஆ. வசனம் 24. "அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனிதனுக்கு ஒப்பிடுவேன்". "புத்தியுள்ள"வன் என்றால், ஞானியைப் போலும், கல்விமானைப் போலும், ஒரு காரியத்தை நன்றாகச் சிந்தித்து செய்வது. மற்றவர்களைப் போல் அல்லாமல், அவனுடைய வீட்டைக் கட்ட கற்பாறையைத் தெரிந்து கொள்ளுவான்.

இ. வசனம் 25 "பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், "புயல்" என்பது, கடைசி நியாயத்தீர்ப்பை சந்தேகமின்றி குறிக்கும், அதாவது வெள்ளை சிம்மாசன நியாயத்தீர்ப்பு (மத்தேயு 7:21-23; வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15)

ஈ. வசனம் 25 "அது விழவில்லை ஏனென்றால், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது". கிறிஸ்துவே (அவருடைய உபதேசங்களும்) "வாழ்க்கையின் கற்பாறையிலான திட அஸ்திபாரம்" மற்றொரு சந்தர்ப்பத்தில், சீமோன் பேதுருவைக்குறித்து கிறிஸ்து இவ்வாறு கூறினார். "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்". (மத்தேயு 16:18)

இயேசுவின் உபதேசங்களைக் கேட்பதும், நடைமுறைப்படுத்துவதும் மத்தேயு 7:24-29

உ. பேதுருவின் விசுவாச அறிக்கையாகிய, "நீரே (இயேசு) ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்பதே சபையின் கற்பாறையான திட அஸ்திவாரம் என்று குறிப்பிடுகிறார். "கற்பாறை" என்பது, இந்த வேத வசனத்தில், "அசைக்கக்கூடாத பெரிய பாறை" என்று பொருள்படும். கிறிஸ்து மற்றும் அவருடைய உபதேசங்களின் மீது அவனுடைய வாழ்க்கையைக் கட்டுகிற எவனுக்கும் அசைக்கமுடியாத (அழிந்து அல்லது விழுந்து போவது) ஓர் அஸ்திபாரம் உண்டு!

ஊ. அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்தியருக்கு எழுதும்போது இவ்வாறு கூறுகிறார், "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது." (1 கொரிந்தியர் 3:11; ஏசாயா 28:16). கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்டு, அதைச் செயல்முறைப்படுத்துகிறவன், அசைக்க முடியாத, கற்பாறையான திட அஸ்திபாரத்தின் மீது நிலை நிறுத்தப்பட்டிருப்பான்!

2. புத்தியில்லாத மனிதன் கிறிஸ்துவின் உபதேசங்களைக்கேட்டும், அவற்றை செயல்முறைப்படுத்த மாட்டான். (7:26-27)

அ. வசனம் 26 "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின் படி செய்யாதிருக்கிறவன் எவனோ..." கிறிஸ்துவின் உபதேசங்கள், விசுவாசத்தையும் பயிற்சியையும் ஒன்றாக சேர்த்து இணைக்கிறது.

கள்ளத்தீர்க்கத்தரிசிகளைக் குறித்த, அவருடைய போதனைகள் எடுத்துக் காட்டுவது போல், அவருடைய வார்த்தைகளைக் கேட்டும், அதைப் பயிற்சி செய்யாதவர்கள், (அதன்படி நடக்காதவர்கள்) அவருடைய உண்மையான சீடர்கள் அல்ல. (மத்தேயு 7:15-23) அவர்களுடைய கெட்ட கனிகள் மூலமாக அவர்களை நாம் கண்டு கொள்ளலாம்.

ஆ. நற்கிரியைகளை நடப்பிப்பது மற்றும் அவருடைய வாழ்க்கையையும், போதனைகளையும் அதிகமதிகமாக உறுதிப்படுத்தும் வாழ்க்கை வாழுவதும், கிறிஸ்துவின் மீது நம்முடைய விசுவாசத்தை வைத்ததின் பலன் ஆகும். (யாக்கோபு 1:22-25; 2:14-20; 2கொரிந்தியர் 3:18; 2பேதுரு 1:5-7). ஒரு சீடன், கிறிஸ்துவினுடைய உபதேசங்களைக் கேட்பதுமட்டுமின்றி, கிறிஸ்துவின் மீது அவனுக்குள்ள விசுவாசத்தின் படி கிரியை நடப்பித்து, அவனுடைய எஜமானானவர் போதித்து, அவனுக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி, கிரியை செய்வான்.

இ. வசனம் 26 "தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்". ஒரு "புத்தியில்லாத" மனிதன் என்பவன், எச்சரிக்கையை குறித்து கவனம் செலுத்தாத மந்தமான முட்டாள். கிறிஸ்துவின் மீது அவனுடைய விசுவாசத்தை அவன் வைக்கவில்லை, ஆகவே அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ள அவனால் முடியாது.

ஈ. மழை காலங்கள் தவிர மற்றகாலங்களில் உலர்ந்திருக்கும் மணற்பாங்கான நதித் திடலில், தன்னுடைய வீட்டைக் கட்டின மனிதனுக்கு இவன் ஒப்பாவான். பாலஸ்தீன நாடு, அமெரிக்கா நாட்டிற்குத் தென் கிழக்குக் கோடியிலிருக்கும் நாடுகளைப் போன்று, இம்மாதிரியான நதிகள் கரைபுரண்டு பாய்ந்து ஓடத்தக்கதாகப் புயலுடன் கூடிய பெருமழை பெய்யும் இடமாக அறியப்படுகிறது.

இயேசுவின் உபதேசங்களைக் கேட்பதும், நடைமுறைப்படுத்துவதும்

மத்தேயு 7:24-29

ஆகவே, இந்த நதிப் படுக்கையிலும், அதன் கரைகளிலும், கட்டடம் கட்டுவது மிகவும் புத்தியில்லாத ஒரு காரியம்.

உ. மழை பெய்யும் போது, நதிகளில் நீர் பெருகும் அத்துடன் பெருங்காற்று அவனுடைய வீட்டின் மீது பலமாக அடிக்க, அது பெருஞ்சத்தத்துடன் கீழே விழுந்துவிடும். கிறிஸ்துவை, கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள், வெள்ளை சிம்மாசன நியாயத்தீர்ப்பில் அவர் முன்பாக நிற்பார்கள். முடிவில், எரியும் அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள். (யோவான் 5:22; வெளிப்படுத்தின விசேஷம் 20:15; எசேக்கியேல் 13:10-16). அவர்கள் இந்த உலகத்தில் இருக்கும்போதும், ஒவ்வொருவரும் சகிக்க வேண்டிய, பெரிய "வாழ்க்கைப்புயலில்" அவர்களைப் பாதுகாக்க அவர் (இயேசு) அவர்களோடு இருக்கமாட்டார்!

3. கிறிஸ்துவின் உபதேசங்கள் அதிகாரத்துடன் கொடுக்கப்பட்டது. (7:28-29)

அ. வசனம் 29. "ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" "ஆச்சரியப்பட்டார்கள்" என்றால்,சொப்பனத்தில் கூட கேட்போம் என்று நினைக்காத காரியங்களைக் கேட்டதினால் ஏற்பட்ட அதிர்ச்சியில் வியந்து மெய்மறந்து நிற்பது.

ஆ. வசனம் 28 "அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால்..." கிறிஸ்து அதிகாரமுடையவராய் போதித்ததே, அவர்களுடைய எல்லா வியப்பிற்கும் காரணம். "அதிகாரம்" என்றால், சிறப்பான தனிப்பட்ட திறன், அதிக சக்தியோடு, தலைமை உணர்வோடு, மிக்க செல்வாக்குடன், மற்றும் வல்லமை, என்று இங்கு பொருள்படும். கிறிஸ்து, தெய்வீக வல்லமையுடைய ஒருவர் பேசுவது போல் மட்டுமல்லாமல், அற்புதங்களை நடப்பித்ததின்மூலம், தமக்கு அது (அந்த அதிகாரம்) உண்டு என்பதை வெளிப்படுத்தினார்!

இ. இயேசுவானவர் உபதேசித்து, ஒரு மனிதனிடமிருந்த அசுத்த ஆவியைத் துரத்தின போது கப்பர்நகூமிலுள்ள மக்களின் உணர்வோடு, இது ஒத்தது. (மாற்கு 1:21-27). யூத அதிகாரிகளும், மூப்பர்களும், வேத பாரகர்களும், இயேசுவைப் பின்பற்றினவர்களும், பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால், அதே அதிகாரத்தோடு பேசுவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டனர். (அப்போஸ்தலர் 4:5-13; வசனம் 8 குறிப்பிடத்தக்கது)

ஈ. வசனம் 29. "அவர் வேதபாரகரைப் போல் போதியாமல்..." வேதபாரகர்கள், நியாயப்பிரமாணத்தை எழுத்தின்படியும், வெளிப்படையான தன்மையின்படியாக எடுத்து, அதை மட்டும் சாதாரணமாக விவரித்துக் கூறி, தங்களுக்குப் போதித்த ஆசிரியர்களின் கூற்றை மேற்கோளாகவும், விளக்கங்களுக்கு அதிகாரம் உடையவர்களாகவும் கூறினார்கள். ஆனால் இயேசுவானவர், பழைய ஏற்பாட்டு வேத வசனங்களுக்கு, சரியான விளக்கத்தையும், முதன்முதலாக அதற்குக் கொடுக்கப்பட்ட நோக்கத்தையும் எடுத்துக் கூறினார். அவர் மற்ற ஆசிரியர்களை மேற்கோளாக எடுத்துக் கூற அவசியமில்லாதபடி, தாமாகவே சொந்தமாக விவரித்துக் கூறினார்!

இயேசுவின் உபதேசங்களைக் கேட்பதும், நடைமுறைப்படுத்துவதும்

மத்தேயு 7:24-29

உ. மலைப் பிரசங்கம் முழுவதிலும் இயேசுவானவர் எடுத்துக்காட்டுகளுடன் விவரித்துக் கூறியது போல, நியாயப் பிரமாணமும், சிந்தனைகளுக்கடுத்த காரியமாகவும், இருதயத்தின் உள் நோக்கத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது. (மத்தேயு 5:21-22, 27-28, 31-32, 33-34, 38-39, 43-44. எபிரெயர் 4:12 பார்க்கவும்)

முடிவுரை

அ. புத்தியுள்ள கட்டடம் கட்டும் மனிதன் இயேசுவைக் கர்த்தராகவும், இரட்சகருமாக ஏற்றுக் கொண்டு, தனக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டு, கிறிஸ்துவின் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறான். புத்தியில்லாத கட்டடம் கட்டுபவனை அடுத்த பக்கம் பார்ப்போமானால், கிறிஸ்துவைப் புறக்கணிக்கிறான். எனவே அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளக் கூடாதவனாயிருக்கிறான்.

ஆ. கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள அல்லது புறக்கணிக்க எடுக்கும் தீர்மானம், நித்தியமான விளைவுகளை உண்டுபண்ணுகிறது. காலங்களின் முடிவில், புத்தியுள்ள கட்டடம் கட்டுபவன், கிறிஸ்துவாகிய கற்பாறையான திட அஸ்திவாரத்தின் மீது நிற்பான். ஆனால், புத்தியற்ற கட்டடம் கட்டுபவன், திடமாக நிற்க ஒன்றுமில்லை. ஏனெனில், மணல் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது.

இ. மலைப்பிரதேசத்தில், அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த அவிசுவாசிகளை, கிறிஸ்து, தம்மைக் கர்த்தாவும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்ள சந்தேகமின்றி அறைகூவி அழைக்கிறார். அவருடைய போதனைகளின் எங்கள் விளக்கக் கட்டுரையும், அவரை (இயேசுவை) கர்த்தரும், இரட்சகருமாக நீ ஏற்றுக் கொள்ள அறைகூவி அழைக்கும் என்று நான் நம்புகிறேன்!

நூற்றுக்கதிபதியின் விசுவாசம்

மத்தேயு 8:5-13

முன்னுரை

அ. இயேசுவைத் தாழ்மையோடும் விசுவாசத்தோடும் மற்றவர்களுக்காக அணுகும்போது அவர்கள் குணமாக்கப்படுவார்கள்.

ஆ. இந்த சம்பவம், லூக்கா சுவிசேஷத்திலும் காணப்படுகிறது. (லூக்கா 7:1-10). இயேசுவானவர்தான் உண்மையான மேசியா மற்றும் தேவனுடைய குமாரன் என்றும், யூதர் மற்றும் புற ஜாதியார் ஆகிய இவர்களில் யாரானாலும், உதவிக்காகக் கூப்பிடும்போது அவர் பதிலளிப்பார் என்றும் காட்டுவதே இந்த அற்புதத்தின் நோக்கம். அவர்கள் அவரைத் தாழ்மையோடும், அவர் தம்மை யாரென்று அழைத்தாரோ அவ்வாறே அவரை விசுவாசித்து, அவரை நெருங்கிச் சேரவேண்டும் என்பவைகளே தேவைப்படும் சில காரியங்கள்.

1. மற்றவர்களுடைய சரீர பிரகாரமான தேவைகளுக்காக இயேசுவை நாம் அணுக முடியும். (8:5-7)

அ. வசனம் 5 "இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்தபோது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து..." "நூற்றுக்கு அதிபதி" என்பவன், நூறு வீரர்கள் அடங்கிய சேனைக்குப் பொறுப்பான அதிகாரி. இயேசுவானவரின் காலத்தில், கப்பர்நகூம் ஒரு முக்கியமான, ரோமரின் போர்க்கருவிகள் பாதுகாப்பாக வைக்கப்படும் பட்டணம்.

ஆகவே அங்கு லெபனான் மற்றும் சிரியா நாடுகளிலிருந்து பயிற்சிக்காக வந்த யூதரல்லாத, புதிய வீரர்கள் அங்கு இருந்திருக்க வாய்ப்பு உண்டு.

ஆ. இயேசுவினுடைய நாட்களில் ஒரு புறஜாதியான், உதவிக்காக ஒரு யூதனை அணுகுவது என்பது கேள்விப்படாத ஒரு காரியம். புறஜாதியார், பரிசுத்தம் இல்லாதவர்கள், அசுத்தமானவர்கள் என்று யூதர்களால் கருதப்பட்டனர். ஆகவே சமுதாயத்தில் நெருங்கிச் சேரக் கூடாதவர்கள். எனவே யூதர்கள் அவர்களை அசட்டை செய்து, வெறுத்து, வெளிப்படையாகப் புறக்கணித்தனர். அவர்களுக்கு (புறஜாதியாருக்கு) உதவி தேவைப்படும் போது, திட்டமாக அவர்களுக்கு உதவி செய்யமாட்டார்கள். (லூக்கா 10:30-32)

இ. "அவரிடம் (உதவிக்காக) வந்து" என்றால், அந்த நூற்றுக்கு அதிபதி, இயேசு தனக்கு அருகில் வரவேண்டும் என்று அவரை நோக்கிக் கூப்பிட்டான், மிக வருந்தத்தக்க, நம்பிக்கையிழந்த நிலைமையில் இருந்ததினால் இயேசுவை நோக்கிக் கூப்பிட்டான், உதவிபெற்று ஆறுதல் அடையும்படியாக இயேசுவை நோக்கிக் கூப்பிட்டான், என்று பொருள்படும். லூக்கா எழுதின வரலாற்றில், நூற்றுக்கு அதிபதியின் சிநேகிதர்கள், அவனுக்காக, இயேசுவிடம் உதவிகேட்டு வந்தனர் என்று கூறப்பட்டுள்ளது. (லூக்கா 7:1-5)

ஈ. வசனம் 6 "ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே, திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான்". நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன், அவனுடைய வீட்டிலே திமிர்வாதமாய்க் கொடிய வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறான்.

நூற்றுக்கதிபதியின் விசுவாசம்

மத்தேயு 8:5-13

இயேசுவை "ஆண்டவரே" என்று கூப்பிட்டுக் கிட்டிச் சேர்கிறான், என்றால் உன்னதமான அதிகாரத்தையுடைய ஒருவர், அநேகமானவற்றின் மீது வல்லமையாக ஆளுகை செய்பவர் என்று இங்கு பொருள்படும். தேவன் அல்லது எஜமானானவர் என்றும் பொருள்படலாம். நூற்றுக்கு அதிபதி, தன்னுடைய தேவையை சந்திக்கக்கூடிய ஒருவரிடம் நெருங்கிச் சேர்வதைப்போல், அணுகுகிறான்!

உ. வசனம் 7 "அதற்கு இயேசு, நான் வந்து அவனைக் குணமாக்குவேன்" என்றார். இயேசுவின் இந்த பதிலை, அநேகர் ஓர் கேள்வியாக, பொருள் விளக்கம் கூறுகின்றனர்: "யூதனாகிய நான் வந்து அவனைச் சுகப்படுத்தலாமா?" புறஜாதியானான நூற்றுக்கு அதிபதி, யூதர் ஒருவரை அணுகுகிறான் என்று அறியப்பட்டிருப்பதின் அடிப்படையில், இது ஒரு சமயம் சரியாக இருக்கக்கூடும்.

ஊ. கிறிஸ்து நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைப் பரீட்சித்துப் பார்க்கிறார். அவரை வேண்டிக் கொண்டபடி, தாம் செய்யும்படியாக, அந்த நூற்றுக்கு அதிபதி, தன்னுடைய விசுவாசத்தை அறிக்கை செய்யும்படியாக அவர் முயற்சி செய்தார். இயேசு இங்கு பட்சபாதமாக இருக்கவில்லை. மாறாக, மனிதர்களிடத்தில் தேவனுடைய பட்சபாதமற்ற கிருபையை வெளிப்படுத்துகிறார். (ரோமர் 2:9-11, 10:12; அப்போஸ்தலர் 10:34-35).

2. நாம், இயேசுவைத் தாழ்மையோடும் விசுவாசத்தோடும், மற்றவர்களுக்காகக் கிட்டிச் சேரவேண்டும். (8:8-9)

அ. வசனம் 8 "நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக, ஆண்டவரே! நீர் என் வீட்டிற்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல." "பாத்திரன் அல்ல" என்றால் நடத்தையிலும், சமுதாய நிலையிலும் குறைவுள்ளவன் என்பதை, உணர்ந்து கூறுகிறான் என்று உண்மையில் பொருள்படும். நூற்றுக்கு அதிபதி, தன்னுடைய அதிகாரத்தையும், இயேசுவானவரின் உன்னதமான அதிகாரத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இயேசு, அவன் முன்னிலையில் அல்லது அவனுடைய வீட்டிற்கு வரத் தான் தகுதியற்றவன் என்று உள்ளத்தில் உணர்கிறான்.

ஆ. இயேசு, தண்ணீரில் ஞானஸ்நானம் பெறும்படியாக, யோர்தான் நதிக்கு யோவானிடம் வந்தபோது, அவன் தாழ்மையுடன் தன்னுடைய தகுதியற்றத் தன்மையை அறிக்கையிட்டதை, இது ஒத்தது. (மத்தேயு 3:13-14) மற்றொரு சந்தர்ப்பத்தில் யோவான், தான் அவருடைய "பாதரட்சைகளின் வாரை அவிழ்ப்பதற்குக்கூட தகுதியற்றவன்" என்று கூறினான். (லூக்கா 3:16) ஒரு மாணவனுடைய மதிப்பிற்கும் கீழ்த்தரமாகக் கருதப்பட்ட ஒரு வேலை.

இ. வசனம் 8. "ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் குணமாவான். நூற்றுக்கு அதிபதியின் விசுவாசம் வியப்பிற்குரியது. அவன், யூதர்களின் மார்க்கப் பரம்பரையில் வராத ஒரு கிரேக்கன். இயேசுவானவர் தம்மைப் பற்றிக் கூறியதுபோல், பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட மேசியாவைப் பற்றி அறியாதவன் இருந்தபோதிலும், இயேசுவின் மிக உன்னத அதிகாரத்தையும், வல்லமையையும் கண்டறிகிறான்.

நூற்றுக்கதிபதியின் விசுவாசம்

மத்தேயு 8:5-13

எந்தவிதமான சடங்காச்சாரக் கிரியைகளோ, மந்திரவாதமோ அல்லது வேறு ஏதாவது சக்தியோ அல்லது அதிகாரமோ, அவனது வேலைக்காரனைச் சுகமாக்க இயேசுவுக்குத் தேவையில்லை என்பதை அவன் அறிந்திருந்தான். இயேசு, சாதாரணமாக ஒரு வார்த்தை சொன்னால் போதும் அவனுடைய வேலைக்காரன் சுகமடைவான்!

ஈ. இது, ஆதியாகமத்தில் படைப்பைப் பற்றிய சம்பவத்தைப் போன்றது. "தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று". (ஆதியாகமம் 1:3,6,9,11,14-15,20-24). இயேசு, பிதா மற்றும் பரிசுத்த ஆவியானவருடன் சேர்ந்து, வானத்தையும், பூமியையும் மற்றும் அதிலுள்ள யாவற்றையும் ஒன்றுமில்லாமையிலிருந்து சிருஷ்டித்தார். அவர், எந்தவிதமான முயற்சியும் இல்லாமல் சாதாரணமாகப் பேசுவதன் மூலம் உண்டாக்கினார்! (யோவான் 1:3; கொலோசெயர் 1:16). அவ்வண்ணமாகவே, இயேசுவுக்கு சாதாரணமாக வார்த்தைகளைப் பேசினால் அவனுடைய வேலைக்காரனை சுகமாக்கக்கூடிய அதிகாரம் இயேசுவுக்கு இருந்ததென்று நூற்றுக்கு அதிபதி அறிந்திருந்தான்!

உ. வசனம் 9 "நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு..." இது, கீழ்க்கண்டவாறு மொழியாக்கம் செய்யப்பட்டால் தெளிவாக விளங்கும்: "இதைச் செய்ய உம்மால் கூடும் என்று நான் அறிவேன், ஏனெனில் நானும், எனக்குக் கீழ் வீரர்கள் உள்ள ஒரு தலைவன்..." நூற்றுக்கு அதிபதி கீழ்க்கண்ட காரியங்களை அறிந்திருந்தான்:

1. தங்களுக்குக் கீழ் உள்ளவர்கள் மீது ஒருவருக்கு அதிகாரமும் வல்லமையும் உண்டு என்பதை அறிந்திருந்தான்.

2. ரோமர்களின் பயிற்சி சேனை அதிகாரியாக, அவனுடைய சொந்த அனுபவத்தின் மூலமாக இதை அறிந்திருந்தான்.

3. அவனுக்குக் கீழ் உள்ள 100 வீரர்களிடம், தான் என்ன செய்ய விரும்பி அவர்களுக்குக் கூறுகிறானோ அதை அவர்கள் தவறாது செய்தனர்.

4. அவனுடைய எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும் வேலைக்காரர்களும் அவனுக்கு உண்டு! அவ்வாறே படைப்பின் முழுமையின் மீதும் மிக உன்னத அதிகாரமுடைய, இயேசுவானவர் ஒரு வார்த்தை சாதாரணமாகக் கூறினாலே, நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சுகமடைவான்!

3. தாழ்மையோடும் விசுவாசத்தோடும், மற்றவர்களுக்காக நாம் இயேசுவை அணுகும்போது, அவர்கள் குணமாக்கப்படுவார்கள். (8:10-13)

அ. வசனம் 10 "இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு..." நூற்றுக்கு அதிபதியின் சிறுகுழந்தைக்கு ஒத்த விசுவாசம், இயேசுவை வியப்பில் ஆழ்த்தியது. இயேசு, நூற்றுக்கு அதிபதியை அதிகம் பாராட்டினார் என்று இது பொருள்படும். அவர்மீது முழு விசுவாசம் வைத்து கூறிய வார்த்தைகளைக் கேட்டு இயேசுவானவர் ஆச்சரியப்பட்டு, வியப்பெய்தினார்.

ஆ. வசனம் 10. "இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்".

நூற்றுக்கதிபதியின் விசுவாசம்

மத்தேயு 8:5-13

அவருடைய காலத்திலிருந்த எந்த யூதனைக் காட்டிலும், இந்த புறஜாதியானான, ரோம வீரன், இயேசுவின் இருதயத்தை ஊடுருவிச் சென்று ஆழமாகத் தொட்டான்! (மற்றொரு, ரோம நூற்றுக்கு அதிபதியைப் பற்றிய சம்பவத்தையும் அப்போஸ்தலர் 10:1-8, 30:33 வசனங்களில் பார்க்கவும்)

இ. வசனம் 11. "அநேகர் கிழக்கிலும், மேற்கிலுமிருந்து வந்து, பரலோக ராஜ்ஜியத்தில், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்" "அநேகர்" என்பது, எல்லா யூதரல்லாத புறஜாதியாரைக் குறிக்கும். கலாத்தியர் 3:14, ரோமர் 4:9, 11-12, 16) "கிழக்கிலும் மேற்கிலுமிருந்து" என்பது பூமியின் பரப்பு முழுவதிலுமிருந்து என்று பொருள்படும்.

ஈ. "தேவனுடைய ராஜ்ஜியத்தில், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்". இது காலத்தின் முடிவில், "மேசியாவின் பெரிய விருந்தை"க் குறிக்கும். (மத்தேயு 22:1-14, 25:10, 26:29; ஏசாயா 25:6-9, 65:13-14) ஏழுவருட உபத்திரவ காலங்களின் முடிவில், அந்திக்கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தையும், ஆளுகையையும் கிறிஸ்து அழித்து, அவருடைய 1,000 வருட அரசாட்சியை நிலைநாட்டி, அவருடைய பரிசுத்தவான்களோடு எருசலேமிலிருந்து அரசாட்சி செய்யும் போது, இது நடைபெறும்.

உ. வசனம் 12 "இராஜ்ஜியத்தின் புத்திரரோ, புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள், அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்..." "இராஜ்ஜியத்தின் புத்திரர்" என்பவர்கள், இயேசுவின் மீது விசுவாசம் வைக்க மறுக்கும் யூதர்கள். அவர்கள், மேசியாவின் "பெரிய விருந்திலிருந்தும்", கிறிஸ்துவின் இராஜ்ஜியத்திலிருந்தும், புதிய எருசலேமிலிருந்தும், புதிய வானத்திலிருந்தும், புதிய பூமியிலிருந்தும் தள்ளப்படுவார்கள்! (லூக்கா 13:28-29, ரோமர் 9:30-33, வெளிப்படுத்தின விசேஷம் 21:8, 22:15). "புறம்பான இருளில்... அங்கே அழுகையும், பற்கடிப்பும் இருக்கும்" இது, விவரிக்கப்பட்டுள்ள நித்திய நரக வேதனையின் ஒரு பாகம். (2 தெசலோனிக்கேயர் 1:9; 2பேதுரு 2:17; மத்தேயு 13:42)

ஊ. வசனம் 13. "பின்பு, இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் குணமானான்". முதலாவது யூதருக்கும், இரண்டாவதாக புறஜாதியாருக்கும், கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்காததின் விளைவாக பயங்கரமான முடிவு உண்டாகும். ஆனால் தாழ்மையுடன் அவரைக் கிட்டிச் சேர்ந்து அவர் மீது தங்களுடைய விசுவாசத்தை வைப்பவர்களுக்கு மிகுந்த பலன் கிடைக்கும்! நம்முடைய இன்றைய தேவைகளை அவர் சந்திப்பதுமல்லாமல், அது, (அவரில் விசுவாசம் வைப்பது) அவருடைய நித்திய இராஜ்ஜியத்தில் நமக்கொரு இடத்தை ஆயத்தம் செய்கிறது! நூற்றுக்கு அதிபதியைப் போல், நாமும் அவரிடம் எதிர்பார்ப்பவைகளைப் பெற்றுக் கொள்வோம். அத்துடன், அவற்றை நமக்குக் கொடுக்க அவருக்கு வல்லமையும், அதிகாரமும் உண்டு என்பதை விசுவாசிக்கிறோம்!

இயேசுவின் சுகமளிக்கும் ஊழியம்
மத்தேயு 8:14-17

முன்னுரை

அ. மத்தேயு மற்றும் மார்க்கு எழுதின சுவிசேஷங்களில், இச்சம்பவம், ஓர் ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலிருந்த ஒரு மனிதனிடமிருந்து பிசாசைத் துரத்தினபின் தொடர்ந்து காணப்படுகிறது. மானிடரின் சரீரத்தை வேதனைப்படுத்தும் பிணிகள் மற்றும் நோய்கள் மீது இயேசுவுக்கு இருந்த, மிக உன்னத அதிகாரத்தை வெளிப்படுத்துவதே, இந்த வேதபாகத்தின் நோக்கம். இது, பிசாசுகளின் (பொல்லாத அசுத்த) ஆவிகளின் மீதும், அவருடைய மிக உன்னத அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது.அவர்,செய்ய நினைத்த நோக்கத்தை உடனடியாக நிறைவேற்றுகிறார்.

1. இயேசுவின் சுகமளிக்கும் ஊழியம், அவருடைய சீடர்களையும் அவர்கள் குடும்பங்களையும் உள்ளடக்கும் (8:14-15)

அ. வசனம் 14. "இயேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி ஜுரமாய்க் கிடக்கிறதைக் கண்டார்". கடற்கரைப் பட்டணமாகிய கப்பர்நகூமில், (கலிலேயாக் கடலின் வடகரை) பேதுருவுக்குச் சொந்தமான வீடு இருந்ததைக் காணுவது, ஆர்வத்தை மூட்டுவதாக உள்ளது. கலிலேயா பிரதேசத்தில் அவர் ஊழியம் செய்து கொண்டிருந்த காலத்தில், இயேசுவும் மற்ற பன்னிரண்டு பேர்களும், ஒருவேளை, இங்குதான் தங்கியிருந்திருக்க வேண்டும்' (மார்க்கு 9:33,35)

இ. பேதுரு திருமணமாகி, அவனுடைய சகோதரனாகிய அந்திரேயாவுடன் பெத்சாய்தா ஊரில் திட்டமாக வாழ்ந்திருக்க வேண்டும்.

ஆ. ஆனால் இப்பொழுது, சமீப காலத்தில், அவனுடன் சேர்ந்து, கப்பர்நகூமிற்கு வந்து தங்கியிருக்க வேண்டும். (1கொரிந்தியர் 9:5; யோவான் 1:44; மார்க்கு 1:29) இயேசுவோடும் அவருடைய ஊழியத்தோடும் அவர்கள் நெருங்கியிருப்பதற்காக, அவர்கள் இக்காரியத்தை ஒரு சமயம் செய்திருக்கக்கூடும். (மத்தேயு 4:13) மத்தேயுவும், மார்க்கும் இதை இயேசுவின் பட்டணத்திலிருந்த வீடு என்று அறியப்பட்டிருந்ததாகக் கூறுகிறார்கள். (மத்தேயு 9:1; மார்க்கு 2:1)

இ. இந்த விரிவாக்கப்பட்ட குடும்பம் (இயேசுவும் அவருடைய சீடர்களும்) ஒன்று பேதுருவோடும் அவன் மனைவியோடும் வாழ்ந்திருக்க வேண்டும் அல்லது அவர்கள் அடிக்கடி வந்து கொண்டிருக்கும் விருந்தினர்களாகவும் இருந்திருக்கலாம் என்றும் இந்த வேதபாகம் நமக்கு வெளிப்படுத்துகிறது. ஆதி திருச்சபையில், இது சந்தேகமின்றி சாதாரணமாக நடக்கக்கூடிய ஒரு காரியம்.

ஈ. "ஜுரம்" என்றால் இங்கு கூறப்பட்டிருப்பது போல், உடலில், அதிகரித்த வெப்பத்தால், நெருப்பின் மீது இருப்பது போன்ற நிலை, மிக உயர்ந்த காய்ச்சல். இது மிக உக்கிரமாக இருந்ததினால், பேதுருவின் மாமி, படுக்கையில் நிலையாகப் படுத்திருக்க வேண்டியிருந்தது. அவள் நல்ல சுகமாக இருந்திருந்தால், நாம் பார்ப்பதுபோல், அவள் எழுந்திருந்து உதவி செய்பவளாக இருப்பாள்.

இயேசுவின் சுகமளிக்கும் ஊழியம்

மத்தேயு 8:14-17

உ. வசனம் 15 "அவர், அவள் கையை தொட்டவுடனேயே, ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று". இயேசுவானவர் பேதுருவின் மாமிக்கு ஜெபித்ததாக இந்த வேதவசனங்களில் கூறப்படவில்லை என்பதைப் பார்க்கும்போது, மனக்கிளர்ச்சியை உண்டாக்குகிறது. மற்ற சந்தர்ப்பங்களில் முடமானவன், வியாதிப்பட்டவன் ஆகிய இவர்களைப்போல் அவர் தொட்ட மாத்திரத்தில், அவள் ஜுரம் நீங்கிப்போயிற்று. (8:3, 9:29,17:7, 20:34; மாற்கு 7:33; லூக்கா 22:51 மற்றும் மத்தேயு 9:20, 14:36 வசனங்களையும் பார்க்கவும்)

பேதுருவின் மாமியின் உடல் வெப்பநிலை இயல்பான நிலைக்கு வந்தது. (முதிர்ச்சியடைந்தவர்களுக்கு இது அநேகமாக 98.6 டிகிரி பாரன்ஹூட் (FAHRENHEIT) அவள் சரீரத்திலிருந்த தீ வெப்பம் மறைந்துவிட்டது.

ஊ. வசனம் 15. "அவள் எழுந்திருந்து, அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்". இது உண்மையிலேயே உடனடியாக சுகமாக்கப்படுவது. சில நேரங்களில், ஜெபித்து ஒரு தடவைக்கு மேல், தொட்டபின்பே தெய்வீக சுகம் கிடைக்கிறது (மாற்கு 8:22-25). இந்த சந்தர்ப்பத்தில் எப்படியும், இயேசு, அவளைத் தொட்டதற்கும், அவள் குணமடைவதற்கும் இடையே, சிறிது நேரமும் கடந்து செல்லவில்லை. அவள் எழும்புவதற்கும், அவளுடைய அநுதின வேலைகளைச் செய்வதற்கும், அவர் மறுபடியும் தொடவேண்டிய அவசியம் இல்லை. பேதுருவின் மாமியின் சரீரபிரகாரமான சுகவீனம், இயேசு தொட்டவுடன் நீங்கிப் போயிற்று என்பது மறுக்கமுடியாத உண்மை என்று இந்த சம்பவம் நிரூபிக்கிறது.

எ. "எழுந்திருந்து" என்றால் வியாதியினால் படுக்கையில் இருந்து, எழும்பி நிற்பது. "அவர்களுக்குப் பணிவிடை செய்தாள் என்றால், இயேசுவின் சரீர தேவைகளுக்காக வேலை செய்தாள் என்று பொருள்படும். அவள் விருந்தளிப்பவளாகமாறி,வீட்டிலுள்ளவிருந்தினருக்கு செய்யவேண்டிய எல்லா தேவைகளுக்காகவும், அவருக்கு பணிவிடை செய்தாள்.

2. இயேசுவின் குணமளிக்கும் ஊழியம், வியாதிப்பட்டவர்களையும், பிசாசினால் பிடிக்கப்பட்டவர்களையும்,உள்ளடக்கும். (8:16)

அ. "பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி,..." "துரத்தி" பிசாசுகள் (பொல்லாத ஆவிகள்) சக்திபுடன் வெளியேற்றப்பட்டன, துரத்திவிடப் பட்டன, வெளிச்செல்லும்படி தூக்கியெறியப்பட்டன, வெளியே அனுப்பிவிடப்பட்டன என்று இது பொருள்படும்.

ஆ. "தமது வார்த்தையினாலே" என்றால் இயேசு, பிசாசுகளிடம் பேசினார். (ஏதோ சில காரியங்களைக் கூறினார்; சில வார்த்தைகளை மொழிந்தார்; கட்டளையிட்டார்) உடனடியாக அவைகளால் கட்டுண்டவர்களிடமிருந்து, அவைகள் நீங்கிப்போயின.(8:32,17:18வசனங்களையும் பார்க்கவும்)

இ."பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்". "பிணியாளிகள்" என்றால் வியாதிபஸ்தர்கள், சரீரபிரகாரமாக துன்பப்படுபவர்கள். "சொஸ்தமாக்கினார்" என்றால், சுகமில்லாமல் இருந்தவர்களை விடுவிப்பது, அவர்களை முற்றிலும் குணமாக்குவது. "எல்லாரையும்" என்றால், யாராயிருப்பினும், நோயுற்ற ஒவ்வொருவரையும் எத்தனை பேர் இருந்தாலும், எவராக இருப்பினும், கூட்டத்திலிருந்தவர்கள் மொத்தமாக, என்று பொருள்படும். சரீரத்தில் துன்பப்பட்ட அல்லது நோயுற்று, அங்கிருந்த ஒவ்வொருவரையும் இயேசுவானவர் குணமாக்கினார்.

இயேசுவின் சுகமளிக்கும் ஊழியம்
மத்தேயு 8:14-17

3. இயேசுவின் சுகமளிக்கும் ஊழியம், பழையஏற்பாட்டுதீர்க்கதரிசனத்தின் ஒரு நிறைவேறுதல் (8:17).

அ. "ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது". "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்", (ஏசாயா 53:4-5) என்று அவர் கூறும்போது, ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தின் முழு நோக்கத்தையும், இந்த சுவிசேஷத்தை எழுதியவர் உறுதிப்படுத்துகிறார். பிராயச்சித்த பலியாகிய இயேசு, பாடுகளை அனுபவிக்கும் தேவனுடைய தாசன், சுகமற்ற, வியாதிப்பட்ட சரீரங்களுக்கு தெய்வீக சுகத்தையும், அவ்வாறே பாவமன்னிப்பையும் அருளிச் செய்கிறார். ஆகவே, தெய்வீக சுகமளிப்பது, சுவிசேஷத்தின் ஒரு முக்கிய பாகம்.

ஆ. "பலவீனங்கள்" என்ற சொல், சரீரம் அல்லது மனதில், தளர்ச்சியடைவது, ஒரு நோய், வியாதி அல்லது பலம் இல்லாமல் திறனற்றுக் காணப்படுவது என்று பொருள்படும். "நோய்கள்" என்றால், வியாதி அல்லது சுகவீனம், ஒரு சரீர திறனற்ற நிலை என்று பொருள்படும். பலவீனங்கள் பலவற்றோடு அங்கிருந்த யாவரையும், இயல்பான முறைகள் அல்லது வழிகளைப் பயன்படுத்தாமல், இயேசு குணமாக்கினார். அதாவது, வியாதிப்பட்டவர்களுக்கும், சுகமில்லாதவர்களுக்கும் விடுதலையளித்து, நோய்களையும், சுகவீனங்களையும் குணமாக்கினார்.

இ. இயேசு அவருடைய பூலோக ஊழியத்தில்கீழ்க்கண்டவர்களைக் குணமாக்கினார்:

1. குஷ்டரோகமுள்ள மனிதன் (மத்தேயு 8:2-4)
2. நூற்றுக்கு அதிபதியின்வேலைக்காரன் (8:5-13)
3. பேதுருவின் மாமி (8:14-15)
4. கெர்கெசேனர் நாட்டிலிருந்த இரண்டு மனிதர் (8:28-34)
5. திமிர்வாதக்காரன் (9:2-7)
6. பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ (9:20-22).
7. இரண்டு குருடர் (9:27-31)
8. பிசாசுபிடித்த, ஊமையுமான மனிதன் (9:32-33)
9. சூம்பின கையுடையவன் (12:10-13).
10. பிசாசுபிடித்த, குருடும் ஊமையுமான மனிதன் (12:22)
11. கானானிய ஸ்திரீயின் குமாரத்தி (15:21-28)
12. பிசாசுபிடித்த சிறுவன் (17:14-18)
13. இரண்டு குருடர் (20:29-34)
14. ஊமையும் செவிடுமானவன் (மாற்கு 7:31-37)
15. பிசாசுபிடித்த மனிதன் (1:23-36)
16. பெத்சாய்தாவிலுள்ள ஒரு குருடன் (8:22-26)
17. கூனியான ஒரு பெண் (லூக்கா 13:11-13).
18. நீர்க்கோர்வை வியாதியுள்ள ஒரு மனிதன் (14:1-4).

இயேசுவின் சுகமளிக்கும் ஊழியம் மத்தேயு 8:14-17

19. பத்து குஷ்டரோகிகள் (17:11-19)

20. கப்பர் நகூமில் இராஜாவின் மனிதரில் ஒருவனுடைய குமாரன் (யோவான் 4:46-54)

21. பெதஸ்தா குளத்தண்டையிருந்த வியாதியஸ்தன் (5:1-9).

ஈ. இயேசு, மரித்தவர்களையும் திரும்ப உயிரோடு எழுப்பியிருக்கிறார். யவீருடைய மகள் (மத்தேயு 9:18-19) மற்றும் நாயீனூர் விதவையின் மகன் (லூக்கா 7:11-15), அத்துடன் அவருடைய பிரிய நண்பன் லாசரு, (யோவான் 11:1-44) ஆகியவர்களை, உயிரோடு எழுப்பினார்.

உ. எப்படியிருந்தபோதிலும், இந்த சுகமளிக்கும் ஊழியம், ஆதி திருச்சபையிலும் தொடர்ந்து இருந்தது என்பதை நீ கவனிக்க வேண்டும் என்பதே என் விருப்பம். மற்றும் அது இன்றும் தொடர்ந்து நடைபெறவேண்டும்'

1. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில், பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களையும் (பேதுரு, யோவான், பவுல் - அப்போஸ்தலர் 3:1-11, 5:15, 9:32-34, 14:8-10, 28:7-9), சுவிசேஷகர்களையும், (பிலிப்பு, - அப்போஸ்தலர் 8:5-7), ஒரு மூப்பனானவனையும், (ஸ்தேவான் - அப்போஸ்தலர் 6:8) மற்ற விசுவாசிகளையும், (அனனியா - அப்போஸ்தலர் 9:17-18) சுகமளிக்கும் ஊழியத்தில் பயன்படுத்தினார்.

2. முடமானவர்கள் (அப்போஸ்தலர் 3:2) வியாதியஸ்தர் (5:16), திமிர்வாதக்காரர்கள் (8:7, 9:33) குருடர், (9:17-18) சப்பாணி (14:8), காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கினால் துன்பப்படுகிறவர்கள் (28:8) ஆகிய இவர்கள் யாவரும் குணமாக்கப்பட்டனர். மரித்தவர்கள், பேதுருவினாலும் (9:40), பவுலினாலும் (20:10) உயிரோடும் எழுப்பப்பட்டனர்.

ஊ. இயேசு, முதலில் இந்த தெய்வீக சுகமளிக்கும் ஊழியத்தை "பன்னிரண்டு" அப்போஸ்தலர்களுக்கும் (மத்தேயு 10:5,8) மற்றும் எழுபத்திரெண்டு சீடர்களுக்கும் (லூக்கா 10:1,2,9) ஒப்படைத்தார். இப்பொழுது, இந்த ஊழியத்தை மூப்பர்களுக்கும், (போதகர்கள் - யாக்கோபு 5:14-15) சபையிலுள்ள மற்ற விசுவாசிகளுக்கும், யோவான் 14:12, யாக்கோபு 5:16, மாற்கு 16:17-20) அவர் (இயேசு) ஒப்படைத்திருக்கிறார். மற்ற விசுவாசிகள் ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்று, பலப்படுவதற்காக, பரிசுத்த ஆவியானவர் அவர் சித்தப்படி, சுகமளிக்கும் ஆவிக்குரிய வரத்தை, விசுவாசிகள் மூலமாகவும் வெளிப்படுத்துகிறார் (1 கொரிந்தியர் 12:9,11).

முடிவுரை

அ. இயேசுவே, ஏசாயாவினுடைய "பாடுகளை அனுபவிக்கும் தாசன்", வானத்திலும் பூமியிலும், சர்வ அதிகாரமும், வல்லமையும் அவருக்கு உண்டு என்பதைக் காட்டவே, இந்த, இயேசுவின் சுகமளிக்கும் சம்பவங்களை மத்தேயு எடுத்து எழுதியதின் நோக்கம் (மத்தேயு 28:18). இயேசு, பாவத்தைப் போக்கும் பிராயச்சித்த பலி என்றும் பாடுகள் அனுபவிக்கும் தாசனாகிய அவர் பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்வதோடு மட்டுமின்றி, வியாதிகள் மற்றும் நமது மாம்ச சரீரத்தைத் துன்புறுத்தும் யாவையும் போக்க தெய்வீக சுகத்தையும் கொடுக்கிறார் என்பதையும், நாம் அறிந்து கொள்ள அவர் (மத்தேயு) விரும்புகிறார்.

இயேசுவின் சுகமளிக்கும் ஊழியம்

மத்தேயு 8:14-17

ஆ. எப்படியிருப்பினும், இயேசுவின் இந்த சுகமளிக்கும் ஊழியம், அப்போஸ்தலர்கள் மற்றும் அவருடைய சீடர்கள் மூலமாக, ஆதித்திருச்சபையிலும் தொடர்ந்து நடைபெற்றது. இது இன்றும் திருச்சபையில் தொடர்ந்து நடைபெறவேண்டும்' ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு, அவருடைய சீடர்களிடம் இவ்வாறு கூறினார். "மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.... என்னை விசுவாசிக்கிறவன், நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். (அற்புதங்கள் மற்றும் சுகமளித்தல்). நான் என் பிதாவினிடத்திற்குப் போகிற படியினால், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். பரிசுத்த ஆவியானவரை உங்களிடத்திற்கு அனுப்புவார் (யோவான் 14:12,16-17).

இ. இயேசுவானவரின் சீடர்கள் இப்பொழுது, அவர்களுக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் சுகமளிக்கும் ஊழியங்களைச் செய்வார்கள்! (அப்போஸ்தலர் 1:8 வசனத்தையும் பார்க்கவும்)

இயேசு புயலில் அமைதி உண்டாக்குகிறார்
மத்தேயு 8:23-27

முன்னுரை

அ. இந்த வேதாகம சரித்திரத்தின் மொத்தக் கருத்தின் உண்மை என்னவென்றால், சர்வ சிருஷ்டிகள் மீதும் இயேசுவுக்கு எல்லா அதிகாரமும் உண்டு. அத்துடன், அவருடைய சீடர்கள் தேவையில் இருக்கும்போது அவர் அதைக் கிரியையில் நடப்பிக்கிறார்.

ஆ. இயேசு, அவரைப் பின்பற்றினவர்களின் விலைமதிப்பைக் குறித்த (மகிமையான நிலை) உரையாடலை இப்பொழுதுதான் முடித்திருக்கிறார். அந்த உபதேசத்தில், நரிகளுக்குக் குழிகளும், பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. ஆனால் அவருடைய தலையைச் சாய்க்க ஒரு இடமும் இல்லை, (பூமியில்) என்று கூறினார்! இருந்தாலும் இன்றைய சம்பவத்தில், அவருக்குப் படைப்புக்கள் யாவற்றின்மீதும், எல்லா அதிகாரமும் இருந்தது என்பதை நாம் பார்க்கலாம்.

1. புயல் சீறிவீசிக்கொண்டிருக்கும்போது இயேசு, நித்திரையாயிருந்தார் என்பது, அவருக்கு சிருஷ்டிகள் யாவின் மீதும் அதிகாரம் இருந்தது என்பதைக் காட்டுகிறது (8:23-24)

அ. வசனம் 23 "அப்பொழுது அவர் படவில் ஏறினபோது அவருடைய சீடர்கள், அவருக்குப்பின் சென்று ஏறினார்கள்", "அப்பொழுது" என்றால், சீடத்துவத்தின் மதிப்பைக் குறித்து, தம்மைப் பின்பற்றினவர்களுடன் செய்த உரையாடலுக்குப் பின் (8:18-22) என்று பொருள்படும். இயேசுவும், அவருக்கு மிக நெருக்கமான சீடர்களும், கப்பர்நகூமில் சீமோன் பேதுருவின் வீட்டில் தங்கியிருந்தனர் (8:14).

இங்குதான் இயேசு, சீமோன் பேதுருவின் மாமியைக் காய்ச்சலிலிருந்து சுகமாக்கினார். சிறிது காலத்திற்குப் பின், அவர்கள் ஒரு படவில் ஏறி (அநேகமாக மீன் பிடிக்கும் படகு) கலிலேயாக் கடலைக் கடந்து கதரேன் (கெர்கெசேனர் நாடு 8:28) வந்தடைவதாக நம்பினர். நீர் வழியாக சுமார் 10-15 மைல்கள் தூரம் இருந்திருக்கும்.

ஆ. "அவருடைய சீடர்கள் அவருக்குப்பின் சென்று ஏறினார்கள்", என்று வேதம் கூறுகிறது. அவர்கள், அவர் போகும் இடத்திற்கு சாதாரணமாகப் பின் சென்றார்கள் என்று கூறுவதை விட மேலானது என்று இது பொருள்படும். உண்மையான சீடர்கள் அல்லது பின்செல்வர்கள், அவர்களுடைய போதகர்கள், அல்லது எஜமானானவர்கள் எங்கு சென்றாலும் அவரிடமிருந்து கற்றுக்கொள்ளவும் அவர்களைப்போல் நடந்து கொள்ளவும், அவர்களுடன் சேர்ந்து செல்வதுபோல சென்றனர் என்றும் இது பொருள்படும். தங்களுடைய முந்தின தொழில் மற்றும் விருப்பங்களையெல்லாம் புறம்பே தள்ளிவிட்டு, அவரை எந்தக் கிரயமும் செலுத்தி பின்செல்ல உண்மையில் தீர்மானமாக இருந்தனர் என்பதும் இதில் உள்ளடங்கும் (8:18-22 4:20,22,25; 8:1,10; 19:27 வசனங்களையும் பார்க்கவும்).

இ. வசனம் 24 "அப்பொழுது படவு அலைகளினால் மூடப்படத்தக்கதாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று" படவு நிரம்பத்தக்கதாக இருந்தது (நீரில் மூழ்கி - மாற்கு 4:37) என்று மாற்கு கூறுகிறார். சடுதியாக, மிக பயங்கர வேகத்துடன் வீசும் புயல்காற்றுடன் சேர்ந்த கனத்த மழை, எளிதில் இயற்கை நிலை மாறி வருவதற்கு, கலிலேயாக்கடல் தனிச்சிறப்புடையது மத்தியதரைக்கடலிலிருந்து குளிர்ந்த காற்று, கணவாய் வழியாகக் கடந்து வந்து, கடல்மீது பரவியிருக்கும் ஈரமான வெப்பக்காற்றை மோதுகிறது (கடல் மட்டத்திற்கு சுமார் 600 அடி தாழ்வாக). "பெருங்காற்று" காற்றில் பயங்கரமான நிலைமாற்றம், விசையுடன் கூடிய புயல்காற்று நீரை சுழற்றி அடித்தது.

இயேசு புயலில் அமைதி உண்டாக்குகிறார்
மத்தேயு 8:23-27

ஈ. பரீட்சைகளும், சோதனைகளும், சடுதியாக, எந்தவிதமான எச்சரிக்கையுமின்றி நமக்கு நேரிடும் என்று யாக்கோபு கூறுகிறார். சில நேரங்களில், அவை வன்முறையில் சீறி அடிக்கும் வாழ்க்கைப் புயலாக மாறிவிடுகிறது. அவை ஜீவனுக்கே அபாயகரமாகவும் மாறக்கூடும் (யாக்கோபு 1:2). பரீட்சைகளின் பலவகைகள்:

1. கிறிஸ்துவின் மீது, விசுவாசியின் விசுவாசத்தைத் தாக்கி, நிரூபிக்கும்.

2. கடினமான அல்லது துன்பம் நிறைந்த சூழ்நிலைகள், விசுவாசத்தை பரீட்சைக்குக் கீழ் கொண்டு வருகிறது. அவை, நமது விசுவாசம் உண்மைத் தன்மையுடையது தானா என்று (கேள்வி கேட்கும்) சோதிக்கும்.

உ. வசனம் 24 "அவரோ (இயேசு) நித்திரையாயிருந்தார்" இயேசு, "கப்பலின் பின்னணியத்தில் (படகின் பின் ஓரம்) தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார்", என்று, மாற்கு நமக்குக் கூறுகிறார். (மாற்கு 4:38). ஆகவே, படவின் இந்த பாகம் நீர் மூழ்கும்படியாக உண்மையில் இல்லை. இது இரண்டு காரியங்களை நமக்குத் தெரிவிக்கிறது.

1. இயேசு ஒரு சமயம் சரீரபிரகாரமாக களைப்பாக இருந்திருக்கக்கூடும்.

2. இயேசு, புயலைக் குறித்தோ, அலைகளைக் குறித்தோ, அல்லது படவு மூழ்குவதைக் குறித்தோ சிறிதும் கவலைப்படவில்லை என்ற நாம் அறியவேண்டும் என்று மத்தேயு விரும்புகிறார்

என்பதே அதிக பொருத்தமானதாக இருக்கும். அவருக்கு, வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரமும் உண்டு. எனவே அவர் இடைப்பட்டு கிரியை நடப்பிக்கத் தீர்மானிக்கும் போது, இயற்கை சக்திகள் யாவும் அவருடைய ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படியும்! (மத்தேயு 28:19)

2. சிருஷ்டிகள் யாவற்றின்மீதும் இயேசுவுக்கு அதிகாரம் உண்டு என்பதை, இயேசுவின் சீடர்கள் விளங்கிக் கொள்ளவில்லை (8:25)

அ. "அப்பொழுது, அவருடைய சீடர்கள் வந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும்... என்றார்கள்". அவர்கள் அனுபவ மிகுந்த மீன்பிடிக்கும் மனிதர்கள். அவர்களுக்குக் கடலைப்பற்றித் தெரியும். அத்துடன் மிக மோசமான புயல்களுக்கு மத்தியில் படகை எவ்வாறு செலுத்தவேண்டுமென்றும் அறிவார்கள். அவர்கள் உண்மையில், அந்த சூழ்நிலையைக் கட்டுப்படுத்த முயன்றனர். ஆனால் அது அவர்கள் கட்டுப்பாட்டை மீறி சென்றுவிட்டது. அந்த சூழ்நிலை அவர்கள் பயந்து, திகிலடையும் அளவிற்கு மிக பயங்கரமாக மாறியது. எனவே கப்பலின் பின்னணியத்திற்குச் சென்று, அவரை எழுப்பி, உதவி செய்யும்படி கூப்பிட்டனர்.

ஆ. "எங்களை இரட்சியும்", என்றால், எங்களைப் பாதுகாப்பாக வையும், இந்த அபாயகரமான, உயிருக்கு பங்கம் ஏற்படுத்தும் சூழ்நிலையிலிருந்து எங்களை விடுவியும், படவை மூழ்கவைக்கும் இந்த புயலிலிருந்து எங்களைப் பாதுகாத்துக்கொள்ளும்.

இ. "மடிந்து போகிறோம்" என்று தொடர்ந்து கூப்பிட்டனர். "ஐயரே, ஐயரே, மடிந்துபோகிறோம்!" என்று அவர்கள் சத்தமிட்டதாக லூக்கா கூறுகிறார்.(லூக்கா8:24)பயந்துகொண்டிருப்பதற்கோ அல்லதுசுயமரியாதையைக்காத்துக்கொண்டிருப்பதற்கோ,இது தருணமில்லை! இயேசு, அவர்களுக்கு உதவி செய்யாவிட்டால் எல்லாவற்றையும் இழந்துவிடுவார்கள். படவு மூழ்கிவிடும். அவர்கள் நீரில் மூழ்கி மரித்துவிடுவார்கள்.

இயேசு புயலில் அமைதி உண்டாக்குகிறார்
மத்தேயு 8:23-27

ஈ. "போதகரே, நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா? என்றார்கள்" என்று மாற்கு நமக்குக் கூறுகிறார் (மாற்கு 4:38). நிச்சயமாக இயேசு கவலைப்படுகிறார். சிறிது காற்றிலும் சில அலைகளிலும், அவர்கள் அவருடைய விரல்களிலிருந்து (கரங்களிலிருந்து) நழுவி விழுந்து விடும்படியாகச் செய்வதற்காக, அவர்களை அவர் இவ்வளவு தூரம் அழைத்துக்கொண்டு வரவில்லை! "ஆண்டவரே, ஆண்டவரே, நாங்கள் மடிந்துபோவது குறித்து உமக்குக் கவலை இல்லையா?" என்று நாம் இயேசுவை நோக்கிக் கூப்பிடும் நிலையில் நாம் இருக்கும்போது, நமக்கும் இது பொருந்தும். நமக்காகஅவருடையஜீவனைக் கொடுத்திருக்கிறார். கடைசி மட்டும் நாம் நிலைத்திருப்பதைப் பார்ப்பதே அவருடைய நோக்கம்.

3. காற்றும் அலைகளும் அவருடைய கட்டளைக்குக் கீழ்படிந்தது, அவருக்குச் சிருஷ்டிப்புக்கள் யாவின் மீதும் அதிகாரம் இருந்தது என்பதை வெளிப்படுத்துகிறது. (8:26-27).

அ. வசனம் 26 "அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள்?" "அற்ப விசுவாசம்" உள்ளவர்களாயிருப்பது, என்றால் மிக சொற்ப நம்பிக்கையுடன் இருப்பது, சந்தேகிப்பது, தார்க்கரீதியில் பார்ப்பது என்று பொருள்படும். இந்த சந்தர்ப்பத்தில் இயேசு இவ்வாறு கூறுகிறார்: "ஏன், என் மீதுஇவ்வளவுகுறைவான நம்பிக்கையுடையவர் களாயிருக்கிறீர்கள்? "பயப்படுவது" என்றால் கோழையாகஇருப்பவன்,திகிலடைவது இருதயத்தில் பயந்து நடுங்குவது.

இந்த சம்பவம், இயேசுவின் சீடர்களுக்கு, இயேசு யார் என்று உண்மையில் தெரியவில்லை.

ஆ. "அற்ப விசுவாசிகளே" என்ற வார்த்தைகள், சுவிசேஷங்களில் ஐந்து சந்தர்ப்பங்களில் காணப்படுகிறது. ஒவ்வொரு முறையும், கிறிஸ்துவின் சீடர்களை நோக்கியே கூறப்படுகிறது. விசுவாசிகள் மத்தியில், கிறிஸ்துவின் கரிசனை மற்றும் பாதுகாப்பு குறித்து, அவரில் விசுவாசம் வைக்காமல் இருப்பது, தனிப்பட்ட முறையில் கர்த்தருக்கு ஏமாற்றமாக இருக்கிறது.

1. உணவு, உடை, உறைவிடம் கொடுப்பது குறித்து *(6:30)*

2. நீரில் நடப்பது போன்ற அற்புதம் செய்ய *(14:31)*

3. திரள் கூட்டமான மக்களுக்கு ஆகாரம் கொடுக்க *(16:8-9)*

4. மலைகள் நிலை பெயரத்தக்கதான அற்புதங்களைச் செய்ய *(17:20)*

5. இன்றைய, நமது வேதபாகத்தில் உள்ளதுபோல், நடுக்கடலில், பெரும்புயல் வீசும்போது, கரிசனையுடன் பாதுகாக்க.

இ. வசனம் 26 அவர், "எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று". "அதட்டினார்" என்றால், தடுத்து நிறுத்துவது, அறிவுறுத்துவது அல்லது ஒரு கட்டளை கொடுப்பது, குற்றம் காணுவது, அல்லது ஒரு தவறைத் திருத்துவது. காற்று வீசுவதையும், கடல் அலைகள் குமுறி இரைவதையும் இயேசு தடுத்து நிறுத்தினார். அலைகள் அமைதலான நிலைக்கு வரும்படி, அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார். மாற்கு அந்தக் கட்டளையை இவ்வாறு எழுதியுள்ளார்: "இரையாதே, அமைதலாயிரு!" (மாற்கு 4:39). அலைகள், அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தன.

இயேசு புயலில் அமைதி உண்டாக்குகிறார்
மத்தேயு 8:23-27

ஏனெனில், அமைதியாய் இருக்கும்படி கட்டளையிடுபவர், தங்களை சிருஷ்டித்தவர் என்று அவைகள் அறிந்திருந்தன!

ஈ. இந்த வேதாகம சரித்திரத்தை வாசிப்பவர்களுக்கு, மத்தேயு வெளிப்படுத்த விரும்பும் சத்தியங்கள்:

1. இயேசுவே தேவனுடைய குமாரனாகிய மேசியா அப்படிப்பட்ட அவருக்கு, எல்லா படைப்புகளின் மேலும் அதிகாரம் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் மூலமாக அவை சிருஷ்டிக்கப்பட்டது. அவர் வல்லமையே அவைகளைப் பாதுகாக்கிறது! (யோவான் 1:3, கொலொசெயர் 1:16-17).

2. இயேசுவானவர் படவில் (வாழ்க்கையில்) நம்மோடு இருந்தால், எல்லாம் நன்றாக இருக்கிறது. ஒன்றும் நம்மைச் சேதப்படுத்தாது! நம்முடைய வாழ்க்கையில் எழும்பும் பெரும் புயல்களை அமைதிப்படுத்த அவரால் கூடும், அவர் செய்வார்!

உ. தேவன் மட்டுமே, சீறி எழும் கடலைக் கட்டுப்படுத்தி அமைதிப்படுத்த முடியும் என்று பழைய ஏற்பாட்டில், கூறப்பட்டுள்ளது. (யோபு 38:8-11; சங்கீதம் 29:3-4, 10-11, 65:5-7, 89:9, 107:23-32) இயேசுவே எப்போதும், இன்றும் தேவனாக இருக்கிறார். (யோவான் 1:1-2) அவரே குமாரனாகிய தேவன் அப்படிப்பட்ட அவருக்கு எல்லா சிருஷ்டிகள் மீதும் அதிகாரம் இருக்கிறது.

ஊ. வசனம் 27 "அந்த மனுஷர்கள் ஆச்சரியப்பட்டு: "இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்கு கீழ்ப்படிகிறதே" என்றார்கள்.

"ஆச்சரியப்பட்டார்கள்" என்றால், பயபக்தியுடன் கூடிய வியப்பு, நடந்தவற்றைக் கண்டு அதிசயப்படுவது, என்று பொருள்படும். ஒருவர் நடப்பித்த காரியத்திற்காக அவர்களைப் பாராட்டுவது. இந்த விவரிக்கப்பட்ட வார்த்தைகள், இயேசுவின் சீடர்கள், தாங்கள் யாரைப் பின்பற்றுகிறார்கள் என்பதை இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்று சுட்டிக்காட்டுகிறது, வருந்தத்தக்க ஒரு காரியம். காரியங்களின் மேலோட்டமானவைகளுக்கு அப்பால் அவர்களால் பார்க்கமுடியவில்லை.

முடிவுரை

அ. இயேசுவுக்கு சிருஷ்டிகள் யாவின் மீதும் எல்லா அதிகாரமும் உண்டு. அவர், இந்த அதிகாரத்தை, அவருடைய சீடர்கள், துன்பத்தில் இருக்கும்போது அவர்களை கவனிக்கவும், பாதுகாக்கவும் பயன்படுத்துகிறார்.

ஆ. நாம் கிறிஸ்துவின் பாதையில் நடக்கும்போது, நாம் அனுபவிக்கும் கடினமான பரீட்சைகளிலும், வாழ்க்கையின் துன்ப நேரத்திலும், அதைக் குறித்து அறியாதவர் போலவும் அல்லது கவலைப்படாதவர் போலவும், கிறிஸ்து நித்திரை செய்வது போல் காணப்படுகிறார். எப்படியிருப்பினும், நாம் நம்பிக்கையிழந்த நிலையில் துயரத்துடன் அவரை நோக்கிக் கூப்பிடும் போது, அவர் நமக்கு செவி சாய்க்கிறார். உடனடியாக அவர் எழுந்திருந்து, அதைக் குறித்து ஏதாவது செய்கிறார்.

இ. வாழ்க்கையின் இந்த கடினமான நேரங்களில், நம்மில் விசுவாசத்தையும், அவரில் திட நம்பிக்கையையும் இருப்பதைப் பார்க்க விரும்புகிறார். அவர் நமக்கு,

1. நம்முடைய கிறிஸ்துவாகவும், இரட்சகராகவும், எல்லா படைப்புகளுக்கும் தேவனாகவும் இருக்கவேண்டும்.

2. நாம் இந்த வாழ்க்கையில் சந்திக்கும் எந்தவிதமான புயலையும் அமைதிப்படுத்துகிறவர்.

இயேசு புயலில் அமைதி உண்டாக்குகிறார்

மத்தேயு 8:23-27

3. நம்முடைய ஒவ்வொரு தேவையையும் சந்தித்து, எல்லா விரோதிகளிடமிருந்தும் பாதுகாக்கிறார்.

ஈ. சோர்ந்து போகாமல் கேட்ட விதவையின் உவமானத்தைப் பற்றிய போதனைக்குப் பின், இயேசு இவ்வாறு கூறினார்: "...மனுஷ குமாரன் வரும்போது பூமியிலே (அவருடைய சீடர்கள் மத்தியில்) விசுவாசத்தைக் காண்பாரோ? (பாவத்திலிருந்து இரட்சிக்கவும், வாழ்க்கையின் எந்தவிதமான சூழ்நிலையாக இருந்தாலும் அவர் கரிசனையுடன் பாதுகாப்பார் என்று அவரில் விசுவாசம் வைப்பது) (லூக்கா 18:8) இந்தக்கேள்வி இந்நாள் வரையிலும், கேள்விக்குறியாகவே இருக்கிறது.

இயேசு திமிர்வாதக்காரனுக்கு சுகமளிக்கிறார் மத்தேயு 9:1-8

முன்னுரை

அ. இயேசுவானவர் பாவங்களை மன்னிக்கத் தமக்கு அதிகாரம் உண்டு என்பதை நிரூபிக்க இந்த அற்புதத்தை நடப்பிக்கிறார்.

ஆ. வேதாகமத்தில் கூறப்பட்ட இந்த சம்பவம், இயேசுவின் அதிகாரத்துடன் சம்பந்தப்பட்டது. அவருக்கு இயற்கையின் மீதும், பிசாசுகளின் இராஜ்ஜியத்தின் மீதும், மற்றும் சுகமளிக்கவும், அற்புதங்களை நடப்பிக்கவும் வல்லமை இருந்தது மட்டுமின்றி, பாவங்களை மன்னிக்கவும் இந்த அதிகாரம் விரிவாக்கப்படுகிறது.

1. இயேசுவுக்கு பாவங்களை மன்னிக்க அதிகாரம் இருந்தது. (9:1-3)

அ. வசனம் 1 "அவர் (இயேசு) படவில் ஏறி, இக்கரைப்பட்டுத் தம்முடைய பட்டணத்திற்கு வந்தார்." அவர் கதரேனர் பட்டணத்திற்குச் சென்று திரும்பியபின் (கெர்கெசேனர் பிரதேசம்) மற்றும் பிசாசுகளால் பிடிக்கப்பட்ட பன்றிகள் கடலில் ஓடிவிழுந்த சம்பவத்திற்கு அடுத்தாற்போல், இயேசு, கப்பர்நகூமிற்குத் திரும்பி வந்தார். (மத்தேயு 8:28-34). மரிக்கும் தருவாயில் இருக்கும் தன்னுடைய பன்னிரண்டு வயதான குமாரத்திக்காக ஜெப ஆலயத் தலைவனாகிய யவீரு இச்சந்தர்ப்பத்தில் தான் தேடி வந்தான். இயேசு, மரித்துப்போன யவீரின் மகளை உயிரோடு எழுப்பினதற்குப்பின், திமிர்வாதக்காரனை சுகமாக்கின சம்பவம் நடந்தது. (லூக்கா 8:40-42, 49-56)

ஆ. "தம்முடைய பட்டணத்திற்கு..." இது கப்பர் நகூமைக் குறிக்கிறது. நாசரேத் ஊரைவிட்டு வந்தபின், இயேசு கப்பர்நகூமில், ஒருசமயம் சீமோன் பேதுருவின் வீட்டில் வாழ்ந்தார். (மத்தேயு 4:13; மாற்கு 2:1, 9:33)

இ. வசனம் 2. "அங்கே படுக்கையிலே கிடந்த திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்". இயேசுவானவர் இருந்த வீட்டின் கூரையிலுள்ள ஓடுகளை நீக்கிவிட்டு, அந்த மனிதர் தங்களுடைய சிநேகிதனை, இயேசுவுக்கு முன்பாகவே இறக்கினார்கள் என்று, லூக்கா நமக்குக் கூறுகிறார். வாசல் வழியாகப் பிரவேசிக்கக்கூடாத படிக்கு, உட்புகும் வாயிலில் திரள் கூட்டமான மக்கள் கூடியிருந்தபடியால், அவர்கள் இவ்வாறு செய்தார்கள். (லூக்கா 5:18-19)

ஈ. "திமிர்வாதக்காரன்" என்றால் திமிர்வாதத்தினால் வியாதிப்பட்ட மனிதன். (நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டதினால், ஒருவருடைய தசைகள் செயலற்றுப் போய், அசைவற்று இருப்பது சில நேரங்களில் இது தன் இச்சையின்றி ஏற்படும் இழுப்பு தாக்குதலும் சேர்ந்து காணப்படும்) அந்த மனிதனுடைய உடல், திரவ நிலையிலிருப்பது போல் காணப்படும் ஏனெனில் அவனுடைய தசைகள் அவனுக்குக் கட்டுப்பட்டு இயங்காது. இந்த சம்பவத்தில் கூறப்பட்ட மனிதன் தன்னால் எந்தக் கிரியையும் செய்ய முடியாத அளவுக்கு மோசமான நிலையில் இருந்ததால், அவன் நண்பர்கள், அவனைப் படுக்கையோடு தூக்கிச் செல்லவேண்டிய அவசியம் நேரிட்டது.

16. அதின் பட்டணங்கள் நாற்பது வருஷம் பாழாய்க் கிடக்கும்.

உ. வசனம் 2. "இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, திடன் கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்".

இயேசு திமிர்வாதக்காரனுக்கு சுகமளிக்கிறார் மத்தேயு 9:1-8

"அவர்களுடைய" என்பது, அந்த திமிர்வாதக்காரனையும், சுகமாக்கப்படும்படியாக தங்களுடைய சிநேகிதனைச் சுமந்துவந்த அந்த குழு மனிதர்களையும் (படுக்கைபோடு திமிர்வாதக்காரனை தூக்கிக் கொண்டு வந்த நான்கு பேர்களும் உள்ளடங்கும்) குறிப்பிடும். (மாற்கு 2:3) அந்தக் குழுவிலிருந்த அத்தனை பேர்களும், அவர் சுகமளிப்பார் என்றும் தங்களுடைய சிநேகிதனுக்கு உதவி செய்வார் என்றும் அவர்மீது விசுவாசம் வைத்திருந்தனர். ஆனால் இயேசு திமிர்வாதக்காரனை மட்டும் நோக்கிப் பேசினார்.

ஊ. குணமாக்கப்படுவதற்கும், பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கும், கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்தவர்கள், தங்களுடைய சிநேகிதர்களையும், உறவினர்களையும், அயலகத்தாரையும், உதவிக்காக கிறிஸ்துவிடம் அழைத்துக் கொண்டு வருவது, பொருத்தமானதும் தகுதியானதுமான காரியம். தேவையில் இருப்பவர்களுக்காக, மற்றவர்கள் பரிந்துரை செய்து பண்ணும் விண்ணப்பங்களுக்குக் கர்த்தர் பதிலளிக்கிறார். கிறிஸ்துவிடம் அழைத்துக் கொண்டு வரப்பட்டவர்களும் அவ்வாறே தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதும் மிக முக்கியம்! பாவம் மன்னிக்கப்படுவது என்பது தனிப்பட்ட ஒரு மனிதனை அடிப்படையாகக் கொண்டது. ஒருவருடைய பாவம் மன்னிக்கப்பட வேண்டிய கட்டம் வரும்போது, ஒருவரும் மற்றொருவருடைய இடத்தில் நிற்க முடியாது. (1 யோவான் 1:9; சங்கீதம் 51:1-2)

எ. "திடன் கொள்" என்றால் அதிக தைரியமாகவும் நம்பிக்கையுடனும் இருப்பது, மிக்க ஆறுதலடைவது, என்று பொருள்படும். அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதால், திமிர்வாதக்காரன் தைரியமாக, நம்பிக்கையுடன் ஆறுதலடையக் கூடும். "மன்னிக்கப்பட்டது" என்றால் போய்விட்டது, அனுப்பிவிடப்பட்டாயிற்று என்று பொருள்படும். சங்கீதக்காரன் இவ்வாறு கூறுகிறார்: "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை, நம்மை விட்டு விலக்கினார்" (சங்கீதம் 103:12; ரோமர் 4:7-8) பாவங்கள் மன்னிக்கப்படுவது என்பது கீழ்க்கண்டவாறும் பொருள்படும்.

1. பாவத்தோடு சம்பந்தப்பட்ட குற்றமுள்ள மனச்சாட்சி நீக்கப்படும்.

2. அவருக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களுக்குரிய மரண தண்டனையும், தேவ கோபாக்கினையும் தடுக்கப்படுகிறது.

3. கிறிஸ்துவின் கல்வாரி பலியின் மீதும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மீதும் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக, பாவம் செய்யத் தூண்டும் பாவ சுபாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை கிடைக்கிறது.

ஏ. வசனம் 3. "அப்பொழுது வேதபாரகரில் சிலர் இவன் தேவதூஷணம் சொல்லுகிறான்..." தேவன் ஒருவரே பாவங்களை மன்னிக்கமுடியும். (மாற்கு 2:7; ஏசாயா 43:25, 44:22) திமிர்வாதக்காரனுடைய பாவங்களை இயேசு மன்னித்ததினால், அவர் தேவனுக்குச் சமமாயிருப்பதாக உரிமையுடன் கூறுகிறார். (லூக்கா 7:47-49 வசனங்களையும் பார்க்கவும்). பரிசேயருக்கும், பழைய ஏற்பாட்டு வேதபாரகர்களுக்கும், இது தேவதூஷணமாக இருந்தது. ஏனெனில், இயேசு குமாரனாகிய தேவன் மாம்சத்தில் அவதரித்துள்ளார் என்றும், மேசியா மற்றும் பூமியில் பாவங்களை மன்னிக்க அதிகாரம் உடைய தேவனுடைய குமாரன் என்றும், அவர்கள் விசுவாசிக்கவில்லை. (மாற்கு 14:61-64)

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

இயேசு திமிர்வாதக்காரனுக்கு சுகமளிக்கிறார்
மத்தேயு 9:1-8

ஒ. "தூஷிப்பது" என்றால், இகழ்வது, கேவலமாக பேசுவது, வெறுப்பது, கோபத்தில் சீறுவது, ஒருவரை அணுகி அநியாயமாக வசை மொழிகளைக் கூறுவது, தேவனையும் பரிசுத்தமான காரியங்களையும் அலட்சியமாகப் பேசுவது என்று பொருள்படும். இங்கு, தேவனால் மட்டும் செய்யக்கூடிய ஒரு காரியத்தை, இயேசு தம்மால் கூடும் என்று உரிமை பாராட்டுகிறார் என்றும் பொருள்படும்' பாவங்களை மன்னிக்கும் தேவனுடைய அதிகாரத்தை, அவர் (இயேசு) அபகரித்துக் கொண்டார். (என்று அவர்கள் எண்ணினார்கள்)

2. பாவங்களை மன்னிக்க அவருக்கு அதிகாரம் உண்டு என்பதை நிரூபிக்க இயேசு அற்புதமான காரியத்தைச் செய்தார். (9:4-7)

அ. வசனம் 4. "இயேசு அவர்கள் நினைவுகளை அறிந்து: நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன?" இயேசு இயற்கை விதிகளுக்கு மேலாக, தெய்வீகமாக, வேதபாரகர்களின் நினைவுகளை அறிந்தார். அவர் தேவனை தூஷிக்கிறார் என்று அவர்கள் மனதில் நினைக்கிறார்கள் என்றும், தங்களுக்குள் பேசிக்கொள்ளுகிறார்கள் என்றும் அவர் அறிந்து கொண்டார். பாவத்தை மன்னிக்க தனக்கு அதிகாரம் உண்டு என்று உரிமை கொண்டாடுவதின் மூலம் தேவனை அவர் அவமதிக்கிறார் என்று நினைத்து அவர்மீது வெறுப்பை உமிழ்ந்தனர்.

ஆ. வசனம் 5. "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது?" "எழுந்து நட" என்று சொல்வதை விட, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது", என்று சொல்வது எளிது. முன்னால் கூறியதற்கு, சரீரப்பிரகாரமான வெளிப்படையான அடையாளம் அவசியமில்லை. எப்படியிருப்பினும், கீழ்க்கண்ட நல்ல காரணங்களுக்காக, இயேசு பாவ மன்னிப்பை குணமாக்குவதுடன் இணைக்கிறார்:

1. சரீரத்தில் ஏற்படும் நோய்களுக்கும் பலவீனங்களுக்கும் காரணம் பாவம் என்று அவருடைய நாட்களில் யூதர்கள் மத்தியில் பொதுவாக உபதேசிக்கப்பட்டது. (யோவான் 9:2)

2. வியாதிப்பட்ட அல்லது சரீர பலவீனமுடைய ஒருவன், அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் வரை குணமாக்கப்பட முடியாது.

3. ஆகவே, வியாதிப்பட்ட மற்றும் சரீர பலவீனமுள்ள மனிதனை, அவரால் குணமாக்கக் கூடுமானால் பூமியில் பாவங்களை மன்னிக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு என்பதை அது நிரூபிக்கிறது.

இ. எப்படியிருப்பினும், இவ்விரண்டில் மிக அதிக முக்கியத்துவம் வாய்ந்தது பாவங்கள் மன்னிக்கப்படுவது, ஏனெனில் இது, அந்த மனிதனின் நித்திய முடிவுடன் சம்பந்தப்பட்டது:

1. ஒருவன் இயேசுவிடமிருந்து பாவ மன்னிப்பை அவன் பெற்றுக் கொண்டானாகில், அவன் தேவனுடைய குடும்பத்தில் ஒருவனாகிறான். அவருடைய நித்திய இராஜ்ஜியத்தில் அவரோடு வாசம் பண்ணுவான்.

2. ஒருவன், இயேசுவிடமிருந்து பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளவில்லையானால், பெரிய வெள்ளை சிம்மாசன நியாயத்தீர்ப்பின் முன் நின்று பின், நித்திய நரக அக்கினிக்குள் தள்ளப்படுவான்.

இயேசு திமிர்வாதக்காரனுக்கு சுகமளிக்கிறார் மத்தேயு 9:1-8

ஈ. வசனம் 6 "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ, என்றார்". பூமியில் பாவங்களை மன்னிக்க அதிகாரம் உண்டு என்பதையும், அதிகாரத்திலும் வல்லமையிலும் அவர் பிதாவாகிய தேவனுக்குச் சமமானவர் என்பதையும் வெளிப்படுத்த, இயேசு, சுகமளிக்கும் அற்புதத்தை செய்தார். (யோவான் 5:36, 10:25,38; 14:11) "அதிகாரம்" பெற்றவர் என்றால் பாவங்களை மன்னிக்க சுதந்திரமும் தெய்வீக உரிமையும் பெற்றவர் என்று பொருள்படும். இது, இயேசுவுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையும், சக்தியும் இருந்ததென்றும், மனிதர் மத்தியில் சட்டபடி அனுப்பப்பட்ட பிரதிநிதியாயிருப்பதால் பாவங்களை மன்னிக்க தெய்வீக உரிமையும், அதிகாரமும், தனிச்சுதந்திரமும் உண்டு என்றும் பொருள்படும்.

உ. வசனம் 7 "உடனே அவன் எழுந்து தன் வீட்டுக்குப் போனான்" இங்கு மேலும், இது தெளிவாக நிரூபிக்கப்படுகிறது.

1. அந்த மனிதன், இயற்கைக்கு அப்பால் அற்புதமாக குணமாக்கப்பட்டான்.

2. பூமியில் பாவங்களை மன்னிக்க இயேசுவுக்கு தெய்வீக வல்லமை இருந்தது என்பது உறுதிபடுகிறது.

3. அவர், தேவதூஷணம் செய்கிறார் என்று வேதபாரகர்கள் அவருக்கு விரோதமாகக் கூறிய குற்றச்சாட்டு,தவறுஎன்றும்இது சுட்டிக்காட்டுகிறது.

ஊ. வசனம் 8 "ஜனங்கள் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, மனிதருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள்." திமிர்வாதக்காரன் குணமாக்கப்பட்ட இடத்திலிருந்த திரள் கூட்டமான மக்களின் பிரதிக் கிரியை இரண்டு விதமாக இருந்தது. அவைகள்:

1. பக்தியுடன் கூடிய பயத்தினால் நிரப்பப்பட்டார்கள். அவர்கள் அதிகமாக புகழ்ந்தார்கள். இயேசுவை அற்புதமானவராகவும் அதிசயப்படத்தக்கவராகவும் கண்டார்கள். அவர்கள் கண்ட காரியத்தினால் பயபக்தியுடன் அதிர்ச்சியடைந்தனர். ஆச்சரியத்துடன் நிலைவாக உற்றுப் பார்த்தனர்.

2. தேவனைத் துதித்தார்கள். பிதாவாகிய தேவனுக்கு, மகிமையையும் கனத்தையும் செலுத்தினார்கள் அவர்கள் கண்டகாட்சியினிமித்தம், மனிதர்கள் மத்தியில் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள்.

எ. பாவங்களை மன்னிக்க, இயேசுவுக்கு இருந்த அதிகாரத்தினால், அவர்கள் உள்ளாக உணர்த்தப்பட்டார்களா என்பது தெளிவாக இல்லை. அற்புதமாக சுகமளித்தது, எப்படியும் அவருடைய "அதிகாரத்தின் வல்லமைக்கு" நிரூபணமாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர், இதைத்தான், அவ்வாறே நாம் அறிந்துகொள்ள விரும்புகிறார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்!

ஏ. மானிட வர்க்கத்திலுள்ளவர்களைக் குறிக்கும் "மனிதன்" என்ற சொல், "மனுஷ குமாரன்" என்ற வார்த்தை பிரதிபதம் (மற்றொரு சொல்) என்பதை ஜனக்கூட்டம் தெளிவாக விளங்கிக் கொண்டனர். (சங்கீதம் 8:4; எசேக்கியேல் 2:1). ஆனால், தம்மை மேசியா என்று வெளிப்படுத்த இந்தச் சொல்லை இயேசு பயன்படுத்தினார் என்று அவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை. (சுவிசேஷங்களில் 80 முறைக்கு மேல் உள்ளது) "நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லை," என்று எல்லாரும் கூறினார்கள்

இயேசு திமிர்வாதக்காரனுக்கு சுகமளிக்கிறார் மத்தேயு 9:1-8

என்று மார்கு நமக்குக் கூறுகிறார். (மார்கு 2:12). "அதிசயமான காரியங்களை இன்று கண்டோம்," (நமது எதிர்பார்ப்புகளுக்கும் அதிகமான, அதிசயமான கனவுகள்) என்று யாவரும் சொல்லியதாக லூக்கா நம்மிடம் கூறுகிறார். (லூக்கா 5:26)

முடிவுரை

அ. நோய்களும் மற்றும் சரீர பலவீனங்களுமுடைய அநேகர் இன்று உலகத்தில் இருக்கின்றனர். வைத்தியர்களும், இரண சிகிட்சை செய்பவர்களும் மற்றும் வியாதிகளைப் பற்றிய ஆராய்ச்சிகளில் நிபுணர்களும், குணப்படுத்த முடியாது என்று கைவிடப்பட்ட அநேகர் இருக்கின்றனர். இந்த திமிர்வாதக்காரனுக்கு செய்தது போல, இயேசு அவர்களிடம் வந்து குணமாக்க வேண்டிய அவசியம் உள்ளது.

ஆ. பூமியில் பாவங்களை மன்னிக்க அவருக்கு அதிகாரம் உண்டு என்பதை நிரூபிக்கவே, இயேசு அவர்களுக்கு உதவி செய்வதின் நோக்கம். ஆகவே, சுகமாக்கப்படுவதற்காக, இயேசுவிடம் வருபவர்கள் தாங்கள் பாவிகள் என்று அவரிடமிருந்து (இயேசுவிடம்) பாவ மன்னிப்பைப் பெற வேண்டும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். அவ்வாறே, தங்களுடைய நண்பர்களை, உதவிக்காக இயேசுவிடம் அழைத்துக் கொண்டு வருபவர்களுக்கும் இது பொருந்தும்.

அறுவடை செய்யப்பட வேண்டிய ஆத்துமாக்கள் ஏராளமாக, உலகத்தில் இன்று இருக்கின்றனர்

மத்தேயு 9:35-38

முன்னுரை

அ. இன்றைய நம்முடைய வேதபாகம் மத்தேயு 4:23 வசனங்களிலிருந்து இயேசுவானவர் செய்து கொண்டிருந்த காரியங்களைக் குறித்துத் தொகுத்துக் கூறப்பட்டது. அவர் கீழ்க்கண்டவற்றை செய்தார்:

1. நற்செய்தியை பிரசங்கித்தார்.

2. தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றிய ஆவிக்குரிய சத்தியங்களை உபதேசித்தார்.

3. நோய்ப்பட்ட, சுகமில்லாத அநேக மக்களைக் குணப்படுத்தினார்.

4. அற்புதங்களை நடப்பித்து பிசாசுகளைத் துரத்தினார்.

ஆ. கணக்கெடுத்து குறிப்பெழுதுகிறவர்கள், உலகத்தில் ஏராளமான மக்கள் இருக்கின்றனர் என்று நமக்குக் கூறுகின்றனர். உலக ஜனத்தொகை 5 பில்லியன் அளவிற்கு வளர்ந்துள்ளது.

1. 1.2 பில்லியன் சீனாவில் வாழ்கின்றனர்.

2. சுமார் 1 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்தியாவில் வசிக்கின்றனர்.

3. ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும், 1.5 பில்லியன், வாழ்கின்றனர்.

4. 260 மில்லியன், அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இ. இந்தியாவில் 2% மக்களும், சீனாவில் 67% மக்கள் மட்டுமே கிறிஸ்தவர்களாயிருக்கின்றனர். மத்திய கிழக்கு நாடுகளில் 1/2% குறைவானவர்கள் மட்டுமே கிறிஸ்துவர்கள். அமெரிக்காவில் உள்ள 260 மில்லியன் மக்களில், எத்தனை பேர்கள் கிறிஸ்தவர்கள் என்று தேவனுக்கு மட்டுமே தெரியும்!. ஆகவே, உலகத்தில் அறுவடை செய்ய ஏராளமான மக்கள் இருக்கின்றனர்! சிலர் அருகிலும் மற்றும் அநேகர் தூரமான இடங்களிலும் இருக்கின்றனர்.

உலகத்தில் ஏராளமான மக்கள் உபத்திரவப்படுத்தப்பட்டும், உதவியற்ற நிலையிலும் இருக்கின்றனர் (9:36)

அ. இயேசு, கூட்டமான மக்களைப் பார்த்தபோது, அவர்கள் மீது மனதுருகினார். அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும் என்று உள்ளத்தில் ஆவல் மிக்கவராக இருந்தார். அவர்கள் மேல் இரக்கங் கொண்டார். அவர்களைப் பற்றி பரிதாபப்பட்டார். அவர்களுக்கு உதவி செய்ய அசைக்கப்பட்டார்.

ஆ. இயேசுவானவர் மனதிரக்கங்கொண்டு அசைக்கப்பட்ட, வேறு சந்தர்ப்பங்களும் உண்டு:

1. திரளான மக்கள் அவரைப் பின்பற்றி வருவதை அவர் கண்டபோது (மத்தேயு 14:14)

2. மக்கள் புசிக்க ஒன்றுமில்லாமல் இருப்பதை அவர் பார்த்தபோது. (15:32)

3. இரண்டு குருடர் அவரை நோக்கிக் கூப்பிட்ட போது. (20:34)

4. குஷ்டரோகி, தன்னைச் சுத்தமாக்கும்படி அவரை வேண்டிக் கொண்டபோது. (மாற்கு 1:41)

அறுவடை செய்யப்பட வேண்டிய ஆத்துமாக்கள் ஏராளமாக, உலகத்தில் இன்று இருக்கின்றனர்

மத்தேயு 9:35-38

5. நாயீனூர் விதவையின் ஒரே மகன் மரித்துப் போனதை அவர் பார்த்தபோது (லூக்கா 7:13)

6. எருசலேமிலுள்ள மக்கள், மேய்ப்பன் இல்லாமல் இருக்கும் நிலைமையைக் கண்டபோது (லூக்கா 19:41)

இ. அவர் கீழ்க்கண்டவை நடைபெற்றபோது,

1. திரளான மக்கள் அவருக்குப் பின்சென்ற போது அவர்களில் இருந்த வியாதியஸ்தர்களை குணமாக்கினார்.

2. புசிக்க ஒன்றுமில்லாமல் இருந்த, ஏராளமான மக்களை போஷித்தார்.

3. குருடர் அவரை நோக்கி, இரக்கத்திற்காக கதறிக் கூப்பிட்டபோது, அவர்களுக்கு பார்வை கிடைக்கும்படி செய்தார்.

4. குஷ்டரோகி, தான் சுத்தமாக்கப்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டபோது, அவர், அவனை சுத்தமாக்கினார்.

5. விதவையின் துக்கத்தை அவர் பார்த்தபோது, அவளிடம், "அழாதே" என்று கூறி, மரித்துப் போன அவளுடைய குமாரனை உயிரோடு எழுப்பினார்.

ஈ. இயேசு மக்கள் மீது பச்சதாபப்பட்டார். ஏனெனில், அவர்கள் அலைக்கழிக்கப்பட்டு உதவியற்ற நிலையில் இருந்ததை அவர் அறிந்திருந்தார். "அலைகழிக்கப்படுவது" என்றால், விரட்டப்பட்டு, தொல்லைப்படுத்தப்பட்டு முழுவதும் சோர்ந்து போன நிலை, பலவீனமடைந்து மயக்கநிலையில் இருப்பது, என்று பொருள்படும். "உதவியற்ற நிலை" என்றால், மதிப்பற்ற பொருள்போல சகதியில் அங்கும், இங்கும் வீசப்படுவது, வேண்டுமென்றே ஆகாயத்தில் சுழற்றிவிடப்படுவது, சிதறடிக்கப்படுவது, வேரோடு பிடுங்கப்பட்ட நிலை, என்று பொருள்படும்.

உ. மக்கள், "மேய்ப்பனில்லாத ஆடுகள்" போல இருந்தபடியால் இயேசு, அவர்கள் மீது பரிதாபப்பட்டார். ஆடுகளுக்கு மேய்ப்பன் இல்லாதிருந்தால் அவைகள், களைப்படைந்து விழுந்துபோகும் வரை, நாய்களாலும், காட்டு மிருகங்களாலும் விரட்டப்பட்டு, அங்கும், இங்கும் ஓடி அலையும். பின் அவை, அழிவுக்கு ஏதுவாக, கீழே விழுந்து விடும். தம்மிடம் வந்த மக்களை இயேசு, இந்த நிலையில்தான் பார்த்தார்.

ஊ. உன்னைச் சுற்றிலும் நோக்கிப்பார், உன் அண்டைவீட்டுக்காரர்கள் (அருகில் வாழ்பவர்கள்) உன் வீட்டைச் சார்ந்த, மாடிக் கட்டடத்தில் வாழும் மற்றவர்கள், உன் கிராமம், உன்னுடைய ஊர், உன் பட்டணம், சீனா, இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள், ஆப்பிரிக்கா முதலியன. நீ என்ன காண்கிறாய்? அலைக்கழிக்கப்பட்ட, உதவியற்ற மக்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போன்ற மக்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக, நாமும் மனதுருகி, அசைக்கப்படவேண்டும்.

நாமும் எப்படியாவது இந்த மக்களுக்கு உதவி செய்ய வேண்டும்!

2. தேவனுடைய கிருபையைப் பற்றிக் கேட்கவும், அதை அனுபவிக்கவும் அவசியமான ஏராளமான ஆத்துமாக்கள் இருக்கின்றனர் (9:35)

அறுவடை செய்யப்பட வேண்டிய ஆத்துமாக்கள் ஏராளமாக, உலகத்தில் இன்று இருக்கின்றனர்

மத்தேயு 9:35-38

அ. கலிலேயாவிலுள்ள எல்லா பட்டணங்கள் மற்றும் கிராமங்களுக்கு ஊழியம் செய்பவராக , இயேசு இருந்தார். அவர் போதித்து தேவனுடைய இராஜ்ஜியத்தின் நற்செய்தியைப் பிரசங்கித்தும் நோய்களையும் வியாதிகளையும் குணமாக்கியும், பிசாசுகளைத் துரத்தியும் வந்தார். அவர், இக்காரியங்களைச் செய்வதை ஒருபோதும் நிறுத்தவில்லை என்று வேதம் குறிப்பிடுகிறது. ஆனால், கலிலேயாவில் அவருடைய செய்தியை அநேகர் கேட்டதில்லை.

ஆ. கொர்நெலியுவின் வீட்டாருக்கு, பேதுரு கூறிய செய்தியில், இயேசுவின் ஊழியத்தை இவ்வாறு விவரிக்கிறார்: "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்,தேவன்அவருடனே கூட

இருந்தபடியினாலே, அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்" (அப்போஸ்தலர் 10:38)

இ. இயேசு, பட்டணங்களுக்கும், பேரூர்களுக்கும் மட்டுமல்லாமல், ஏழைகளிடமும், எளிய கிராமங்களுக்கும் கூட சென்றார்.

1. ஜெப ஆலயங்களுக்கும், ஆராதனை செய்யும் இடங்களுக்கும் சென்றார்.

2. தனிக் குடும்பங்களையும் சந்திக்கச் சென்றார்.

3. தெருக்களிலும், சந்தை கூடும் இடங்களிலும், மற்றும் மக்கள் கூடியிருக்கும் இடம் எங்கெல்லாம் உண்டோ, அங்கு இயேசு சென்றார். அவ்வாறே நாம் செல்ல வேண்டிய இடங்களும் இவைகளே!

ஈ. இயேசு, பன்னிரெண்டு சீடர்களையும் ஊழியம் செய்ய அனுப்பியபோது, அது ஒரு அவசரமான காரியம் என்று குறிப்பிட்டுக் கூறினார். (மத்தேயு 10:1-14) விலைபேறப்பட்ட நேரம் இழக்கப்பட்டுப்போக, இது தருணம் அல்ல. சபையில் கூட, ஆயத்தமாக, அர்ப்பணிப்போடு, வாஞ்சையோடு செல்லவும், மற்றவர்களை அனுப்பவும், நாம் விழிப்புடன் இருக்கும் நிலையைக் காத்துக் கொள்ள வேண்டும்.

1. உதவித் தேவைப்படும், அதிகமானவர்கள், உலகத்தில் இருக்கிறார்கள்.

2. நாம் இழந்து போக, விலைபேறப்பட்ட நேரம் இல்லை!

3. கிறிஸ்து சீக்கிரம் வருகிறார்!

4. வழியில் சென்று கொண்டிருக்கும்போது நிற்காதே. மதிப்பு குறைந்த காரியங்களில், உன்னை சிக்க வைத்துக் கொள்ளாதே.

5. தேவனுடைய இரக்கத்தைப் பற்றிக் கேட்கவும், தங்கள் வாழ்க்கையில் அனுபவிக்கவும், அவசியமான ஏராளமான மக்கள் இருக்கின்றனர்.

உ. சுவிசேஷகர்களை அனுப்பும் உலக ஸ்தாபன தலைவர்கள், உலகத்தில் 10/40 விண்டோஸ் என்று இருப்பதாக பேசுகிறார்கள். இதில், சுவிசேஷம் மிகக்குறைவாக அறிவிக்கப்பட்ட உலக நாடுகளில் உள்ள 62% உள்ளடங்கும். இது, பூமத்திய ரேகைக்கு, வடக்காக 40டிகிரி - 10டிகிரி வரையிலான உலகத்தின் பாகம். இது, சீனாவில் அதிகமான பாகமும், இந்தியா முழுவதும், மத்திய கிழக்கு நாடுகளில் பெரும்பான்மையான பாகம், ஆப்பிரிக்காவின் பெரும்பான்மையான பாகமும் உள்ளடங்கும்.

அறுவடை செய்யப்படவேண்டிய ஆத்துமாக்கள் ஏராளமாக, உலகத்தில் இன்று இருக்கின்றனர்

மத்தேயு 9:35-38

ஊ. 10/40 விண்டோஸ் நாடுகளின் ஜனத்தொகை 4 பில்லியன் வரை எட்டுகிறது. இது வானமண்டல சாத்தானின் அதிகாரத்தில், கீழ்க்கண்ட காரியங்களின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

1. பாவத்திலும், பொல்லாப்பிலும் ஈடுபட செய்வதின் மூலம்

2. பொய்யான மத முறைகள்

3. மாய மாந்தரீகங்கள்

4. வன்முறையில் அடக்கும் அரசாங்கம்

5. சாத்தான் ஆராதனை, பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சி மற்ற சர்வாதிகார ஆட்சி, மற்றும் இராணுவ சதிக்கட்சிகளின் ஆட்சி, ஆகிய இவைகளும் இதில் அடங்கும்.

எ. கீழ்க்கண்ட காரியங்களைச் செய்ய இதுவே தகுதியான நேரம் என்று அநேகர் கூறுகின்றனர்: 1. கேள்விப்படாத (சுவிசேஷத்தை) மக்கள் கூட்டத்திற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல. 2. ஆவியினால் நிரப்பப்பட்ட ஊழியர்களை இந்த 62 நாடுகளுக்கும் அனுப்பி, அங்குள்ள இழந்துபோனவர்களை ஆதாயம் செய்து, சபைகளை ஸ்தாபிக்க, அனுப்பவேண்டும். இது உண்மை. ஏனெனில், இப்பொழுது நமக்கு கீழ்க்கண்டவைகள் இருக்கிறது:

1. எல்லா மொழிகளிலும், புத்தகம் பத்திரிக்கைகள் முதலியவற்றை வெளியிடுவதற்குரிய வசதிகளும், திறமையும் இருக்கிறது.

2. உலகத்திலுள்ள எல்லா பட்டணங்களிலும், கிராமங்களிலும் விரைந்து செல்லக்கூடிய, மக்கள் தொடர்பு சாதனங்களை (வானொலி, தொலைக்காட்சி (T.V.) முதலியன) பயன்படுத்தலாம்.

3. உலக முழுவதும், குறைந்த மணி நேர அளவில் பயணம் செய்யமுடிகிற திறமையை (வாய்ப்பை) பயன்படுத்தலாம்.

ஏ. தேவனின் இரக்கத்தைப்பற்றிக் கேட்கவும், அதை அனுபவிக்கவும், தேவையுள்ள ஏராளமான மக்கள் உலகத்தில் இருக்கின்றனர். இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாக, நாம் ஏதாவது இதைக்குறித்து செய்யவேண்டும். நாம் வல்லமையினால் அபிஷேகிக்கப்பட்டும் இருக்கிறோம். நற்கிரியைகள் செய்யவும், பிசாசின் வல்லமையின் கீழ் இருக்கும் யாவரையும் குணமாக்கவும், நாமும் செல்லவேண்டும். மற்றவர்களையும் அனுப்பவேண்டும்!

3. அறுவடை செய்வதற்கு அநேக ஆத்துமாக்கள் உலகத்தில் இருக்கிறார்கள் (9:37-38)

அ. இந்த வேதபாகத்தில், "அறுவடை" என்ற சொல், தானியங்கள் அறுவடை செய்வது, என்று பொருள்படும். என்னுடைய மாமா, கோதுமை மற்றும் பார்லி வயல்களை காவல் காக்கும்படி கூறியது நான் நினைவுகூருகிறேன். கோதுமை, மங்கின நிறமாக மாறும்போது, அவை முதிர்ந்து விட்டது என்று தெரிந்து கொள்ளலாம். அப்பொழுது நாங்கள் அரிவாள்களை எடுத்துக்கொண்டு வயலுக்குச்சென்று, அறுவடை செய்து, தானியத்தை களஞ்சியங்களுக்கு எடுத்துச் செல்லப்படும்வரை குவியலாகக் குவித்துவைப்போம். இம்மாதிரிதான், இப்பொழுதும் இருக்கிறது. உலகத்தில் அறுவடை செய்வதற்கான வயல்களில் பயிர் ஏற்கனவே முதிர்ந்து அறுவடைக்கு ஆயத்தமாயிருக்கிறது.

அறுவடை செய்யப்படவேண்டிய ஆத்துமாக்கள் ஏராளமாக, உலகத்தில் இன்று இருக்கின்றனர்

மத்தேயு 9:35-38

ஆ. யோவான் 4:35-36 வசனங்களில் இயேசு, இவ்வாறு கூறுகிறார்: "அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல் நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச்சந்தோஷப் படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப்பலனைச்சேர்த்துக் கொள்ளுகிறான்." (நித்திய ஜீவனுக்காக ஆத்துமாக்களை)

இ. "அறுவடை" "வேலையாட்கள்" ஆகிய இவற்றிற்கிடையே அதிக வேறுபாடு இருக்கிறது. அறுவடை செய்யவேண்டிய ஆத்துமாக்கள் ஏராளமாக இருக்கிறார்கள், ஒரு பெரிய குழு இருக்கிறது. அநேக ஆத்துமாக்கள், செய்யவேண்டியவைகள் அதிகம். மிகுதியான அறுவடை ஆனால், ஒரு சில வேலையாட்களே கீழ்க்கண்டகாரியங்களைச் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

1. கடினமான உழைப்பு

2. ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய முயற்சி எடுப்பது.

3. ஆத்தும அறுவடைக்கு முதலிடம் கொடுப்பது.

4. அலைக்கழிக்கப்பட்டு, உதவியற்று இருக்கும் ஆத்துமாக்களுக்கு உதவி கிடைக்கச் செய்வதில் கவனம் செலுத்துவது.

ஈ. அறுவடை ஏராளமாகவும், வேலையாட்கள் சிலராகவும் இருப்பதினால், அதைக்குறித்து ஏதாவது செய்யவேண்டும். "ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள், என்றார்". இயேசுவின் சீடர்கள், அவருடைய வயல்களின் அறுவடைக்கு, தேவன் வேலையாட்களை அனுப்பும்படி, அவரை நோக்கி ஜெபிக்க வேண்டும். அவர் பதிலளிக்கும்மட்டும், கர்த்தரோடு உன்னை இணைத்து, கெஞ்சி, பிச்சை கேட்பது போல் கேட்க வேண்டும். சத்தமிட்டுக் கதறி அழுது, கண்ணீரோடு, கர்த்தரிடம் விண்ணப்பம் செய்யவேண்டும்.

எ. "அறுப்புக்கு எஜமான், தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி, அவரை வேண்டிக்கொள்ளுங்கள்," என்று இயேசு கூறியபின், உடனடியாக, அவர் அவருடைய பன்னிரெண்டு சீடர்களையும் அனுப்பினார். (10:1). அவர்களுக்கு அவர் கூறிய அவருடைய அறிவுரைகளே, இன்றும் அவருடைய அறுவடை வயல்களில் வேலைசெய்ய, அவர் அனுப்ப விரும்புகிறவர்களுக்கும் உரியது. (10:7-8) இதுவே நாம், தேவனுடைய வயல்களில் அறுவடை செய்யச்செல்லும்போது, கவனிக்கவேண்டிய காரியங்கள். வயல்களில் அறுவடை செய்யும்படி, நாம் அனுப்புகிறவர்களிடத்திலும், நாம் இவைகளையே, எதிர்பார்க்கவேண்டும்.

முடிவுரை

அ. அறுவடை செய்யும்படி மிக அதிகமான ஆத்துமாக்கள் இருக்கிறார்கள். ஆனால் வெகு சொற்ப வேலையாட்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே பல காரியங்களைச் செய்யும்படியாக நான் உங்களை கட்டாயமாக அறைகூவி அழைக்கவேண்டும்:

அறுவடை செய்யப்படவேண்டிய ஆத்துமாக்கள் ஏராளமாக, உலகத்தில் இன்று இருக்கின்றனர்

மத்தேயு 9:35-38

1. அறுவடை வயல்களுக்கு வேலையாட்களை அனுப்பும்படியாக, சத்தமிட்டு, கண்ணீரோடு அழுது கெஞ்சி, அதிகநேரம் ஜெபத்தில் செலவிட்டு தேவனை நோக்கி விண்ணப்பம் செய்யவேண்டும்.

2. உலகத்திலுள்ள, அறுவடை செய்யாத, மிகப்பெரிய அறுவடை நிலங்களைக் குறித்த தரிசனத்தைப் பெற்றுக்கொள்.

3. அறுவடை நிலங்களுக்குத் தேவையான தகுதியுடைய வேலையாட்களைத் தெரிந்துகொள்.

4. அறுவடை வயல்களில் வேலைசெய்பவர்கள், நடப்பிக்கவேண்டிய கிரியைகளைக் குறித்து, தெளிவான விளங்கிக் கொள்ளுதலுக்குள் வா.

5. அறுவடை வயல்களுக்கு உன்னை அனுப்ப அவர் சித்தங்கொண்டிருக்கிறாரா என்று, உன் இருதயத்தைத் திறந்து தேவனிடம் கேள்.

6. கடைசியாக, அறுவடை நிலங்களுக்குச் செல்ல, தேவனால் அழைக்கப்பட்டு, வாஞ்சையுடன் இருக்கும் ஊழியர்களுக்கு உதவி செய்யும்படி நீ வாக்குக்கொடுக்க பலன் தரும்படி, தேவனிடம் வேண்டிக்கொள்.

ஆ. இது ஒரு பெரிய சபையாக இருக்கவேண்டுமென்று நீ விரும்பினால் நீ, இவ்வாறு இருப்பாய்:

1. ஊழியர்களை அனுப்பும் எண்ணமுடைய சபை.

2. ஊழியர்களை அனுப்பும் சபை.

3. ஊழியர்களுக்குக் கொடுக்கும் சபை.

இ. இதற்கு பதில் சொல்லுமாறு கேட்டுக்கொண்டு ஜெபத்திற்காக அர்ப்பணிக்கும் இடத்தைத் திறந்து வை.

இயேசுவும் யோவான் ஸ்நானனும்

மத்தேயு 11:2-19

முன்னுரை

அ. அவர், "கடற்கரையருகிலும், யோர்தான் நதியோரத்திலுமுள்ள புறஜாதியாருடைய கலிலேயாவிலும்," ஊழியம் செய்தபோது (ஏசாயா 9:1-2). இயேசு ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை அப்படியே நிறைவேற்றினார். ஆவிக்குரிய இருள் சூழ்ந்த அந்த நாட்டில் அவர் ஒரு விளக்கைப்போல் பிரகாசித்தார். யோவான் சிறையில் வைக்கப்பட்டபின், முதன் முறையாக அங்கு சென்றார். (மத்தேயு 4:12-17; 14:1-12)

ஆ. இந்த சந்தர்ப்பத்தில், அவர், அவருடைய சீஷர்களுக்கு கீழ்க்கண்டவற்றை கூறிய பின் உண்மையிலேயே

1. அவர்களுடைய ஊழியத்தைப் பற்றிய அறிவுரைகள் கொடுத்தார்.

2. பொல்லாத ஆவிகளைத் துரத்தவும், எல்லா நோய்களையும், வியாதிகளையும் குணமாக்கவும் அதிகாரம் கொடுத்தார்.

3."தேவனுடையஇராஜ்ஜியம்சமீபமாயிருக்கிறது" என்ற செய்தியை அறிவிக்கும்படி, காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் மக்களிடத்திற்கு அவர்களை அனுப்பினார்." (மத். 10:1-42)

1. இயேசு மேசியாதான் என்பதைக் குறித்து யோவான் சந்தேகப்பட்டான் (11:2-6)

அ. வச. 2-3. "அத்தருணத்தில் காவலிலிருந்த யோவான், கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு,தன்சீஷரில் இரண்டுபேரை அழைத்து வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான்." யோவான், டெட்ரார்க் என்ற ஏரோதுவினால் **(HEROD THE TETRARCH)** மார்க்கூயரஸ் (**MACHAERUS**) மலைக்கோட்டையிலுள்ள சிறையில் அடைக்கப்பட்டான். இது சவக்கடலுக்கருகாமையில் உள்ளது. "கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்து" என்பது, இயேசு தேவனுடைய இராஜ்ஜியத்தைப்பற்றிய நற்செய்தியை உபதேசித்தும், பிரசங்கித்தும் வந்ததையும், எல்லா நோய்களையும் வியாதிகளையும் குணமாக்கினதையும், பிசாசுகளை விரட்டியதையும் குறிக்கும். (9:35-36)

ஆ. "வருகிறவர் நீர்தானா" "வருகிறவர்" என்பது பொதுவாக மேசியாவிற்குக் கொடுக்கப்பட்டபெயர். (மாற்கு 11:9, லூக்கா 13:35, யோவான் 1:29-34). வரப்போகிற ஒருவரைக் குறித்து முன்னறிவிக்கப்பட்டதை (தீர்க்கதரிசிகளால்) இது குறிக்கிறது. இயேசுதான் மேசியா என்று யோவானுக்கு ஒரு சந்தேகமுமின்றி தெரியும் அவர் மக்களுக்கு அவரைச் சுட்டிக்காட்டி கூறியபோது, இதைத் தான் சொன்னார். அக்கினி நியாயத்தீர்ப்பு, மேசியாவின் ஊழியத்தின் ஒரு பாகம் என்று யோவான் அறிந்திருந்த காரியம் எப்படியிருப்பினும், கிறிஸ்துவின் ஊழியத்தில் காணப்படவில்லை. (மத்தேயு 3:10-12) எனவே அவர் இரண்டாவது சிந்தனைக்கு இடங்கொடுத்துவிட்டார்.

இ. வச. 4-5. "நீங்கள் கேட்கிறதையும், காண்கிறதையும், யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்." கிறிஸ்துவின் பதில், யோவானுக்குத் தேவையான நம்பிக்கையை உறுதிபடுத்தியது

இயேசுவும் யோவான் ஸ்நானனும்

மத்தேயு 11:2-19

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின், மேசியாவைக்குறித்த வாக்குத்தத்தங்கள், கிறிஸ்து நடப்பித்துக் கொண்டிருந்த கிரியைகளுடன், நேரடியான சம்பந்தம் உடையதாய் இருந்தது (ஏசாயா 29:18-19, 35:5-6, 61:1-2) இந்த வேதபாகங்களில், யோவான் எதிர்பார்த்த அக்கினி நியாயத்தீர்ப்பும் உள்ளடங்கும். இது தற்காலிகமாக சில காரணங்களுக்கான தாமதப்படுத்தப்பட்டது என்பது மட்டுமே அதில்காணப்படும் சிறுவேறுபாடு!

ஈ.வச.6."என்னிடத்தில்இடறலடையாதிருக்கிற வன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்." இது ஒரு சமயம் இவ்வாறு வாசிக்கப்பட்டிருக்கவேண்டும். கிறிஸ்துவை விட்டு பிரிந்து செல்லாதிருக்கிற மனிதன் மகிழ்ச்சியுடன் இருப்பான். ஏனெனில், அவர் தேவனுடைய இராஜ்ஜியத்தினுடைய விரோதிகளை, நியாயந்தீர்த்து, இன்னும் அழிக்கவில்லை" கிறிஸ்துதான் மேசியா என்பதைச் சந்தேகிக்கிறவர்கள், அவர், இந்த உலகத்திற்கு வந்தபோது, எப்படியிருப்பார், என்ன கிரியைகள் நடப்பிப்பார் என்பதைக் குறித்து, அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை மறுபடியும் அவசியம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவருடைய வாழ்க்கையும், கிரியைகளும், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கத்தரிசிகள் முன்னறிவித்தவைகளுடன் ஒத்து இருக்கிறது என்பதை அவர்கள் விளக்கிக் கொண்டார்களாகில் அவர்கள் விசுவாசத்தையும், மகிழ்ச்சியையும் திரும்பபெற்றுக் கொள்ளுவார்கள்!

2. இயேசு, யோவானுக்கு புகழுரை அளிக்கிறார் (11:7-15)

அ. வச. 7-8. "...இயேசு யோவானைக் குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்னவென்றால்: எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றில் அசையும் நாணலையோ? ... மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ?" யோவானைப் புகழ்ந்து கூறுவதற்கும், தேவனுடைய இராஜ்ஜியத்தில் அவனுடைய பங்கை எடுத்துக் கூறுவதற்கும் முன், இயேசு, யோவானைப் பற்றிய தவறான கருத்துக்களுடன் கூடிய அவர்கள் எண்ணத்தை நீக்குவதற்காக, ஆழ்ந்த அர்த்தமுடைய இரண்டு கேள்விகளை, வாக்கு வன்மையுடன் கேட்டார்: "எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்?"

1. காற்றில் அசையும் நாணலையா? இது அநேகமாக, யோர்தான் நதிக் கரையோரமாகக் காணப்படும் பிரம்பு நாணல் புல்லைக் குறிக்கும். இது ஒரு நிலையற்ற அங்கும் இங்குமாக, பொது மக்களின் கருத்துக்களுக்கு இசைய, தன்னுடைய தீர்மானங்களில் நிலையற்று அலைசப்படுகிற ஒரு மனிதனைக் குறிப்பிட்டுக் கூறுகிறது.

2. மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? இது, அதிக சொகுசாகப் பெருவாழ்வு வாழ்பவனும், பணிவிடை செய்ய அநேக வேலையாட்களை உடையனுமாகிய ஒரு மனிதனை, ஒரு சமயம் குறிப்பிடப்பட்டிருக்கலாம்.

யோவான் மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு வகையில், ஒன்றையும் பொருத்தமாக உடையவனல்ல என்பது நிச்சயம். (மத்தேயு 3:1-2,4,7-10) அவர்கள் வனாந்தரத்திற்குச் சென்று பார்க்கச் சென்ற மனிதன் இப்படிப்பட்டவனல்ல!

ஆ. வச. 9-10. "தீர்க்கத்தரிசியையோ? ஆம், தீர்க்கத்தரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்...என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்" பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் (தேவனால் ஏவப்பட்டு பேசுகிறவர்கள் - வரப்போகும் காரியங்களை முன்னறிவிப்பவர்) எந்த ஒருவரைக்காட்டிலும் மேலானவர்.

இயேசுவும் யோவான் ஸ்நானனும்

மத்தேயு 11:2-19

யோவான் தான் இஸ்ரவேலின் மேசியா வருவதற்கு வழியை ஆயத்தம் செய்ய அனுப்புவேன் என்று, மல்கியா தீர்க்கத்தரிசி முன் உரைத்த தூதன். (மல்கியா 3:1, மத்தேயு 3:1-3; ஏசாயா 40:3) அவன் (யோவான்) உண்மையில் மேசியாவை, மக்களுக்கு அறிமுகப்படுத்தினான். (சுட்டிக்காட்டினான்) (யோவான் 1:29-34)

இ. வச. 11 "ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன்ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும் பரலோக இராஜ்ஜியத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் யாவரிலும் யோவான் ஸ்நானகனே மிகப் பெரியவன். ஏனெனில், மேசியா தோன்றிய காலத்தில் இவன் வாழ்ந்து, மக்களுக்கு உண்மையாகவே அவர்தான் மேசியா என்று சுட்டிக் காட்டினான். மற்ற பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும் முற்பிதாக்களும், மேசியா தோன்றப்போவதை மட்டும் முன்னறிவித்தனர்.

ஈ. ஆகிலும் பரலோக இராஜ்ஜியத்தில் சிறியவனாயிருக்கிறவன், யோவானைக் காட்டிலும் பெரியவனாயிருக்கிறான். கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைப்பதின் மூலமாக அதில் ஒரு பாகமாக இருக்கப்போகிறவர்களை இங்கு "தேவனுடையஇராஜ்ஜியம்"என்று குறிக்கப்படுகிறது. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கும் "மிகச்சிறியவனே", யோவான் ஸ்நானகனைவிடப் பெரியவன் என்று கருதப்படுவான்.

உ. சபை நிலைநாட்டப்படுவதற்கும், பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்படுவதற்கும் முன், யோவான் இரத்த சாட்சியாக மரிப்பான் என்பதை இது குறிக்கிறது. இக்காரணத்தினால், அவன் தேவனுடைய ஆவியினால், அவனுடைய ஆவி மறுபடியும் பிறக்கும் அனுபவத்தையும், அதனோடு சம்பந்தப்பட்ட ஆசீர்வாதங்களையும் அவன் அறிந்து, அனுபவிக்கவில்லை.

1. பாவ மன்னிப்பும், எல்லா குற்றமனச்சாட்சியும் அதனோடு தொடர்புடைய ஆக்கினைத் தீர்ப்பும் நீக்கப்படுவது.

2. பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நீதிமானக்கப்பட்டு, விடுதலையோடும், திட மனதோடும் அவருடைய சமுகத்தை அணுகும் பாக்கியம்.

3. உள்ளாக வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக, கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டதினால் சரீரமாகிய அவருடைய சபையின் ஒரு பாகமாக மாறும் சிலாக்கியம்.

4. அப்போஸ்தலர் 2:4 வசனத்தில் உள்ளபடி பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறும் அனுபவம்.

5. அவன் மூலமாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளங்கள், அற்புதங்கள் மற்றும் ஆவியின் வரங்கள் வெளிப்படும் அனுபவம்.

6. அவன் (யோவான் ஸ்நானகன்) பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் இயேசுவுக்கு வல்லமையான தைரியமுள்ள சாட்சியாக ஒருபோதும் இருந்ததில்லை. (அவன் இயேசுவை சுட்டிக் காட்டினான் அவ்வளவுதான் - அப்போஸ்தலர் 1:4-8) விசுவாசமும், இயேசு கிறிஸ்துவுக்கு வல்லமையான, தைரியமுள்ள சாட்சியாக இருப்பதும் ஒன்றாக நெருங்கி இணைந்திருக்கும் நிலையே பரலோக இராஜ்ஜியத்தில் உண்மையான மிகப்பெரிய காரியம்!

இயேசுவும் யோவான் ஸ்நானனும்

மத்தேயு 11:2-19

ஊ. வச. 12 "யோவான் ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோக இராஜ்ஜியம் பலவந்தம் பண்ணப்படுகிறது." "யோவான் ஸ்நானகன் காலமுதல்" என்றால், இயேசுவின் ஊழியம், யோவான் ஸ்நானகன் காலமுதல் முன்னேற்றமடைந்துவருகிறது. "பலவந்தம் பண்ணப்படுகிறது" என்றால் பலவந்தமாக அறிவிக்கப்பட்டு முன்னேறுகிறது என்று பொருள்படும். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது, குணமாக்குவது, மற்றும் பொல்லாத ஆவிகளைத் துரத்துவதின் மூலமாக, மனிதர்களின் வாழ்க்கைகளில், பிசாசின் கிரியைகளை, அவர் அழித்தார். (வச. 5, 1யோவான் 3:8, மத்தேயு 16:18)

எ. வசனம் 12. "பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்" தேவனுடைய இராஜ்ஜியத்தைப்பற்றி போதனைக்கு, அநேகர் செவிசாய்த்தார்கள் என்று இது அநேகமாகப் பொருள்படும். அவர்கள் பலவந்தமாக (பலத்துடன் சுறு, சுறுப்பாகவும் வாஞ்சையுடனும்) அதற்குள் (தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்) பிரவேசித்தார்கள். (லூக்கா 16:16) இயேசுவையும், அவருடைய சீடர்களையும், அவர்களுடைய செய்தியை ஏற்றுக் கொண்டவர்களையும், உபத்திரவப்படுத்துவதின் மூலமாக, மனிதர்கள் பரலோக இராஜ்ஜியத்திற்குரியவைகளைக் கெடுத்து, மிகுந்த துன்பத்தை விளைவித்தனர் என்றும், இந்தச் சொற்தொடர் பொருள்படும். (மத்தேயு 10:16-42). தேவனுடைய இராஜ்ஜியம் முன்னேற்றமடைந்து வருகிற அதே சமயத்தில் கொடுமையான மனிதர்கள் அதை எதிர்த்துத் தாக்கினார்கள்.

ஏ. வசனம் 13 "நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசிகள் யாவரும், யோவான் வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு" "யோவான் வரைக்கும்" என்றால் யோவான் உள்ளடங்க, அந்நாள் மட்டும் என்று பொருள்படும். பழைய ஏற்பாடு முழுவதும் (தீர்க்கதரிசிகளும், நியாயப்பிரமாணமும்) யோவான் உள்பட, அவன் காலம்வரை, தீர்க்கதரிசனம் கூறியுள்ளனர். ஆனால் இப்பொழுது, தேவனுடைய இராஜ்ஜியம் வெளிப்பட ஆரம்பித்துவிட்டது. மேசியா வந்துவிட்டார்! தேவனுடைய இராஜ்ஜியம், பலவந்தமாக முன்னேறுகிறது!

ஒ. வசனம் 14 "நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்" கிறிஸ்து தோன்றுவதற்கு முன், தேவனுடைய மக்களை ஆயத்தப்படுத்த, மல்கியாவினால் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்ட "எலியா" இந்த யோவான் ஸ்நானன். (மல்கியா 4:5-6; மத்தேயு 17:10-13) "நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால்" என்றால், இந்த சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் வெகுசிலரே, என்று பொருள்படும். மக்கள் யோவானை மேசியாவைக் குறித்து அறிவிக்க வந்த முன்தூதன் என்று ஏற்றுக்கொண்டால், அவர்கள் இயேசுதான் மேசியா என்பதையும் அவசியம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில் அவரைத்தான் யோவான், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களில் கூறப்பட்டவர் என்றும், இஸ்ரவேலின் நம்பிக்கை என்றும் சுட்டிக்காட்டினான்.

ஓ. வச. 15. "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" அல்லது இதை சற்று மேலும் தெளிவாக, "ஒருவனுக்கு ஆவிக்குரிய உட்பார்வை (ஆழ்ந்த அறிவு) இருக்குமானால், என்னை, இஸ்ரவேலின் மேசியா என்று யோவான் சுட்டிக்காட்டியது, உண்மை என்பதை விளங்கிக்கொள்ளுவான்."

3. தன்னையும், யோவானையும் மக்கள் கூட்டம் புறக்கணித்ததினிமித்தம் அவர்களைக் கண்டித்தார் (11:16-19)

இயேசுவும் யோவான் ஸ்நானனும்

மத்தேயு 11:2-19

அ. வச. 16-17 "இந்த சந்ததியை யாருக்கு ஒப்பிடுவேன்? சந்தைவெளிகளில் உட்கார்ந்து, தங்கள் தோழரைப் பார்த்து:..." சாதாரணமாகப் பிள்ளைகள் சந்தை கூடும் இடங்களில் உட்கார்ந்து விளையாடிக்கொண்டிருப்பார்கள். அவையாவன:

1. திருமணம் - "உங்களுக்காகக் குழல் ஊதினோம், நீங்கள் கூத்தாடவில்லை"

2. அடக்க ஆராதனை (நீத்தார்கடன் - ஈமச்சடங்கு) "உங்களுக்காகப் புலம்பினோம், நீங்கள் மாரடிக்கவில்லை" இந்த எடுத்துக்காட்டில், ஒரு குழு அடுத்த குழு, தாங்கள் விளையாடும்படி அழைத்த போது, அவர்கள் விளையாட வரவில்லையென்று, அவர்கள் மீது குறை கூறி குற்றப்படுத்துகிறார்கள். ஆகவே இயேசு, இந்த உதாரணத்தைத் தனக்கும், யோவானுக்கும் எடுத்துக்காட்டாக பயன்படுத்துகிறார். (11:18-19). இவருடைய செய்திக்கும் செவிசாய்க்க அநேக மக்கள் மறுத்துவிட்டனர்.

ஆ. வசனம் 18. "எப்படியெனில், யோவான் போஜனபானம் பண்ணாதவனாய் வந்தான்; அதற்கு அவர்கள்: அவன் பிசாசுபிடித்திருக்கிறவன் என்றார்கள்." (ஈமச்சடங்குடன் சம்பந்தப்பட்ட சிறுவர்களின் விளையாட்டை இது குறிக்கிறது. விருந்துகளில் கலந்துகொள்ளாமலும், திராட்சரசம், சாராயம் முதலிய பானங்களை அருந்தாமலும் யோவான் மிக எளிய வாழ்க்கை முறையைப் பின்பற்றினார். (மத்தேயு 3:4, லூக்கா 1:15) அவனுடைய (யோவானுடைய) தனிமையான மற்றும் சமுதாயத்திற்கு எதிர்மாறான நடத்தையின் காரணமாக, அவனை பிசாசு பிடித்தவனென்று அநேகர் கூறினார்கள்.

இ. வசனம் 19. 'மனுஷகுமாரன் போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார். அதற்கு அவர்கள், இதோ, போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறார்கள்'. அடுத்தபக்கம் பார்போமானால், இயேசு திருமணம் மற்றும் சிறப்பு விருந்துகளில் பங்கெடுத்து, ஜாதியிலிருந்து தள்ளப்பட்டவர்கள், பாவிகள், என்று கருதப்பட்டவர்களுடன், கலந்துரையாடி, பழகி வந்தார். (மத்தேயு 9:10-11, லூக்கா 15:1-2, யோவான் 2:1-2) இக்காரணத்தினால், அவர் போஜனப்பிரியன் மற்றும் மதுபானப்பிரியன் என்றும் பாவிகளின் நண்பன் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டார்.

ஈ. மற்றவர்கள் விளையாட விரும்பும் விளையாட்டுகளில் பங்கெடுக்க மறுக்கும் சிறுவர்களைப் போல, இந்தத் தலைமுறையில் உள்ள பெரும்பான்மையான மக்கள் (கிறிஸ்துவின் முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட மக்கள்) யோவான் ஸ்நானன் மற்றும் இயேசுவின் ஊழியத்தையும் செய்தியையும், ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுவார்கள்.

உ. 'ஆனாலும் ஞானமானது அதன் பிள்ளைகளால் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும். என்றார்'. இந்த சம்பவத்தைப் பற்றி லூக்கா எழுதிய வரலாற்றில், வேதம் இவ்வாறு கூறுகிறது: 'ஆனாலும் ஞானமானது, அதன் பிள்ளைகளெல்லாராலும் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும், என்றார்' (லூக்கா 7:35). யோவான் மற்றும் இயேசு ஆகிய இருவரின் உபதேசங்கள், ஞானத்தின் செய்திகளாகவும், இருவரின் வாழ்க்கை நடைமுறைகள், மக்கள் கூறியதையும், நினைத்தவைகளையும் தவிர்த்து, இது உண்மை என்று நிரூபிக்கிறது. இதே செய்தியை அறிவித்து இதே வாழ்க்கை நடைமுறையை அநுசரிக்கும், தேவனுடைய பிள்ளைகளாகிய மற்றவர்களுக்கும், இது இவ்வாறே கூறப்படும்! அவர்களும், ஞானமாக உருவெடுத்தவர்களாக', அவர்களுடைய கிரியைகளினால், அது உண்மை என்று நிரூபிப்பார்கள்.

இயேசுவும் யோவான் ஸ்நானனும்

மத்தேயு 11:2-19

முடிவுரை

அ. இன்றைய நமது வேதாகமம்:

1. இயேசு தான் மேசியா என்பதைப்பற்றிய சந்தேகத்தை யோவான் வெளிப்படுத்துகிறான்.

2. இயேசு யோவானுக்கு புகழாரம் சூட்டுகிறார்.

3. தன்னையும், யோவானையும், கூடியிருந்த மக்கள் புறக்கணித்ததினிமித்தம் கண்டிக்கிறார்.

ஆ. நம்முடைய வாழ்க்கையிலும், ஊழியத்திலும், சில காரியங்களுக்காக, அல்லது உபத்திரவம் மற்றும் துன்பத்தினிமித்தம், நாமும் கூட கர்த்தரைக் கேள்விகேட்கக் கூடிய நேரங்கள் நேரிடும். அநேகர், நம்மை கீழ்க்கண்டவாறு குற்றஞ்சாட்டக் கூடும்:

1. பிசாசு பிடித்தவன்

2. பெருந்தீனிக்காரன், ஜாதியிலிருந்து தள்ளப்பட்டவர் களுக்கும், பாவிகளுக்கும் நண்பன்.

இ. கிறிஸ்துவின் நமது செய்தியும், நாம் வாழும் சன்மார்க்க நடைமுறையும், எப்படியும் நாம், தெய்வீக ஞானத்தின் பிரதிநிதிகள் என்பதை நிரூபணம் செய்யும்!

சோர்வடைந்த ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல்

மத்தேயு 11:25-30

முன்னுரை

அ. இயேசுவே, தேவனால் அனுப்பப்பட்ட மேசியா (அபிஷேகம் பண்ணப்பட்டவர்) என்று யோவான் கொடுத்த சாட்சியையும், அவனுடைய ஊழியத்தையும், கிறிஸ்துவின் நாட்களில், பூமியில் வாழ்ந்த பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அல்லது, மல்கியாவின் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்ட 'எலியா' மற்றும் 'நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய் வழியை ஆயத்தம்பண்ணுவான்' என்றும் கூறப்பட்டவன் அவன்தான் என்று அவர்கள் அறிந்து கொள்ளவில்லை (மல்கியா 4:5-6)

ஆ. இதன் விளைவாக, இயேசுவின் போதனைகள் மற்றும் ஊழியம் அல்லது மேசியா என்று அவர் உரிமைபாராட்டியது ஆகிய இவைகளை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. (1-12 வசனங்கள்) இக்காரணங்களினால், அவர் ஊழியம் செய்து வந்த பட்டணங்களை, அவர் கண்டனம் செய்தார். (வசனங்கள் 13-24)

இ. இருந்தபோதிலும் யோவானுடைய ஊழியத்தை ஏற்றுக்கொண்ட ஒரு சிறு குழு இருந்தது. ஆகவே, இவர்கள் இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொண்டனர். அவர்கள் வாஞ்சையுடன், பரலோக இராஜ்ஜியத்திற்குள் செல்லும் வழியாக பலவந்தமாக பிரவேசித்தார்கள். (11:12) தங்களுடைய ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கண்டடைந்தவர்களோடு, மேலே கூறப்பட்ட ஒவ்வொருவரும் உள்ளடங்குவார்கள்.

இதுவே நமது வேதபாகம்.

1.சிறுபிள்ளைகளுக்குரிய மனப்பான்மையுடையவர்கள், அவர்களுடைய ஆத்துமாக்களில், இளைப்பாறுதல் கண்டடைவார்கள் (11:25-26)

அ. வச. 25. "அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது: பிதாவே! வானத்துக்கும், பூமிக்கும் ஆண்டவரே!" 'அந்தச் சமயத்திலே' என்றால், இயேசு, கீழ்க்கண்ட காரியங்களை கூறிய நேரத்தில்:

1. யோவான் ஸ்நானனை புகழ்ந்து கூறினார். வரப்போவதாக எதிர்நோக்கியிருந்த "எலியா" என்று அறிமுகப்படுத்தினார். (11:2-19)

2. பெரும்பான்மையான அற்புதங்கள் நடத்தப்பட்ட பட்டணங்களைக் கண்டனம் பண்ணினார். (11:20-24)

ஆ. "நான் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்" என்றால், "நான் உம்மை ஏற்றுக்கொள்ளுகிறேன்" முழுவதும்(உம்சித்தத்தை) ஒத்துக்கொள்ளுகிறேன், நீர் யார் என்பதை அறிக்கையிடுகிறேன் என்று இங்கு பொருள்படும். தேவன் இப்படிப்பட்டவர் என்று இயேசு ஒப்புக்கொள்கிறார்:

1. பிதா - இது, இயேசுவைக் குமாரனாக்குகிறது. அத்துடன், வச. 27, இயேசு என்ன கூறப்போகிறாரோ, அதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறது.

2. வானத்துக்கும், பூமிக்கும் ஆண்டவர் - பிதா, சிருஷ்டிப்பு யாவற்றிற்கும் அரசன். அவர் எவ்வாறு தீர்மானிக்கிறாரோ அவ்வாறே, மறைப்பது அல்லது வெளிப்படுத்துவது ஆகியவற்றிற்கு அவரே இராஜா. கூறப்பட்ட இவைகள், 25-26 வசனங்களில் இயேசு கூறப்போகும் வார்த்தைகளுக்கு, நம்மை ஆயத்தப்படுத்துகிறது.

இ. இவைகளை ... மறைத்து, ... பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் ..., "இவைகள்" என்பது கீழ்க்கண்டவற்றைக் குறிக்கிறது.

சோர்வடைந்த ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல்

மத்தேயு 11:25-30

1. இயேசுதான் கிறிஸ்து என்பதைக் குறித்து யோவான் கூறிய சாட்சி மற்றும், கோராசின், பெத்சாயிதா, கப்பர்நகூம், ஆகிய பட்டணங்களில் இயேசு சிறப்பாக நடப்பித்த அற்புதங்கள்.

2. மேசியாவின் காலம் உதயமாவதையும், கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தினால் மட்டும் கிடைக்கும் இரட்சிப்பு (பரலோக இராஜ்ஜியம் என்று குறிக்கப்படுகிறது 11:12) ஆகிய இவைகளையும் இது குறிக்கும்.

ஈ. "இவைகள்",

1. "ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து ..." "மறைத்து" என்றால், ஒரு பொருளை பார்வையிலிருந்து நீக்கி, முழுவதும் ஒளித்து வைத்து விடுவது, அதை, ஒரு இரகசியமாக காத்துக்கொள்வது, என்று பொருள்படும். "ஞானிகளும், கல்விமான்களும்," இவர்கள் தங்களுடைய சுபதேவைகள் யாவும் பூர்த்தியாக அடைந்தவர்களாகவும், உலக அளவுகளின்படி, ஞானிகளாகவும், (மனதளவில் யாவும் செய்யக்கூடியவர்கள்) தங்களைக் குறித்து நினைத்துக் கொள்ளுகிறார்கள்.

2. "பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால்..." "வெளிப்படுத்தினபடியால்," என்றால், உள்ளே இருப்பது தெரியும்படியாக, மூடியை எடுத்துவிடுவது, என்று பொருள்படும். "பாலகருக்கு" என்றால், சிறுவர்களைப் போல் கபடமில்லாமல் இருப்பது, குழந்தைக்கு ஒப்பான விசுவாசத்தோடிருப்பவர்கள், என்று பொருள்படும்.

உ. சுபதேவைகள் யாவும் பூர்த்தியான நிலையில் உள்ளவர்களும் (செல்வந்தர்கள்) இந்த உலகத்தில் கல்விமான்களும், சாதாரணமாக, கிறிஸ்துவை இரட்சகராக, சாதாரணமாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை மற்றொரு முறையில் இது கூறுவதாகும். அவர்கள் இரட்சகர் தேவை என்பதை உணருவதில்லை. சிறுவர்களைப்போல் கபடற்றவர்கள், அழைக்கப்படும்போது எப்படியும்

கிறிஸ்து மீது அவர்கள் விசுவாசத்தை இயற்கையாக (சிரமமின்றி) வைத்துவிடுவார்கள். இந்த உலகத்தில் மிகப்பெரிய தேவையுடையவர்களாய் இருப்பதினால், இதைச் சாதாரணமாகச் செய்கிறார்கள். (மத்தேயு 19:14, 23-24, 18:2-4)

ஊ. வச. 26. "ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது." "பிரியமாயிருந்தது" என்றால், பிதாவாகிய தேவன் திருப்தியடைந்தார். அவருடைய இரட்சிப்பின் திட்டத்தை, ஞானிகளும், கல்விமான்களும் புறக்கணித்த போதிலும், குழந்தைக்கொத்த வாழ்க்கையும், விசுவாசமும் உடையவர்களால், அது ஏற்றுக் கொள்ளப்பட்டதினால், அவருடைய சித்தமும், நோக்கமும் வெற்றிகரமாக நிறைவேறினதை அறிந்து, மகிழ்ச்சியடைந்தார் என்று பொருள்படும். பிதாவாகிய தேவன் எப்போதும் கீழ்க்கண்ட தன்மையுடையவராக இருக்கிறார்:

1. சுப தேவைகள் யாவும் சம்பூரணமாகப் பெற்று அனுபவிப்பவர்கள், தங்கள் எதிர்மாறான நடவடிக்கைகளில் தொடர்ந்து செயல்பட்டு, தங்கள் சொந்த வழிகளில் சென்று, பின் அழிவில் விழட்டும்.

2. தாழ்மையுடனும், மிகுந்த தேவையிலும் இருப்பவர்கள் இரட்சிக்கப்படட்டும். (சங்கீதம் 31:23, நீதிமொழிகள் 3:34, யாக்கோபு 4:6, 1 பேதுரு 5:5)

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

சோர்வடைந்த ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல்
மத்தேயு 11:25-30

2. குமாரன், யாரைப் பிதாவிடம் அறிமுகப்படுத்துகிறாரோ, அவர்கள், தங்களுடைய ஆத்துமாக்களில் இளைப்பாறுதலைக் கண்டடைவார்கள் (11:27)

அ. "சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது." "ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றால், நம்பி கொடுத்தல், முழுவதும் ஒப்புவித்தல், மற்றொருவருக்கு சரணடைதல் அல்லது இணங்கிக்கொடுத்தல், என்று பொருள்படும். "சகலமும்" என்றால், வானத்திலும் பூமியிலும் எல்லா தெய்வீக அதிகாரங்களும் என்பதை குறிப்பிடும். (மத்தேயு 28:18, யோவான் 3:35) தன்னிடம் வருபவர்களுக்கு பிதாவை வெளிப்படுத்தும் பொறுப்புமுழுவதும், கிறிஸ்துவைச் சார்ந்தது என்பது, இங்கு சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆ. "...வேறொருவனும் குமாரனை அறியான். ...வேறொருவனும் பிதாவை அறியான்." "அறியான்" என்றால் அடையாளம் கண்டு கொள்வது அல்லது உணர்ந்து அறிவது, முழுவதும் புரிந்து தெரிந்து கொள்வது என்று பொருள்படும். ஆகவே, பிதா தவிர வேறொருவரும் குமாரனை அடையாளம் கண்டும் கொள்வது அல்லது முழுவதும் உணர்ந்து, அறிந்து கொள்வதும் கூடாத காரியம்.

இ. அவ்வாறே, பிதாவை இயேசு கிறிஸ்து அல்லது அவர் (இயேசு) யாருக்கு அவரை (பிதாவை) வெளிப்படுத்தத் தெரிந்துகொள்வாரோ அவர்களைத் தவற வேறொருவரும் பிதாவை அடையாளம் கண்டு கொள்வது அல்லது முழுவதும் உணர்ந்து, அறிந்து கொள்வதும் கூடாத காரியம். (யோவான் 14:6-7, அப்போஸ்தலர் 4:12, 1 தீமோத்தேயு 2:5). "வெளிப்படுத்த" என்றால் 25ஆவது வசனத்திற்குக் கூறப்பட்டதுபோல், உள்ளிருப்பது தெளிவாகத் தெரியும்படி, மூடியை எடுத்துவிடுவது.

ஈ. அவர் மூலமாகப் பிதாவோடு நமக்கு இருக்கப்போகும், புதிய தொடர்பை நமக்கு விளங்க வைப்பதற்காக, இயேசு, தமக்கும் அவருடைய பிதாவுக்குமுள்ள தொடர்பை, உதாரணமாக பயன்படுத்துகிறார். குமாரனை, மறைக்கவும் வெளிப்படுத்தவும் பிதாவுக்கு எவ்வாறு அதிகாரம் உள்ளதோ, அவ்வாறே, தம்மிடம் வருபவர்களுக்குப் பிதாவை வெளிப்படுத்த குமாரனுக்கு அதிகாரம் இருக்கிறது.

3. இயேசுவிடம் வந்தவர்கள், அவர்களுடைய ஆத்துமாக்களில் இளைப்பாறுதலைக் கண்டடைவார்கள் (11:28-30)

அ. வசனம் 28. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்." "வருத்தப்பட்டு" என்றால், கடினமாக வேலைசெய்து, மிக அதிகமாகக் களைப்படைவது, போராடி, கடுமையாக உழைத்து சோர்ந்து போவது, என்று பொருள்படும். "பாரஞ்சுமக்கிறவர்களே" என்றால், ஒரு மனிதன் மீதோ அல்லது ஒரு மிருகத்தின் மீதோ அதிகமான பாரத்தை ஏற்றிவிடுவதின் மூலமாக அளவுக்கதிகமான சுமையை தூக்க வைப்பது, மார்க்க சம்பந்தமான சடங்காச்சாரங்களை மிகைப்படுத்தி அதிக பாரப்படுத்துவது, என்று பொருள்படும். நியாயப் பிரமாணம் மற்றும் சமய சடங்காச்சாரங்கள், மார்க்கசம்பந்தமான பழக்கவழக்கங்கள், ஆகிய "பாரமான சுமைகளை" பரிசேயர்கள் மக்களின் தோள்கள்மீது ஏற்றுவதும் (மக்களைக் கண்டிப்பாகக் கடைபிடிக்கவைப்பது) இதில் உள்ளடங்கும். (மத்தேயு 23:4, அப்போஸ்தலர் 15:10)

சோர்வடைந்த ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல்

மத்தேயு 11:25-30

ஆ. வசனம் 28. "நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" "இளைப்பாறுதல்" என்றால், "இலகுவாக எடுத்துக் கொள்வது", ஓய்வு எடுத்துக் கொள்வது, புத்துணர்வு பெற்றுக்கொள்வது, களைப்படைந்த நிலையிலும், பாரச்சுமை, பயத்தின் அடிப்படையில் பணிந்து, சமய சட்டங்கள், மற்றும் சடங்காச்சாரங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதிலிருந்தும் விடுதலை பெறுவது, என்று இங்கு பொருள்படும். (எரேமியா 31:25) இது இரண்டையும் குறிக்கும்:

1. நமது இன்றைய பரீட்சைகள் மற்றும் உபத்திரவங்கள் மத்தியிலும் நாம் அனுபவிக்கும் ஆவிக்குரிய இளைப்பாறுதல் (சமாதானம்)

2. கிறிஸ்து திரும்பவரும்போது, கிடைக்கும் நித்திய இளைப்பாறுதல் அல்லது நாம் மரிக்கும்போது நமது ஆவிகள், விண்ணுலக மோட்சத்திற்குக் கர்த்தருடன் இருக்க செல்வது. (எபிரெயர் 4:1-10)

இ. வசனம் 29. "என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்." "நுகம்" என்றால் ஒன்றாக சேர்வது என்று பொருள்படும். இது சமபலமுள்ள இரண்டை ஒன்று சேர்க்கும் ஒரு நுகத்தடி இங்கு, ஒருமனிதன், மற்றொருவனோடு சேர்ந்து, இணைந்து, அவருக்கு ஊழியம் செய்வதைக் குறித்துக் கூறுகிறது. "என்னுடைய நுகம்" என்பது, முதல் முதலாக கிறிஸ்துவுடன் இணைக்கப்படவேண்டும் என்று காட்டுகிறது. இது சீஷத்துவத்தையும் குறிக்கும். கிறிஸ்துவோடு பிணைக்கப்படுகிறவர்கள், அவருடைய சீடர்கள், மாணாக்கர்கள், அவர்கள் அவரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்.

அவர்களுக்கு அவர் ஒருவர் மட்டுமே தெய்வீக ஆவிக்குரிய வெளிப்பாடுகளை அளிப்பவர்.

ஈ. வசனம் 29. "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்.... உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்." கிறிஸ்துவோடு நுகத்தில் இணைக்கப்படுவதைக் குறித்து நாம் பயப்படவேண்டியதில்லை. ஏனெனில், நாம் தாமதமாகக் கற்றுக் கொள்ளும்போதும் அவர் பொறுமையிழந்து, கோபப்படமாட்டார். நாம் தடுமாறும்போது, புறம்பே நம்மைத் தள்ளிப் போடமாட்டார். "சாந்தமும், மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்" என்றால், தோற்றத்திலும், ஆவியிலும், பணிவான, சாதுவான (தீவிரமில்லாத) பண்புடன் இருத்தல். இக்காரணத்தினால், கிறிஸ்துவின் சீடர்கள், அவருடைய சமூகத்தில், விடுதலையையும், இளைப்பாறுதலையும் கண்டடைவார்கள். அவர்கள், அவரோடு இருக்கும்போது, சுதந்திரமாகவும் புத்துணர்ச்சியுடனும் இருப்பார்கள். (எரேமியா 6:16)

உ. வசனம் 30 "என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது" கிறிஸ்துவோடு பிணைக்கப்படுவதும், அவரைச் சேவிப்பதும் இலகுவாயிருக்கும். இது நமது தோளின்மேல் லேசான பாரத்தைச் சுமப்பது போலிருக்கும். "மெதுவாயும் இலகுவாயும்" என்றால் என்னுடைய (இயேசுவுடைய) உபதேசங்கள், சன்மார்க்க சம்பந்தமாக, உங்களுக்குப் பயனுள்ளதாயிருக்கும். அவைகள், கடந்த காலத்தில் உங்களுக்கு இருந்த எந்தக் காரியத்தைக் காட்டிலும், மிகுந்த நன்மையைக் கொடுக்க முடியும் என்று அது நிருபித்துக்காட்டும். (1யோவான் 5:3)

முடிவுரை

அ. அவர்களுடைய ஆத்துமாக்களில் இளைப்பாறுதல் கண்டடையவேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் இருப்பவர்களுக்காகவே இந்த உபதேசங்கள் கொடுக்கப்பட்டது.

சோர்வடைந்த ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல்

மத்தேயு 11:25-30

அளவுக்கு அதிகமான கடின உழைப்பினால் நீ இளைப்படைந்து சோர்வடைந்துள்ளாய். இந்த வாழ்க்கைக்குரியவைகளுக்காகக் கவலைப்பட்டு, மிகுந்த பாரப்பட்டுள்ளவனாயிருக்கிறாய்.

ஆ. கிறிஸ்துவிடமிருந்து ஒரு தனிச்சிறப்பான அழைப்பு உனக்குக் கொடுக்கப்படுகிறது. அவரிடம் வா. அவர் சாந்தமும், மனத்தாழ்மையுமுள்ளவர். உன்னுடைய ஆத்துமாவில் இளைப்பாறுதல் கண்டடைவாய். தேவையானதெல்லாம், நீ சிறு குழந்தைக்குரிய பண்போடு அவரைக் கிட்டிச் சேரவேண்டும். அவர், உன்னைப் பரமபிதாவிடம் அறிமுகம் செய்துவைப்பார்.

இயேசுவானவர் மற்றும் பெயெல்செபூல்

மத்தேயு 12:22-37

முன்னுரை

அ. தேவனுடைய இராஜ்ஜியத்தைத் (ஆளுகையை) தொடர்ந்து எதிர்த்து நிற்பவர்கள், நித்தியமாகத் தண்டிக்கப்படுவார்கள்.

ஆ. இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், குருடும் ஊமையுமான, பிசாசுபிடித்த மனிதனிடமிருந்து பிசாசை விரட்டி குணமாக்கினபோது, அதைக் கண்டவர்கள், மிகவும் ஆச்சரியப்பட்டனர். (வியப்பில் மதிமிழந்தவர்கள் போலானார்கள்) இச்சம்பவத்தின் விளைவாக, அநேகர் இயேசுதான் மேசியாவாகிய "தாவீதின் குமாரனாக" இருக்கவேண்டும் என்ற எண்ணத்திற்கு அதிகமாக இடங்கொடுத்தனர் (அபிஷேகிக்கப்பட்ட தேவகுமாரன்).

இ. ஆனால், பரிசேயர் அந்த மனிதனிடமிருந்து இயேசு பிசாசை விரட்டி, குணமாக்கின, இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை, பரிசுத்த ஆவியினால் உண்டாகாமல், பிசாசுகளின் அதிபதியாகிய, சாத்தானால் ஏற்பட்டது என்று ஆலோசனை கூறி, அவர்களுடைய இந்த நம்பிக்கையை உடனடியாகத் தகர்த்தெறிந்தனர். இயேசுவானவர் கீழ்க்கண்டவாறு பதிலளித்தார்:

1. அவர்களுடைய குற்றச்சாட்டு எவ்வளவு பொருத்தமற்ற, நகைக்கத்தக்கது என்று காட்டினார்.

2. பரிசேயரை மட்டும் அல்லாமல் அங்கு அவர் பேசியவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த யாவரையும், "மன்னிக்கப்படக்கூடாத பாவம்" அல்லது "பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணம்" குறித்து எச்சரித்தார்.

1. மனித குலத்திற்கு, தேவனுடைய இராஜ்ஜியம், கிறிஸ்துவின் மூலமாக வருகிறது (12:25-29)

அ. வசனம் 25-26 "இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த இராஜ்ஜியமும் பாழாய்ப் போம்...." அவர்கள் இன்றும் பேசாதிருக்கும்போது, பரிசேயருடைய நினைவுகளை, இயேசு இயற்கைக்கு அப்பாற்பட்ட, தமது வல்லமையினால் அறிந்து கொண்டார். வேதபாரகர்கள், இயேசுவானவர் திமிர்வாதக்காரனுடைய பாவங்களை மன்னித்தபோது, அது தேவதூஷணம் என்று இயேசுவைக் குற்றஞ்சாட்டின நேரத்திலும் இது உண்மையாக இருந்தது (இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்தார்) (மத்தேயு 9:2-4).

ஆ. தங்களுக்குள், (இராஜ்ஜியங்களுக்குள்) தொடர்ந்து ஏற்படும் போராட்டம், அழிவில் முடிவடையும் என்பதைத் தெளிவுபடுத்தி, பரிசேயருடைய குற்றச்சாட்டுகளும், தர்க்கங்களும்எவ்வளவுபொருத்தமற்றதாகவும், கேலிக்குரியதாகவும் இருக்கிறது என்பதை, இயேசு விளக்கிக் காட்டினார் (வசனம் 25-26) "பாழாய்ப்போம்" என்றால், ஒன்றுமில்லாமல் போவது, பாலைவனம்போல பயன்படுத்த முடியாத நிலம், என்று பொருள்படும். பட்டணங்கள், குடும்பங்கள் ஆகியவற்றைப்போல, ஆவிக்குரிய இராஜ்ஜியங்கள் மற்றும் ஆளுகைகளுக்கும், இது அவ்வாறே உண்மையாக இருக்கும்.

இயேசுவானவர் மற்றும் பெயெல்செபூல்
மத்தேயு 12:22-37

சாத்தானும் அவ்வாறே, தற்கொலை செய்வது அல்லது ஒரு மனிதனை விட்டு பிசாசுகளைத் துரத்துவது, (வெளியே தள்ளுவது, புறக்கணிப்பது, வெளியே தூக்கி எறிவது) மூலமாக அவனுடைய சொந்த ஆளுகை, மற்றும் இராஜ்ஜியத்தை அழிக்கமாட்டான்.

இ. வசனம் 27 "நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்?" சில யூதர்கள், சுற்றித்திரிந்து, பிசாசுகளைத் துரத்தத் தங்களால் கூடும் என்று உரிமையுடன் கூறிக்கொண்டது, வெளிப்படையான ஒரு காரியம் இருந்தாலும், அவர்கள் நிச்சயமாக அவ்வாறு செய்தார்களா, என்பது ஒருவாறு சந்தேகத்திற்குரியது. (அப்போஸ்தலர் 19:13,15-16) எப்படியிருப்பினும், இயேசு எழுப்பின கேள்விக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய பதில் ஒன்றுதான் உண்டு.

1. அவர்கள் "பெயெல்செபூல்" என்று கூறினால், அவர்களுக்கு சாத்தானுடன் தொடர்பு உண்டு என்பது வெளிப்படையாக தெரியவரும். பரிசேயரை விட்டுவிட்டாலும், இது எந்த யூதனுக்கும் ஏற்றுக்கொள்ள முடியாது. சாத்தானுடைய இராஜ்ஜியம், தனக்குள்ளே பிரிக்கப்பட்டால் அழிந்துபோய்விடும், என்ற இயேசுவின் பதிலும் இதைத் தள்ளிவிடும்.

2. தங்களுடன் சேர்ந்தவர்கள் "தேவனுடைய வல்லமையினால்" பிசாசுகளைத் துரத்தினார்கள் என்று கூறியிருப்பார்கள்.

ஈ. வசனம் 27 "ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்". "தேவனுடைய வல்லமையினால்" பிசாசுகளைத் துரத்துவதாக உரிமை பாராட்டும் யூதர்கள், இயேசு அதே வல்லமையினால் பிசாசுகளைத் துரத்தினார் என்பதற்கு, நிலையான சாட்சியாயிருக்கிறார்கள். இயேசுவானவர், "சாத்தானின் வல்லமையினால்" பிசாசுகளைத் துரத்தினார் என்று பரிசேயர் கூறியது, பொய் என்று இது நியாயந்தீர்க்கும். இது, ஒரு பட்டணத்தின், நீதிபதி, நியாயாசனத்தில் அமர்ந்து, இயேசுவுக்கு விரோதமாகப் பரிசேயர் கூறிய குற்றச்சாட்டுகள் யாவும், பொய் என்று அறிவிப்பதைப் படம் பிடித்துக் காட்டுவது போல் உள்ளது.

உ. வசனம் 28 "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய இராஜ்ஜியம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. "தேவனுடைய இராஜ்ஜியம்" என்பது, தேவனுடைய ஆளுகையை இங்கு குறிப்பிடுகிறது. கிறிஸ்து தோன்றின காலத்தில், தேவன் பூமியில் ஆவிக்குரிய ஆளுகையை, மனிதர்களின் இருதயத்திலிருந்து துவங்கினார். இது-

1. அவர்கள் மீது இருந்த சாத்தானின் ஆளுகையையும், இராஜ்ஜியத்தையும் அழிப்பது (யோவான் 12:31, 16 :11, 18:36).

2, சாத்தானின் வல்லமையிலிருந்தும், பாவசுபாவத்திலிருந்தும் அவர்களை விடுவிப்பது (1யோவான் 5:18-19, ரோமர் 8:1-4, அப்போஸ்தலர் 26:18)

3. உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கும், இராஜ்ஜியத்திற்கும் அடியில் அவர்களைக் கொண்டு வருவது (யோவான் 14:17,23, ரோமர் 8:9).

இயேசுவானவர் மற்றும் பெயெல்செபூல்

மத்தேயு 12:22-37

ஊ. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் இயேசு, பிசாசுகளை விரட்டியது, அவர்தான் வெகுகாலமாக எதிர்பார்த்த, மேசியா என்பதை நிரூபிக்கிறது. மனிதருடைய இருதயத்தில், மேசியாவின் (அபிஷேகிக்கப்பட்டவர், கிறிஸ்துவாகிய தேவனுடைய குமாரன்) ஆளுகை, இன்னும் முழுபூரணமாக இல்லாமல் இருந்தபோதிலும், இப்பொழுது ஆரம்பமாகிவிட்டது. சாத்தானுக்கு விரோதமான, தேவனுடைய போர் நடவடிக்கைகள், ஊக்கமாக துவங்கிவிட்டது. (மத்தேயு 11:12, அப்போஸ்தலர் 26:18, கொலோசெயர் 1:13, 1யோவான் 3:8) இது, முடிவாக, ஏழுவருட மகா உபத்திரவ காலத்தின் கடைசியில் முற்றுப்பெறும்.

எ. வச. 29. "அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக் கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம்." இது 28வசனத்தில் கூறப்பட்டவைகளை, மற்றொரு முறையில் சொல்லப்பட்டுள்ளது. இயேசுவானவர், மேசியாவாக சாத்தானுக்கும், பூமியில் அவனுடைய ஆட்சிக்கும் விரோதமாக, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாக, ஆவிக்குரிய போர்நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பமாகிவிட்டது:

1. அவர் சாத்தானுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசித்துவிட்டார்.

2. அவனைவல்லமையினால் மேற்கொண்டார்.

3. மனிதரை, அவனுடைய ஆளுகை மற்றும் இராஜ்ஜியத்திலிருந்தும் விடுவிக்க துவங்கிவிட்டார். இயேசு, கல்வாரி சிலுவையில் அறையப்பட்டபோது, சாவுக்கேதுவான அடி சாத்தான் மீது விழுந்தது. (கொலோசெயர் 2:15, லூக்கா 10:18, ரோமர் 16:20, ஆதியாகமம் 3:15)

2. தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தொடர்ந்து எதிர்ப்பவர்கள் நித்தியமாகக் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படுவார்கள் (12:30-37)

அ. வச. 30. "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கப்படுவான்." இயேசு இரண்டு காரியங்களை இங்கு தெளிவாகக் கூறுகிறார்.

1. ஒருவன் இயேசுவின் பக்கமாக இராமலும் (அவரைக் கிறிஸ்துவாகிய மேசியா என்றும், அபிஷேகிக்கப்பட்டவர் என்றும், தேவனுடைய குமாரன் என்றும் அறிக்கையிடாதவன்) தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆளுகைக்குள் இராமலும் இருப்பானாகில், அவன் சாத்தானின் பக்கமாக, அவனுடைய துன்மார்க்கமான ஆளுகைக்குள் இருப்பான்.

ஆ. இந்த இரண்டிற்கும் இடையே ஒரு பாகம் இல்லை. ஒருவன், ஒன்று கிறிஸ்துவுக்காக அல்லது அவருக்கு விரோதமாக இருக்கவேண்டும். அவன் கிறிஸ்து அண்டை (தேவனுடைய ஆளுகைக்கும், இராஜ்ஜியத்திற்கும்) மக்களைக் கொண்டுவரவேண்டும், அல்லது அவர்களை ஓடிப்போகும்படியாக வழிநடத்தவேண்டும். (சாத்தானிடம் மற்றும் அவனுடைய இராஜ்ஜியத்திற்கும், ஆளுகைக்குள்ளும்) இது, பரிசேயர்களும், வேதபாரகர்களும், இயேசுவின் காலத்தில் இருந்ததுபோல, இன்றும் இது அவ்வண்ணமாகவே உண்மையாயிருக்கிறது!

**இயேசுவானவர்
மற்றும்
பெயெல்செபூல்
மத்தேயு 12:22-37**

இ. வசனம் 31-32 "ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்த பாவமும், எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை" மாற்கு மேலும் கூறுகிறார், "அசுத்த ஆவியைக் கொண்டிருக்கிறார் என்று அவர்கள் சொன்னபடியினாலே, அவர் இப்படிச் சொன்னார்" (மாற்கு 3:30). இயேசு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே, பிசாசு பிடித்த மனிதனை விடுதலையாக்கினார். ஆனால், பரிசேயரும் வேதபாரகர்களும், இதை சாத்தானுடைய சக்தி என்று கூறினார்கள். (மத்தேயு 12:22,24) அவர்கள் "...தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து..." இருக்கிறார்கள். (ஏசாயா 5:20)

ஈ. பரிசேயர்கள், 1. இயேசுவுக்கும் 2. பரிசுத்த ஆவியானவருக்கும் விரோதமாகப் பாவம் செய்தும்,தூஷித்தும்வந்தனர். இக்காரணத்தினால் இயேசுவானவர், அவருடைய விளக்கத்தை இரண்டு பாகமாகப் பிரித்துக் கூறுகிறார்:

1. "எந்தப் பாவமும், எந்தத் தூஷணமும் மனுஷனுக்கு மன்னிக்கப்படும். ... எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால், அது அவனுக்கு மன்னிக்கப்படும்." "பாவம்" என்றால், சன்மார்க்க நெறிக்கு விரோதமானது என்று இங்கு பொருள்படும். "தூஷணம்" என்றால் பொல்லாப்பாக பேசுவது, கடுமையாகத் தாக்குவது,

2. வசை மொழிகளைக் கூறுவது (திட்டுவது), அவதூறான வார்த்தைகளை ஒருவருக்கு விரோதமாகப் பேசுவது, தேவனால் அபிஷேகிக்கப்பட்ட மேசியாவாகிய இயேசுவின் மகிமைக்குப் பங்கம் ஏற்பட துணிந்து கூறுவது. அறிக்கையிடப்பட்ட எல்லா பாவமும், மேசியாவாகிய இயேசுவுக்கு விரோதமான தூஷணமும் மன்னிக்கப்படும். (1யோவான் 1:9, ஏசாயா 55:7)

2. "ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை..எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால், அது. மன்னிக்கப்படுவதில்லை" எப்படியிருப்பினும் இது பரிசுத்த ஆவியானவரிடம் வரும்போது உண்மையாக இருக்காது. ஆனால் ஏன் இந்த வேறுபாடு? ஏனெனில்,

அ. மேசியாவின் காலத்தில், பரிசுத்த ஆவியானவர், அவர்கள் உள்ளத்தில், பாவத்தைக் குறித்தும் நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும் கண்டித்து உணர்த்தி, கிறிஸ்துவின் பக்கமாக அவர்களை இழுத்துக் கொள்ளாவிட்டால், மனிதர்கள் மனந்திரும்ப முடியாது. (யோவான் 16:7-11, 6:44) ஆகவே, அவர்கள், பரிசேயரைப்போல், தொடர்ந்து பரிசுத்த ஆவியானவரின் சாட்சியை புறக்கணித்தால் (விசுவாசிகள் மூலமாக, தெய்வீகமாக ஸ்தாபிக்கப்பட்ட சுவிசேஷ ஊழியங்கள் மற்றும் அடையாளங்கள் அதிசயங்கள், மற்றும் அற்புதங்கள், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் முதலியன) அவர்கள், தங்களைப் பாவமன்னிப்பிற்கு கிறிஸ்துவின் பக்கமாக வழிநடத்தக்கூடிய அந்த ஒரே ஒருவரை எதிர்த்து, அவரைப் புறக்கணிக்கின்றனர்.

இயேசுவானவர் மற்றும் பெயெல்செபூல்
மத்தேயு 12:22-37

ஆ. அவர்கள், பரிசுத்த ஆவியானவரின் கிரியையைத் தொடர்ந்து எதிர்த்துப் புறக்கணிப்பார்களாகில், அவர்கள் கிறிஸ்துவண்டைக்கும் இரட்சிப்புக்கும் கொண்டுவரப்படக் கூடாத அந்த அளவிற்கு, அவருக்கு விரோதமாக, அவர்கள் கடினப்பட்டுப் போவார்கள். இதனால் தான் அநேகர் இதை, "பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான மன்னிக்கக்கூடாத பாவம்" என்று அழைக்கின்றனர்.

எ. வசனம் 32. "இம்மையிலும் மறுமையிலும்" "இம்மையில்" இது கிறிஸ்து மனிதனாக மாம்சத்தில் தோன்றின காலத்திலிருந்து, சபையை மகிமையோடே வானங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளத் திரும்ப வரும் நேரம் வரை என்று பொருள்படும். இது மேசியாவின் காலம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் காலம் எனப்படும். "மறுமையில்" என்பது, சபை மகிமையோடே மேகங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ளப்பட்டதிற்கு பின்பு உள்ள காலம் என்று பொருள்படும். இது நித்தியத்தைக் குறிக்கும்.

ஏ. வசனம் 33-35. "மரம் நல்லதென்றால் அதன் கனியும் நல்லதென்று சொல்லுங்கள். மரம் கெட்டதென்றால், அதன் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள், மரமானது அதன் கனியினால் அறியப்படும்" இயேசுவின் கிரியைகள் நல்லவைகளாக இருந்தது. அது அவர் நல்லவராகவே இருந்தார் என்று நிரூபிக்கிறது. அவர் சாத்தானிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்.

உ. வசனம் 34-35 "விரியன் பாம்புக் குட்டிகளே.." அடுத்த பக்கம் பார்ப்போமானால், பரிசேயர்களும்வேதபாரகர்களும், விஷப்பாம்புகளின் சந்ததிபோல் (குடும்பம்) இருந்தார்கள். அவர்கள் உள்ளத்திலுள்ள துன்மார்க்கம், அவர்கள் வாயிலிருந்து வெளிவந்தது. அவர்கள் பொல்லாப்பு பேசி, கடுமையாகத் தாக்கி, அவதூறான வசைமொழிகளைக் கூறி, இயேசுவையும் (மேசியா மற்றும் தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர்) பரிசுத்த ஆவியானவரையும் தூஷித்தனர். அவர்கள் கெட்ட மரங்களைப்போல, கெட்ட கனிகளைக் கொடுத்தார்கள். (மத்தேயு 7:15-18, 3:7-8)

ஊ. வசனம் 36-37 "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே.. குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" இருதயத்தில் எதை விசுவாசிக்கிறோமோவாயிருந்துஎன்னபேசுகிறோமோ.அவைகளுக்குநித்தியமானவிளைவுகள் உண்டு:

1. பரிசேயர், மற்றும் வேதபாரகர்களைப் போல, தொடர்ந்து பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக தூஷணம் கூறி, பாவம் செய்து, மனந்திரும்பி, கிறிஸ்துவண்டை வர அவர் அழைப்பைப்புறக்கணிப்பவர்கள் குற்றவாளிகளாகத் தீர்க்கப்படுவார்கள். (நியாயத்தீர்ப்படைவார்கள், குற்றம் செய்தவர்களாக அறிவிக்கப்படுவார்கள், நித்தியமாகநரகத்தில்வாதிக்கப்படதீர்ப்பளிக்கப்படுவார்கள்)(வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15).

2. ஆனால், பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் பக்கம் திரும்புகிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். (விடுவிக்கப்படுவார்கள்) கபடற்றவர்களென்றும், நீதிமான்கள் என்றும் அழைக்கப்படுவார்கள், குற்றமற்றவர்களென்றும், நீதிசெய்தவர்கள் என்றும் அறிவிக்கப்படுவார்கள், (விடுதலையடைவார்கள்) அவர்கள் தங்கள் இருதயத்தில்இயேசுவேகிறிஸ்து(அபிஷேகிக்கப்பட்டவர், தேவனுடைய குமாரன்) என்றும் அவர் கர்த்தர் என்றும், விசுவாசிக்கின்றனர். (1யோவான் 5:10; ரோமர் 8:16, 1கொரிந்தியர் 12:3, 1யோவான் 4:2-3)

**இயேசுவானவர்
மற்றும்
பெயெல்செபூல்**

மத்தேயு 12:22-37

முடிவுரை

அ. தேவனுடைய இராஜ்யத்தின் ஆளுகை, மனிதகுலத்திற்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாக வந்தது. அது, இப்பொழுது, பரிசுத்த ஆவியானவரின் சாட்சி மற்றும் அவர் கிரியை மூலமாக வருகிறது. ஆகவே, பரிசுத்த ஆவியானவரைத் தொடர்ந்து எதிர்த்து நின்று, அவருக்கு விரோதமாகத் துன்மார்க்கமாகப் பேசுகிறவர்கள் (அவர்தான் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகிறவர். கிறிஸ்துவின் பக்கமாக நம்மை இழுத்துக் கொள்ளுகிறவர்) இம்மையிலும், மறுமையிலும் பாவமன்னிப்பை கண்டடைய மாட்டார்கள்.

ஆ. பரிசுத்த ஆவியானவரைத் தொடர்ந்து எதிர்த்து நிற்பவர்கள், பாவ மன்னிப்படையாமல் நித்திய அக்கினியில் தள்ளப்பட, நியாயந்தீர்க்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள். இயேசுவுடன் பரிசேயர் எதிர்த்துத் தர்க்கித்தபோது, இயேசுவானவர் கூறிய உபதேசங்கள், இப்பொழுதும் ஒவ்வொரு நபருக்கும் பொருத்தமாக இருக்கிறது

இந்த பொல்லாத சந்ததியாரும் யோனாவின் அடையாளமும்
மத்தேயு 12:38-45

முன்னுரை

அ. இந்த வேதபாகத்தில், பரிசேயரும், வேதபாரகர்களும், இயேசு தம்மை மேசியா என்று உரிமை (அபிஷேகிக்கப்பட்டவர், தேவனுடைய குமாரர்) பாராட்டுவதற்கு அடையாளமாக, வெளிப்படையாகப் பார்க்கும்படியான அற்புதம் ஒன்றை வானத்திலிருந்து காட்டவேண்டுமென்று அதிகாரத்துடன் வற்புறுத்தினார்கள். பரிசேயர் மற்றும் வேதபாரகர்களின் இந்த மனப்பான்மையும், அதிகாரத்துடன் கேட்பதும், இந்த துன்மார்க்கமான, விபச்சாரச் சந்ததிக்குரிய உடன்பிறந்த பண்பு என்று மத்தேயு, குறிப்பாக எடுத்துக் கூறுகிறார்.

ஆ. நாம் பார்க்கப்போகும் வண்ணமாக அவர்களிடமிருந்து பிசாசுகளை விரட்டும்போது, வானத்திலிருந்து மேலும் அதிகப்படியான ஒரு அடையாளத்தையும் அதிகாரத்துடன் கேட்கும் மிகுந்த அபாயத்துடன் யோனா தீர்க்கத்தரிசியின் அடையாளமே அல்லாமல், மற்றபடி இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ள மறுக்கும் நிலையும் இணைந்திருந்தது.

1. இந்தப் பொல்லாத சந்ததிக்கு யோனா தீர்க்கத்தரிசியின் அடையாளம் மட்டுமே கொடுக்கப்படும். (12:38-40)

அ. வச. 38 "அப்பொழுது, வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்மால்ஒருஅடையாளத்தைக் காணவிரும்புகிறோம் என்றார்கள்."

பரிசேயர்களும், வேதபாரகர்களும் "வானத்திலிருந்து ஒரு அடையாளம்" ஒன்றை அவர் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டனர். (16:1, மாற்கு 8:11, லூக்கா 11:16). "உம்மால்" என்பது, அவர்கள் உடனடியாக அவருடைய கட்டளையின்படி, அதுவானத்தில் தோன்றும்படி, அவர்கள் விரும்பினார்கள்.

ஆ. வச. 39 "அவர்களுக்கு அவர் பிரதியுத்திரமாக: இந்த பொல்லாத விபச்சாரச் சந்ததியார் அடையாளம் தேடுகிறார்!" "பொல்லாத" என்றால், வேதனையையும் துன்பத்தையும், ஆபத்தையும் உண்டாக்கும், சீர்கெட்ட, கடினமான துஷ்டர் என்று பொருள்படும். "விபச்சார" என்றால், ஒரு விபச்சாரம் செய்யும் ஸ்திரியைப்போல் (வேசி). இது, ஒருபெண் அவளுடைய கணவனுக்கு உண்மையற்றவளாக இருப்பதுபோல் இருக்கிறது. (ஓசியா 4:12, 5:4, 9:1) இந்த சந்தர்ப்பத்தில், இந்த யுக மக்கள், தேவனுக்கு உண்மையற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள், ஆவிக்குரிய விபச்சாரம் செய்கிறவர்களாயிருந்தனர். தொடர்ந்து அவ்வாறே காணப்படுகிறார்கள். (யாக்கோபு 4:4)

இ. ஆகவே, பொல்லாத, விபச்சார சந்ததியாராகப் பரிசேயரும், வேதபாரகர்களும் மட்டுமே அறியப்பட்டவர்களாக இல்லை. அவர்கள் காலத்திலிருந்த முழு தலைமுறையையும் அவர்கள் பிரதிபலிப்பவர்களாக இருந்தனர். (11:16-24)

ஈ. தான் தேவனிடமிருந்து வந்ததாகக் கூறும் தீர்க்கதரிசிகள் அல்லது தூதர்கள் ஆகிய யாவரிடமும், யூதர்கள், இயற்கைக்கு அப்பாற்பட்ட, அடையாளங்களை எப்போதும் கேட்பார்கள். (1கொரிந்தியர் 1:22-23). மனிதர்களை, மனந்திரும்புவதற்கும், அவர் பேரில் விசுவாசம் வைக்கும்படியான நோக்கத்தோடு, இயேசு அநேக அடையாளங்களையும், அற்புதங்களையும் அவர்கள் மத்தியில் எப்போதும் நடப்பித்தார்.

இந்த பொல்லாத சந்ததியாரும் யோனாவின் அடையாளமும்

மத்தேயு 12:38-45

இந்த அடையாளங்கள் மற்றும் அற்புதங்களின் பலனாக, அவர்கள் அவர்பேரில் விசுவாசம் வைக்கவில்லை என்றால், அவர் வானத்தில் ஒரு அடையாளம் தோன்றும் அற்புதத்தைச் செய்தாலும் கூட அவர்கள் விசுவாசிக்க மாட்டார்கள். (யோவான் 5:36, 10:38, 14:11). இக்காரணத்தினால்தான், யோனா தீர்க்கதரிசியின் அடையாளமே அல்லாமல் மேலும் வேறு ஒரு அடையாளமும் கொடுக்கப்பட மாட்டாது என்று இயேசு கூறினார்.

உ. வச. 39-40 "ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம்இவர்களுக்குக்கொடுக்கப்படுவதில்லை" கிறிஸ்து, மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்பினதையே, யோனாவின் அடையாளம் குறிப்பிடுகிறது. (யோவான் 1:17, 2:10). இது, இந்த சம்பவத்தின் தீர்க்கதரிசன முன்நிழலிடும் அடையாளமாக இருக்கிறது. கல்லறையில் மூன்று நாட்கள் காலத்திற்குப்பின், அவருடைய சரீரம் மரித்தோரிலிருந்து எழும்பினது. சந்தேகத்திற்கு இடமில்லாமல்,இயேசுவே,தேவனுடைய குமாரனாகிய மேசியா, மற்றும் உலக இரட்சகர் என்பது நிரூபிக்கப்படுகிறது. (ரோமர் 1:4, மத்தேயு 16:21)

ஊ. எவ்வாறு ஒரு இராட்சத மீனின் வயிற்றில், யோனா இருந்தானோ, அவ்வாறே இயேசுவானவர் கல்லறையில் மூன்று நாட்கள் இருந்தார். எவ்வாறு மீனின் வயிற்றில் நிச்சயமானமரணத்திலிருந்துவிடுவிக்கப்பட்டானோ, அவ்வாறாகவே இயேசுவும், மரித்தவராகக் கல்லறையிலிருந்து (பூமியின் இருதயத்திலிருந்து) உயிரோடு எழுப்பப்பட்டார்.

கல்லறையில் அவருடைய சரீரம் இருக்கும்போது, இயேசுவின் ஆவி, காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கிக்க சென்றதை ஒருவேளை இது குறிப்பிடலாம். (லூக்கா 23:43, 1பேதுரு 3:19)

2. யோனாவின் அடையாளத்தை இந்த பொல்லாத விபச்சார சந்ததியார் ஏன்றுக் கொள்ளமாட்டார்கள். (12:41-42)

அ. வசனம் 41. "யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள்... ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள்." "நியாயத்தீர்ப்பு" என்பது, காலத்தின் முடிவில் நடைபெறயிருக்கும் பெரிய வெள்ளை சிம்மாசன நியாயத்தீர்ப்பைக் குறிக்கும். (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-13) "குற்றஞ்சுமத்துவார்கள்" என்றால், ஒரு நீதிபதியின் முன் நிற்க வைக்கப்பட்டு, குற்றவாளி என்று நியாயந்தீர்க்கப்படுவது என்று பொருள்படும். இந்த சம்பவத்தில், ஆவிக்குரிய மரணத்திற்கும், நரக அக்கினியில் தள்ளப்பட்டு, நித்தியமாக தேவனைவிட்டு பிரிக்கப்பட நியாயந்தீர்க்கப்படவது. (வெளிப்படுத்தின விசேஷம் 20:14-15)

ஆ. "இந்தச் சந்ததியாரோடு" என்பது, கிறிஸ்து முதலில் தோன்றிய காலத்திலிருந்து, அவர் இரண்டாம் முறை வந்து சபையை மகிமையோடு மேகங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளும் நாள் வரைக்கும் உள்ள இடைப்பட்ட காலம். (1தெசலோனிக்கேயர் 13-17) நினிவேப் பட்டணத்து மக்கள், மனந்திரும்பி தங்கள் விசுவாசத்தை மரித்தோரிலிருந்து எழுந்த இயேசுவின் மீது (அல்லது அவருடைய உயிர்த்தெழுதலைக்குறித்து, அவருடைய சீஷர்கள் செய்த பிரசங்கத்தைக் கேட்டு) விசுவாசம் வைக்காத இந்த சந்ததியாருடன் எழுந்து நின்று அவர்களுக்கு விரோதமாகக் குற்றஞ்சுமத்துவார்கள்.

இந்த பொல்லாத சந்ததியாரும் யோனாவின் அடையாளமும்

மத்தேயு 12:38-45

நினிவே பட்டணத்து மக்கள் மனந்திரும்பி, இரட்சிக்கப்பட்டார்கள். (யோவான் 3:4-10). இந்த சந்ததியின் பெரும்பான்மையான மக்கள் அவ்வாறு (மனந்திரும்ப) செய்யமாட்டார்கள்.

இ. இயேசு, மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட்ட அற்புதமான அடையாளம், அவர் தேவனிடமிருந்து வந்தவர் என்றும் உலக இரட்சகர் என்றும் நிரூபிக்க யூதர்களுக்கு அவர்கள் அதிகாரத்துடன் கேட்டதை திருப்திபடுத்தவில்லை. இந்த தலைமுறை மக்களின் எதிர்பார்த்த அற்புதமாகவும், அவர்களை திருப்திபடுத்தப்போவதில்லை! கொடுக்கப்பட்ட ஒரே அடையாளம் இது ஒன்றுதான் என்பதே துக்ககரமான நிலை.

ஈ. வச. 42 "தென் தேசத்து இராஜஸ்திரீ பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். ... ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே, அந்த இராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடு எழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவாள்". "தென்தேசத்து இராஜஸ்திரீ" சாலொமோனுடைய மிகுந்த ஞானத்தைக்குறித்து தனக்கு அறிவிக்கப்பட்டவைகள். உண்மையானவைகள்தானா என்பதை சோதித்துப் பார்க்க சேபாவின் ராஜஸ்திரீ எருசலேமுக்கு வந்தாள். (1 இராஜாக்கள் 10:1-13) "பூமியின் எல்லைகளிலிருந்து" என்பது அரபியா தீபகற்பத்தைக் குறிக்கும். இதை யூதர்கள் பூமியின் எல்லைகளாக" கருதினார்கள்.

உ. இந்தத் தலைமுறை மக்களுக்கு விரோதமாக, நியாயத்தீர்ப்பு நாளில் அவள் எழுந்துநின்று குற்றஞ்சுமத்துவாள். சாலொமோன் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட, தேவனுடைய ஞானத்தை அவள் தேடிச் சென்றாள். இந்த சந்ததியார் தேவனுடைய ஞானத்தைத் தேடமாட்டார்கள்: சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து இயேசு (மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தவர்) (1கொரிந்தியர் 1:23-24, 2:6-8)

ஊ. வச. 41-42 "இதோ யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்... இதோ சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்." நினிவே பட்டணத்தார், யோனாவின் பிரசங்கத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள், தென்தேசத்து இராஜஸ்திரீ சாலொமோனுடைய ஞானத்தைத் தேடிவந்தாள். இவர்கள் இவ்வாறு கிரியை நடப்பித்திருக்கும்போது, யோனா மற்றும் சாலொமோன் ஆகிய இவர்களை விட மிகப் பெரியவரான (அல்லது தேவதூதர்கள்,

வானத்திலும் பூமியிலும் வேறு யாரைக் காட்டிலும்) இயேசுவானவரின் உபதேசங்களுக்கு, எவ்வளவு அதிகமாக, அக்கால மக்கள் செவிசாய்த்து, கீழ்ப்படிந்திருக்கவேண்டும்! இயேசுவின் சீடர்கள் மூலமாகக் கிறிஸ்துவின் போதனைகளையும், மரித்தோரிலிருந்து எழுந்த அவருடைய உயிர்த்தெழுதலைப் பற்றியும், கேட்கும் இக்காலத்து மக்களுக்கும் இங்கே கூறப்பட்டவைகள் பொருத்தமானதாக இருக்கும்! (ரோமர் 10:9-10)

3. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமையினால், பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட இந்த பொல்லாத சந்ததியைச் சேர்ந்தவர்கள், யோனாவின் அடையாளத்தை புறக்கணிப்பார்களேயானால் அவர்கள், முடிவு மிக மோசமாக இருக்கும்.

இந்த பொல்லாத சந்ததியாரும் யோனாவின் அடையாளமும்

மத்தேயு 12:38-45

அ. வச. 43. "அசுத்த ஆவி ஒரு மனுஷனைவிட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல்..." "வறண்ட இடங்களில்" என்பது, நீர் இல்லாத இடம், உலர்ந்த வனாந்தரம் போன்ற இடம் என்பதைக் குறிக்கிறது. "இளைப்பாறுதல்" என்றால், புத்துணர்வைப் பெறுவது, கடினவேலைக்கு இடையே ஒரு மாற்று வேலை என்று பொருள்படும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், ஒரு மனிதனிடமிருந்த பிசாசு துரத்தப்பட்டபோது, வறண்ட இடங்களில் தங்களுக்கு புத்துணர்வு பெற்று இளைப்பாறும்படியான இடத்தைத் தேடி அலைகின்றன. ஆனால், மனிதர்களைப் பிடித்துக்கொண்டு, அவர்களைத் துன்புறுத்தினாலே அல்லாமல், அவைகள் ஒருபோதும் திருப்திபடைவதில்லை.

ஆ. வசனம் 44. "நான் விட்டு வந்த வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்று சொல்லி, அங்கே". வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்டு... பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், ஒருவரிடமிருந்த பிசாசு துரத்தப்பட்டபோது, அவன் நன்றாகச் சுத்தம் செய்து எல்லாம் ஒழுங்காக வைக்கப்பட்ட, ஒருவரும் குடியிராத வீடுபோல் ஆகிறான்.

இ. வசனம் 45. "திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக் கொண்டு வந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்.

அப்பொழுது, அந்த மனிதனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாயிருக்கும்." அந்த வீட்டை காத்துக் கொள்ள, அதிகாரத்தோடும் வல்லமையோடும் பாதுகாக்கும் ஒருவர், அந்த வீட்டில் இல்லாமல் இருப்பதினால், பாவம் மற்றும் துன்மார்க்கமான சக்திகள், படையெடுத்து வந்து, அந்த வீட்டில் குடியிருக்கும்! ஆகவே, அந்த வீடு, ஒரு பிசாசு குடியிருந்தபோது இருந்த நிலைமையை விட அதிக மோசமான நிலையை அடையும். (2பேதுரு 2:21-22)

ஈ. வசனம் 45. "அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார்". இந்த பொல்லாத சந்ததியார், "யோனாவின் அடையாளத்தைத்" தவிர வேறொரு அடையாளம் தேடுகின்றனர். ஆனால் அதைத் தவிர வேறொரு அடையாளமும் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள், இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்பினார் என்ற சத்தியத்தின் அடிப்படையில், கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைக்கவில்லையாகையால், அவர்களுக்குள் வாசம் பண்ணி, அவருடைய மறுரூபமாக்கும் மற்றும் பாதுகாக்கும் வல்லமையோடுகூடிய பரிசுத்த ஆவியானவர், அவர்களுக்குள் இல்லை. அதன் விளைவாக, பிசாசினால் பிடிக்கப்படுவதற்கும் மற்றும் எல்லாவிதமான பொல்லாப்போடும், துன்மார்க்கத்தோடு சம்பந்தப்படுவதற்கு, அவர்கள் இருதயம் திறக்கப்பட்டதாக இருக்கிறது. (1யோவான் 5:18-19). அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பாமல் அல்லது அவர்களிலிருக்கும் பிசாசு விரட்டப்படாமலும் இருப்பார்களேயானால் அது தற்காலிகமான அசாதாரணத் தோற்றமாக இருக்காது. (நிரந்தரமாக பிசாசினால் வாதிக்கப்படுவர்).

உ. வசனம் 43-45 உள்ள வசனங்கள் உண்மையானவைகள். பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒருவருக்கு என்ன நேரிடுகிறது என்பதை உள்ளவாறு கூறுகின்றன. அவன் கிறிஸ்துவை மேசியாவாகவும், இரட்சகராகவும் (யோனாவின் அடையாளத்தின் அடிப்படையில்) ஏற்றுக்கொள்ளாவிட்டால், பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வாசம் பண்ணமாட்டார்

இந்த பொல்லாத சந்ததியாரும் யோனாவின் அடையாளமும்

மத்தேயு 12:38-45

இது இவ்வாறான நிலையில் இருக்கும்போது, விரட்டப்பட்ட பிசாசு, தன் சிநேகிதர்கள் சிலரோடு திரும்ப வந்துவிடும். ஆகவே அந்த மனிதனின் நிலை, ஒரே ஒரு பிசாசு அவனைப் பிடித்திருந்தபோது இருந்ததை விட, இப்பொழுது மிக மோசமானதாக இருக்கும்.

முடிவுரை

அ. இயேசுவின் இந்த உபதேசங்கள், ஆரம்பத்தில், அவிசுவாசிகளான யூதரை நோக்கிக் கூறப்பட்டதாக ஒரு சமயம் இருந்திருக்கக் கூடும். இருந்தாலும், இது இயேசுவானவர் முதல்முதலாக மாம்சத்தில் தோன்றின காலத்திற்கும், சபையை மகிமையோடு மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ள அவர் இரண்டாம் முறை வருவதற்கும் இடைப்பட்டக் காலத்தில் வாழும் ஒவ்வொரு நபருக்கும் பொருந்தும்.

ஆ. 1. யோனாவின் அடையாளம் மட்டுமே (மூன்று நாட்கள் கல்லறையில் வைக்கப்பட்டபின், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த அடையாளம்) இந்த பொல்லாத தலைமுறைக்குக் கொடுக்கப்படும். இயேசு தம்முடைய சபையை எடுத்துக் கொள்ள வானத்தில் வரும் வரை, வேறு மேலும் அதிகப்படியான அற்புதமானது. இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளம் ஒன்றும் இருக்காது.

2. இந்த பொல்லாத, உண்மையற்ற சந்ததியாரில் பெரும்பான்மையான மக்கள், யோனாவின் அடையாளத்தின் அடிப்படையில், இயேசுவைக்கர்த்தரும்இரட்சகருமாகஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஆகவே, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் மறுரூபமாக்கி, பாதுகாக்கும் வல்லமையையுடைய பரிசுத்த ஆவியானவரை, உடையவர்களாக இருக்கமாட்டார்கள்.

3. மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட்ட சத்தியத்தின் அடிப்படையில், இயேசுவின்மீது விசுவாசம் வைக்க மறுப்பது மற்றும், பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணாமல் இருக்கும் நிலையோடு சம்பந்தப்பட்ட விளைவுகள் உள்ளது.

(அ) தேவனுடைய வல்லமையினால் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்; தங்கள் சொந்தபலத்தினால் பாவம் மற்றும் பொல்லாப்பிற்காக மனந்திரும்பவும், இந்த விடுதலையை, அவர்களுடைய சொந்த பலத்தினால், உறுதியாக நிலைத்திருக்க முடியாது.

(ஆ) அவர்கள் தங்களுடைய பாவ வாழ்க்கைக்குத் திரும்பிவிடுவது மாத்திரம் அல்லாமல், ஆரம்பத்தில் அவர்களிடமிருந்து விரட்டப்பட்டவைகளை விட அதிகமான பிசாசுகள் அவர்கள் வாழ்க்கைக்குள் வந்து தங்கிவிடும்'

(இ) இதன் விளைவாக, அவர்கள் தேவனை பெரிய வெள்ளை சிம்மாசன நியாயாசனத்தின் முன் சந்தித்து, நித்தியமாக நரக அக்கினிக்குள் தள்ளப்பட்டு அவரைவிட்டு நித்தியமாகப் பிரிக்கப்பட, நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

விதைக்கிறவன் உவமை

மத்தேயு 13:3-23

முன்னுரை

அ. மொத்தமான ஆவிக்குரிய சத்தியம்: தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றிய செய்தி, எல்லா மனிதர்களுக்கும் அறிவிக்கப்படும் ஆனால், பற்பல விதமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆ. அவருடைய ஊழியத்தின் இந்தத் தருணத்தில், தம்மைப் பின்பற்றின திரள் கூட்டமான மக்களுக்கு, இயேசு உவமைகள் மூலமாக பேசத் துவங்கினார். ஏனெனில், அவர்கள் அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை, எனவே அவருடைய போதனைகளைச் சத்தியமானவைகளாக ஏற்று, தங்களுடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தவில்லை. அவர் கீழ்க்கண்டவாறு கூறும்போது, இவ்வாறு பொருள்பட பேசுகிறார்:

1. "காதாரக் கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக் கண்டும் அறியாதிருப்பீர்கள்". (வசனம் 13 வசனம் 14-15, ஏசாயா 6:9-10 பார்க்கவும்)

2. "இல்லாதவன் எவனோ, அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்". (வசனம் 12) உவமைகளின் அர்த்தத்தை, அவருடைய சீடர்களுக்குத் தனிமையில் விவரித்ததின் காரணமும் கூட இவ்வசனத்தின் அடிப்படையில் கூறப்பட்டுள்ளது.

இ. அவர்தான் மேசியா என்றும், அவருடைய ஊழியத்தின் மூலமாக, தேவனுடைய இராஜ்ஜியம் உதயமாகி, வெளிப்படுத்தப்படுகிறது என்பதை உணர்ந்து, அறிந்துகொள்வதைச் சார்ந்துதான் பரலோக இராஜ்ஜியத்தைப் பற்றிய இயேசுவின் போதனைகளை, ஒருவன் விளங்கிக்கொள்ள முடியும் (வசனம் 16)

ஈ. இந்த உவமானத்தில்:

1. "விதைக்கிறவன்" இயேசு பிற்காலத்தில் இது சீடர்களாக இருந்தார்கள்.

2. "விதை" என்பது தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றிய நற்செய்தி.

3. "விதை விதைக்கையில்" என்பது சுவிசேஷ செய்தியைக் கேட்கும், உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலுமுள்ள மக்கள் யாவரையும் குறிக்கும்.

4. "வழியருகே" என்பது இயேசுவின் செய்தியைக் கேட்டும் அவரை மேசியாவாகவும், அவருடைய செய்தியை தேவனுடைய இராஜ்ஜியத்தின் செய்தியாகவும், விளங்கிக் கொள்ளக்கூடாத (அவரை ஏற்றுக்கொள்ளாத) மக்களைக் குறிக்கும். "பறவைகள்" பொல்லாதவனாகிய, சாத்தான்.

5. "கற்பாறையான இடங்கள்" என்பது, கிறிஸ்துவையும் அவருடைய செய்தியையும் ஏற்றுக்கொண்ட போதிலும், தொல்லைகள் மற்றும் உபத்திரவங்களினிமித்தம், விசுவாச வாழ்க்கையிலிருந்து விழுந்துபோன மக்களைக் குறிக்கும்.

6. "முட்கள்" என்பது, கிறிஸ்துவையும், அவருடைய செய்தியையும் ஏற்றுக்கொண்டபோதிலும் இந்த வாழ்க்கையின் காரியங்களுக்காக, ஐசுவரியத்தின் மயக்கத்தாலும் விழுந்து போனவர்களைக் குறிக்கும்.

7. "நல்ல நிலம்" என்பது, கிறிஸ்துவையும், அவருடைய செய்தியையும் ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தில் முதிர்ச்சியடைந்து, சுவிசேஷ செய்தியை மற்றவர்களுக்கும் அறிவிக்கும் மக்களைக் குறிக்கும்.

விதைக்கிறவன் உவமை
மத்தேயு 13:3-23

1. தேவனுடைய இராஜ்ஜியத்தின் நற்செய்தி, மானிடர் யாவருக்கும் அறிவிக்கப்படும். (13:3-8)

அ. வசனம் 3. "விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்". "விதைக்கிறவன்" இயேசு தேவனுடைய இராஜ்ஜியத்தின் செய்தியை, எங்கெல்லாம் அவர் செல்கிறாரோ அங்கெல்லாம் அறிவித்தார். இதை அப்படியே, அவருடைய சீடர்களும் நடப்பிக்குமாறு அவர் கட்டளையிட்டார். (மத்தேயு 28:19-20; யோவான் 17:18, அப்போஸ்தலர் 1:8) அவர்கள், மிகுந்த உபத்திரவத்தின் மத்தியிலும், அவ்வாறே கிரியை நடப்பித்தனர். (அப்போஸ்தலர் 8:4)

ஆ. பவுல் இவ்வாறு கூறுகிறார்: "...தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.... நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாதிபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம்உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்". (2கொரிந்தியர் 5:19-20) ஆகவே, நாம் "தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்". (1கொரிந்தியர் 3:9)

இ. வசனம் 4-7 "அவன் விதைக்கையில், சில விதை வழியருகே...... மண்ணில்லாத கற்பாறை இடங்களில் ..... முள்ளுள்ள இடங்களில் விழுந்து ......" இயேசுவின் காலத்தில், விதை விதைப்பது, "எங்கும் பரவலாகச் செல்லும்படி தெளிக்கும் முறை" மூலமாக நடைபெற்றது. ஆகவே, சில விதைகள் பலன்தராத இடங்களில் விழுந்தது:

1. வழியருகே - கிறிஸ்துவின் நாட்களில் மனிதர்கள் நடந்து செல்லும் குறுகலான நடைபாதைகளும் (ஒற்றடி பாதை) நில உரிமையாளர்களின் எல்லைகளாக பயன்படுத்தப்பட்டது. எனவே இந்தப் பாதைகள், அடிக்கடி பயன்படுத்தப்பட்டபடியினால், நடைபாதைகள் போலவே கடினப்பட்டு இருந்தது. இந்த நடைபாதைகளோ, இயேசு, அவருடைய உவமையில் கூறின வழியருகான நிலம். ஆகவேதான், இந்தப் பாதைகளில் விழுந்த விதைகளைப் பறவைகள் வந்து, இலகுவாகப் பட்சித்துப்போட்டது'

2. கற்பாறையான இடங்கள் - பாலஸ்தீன தேசத்தில், சில பாகங்களில், தரையை அடுத்துக் கீழாக சுண்ணாம்புக்கல் அடுக்குக் காணப்படும். விதைகள் இந்த நிலத்தில் விழுந்தால் சீக்கிரமாக வெளிப்படையாக நன்றாகப் பார்க்கும்படியாக முளைவிடும். ஆனால், ஆழமாக வேர் செல்லமுடியாமல், சூரிய வெப்பத்தினால் விரைவில் செத்துவிடும்.

3. முள்ளுள்ள இடங்கள் - முள்ளுள்ள இடங்கள், அவை நீக்கப்பட்டபின், பலன் தரும் நிலமாகக் காணப்படுகிறது. ஆனால் ஏராளமான வேர்கள் அடர்ந்த பாகம் அடியில் காக்கப்படுகிறது. இந்த நிலத்தில் விழுந்த விதையும் முளைக்கத் துவங்குகிறது. ஆனால் முட்செடிகளின் பலமான வேர்மண்டலம் விரைவாக வளர்ந்து அதை நெருக்கிப் போடுகிறது.

ஈ. வசனம் 8. 'சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து..." "நல்ல" என்றால், அழகான, நல்ல விளைச்சலுக்கு, அநுகூலமான நிலம் என்று இங்கு பொருள்படும். இந்த நிலத்தில் விழும் விதை எந்தத் தடையுமின்றி வளர்ந்து, மிகுந்த பலனைக் கொடுக்கும்.

விதைக்கிறவன் உவமை

மத்தேயு 13:3-23

2. இயேசுவை மேசியாவாக ஏற்று, அவருடையவார்த்தைகளைத், தங்களுடையவாழ்க்கைகளில்செய்முறைப்படுத்துகிறவர்கள் மட்டுமே, தேவனுடைய இராஜ்ஜியத்தின் செய்திகளை ஏற்றுக் கொள்ளுவார்கள். (13:10-17)

அ. வசனம் 10. "அப்பொழுது, சீடர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர்", என்று கேட்டார்கள். இந்த இடத்திற்குப் பின்னால், கிறிஸ்து, அவருடைய ஊழியத்தில், திரள் கூட்டமாக வந்த விசுவாசமில்லாத மக்களிடம் உவமைகள் மூலமாகப் பேசினார், ஆனால் தனிமையில் சீடர்களுக்கு அதன் பொருளை விவரித்தார். அவர்கள் கேட்ட கேள்விக்கு, அவருடைய கொள்கையிலுள்ள புதிய மாற்றமே காரணம்.

ஆ. வசனம் 11-12. "பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை". அவரைப் பின்பற்றின மக்கள், உலகப்பொருட்கள் அவருடைய ஊழியத்திலிருந்து மற்றும் சரீரபிரகாரமான நன்மைகளை பெற்றுக் கொள்ளும் ஆர்வத்தோடு, பின்பற்றின காரணத்தினால், கிறிஸ்து அவருடைய கொள்கையை மாற்றிக் கொண்டார். அவர்கள் ஆவியில் உணர்வற்றவர்களாகவும், மந்த புத்தியுள்ளவர்களாயும் இருந்தனர்.

இ. வசனம் 13. "அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால்....".

கிறிஸ்துவை திரள் கூட்டமான மக்கள் நேரில் கண்டும் அவர் யார் என்று, அறிந்து கொள்ள அல்லது ஏற்றுக்கொள்ளக் கூடாதவர்களாக இருந்தனர். அவர்கள் கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்டனர், ஆனால், அது அவர்களுக்கு அவர் வெளிப்படுத்த விரும்பின தெய்வீக சத்தியத்தை தெளிவுபடுத்தக் கூடாத நோக்கமற்ற வரலாறாகவே அவர்களுக்கு இருந்தது. அவர்களுக்குப் போதிப்பது பயனற்ற முயற்சியாக இருந்தது.

ஈ. வசனம் 14-15. "ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது....". உலகப்பிரகாரமான பொருட்கள் மற்றும் சரீர சம்பந்தமான நன்மைகளுக்காக மட்டும், தம்மைப் பின்பற்றின திரள் கூட்டமான மக்களுக்கு, கிறிஸ்து ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். (ஏசாயா 6:9-10; யோவான் 6:26 வசனங்களையும் பார்க்கவும்)

உ. வசனம் 16. "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்" உலகப்பிரகாரமான பொருட்கள் மற்றும் சரீர நன்மைகளுக்காக மட்டும் அவரைப் பின்பற்றின மக்கள் கூட்டத்தைப் போல் அவருடைய சீடர்கள் இருக்கவில்லை. அவர்கள்,

1. இயேசுவை, மேசியா மற்றும் தேவனுடைய குமாரன் என்று இனமறிந்து அவரை ஏற்றுக்கொண்டனர். (மத்தேயு 16:16)

2. மானிட வர்க்கத்திற்கு தேவனுடைய இராஜ்ஜியத்தை வெளிப்படுத்த அவர் வந்தார் என்பதை விளங்கிக் கொண்டார். (யோவான் 18:36-37) இக்காரணத்தினால் அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திலும், கிறிஸ்துவுடனும், நித்தியமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக, களிகூர்வார்கள். (வெளிப்படுத்தின விசேஷம் 11:15)

விதைதக்கிறவன்
உவமை

மத்தேயு 13:3-23

ஊ. வசனம் 17. "அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும், நீங்கள் காண்கிறவைகளைக் காணவும் நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும்....". தேவனுடைய மேசியா வெளிப்படுவதற்காகவும், தேவனுடையஇராஜ்ஜியம்ஸ்தாபிக்கப்படுவதற்காகவும்,தீர்க்கதரிசிகளும்,இஸ்ரவேலிபரிசுத்தவான்களும், ஆவலோடும் எதிர்பார்ப்புகளோடும், காத்திருந்தனர். ஆனால் உண்மையில், அது நடைபெறும் நாட்கள் வருவதற்கு வெகு காலத்திற்கு முன்பாகவே, அவர்கள் மரித்து விட்டனர். அவர்கள் தூரத்திலே அவைகளைக் கண்டுவரவேற்றனர்.(எபிரெயர் 11:13)

3. தேவனுடைய இராஜ்ஜியத்தின் செய்தி பலவிதமான முறைகளில் ஏற்றுக் கொள்ளப்படும். (13:18-23).

அ. வசனம் 18. "ஆகையால் விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள்". இப்பொழுது, தனிமையில், இயேசு, அவருடைய சீடர்களுக்கு அந்த உவமையை விவரிக்கத் துவங்கினார். அவர்கள் இயேசு தான் மேசியா, தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர், மற்றும், உலக இரட்சகர் என்பதை அவர்கள் விசுவாசித்தார்கள். எனவே உவமையிலுள்ள சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, அதை அவர்கள் சொந்த வாழ்க்கையில் செயல்முறைப்படுத்துவார்கள்!

ஆ. வசனம் 19-22. கீழே விழுந்த விதைகளைப் பற்றிய, அவருடைய கருத்து என்ன என்பதை இப்பொழுது, இயேசு விவரிக்கத் துவங்கினார்.

1. வழியருகே-சுவிசேஷ செய்தியைக் கேட்கும் ஏராளமான மக்கள், அது ஆழமாக ஊடுருவிச் செல்லக் கூடாத கடின இருதயத்தை உடையவர்களாய் இருந்தனர். அவர்கள் இந்த நற்செய்தியை அநேகமுறைகள் கேட்டபோதிலும், அதைக் குறித்து கவனம் இல்லாமல், அலட்சியம் செய்தனர். சுவிசேஷ செய்தி அவர்கள் இருதயத்தை ஒருபோதும் ஊடுருவிச் செல்லாதபடியால் அவன் வந்து, அதைப் பிடுங்கிச் செல்ல சாத்தானுக்கு இலகுவாயிருக்கிறது!

2. கற்பாறையான இடங்கள்-இந்த நபர் சுவிசேஷ செய்தியைக் கேட்டு, கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்க்கைக்கு, பிரகாசமான ஒரு சாட்சியாக நிற்கிறார். இருந்தபோதிலும், இந்த மாறுதலும், அர்ப்பணிப்பும், ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே நீடிக்கிறது. அவனுக்கு சுவிசேஷத்தினிமித்தம், தொல்லைகளும் உபத்திரவங்களும் வரும்போது, அவன் சீக்கிரமாக விழுந்து, விலகிப் போகிறான். ஏனெனில், ஐக்கியத்தில் மற்றும் வார்த்தை ஆழமாக அவனுடைய வேர் செல்லவில்லை, மற்றும் அவனுடைய வாழ்க்கையில், ஆவியின் கனிகள் உருவாக பரிசுத்த ஆவியானவரை அனுமதிக்கவில்லை.

3. முள்ளுள்ள இடங்கள் - இந்த மனிதனும் சுவிசேஷ செய்தியைக் கேட்டு, கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்வுக்கு பிரகாசமான ஒரு மாதிரியாக நிற்கிறார். கற்பாறையான இடத்தில் விழுந்த விதையைப் போல, இவனும் விரைவில் விழுந்து, விலகிப் போகிறான். ஏனெனில் அவன்,

(அ). இந்த வாழ்க்கையின் காரியங்களைக் குறித்த கவலையில் சிக்குண்டு போகிறான்-இந்த உலகத்தின் காரியங்கள் மற்றும் வழிகளில் ஈடுபட்டு அதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுகிறான்.

(ஆ). ஐசுவரியத்தின் மயக்கத்தால் ஏமாற்றப்படுகிறான்-உலக ஆஸ்தியிலும் அதனால் அவனுக்குக் கிடைக்கும் நன்மைகளிலும் மகிழ்ச்சியடைகிறான்.

விதைக்கிறவன் உவமை

மத்தேயு 13:3-23

"கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது", என்று அவர் கூறும்போது, கிறிஸ்து இந்த மூன்று வகையான மக்களைக் குறித்துப் பேசுகிறார். (மத்தேயு 7:13)

இ. வசனம் 23, "சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து", இந்த மனிதன், சுவிசேஷ செய்தியைக் கேட்டு, அதை விளங்கிக் கொள்கிறான் (ஏற்றுக் கொள்ளுகிறான்). அவன், இயேசுவே, கிறிஸ்து என்றும் தேவனுடைய மேசியா என்றும், கிறிஸ்து கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்ட போது, அவனுக்காக பிராயச்சித்த பலியானார்என்றும்,விசுவாசிக்கிறான்.(ரோமர் 3:25)

ஆதி கிறிஸ்தவர்களைப்போல், அவன் கீழ்க்கண்ட காரியங்களுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுகிறான்.

1. கிறிஸ்துவின் உபதேசங்களுக்கும், வேத வசனங்களுக்கும்.

2. ஆராதனைக்கும் கூடிவரும் விசுவாசிகளின் ஐக்கியத்திற்கு.

3. மற்ற விசுவாசிகளுடன், அவர்களுடைய வீடுகளிலும், சமுதாயத்திலும், ஐக்கியம் வைத்துக் கொள்ளுதல்.

4. தனிப்பட்ட முறையில் மற்றும், பொதுவான ஜெபம் மற்றும் வேத வாசிப்பு ஆகிய இவற்றின் மூலம் பரலோகப் பிதாவோடு ஐக்கியம் கொள்ளுதல்.

ஈ. வசனம் 23. "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும், பலன் தருவான்", "நல்ல நிலம்" என்று கூறப்பட்டவன்:

1. அவனுடைய வாழ்க்கையில் ஆவியின் கனிகள் உண்டாக்கவும் பரம பிதாவுடனும், மற்ற விசுவாசிகளுடனும் ஐக்கியப்படவும் உதவிசெய்ய பரிசுத்த ஆவியானவரை அனுமதிக்கிறான்.

2. அவன் விரைவில் ஆத்தும ஆதாயம் செய்கிறவனாக மாறி, சுவிசேஷ விதைகளை உலக முழுவதிலும் விதைக்கிறவனாகிறான். யோவான் எழுதின சுவிசேஷ முழுவதிலும் கிறிஸ்துவின் விளக்கங்களுக்கு இதுதான் பொருள்:

1. "கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிகக் கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார் (பிதா) ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால், என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீடர்களாயிருப்பீர்கள்." (யோவான் 15:2,5,8).

2. "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்.... நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்", (யோவான் 15:16)

உ. "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்", என்று இந்த குழுவினரைப் பார்த்து கிறிஸ்து கூறுவார். மறுபடியும் இவ்வாறு கூறுகிறார்: "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர், என்றார்". (மத்தேயு 22:14)

விதைக்கிறவன் உவமை

மத்தேயு 13:3-23

முடிவுரை

அ. விதைக்கிறவன் உவமை, கீழ்க்கண்டவைகளுக்கு கிறிஸ்துவின் விளக்கம்:

1. சுவிசேஷ செய்தி, உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலுள்ள, எல்லா மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

2. சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது மனிதர் அதற்குப் பலவிதமான முறைகளில் பதில் கிரியை செய்கின்றனர்.

(அ). சிலர் அதைக் கேட்கின்றனர். ஆனால் அதை விளங்கிக் கொள்ள அல்லது ஏற்றுக் கொள்ளக் கூடாதவர்களாயிருக்கின்றனர்.

(ஆ). சிலர் இரட்சிப்பிற் கேதுவாக விசுவாசிக்கின்றனர், ஆனால் சிறிது காலத்திற்குப் பின் விழுந்து போகிறார்கள்.

(இ) மற்றும் சிலர் இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசிக்கின்றனர், விடாமல் முயற்சிசெய்கின்றனர். அதன்விளைவாக தங்களுடைய வாழ்க்கையிலும் தேவனுடைய இராஜ்ஜியத்திலும், பலதர அளவுகளில் கனிகொடுக்கின்றனர்.

ஆ. இந்த உவமையின் மூலமாக, சுவிசேஷ செய்திக்கு எதிரான விரோதிகளைக் குறித்து நாமும் விழிப்புள்ளவர்களாகிறோம்.

1. சாத்தானும் அவனுடன் சேர்ந்த பிசாசின் சேனைக் கூட்டமும்,

2. இந்த உலகத்தின் காரியங்கள் மற்றும் வழிகளைக் குறித்த கவனம்.

3. உலக ஆஸ்தி மற்றும் சிற்றின்பம் இச்சுவிசேஷத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாதவர்களுக்காகவும், உலகக் காரியங்களிலும், ஐசுவரியம் மற்றும் உலக களியாட்டுகளில் மறுபடியும், ஆசைவைத்து, அதில் சிக்கிக் கொண்டதினால் விழுந்து, விலகிப் போனவர்களுக்கும், பீடத்தண்டை வந்து அர்ப்பணிக்க அழைப்பு. ஒரு நல்ல கேள்வியாக இருப்பது: இந்த நோத்தில் நீ எப்படிப்பட்ட நிலமாக இருக்கிறாய்?

கானானிய ஸ்திரீயின் விசுவாசம்

மத்தேயு 15:21-28

முன்னுரை

அ. அவருக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தி தேவனுடைய உடன்படிக்கைக்குட்பட்ட மக்களாகிய "காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் மக்களுக்காக" மட்டும், அவர் அனுப்பப்பட்டார் என்பதை விளங்கிக் கொள்கிறவர்களுக்கு, இயேசு உதவி செய்வார் என்பதே இந்த வரலாற்றின் மொத்தக் கருத்தில் அடங்கிய சத்தியம்.

ஆ. மீட்பின் வரலாற்றின் வெளிச்சத்தில் இந்த சம்பவத்தை ஆராய்வது முக்கியமானது. இயேசு பவுலைப் போலும் மற்ற ஆரம்ப சீடர்களைப் போலும், முதலாவது, தேவனுடைய உடன்படிக்கையின் மக்களாகிய "காணாமல்போன ஆடுகளாகியஇஸ்ரவேருக்காகவே அனுப்பப்பட்டார்". (மத்தேயு 10:5; அப்போஸ்தலர் 9:15; 13:46)

அவர்தான், அவர்கள் வெகுகாலமாகக் காத்திருந்த மேசியா, இந்தச் சம்பவத்தின் மத்தியக் கருத்து:

1.இயேசு,மேசியாவாக வெளிப்படுத்தப்படுகிறார்.

2. உலகத்தில் அவருடைய ஊழியம், மற்றும் அவர் அனுப்பப்பட்டதின் நோக்கம் ஆகிய இவைகளைக் குறித்த அவருடைய சிந்தனைகள்.

இ. மானிடர்களின் மீட்பின் திட்டம் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் உருவானதற்கும், புதிய ஏற்பாடு மற்றும் கிறிஸ்தவர்களுடைய சகாப்தத்திற்கும் முன்னதாக, இச்சம்பவம் நடைபெற்றது:

1. ஒருவராவது கெட்டுப்போவது தேவனுடைய விருப்பம் அல்ல. (யூதர் அல்லது புறஜாதியார்).

2. மனிதர்கள் யாவரும் (யூதர் மற்றும் புறஜாதியார்) பாவிகள் எனவே அவர்களுக்கு இரட்சகர் தேவை.

3. எல்லா மனிதர்களும் கிறிஸ்துவிடம் கிட்டிச் சேரவும், இரட்சிப்புக்காக அவரில் விசுவாசம் வைத்து அதை அறிக்கையிட ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.

4. இரட்சிக்கப்பட்ட மனிதர்கள் யாவரும் (யூதர் மற்றும் புறஜாதியார்) ஆவிக்குரிய வீடாகக் கட்டப்பட்டு, அங்கு தேவன், அவருடைய ஆவியில் வாசம் பண்ணுகிறார்.

5. யூதர்களையும், புறஜாதியாரையும் ஒருகாலத்தில் பிரித்த அவரை, தேவன், கிறிஸ்துவின் தியாகபலியின் மூலமாகத் தகர்த்தெறிந்தார். அவருடைய உயிர்த்தெழுதலுக்கு பின், அவர் பரலோகத்திற்கு ஏறிப்போவதற்கு முன்னால், இயேசு அவருடைய சீடர்களிடம் இவ்வாறு கூறினார்: "நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் (எல்லா தேசங்களிலுமுள்ள பலஜாதியான மக்களை) சீஷராக்கி."

1. ஆழ்ந்த துக்கத்திலுள்ளவர்கள் உதவிக்காக இயேசுவிடம் வருகிறார்கள். (5:21-23)

அ. வசனம் 21. "பின்பு இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தீரு, சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார்","அவ்விடம்" என்பது,கலிலேயா நாடு மற்றும் கெனேசரேத்து நாடு (கலிலேயாக் கடலுக்கு கிழக்குப் பக்கமாக-மக்தலா நாட்டிற்கு வடக்காக) (14:34) "தீரு, சீதோன்", பட்டணங்கள் மத்தியதரைக் கடல் ஓரமாகவும், கலிலேயா நாட்டிற்கு சுமார் எண்பது மைல்கள் கிழக்காகவும் உள்ளன.

கானானிய ஸ்திரீயின் விசுவாசம்

மத்தேயு 15:21-28

ஆ. அவர், யூதர்களை அதிகாரம் செலுத்தும்பிரதேசங்களைவிட்டு, கானானிய-புறஜாதியார் நாட்டில் பிரவேசித்தார் என்பதை முக்கியமாக பார்க்கவேண்டும். அவர்கள், அவரை வற்புறுத்திப் பிடித்துக் கொண்டு போய் இராஜாவாக்க முயற்சி செய்வதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள ஒரு சமயம் அவர் இவ்வாறு சென்றிருக்கலாம் (யோவான் 6:14-16) மிக அதிகமாகப் பிரசித்தமடைவது, அவருடைய ஊழியம் மற்றும்,அவருடைய அப்போஸ்தலர்களுக்கு கொடுக்க வேண்டிய போதனைகள் நிறைவு பெறுவதற்கும், ஆபத்தாக இருக்கும். ரோம அதிகாரிகளுக்கும், பரிசேயருக்கும், வேதபாரகர்களுக்கும், அப்படிப்பட்ட ஒரு நிலை பயமுறுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, தீரு, சீதோன் நாடுகளைவிட்டுச் செல்லும்போது, கலிலேயாவைத் தவிர்த்துக் கடந்து, யோர்தானுக்குக் கிழக்குப் பக்கமாக தெக்கப்போலி நாட்டு (பத்துப் பட்டணங்கள் மாற்கு 7:31) திசையாகச் சென்றார்.

இ. வசனம் 22."....அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்..." என்று சொல்லிக் கூப்பிட்டாள்! அவள் ஒரு கிரேக்க ஸ்திரீயாக, யூதகுலமாக இல்லாதவள் என்று மாற்கு சுவிசேஷத்தில் அழைக்கப்படுகிறாள். ஆனால், அவள் இஸ்ரவேலின் பழங்கால விரோதிகளின் பாரம்பரையில் வந்தவள் என்பதை அழுத்திக் கூறுவதற்காகவும், மத்தேயு, "கானானிய ஸ்திரீ" என்ற சொல்லை பயன்படுத்தி, அப்படிப்பட்டவள், யூதர்களின் மேசியாவிடம் உதவிக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் வருகிறாள் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

அவள் இயேசுவை, "தாவீதின் குமாரன்" என்று அழைப்பது, அவள் இயேசுவை மேசியா என்றும் (அபிஷேகம் பண்ணப்பட்டவர், தேவனுடைய குமாரன்) அவர் வந்து ஜனங்களைக் குணப்படுத்தி, தாவீதின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர் என்றும், அவள் அடையாளம் கண்டு கொண்டாள் என்பதைக் காட்டுகிறது. (2சாமுவேல் 7:12-16).

ஈ. வசனம் 23. "அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை", அவள் ஒரு கிரேக்க ஸ்திரீ, யூதகுலம் அல்ல; ஆனால் இயேசு, இஸ்ரவேல் வீட்டாருக்காக" வந்தார். இவ்வாறு முழுவதும் மறுத்துப் புறக்கணித்தது, அவருடைய ஊழியம், தேவனுடைய உடன்படிக்கையின் மக்களாகிய யூதர்களுக்கு மட்டும் என்ற அளவில், இருந்ததை கிறிஸ்து அறிந்திருந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது.

உ. வசனம் 23. "அப்பொழுது, அவருடைய சீடர்கள் வந்து; இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும்" என்று அவரை வேண்டிக் கொண்டனர்", இந்த தொல்லைபடுத்தும் ஸ்திரீயினால், இயேசு கோபங்கொண்டார் என்று சீடர்கள் நினைத்திருக்கக் கூடும். அல்லது அவர்கள் தங்களுக்குள் எரிச்சலடைந்திருக்கலாம். ஒருசமயம் பின்னால் கூறப்பட்டது உண்மையாக இருக்கலாம்! "இவளை அனுப்பிவிடும்" என்ற வார்த்தைகள் , எப்படியிருப்பினும்","அவளுடையவிண்ணப்பத்தின்படி செய்து அவளை அனுப்பிவிடும்" என்ற பொருளில் கூறப்பட்டிருக்கலாம். இது அதிக சரியாகக் காணப்படுகிறது!

ஊ. அந்த ஸ்திரீ தொடர்ந்து "கூப்பிடுகிறாள்" என்றால், அவள் கதறிக் கொண்டேயிருந்தாள். இயேசுவையும் அவருடைய சீடர்களையும் நோக்கி, சத்தமாக, நம்பிக்கையிழந்த சக்கரமான குரலில் கூப்பிட்டாள், அவள் பயத்துடன் மிகுந்த வேதனையில், துன்பப்பட்டாள். ஏனெனில் அவளுடைய சிறு குழந்தை, அவளைப் பிடித்த பிசாசினால்,கொடூரமாக உபத்திரவப்படுத்தப்பட்டாள்.

கானானிய ஸ்திரீயின் விசுவாசம்
மத்தேயு 15:21-28

2. இயேசு, தேவனுடைய உடன்படிக்கையின் மக்களாகிய, "காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேலருக்காக" அனுப்பப்பட்டார். (15:24-26)

அ. வசனம் 24. "அதற்கு அவர்; (முடிவாக) காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றபடியல்ல, என்றார்" இயேசு அவருடைய வேலை, மற்றும் ஊழியம் இவற்றில் நோக்கமாயிருந்தார். அத்துடன் பிதாவின் சித்தத்தையும், திட்டத்தையும் நிறைவேற்றினார். (11:27; யோவான் 15:10) "காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாருக்கே" அவருடைய பிரத்தியேகமான ஊழியம் இருந்தது. ஆகவே, புறஜாதியார் உதவிக்காக கதறுவது எவ்வளவுதான் தகுதியாக இருந்தபோதிலும், அவர் அதற்குக் கவனம் செலுத்தமாட்டார்! இஸ்ரவேல் தேசத்திற்கு கொடுக்கப்பட்ட, தேவனுடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களை, அனுபவிக்கும் உரிமையை, அவர்கள் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை. (எபேசியர் 2:11-22)

ஆ. எப்படியிருப்பினும், இதற்கு முன், இரண்டு சந்தர்ப்பங்களில், யூதர்களின் மத்தியில் அவர் ஊழியம் செய்து கொண்டிருக்கும்போது மட்டும், யூதரல்லாதவர்கள் உதவிக்காக அவரிடம் வந்த போது, அவர்களுக்கு உதவிசெய்தார். (4:24-25; 8:5-13)

"காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேலர்" என்றால், "இஸ்ரவேல் வீட்டாரின் மத்தியில் காணப்படும், காணாமல்போன ஆடுகள்" இஸ்ரவேல் வீட்டாரில் சிலர் இழந்து போகவில்லை! (ரோமர் 11:1-5).

இ. அவரிடம் வருபவர்களிடம் கீழ்க்கண்ட குறிப்புக்கள் காணப்படும் வரை, அவருடைய ஊழியத்தில் இயேசு, எந்த ஒரு விதிவிலக்கும் செய்யமாட்டார் என்று காணப்படுகிறது.

1. முதன்மையாக, "தற்சமயம்" யூதமக்களுக்கு மட்டும் என்பதை முழுவதும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

2. அவரில், மிகுந்த விசுவாசம் வைத்துள்ளனர் என்பது வெளிப்படவேண்டும்.

ஈ. வசனம் 25. "அவள் வந்து; ஆண்டவரே எனக்கு உதவி செய்யும் என்று, அவரைப் பணிந்து கொண்டாள்" கானானிய ஸ்திரீயின் விசுவாசம் இப்பொழுது வெளிப்படையாகத் தெளிவாகத் தெரிந்தது! இயேசுவின் இருதயத்தைத் தொடக்கத்தக்கதாக மூன்று காரியங்கள் நடந்தது:

1. அந்த ஸ்திரீ அவரிடம் வந்தாள். அவள் அவரை இரண்டாம் முறையாக அணுகினாள்.

2. அவர் முன் முழங்காலில் நின்றாள்.

3. அவர்முன் சாதாரணமாக, "ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும்!" என்று கூறினாள். அவர், அவளுக்கு உதவிசெய்யாவிட்டால் யாவற்றையும் தான் இழந்து விடுவதாகக் குறிப்பிட்டாள்! அவள் முற்றிலும் அவருடைய இரக்கத்திற்கு தன்னை அர்ப்பணித்தாள்.

உ. "அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க் குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல, என்றார்", இது ஒருசமயம் அந்த மக்களிடையே கூறப்படும் வழக்கச் சொல்லாக இருக்கலாம். "பிள்ளைகளின் அப்பம்" என்பது இஸ்ரவேல் மக்களுக்குள் காணாமல் போன ஆடுகளுக்காக" வைக்கப்பட்ட இரட்சிப்பும், குணமாக்கப்படுவதும், என்று பொருள்படும்.

கானானிய ஸ்திரீயின் விசுவாசம்

மத்தேயு 15:21-28

"நாய்கள்" என்றால், அதிக திட்டவட்டமாக, அசுத்தமானவர்கள் மற்றும் தீண்டப்படக்கூடாதவர்கள் என்றும் யூதர்களால் கருதப்பட்ட, யூதரல்லாத புறஜாதியார்கள், கிரேக்கர்கள் ஆகியவர்களைக் குறிக்கும்.

ஊ உடன்படிக்கையின் நாடாகிய இஸ்ரவேலுக்குக் கொடுக்கவே இயேசு வந்தார் என்பதை இவையாவும் விளக்குகிறது. புறஜாதியாருக்குப் (நாய்களுக்கு) போடுவது (தூக்கி எறிவது) சரியான காரியம் இல்லை. (சரியானதாக, நன்மையாகக் காணப்படவில்லை) முதன் முதலாக இல்லாமல், யூதர்கள் (பிள்ளைகள்) போதும், வேண்டாம் என்று கூறும் தருணம் வரும்வரையிலாவது, இது சரியல்ல!

3. தாழ்மையும் உண்மையுமான இருதயத்துடன் அவரிடம் வரும் யாவருக்கும் இயேசு உதவி செய்கிறார். (15:27-28)

அ. வசனம் 27. "அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து, விழும் துணிக்கைகளைத் தின்னுமே, என்றாள்" "மெய்தான் ஆண்டவரே" என்றால், "ஆண்டவரே நீர் கூறுவது சரியானது. பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது சரியல்ல. ஆனால், தற்செயலாக மேஜையிலிருந்து தரையில் விழும் துணிக்கைகளை, நாய்கள் உண்பதற்கு அனுமதிப்பதும் உண்மை". எந்த தேவை நிறைவேற்றப்படுவதற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாளோ, அது நிறை வேறுவதற்காக, மிக அதிகமாக தன்னைத் தாழ்த்தினாள் என்றும், எந்தக் கிரயமும் செலுத்த ஆயத்தமாயிருந்தாள் என்றும், அவளுடைய பதில் வெளிப்படுத்துகிறது.

ஆ. அந்த ஸ்திரீ அறியாமலே, வருங்காலத்தை நோக்கி, கிறிஸ்துவின் மூலமாக, தேவனுடைய மீட்பின் திட்டத்தையும், எல்லாக் காலங்களிலும் விசுவாசிகளான, யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகிய இவர்கள் ஐக்கியப்பட்ட சரீரத்தில் (சபையில்) ஆவியானவர் வாசம் பண்ணப் போவதையும் கண்டாள்!. நிச்சயமாக, தேவனுடைய கிருபையானது மிகப் பெரியதாகவும், இஸ்ரவேல் தேசத்திற்கு, தெய்வீக வாக்குத்தத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையைவிட, விளங்கிக் கொள்ள இலகுவானதாகவும் இருக்கிறது.

இ. இன்றைய நமது உலகத்தில் அநேகர் இலகுவில் எதிராக சாய்ந்து போகிறவர்களாக இருந்தபோதிலும், அவள் அவ்வாறு இருக்கவில்லை.

1. அவளுடைய தேவை அசாதாரணமானது என்று விவாதித்தாள்.

2. மற்றவர்களுக்கு (இஸ்ரவேலருக்கு) உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்டதை தனக்கு உரிமை உண்டு என்று சொந்தம் பாராட்டினாள்.

3. அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற, இஸ்ரவேல் நாடு, தேவனுடைய தெய்வீகமாக தேர்ந்தெடுக்கப்பட்டது நியாயமல்ல என்று, "சட்டத்திற்குப் புறம்பான ஆட்டம்" (FOUL PLAY) நடவடிக்கை என்று சத்தமிடுவது தவறு.

4. சிலர் இயேசுவை, வசைமொழி கூறுகின்றனர் மற்றும் அவருக்கு எதிராகக் கலகம் செய்கின்றனர்.

ஈ. இப்படிப்பட்ட காரியங்கள், மனம்நொந்து, தங்களுக்கு அல்லது அவர்களுடைய அன்புக்குரியவர்களுக்கு, தேவையான உதவியை கண்டுபிடிக்க முடியாதவர்கள் மனதில் நுழைவது இல்லை. இந்த ஸ்திரீயைப்போல், எல்லாவழிகளிலும் முயன்றபின், கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கின்றன

கானானிய ஸ்திரீயின் விசுவாசம்

மத்தேயு 15:21-28

1. அவர்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீக உதவி தேவை.

2. தாவீதின் சிம்மாசனத்தில் வீற்றிருந்து இரும்புக்கோலால் அரசாட்சி செய்யும் ஒருவராகிய இயேசு, அவர்களுக்கு முன் இருந்தார்.

3. அவர்களுடைய விண்ணப்பத்தை அவர் கேட்டு பதிலளித்தால், அவர்களும், அவர்களுடைய அன்புக்குரியவர்களும் சரீரபிரகாரமாகவும், உணர்வுகளிலும் ஆவியிலும், அனுபவிக்கும் மிகுந்த வேதனைகளுக்கு ஒரு முடிவு உண்டாகும்.

4. ஆகவே, அவர்கள் தாழ்மையுடன் அவர் முன்பாக முழங்கால்படியிட்டு, தங்களுடைய வேண்டுதல்களைக் கூறி, அவருடைய பதிலுக்காக, ஆவலுடன் காத்திருக்கின்றனர்!

உ. வசனம் 28. "இயேசு அவளுக்குப் பிரதியுத்தாரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது, என்றார். அந்நேரமே, அவள் மகள் ஆரோக்கியமானாள்". இந்த கானானிய ஸ்திரீயையும் அவளுடைய, பிசாசு பிடித்த மகளையும் இயேசு, நம்பிக்கையிழக்கும்படியாக வைக்கவில்லை!

முடிவுரை

அ. நம்பிக்கையிழந்து துக்கத்தில் இருப்பவர்கள் இயேசுவிடம் உதவிக்காக வருகிறார்கள் ஏனெனில், மற்றவர்கள், தாங்கள் கண்டகாரியங்களைப் பற்றிக் கூறுவதிலிருந்து, அவரால், உதவிசெய்ய முடியும் அவர் செய்வார், என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

அவர்கள் தங்களை அவருக்கு முன்பாகத் தாழ்த்தி, தங்களுக்கு அவர் உதவி செய்வார், என்று தாங்கள் விசுவாசம் அவரில் உள்ளது என்பதை, அறிக்கையிட்டால், கானானிய ஸ்திரீக்குக் கிடைத்த அதே பதிலை, அவர்களும் பெற்றுக் கொள்ளுவார்கள்.

ஆ. எப்படியிருப்பினும், இஸ்ரவேல் தேசத்திலுள்ள காணாமல்போன ஆடுகளுக்காக அவர் வந்தார் என்ற உண்மையை அவர்கள் விளங்கி, அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆதியிலிருந்து, இஸ்ரவேலின் முற்பிதாக்களுக்கு, அவர்களை ஆசீர்வதிப்பதாக தேவன் அவர்களுடன் உடன்படிக்கை செய்திருக்கிறார். இயேசுவின் மூலமாகவே இந்த வாக்குத்தத்தங்களை அவர் முடிவாக நிறைவேற்றியுள்ளார்.

இ. ஆனால், தற்சமயம், மானிடர் யாவருக்கும் தேவனுடைய மீட்பின் திட்டம், மற்றும் சபையின் சகாப்தம் நிறைவேறிவருகிறது! ஆகவே, யூதர் மற்றும் புறஜாதியார், இருவரும் ஒன்றுபோல, இயேசுவிடம் இப்பொழுது வந்து, அவர்களுடைய தேவை மிக்க நேரங்களில் அவர்களுக்கு ஏற்ற நல்ல பதிலை எதிர்பார்க்கலாம்.

பொல்லாத சக்திகள், சபை கட்டப்படுவதை நிறுத்த முடியாது

மத்தேயு 16:13-19

முன்னுரை

அ. எர்மோன் மலைச் சரிவுக்கு அருகே, கலிலேயாக் கடலுக்கு வடக்கே, கெட்ட நடத்தைகளுக்குப் பேர்போன அஞ்ஞானிகளின் பிரதேசத்திற்குள், இயேசு அப்பொழுதுதான் பிரவேசித்திருந்தார். "பான்" (PAN) என்ற கிரேக்க தேவனுக்கு, அங்கு ஒரு கோயில் உண்டு. அவர் தம்முடைய சீடர்களை நோக்கி: "மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்" என்று கேட்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் எரேமியா என்றும் அல்லது தீர்க்கத்தரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

ஆ. அப்பொழுது இயேசு "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்" என்று கேட்டார். குழுவிலுள்ள யாவரின் சார்பாகவும் பேதுரு, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று கூறினபோது, இயேசு அவருடைய சீடர்களிடம், பரலோகத்திலிருக்கும் அவருடைய பிதாதாமே இந்த வெளிப்படுத்துதலை கொடுத்திருக்கிறார். மற்றபடி வேறு எந்த வழியிலும், அதை அவர்களால் அறிந்திருக்க முடியாது என்று கூறினார். அப்பொழுது, அவருடைய சபை கட்டப்படுவதைக் குறித்து பேச துவங்கினார். இதுவே அவருடைய போதனையின் பாடப் பொருளின் கருத்து.

1. இயேசு அவருடைய சபையைக் கட்டுவார் 16:18

அ. இயேசு, "கட்டுவேன்" என்று கூறும் போது இவ்வாறு பொருள்பட பேசுகிறார். "நான் இப்பொழுது வீடு கட்டுகிறவனாகிறேன்; நான் ஒரு வீட்டை நிர்மாணித்து கட்டுவேன். ஒரு கட்டத்தைக் கட்டுவேன்;ஒருஆவிக்குரிய கட்டடம்". இயேசு,அவருடையசபையைக்குறித்துப் பேசும்போது, கீழ்க்கண்ட ஒருகுழு மக்களைக் குறிப்பிடுகிறார்.

1. அழைக்கப்பட்டு, உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள்.

2. ஒரு கூட்டமாக ஒன்று கூடி அவருடைய சபை என்று அழைக்கப்படும், ஒரு ஆவிக்குரிய சரீரமாக உருவாக்கப்பட்டவர்கள்.

ஆ. "இயேசு, கிறிஸ்துவாகிய மேசியா என்றும், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்றும், ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்றும்" பேதுரு மற்றும் சீடர்கள் போல் அறிக்கையிட்டவர்களால்ஆனகுழுசபைஎன்றழைக்கப்படும். இது இவர்களில்உள்ள ஒவ்வொருவருக்கும் பரலோகத்திலுள்ள இயேசுவின் பிதாவினால் வெளிப்படுத்தப்படும் (16:16)

இ. "நீ பேதுருவாயிருக்கிறாய்" பேதுரு என்றால் "கற்பாறை" என்று பொருள்படும். அவருடைய அடுத்த வார்த்தைக்கு இயேசு அவர்களை ஆயத்தம் செய்கிறார்.

ஈ. "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்". என்றால் "பேதுருவாகிய கற்பாறைத் துண்டு என்பதிலிருந்து வேறுவிதமான ஒரு பொருள் என்ன இங்கு பொருள்படுகிறது. இது "அசைக்க முடியாத ஒரு பெரிய கற்பாறை" என்று பொருள்படும். இயேசுகிறிஸ்துவின்சபை, அசைக்கமுடியாத கற்பாறையின் மீது கட்டப்படும். சபை, எந்தப் பாறையின் மீது கட்டப்படுமோ, (அல்லது கற்பாறையின் அஸ்திபாரம்) அது, பேதுருவுடைய, ஆவியினால், ஏவப்பட்ட விசுவாச அறிக்கையாகிய, "நீர் (இயேசு) கிறிஸ்துவாகிய ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்" என்பதில் உள்ளது. இதுவே சபையின் அஸ்திபாரம்.

பொல்லாத சக்திகள், சபை கட்டப்படுவதை நிறுத்த முடியாது

மத்தேயு 16:13-19

உ. சபை கட்டப்படுவதைக் குறித்து, பவுல் அப்போஸ்தலன் கொரிந்து சபைக்கு எழுதியது இந்தக் காரணமே ஆகும். அதை இவ்வாறு கூறுகிறார்: “போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது”. (1கொரிந்தியர் 3:11)

அவருடைய வார்த்தையின் பொருள், பேதுருவின் வார்த்தையைப் போன்றது!

ஊ. ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவாகிய மேசியா என்ற அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவரே சபையின், (ஒரே ஒரு) அஸ்திபாரம். பவுல், இவ்வாறு கூறும்போது இந்த பொருள்படக் கூறுகிறார்: “இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையன்றி, வேறொன்றையும்... அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்”. (1கொரிந்தியர் 2:2)

எ. ஹாங்காங் தேசத்திலுள்ள புதிய பிரதேசங்கள் எனப்பட்ட இடத்திலுள்ள மிக உயரமான கட்டடங்களை நான் பார்த்தபோது, திட கற்பாறை அஸ்திபாரத்தைக் குறித்து சிந்தனை செய்தேன். கட்டடம் கட்டுபவர்கள், திட கற்பாறையான அஸ்திபாரத்தின்மீது, கட்டாமல் இருந்திருந்தால், கட்டடங்கள் சரிந்து, நொறுங்கித் தரையில் கீழே விழத் துவங்கும். சபை நிலைத்து நிற்கும் படியாகக் கட்டப்பட வேண்டுமானால், அது ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவாகிய திட அஸ்திபாரத்தின் மீது கட்டப்படவேண்டும்.

ஏ. அது கீழ்க்கண்டவாறு கட்டப்பட்டால் நிலைத்து நிற்காது:

1. சமூக சேவை சங்கமாக.

2. உறவினர்களுக்குச் சலுகைக் காட்டும் அடிப்படையில் (சில குடும்பங்களின் அதிகாரத்தில்)

3. அரசாங்க குழுவாக

4. மனிதர்களின் முயற்சியில் நிறுவப்பட்டதாக.

5. ஒரு குறிப்பிட்ட பிரிவாக.

6. ஒரு குறிப்பிட்ட போதகர் அல்லது சுவிசேஷகர் அல்லது அப்போஸ்தலர் அல்லது பிரசங்கியார் தலைமையில் அது பேதுரு ஆவியில் ஏவப்பட்டு ‘கூறிய’ ‘ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து’ என்ற விசுவாச அறிக்கையாகிய, திட கற்பாறை அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட வேண்டும்.

2. பொல்லாத சக்திகள் சபை கட்டப்படுவதை நிறுத்தமுடியாது.(16:18)

அ. “பாதாளத்தின் வாசல்கள்”, “வாசல்கள்” என்றால் “சக்திகள்” என்று பொருள்படும். “பாதாளம்” என்பது மரித்த பொல்லாதவர்களின் பிரிந்த ஆவிகள் தற்போது வாசம் பண்ணும் இடம். இது “ஐசுவரியவானும் லாசருவும்” என்ற கதையில் லூக்கா 16:19-31, வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. துன்மார்க்கரான, பொல்லாத மக்களின் ஆவிகள் மட்டும் தற்போது பாதாளத்தில் இருக்கின்றன. ஆகவே, இது பொல்லாத சக்திகளின் அதிகாரத்திற்கும், ஆளுகைக்கும் அடையாளமாயிருக்கிறது.

ஆ. “அதை மேற்கொள்வதில்லை”, இது உண்மையில், அதிக பலமுள்ளதாக நிரூபிக்கப்பட முடியாது என்று பொருள்படும்.

பொல்லாத சக்திகள், சபை கட்டப்படுவதை நிறுத்த முடியாது

மத்தேயு 16:13-19

இயேசு, இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கூறும்போது, மெய்யாகவே இவ்வாறு சொல்லுகிறார். "என்னுடைய சபையைக் காட்டிலும் பொல்லாங்கனின் சக்திகளும் ஆளுகையும், அதிக பலமுள்ளதாக நிரூபிக்கமுடியாது" சபை இவ்வாறு காணப்படும்.

1. வளரும்.

2. உலக முழுவதிலும் உள்ள சமுதாயத்தின் எல்லா தலைமுறைகளையும் வசீகரிக்கும்.

3. சாத்தானின் (பொல்லாங்கன்) சேனைகள் எல்லாம் எதிர்த்தாலும், மேற்கொள்ளும் (மத்தேயு 24:14; வெளிப்படுத்தின விசேஷம் 5:9; தானியேல் 2:35; 44-45; 4:21)

இ. இது, கடுகு விதை உவமை உதாரணத்தின் மூலம் விளக்கப்படுகிறது. (மத்தேயு 13:31-32) விதைக்கப்படும்போது கடுகு விதைகள் மிகச் சிறியதாக இருக்கிறது. ஆனால் வெகு சீக்கிரத்தில் மிகப் பெரிய செடியாக வளர்கிறது. பாலஸ்தீனா தேசத்திலேயே இவைகளைதான் மிகப் பெரிய செடிகள், சபை ஆரம்ப காலத்தில், கடுகு விதையைப் போல மிகச் சிறியதாக இருக்கிறது. பெந்தேகொஸ்தே நாளில், 3,000 விசுவாசிகள் மட்டுமே இருந்தனர். ஆனால் மிகச் சொற்ப காலத்தில் மிகப்பெரிய மரம்போல வளர்ந்துவிட்டது.

ஈ. "பிசைந்த மாவு முழுவதிலும் ஈஸ்டு (YEAST) கிரியை செய்து புளிக்கவைக்கும்" உவமை. "பொல்லாத சக்திகளுக்கு மத்தியிலும், வளரும் சபைக்கு மற்றொரு எடுத்துக்காட்டு.

(மத்தேயு 13:33) ரொட்டி சுடுகிறவன் பிசைந்த மாவு முழுவதையும் புளிக்கவைக்கும் ஈஸ்டு போலவே, உலக முழுதிலுமுள்ள மக்கள் மத்தியிலே, சபை பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் செல்வாக்கு பெற்று, மாறுதல் உண்டுபண்ணி, வல்லமையாக வளர்ச்சியடையும்.

உ. சீனா தேசத்தில் 1949 வருடம் 750,000 விசுவாசிகள் இருந்தனர். 40 வருடங்களுக்குள்ளாகவே அனுப்பப்பட்ட ஊழியர்கள் இல்லாமல், கம்யூனிசத்திற்கு அடியில் விசுவாசிகளின் எண்ணிக்கை 100 மில்லியனுக்கு அதிகமாகப் பெருகியுள்ளது. (250,000 வீட்டு சபைகள் 19,000 பேர் தினமும் இரட்சிக்கப்படுகின்றனர்) இயேசு அவருடைய சபையைக் கட்டுகிறார். பொல்லாங்கனின் சக்திகள் அதை நிறுத்த முடியாது.

ஊ. அவைகள், கடித்து, உதைத்து, கூக்குரலிட்டு, தொல்லைபடுத்தும், நம்மை சோதிக்கும் ஆனால் கீழ்க்கண்டவற்றிலிருந்து நம்மைத் தடுக்கமுடியாது.

1. சபையைக் கட்டுவதில்

2. மக்கள் இரட்சிக்கப்பட நாம் ஈடுபடும் வேலையிலிருந்து.

3. சுவிசேஷ இயக்கம், வெளிநாட்டு ஊழியம், சமுதாய ஊழியம், பட்டணத்தில் மற்றும் தேசத்தில், சிநேகிதர், அயலகத்தார், உறவினர்கள் மற்றும் அறிமுகமானவர்கள் ஆகிய இவர்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களை ஆதரித்துத் தாங்குவதிலிருந்து:

எ. தாக்கா (DHAKA) வேதாகமப் பள்ளியில், நான் ஆசிரியனாக போதிக்கும் காலத்தில், வங்காள தேசத்திலுள்ள, சிட்டகாங் மலை வெளி மாகாணத்திலிருந்து (CHILTAGONG HILL TRACT DISTRICT) வந்த மூன்று போதகர்களைப் பார்த்தேன்.

பொல்லாத சக்திகள், சபை கட்டப்படுவதை நிறுத்த முடியாது

மத்தேயு 16:13-19

எப்பொழுதும் சேனை வீரர்கள் போருக்கு ஆயத்தமாகக் காத்திருக்கும் தூரத்திலுள்ள, பர்மா தேசத்திற்கும், வங்காள தேசத்திற்கும் இடையிலுள்ள நிலப்பகுதியில், கிறிஸ்து அவருடைய சபையைக் கட்டிக்கொண்டிருக்கிறார். இந்த போதகர்களும், அவர்களுடைய சபைகளும், சபை கட்டப்படுவதை பொல்லாங்களின் சக்திகள் தடுக்க முடியாது என்பதற்கு மேலும் அதிகமாக நிரூபிக்கின்றன. மிகப்பெரிய பட்டணங்களிலிருந்து, உலகத்தில், மிகத் தொலைவிலுள்ள சிறிய கிராமங்கள் வரை கிறிஸ்து, அவருடைய சபையைக்கட்டிக்கொண்டிருக்கிறார். பொல்லாங்களின் சக்திகள் அதை நிறுத்த முடியாது!

3. இயேசு, அவருடைய சபையைத் தம்முடைய சீடர்கள் மூலமாகக் கட்டிமுடிப்பார். (16:19)

அ. நீங்கள் என்றால் நீங்கள் யாவரும் இயேசுவின் சீடர்கள் எல்லாரும். (மத்தேயு 18:18) "பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்கள்" அவர்கள் எல்லாருக்கும் கொடுக்கப்பட்டது. "திறவுகோல்" என்பது அதிகாரத்திற்கு அடையாளம் இக்காரணத்தினாலேயே பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அவைகள் தோளின்மேல் எடுத்துச் செல்லப்பட்டது. (ஏசாயா 22:22) இங்கே அவை, சபையைக் கட்டுவதற்கு இயேசுவின் சீடர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தையும் வல்லமையையும் குறிக்கிறது.

ஆ. இயேசு அவருடைய சபையைக் கட்டினார். அவர், "நற்செய்தியை" பிரசங்கித்தார், பிசாசுகளைத் துரத்தினார், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கினார், அற்புதங்களை நடப்பித்தார், இக்காரணங்களினால், அநேகர் அவரில் விசுவாசம் வைத்தனர். இவ்வாறாகவே அவருடைய சீடர்களும் காணப்படுவார்கள். அவர்கள்,

1. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள். (இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் அப்போஸ்தலர் 1:4-8; 2:1-4)

2. உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (மத்தேயு 28:19)

3. இயேசுவின் நாமத்தில் (அவருடைய அதிகாரத்தினால்) அவர்கள் பிசாசுகளைத் துரத்த வேண்டும், வியாதியஸ்தர்களைக் குணமாக்க வேண்டும், மற்றும் அற்புதங்களை நடப்பிக்க வேண்டும். (மத்தேயு 16:17-18, யோவான் 14:12) இப்படிப்பட்ட காரியங்கள் நடப்பதினால் அநேகர், இயேசுவில் விசுவாசம் வைப்பார்கள். சிறைச்சாலைக் கதவுகளைத் திறப்பதற்கும், சிறைப்பிடிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கும் இவைகளே திறவுகோல்கள் (சாவிகள்) "பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்". சாத்தானும், அவனுடைய பொல்லாத சேனைகளும் ஏற்கனவே இயேசுவால் கட்டப்பட்டிருக்கின்றன. சாத்தான் மற்றும் அவனுடைய பிசாசுகளின் பொல்லா சக்திகளிலிருந்து மக்கள் விடுவிக்கப்படுவது ஏற்கனவே நிகழக்கூடிய காரியமாக இருக்கிறது. இயேசு, சிலுவையில் முன்னதாகவே அவைகளெல்லாவற்றின்மீதும் வெற்றிசிறந்தார். (கொலோசெயர் 2:15)

இ. "கட்டுவது" என்றால் பிணைக்கப்படுவது, முடிச்சு போட்டுக்கட்டு என்று பொருள்படும். "கட்டவிழ்ப்பது" என்றால் தளர்ந்த, கட்டப்பட்ட ஒருவரை கட்டுதளர்த்தி விடுவி, என்று பொருள்படும். இயேசுவின் சீடர்களுக்கு, கீழ்க்கண்ட அதிகாரங்கள் உண்டு.

பொல்லாத சக்திகள், சபை கட்டப்படுவதை நிறுத்த முடியாது

மத்தேயு 16:13-19

1. இயேசு நடப்பித்தது போலவே பொல்லாத சக்திகளைக் கட்ட (பந்தம் அறுந்து போகும்படி செய்ய) (மாற்கு 3:27)

2. இயேசு செய்ததுபோலவே, சாத்தானின் வல்லமையிலிருந்தும், ஆளுகையிலிருந்தும் மக்களை விடுவிக்க (கட்டவிழ்த்துவிட)

ஈ. வான மண்டலங்களிலுள்ள பொல்லாங்களுடைய சக்திகளுக்கு நாம் அதிகாரத்தோடு கட்டளை கொடுக்கிறோம். வ.தெ.கி.மே. (வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு) திசைகளிலுள்ள சாத்தானையும் அவனுடைய பிசாசுகளையும் சரணடையும்படியாகக் கூறுகிறோம். நாங்கள் உன்னைக் கட்டுகிறோம். உன்னை இருக முடிச்சுப்போட்டு பிணைக்கிறோம். நீ இப்பொழுது ஆளுகை செய்து, உன் கட்டுக்குள் வைத்திருக்கும் மக்களை விடுவிக்கப்போகிறோம்; தனிநபர்கள், குடும்பங்கள், தெருக்கள், பட்டணங்கள், சங்கங்கள், நிறுவனங்கள், பொய்யான பக்தி மார்க்கங்கள், எங்கள் குடும்ப அங்கத்தினர்கள், சிநேகிதர்கள், உறவினர்கள், மற்றும் அயலகத்தார்கள். கிறிஸ்துவுக்கு அடியில் நாங்கள் யாவரும் ஐக்கியப்பட்டு, அவருடைய சபையைக் கட்டுவோம். (மத். 18:18)

உ. நாங்கள் இங்கு, இந்த சமுதாயத்தில், இந்த பட்டணத்தில், இந்த தேசத்தில், இந்த மாகாணத்தில் கட்டப்போகிறோம்! மற்ற தேசங்களில் கட்ட நாங்கள் மற்றவர்களை அனுப்புவோம். நாங்கள் சாத்தானுடன் யுத்தம் செய்ய ஆயத்தமாயிருக்கிறோம். நாங்கள் தீர்மானம் செய்துவிட்டோம். நாங்கள் உண்மை மனதுடன் வேலைசெய்ய தீர்மானித்துவிட்டோம்!

சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் எங்களை நிறுத்தமுடியாது. ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாங்கள் அவனை எதிர்க்கிறோம்!

முடிவுரை

அ. இன்றைய நமது வேதபாடத்தில் இயேசு கூறுகிற மூன்று காரியங்களைக் கேட்டோம்.

1. நான், என்னுடைய சபையைக் கட்டுவேன்.

2. பொல்லாங்களின் சக்திகள் என்னுடைய சபையைவிட பலமுள்ளதாக நிரூபிக்க முடியாது.

3. நான், உங்கள் மூலமாக அதாவது என்னுடைய சீடர்கள் மூலமாக என்னுடைய சபையை கட்டி முடிப்பேன்.

ஆ. எனவே, தனிப்பட்ட முறையில் உன்னைப்பற்றி என்ன? விசுவாசிகளின் சரீரமாகிய சபையைப் பற்றி என்ன நினைக்கிறாய்? நீ முழுவதும் அர்ப்பணிப்பாயா? நல்ல போராட்டத்தைப்போராட கருத்தாயிருக்கிறாயா? இயேசு உன்னை என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொண்டாயா?

இ. உன்னுடைய சிநேகிதர்கள், உறவினர்கள் மற்றும் அயலகத்தார்களுடன் தொடர்புகொள். உலக முழுவதும் பரவலாக செல்வாக்கு பெற்று, வளர்ந்து பெருகும்படியாக, உலகத்தின் அறுவடை வயல்களுக்கு மற்றவர்களை அனுப்பு.

ஈ. சோர்ந்து போகாதே. உபவாசித்து, ஜெபித்து, சாட்சிகூறி, உன்னுடைய திறவுகோல்களைக் கொண்டு கதவுகளைத் திற. பொறுமையாக இரு. ஏற்றநேரத்தில் தேவன் விருத்தியடையச் செய்வார். உன்னுடைய குடும்பம், சிநேகிதர்கள், அயலகத்தார்கள் மற்றும் உறவினர்கள் இரட்சிப்படையும் செய்வார். வெளியிடங்களில் ஊழியம் நடக்க நீ எடுத்த முயற்சிகளும் கனிகொடுக்கும்!

இயேசுவானவர் மறுரூபமடைதல்

மத்தேயு 17:1-13

முன்னுரை

அ. கிறிஸ்துவாகிய மேசியா, அபிஷேகம் பண்ணப்பட்டவர், ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்ற பேதுருவின் அறிக்கை மற்றும் அவருடைய மரணம் பற்றியும் உயிர்த்தெழுதலைப் பற்றியும் இயேசு முன்னறிவித்தது ஆகிய இவ்விரு சம்பவங்களை தொடர்ந்து இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. விரிவுரையாளர்களின் கூற்றுப்படி இது சந்தேகமின்றி கர்த்தரால் அவருடைய சீடர்களை ஊக்குவிக்கும்படி நடைபெற்றது. அவர்களுடைய தலைவர், பொல்லாத மக்களின் கரங்களில் எருசலேமில், துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்படுவார் என்பதைக்கேட்டு நிச்சயமாகத் துக்கப்படுவார்கள்!

1. இயேசுவானவர் மறுரூபமாகும் போது, மோசேயும் எலியாவும் காணப்பட்டார்கள் (17:1-4)

அ. வசனம் 1 "ஆறு நாளைக்குப் பின்பு" இது ஒரு சமயம் இவ்வாறு பொருள்படலாம், "சுமார் ஒரு வாரத்திற்குப் பின்பு, இயேசு பேதுருவையும், யாக்கோபையும் யோவானையும் கூட்டிக் கொண்டு தனித்திருக்கும்படி, உயர்ந்த மலையின் மேல் போனார்" லூக்கா, ஏறக்குறைய எட்டு நாட்களுக்குப் பின் என்று கூறுகிறார். (லூக்கா 9:28) இது ஒரு சமயம், இயேசுவும் அவருடைய சீடர்களும், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு, அதாவது சிசேரியா, பிலிப்பி பட்டணங்களிலிருந்து (16:13) உயர்ந்த மலைக்கு (17:1) பிரயாணம் செய்ய எடுத்துக் கொண்ட சுமாரான காலமாக இருக்கலாம்.

பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய இவர்கள் பன்னிரண்டு பேர்களில் முக்கியமான மத்திய வட்டத்தைச் சேர்ந்தவர்கள். (10:2, 20:20, 26:37)

ஆ. "உயர்ந்த மலையின் மேல் போய்" சிசேரிய, பிலிப்பி பட்டணங்களுக்கு மேலாக உயர்ந்து எழும்பி நிற்கும் எர்மோன் மலை என்று சிலர் நினைக்கின்றனர். சிசேரியா, பிலிப்பி பட்டணங்களிலிருந்து, கப்பர் நகூமிற்குச் செல்லும் வழியில் உள்ள மீரோன் (MIRON) மலை என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர். "அந்த மலை" ஜெபிப்பதற்கு ஏற்ற தனிமையான இடம் என்பதால் அது தெரிந்தெடுக்கப்பட்டிருக்கலாம். (லூக்கா 9:28). எப்படியிருப்பினும், மோசே, எலியா ஆகிய இருவரும் மலையின் மேலிருந்து தெய்வீக வெளிப்படுத்தல்களைப் பெற்றுக் கொண்டதை, இந்த சம்பவம், ஞாபகப்படுத்துகிறது. (யாத்திராகமம் 19:24; 1 இராஜாக்கள் 19 அதிகாரம்)

இ. வசனம் 2 "அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்". "மறுரூபமானார்" என்றால், இயேசுவின் சரீரம் அற்புதமாக மகிமையான நிலைக்கு மாறினது என்று பொருள்படும். இது, அற்புதமாக மற்றொரு அமைப்பு பெற்றார் (சரீர பிரகாரமாக) என்றும் பொருள்படும். அவருடைய சரீரம், முழுவதும் வித்தியாசமாக மாறிவிட்டது. சீடர்களுக்கு கிறிஸ்து அவதரிப்பதற்கு முன் இருந்த மகிமையையும், உயர்த்தப்பட்டு மகிமையடைவதையும் சிறிது நேரம் தரிசிக்கும் பாக்கியம் கொடுக்கப்பட்டது. (யோவான் 1:14, 17:5; பிலிப்பியர் 2:6-7) இந்த சம்பவத்தில் கீழ்க்கண்ட விளக்கங்களும் உள்ளடங்கும்:

1. முகம் சூரியனைப் போல் பிரகாசித்தது.

2. ஆடைகள் வெளிச்சத்தைப் போல் அவ்வளவு வெண்மையாக மாறிற்று. (2 பேதுரு 1:16-18, வெளிப்படுத்தின விசேஷம் 1:16)

இயேசுவானவர் மறுரூபமடைதல்

மத்தேயு 17:1-13

ஈ. இந்த சம்பவம், இயேசுவின் சீடர்களை உற்சாகப்படுத்துவதற்காக ஒரு சமயம் நடைபெற்றிருக்கலாம். எருசலேமில் யூதத் தலைவர்களால், துன்புறுத்தப்பட்டு, கொல்லப்படுவார் என்று இயேசு அவர்களிடம் கூறினபோது, சந்தேகமின்றி அதைரியப்பட்டனர். (16:21) இன்னும் இக்காரியங்களில் வித்தியாசம் இல்லை. முதன் முதலாக இருந்த சீடர்கள் அதைரியப்பட்டு இருக்கையில் அவர்களைக் காத்துக் கொள்ள, கிறிஸ்துவின் தெய்வீக வெளிப்பாடு அவசியமாக இருந்ததோ, அவ்வாறே நாமும் சுவிசேஷத்திற்காக, அநியாயமாகத் துன்பப்படும்போதும், புறக்கணிக்கப்பட்டு தனிமையில் நம்பிக்கையிழந்த நிலையில் இருக்கும் வேளைகளில், இருக்கிறோம். ஆதி சீடர்களை இயேசு ஏமாற்றமடைய விடவில்லையோ, அவ்வாறே நாம் சோர்வடையும் நேரங்களில் அவர் நாம் ஏமாற்றமடையவிடமாட்டார்! ஆனால் எப்படியும் நாமும், இயேசுவும் அவருடைய சீடர்களும் சென்றது போல், தனிமையான இடத்திற்குச் சென்று ஜெபிக்க வேண்டும்'

உ. வசனம் 3 "அப்பொழுது மோசேயும் எலி யாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்" இயேசு அவருடைய மரணத்தைக் குறித்து, அவர்களோடு பேசினார் என்று லூக்கா நமக்குக் கூறுவதிலிருந்து (லூக்கா 9:31) இந்த சம்பவம் இயேசுவின் சீடர்களை தைரியப்படுத்துவதற்காக நிகழ்ந்திருக்கக்கூடும் என்பதை மறுபடியும் சுட்டிக்காட்டுகிறது. மோசே நியாயப் பிரமாணத்திற்கு அடையாளமாக இருக்கிறார். அதே சமயம் எலியா தீர்க்கதரிசிகளுக்கு அடையாளமாக இருக்கிறார்.

நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்ற வந்தேன் என்று இயேசு கூறினது, இதற்கு ஆதாரமாயிருக்கிறது. (மத்தேயு 5:17) இந்தச் சம்பவம், விரிந்து தொடரும்போது மோசே, எலியா ஆகிய இவ்விருவரைக் காட்டிலும் இயேசு மிக உன்னதமானவர் என்று காட்டுவதே மத்தேயுவின் நோக்கம் என்பது மிக தெளிவாகிறது. (வசனம் 5,8; எபிரெயர் 1:1-2, 3:1-6; யாத்திராகமம் 34:29)

ஊ. வசனம் 4. "அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது, உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும் எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்". பாதுகாப்பான இடங்களைக் (கூடாரங்கள்) கட்ட, பேதுரு விரும்பியது கீழ்க்கண்டவற்றோடு தொடர்புடையது:

1. மோசே, கர்த்தரை சந்தித்த இடமாகிய கூடாரம். (யாத்திராகமம் 33:7-11)

2. வனாந்திரத்தில் இருந்த ஆசரிப்புக் கூடாரம்

3. கூடாரப் பண்டிகை (லேவியராகமம் 23:42-43) பேதுரு அதிர்ச்சியடைந்து பயந்த நிலையில், ஏதாவது கூறவேண்டும் என்பதற்காக மட்டும் இதைச் சொன்னான் என்பது தெளிவாகத் தெரிகிறது. (மாற்கு 9:5-6, லூக்கா 9:33) இயேசு, இன்று நமது கண்களுக்குமுன் மகிமையாகக் காணப்பட்டிருப்பாரானால், நாம் நடந்து கொள்வது, பேதுருவின் பிரதிக்கிரியைவிட வேறாக இருந்திருக்க முடியாது!

2. இயேசு மறுரூபமடையும் போது பிதாவானவர் சீடர்களிடம் பேசுகிறார். (17:5-8)

இயேசுவானவர் மறுரூபமடைதல்

மத்தேயு 17:1-13

அ. வசனம் 5 "அவன் (பேதுரு) பேசுகையில் இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது..." "அவர்கள்" என்பது, இயேசு, மோசே மற்றும் எலியா, என்பவர்களைக் குறிக்கும். "ஒளியுள்ள" என்பது, தேவன் வாசம் பண்ணும் இடத்திலுள்ள மகிமை நிறைந்த மேகம் (மிகப் பிரகாசமாக ஒளிரும்) அவர்களைச் சூழ்ந்து கொண்டது (அவர்களை முழுவதும் சூழ்ந்து மூடிக்கொண்டது). இது பிதாவாகிய தேவன் அவர்கள் மத்தியில் பிரசன்னமானார் என்பதை வெளிப்படுத்துகிறது. (எசேக்கியேல் 16:10, 40:35, லேவியராகமம் 16:2, 1இராஜாக்கள் 8:10-11; வெளிப்படுத்தின விசேஷம் 15:8)

ஆ. வசனம் 5 "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து, ஒரு சத்தம் உண்டாயிற்று." யோர்தான் நதியில் இயேசு, யோவான் ஸ்நானனால் ஞானஸ்நானம் பெற்றபோதும் இதே வார்த்தைகளைப் பிதாவானவர் கூறினார். (மத்தேயு 3:17) இயேசு இந்த பாகத்தில் மோசே, எலியா ஆகிய இவ்விருவரையும் விட மிக உயர்ந்தவராகக் காணப்படுகிறார். இம்மூவரிலும் இவர் ஒருவரைப் பற்றிதான் பேசப்படுகிறது:

1. பிதா இவரைக் குறித்து பேசுகிறார். அவர் தேவனுடைய குமாரன் என்றும் அறியப்படுகிறார். (சங்கீதம் 2:7)

2. அவர்கள் செவிகொடுக்க வேண்டும் இயேசுவின் மனித அவதாரம் மற்றும் போதனைகள் ஆகியவற்றில் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம்(மோசே)மற்றும்தீர்க்கதரிசனங்கள் (எலியா) ஆகிய இரண்டும், நிறைவேறுவது மற்றொரு முக்கிய குறிப்பு.

இயேசு, மோசேயைப் போல (ஒருவகையாக) ஒரு தீர்க்கதரிசிபோல் அவதரித்து, இஸ்ரவேல் மக்களை வழிநடத்துவது என்பதையும், இது சுட்டிக் காட்டுகிறது. (உபாகமம் 18:15-19, அப்போஸ்தலர் 3:22-23, 7:37)

இ. வசனம் 6 "சீஷர்கள் அதைக் கேட்டு முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்". "பயந்தார்கள்" என்றால், மிக அதிகமாகத் திகிலடைந்தனர், திடீரென்று பயத்தில் தாக்கப்பட்டனர், பயபக்தி மிகுதியால் அதிர்ச்சியுற்று நின்றனர் என்று பொருள்படும். சீனாய் மலையிலிருந்து தேவன் பேசிய சத்தத்தைக் கேட்ட இஸ்ரவேலரின் உணர்ச்சிகளுக்கு இது ஒப்பானதாகும். (யாத்திராகமம் 20:19; உபாகமம் 5:25-26, 18:16, எபிரெயர் 12:19)

ஈ. வசனம் 7. "அப்பொழுது, இயேசு வந்து, அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கள் பயப்படாதேயுங்கள் என்றார்" "பயப்படாதீர்கள்" அவர்கள் பயப்பட்டு, திடீரென்று திகிலடைந்த போது இயேசு எப்போதும் போல், அவருடைய சீடர்களின் பயத்தை நீக்கி, அமைதிப்படுத்துகிறார். (மத்தேயு 14:27, 28:10; அப்போஸ்தலர் 18:9; வெளிப்படுத்தின விசேஷம் 1:17)

உ. வசனம் 8 "அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில் இயேசுவைத் தவிர வேறொருவரையும் காணவில்லை." மோசேயும் நியாயப்பிரமாணமும் மற்றும் எலியாவும் எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் பிற்பாடு, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஒரே ஒருவர் மட்டும் நிலைத்து நிற்கிறார். தேவனுடைய தற்சொரூபமும், மானிடர்களுக்கு அவருடைய திட்டங்களும், நோக்கங்களும் இப்பொழுது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுவிட்டது. நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக பூரணமாகாத சிறு சிறு துணுக்குகளாக, வெளிப்படுத்தப்பட்டவைகள் நடைமுறையிலிருந்து நீக்கப்பட்டது! (பார்வையிலிருந்து கடந்து சென்றுவிட்டது)

இயேசுவானவர் மறுரூபமடைதல்

மத்தேயு 17:1-13

3. இயேசு மறுரூபமாக்கப்பட்ட போது, யோவான் ஸ்நானன் மற்றும் எலியாவிற்கு விளக்கம் கொடுக்கப்படுகிறது (17:9-13)

அ. வசனம் 9 "...இந்த தரிசனத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டார்" "ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்" என்று கிறிஸ்து கட்டளையிட்டதற்குக் கீழ்க்கண்டவைகளே அதற்குப் பின்னால் உள்ள அவருடைய விருப்பம் இல்லாததற்கான காரணம்:

1. மனிதர்களுடைய பொருளாதாரத் தேவைகளை மட்டும் கொடுக்க வந்த ஒரு அற்புதமான ஒருவராகக் காணப்படுவது. மானிடர்களின் பாவங்களுக்காக பலியாக தன்னையே படைக்க, அவர் வந்தார். அவருடைய முதல் வருகை, ஏசாயாவினால் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்ட, பாடு அனுபவிக்கும் தாசன்.

2. திரள் கூட்டமான மக்கள் அவரைப் பின்பற்றி, ரோம அரசாட்சியிலிருந்து தங்களை விடுவிக்கும் இராஜாவாக மற்றும் அரசியல் தலைவனாக இருக்க அவரை வற்புறுத்துவார்கள். (யோவான் 6:2, 15, 26) ஆகவே, அவருடைய அற்புதமான கிரியைகளை (இந்த சந்தர்ப்பத்தில், அவருடைய தெய்வீக மகிமை) மற்றவர்களுக்கு அறிவிக்கிறவர்கள், உண்மையில் அவருடைய வேலையைமேலும்அதிக கடினமுள்ளதாக்குவார்கள்.

ஆ. வசனம் 9. "மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும்..." இயேசுவை மனிதர்கள் பின்பற்றி சென்று, அவரை இராஜாவாக அறிவித்த பிற்பாடு, பொல்லாத மனிதர்கள் கையில் துன்புறுத்தப்பட்டு, மரிப்பாரானால் அது பயனற்றதாக இருந்திருக்கும். அவர் எம்மாதிரியான மேசியாவாக இருக்க முடியும்? ஒவ்வொருவரும் ஏமாற்றப்பட்டிருப்பார்கள். மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட்ட, தெய்வீக தேவனுடைய குமாரனாக அறிவிக்கப்பட்ட ஒருவரைப் பின்பற்றுவது, முற்றிலும் வேறான காரியம்! (ரோமர் 1:4) அவர்கள் ஒரு போதும் ஏமாற்றமடையமாட்டார்கள். ஏனெனில் அவர் பூமியிலுள்ள எல்லா தேசங்கள் மற்றும் நித்தியமான ஒரு இராஜ்ஜியத்தை ஆளுகை செய்யப் போகும் நித்தியமான இராஜாவாக இருப்பவரை அவர்கள் பின்பற்றுகிறவர்களாயிருப்பார்கள். இக்காரணத்தினால் தான், பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியவர்களிடம் மறுரூபமாக்கப்பட்டதை அவர் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்படும்வரை ஒருவரிடமும் கூறவேண்டாம் என்று இயேசு கூறினார்!

இ. வசனம் 10-11 "...அப்படியானால் எலியா முந்தி வரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படியென்று கேட்டார்கள். மல்கியா 4:5-6 வசனங்கள் இதைக் குறிக்கும். அது இவ்வாறு கூறுகிறது: "அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திலும் பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்". வசனம் 11 மற்றும் மார்க்கு 9:12 இயேசு இதை அழுத்தமாக இவ்வாறு கூறுகிறார், "...எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்..."

ஈ. மார்க்கு 9:12 வசனங்களில் இயேசு தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார், "மனுஷ குமாரன் பல பாடுகள் பட்டு அவமதிக்கப்படுவாரென்று, அவரைக் குறித்து எழுதியிருக்கிறதே அது எப்படி என்றார். (ஏசாயா 53:3-6) அல்லது மேலும் நன்றாகக் கூறுவோமானால், "எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்தி முடித்திருக்கும் இந்த சூழ்நிலையில், மேசியா எவ்வாறு துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்படுவார்?" (மத்தேயு 16:21)

இயேசுவானவர் மறுரூபமடைதல்
மத்தேயு 17:1-13

உ. வசனம் 12-13. "ஆனாலும், எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள்..." எலியா வந்தபோது, அவன் மற்றவர்களால் கண்டறியப்படவில்லை. யோவான் ஸ்நானன் தான், "எல்லாவற்றையும் சீர்ப்படுத்த வரப்போகும் எலியா". ஆனால் எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவதற்குப் பதிலாக, அவன் பொல்லாத மனிதர்களின் கைகளினால் துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்டான். இக்காரணத்தினால்தான், யோவான் ஸ்நானனுக்குப் பின்னால் வந்த மேசியாவும் துன்பப்படுத்தப்பட்டுக் கொல்லப்படுவார். மக்கள் இவரையும் கண்டறியவில்லை. (மத்தேயு 11:11-19)

முடிவுரை

அ. ஆகவே, இயேசு மறுரூபமாக்கப்பட்டபோது:

1. மோசேயும் எலியாவும் தோன்றி, அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைப்பற்றி இயேசுவோடு பேசினார்கள்.

2. சீஷர்களிடம், பரலோகத்திலிருந்து பிதாவானவர் பேசினார்.

3. யோவான் ஸ்நானன் மற்றும் எலியா ஆகிய இவர்களைப்பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டது.

ஆ. அவர்தான் மேசியாவாகிய ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்பதை யாவரும் அறியும்படியாக அறிவிக்க, இயேசுவின் சீடர்கள், அவர், உயிரோடு எழுப்பப்படும் வரைக்கும் காத்திருக்கவேண்டியது அவசியமாயிற்று. ஏனென்றால், கோபத்தில் எரியும் மக்களால் அவர் துன்புறுத்தப்பட்டு கொல்லப்படும் போது, அவர்கள் ஏமாற்றமடைந்து அவரை விட்டு விலகிச் சென்றுவிடுவார்கள்.

இ. ஆனால் இனிமேல் இதை ஒரு இரகசியமாக வைக்கவேண்டிய அவசியமில்லை. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, பரலோகத்தில் தேவனுடைய வலதுபக்கத்தில் இருக்க, மகிமையாக உயர்த்தப்பட்டுள்ளார். இயேசு, மத்தேயு 28:19 வசனத்தில் இவ்வாறு கூறுகிறார்: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீடர்களாக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட (எல்லா அதிகாரங்களுடனும்) இருக்கிறேன் என்றார்!"

தேவனுடைய இராஜ்ஜியத்தில் சிறு பிள்ளைகள்

மத்தேயு 18:1-14

முன்னுரை

அ. சீடர்கள் கப்பர்நகூமிற்கு இப்பொழுதான் வந்தார்கள். ஒருசமயம் சீமோன் பேதுருவின் வீட்டில் இருந்திருக்கக்கூடும். கப்பர் நகூமிற்கு வரும் வழியில், தங்களில் மிகப்பெரியவன் யார் என்று விவாதித்துக்கொண்டு வந்தனர் (மாற்கு 9:33-34), லூக்கா 9:46). தொடர்ந்து பின்னால் கூறப்படும் கிறிஸ்துவின் பிரதிமொழிகள், இந்த பொருள் சம்பந்தமானதின் பொதுவான கருத்து.

1. சிறு பிள்ளைகளைப்போல் தங்களைத் தாழ்த்துகிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பார்கள் (18:1-4).

அ. வசனம் 1 "அவ்வேளையிலே சீடர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பரலோக இராஜ்ஜியத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள்" பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் மத்தியில், யார் மிகப்பெரியவன் என்பதைக் குறித்து தொடர்ந்து போட்டியாக இருந்ததாகக் காணப்படுகிறது. (மத்தேயு 20:20-28). கிறிஸ்துவால் ஆவிக்குரிய தலைவனாக பேதுரு உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடுகூட, அவன், அவனுடைய மரணத்தோடு, யோவானுடைய மரணத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறான் (யோவான் 21:18-21). இயேசுவானவர், பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய இவர்களை முக்கிய உள்வட்டமாக, வெளிப்பாடுகளைக் கொடுக்கவும்,ஊழியங்களுக்குமேற்படுத்தினதிற்குப் பிறகு இது நடந்திருக்கக்கூடும் (17:1-2, 24-27, 14:28-29, 16:16-18).

ஆ. வசனம் 2 "ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தி..." இது ஒருவேளை சீமோன் பேதுருவின் குமாரனாக இருக்கலாம். (மாற்கு 9:33,36).

இ. வசனம் 3 "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" "மெய்யாகவே சொல்லுகிறேன்" என்ற சொற்றொடர், இயேசு பயபக்திக்குரிய எச்சரிக்கையை அறிவிக்கிறார் என்று பொருள்படும். அவர்களுடைய மதியீனமான கேள்விக்கு பதிலுரைப்பதற்குப் பதிலாக, இயேசு, பயபக்தியான ஒரு எச்சரிக்கையைக் கூறுகிறார்! (யோவான் 3:3). "ஆகாவிட்டால்" என்றால், சுற்றித் திரும்புவது, பின்னால் போவது, திரும்பி மற்றொரு திசையில் செல்வது என்றுபொருள்படும். "சிறுபிள்ளைகளைப்போல்" என்றால் தாழ்மையாகவும், நம்பிக்கையுடனும், சமுதாய உயர்வுநிலை மற்றும், மற்றவர்களைவிட தங்களுக்கு அதிக அனுகூலமான நிலையை அபகரித்துக்கொள்வது, ஆகிய இப்படிப்பட்ட காரியங்களைக், குறித்து கவலைப்படாமல் இருப்பது என்று பொருள்படும் (பிலிப்பியர் 2:3-4)

ஈ. அப்போஸ்தலர்கள், போட்டிமனப்பான்மையுடன் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டிருந்தால் அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திலிருந்து விலக்கப்படுவார்கள். இது இப்பொழுது, இயேசுவைப் பின்பற்றத் தேடுகிற யாவருக்கும் பொருத்தமாக இருக்கும்! பெருமையாக, கர்வமாக, பேராசையுடையவர்களாக மற்றும் இச்சை நிறைந்தவர்களாகவும்,பொறாமையுள்ளவர்களாகவும், எரிச்சலடையவர்களாகவும் இருப்பவர்கள், தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டார்கள். சிறுபிள்ளையைப்போல் தேவனைத் தேடுகிறவர்களுக்காகவே அது ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிறது! "தேவனுடைய இராஜ்ஜியம்" கீழ்க்கண்டவற்றைக் குறிக்கிறது.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் சிறு பிள்ளைகள்

மத்தேயு 18:1-14

1. சபை சகாப்தத்தில் அதாவது தற்காலத்தில் மனிதர்களுடைய இருதயங்களில் தேவனுடைய அரசாட்சி.

2. கிறிஸ்து அவருடைய பரிசுத்தவான்களோடு, எருசலேமிலிருந்து, ஆட்சி செய்யப்போகிற, தேவனுடைய நித்திய இராஜ்ஜியத்தின் ஆரம்பமாகிய 1000 வருட ஆட்சி (வெளிப்படுத்தின விசேஷம் 20:4). புதிய வானம், மற்றும் புதிய பூமியில், தேவனும் கிறிஸ்துவும், புதிய எருசலேமிலிருந்து செய்யும், நித்திய ஆளுகையும் இதில் உள்ளடங்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 21:1-3).

உ. வசனம் 4 "ஆகையால், இந்த பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக இராஜ்ஜியத்தில் பெரியவனாயிருப்பான்" "இந்த பிள்ளை" இது அவர்கள் நடுவில் நிற்கும்படியாக, இயேசு அழைத்தது, பேதுருவின் மகனாக, அநேகமாக இருக்கக்கூடும். "தன்னைத் தாழ்த்துகிறவன்" இது இருதயத்தின் நிலையைக் காட்டுகிறது. சிறு பிள்ளையைப்போல் மாறும்வரை உன்னைத் தாழ்த்துவது, சமுதாய நிலையில், கீர்த்தி, புகழ் ஆகியவைகளில் கீழான நிலையில் காத்துக் கொள்வது. கிறிஸ்துவிடம் இப்படிப்பட்ட மனப்பான்மையுடன் வருகிறவன், தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது மாத்திரம் அல்லாமல், "தேவனுடைய இராஜ்ஜியத்தில் மிகப் பெரியவன்", என்றும் அழைக்கப்படுவான். எவ்வளவுக்கு அதிகமாக சிறுபிள்ளைப்போல் இருக்கிறோமோ அந்த அளவுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தில் அதிக பெரியவர்களாகக் கருதப்படுவோம்.

இந்தக் கூற்று வசனம் 1 சம்பந்தப்பட்டது. அப்போஸ்தலர்களில் எவன் மிக அதிகமாக சிறுபிள்ளைபோல் மாறியிருக்கிறானோ அவனே அவர்களில் மிகப்பெரியவன்.

2. தேவனுடைய இராஜ்ஜியத்தினுடைய சிறுபிள்ளைகளுக்கு இடறல் உண்டாக்குகிறவனுக்கு ஐயோ (18:5-11)

அ. வசனம் 5-6 இந்த இரண்டு வசனங்களும் எதிர்மறை, ஈரடிச் செய்யுளாக அமைகிறது.

1. "இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். "சிறு பிள்ளை" என்பது இயேசுவின் சீடர்களை விவரிக்கிறது. "என் நாமத்தினிமித்தம்" என்றால், எனக்காக, அல்லது அவர்கள்எனக்குச் சொந்தமானவர்களாக இருப்பதினால், என்று ஒருவேளை பொருள்படலாம். எனவே, கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களை, ஏற்றுக் கொள்ளுகிறவன், உண்மையில் அவரை (இயேசுவை) ஏற்றுக்கொள்ளுகிறான். அவர்கள் அதிக அளவில் வெகுமதியளிக்கப்படுவார்கள். (மத்தேயு 10:42, 25:10; அப்போஸ்தலர் 10:4, எபிரெயர் 6:10).

2. வசனம் 6 "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு, இடறல் உண்டாக்குகிறவன் எவனோ" "இடறல்" என்றால் கண்ணியில் சிக்கவைக்க, தவறிவிழச் செய்ய, (தடுமாறி விழும்படி செய்ய) சன்மார்க்க பாவங்களில் விழ கவர்ச்சி செய்ய, ஒரு விசுவாசி, விசுவாசத்திலிருந்து விழுந்துபோகுவதற்கு ஏதுவான ஒரு காரியத்தை செய்தல். "ஒரு பெரிய ஏந்திரக்கல்" இதை எழுத்தின்படி கூறுவோமானால் இது, "கழுதைகளுக்குரிய ஏந்திரக்கல்" அதாவது, அந்த ஏந்திரக்கல் கழுதையினால் சுற்றப்படும். இது சாதாரணமாக, பெண்களால், ஒவ்வொருநாள் காலையிலும் பயன்படுத்தப்படும் சிறிய ஏந்திரக்கல்லை விட அதிக பெரியதாகவும், அதிக பாரமானதாகவும் இருக்கும் (24:41).

தேவனுடைய இராஜ்ஜியத்தில் சிறு பிள்ளைகள்

மத்தேயு 18:1-14

ஆ. கட்டப்பட்ட நிலையில் தேவனுடைய சிறுபிள்ளைகளில் ஒன்றை பாவம் செய்வதற்குக் காரணமாக இருந்து (விழுந்துபோவதற்கு ஏதுவாக) அதனால் அவன் சரீரமும் ஆவியும் நித்திய அக்கினியில் தள்ளப்பட செய்வதைவிட, ஒரு பெரிய ஏந்திரக்கல் (கழுதையினால் மட்டும் சுற்றக்கூடியது) கழுத்தைச் சுற்றி கட்டப்பட்ட நிலையில், சமுத்திரத்தில் மூழ்குவது இலகுவாயிருக்கும் (மத்தேயு 10:28, வெளிப்படுத்தின விசேஷம் 20:13-15). இது, இயேசுவினுடைய சீடன் ஒருவனைப் பாவத்தில் விழ காரணமாக இருப்பதின் விளைவைக் கூறுவது மட்டுமின்றி, இது நித்திய நரக அக்கினியைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுவதாகவுள்ளது.

இ. வசனம் 7 "இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ..." "உலகத்துக்கு" என்றால் உலகத்திலுள்ள மக்கள், உலகத்தில் வாழும் மனிதர்கள், என்று இங்கு பொருள்படும். "ஐயோ" என்பது துக்கத்தை வெளிப்படுத்தி உரக்கக்கூவும் ஒரு சொல், நியாயத்தீர்ப்பை அறிவிக்கும் சொல். அவர்கள், தேவனுடைய இராஜ்ஜியத்தினுடைய சிறுபிள்ளைகளை கண்ணியில் சிக்கவைத்து, தவறிவிழச் செய்து, (தடுமாறிவிழக் காரணமாக இருப்பது) வசீகரித்து கெட்டவழியில் இழுத்துச்சென்று சன்மார்க்கப் பாவம் செய்யக் காரணமாக இருந்ததினால், இந்த உலகத்தின் மக்கள் தேவகோபாக்கினையையும், நியாயத்தீர்ப்பையும் பெற்று மிகுந்த வேதனையையும், துயரத்தையும் அனுபவிப்பார்கள்.

ஈ. வசனம் 8-9 "உன் கையாவது உன் காலாவது உனக்கு இடறல் உண்டாக்கினால்.... உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால்.....". இந்தக் கடிந்துகொள்ளுதல் ஒரு சமயம் கிறிஸ்துவினுடைய சீடர்களை நோக்கிக் கூறப்பட்டிருக்கலாம். தேவனுடைய இராஜ்ஜியத்திலுள்ள மற்ற சிறு பிள்ளைகள் சோதிக்கப்பட்டு பாவத்திற்குள் வழிநடத்தப்பட காரணமாக இருக்கும், அவர்களுடைய வாழ்க்கையில் காணப்படும் பாவங்களுக்கு உடனடியாகவும் கடுமையாகவும், நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் பாவத்தில் தொடர்ந்து ஈடுபட்டு இருப்பார்களானால், அது மற்ற விசுவாசிகள் பாவத்திற்குள் வழிநடத்தப்பட ஏதுவாக இருப்பதுடன், அது அவர்கள் தாங்களும் நித்திய நரக அக்கினியில் ஆவி, சரீரத்துடன் தள்ளப்படக் காரணமாக இருக்கும்!

உ. மூத்த விசுவாசிகள், முதிர்ச்சியடையாத விசுவாசிகள் தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் தடுமாறி, விழுந்துவிட காரணமாக இருக்கும், தர்க்கத்திற்குட்பட்ட காரியங்களில், கிறிஸ்துவுக்குள் அவர்களுக்கு உள்ள சுதந்திரத்தை (தங்களுக்குச் சாதகமாக) பயன்படுத்தக் கூடாது. இது அநேகருடைய, வாழ்க்கையில், அவர்களுடைய பலவீனமான மனச்சாட்சியைப் பாதித்து, கிறிஸ்துவில் அவர்களுக்கு இருந்த அவர்களுடைய விசுவாசத்தை அழித்துப்போடக் காரணமாக இருக்கும் (ரோமர் 14:10-16, 15:1, 1 கொரிந்தியர் 8:9-13)

ஊ. வசனம் 10 "இந்தச் சிறியரில் ஒருவனையும், அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்". "அற்பமாய் எண்ணாதபடிக்கு" என்றால், மற்றொருவருக்கு விரோதமான காரியங்களை நினைப்பது, அவர்கள் தகுதியற்றவர்களென்று எண்ணுவது, அவர்களை இகழ்ச்சியுடன் அலட்சியமாக நோக்குவது (ரோமர் 14:10).

தேவனுடைய இராஜ்ஜியத்தில் சிறு பிள்ளைகள்

மத்தேயு 18:1-14

எ. வசனம் 10 "... அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்". தேவனுடைய இராஜ்ஜியத்தின் சிறுவர்களை இகழ்ச்சியுடன் நோக்கக்கூடாது என்பதற்கான காரணம் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது! தேவனுடைய தூதர்கள், தங்கள் பார்வையை அவர்களைவிட்டு நீக்காமல், அவர்களுக்கிழைக்கப்படும் தீமையான கிரியைகளை பிதாவிடம், அறிவிக்கிறார்கள்! (சங்கீதம் 34:7,91:11, எபிரெயர் 1:14, லூக்கா 15:10, 16:22, வெளிப்படுத்தின விசேஷம் 5:11-12) இந்த வேதவசனங்கள், எல்லா தேவதூதர்களும், தேவனுடைய இராஜ்ஜியத்தின் சிறு பிள்ளைகள் யாவரையும் காத்து வருகிறார்கள் என்று ஒரு சமயம் பொருள்படலாம்!

3. அவருடைய சிறுபிள்ளைகளில் ஒருவராவது கெட்டுப்போவது பிதாவாகிய தேவனுடைய சித்தமல்ல (18:12-14).

அ. இந்த வேதபாகம் உண்மையில் ஒரு உவமை. அதில்,

1. "மனிதன்" பிதாவாகிய தேவன்.

2."நூறு ஆடுகள்"தேவனுடைய இராஜ்ஜியத்திலுள்ள சிறுவர்கள் (கிறிஸ்துவின் சீடர்கள்)

3. "சிதறிப்போவது" மற்றும் காணாமல்போவது என்றால், விசுவாசத்தை விட்டு விலகிப்போய், பிசாசின் பக்கமாக சென்று அவனால் கெட்டுப்போவது.

ஆ. வசனம் 12-14 விசுவாசிகள், மற்ற விசுவாசிகளை அலட்சியம் செய்யக்கூடாது, (அவர்களுக்கு விரோதமானவைகளைக் குறித்து சிந்தனை செய்வது, அவர்கள் தகுதியற்றவர்கள் அல்லது கண்ணியமற்றவர்கள் என்று கருதுவது, அவர்களை இகழ்ச்சியாக, அற்பமாக நோக்குவது) என்பதற்கு இது உண்மையில் ஒரு இரண்டாவது காரணம். பரலோகப் பிதா அவருடைய சிறுபிள்ளைகள், ஒவ்வொருவரைக் குறித்தும் கரிசனையுள்ளவராக இருக்கிறார். அவர்களை இகழ்வதற்கு பதிலாக, விசுவாசிகளின் சமுதாயம், விசுவாசத்தை விட்டு வழிவிலகிச்சென்று, காணாமல் போகும் அபாயத்தில் இருக்கும், அவர்களுடைய ஒரு சகோதரன் அல்லது சகோதரியை, பத்திரமாக திரும்பிவரும்படியாக, தவறாமல் முயற்சி செய்யவேண்டுமென்பதே பரலோகப் பிதாவின் விருப்பம்!

முடிவுரை

அ. கிறிஸ்தவ சகோதரர்கள் மற்றும் சகோதரிகள், ஒருவருக்கு விரோதமாக மற்றவர்கள் பாவம் செய்வதைக் குறித்த, இயேசுவினுடைய உபதேசத்தைத் தொடர்ந்து, மத்தேயு, இயேசுவின் இந்த உரையாடலைக் கூறுவது தற்செயலாக நிகழ்ந்ததல்ல. (மத்தேயு 18:15-20). ஒரு விசுவாசி, மற்றொரு விசுவாசிக்கு விரோதமாக இழைத்த பாவங்களுக்காகமனந்திரும்பமறுத்தால், (தலைவர்களாலும்,சபையின்மற்றஅங்கத்தினர்களும் எச்சரிக்கை செய்த பின்பும்) அவன் கிறிஸ்தவ சமுதாயத்தைவிட்டு வெளியேற்றப்பட வேண்டும். மற்றும் அஞ்ஞானியைப்போலவும், ஆயக்காரனைப் போலவும் (அவிசுவாசியாக) நடத்தப்படவேண்டும். அவனுடைய துன்மார்க்கமான நடத்தை, அவன் அவர்களுடன் இருக்க அனுமதிக்கப்பட்டால், மற்ற சகோதரர்கள் சகோதரிகளை விசுவாசத்திலிருந்து விழுந்து விலகிச்செல்ல ஏதுவாக இருக்கும்!

ஆ. தேவனுடைய இராஜ்ஜியத்தில் மிகப்பெரியவன் போல் காட்ட விரும்புவதாகச் சுட்டிக்காட்டும்மாதிரியானநடத்தையுடையவர்களையும், யார் பெரியவன் என்ற கேள்வியை துணிந்து கேட்பவர்களையும், இயேசுவின் இந்த உபதேசங்கள் வாயடைக்கும். கிறிஸ்துவினுடைய பதில் இன்றும் அவ்வாறே உள்ளது:

தேவனுடைய இராஜ்ஜியத்தில் சிறு பிள்ளைகள்

மத்தேயு 18:1-14

1. நீ உன்னையே தாழ்த்தி சிறுபிள்ளையைப் போல் ஆகாவிட்டால், நீ தேவனுடைய இராஜ்ஜியத்தில் நுழைய முடியாது!

2. தேவனுடைய இராஜ்ஜியத்திலுள்ள ஒரு சிறுபிள்ளையை பாவம் செய்ய நீ காரணமாயிருப்பாயானால் உனக்கு ஐயோ. ஏனெனில் நீ கர்வமும் பெருமையும், பேராசையுமுள்ளவனுமாயிருக்கிறாய்.

3. பரலோகத்திலுள்ள தூதர்கள், தேவனுடைய இராஜ்ஜியத்தின் சிறுபிள்ளைகளைப் பாதுகாக்கின்றனர், அத்துடன் அவர்கள் தவறாக, இகழ்ச்சியுடன் நடத்தப்படுவதை, பிதாவுக்கு அறிவிக்கின்றனர்.

4. அவருடைய சிறுபிள்ளைகளில் ஒருவராகிலும் கெட்டுப்போவது, பரலோகத்தந்தையின் விருப்பம் அல்ல. அவருடைய, பயபக்திக்குரிய எச்சரிக்கையை அலட்சியம் செய்கிறவர்கள் மீது அவர் கடுமையான நடவடிக்கை எடுப்பார்!

சபை ஒழுங்குமுறை

மத்தேயு 18:15-20

முன்னுரை

அ. நன்றாகக் கூறுவோமானால், இந்த உபதேசங்களின் பாடப்பொருள், அதிக விரைவுடன், அவசியமானால், பெரும்பாலான நேரங்களில், இரக்கத்திற்காக வேண்டிக்கொள்ளும்போது, மற்றவர்களை மன்னித்துவிடு, என்பதாகும்.

ஆ. சபையின் அங்கத்தினர்களாக இருந்தாலும், மற்ற விசுவாசிகளுக்கு விரோதமாக சன்மார்க்க சம்பந்தமான பாவங்களைச் செய்து, அது கிறிஸ்தவ சமுதாயம் முழுவதிலும் நன்றாக அறியப்பட்டிருந்தும், அதைக்குறித்து அக்கரையின்றி, அவர்களுடைய பாவத்தை ஒத்துக்கொள்ள மறுத்தவர்கள் இருந்தனர். இக்காரணத்தினால்தான், சபையிலிருந்து இப்படிப்பட்ட மனிதர்களை ஒழித்துவிட, கர்த்தர் படிப்படியாக நடவடிக்கை எடுக்கும் முறையை நமக்குக் கொடுத்திருக்கிறார்.

1. பாவம் செய்யும் சகோதரன் அல்லது சகோதரியைக் கடிந்து கொள் (18:15-17)

அ. வசனம் 15 "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால்..." ஒருவன் பாவம் செய்தால், அவன் சன்மார்க்க எல்லையை தவறிவிடுகிறான், எனவே நித்திய ஜீவனாகிய பலனில் பங்கடைய மாட்டான். ஒருவன் கிறிஸ்துவின் சன்மார்க்க போதனைகளுக்கும், வேதத்தினுடைய சன்மார்க்க கற்பனைகளுக்கும் எதிரான முறையில் நடக்கும்போது அவன் பாவம் செய்கிறான். இந்த குறிப்பிட்ட வேதபாகத்தில், ஒரு சகோதரன் மற்றொருவனுக்கு விரோதமாக நீதிநெறி தவறி பாவம் செய்கிறான்.

ஆ. சன்மார்க்க நெறி தவறிய சில பாவங்களுக்கு உதாரணங்கள்:

1. கொலை, களவு, விபச்சாரம், பொய்சாட்சி, மற்றவர்கள் உடைமைகளை இச்சிப்பது (யாத்திராகமம் 20:3-17).

2. அல்லது, இவைகளும் உள்ளடங்கும்: பகை, விரோதம், பொறாமை, கோபத்தில் எரிவது, தன்னயமான பேராசை, விரோதம், சண்டைகள், வெறிகள், விக்கிரக ஆராதனை பில்லிசூனியம் முதலியன (கலாத்தியர் 5:19-21).

3. நெறிதவறிய பாவங்களுக்கு உதாரணமாகக் கீழ்க்கண்டவைகளும் உள்ளடங்கும்: பேராசை, அவதூறாகப் பேசுவது, வஞ்சிக்கிறவனாக இருப்பது, பொய் பேசுவது, முதலியன. (1 கொரிந்தியர் 6:9-10, வெளிப்படுத்தின விசேஷம் 22:15).

4. இவைகளுடன் கீழ்க்கண்டவைகளும் சேர்த்துக்கொள்ளலாம் வீம்புபேசுகிறவர்களாயும், அகந்தையுள்ளவர்களாயும், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், அன்பில்லாதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள் (ரோமர் 1:28-31). பாவமானது, ஒருவனுடைய சொந்த உடைமைகள், பணம், ஒருவனுடைய சரீரம் மற்றும் அவனுடைய உண்மைத்தன்மை ஆகிய இவைகளோடு தொடர்புடையதாக இருக்கிறது.

இ. வசனம் 15 "..... அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து...." "குற்றம்" என்பது குறையுள்ள, பிறப்பிலேயே இயற்கையாக அமைந்த சன்மார்க்க நெறியிலுள்ள பலவீனம். மற்றொரு விசுவாசியுடன் தனிப்பட்ட முறையில் தவறு இழைத்தவனை, அவனுடைய பாவத்தை ஒத்துக்கொள்ளும்படியாக நேருக்கு நேர் அணுகுவதே, ஒப்புரவாக்குதலில் முதல்படி, சம்பந்தப்பட்ட நீங்கள் இருவர் மட்டும், தனிமையில்

சபை ஒழுங்குமுறை
மத்தேயு 18:15-20

ஈ. வசனம் 15 "அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்". சபையிலுள்ள விசுவாசிக்கிடையே, நேருக்கு நேர் அணுகி, சமரசம் பேசும் எல்லா நேரத்திலும், ஒப்புரவாதலே, முதன்மையான நோக்கம். மற்றொரு சந்தர்ப்பத்தில், இயேசு இவ்வாறு கூறுகிறார்: "ஆகையால், நீ பலிபீடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில்... முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைத் செலுத்து (மத்தேயு 5:24).

உ. பிரிக்கப்பட்ட சகோதரர்கள், சகோதரிகளிடையே, ஒப்புரவாக்கப்படுதலைக் கொண்டு வருவது, கர்த்தரிடத்தில் பயபக்திக்குரிய காரியம். அவருக்கு, இது காணிக்கைகள் மற்றும் சுபதியாகங்களைவிட அதிக முக்கியமான காரியம். விசுவாசிகளிடையே எல்லா வேற்றுமையான காரியங்களும் விரைவில் சமாதானமாகத் தீர்த்து வைக்கப்படவேண்டும் என்று அவர் விரும்புகிறார். (மத்தேயு 5:25). கீழ்க்கண்ட காரியங்கள் முக்கியமானவைகள்.

1. சீக்கிரமாக சமாதானத்தைத் திரும்பப்பெறவேண்டும்.

2. குழப்பமும், வேற்றுமையும் நீக்கப்படவேண்டும்.

3. சமுதாயத்தில் கெட்ட பெயர் உண்டாவதற்கான நிலையைத் தவிர்க்கவேண்டும்.

ஊ. ஆனால், பாவம் செய்த அந்த நபர், அவனுடைய பாவத்தை ஒத்துக்கொள்ளும்படி, நேருக்குநேர் அணுகி சமரசம் பேசின பின்பும், அவன் தன்னுடைய பாவத்தை ஒத்துக்கொண்டு, உண்மையாகவே மன்னிப்பு கேட்காவிட்டால், சபை ஒழுங்கு முறைப்படி, தொடர்ந்து அடுத்த நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

எ.வசனம்16"அவன்செவிகொடாமற்போனால்.. ... இரண்டொருவரைஉன்னுடனே கூட்டிக்கொண்டு போ". இது, உபாகமம் 19:15 வசனத்தைக் குறிக்கிறது: "இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்படவேண்டும்". இந்த போதனை, இஸ்ரவேல் நாட்டிற்கு எவ்வாறு சட்டப்படி செல்லத்தக்கதாக இருந்ததோ அவ்வாறே சபை ஒழுங்கு முறைக்கும் உண்டு. போதகரே நிச்சயமாக முதல் சாட்சியாக இருப்பார். அடுத்தது குழு அங்கத்தினராக இருப்பார்.

ஏ. வசனம் 17 "அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து" "சபை" என்பது உள்ளூரிலுள்ள விசுவாசிகளின் ஐக்கிய குழு. சன்மார்க்கத் நெறிக்கு விரோதமாகப் பாவம் செய்த ஒருவன், அவனால் தீங்கிழைக்கப்பட்டவனுக்கும் அவனால் அழைத்துச் செல்லப்பட்ட சாட்சிகளுக்கும் செவிகொட மறுத்தால், உள்ளூர் விசுவாசிகளின் சபை முன்பாக இந்தக் காரியத்தைக் கொண்டுவருவதேயல்லாமல் வேறு ஒரு நிவாரணமும் இல்லை.

ஒ. போதகர்களைப்பற்றி என்ன? தீமோத்தேயுவுக்கு அவர் எழுதும்போது, இவ்வாறு அவர் கூறுகிறார்: "மூப்பனானவருக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுக்கொள்ளக் கூடாது". ஒரு போதகரை, நேருக்கு நேர் நின்று சமரசம் செய்யும்போது, அவர் சன்மார்க்க நெறிதவறினவர் என்பதை அறிந்து அதை ஆமோதிக்கும், இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் இருந்தாலொழிய, இந்த நடவடிக்கை எடுக்கக்கூடாது. உண்மையில், போதகர்களுக்கும், மற்ற விசுவாசிகளைப் போலவே இந்த முறை பின்பற்றவேண்டும்.

சபை ஒழுங்குமுறை
மத்தேயு 18:15-20

ஆனால் முதல் அடி (நேருக்கு நேர் இருவரும் சந்தித்து ஒருவரையொருவர் சமரசம் செய்வது) மட்டும் நீக்கப்படுகிறது.

ஒ. அவர், சன்மார்க்க நெறி தவறி பாவம் செய்தார் என்பதை அறிந்து உள்ளூர் சபை விசுவாசிகள் தங்களுக்குள் மனம் இசைந்து வரும்போது, இந்த போதகருக்கு விரோதமான குற்றச்சாட்டு வழக்கமாக, மாகாணத் தலைவர்கள் அல்லது பகுதித் தலைவர்களுக்கு முன்பாகக் கொண்டுவரப்படும். அப்பொழுது, இந்தத் தரத்தில் உள்ள உயர் அதிகாரிகள், இந்தக் காரியத்தின் உண்மையை விசாரணை செய்து முடிவுசெய்வார்கள். போதகர்களை மறுபடியும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது வேலை நீக்கம் செய்வதற்காக அநேக பிரிவினர்கள், ஆலோசனைக் குறிப்புகளை நிர்மாணித்துள்ளனர்.

ஐ. ஒப்புரவாதலுக்கு இதுவே கடைசி தருணம். போதகருக்கோ, அல்லது ஒரு விசுவாசிக்கோ விரோதமாக அவன் செய்த பாவத்தை ஒத்துக்கொண்டு, மனந்திரும்பாவிட்டால் அவன் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஐக்கியத்திலிருந்து (சபையிலிருந்து) தள்ளிவைக்கப்படுவான். சபை செய்யக்கூடிய வேறுவழி ஒன்றும் இல்லை. சபையினுடைய சாட்சி, எந்த சமுதாயத்திற்கு விரோதமாக இருந்ததோ, அது அபாயகரமான நிலையில் உள்ளது.

2. மனந்திரும்பாத சகோதரன் அல்லது சகோதரியை ஒழுங்குக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருதல்

அ. வசனம் 17 "சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும், ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக" "அஞ்ஞானி" என்பவன், அசுத்தன், பரிசுத்தமில்லாதவன், அவிசுவாசி என்று அறிவிக்கப்பட்ட ஒரு புறஜாதியான்.

ஆ. "ஆயக்காரன்" என்பவன், உள்ளூர் சமுதாயத்தில் வரி வாங்குவதற்காக ரோமர்களால் நியமிக்கப்பட்ட ஒருவன். இவர்கள், ரோமருக்கு வேலை செய்தபடியினால், அடிக்கடி, அநியாயமாக அதிக வரிகொடுக்கும்படியாக அதிகாரம் செய்தனர். எனவே இவர்கள் மக்களால் பகைக்கப்பட்டு, காட்டிக்கொடுத்து துரோகம் செய்பவர்களாகக் கருதப்பட்டனர்.

இ. ஒரு விசுவாசி, மற்றொரு விசுவாசிக்கு விரோதமாகப் பாவம் செய்தால், அவன், கீழ்க்கண்ட, சமரச முயற்சிக்குப் பின், ஐக்கியத்தை விட்டுத் தள்ளப்படுவான்.

1. அவன் எந்த விசுவாசிக்கு விரோதமாகப் பாவம் செய்தானோ அவன் முன்னிலையில்,

2. இந்த உண்மையை அறிந்த, அதிகப்படியான சாட்சிகள் முன்னிலையில்,

3. விசுவாசக் கூட்டத்தினர் அனைவரின் முன்னிலையில்,

ஈ. பவுல், கீழ்க்கண்டவாறு கூறும்போது, இதே பொருள்படக் கூறுகிறார். "அவனைச் (நீதி நெறி தவறியவனை) சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தீர்ப்புச் செய்கிறேன்." (1கொரிந்தியர் 5:5)

அவன், அஞ்ஞானியைப் போலவும், ஆயக்காரனைப் போலவும், நடத்தப்பட வேண்டும். சபையாகிய குடையினால் அவன் இனிமேல் பாதுகாக்கப்படமாட்டான். மற்ற விசுவாசிகளுடன் ஐக்கியப்படவும், அவர்கள் வீடுகளுக்குள் செல்லவும், அனுமதிக்கப்பட மாட்டான்.

சபை ஒழுங்குமுறை
மத்தேயு 18:15-20

உ. சபை ஒழுங்கு முறையின், இந்தக் கொள்கைகள், பொய்யான மதக் கோட்பாடுகளை அறிவிக்கும், உபதேசிமார்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் பயன்படுத்தப்படும். பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் நமக்கு இவ்வாறு கூறுகிறார். "நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல், வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் (உபதேசித்தால்) அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்." (கலாத்தியர் 1:9) பேதுரு, நமக்கு இவ்வாறு கூறுகிறார். "அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது". (2பேதுரு 2:3; 2யோவான் 10:11)

ஊ. எப்படியிருப்பினும், சபை ஒழுங்கு முறை, உண்மையில் மீட்பை அடிப்படையாகக் கொண்டது. பவுல், கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபத்தில் நமக்கு இவ்வாறு கூறுகிறார். "அப்படிப்பட்டவனின் ஆவி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக,..... அவனைச் (நெறி தவறிய சகோதரனை) சாத்தானுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்..." (1கொரிந்தியர் 5:5) யாக்கோபு, அவருடைய நிருபத்தின் முடிவுரை வாக்கியமாக, நமக்கு இவ்வாறு கூறுகிறார். "சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன், ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்". (யாக்கோபு 5:19-20)

3. முறையாக நிர்வகிக்கப்படும் சபை ஒழுங்கு, பரலோகத்திலிருந்து நிர்மாணம் செய்யப்பட்டு, ஆதரிக்கப்படும். (18:18-20)

அ. வசனம் 18. "பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, (அல்லது கட்டவிழ்ப்பீர்களோ) அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்"(அல்லதுகட்டவிழ்க்கப்பட்டிருக்கும்) "கட்டுவீர்களோ" என்றால் ஒன்றை நிறுவினால், ஒரு முடிவான தீர்மானம் எடுப்பது என்று பொருள்படும். இந்த காரியத்தில் ஒரு தனி விசுவாசி, சரியான சபை ஒழுங்கு முறைகளைப் பின்பற்றி, ஒழுங்குக் கட்டுப்பாட்டின் கீழ், ஐக்கியத்திலிருந்து வெளியேற்றப்பட்டான்.

ஆ. வசனம் 19. "...உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என்பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்". "ஒரு மனப்பட்டு" என்றால் முழுவதும் இசைந்து, இணக்கமாக இருத்தல், யாவரும் சம்மதித்தும், என்று இங்கு பொருள்படும். வசனங்கள் 19, 20 ஆகிய இரண்டிலும் ஒரு உண்மையை நிரூபிக்க, இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் அவசியம் என்பது பற்றி, பழைய ஏற்பாட்டு வேத வசனங்களில் குறிப்புகள் இருக்கிறதென்று தொடர்ந்து கூறப்பட்டுள்ளது. (உபாகமம் 19:15) இது, இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் கூறின காரியங்களின் அடிப்படையில் நிரூபணம் செய்யப்பட்டதால், நம்முடைய பரமபிதா, உள்ளூர்சபை எடுத்த நடவடிக்கையை ஏற்றுக் கொண்டு, முழு இருதயத்துடன் அவர்கள் தீர்மானத்தை ஆதரிக்கிறார். அவர்கள் இந்தக் காரியத்தைக்குறித்துஒருமனப்பட்டு ஜெபித்தார்கள்என்றும்குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

இ. வசனம் 20. "இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன்".

சபை ஒழுங்குமுறை
மத்தேயு 18:15-20

இது ஒரு சமயம் இவ்வாறு வாசிக்கப்படலாம்; ஒரு உண்மையை ஆதரிக்க அல்லது என்னுடைய நாமத்தினாலே ஒரு தீர்மானம் செய்ய, இரண்டு அல்லது மூன்று பேர் ஒன்று கூடி எங்கே இருக்கிறார்களோ, அங்கே நான் அவர்களோடு இருப்பேன்" (1கொரிந்தியர் 5:4) உள்ளூர் சபையில், ஏகமனதாக யாவரும் சேர்ந்து எடுக்கும் தீர்மானங்களை, சபையின் தலைவரான கிறிஸ்துவும், அதை உண்மை என்று ஏற்றுக் கொண்டு ஆதரிக்கிறார். (எபேசியர் 1:22; 5:23)

ஈ. சபை தொடர்பான எல்லாக் காரியங்களிலும் பரலோகமும் சம்பந்தப்படுகிறது என்பதை விசுவாசிகள் மறந்து விடுகின்றனர். யாராவது ஒருவர் இரட்சிக்கப்படும்போது, அது பரலோகத்தில் உண்மை நிகழ்ச்சியாக எழுதி வைக்கப்படுகிறது. அத்துடன் தேவனுடைய தூதர்களுக்கு முன்பாக மிகுந்த மகிழ்ச்சியையும் தருகிறது. (மத்தேயு 16:19; லூக்கா 15:10)

அவ்வண்ணமாகவே, உள்ளூர் சபையில் ஒன்றுசேர்ந்து சபை ஒழுங்குமுறை, தொடர்பாக செய்யும் தீர்மானங்கள் பரலோகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆதரிக்கப்படுகிறது! அந்தத் தனி நபர் "ஒரு அடையாளமிடப்பட்ட மனிதனாக" பரலோக இராஜ்ஜியத்தில் காணப்படுவான்.

முடிவுரை

அ. சபை ஒழுங்கு முறை அநேகர் நினைப்பதைவிட, அதிகமானது. இது நம்முடைய பரம தந்தை மற்றும் கிறிஸ்துவுக்கு மிக முக்கியமான காரியம். சபை மற்றும் பரலோகத்தின் நற்பெயர் அபாயத்திற்குள்ளாகும்.

ஆகவே, யாராவது, அவர்களுடைய பாவத்தை ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கேட்க மறுத்ததினால் சபையிலிருந்து தள்ளப்படும்போது, பூலோகமும், பரலோகமும் சம்பந்தப்படுகின்றன.

ஆ. எனவே, அதில்:

1. சபை, ஒழுங்கு முறையில் மூன்று படிகள் காணப்படுகிறது.

2. மனந்திரும்பாத விசுவாசி, விசுவாசிகளின் ஐக்கியத்திலிருந்து வெளியேற்றப்படுவதின் மூலமாக ஒழுங்குக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படுகிறான்.

3. ஏற்றவாறு நிர்வகிக்கப்படும் சபை ஒழுங்கு முறை, பரலோகத்திலிருந்து நிறுவப்பட்டு ஆதரிக்கப்படுகிறது.

மன்னிப்பு

மத்தேயு 18:35

முன்னுரை

அ. "இரக்கமற்ற ஊழியன்" உவமையின் முடிவுரை வாக்கியம், நமது இன்றைய வேதபாட பாகம். (மத்தேயு 18:22-35) இந்த உவமையில், கிறிஸ்து-அரசன். அவருடைய சீடர்கள் ஊழியக்காரர்கள்.

ஆ. இந்த உவமையில், இரண்டு மனிதர்கள், மற்றொரு மனிதனிடம் கடன் வாங்கியிருந்தனர். ஒரு மனிதன் அரசனாகிய தன்னுடைய எஜமானிடம் ஆயிரம் ரூபாய் கடன்பட்டிருந்தான். மற்றொருவன் பத்து ரூபாய், தன் உடன் வேலைக்காரனிடம் கடன்பட்டிருந்தான்.

இ. ஆயிரம் ரூபாய் கடன்பட்டிருந்தவன் இரக்கத்திற்காக, அவனுடைய எஜமானிடம் கெஞ்சிக் கேட்டபோது, அவன் பரிதாபப்பட்டு, அவனுடைய கடனை மன்னித்து, அவனை விடுதலை செய்தான். தன் உடன் ஊழியக்காரனிடம் பத்துரூபாய் கடன்பட்டவன், இரக்கத்திற்காக வேண்டிக் கொண்டபோது, அவன் அந்தக் கடனைக் கொடுத்துத் தீர்க்கும்வரை, சிறைச்சாலையில் போடப்பட்டான்.

1. மற்றவர்களை மனப்பூர்வமாய் மன்னிக்க வேண்டும் (மத்தேயு 18:35)

அ. "நீங்களும் அவனவன், தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார், என்றார்". கீழ்க்கண்டவற்றைக் காட்டும்படியாக இயேசு, இந்த உவமையை பயன்படுத்துகிறார்.

1. நாம் நம்மை அவருக்கு முன்பாகத் தாழ்த்தி, இரக்கத்திற்காக வேண்டிக்கொள்ளும்போது, அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறது போலவே, மற்றவர்கள் மன்னிக்கும்படியாக நம்மிடம் கேட்கும்போது, நாம் அவர்களை மன்னிக்க வேண்டும்.

2. நம் பக்கமாக தேவனுடைய இரக்கம் நிபந்தனைக்குட்பட்டது என்பதையும் இது வெளிப்படுத்துகிறது. நாம் மற்றவர்களிடம் இரக்கம் காட்ட விருப்பமாயிருப்பதை இது அடிப்படையாகக் கொண்டது!

ஆ. மத்தேயு 18:34 வசனத்தில், இயேசு இவ்வாறு கூறுகிறார்: "மற்றவர்கள் இரக்கத்திற்காக வேண்டிக் கொள்ளும்போது, நாம் அவர்களை மன்னிக்காவிடில், நம்முடைய எஜமானானவர், நாம் கொடுக்க வேண்டிய யாவற்றையும் கொடுத்துத் தீர்க்கும் வரை, சிறைச்சாலைக் காரனிடம், உபத்திரவப்படுத்தப்படும்படியாக ஒப்புக் கொடுப்பார்", ஒரு கைதி, சிறைச்சாலையில் இருக்கும்வரை, தான்பட்ட கடனை ஒருபோதும் கொடுக்க முடியாது. இவ்வாறாகவே, நாம் தேவனுக்கு விரோதமாகச் செய்த பாவங்களுக்கு, (மற்றும் செய்யப்போகும் பாவங்களுக்கும்) நம்முடைய சொந்த பலத்தினாலும், முயற்சியினாலும், பிராயச் சித்தம் செய்ய முடியாது.

இ. ஆகவே, நமக்குள் மன்னிக்கும் ஆவியை உருவாக்க, பரிசுத்த ஆவியானவரை அனுமதிப்பதுதான் மேலானது. நாம் இவ்வாறு செய்யாவிட்டால், நம்முடைய பரலோகப் பிதாவுடன் இடைவிடாமல் தொடர்புகொள்வதைக் காத்துக் கொள்ள ஒருபோதும் முடியாது. நாம் இழைத்த குற்றங்கள் மன்னிக்கப்படுவது நிபந்தனைக்குட்பட்டது. அது, நாம் மற்றவர்களை மன்னிப்பதற்கு நேரடி தொடர்புடையது! (மத்தேயு 6:14-15)

மன்னிப்பு

மத்தேயு 18:35

ஈ. இதில் ஒரு பெரிய முக்கியமான காரியமும் இருக்கிறது மன்னிக்க முடியாத ஆவியுடன், ஒருவன் தொடர்ந்து காணப்பட்டால், அவன் உபாதிக்கிறவன் (சாத்தான்) கையில் ஒப்படைக்கப்படுவான். இது இவ்வாறு இருக்கும்.

1. ஒரு யுத்தத்தில் பிடிக்கப்பட்ட கைதி, அவனைப் பிடித்துக் கொண்டவர்கள் விரும்பும் செய்திகளைக் கூறும்வரை உபத்திரவப்படுத்தப்படுவதைப் போன்றது.

2. நம்மைவிட்டு நீங்காத உணர்ச்சி சம்பந்தமான மற்றும் மனத்தளவான உபத்திரவம், நாம் துக்கத்தை இழந்துபோகவும், மற்றும் பொருந்தாத, தவறான முடிவுகளைத் தீர்மானிக்கும்படியாகவும் செய்யும்.

3. வளரும் ஒரு கசப்பானவேர், ஒரு மனிதனுடைய வாழ்க்கை மற்றும் வாய்மொழி முழுவதும் ஊடுருவிச் சென்று, பழி வாங்கவும், அவர்களுக்கு விரோதமாகச் செய்த குற்றத்திற்குப் பிராயசித்தம் செய்யும்படியாகவும் நிர்ப்பந்திக்க அவர்களை வழிநடத்தும்.

உ. நம்முடைய சகோதரர்களையும், சகோதரிகளையும் அவர்கள் இரக்கத்திற்காக கேட்கும்போது நாம் மனப்பூர்வமாக, மன்னிக்க வேண்டும். இது நாம் முற்றிலும், கசப்பு அல்லது வெறுப்பு சிறிது கூட மீதமாக நம்முடைய இருதயத்தில் வைக்காமல் மன்னித்து விட வேண்டும் என்று பொருள்படும். இது, நமக்கு விரோதமாக இழைத்த தவறுதல்களுக்கான எல்லா குற்றச்சாட்டுகளையும், வெளியே அனுப்பிவிட வேண்டும், தள்ளி வைத்துவிட வேண்டும், நீக்கிவிட வேண்டும் என்று பொருள்படும்!

ஊ. எபேசியருக்கு எழுதின நிருபத்தில், பவுல் இவ்வாறு கூறுகிறார். "சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் (வேதனை, காயம் அல்லது துன்பம் மற்றவர்களுக்குக் கொடுக்க விரும்புவது) உங்களைவிட்டு நீங்கக் கடவது". (எபேசியர் 4:31; ரோமர் 12:19)

எ. நமக்கு விரோதமாக பாவங்களைச் செய்யும், சகோதர, சகோதரிகளை நாம் எத்தனை முறைகள் மன்னிக்க வேண்டும். மத்தேயு 18:21-22 வசனங்களில் பேதுரு இயேசுவிடம், "ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்து வந்தால் நான் எத்தனைத்தரம் மன்னிக்கவேண்டும்?" என்று கேட்டான். "ஏழுதரம் மட்டுமோ?" என்று இயேசு பதிலளித்தார். இது உண்மையில் "ஏழெழுபது தரம் அல்லது எண்ணில் அடங்காத முறைகள்" என்று பொருள்படும். கிறிஸ்துவுக்குள் சகோதர, சகோதரிகள் (போதகர்களும், மற்ற சபைத் தலைவர்களும்) அநேகமுறைகள் மன்னிக்கப்பட வேண்டிய (மற்றும் கேட்க) அவசியம் நேரிடுகிறது!

2. தேவன் உன்னை மன்னித்தது போல் மன்னித்துவிடு (கொலோசெயர் 3:13)

அ. "ஒருவரையொருவர் தாங்கி", "ஒருவரைத் தாங்கி" என்பது, பொறுமையாக, மற்றவர்களோடு இசைந்து வாழ்ந்து, மற்றவர்களிடம் நாம் வெறுக்கக் கூடிய பண்புகள் நமக்குப் பிரியமில்லாத குணங்கள், நடத்தை சீராக இல்லாமல் இருத்தல் மற்றும் நம்மை கோபமடையச் செய்யும் மற்ற காரியங்கள் காணப்பட்ட போதிலும் அதைச் சகித்துக் கொள்ளும் நற்பண்பு என்று நம்மை சிந்திக்க வைக்கிறது.

ஆ. "ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால்..... மன்னியுங்கள்" "குறைபாடு" என்பது, நீங்கள் குற்றஞ்சாட்டுவதற்கு ஏதுவான ஒரு சூழ்நிலை நேரிட்டால், அப்படிப்பட்ட சூழ்நிலைக்குக் காரணமான சகோதரன் அல்லது சகோதரி மீது மனத்தாங்கல் அடைவது என்று பொருள்படும்.

மன்னிப்பு

மத்தேயு 18:35

இ. கீழ்க்கண்ட காரியங்கள் தொடர்பாக நம்முடைய சகோதரர்கள், சகோதரிகளை தாங்கிக் கொள்ள மற்றும் மன்னிக்க வேண்டும்.

1. பிரியமில்லாத நடத்தை அல்லது குணப்பண்புகள் அவர்களுடைய ஆளுமையில் காணப்படுமாயின்,

2. நம்மை வெறுப்பூட்டும் அல்லது கோபப்படுத்தும் சூழ்நிலையை அவர்கள் உண்டாக்கும் போதும்.

ஈ. திருடி, பொய்பேசி, ஏமாற்றி, நம்மைப் பற்றி அவதூறாகப் பேசி, பழிக்குப் பழிவாங்கி, இன்னும் நமக்கு விரோதமாக மற்ற சன்மார்க்க நெறிதவறிய காரியங்களைச் செய்பவர்களைப் பற்றி என்ன? மத்தேயு 6:14-15 வசனங்களில் கூறப்படும் பாவம் என்ற சொல் என்பது, சன்மார்க்க நெறி தவறுவது, மதியீனமாகச் செய்யும் தவறு, சிறிய காரியங்களில் நழுவி விழுதல், நேர்மையிலிருந்து, அடுத்தபக்கம் செல்வது, நீதியிலிருந்தும் உண்மையிலிருந்தும் விலகிச் செல்வது, துணிந்தும், அறியாமலும் செய்யும் தவறு அல்லது மீறுதல் (பாவம்) என்று பொருள்படும். இது,விருப்பம் இல்லாத மற்றும் கோபமூட்டும் காரியங்களைவிடப் பெரியது.

உ. நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய அளவிற்கு அபாயகரமான குற்றங்களை ஆதி திருச்சபையிலிருந்த விசுவாசிகளுக்கிடையே நடப்பிக்கப்பட்டதென்பதை நாம் அறிவோம். பவுல், கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில், இது சம்பந்தமாக அறிவுரைகள் கூறியிருக்கிறான். (1கொரிந்தியர் 6:1-11)

பாலின நெறிபிறழ் நடத்தையின் காரணமாக ஒரு மனிதன் வெளியே தள்ளப்பட்டான். (1கொரிந்தியர் 5:1-5)

ஆகவே வேத வசனங்கள், விருப்பமல்லாத மற்றும் கோபமூட்டும் சூழ்நிலைகளை விட மோசமான சூழ்நிலைகளைக் குறித்து பேசுகிறது. இது, மிக அபாயகரமான சன்மார்க்க நெறி சம்பந்தமான காரியங்களைக் குறித்தும் கூறுகிறது!

ஊ. நமக்கு விரோதமாக இப்படிப்பட்ட அதிக அபாயகரமான காரியங்களைச் செய்யும்போது, நாம் அவர்களை "மனப்பூர்வமாக" மன்னிக்காவிடில் நம்முடைய பரமபிதா அவருடன் நடந்து செல்லும் நம்முடைய வாழ்க்கையில் சன்மார்க்க நெறியில் நாம் தவறினால், நாம் அவரால் மன்னிக்கப்படமாட்டோம்.

எ. சபை ஒழுங்குமுறையைக் குறித்த கிறிஸ்துவினுடைய குறிப்புகளிலும், மன்னிக்கும் பண்பு தொடர்புடையது. (மத்தேயு 18:15-17) அவன் அல்லது அவள், இந்த மூன்று அடிகளில் ஏதாவது ஒன்றில் மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டால் நாம் அந்த மற்றொரு விசுவாசியை மன்னிக்க வேண்டும். கீழ்க்கண்ட தருணங்களில்,

1. உன் சொந்த வாழ்க்கையில் உனக்கு விரோதமாக இழைத்தப் பாவத்தைக் குறித்து அவர்களை அணுகும்போது,

2. அவர்களுடன் நேருக்கு நேர் சந்தித்து, பேச, சாட்சிகளை நம்முடன் அழைத்துச் செல்ல அவசியம் நேரிடும் போது,

3. இந்தச் சமாச்சாரத்தை விசுவாசிகளின் கூட்டம் முழுவதற்கு முன் கொண்டுவரும் நிர்ப்பந்தம் நேரிடும் சமயத்தில்.

ஏ. "கர்த்தர் உன்னை மன்னித்ததுபோல் மன்னிக்க வேண்டும்" நாம் யாவரும் நம் வாழ்நாள் காலத்தில், தேவனுக்கு விரோதமாக அநேகப் பாவங்கள் செய்திருக்கிறோம்.

மன்னிப்பு

மத்தேயு 18:35

மற்றவர்களுக்கு அதிகமாய் தீமை செய்திருக்கிறோம், எதிர்த்து நிற்கிறவர்களாகவும், பகைக்கப்படத் தக்கவர்களாகவும் இருந்திருக்கிறோம். நம்முடைய பரலோகத் தந்தையும், மற்றவர்களும், எவ்வளவு அதிகமாய் நம்மை மன்னித்திருக்கிறார்கள் (தொடர்ந்து மன்னிக்கிறார்கள்) என்பதை நாம் ஒருமுறை தெளிவாக உணர்ந்திருப்போமானால், நாம் மற்றவர்களை மன்னிப்பது மட்டுமல்லாமல் அவர்கள் நமக்கு விரோதமாக செய்த காரியம் பற்றி சிந்திக்காமல், அவர்களை மன்னிக்க ஆவலோடு இருப்போம்!

ஓ. பவுல் அப்போஸ்தலன், எபேசியருக்கு கீழ்க்கண்டவாறு, கூறும்போது, ஒவ்வொரு விசுவாசியிடமும், வேண்டிக் கொள்ளுகிறார்; "ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" *(எபேசியர் 4:32)*

முடிவுரை

அ. "இரக்கமற்ற ஊழியக்காரனைப் பற்றிய உவமை", இன்று நமக்கு இரண்டு பாடக் குறிப்பைக் கொண்டுள்ளது.

1. தேவன், கிறிஸ்துவின் மூலமாக, நாம் மன்னிப்புக்காக வேண்டிக் கொள்ளும்போது, மன்னிக்கிறது போல, நாமும் மற்றவர்கள் மன்னிக்க நம்மிடம் கேட்கும்போது, மன்னிக்க வேண்டும்.

2. நாம் மற்றவர்களை மன்னிக்காவிட்டால், நமது பரம பிதாவும், நாம் அவருக்கு விரோதமாக செய்த தவறுகளை மன்னிக்க மாட்டார். அதற்கு பதிலாக, நாம் உபாதிக்கப்படும்படியாக ஒப்புக் கொடுப்பார்.

ஆ. இந்த விசுவாசிகளின் கூட்டத்தில் ஒரு அன்பான மன்னிக்கும் ஆவி அதிக செல்வாக்குடையதாக இருக்கிறது.

உங்களுக்கு அது தெரியும்; எனக்கும் அது தெரியும். ஆனால், நாம் எல்லாருக்கும் "மன்னிக்கும் பண்பைக்" கருத்தாகக் கொண்ட பாடப் பொருள் பற்றி ஞாபகப் படுத்தப்பட அவசியமான நேரங்கள் உண்டு. நாம் கிறிஸ்துவை முதன்முதலாக சந்தித்தபோது, இது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இன்று நம்மில் ஒருவரிடம், இதைக் கேட்க வேண்டியவர்களுக்கு, இது தொடர்ந்து அதிக கருத்துள்ள பாடப்பொருளாக இருக்கும்!

இரண்டு குருடர் தங்களுடைய பார்வையைப் பெற்றுக் கொண்டனர்
மத்தேயு 20:29-34

முன்னுரை

அ. சரீரப் பிரகாரமான தேவைகள் உள்ளவர்கள், அவர்பேரில் அவர்களுக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, உண்மையாக அவரை நோக்கிக் கூப்பிடும்போது, இயேசு கிறிஸ்து நின்று, அவர்களைக் குணமாக்குகிறார்.

ஆ. குருடர்களோடு சம்பந்தப்பட்ட இந்த சம்பவம், இயேசு, எரிகோபட்டணத்தை விட்டுச் செல்லும் வழியில் நடந்தது. மிகப் பெரிய கூட்டம் அவரைச் சூழ்ந்து, அவர் அந்தப் பட்டணத்தை விட்டு வெளியேறும்போது, அவரைப் பின்பற்றிச் சென்றனர். இதற்குப்பின், இயேசு எருசலேமை நோக்கிப் பயணப்பட்டு, வெற்றிச் சிறந்தவராக, அதில் பிரவேசிப்பார். (சகரியா 9:9)

இ. அவர் வெகுகாலம் காத்திருந்த மேசியா என்றும், யூதர்கள் எதிர்பார்த்திருந்த தாவீதின் குமாரன் என்பதையும் வெளிப்படுத்தும் நோக்கத்தோடு, இந்த வேத வரலாறும் அத்துடன் குணமாக்கும் கிருபையின் மற்ற கிரியைகளும் இயேசுவால் நடப்பிக்கப்பட்டது.

1. சரீரப் பிரகாரமான தேவைகளோடு இருப்பவர்கள், இயேசுவை நோக்கி ஊக்கமாக, உண்மையுடன் கூப்பிட வேண்டும். (20:29-31)

அ. வசனம் 29. "இயேசுவும் அவருடைய சீடர்களும், எரிகோவிலிருந்து புறப்பட்டுப் போகையில் திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்."

இயேசு நடப்பித்த அற்புதங்கள், மற்றும் குணமாக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் அவர் தன்னை மேசியா என்று உரிமையுடன் கூறியதைக் குறித்து மனக்கிளர்ச்சியடைந்து, உணர்ச்சி வசப்பட்டவர்கள் மாத்திரம் அல்லாமல், வருடாந்திர பஸ்கா பண்டிகையில் கலந்து கொள்ள எருசலேமுக்குச் சென்ற யாத்ரீகர்களின் கூட்டத்தினரும், அந்த ஜனத்திரளுடன் காணப்பட்டனர். அங்கு சேர்ந்து, மேசியா மற்றும், தாவீதின் குமாரனாக, அவருடைய சிம்மாசனத்தில் அமர்ந்து, இஸ்ரவேலை ஆட்சி செய்பவராக, வெற்றி வேந்தராக எருசலேமிற்குள் பிரவேசிப்பார்.

ஆ. இரண்டு குருடர்களின் சம்பவம், இயேசு எரிகோவை விட்டு வெளிச்செல்லும்போது, நடைபெற்றதாக மத்தேயுவும், மாற்கும் அறிவிக்கின்றனர் ஆனால், அவர் எரிகோவிற்குள் பிரவேசிக்கும்போது நிகழ்ந்ததாக லூக்கா கூறுகிறார். இரண்டும் உண்மையாக இருக்கக்கூடும் ஏனெனில் அந்தக் காலத்தில் இரண்டு எரிகோ என்ற பெயர் உள்ள பட்டணங்கள் இருந்தன:

1. ஒன்று, பழைய ஏற்பாட்டில் புகழ் வாய்ந்ததாக இருந்த பழைய பட்டணம் (இது யோர்தானுக்கு 5 மைல்கள் கிழக்காகவும், எருசலேமிற்கு 15 மைல்கள் வடகிழக்காகவும் அமைந்துள்ளது).

2. புதிதான ஒன்று, பழைய பட்டணத்திற்கு அருகில் (நேர் தெற்காக) பெரிய ஏரோதினால் நிறுவப்பட்டது. இயேசு, ஒரு சமயம் பழைய பட்டணத்தை விட்டு, புதிய பட்டணத்திற்குள் பிரவேசித்திருக்கக் கூடும்!

இ. வசனம் 30. "அப்பொழுது வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர்...." இரண்டு மனிதரில் பர்திமேயு ஒருவன் என்று மாற்கு அடையாள மிட்டுக் கூறுகிறார்.

இரண்டு குருடர் தங்களுடைய பார்வையைப் பெற்றுக் கொண்டனர்

மத்தேயு 20:29-34

(மாற்கு 10:46) மாற்கு மற்றும் லூக்கா, ஒரு குருடனை பற்றி மட்டும் அறிவிக்கிறார், ஏனெனில், ஒரு வேளை, இந்த சுவிசேஷம் எழுதப்பட்ட காலத்தில் பர்திமேயு சபையில் நன்றாக அறியப்பட்டவனாக இருந்திருக்கக் கூடும் ஆனால் அடுத்த மனிதன் அப்படி அல்ல, அவர்களுடைய அன்றாட வழக்கப்படி, தங்களை ஆதரிக்கும் முறையாக, சாலை ஓரமாக, இவ்விரண்டு மனிதர்களும் உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தனர்.

ஈ. வசனம் 30. "இயேசு அவ்வழியருகே வருகிறார் என்று கேள்விப்பட்டு, ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்". இயேசுவினால் உரிமையுடன் கூறப்பட்ட மேசியாவானவரும், சுகமில்லாதவர்களை குணமாக்குகிறவர் என்று புகழ்பெற்றவரும், உண்மையிலேயே அவன் (குருடன்) முன் சென்றார். (லூக்கா 22:67) தாவீதினுடைய சிம்மாசனத்தில் வீற்றிருந்து, இஸ்ரவேல் தேசத்தை நித்தியமாக ஆளுகை செய்யும், அந்த ஒரே ஒருவரான, "தாவீதின் குமாரனுக்கே" மேசியா என்ற அந்தப் பெயர் ஆயத்தம் செய்து வைக்கப்பட்டுள்ளது. (மத்தேயு 12:23; 21:29; 22:41-45; 2சாமுவேல் 7:16) குருடர், செவிடர், ஊமையர், மற்றும் முடமானவர்களை குணமாக்குபவராக, மேசியா தோன்றுவார் என்று யூதர்களும் எதிர்பார்த்திருந்தனர். (ஏசாயா 35:5-6) இக்காரணத்தினால் தான், அந்தக் குருடர்கள் "தாவீதின் குமாரனாக" இரக்கத்திற்காக இயேசுவை நோக்கிக் கூப்பிட்டனர்!

உ. "கூப்பிட்டவர்கள்" என்றால் உரத்த சத்தமாய் கூச்சலிட்டனர், இரைந்து உரிமையுடன் கேட்பது, மிக்க ஆவலுடன், உனக்கு உதவிசெய்யும்படி ஒருவரை வரும்படி கூறுவது, என்று பொருள்படும். "இரங்கும்" என்றால், தயவு காட்டுவது, மற்றொரு மனிதனின் துன்பத்தையும், வேதனையும் கண்டு பரிதாபப்படுவது, தெய்வீகமான மற்றும் தகுதியற்ற ஒருவருக்கு தனிச்சலுகைக்காக வேண்டிக் கொள்வது என்று இங்கு பொருள்படும்.

ஊ. வசனம் 31. "அவர்கள் பேசாதிருக்கும்படி ஜனங்கள் அவர்களை அதட்டினார்கள்..." இயேசுவை நோக்கிச் சத்தமிட்டதற்காக, கூட்டத்தினர் அந்த இரண்டு மனிதர்களையும் கடிந்து கொண்டார்கள். அவர்கள் அமைதலாய் இருக்கும்படி கூறினார்கள். உலகத்திற்கு, முதல் முறையாக மேசியா வருவார் என்று கூறும் வேத வசனங்களை அவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை. (லூக்கா 4:16-21; ஏசாயா 61:1-3; மத்தேயு 11:4-6)

எ. வசனம் 31. "அவர்களோ: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள்". சுகப்படுத்தப்படும்படியான இந்த தருணத்தை இந்த இரண்டு மனிதர்களும் இழந்து போய்விடக் கூடாது. வெகு காலமாகக் காத்திருந்த மேசியாவை, நேருக்கு நேர் அவர்களுடையச் சொந்தக் கண்களால் உண்மையாகவே பார்க்க இது சாத்தியமாகும். ஆகவே அவர்கள் மிக்க ஆவலுடன் விடாப்பிடியாக, இயேசுவாகிய மேசியா கடந்து செல்லும்போது, கிருபைக்காக வேண்டிக் கொண்டனர். "அதிகமாக" என்றால் முன்னைக் காட்டிலும் அதிகமாக, அதிக அழுத்தத்துடன், அதிக சத்தமாக உரிமையுடன் கத்தினார்கள்!

2. அவரிடம் தங்களுக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிடுகிறவர்களுக்கு, இயேசு நின்று குணமாக்குவார். (20:32-34)

அ. வசனம் 32. "இயேசு நின்று, அவர்களைத் தம்மிடத்தில் அழைத்து: நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறீர்கள் என்றார்".

இரண்டு குருடர் தங்களுடைய பார்வையைப் பெற்றுக் கொண்டனர்

மத்தேயு 20:29-34

அந்த இரண்டு குருட்டு மனிதர்களின் ஆவல் உண்மைத்தனம், ஆகிய இவைகளுடன்கூடிய உரத்த கதறுதல் மற்றும் உரிமையுடன் சத்தமிட்டுக் கூப்பிட்டதினிமித்தம், இயேசு நின்றார். அவர்கள் அவருடைய கவனத்தைப் பெற்றுக்கொண்டனர்! அவர்கள் பேசுவதற்கு முன்பே, அந்த இரண்டு மனிதர்களும் அவர், அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிந்தனர் என்பதை அவர் அறிந்திருக்கக் கூடும்! ஆனால், அவரை மேசியாவாக, அபிஷேகம் பண்ணப்பட்ட, தேவனுடைய குமாரன் என்று அவரில் வைத்துள்ள விசுவாசத்தை அவர்கள் அறிக்கையிடுவதை அவர் கேட்க விரும்பினார். அவ்வண்ணமாகவே, இன்றும், இயேசு நின்று, அவர்களுடைய பலவீனங்களையும், வியாதிகளையும், சுகப்படுத்தப்பட விரும்புபவர்களுக்கும், இது பொருந்தும்!

ஆ. வசனம் 33. "அதற்கு அவர்கள்: ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்க வேண்டும், என்றார்கள்", "ஆண்டவரே" என்றால், எல்லாரிலும் மிக உன்னதமானவர், அதிகாரத்திற்கும் வல்லமைக்கும் மிக உயர்ந்த ஒருவர், எல்லாவற்றிற்கும் மேலாக இருந்து யாவற்றிற்கும் அதிகாரியான ஒருவர், என்று இங்கு பொருள்படும். இயேசுவை, மேசியாவாக, அபிஷேகிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாக, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உடைய ஒருவராக, ஒருமுறை கண்டறிந்து இருந்தால், தெய்வீக சுகத்திற்காக அவரை நோக்கிக் கூப்பிட தயங்கமாட்டார்கள். அவர்கள் வேண்டிக் கொண்டவற்றை அவர் செய்ய வல்லவர் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். (மத்தேயு 28:18; கொலோசெயர் 1:15-16; எபிரெயர் 1:3)

இ. வசனம் 34. "இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார்..." லூக்கா, இயேசு இவ்வாறு கூறுவதாக சொல்கிறார். "நீ பார்வையடைவாயாக உன் விசுவாசம்",(தேவனால் அபிஷேகிக்கப்பட்ட மேசியா தேவனுடைய குமாரன், தாவீதின் குமாரன், என்று என்னிடம் வைத்த விசுவாசம்) உன்னை இரட்சித்தது என்றார்". "மனதுருகி" என்றால், உதவிசெய்ய உள்ளான இருதயத்திலிருந்து எழும்பும் ஊக்கமான விருப்பம், இரக்கப்படும் உணர்வு, அவர்களைப் போலவே உணர்வது, அவர்கள் மீது பரிதாபப்படுவது, பச்சாதாபப்பட்டு அசைக்கப்படுவது என்று பொருள்படும். (எபிரெயர் 4:15-16)

ஈ. வசனம் 34. "உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின் சென்றார்கள்". சுகமாக்கப்பட்ட, அந்த இரண்டு குருடர்களும் இயேசுவைப் பின் பற்றிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. சுகமாக்கப்பட்ட ஒவ்வொருவரும், இன்றும் இவ்வாறே செய்ய வேண்டுமென்றும், இயேசு எதிர்பார்க்கிறார். "பின் சென்றனர்" என்றால், ஒருவர் கூடசேர்ந்து செல்வது, இயேசு செல்லும் அதே பாதையில் செல்வது, அவருடைய சீடர்களாவது (கற்றுக் கொள்பவன், மாணவன்).

முடிவுரை

அ. சரீரத் தேவையிலுள்ளவர்கள், அவர்பேரில் அவர்களுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஊக்கமாக ஆவலுடன் அவரை நோக்கிக் கூப்பிடும்போது நின்று, அவர்களை குணமாக்குகிறார்.

ஆ. இன்றைய நமது வேத பாடத்தில், இயேசு அந்த இரண்டு குருடர்கள் மீது மனதுருகினார். ஏனெனில் அவர்கள் விடாப்பிடியாக, அவரை நோக்கி உரிமையுடன் சத்தமிட்டு கதறி, அவர் வந்து, அவர்கள் பார்வையடையும்படி குணமாக்க வேண்டுமென்று கூப்பிட்டார்கள். அவர் மேசியா என்றும், வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் வல்லமையுமுடைய தேவனுடைய குமாரன் என்றும் அவர்கள் கண்டறிந்து கொண்டனர். ஆகவேதான், அவர்கள் பார்வையடைந்தனர்.

BELLWETHER INTERNATIONAL

புதிய ஏற்பாடு விளக்கவுரை
THE NEW TESTAMENT COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

மத்தேயு

இரண்டு குருடர் தங்களுடைய பார்வையைப் பெற்றுக் கொண்டனர்

மத்தேயு 20:29-34

இ. இந்தக் கூட்டத்தில், சீர தேவைகளில் உள்ளவர்கள், மேசியாவாக அவரிடம் உள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டால், அவர் மாறாதவர் என்பதைக் கண்டு கொள்ளலாம். அந்த இரண்டு குருடருக்கு அவர் என்ன செய்தாரோ, அதை உனக்கும் செய்வார்!

பட்டுப்போன அத்திமரம்
மத்தேயு 21:18-22

முன்னுரை

அ. மாற்கு சுவிசேஷத்தில், இயேசுவின் "தேவாலயச் சுத்திகரிப்பு" பற்றிய சம்பவம், அத்திமரத்தை இயேசு சபித்ததற்கும், அத்திமரம் உண்மையில் பட்டுப்போனதற்கும் இடையே கூறப்பட்டுள்ளது. (மாற்கு 11:12-21) தேவாலயச் சுத்திகரிப்பிற்கும், அத்திமரம் சபித்தலும் இடையேயுள்ள ஆதி மூல வாக்கியங்களின் கருத்துக்களுக்குள்ள தொடர்பை, இது வெளிப்படுத்துகிறது.

ஆ. எப்போதும் போல, கிறிஸ்து அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தில் நடைபெறும் ஒவ்வொருநிகழ்ச்சியையும், ஆவிக்குரிய சத்தியங்களைத்தம்மைப்பின்பற்றுகிறவர்களுக்குக் கற்றுக்கொடுக்க பயன்படுத்தினார். "பட்டுப்போன அத்திமர சம்பவமும் இதற்கு விலக்கு அல்ல. இந்தநிகழ்ச்சியிலிருந்துஇயேசு, கீழ்க்கண்டவற்றைப் போதித்தார்.

1. விசுவாசத்தினால் வரும் நீதியின் கனியைக் கொடுக்காதவர்கள் மீது நியாயத் தீர்ப்பு வரும்.

2.சந்தேகமின்றி விசுவாசிப்பதின் பலனாக நாம், ஜெபத்தில் வேண்டிக் கொள்பவைகளைப் பெற்றுக் கொள்ளுகிறோம்.

1. விசுவாசத்தினால் வரும் நீதியின் கனிகளைக் கொடாதவர்கள் மீது நியாயத்தீர்ப்பு வரும். (21:18-19)

அ. வசனம் 18. "காலையிலே அவர் நகரத்துக்குத் திரும்பிவருகையில்...." "நகரம்" என்பது எருசலேம்.

எருசலேமிற்கு தென் கிழக்காக இரண்டு மைல் தூரத்திலிருந்த, பெத்தானி என்ற கிராமத்தில் இயேசு, இரவைக் கழித்தார். இது, அவர் உயிரோடு எழுப்பின லாசரு மற்றும் அவனுடைய சகோதரிகள் மார்த்தாள், மரியாள் என்பவர்களின் வீடு. (யோவான் 11)

ஆ. வசனம் 19. "....ஒரு அத்திமரத்தைக் கண்டு அதனிடத்திற் போய்....ஒன்றையும் காணாமல்..." அதில், இலைகளேயன்றி, கனிகளொன்றும் காணப்படவில்லை என்று தெரிகிறது. இலைகள் நிறைந்த ஒரு அத்திமரத்தில், சாதாரணமாக, அத்தி கனிகள், பச்சையாக இருப்பினும், பழங்கள் காணப்படும். உண்மையில், இலைகள் தோன்றுவதற்கு முன்பாகவே, சில கனிகள் தோன்றிவிடும். எனவே, இயேசு, அந்த மரத்தண்டை சென்றபோது, அவருடன் இருந்த ஒவ்வொருவரும், இயல்பாகவே, கனியை, அவர் கண்டிருப்பார் என்று எதிர்பார்த்தனர். ஆனால், அந்த மரம் கனியற்ற மரமாக இருந்தது.

இ. வசனம் 18. "... அவருக்குப் பசியுண்டாயிற்று". இயேசு, நிச்சயமாகவே அதிக பசியுடைவராக இருந்திருப்பாரானால், அவர் சாதாரணமாக அடுத்த மரத்திற்குச் சென்று உண்பதற்கு ஏதாவது கண்டுபிடித்திருப்பார். ஆனால் ஒரு ஆவிக்குரிய சத்தியத்தை, அவருடைய சீடர்களுக்குக் கற்றுக் கொடுக்க, அவர் விரும்பினார்!

ஆகவே, அந்த அத்திமரத்தைச் சபிக்க ஏதாவது ஒரு அடையாளம் காட்டவேண்டியது மிக நன்மையானதாகக் காணப்பட்டது.

ஈ. வசனம் 19. "இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது என்றார். உடனே அத்திமரம் பட்டுப் போயிற்று". "பட்டுப்போயிற்று" என்றால் "சுருங்கிப் போய்விடுவது, காய்ந்து போய் விடுவது, முழுவதும் உலர்ந்து போய் விடுவது என்று பொருள்படும். அப்படிபட்ட காரியம் நேரிட்டபோது, அந்த இலைகளைச் சேர்த்து அக்கினியில் போட்டு எரிக்கப்படும்.

பட்டுப்போன அத்திமரம்
மத்தேயு 21:18-22

உ. அவருடைய புகழ் மற்றும் போதனையின் காரணமாக, அவரைக் கொலை செய்யத் தேடிய, யூதர்கள், விசேஷமாகப் பிரதான ஆசாரியர்கள், பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களுக்கு ஒருசமயம், இந்த அத்திமரம் அடையாளமாக இருக்கக் கூடும். (மாற்கு 11:18) இதற்கு முந்தினநாள் சாயங்காலம், ஆலயத்தில் விற்கிறவர்களையும், கொள்ளுகிறவர்களையும் துரத்தி, ஒருவரும் ஆலய பிரகாரங்களின் வழியாய் வியாபாரப் பொருட்களைச் சுமந்து செல்வதைத் தடுத்து, ஆலயத்தைச் சுத்திகரித்தார். (மாற்கு 11:15-18)

ஊ. அந்த அத்திமரம், இயேசுவால் சபிக்கப்பட்டு, பட்டுப்போய் மரித்ததுபோலவே, யூதேயா தேசத்தின் மீதும் அவர்களுடைய கீழ்க்கண்ட தவறுகளுக்காக நியாயந் தீர்க்கப்படுவார்கள்:

1.தேவனுடையகுமாரனும் மேசியாவுமானவரைப்புறக்கணித்தக் காரணத்திற்காக,

2. அவர்மீது வைக்கும் விசுவாசத்தினால் மாத்திரம் பெற்றுக்கொள்ளும் நீதியின் கனியாகிய விசுவாசத்தைக் கொண்டிருக்கத் தவறியதற்காக,

எ.இரட்சிப்புக்குக்காரணமான,கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசம் இல்லாமலிருப்பது, நித்திய நியாயத்தீர்ப்பிற்கும், நித்தியமாக தேவனை விட்டுப்பிரிந்துநரகத்தில்தள்ளப்படுவதிலும்முடிவடையும்.இது யூதர்களுக்கும், புறஜாதியாருக்கும் ஒன்றுபோல் பொருந்தும்.இயேசுஇதைக் குறித்துத், "திராட்சைச் செடியும், கொடிகளும்" என்ற உவமையில் கூறுகிறார்! (யோவான் 15:6-8)

ஏ. கனியற்ற அத்திமரம் மாய்மாலத்தைக் குறித்தும் பேசுகிறது. இந்த மனிதன் நடிக்கிறவன், தன்னிடம் இல்லாத ஒரு நடத்தைப் பண்பை தனக்கு இருப்பதுபோல் நடித்துக் காட்டுகிறான், அவன் மேடையில் நாடகமாடும் ஒருவன், மாறுவேடம் போடுவதிலும் பாவனை செய்வதிலும் தேர்ந்தவன்.

ஒ. யூதர்கள், விசேஷமாக பரிசேயரும் வேதபாரகர்களும், நீதியின் கனி ஒன்றையும் பெற்றிராதவர்களாயிருந்த போதிலும், பக்தியுள்ளவர்கள்போல் காண்பித்தனர். (மத்தேயு 23:1-7; 13-33) இலைகளை மாத்திரம் கொண்டிருந்த அத்திமரம் போல, அவர்கள், அநேகக் கனிகளை பெற்றிருப்பவர்கள் போல் காணப்பட்டார்கள். ஆனால் ஆவியில் கனியற்றவர்களாயிருந்தனர். பவுல் கூறுவதுபோல், "தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" (2தீமோத்தேயு 3:5) இந்த மாய்மாலமும் நியாயத்தீர்ப்பிற்கும், மரணத்திற்கும் வழிநடத்தும்.

2. சந்தேகமின்றி விசுவாசிப்பது ஜெபத்தில் நாம் வேண்டிக் கொள்வதைப் பெற்றுக் கொள்வதற்கான பலனைத் தருகிறது. (21:20-22)

அ. வசனம் 20. "சீடர்கள் அதைக் கண்ட (இந்த அத்திமரம் எத்தனை சீக்கிரமாய்ப் பட்டுபோயிற்று)... ஆச்சரியப்பட்டார்கள்". அவர்கள் கவர்ச்சிக்கப்பட்ட பிரமிப்படைந்தனர் என்று இது பொருள்படும். அவர்கள், இயல்பாக விளங்கிக் கொள்வதற்கும் மனோபாவனை செய்வதற்கும் மேலானதை அதிசயமான ஒன்றை, ஒரு அற்புதத்தைக் கண்டார்கள். (1யோவான் 3:1; மத்தேயு 8:23-27)

ஆ. வசனம் 21-22. "இயேசு அவர்களை நோக்கி: நீங்கள்சந்தேகப்படாமல்விசுவாசமுள்ளவர்களாயிருந்தால்...." "நீங்கள் விசுவாசித்தால்" என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்", அத்திமரம்பட்டுப்போன சம்பவத்தைப் பயன்படுத்தி, ஜெபத்திற்குப் பதிலைப் பெற்றுக் கொள்வதற்கான விசுவாசத்தைப்பற்றிப் போதித்தார்.

பட்டுப்போன அத்திமரம்
மத்தேயு 21:18-22

1. நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசித்தால்---- "விசுவாசித்தால்" சந்தேகப்படாமல் விசுவாசிப்பது மற்றும் விசுவாசிப்பது, என்பது நீங்கள் அவரிடம் என்ன கேட்கிறீர்களோ அதைக் கொடுப்பார் என்று தேவனில் முற்றிலும் விசுவாசம் வைப்பதோடு சம்பந்தப்படுவது, முழு நிச்சயத்தோடு இருக்க, ஆழமாகத் தூண்டப்படுவது, சந்தேகம் சிறிதுமின்றி நம்பிக்கையோடு இருப்பது, தேவன்பேரில் முற்றிலுமாகச் சார்ந்திருப்பது, என்று பொருள்படும். (மாற்கு 11:22-24; எபிரெயர் 11:1,6)

2. சந்தேகப்படாமல் என்றால், இந்தக் காரியம் நடக்கக் கூடுமா, அல்லது கூடாத என்று ஒருபோதும் சிந்திக்காமல் இருப்பது, தயக்கமின்றி, வியப்படையாமல், கேள்வி கேட்காமல், ஆலோசனைக்கு இடங்கொடாமல், ஜெபத்தில் என்ன கேட்கிறோம் என்பதைக் குறித்துக் கவலைப்படாமல், என்று பொருள்படும். (மத்தேயு 17:20-21; லூக்கா 17:6; 1கொரிந்தியர் 13:2; யாக்கோபு 1:5-7)

இ. ஜெபத்தில் நாம் வேண்டிக் கொள்ளும்போது, ஏன், எப்போதும் இந்த விசுவாசம் உள்ளவர்களாய் நாம் இருப்பதில்லை? இதற்குக் கீழ்க்கண்ட காரணங்கள் இருக்கலாம்.

1. நம்முடைய சொந்த சந்தோஷத்திற்காக தவறான நோக்கத்தோடு கேட்பது,

2. தேவனுடைய சித்தத்திற்கு உட்படாமல் கேட்பது.

3. நம்முடைய இருதயத்தில் மன்னிக்க முடியாமல், பகை உணர்வுடன் இருப்பதால்.

ஈ. தேவனால், எல்லாம் கூடும் என்று நாம் சந்தேகப்படாமல் விசுவாசிக்க வேண்டும் என்று கிறிஸ்து விரும்புகிறார். (ஆதியாகமம் 18:14, யோபு 42:2; மத்தேயு 19:26; லூக்கா 1:37; ரோமர் 4:20-21)

இந்த நிலைக்கு வரும்வரை, ஒவ்வொருவருடைய விசுவாசமும் வளரவேண்டும் என்றும், நம்முடைய அன்றாடக வாழ்க்கையிலும், ஊழியத்திலும் இந்த விசுவாசத்தைப் பயிற்சி செய்வதையும் பார்க்க அவர் விரும்புகிறார்! (எபேசியர் 3:20)

உ. வசனம் 21-22. "...இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும்... நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள், என்றார்". இது "சந்தேகப்படாமல்" விசுவாசத்தை உடையவர்களாயிருப்பது" என்ற கிறிஸ்துவின் கூற்றிற்கு, செய்முறைப் பயிற்சிக்கான ஒரு எடுத்துக்காட்டு. நாம் நடக்கக் கூடாத காரியமாகக் கருதும் ஒன்றிற்காக தேவனை விசுவாசிப்பதற்கு இது எடுத்துக்காட்டாக உள்ளது. ஆனால் இது, மற்ற எல்லாவற்றையும் போல, தேவனால் கூடாதது அல்ல.

ஊ. "இந்த மலை" இது ஒரு வேளை, ஒலிவ மலையைக் குறிக்கலாம். "இந்தக் கடல்" என்பது ஒரு சமயம் மத்தியதரைக் கடலை குறிக்கக்கூடும்.

முடிவுரை

அ. கிறிஸ்து, அவருடைய சீடர்களுக்கு, ஆவிக்குரிய சத்தியங்களைப் போதிக்க ஒரு தருணத்தைக் கூட ஒருபோதும், தவறியதில்லை. "அத்திமரம் சபிக்கப்பட்டது" கூட ஒரு விதிவிலக்காக இல்லை!

பட்டுப்போன அத்திமரம்
மத்தேயு 21:18-22

ஆ. இந்த சந்தர்ப்பத்தில் கிறிஸ்து கீழ்க்கண்டவைகளைப் போதித்தார்.

1. விசுவாசத்தின் மூலமாக, நீதியின் கனியைக் கொடுக்காத யாவர்மீதும் நியாயத்தீர்ப்பு வரும். இந்த நீதி, கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதின் மூலமாகவே வரும்.

2. சந்தேகப்படாமல் விசுவாசிப்பது, நாம் ஜெபத்தில் வேண்டிக் கொண்டவைகளைப் பெற்றுக் கொள்ள உதவிசெய்கிறது.

இ. இது கூடாத காரியம் என்று நீ ஜெபிக்கத் தவறியது என்ன? உன் வாழ்க்கையில் அல்லது ஊழியத்தில், ஏதாவது ஒரு பெரியதேவைக் காணப்படுகிறதா? இந்த குறிப்பிட்ட தருணத்தில், இப்பொழுது, முழு நிச்சயத்தோடு, சந்தேகப் படாமல் வேண்டிக் கொள்ள நீ விரும்புகிறாயா? உன்னுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக கிடைக்கும் நீதியின் கனியைப் பற்றி, என்ன நினைக்கிறாய்?

தசமபாகத்தை உள்ளூர் சபைக்குக் கொடுத்தல்

மத்தேயு 23:23-24

முன்னுரை

அ. பரிசேயருக்கும், வேத பாரகர்களுக்கும் எதிராக, கிறிஸ்து பேசின, துக்கமான ("ஐயோ!" என்று) ஏழு வேத வாக்கியங்களில் இது ஒன்று. மத்தேயு 23 அதிகாரத்தில் அவர், அவருடைய சீடர்களுக்கு இவ்வாறு கூறுகிறார்.

1. அவர்கள் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருப்பதினால், நீங்கள், அவர்களுக்குக் கீழ்ப்படிந்து, யாவற்றையும் செய்யவேண்டும்.

2. ஆனால் அவர்கள் மாய்மாலக்காரர்களாக, அவர்கள் போதிக்கிறவைகளை, வாழ்க்கையில் கடைபிடிக்காததினால், அவர்கள் செய்கைகளின்படி செய்யாதிருங்கள்.

3. அவர்கள், நீதியுள்ள வாழ்க்கையை, உங்களுக்கு சுமக்கிறதற்கு அரியபாரமானதாக்குகிறார்கள். ஆனால், நியாயப்பிரமாணத்தைத் தாங்கள் செய்யமாட்டார்கள்.

4. அவர்கள் செய்கிற ஒவ்வொரு செயலும், மற்ற மனிதர்களிடமிருந்து நன்மதிப்பைப் பெற்றுக் கொள்வதற்காகவே நடப்பிக்கப்படும்.

ஆ. அதன்பின், பரிசேயருக்கும், வேத பாரகர்களுக்கும் எதிராக ஏழு "ஐயோ" என்ற துக்க வார்த்தையை அவர் அறிவிக்கிறார். நான்காவது "ஐயோ" என்ற சொல், தேவாலயத்தைப் பரிபாலிக்கவும், ஆலயத்தில் பணிவிடை செய்பவர்களை ஆதரிக்கவும் கொடுக்கப்படும். அவர்களுடைய வருமானத்தில் பத்தில் ஒருபாகத்தைக்கொடுப்பது சார்பாகக் கூறப்பட்டது. இன்றைய நமது வேதபாடம் இந்த நான்காவது "ஐயோ" தொடர்பானது.

1. தசமபாகம் கொடுத்தல் அலட்சியம் செய்யப்படக்கூடாது. (மத்தேயு 23:23-24)

அ. வச. 23. "மாயக்காரராகிய...உங்களுக்கு ஐயோ". "உங்களுக்கு ஐயோ" என்பது உண்மையில், துக்கத்தையும், துன்பத்தையும் வெளிப்படுத்தும் சொல். இது, இவ்வாறு மொழியாக்கம் செய்யப்படலாம்: "ஆ! எனக்குப் பிரியமானவனே, இது உனக்கு ஒரு கெட்ட நாளாக இருக்கப்போகிறது". "மாயக்காரன்" என்பது நடிப்பவனாக இருப்பவன். அவர்கள் மேடையில் செய்வதும், பேசுவதும், அவர்கள், உண்மையில் எப்படியிருக்கிறார்களோ அதற்குச் சரியாக இருப்பதில்லை. அவர்கள் உண்மையில் இருப்பதுபோல் அல்லாமல், வேறொருவர் போல பாவனை செய்கிறார்கள்.

ஆ. வச. 23. "...நீங்கள் ஒற்தலாமிலும், வெந்தையத்திலும் சீரகத்திலும், தசமபாகம் செலுத்தி...". "பத்தில் ஒன்று" என்பது "தசமபாகம்" அல்லது ஒரு விசுவாசி பெற்றுக்கொள்ளும் வருமானம், விளைச்சல் அல்லது மற்ற நன்மைகள் ஆகிய இவற்றில் பத்தில் ஒரு பாகத்தை, சபை ஊழியம் மற்றும் முழு ஊழியத்திற்காக தங்களை அர்ப்பணித்தத் தலைவர்கள் ஆகியவர்களை ஆதரிக்கும்படி கொடுத்தல்.

தசமபாகத்தை உள்ளூர் சபைக்குக் கொடுத்தல்

மத்தேயு 23:23-24

இ. ஒருவன், அவனுடைய வயல்களின் விளைச்சல், (தானியம், பழங்கள், எண்ணெய்) மற்றும் அவனுடைய மாட்டு மந்தைகள், ஆடுகள் மற்றும் பறவைகள் ஆகிய இவை எல்லாவற்றிலுமிருந்து பத்தில் ஒன்றைப் படைக்கவேண்டும் என்று பழைய ஏற்பாட்டு சட்டம் கூறுகிறது. (லேவியராகமம் 27:30-33, உபாகமம் 14:22-29) பிற்காலத்தில், பரிசேயரும், வேதபாரகர்களும், கீரைகளையும், தோட்டப் பூண்டுகளையும், மற்றும் மிகச் சிறிய தேவனுடைய ஆசீர்வாதங்களையும், இத்துடன் கூட்டிக் கொண்டனர். "உங்களுடைய வாசனைப் பொருட்களாகிய ...பத்தில் ஒன்று கொடுக்கிறீர்கள்" என்று அவர் கூறும்போது, கிறிஸ்து இவ்வாறு பொருள்படவே சொல்கிறார்.

ஈ. வசனம் 23. "...நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய, நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டு விட்டீர்கள்." பரிசேயர்களும், வேதபாரகர்களும், மிகச் சிறிய தேவனுடைய ஆசீர்வாதங்களுக்குரிய தசமபாகத்தைக் கூட ஒருவன் செலுத்தவேண்டுமென்று போதித்தபோதிலும், தேவன் தசமபாகத்தைவிட மிகமுக்கியமானதாகக் கருதிய நீதியையும், இரக்கத்தையும், ஒருவரோடொருவருக்குரிய தொடர்பில் உண்மையையும் அலட்சியம் செய்தனர்.

உ. வசனம் 23. "இவைகளையும் செய்யவேண்டும். அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே" "இவைகள்" என்பது அவர்களுடைய வருமானத்தில் பத்தில் ஒன்றைக் கொடுப்பதைக் குறிக்கும்.

"அவைகள்" என்பது, நீதி, இரக்கம் மற்றும் அவரிடமும் (இயேசு) மற்றவர்களிடமும் உண்மையாயிருப்பதைக் குறிக்கிறது. அவர்கள் இவ்விரண்டையும் விட்டுவிடக் கூடாது. இரண்டும், கர்த்தருக்கு மிகவும் முக்கியமானவைகள். (லூக்கா 11:42)

ஊ. வச. 24. "குருடரான வழிகாட்டிகளே, கொசுகில்லாதபடி, வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்." பரிசேயர் ஆவிக்குரிய குருடராயிருந்தார்கள், இருந்தாலும் சமுதாயத்தில், ஆவிக்குரியதலைவர்களாயிருந்தார்கள்! குடிப்பதற்கு முன், கொசு, மற்றும் அசுத்தங்களை நீக்க மெல்லிய சணல் நார் துணியின் வழியாகக் கவனமாக, திராட்சரசம் வடிகட்டப்படும். இது சுத்திகரிப்புத் தொடர்பாக நியாயப்பிரமாணத்தை மீறுவதைத் தவிர்க்க செய்யப்பட்டது.(லேவியராகமம் 11:20-23, 17:10-14)

எ. கிறிஸ்து கீழ்க்கண்டவாறு கூறுவதற்கு இது மற்றொரு முறை: "மக்கள் மிகச் சிறிய தேவனுடைய ஆசீர்வாதங்களிலிருந்தும் தசமபாகம் கொடுக்கவேண்டும் என்று அதிக கருத்துடையவர்களாக இருக்கிறீர்கள். ஆனால் நியாயப்பிரமாணத்தின் அதிக முக்கியமான காரியங்களாகிய நீதி, இரக்கம் மற்றும் உண்மைத்தன்மையையும், விட்டுவிட்டீர்கள்."

ஏ. கிறிஸ்துவுக்கு, நீதி, இரக்கம், உண்மைத்தன்மை ஆகியவை முக்கியமாகக் காணப்படும் அளவிற்கு, தசமபாகம், இல்லாமல் இருக்கலாம். ஆனால், உள்ளூர் சபை வேலை மற்றும் ஊழியங்களை நாம் தொடர்ந்து ஆதரித்து செய்வோமானால், இது முற்றிலும் அவசியமானது. வெளியூர்களுக்கு எடுத்துச் செல்லும் சுவிசேஷ ஊழியங்களுக்கும், மற்ற தனி திட்டங்கள் செயல்பட தசம பாகத்திற்கும் மேலாகவும், அப்பாலும் காணிக்கைகளையும் நன்கொடைகளையும் கொடுப்பது அவசியம். எனவே, கிறிஸ்து "(முந்தினவைகளை) அவைகளையும் விடாதிருக்கவேண்டும்" (தசமபாகம் கொடுப்பது) என்று தொடர்ந்து கூறுகிறார்.

தசமபாகத்தை உள்ளூர் சபைக்குக் கொடுத்தல்

மத்தேயு 23:23-24

2. மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு முன்பே, தசமபாகம் கொடுப்பது நடைமுறையில் இருந்தது. (ஆதியாகமம் 4:2-7)

அ. வச. 3. "சில நாள் சென்ற பின்பு, காயீன் நிலத்தின் சில கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான்." இதில் முக்கியமான வார்த்தைகள், "சிலநாள் சென்ற பின்பு" "சில" என்பன. கர்த்தர் பக்கமாகக் காயீனுடைய மனப்பான்மை சரியாக இல்லை. அவன் கவலையீனமான மனப்பாங்குடன் இருந்தான். "ஒருசமயம் நான் கொடுப்பேன், ஒருவேளை நான் கொடுக்கமாட்டேன், இப்பொழுது இருக்கலாம் அல்லது பின்னால், ஒருசமயம் ஒருபோதும் இல்லை என்றும் இருக்கலாம், அது எனக்கு முக்கியமானது அல்ல.''

இ. வசனம் 5. "காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை". காயினுடைய தேவ ஆராதனை கவலையீனமானது, தவறானதுமாயிருந்தது. அது பொறுப்பற்றதாக இருந்தது. அவனுடைய வாழ்க்கையின்மீது தேவனுடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள எரிச்சலடைந்தான். அவர்பேரில் அவனுக்கு எந்தவிதமான விசுவாசமுமில்லை. இக்காரணங்களினால் தேவன் காயீனுடைய காணிக்கையை அங்கீகரிக்கவில்லை.

ஈ. வசனம் 5. "அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது.'' காயீனின் இந்த பதில் கிரியை, தேவனிடம் விசுவாசம் இல்லாமலும், அவரிடம் எந்தவிதமான மரியாதையும், கனமும் காட்டாமலும் இருந்தபோதிலும் விசுவாசிகள் என்று கூறிக்கொள்ளும் இன்றைய மக்களின் கிரியைகளைப் போன்றது. இவர்கள் தசமபாகம் கொடுப்பதில் கவலையீனமாக இருந்ததினால் அல்லது முழுவதும் கொடுக்காமல் இருப்பதினால், அவர்களை அங்கீகரிக்காமல் இருக்கும்போது, இவர்கள் காயீன் தேவனிடம் நடந்துகொண்டதுபோல், இவர்களும், ஆவிக்குரிய தலைவர்கள் மற்றும் சபையிலுள்ள விசுவாசிகள் மீது கோபத்துடன் நடந்துகொள்கின்றனர்.

உ. வசனம் 4. "ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார்." அவன் மிகுந்த விசுவாசத்துடன் தேவனை ஆராதித்ததினால் இவ்வாறு நடந்தது. அது பொருத்தமானதும், சரியானதுமாக இருந்தது. அது நல்ல யோசனைகளினாலும், நோக்கங்களினாலும் கிடைத்த பலன்!

ஊ. அவன் இந்த உலகத்தில் செழிப்புடன் வாழ்வது, தேவனுடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் மட்டுமே என்பதை அறிந்திருந்தான். அவனுக்குள்ள யாவும் அல்லது இன்னும் பெற்றுக்கொள்ள வேண்டியவைகளும் தேவனிடமிருந்து வந்தபலன். ஆகவே, அவன் தேவனை, தன்னுடைய வாழ்க்கையின் கர்த்தாவாக ஏற்றுக்கொண்டான். தனக்குண்டான எல்லாவற்றின் மேலும், தன்சுய சரீரத்திற்கும் அவரே அதிகாரி. இக்காரணத்தினால்தான், தேவன் ஆபேலையும் அவனுடைய காணிக்கையையும் அங்கீகரித்தார்.

எ. அவனுடைய மந்தைகளிலுள்ள தலையீற்றுகளையும், கொழுமையானவைகளையும் கொடுத்ததினால், ஆபேல், கீழ்க்கண்டவைகளை வெளிப்படுத்துகிறான்.

1. தேவனோடு சரியான தொடர்பு, அவனுடைய நீதி.

2. தேவனிடம் வைத்த விசுவாசம்.

தசமபாகத்தை உள்ளூர் சபைக்குக் கொடுத்தல்
மத்தேயு 23:23-24

3. தேவன் பக்கமாக சரியான ஆவி, ஒரு நேர்மையான மனப்பான்மை, அவனுக்கு இருந்தது. ஆகவே, அவருக்கு பிரியமான முறையில் அவனால் அவரை ஆராதிக்க முடிந்தது.

ஏ. ஆபிரகாம், ஆசாரியனாகிய மெல்கிசேதேக்கு என்பவனுக்குத் தசமபாகம் கொடுத்ததாக ஆதியாகமத்தில் வாசிக்கிறோம். (14:18-20) சோதோம், கொமோரா பட்டணங்களைப் பிடித்த இராஜாக்களிடமிருந்து, லோத்தை மீட்டுக்கொண்டுவந்த ஆபிரகாமிற்கு, ஆசாரியன் விருந்து செய்து ஆசீர்வதித்தான். எனவே, ஆபிரகாம், தன்னுடைய சகோதரன் மகனைச் சிறைப்பிடித்துச் சென்றவர்களிடமிருந்து, கொண்டுவந்த கொள்ளைப் பொருட்கள் எல்லாவற்றிலுமிருந்து, பத்தில் ஒன்றை மெல்கிசதேக்கிற்குக் கொடுத்தான்.

ஓ. ஆபிரகாமின் இருதயம் கர்த்தருக்கு முன்பாக நேர்மையாக இருந்தது. அவன், கர்த்தரால் அழைக்கப்பட்ட போது, அவன் அவனுடைய தேசத்தையும் அவனுடைய ஜனத்தாரையும், அவனுடைய சிநேகிதர்களையும், இனத்தாரையும் விட்டு, விட்டு அவன் அறியாத தேசத்திற்குச் சென்றான். ஆகவே தேவனுடைய ஆசாரியனுக்கு தசமபாகம் கொடுக்க ஆவலாக இருந்தான். தேவனுக்கு அவன் உண்மையாக இருந்து, தேவன் தனக்குக் கொடுத்த யாவற்றிற்காகவும் நன்றியுள்ளவனாகவும் இருந்தான். அவனுடைய சகோதரன் மகன் லோத்தையும் அவனுடைய குடும்பத்தார் அனைவரையும், மற்றும் அவனுக்குள்ள யாவற்றையும் மீட்டுக்கொள்ள, தேவன் அவனுக்கு உதவி செய்ததற்காகவும் அவருக்கு நன்றியுள்ளவனாயிருந்தான்.

ஓ. பரலோகத்தை எட்டும் ஏணிப்பாதையைக் கனவில் கண்டபின், யாக்கோபு, தனக்குண்டான எல்லாவற்றிலுமிருந்து பத்தில் ஒன்றை தேவனுக்குக் கொடுப்பதாகப் பொருத்தனை செய்தான். (ஆதியாகமம் 28:10-22) தேவன், ஆபிரகாம், ஈசாக்கு ஆகிய இவர்களுக்குக் கொடுத்த உடன்படிக்கையை யாக்கோபின் மூலமாக திரும்ப உறுதிப்படுத்தினார். இஸ்ரவேல் தேசம் முழுவதும், யாக்கோபிற்கும் அவனுடைய சந்ததிகளுக்கும் கொடுக்கப்படும். கர்த்தர் கீழ்க்கண்டவற்றையும் வாக்குப்பண்ணினார்:

1. யாக்கோபைப் பாதுகாப்பதாக

2. அவனுடைய எல்லா தேவைகளையும் கொடுப்பதாக

3. அவனுடைய குடும்பத்தாரிடம் பத்திரமாக திரும்பிச்சேர உத்தரவாதம் செய்தார்.

யாக்கோபின் உடனடியான பதில், "கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்...தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன்..." (ஆதியாகமம் 28:21-22)

3. தசம பாகம் கொடுப்பது மோசேயின் நியாயப்பிரமாணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. (லேவியராகமம் 27:30-33)

அ. வச. 30. "எல்லாம் கர்த்தருக்கு உரியது. அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது." "பரிசுத்தமானது" என்றால், அது புனிதமாக்கப்பட்டது, தெய்வீகத்திற்கு உரிய பங்கு கர்த்தருக்குத் தத்தம் செய்யப்படவேண்டிய அல்லது அர்ப்பணிக்கப்படவேண்டியது, வேறு எந்தக் காரியத்திற்காகவும் பயன்படுத்தக்கூடாது! என்று பொருள்படும்.

தசமபாகத்தை உள்ளூர் சபைக்குக் கொடுத்தல்

மத்தேயு 23:23-24

ஆ. வச. 32. "கோலின் கீழ்ப்பட்ட ஆடு மாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது". ஒரு அடைப்புக்குள்ளிலிருந்து, ஒவ்வொன்றாக வரிசையாக, வாசல்வழியாகக் கடந்து செல்லும்படியாகச் செய்து, பத்தாவதாக உள்ள மிருகத்தை, சாயத்தில் தோய்த்தக் கோலினால் அடையாளமிட்டு மிருகங்களை எண்ணும் வழக்கை இது குறிக்கிறது. பத்தாவதாகக் குறிக்கப்பட்ட ஒவ்வொரு மிருகமும் கர்த்தருக்கென்று பரிசுத்தமாக்கப்படுகிறது. இது அவருக்கு அர்ப்பணிக்கப்படவேண்டும்.

இ. உபாகமம் புத்தகத்தில் இவ்வாறு வாசிக்கிறோம்: "வருஷந்தோறும்...வயலில் விளையும் எல்லாப் பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து...மூன்றாம் வருஷத்தின் முடிவிலே, ...உனக்கு வந்த பலன் எல்லாவற்றிலும் தசமபாகத்தைப் பிரித்து, உன் வாசல்களில் வைக்கக்கடவாய்... அவனும் (லேவியனும்) .. பரதேசியும் திக்கற்றவனும், விதவையும் வந்து புசித்துத் திருப்தியடைவார்களாக." (உபாகமம் 14:22, 28-29)

ஈ. இந்தப் பாடப்பொருள் சம்பந்தமாக எண்ணாகமப் புத்தகத்தில் மேலும் அதிகம் சேர்க்கப்பட்டுள்ளது: "இதோ லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்திரமாகக் கொடுத்தேன்....இஸ்ரவேல் புத்திரர் நடுவே அவர்களுக்குச் சுதந்திரம் இல்லை.... ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்குச் சுதந்திரமாகக் கொடுத்தேன்." (எண்ணா. 18:21-24)

உ. தேவனுடைய இராஜ்ஜியம் முன்னேறிச் செல்லுவதை பார்க்க தேவன் விரும்புகிறார்:

1. அவருடைய மக்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து, அவரை ஆராதிக்க ஒரு பொருத்தமான இடம், அவர்களுக்கு இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

2. முழு நேர அளவில் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பவர்கள் மற்றும் போதிப்பவர்களுக்குத் தேவையானவற்றை அவர் கொடுக்க விரும்புகிறார். ஆகவே சபை மற்றும் சபையினால் நியமிக்கப்பட்ட ஆவிக்குரிய தலைவர்களுக்கு அவசியமானவைகளையும் கொடுக்க நல்ல மனப்பான்மை நமக்கு இருக்கவேண்டும்.

ஊ. அப்போஸ்தலனாகிய பவுல், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தை மேற்கோள்காட்டி இவ்வாறு கூறுகிறார்: "போரடிக்கிற மாட்டை வாய்க் கட்டாயாக...உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும்...." (1கொரிந்தியர் 9:9, இத்துடன் உபாகமம் 25:4 பார்க்கவும்) தேவனுடைய வார்த்தையைப்பகிர்ந்துகொள்கிறவர்களுக்காகவும், மந்தையாகியதேவனுடைய மக்களை பாதுகாக்கிறவர்களுக்காகவும், அவர் இவ்வாறு கூறுகிறார்.

எ. ஒரு உள்ளூர் சபையில் சிலகாலத்திற்கு முன், ஒருமனிதன், அவனுடைய தசமபாகத்தை, எப்போதும் ஒரு குறிப்பிட்ட ஊழியத்திற்கு என்று பிரித்தெடுத்து கொடுப்பான். சபை நிர்வாகம் மற்றும் மேலாண்மை குறித்து, அவன் முழுவதும் அறியாதவனாக இருந்தான்.

தசமபாகத்தை உள்ளூர் சபைக்குக் கொடுத்தல்

மத்தேயு 23:23-24

அவனை உற்சாகமூட்டும் சிலகாரியங்கள் மட்டும் நிறைவேற்றப்படுவதைப் பார்க்க அவன் விரும்பினான். இது, அவ்வாறு இருக்கக் கூடாது. சபையின் வேலை மற்றும் நடவடிக்கைகளை ஏற்று நடத்த முயற்சிப்பவர்களின் கரத்தைக் கட்டுகிறது. போதகர் உணவு பெற்றுக்கொள்ள போதுமான பணம் இல்லாமல் இருக்கும்போது இந்த மனிதன் அலங்கார உடை விளம்பரம் மற்றும் இசைக்கருவிகளைக்குறித்தும் கரிசனை உள்ளவனாயிருக்கிறான்.

ஏ. மற்றும் சிலர், தொலைகாட்சி சுவிசேஷர்களுக்கும் அது தொடர்பான ஊழியங்களுக்கும் அவர்களுடைய தசமபாகத்தை அனுப்புகிறார்கள். அவர்களும் தவறு செய்கிறார்கள். தசமபாகம், உள்ளூர் சபையின் தேவைகள் சந்திக்கப்பட செலுத்தப்படவேண்டும். மற்ற ஊழியங்களுக்கு, தசமபாகத்திற்கு அப்பால், அதற்கு மேலாக உள்ள பணத்திலிருந்து கொடுக்கவேண்டும். முதல் பாகம், இயேசு கிறிஸ்துவினுடைய சபையாகிய உள்ளூர் சபை! இது இல்லாமல், விசுவாசிகளும், மற்ற எல்லா ஊழியங்களும் விழுந்து போகும்!

முடிவுரை

அ. எனவே உள்ளூர் சபைக்கு தசமபாகம் செலுத்துவது என்பது புதியகாரியமல்ல:

1. சபை சகாப்தத்தில் இதை கொடுப்பதை நாம் அசட்டை செய்யக்கூடாது என்று இயேசு கூறுகிறார்.

2. மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுப்பதற்கு முன்பாகவே, தசமபாகம் கொடுக்கும் பழக்கம் இருந்தது.

3. மோசேயின் நியாயப்பிரமாணத்தில் தசமபாகம் கொடுப்பது சேர்க்கப்பட்டுள்ளது.

ஆ. இந்த சபைக்கும், அதனுடைய தலைமையில் நடத்தப்படுவதற்கும், கடந்த ஆண்டுகளில் உண்மையுள்ளவர்களாயிருந்தவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். நீங்கள் ஒவ்வொருவரும், சேர்ந்துதான் இந்த இடத்தை, சபையாகக் கூட்டி இதன்மூலமாக தேவன் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றமுடியும். நீங்கள் கொடுப்பது, கர்த்தர் பேரில் உள்ள உங்கள் அன்பை வெளிப்படுத்துகிறது.

இ. ஒவ்வொரு விசுவாசியும் தசமபாகம் கொடுக்கக் கட்டளையிடப்படுகிறான். ஒருவரும் விதி விலக்கு கிடையாது. பணக்காரர் அல்லது ஏழை உள்ளூர் சபைக்கு தசமபாகம் கொடுப்பது குறித்து உன் இருதயத்தில் ஒரு மாற்றம் உனக்கு அவசியமானால், உனக்கு அதைச் செய்யும்படி, உன்னுடைய பரலோகத் தந்தையிடம் கேள். அவர், அதைச் செய்ய வாஞ்சிக்கிறார்! சரியானபடி கர்த்தருக்குச் சொந்தமான தசமபாகத்தைக் கொடுக்காமல் நிறுத்தி வைத்திருக்கும்போது, உனக்கு, தேவனுக்கு முன்பாகப் பரிசுத்தமான இருதயம் இருக்கமுடியாது.

கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் அடையாளங்கள்

மத்தேயு 24:4-14

முன்னுரை

அ. இந்த அதிகாரத்தின் 1-2வசனங்களில், கிபி. 70, ரோமர்களால் எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு நடக்கப்போகும் காரியங்களைப் பற்றி, கிறிஸ்து விவரிக்கிறார். தீத்து இராயன் எருசலேம் மற்றும் தேவாலயக் கட்டடங்கள் யாவையும் முற்றிலும் அழித்துப்போட்டான். தேவாலயம் தீப்பற்றி எரியும்போது, மேற்கூரையிலிருந்து தங்கத் தகடுகள் உருகிவிழுந்ததை எடுக்கக் கற்கள் பிரித்து உடைத்து எடுக்கப்பட்டது.

ஆ. ஒலிவமலையின் எஞ்சிய உரையாடல், "உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? என்ற கேள்விக்குரிய பதிலாக இருந்தது. அது, 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டால் நலமாக இருக்கும்:

1. கடைகாலத்திற்கு நேராக நடத்தும் அடையாளங்கள். *(24:4-14)*

2. மகா உபத்திரவகாலத்தில் நேரிடும் அடையாளங்கள். *(24:15-28)*

3. தேவனுடைய கோபாக்கினை ஊற்றப்பட்ட காலத்தின் முடிவிலும் அவருடைய இராஜ்ஜியத்தை நிலைநாட்டக் கிறிஸ்து தோன்றும் போதும் நடக்கப்போகும் விசேஷ அடையாளங்கள். *(24:29-31)*

4. உபத்திரவ காலத்திலுள்ள பரிசுத்தவான்களுக்குரிய பாடம். *(24:32-35)*

5. சபை மகிமையோடு மேகத்திற்கு மேலாக எடுக்கப்படுவதற்கு முன் வாழும் பரிசுத்தவான்களுக்கு ஒரு எச்சரிக்கை. *(24:36-51)*

இ. இன்றைய நமது பாடம் கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் அடையாளங்கள் மட்டுமே பாடப்பொருளாக எடுத்துக்கொள்ளப்படும். *(24:4-14)*

1. கடைசி நாட்களில், கள்ளத்தீர்க்கதரிசிகளும், போதகர்களும் அநேகரை வஞ்சிப்பார்கள். (வசனம் 4-5,11)

அ. ஒலிவமலை, எருசலேமிற்குக் கிழக்காக சுமார் ஒருமைல் நீளமான ஒரு முகடு. இது, சுமார் 200 அடி உயரமாகவும், கீதரோன் பள்ளத்தாக்கிற்கு அருகில், அடுத்த பக்கமாக அமைந்துள்ளது.

ஆ. வசனம் 4. "...ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்". "வஞ்சிப்பது" என்றால் யாராவது ஒருவரை, பாதுகாப்பது, சத்தியம் மற்றும் சன்மார்க்க நெறி ஆகியவற்றிலிருந்து விலகிச் செல்லும்படி செய்வது வழி தப்பிச் செல்லச்செய்வது, அலைந்து திரியச் செய்வது, நேர்வழியைவிட்டு விலகிச் செல்லக் காரணமாயிருப்பது, தவறான வழியில் செல்ல வழிநடத்துவது என்று பொருள்படும்.

இ. இந்தக் காலத்தின் முடிவை நெருங்கும்போது, பக்தி மார்க்கத்தின் மாய்மால நடத்தைகள் கொள்ளை நோய் பரவும் விகிதத்தில் நடைபெறும். நாம் யாவரும் அறிந்தவாறு, இது சபைக்குள்ளேயே நேரிடும். பவுல், தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில், இந்தக் காலத்தைக் குறித்துப் பேசி, இவ்வாறு நமக்குக் கூறுகிறார்:

கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் அடையாளங்கள்

மத்தேயு 24:4-14

"எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மனுஷனாகிய (அந்திக் கிறிஸ்து) பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் (பரிசுத்தவான்கள் மகிமையோடு மேகங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளப்படும் நாள்) வராது" (2 தெசலோனிக்கேயர் 2:3). இது, பரிசுத்தவான்கள் மகிமையோடு மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளப்படப் போவதைக் குறித்த கோட்பாடு சம்பந்தமான தர்க்கத்தைக் குறிக்கிறது.

ஈ. யோவான், அவனுடைய முதல் நிருபத்தில் சன்மார்க்க நெறி சம்பந்தமான மாயத்தைக் குறித்துப் பேசும்போது இவ்வாறு கூறுகிறார்: "பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள். (வழிவிலகி செல்லும்படி ஏமாந்துபோகாதிருங்கள்) நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்...தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான். ஏனெனில், அவருடைய வித்து (பரிசுத்த ஆவியானவர்) அவனுக்குள் தரித்திருக்கிறது.....இதனாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்று.....வெளிப்படும்." (1 யோவான் 3:7,9-10, எபேசியர் 4:14, 5:3-7)

உ. வச. 5,11. "...அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்." இந்தக் காலத்தில் அநேகர், தாங்கள் மேசியாவாகிய கிறிஸ்து, தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று உரிமையுடன் நிச்சயத்துடன் கூறுவார்கள்.

ஊ. 1. 1981 சீரகூசா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு பேராசிரியர், "கிறிஸ்துவாகத் தங்களைக் காட்டிக் கொண்டு, குருக்கள், (ஆவிக்குரிய வழிகாட்டிகள்) என்று கூறி செயல்பட்டு வரும் 2000பேர்கள் இருக்கிறார்கள்" என்று முடிவாகக் கூறினார்.

2. "லாஸ் ஏஞ்சல் பகுதியில் மட்டும் குறைந்தது 400பேர்கள் தங்களைக் கிறிஸ்து என்று கூறிக் கொள்கிறார்கள்" என்று பில்லி கிரஹாம் கூறினார்.

3. போப் ஜான் பால் IIஐச், சுட்ட மனிதன் இவ்வாறு கூறினான்: "நான் கிறிஸ்து நான் எங்கும் இருக்கிறேன். நான் உலகத்தின் முடிவை அறிவிக்கிறேன். உலகம் அழியப்போகிறது" (மொஹமது அலி அகா)

4. "நான் தேவன். நீ தேவன். நாம் யாவரும் தேவன்" (ஷர்லி மாக்லெய்ன் மற்றும் புதிய ஆக்ஸ் என்ற இடத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள்)

5. "உலகம் தன்னுடைய உண்மையான பெற்றோரை" கண்டு, தன்னை சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்துக் கொள்ளவேண்டிய அவசியம் உள்ளது. இந்த மனிதன் தான் மேசியா. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் உதவி செய்யவே நான் தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறேன். (சங்கை. சன் மையுங் மூன் (Rev. Sun Myung Moon) ஒருங்கிணைந்த சபை ஸ்தாபகர், ஆகஸ்ட் 1991)

எ. அநேக விசுவாசிகள் உள்ளடங்க "அநேகர்" இந்தக் கள்ளக் கிறிஸ்து எனப்பட்டவர்களை, சிலர் மரணபரியந்தம் பின்பற்றுகின்றனர். (ஜிம் ஜோன்ஸ்-கயானா, டேவிடியன் கல்ட்-டேவிட் கோரஸ்ச்) இது அதிக எண்ணிக்கை என்று பொருள்படும். அது சாதாரணமாக நடைபெறும் காரியமாக இருக்கும். ஏன்?

கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் அடையாளங்கள்

மத்தேயு 24:4-14

1. ஏதோ விந்தையான, புதிய காரியங்களைக் கேட்க விரும்பும் தினவுள்ள செவிகள்.

2. இந்த உலகத்தில், சுய கர்வம், சொந்த சக்தியில் சார்ந்திருப்பது, தன்னைத் தானே வழிகாட்டியாக அமைத்துக் கொள்வது, போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல்.

3. மனஅழுத்தம், சமுதாய பிரச்சனைகள் காரணமான பாரங்கள், உண்மையை சந்திக்க பயந்து அதிலிருந்து தப்பமுயற்சி ஆகியவைகளின் காரணமாக மனம்சார்ந்த, மற்றும் உணர்ச்சி உச்சநிலை அடைந்து மனம் தடுமாறும், உடைந்தநிலை.

4. பாவம், பாலின இச்சைகள் மற்றும் பணம் ஆகியவற்றில் களிகூருவது.

5. மற்றவர்களால் அங்கீகரிக்கப்பட நேசிக்கப்பட, விரும்பப்பட கவனிக்கப்பட வேண்டுமென்ற ஆசை.

6. இவைகள் யாவும் இனிப்பு பூசப்பட்ட, பிசாசின் வஞ்சனை நிறைந்த திட்டங்கள் மற்றும் உலக முழுவதின் மீதும் முடிவாக வரப்போகும் பயங்கரமான நியாயத்தீர்ப்பின் வெளிப்பாடு. (மகா உபத்திரவகாலம் - (ரோம. 1:18)

2. யுத்தங்கள், பஞ்சங்கள் மற்றும் பூமி அதிர்ச்சிகள், அதிகரித்து உக்கிரமாகி, கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும். (வசனம் 6-8)

அ. வசனம் 6-7, 'யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்...ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், இராஜ்ஜியத்திற்கு விரோதமாய் இராஜ்ஜியமும் எழும்பும். இரண்டு உலக யுத்தங்கள், வியட்நாம், லாவோஸ் (Laos) கம்போடியா, அநேக போராயுதமில்லாத யுத்தங்கள், உள்நாட்டுச் சண்டை, ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் நடந்த மார்க்க சம்பந்தமான யுத்தங்கள், சீனாவின் மங்கோலிய நாட்டு படையெடுப்பு, சிலவருடங்களுக்கு முன் தென் அமெரிக்காவிலும், மத்திய கிழக்குப் பிரதேசத்திலும், நாடுகளுக்கிடையே நடந்த யுத்தங்கள். இன்று கிழக்கு ஐரோப்பாவில், ஐரோப்பாவில் யுத்த செய்திகள், கியூபா, கெய்ட்டி முதலியன. இதற்கு முடிவேயில்லை. இது இன்னும் நன்றாக மாறமுடியாது!

ஆ. வசனம் 7. பஞ்சங்களும் கொள்ளைநோய்களும் பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். சாதாரணமாக பூமியதிர்ச்சிகள் உண்டாக ஏதுவில்லாத இடங்களிலும் பூமி அதிர்ச்சிகள் ஏற்பட துவங்கும். அதாவது, அவைகள் உக்கிரத்திலும், அதிர்வுகளிலும் தீவிரமாகும். ஒவ்வொரு வருடமும் சுமார் 6000 பூமி அதிர்ச்சிகள் கண்டுபிடிக்கப்படுகிறது. அவைகளில் 15மிக பயங்கரமானவைகள். வருடந்தோறும் இவைகளினால் 20,000 மக்கள் மரிக்கின்றனர்.

இ. "பஞ்சம்" நமது உலகத்தில் அந்நியமான காரியமல்ல. கெய்ட்டி, வங்காள தேசம், சோமாலியா, ராவண்ட்டா, பிலிப்பைன்ஸ், சாரஜீவோ, மற்றும் கியூபா ஆகிய இடங்களில், இவைகளைத் தொலைக்காட்சி மூலம், நீங்கள் காணலாம். இது நம்பக்கூடாத அளவிற்கு முழுவதும் நாசம் விளைவிக்கிறது.

கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் அடையாளங்கள்

மத்தேயு 24:4-14

அவர்களுடைய சொந்த சிறுநீர் குடிக்கவும், மனித மாம்சம் உண்ணவும் ஆகியவற்றைச் செய்யும் அளவிற்கு மக்கள் அவ்வளவு பசியாகவும், தாகமாகவும் இருக்கின்றனர். அது மேலும் தொடரும். இந்தக் காலத்தில், யுத்தங்கள், யுத்தங்களின் செய்திகள் மற்றும் பூமி அதிர்ச்சிகளைப்போல், பஞ்சத்திற்கும், மானிடர்களின் வேதனைகளுக்கும் முடிவு இராது.

ஈ. வச. 8. "இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்". இவைகள் ஆரம்பம் மட்டுமே. மகா உபத்திரவகாலத்தில், தேவ கோபாக்கினை ஊற்றப்படும்போது நடக்கப்போகிறவைகளுடன், இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவை, "ஒருவாளி நீரில் ஓர் துளி" போல் இருக்கும்!

உ. பிள்ளைகள் பெற்ற பெண்கள் இதை நிச்சயமாக ஒப்பிட்டுப் பார்க்கமுடியும். இந்தக் காரியங்கள், "துவக்கம்" மட்டுமே, ஒத்திகை பார்ப்பது போல் மட்டும், முதல் தவணைபோல், முதற்கனியாக, கடைசி காலத்திற்கு முன், மானிடரின் துன்பகாலத்தின் மிக இலகுவான நாட்களாக எண்ணப்படும். பேறுகால வலியின் துவக்கம்போல், கிறிஸ்துவுக்கு வெளியேயுள்ள ஒவ்வொருவருக்கும் எதிர்பார்க்காத நேரத்தில் நேரிடும். (1தெசலோனிக்கேயர். 5:1-5)

3. கடைசி நாட்களுக்கு அடையாளமாக, தேவனுடைய மக்களை உபத்திரவப்படுத்துவது அதிக வெளிப்படையாகக் காணப்படும். வசனம் 9-10

அ. வசனம் 9. "அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக் கொடுத்து, உங்களை கொலை செய்வார்கள்." "உபத்திரவங்களுக்கு" என்றால், பெரிய கூட்டம் உன்னை நெருக்குவது, மற்றவர்களால் துன்பப்படுவது, மிகுந்த வேதனையில் இருப்பது, தொல்லைகள் ஏற்படுவது, ஆவியில் மிகுந்த பாரப்படுவது, என்று இங்கு பொருள்படும். "கொலைசெய்வார்கள்" இங்கு கூறப்பட்டது போல் நடக்கும்.

ஆ. வசனம் 9. "என் நாமத்தினிமித்தம், நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்" என்றால் அவர்கள் நம்மை நிந்திப்பார்கள், கொலை செய்ய, நம்மை நீக்கிவிட விரும்புவார்கள்! கடைசி நாட்களில் இந்தக் காரியங்கள் உலகம் முழுவதும் பரவலாக தீவிரமடையும். அமெரிக்காவிலுள்ள விசுவாசிகளுக்கும், இந்த நாட்கள் அவ்வாறே இருக்கும்! கிறிஸ்துவின் மீதும், அவருடைய கட்டளைகள் மீதும் நமக்குள்ள உண்மையான பற்றுதலே, இந்த எல்லாக் காரியங்களுக்கும் காரணம்!

இ. ஏன்? நாம் அவர்களுடைய துன்மார்க்கத்தை வெளிப்படுத்துகிறோம். அவர்கள் வாழ்க்கை வழிமுறைகளுக்குக் குறுக்காக இருக்கிறோம். அவர்களுடைய விலாவில் முட்களைப் போலிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நமது மூலமாக, அவர்கள் செய்யும் கீழ்க்கண்ட காரியங்கள், தவறானவைகள் என்று நிரூபிக்கிறார்:

1. பாவம் - எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம்.

2. நீதி - கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக மட்டும் நீதி கிடைக்கும்.

கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் அடையாளங்கள்

மத்தேயு 24:4-14

3. நியாயத்தீர்ப்பு - கிறிஸ்துவுக்கு வெளியே உள்ள ஒவ்வொருவரும், நியாயந்தீர்க்கப்பட்டு, பிசாசைப்போல், அக்கினிக் கடலில் எரியப்படுவார்கள். (யோவான் 16:8-11) நோவா பேழையைக் கட்டி, ஜலப் பிரளயத்திற்குக் காத்திருந்த நாட்களில் நடந்ததுபோல் அப்படியே நடக்கும். (தேவனுடைய நியாயத்தீர்ப்பு 1பேதுரு 3:18-20, 2பேதுரு 2:5)

ஈ. சுவிசேஷங்களிலும், புதிய ஏற்பாட்டு வேத வசனங்களிலும், நமக்கு இவ்வாறு கூறப்படுகிறது:

1. "...என் நாமத்தினிமித்தம், அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெப ஆலயங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக் கொடுத்து, இராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள்" (லூக்கா 21:12)

2. "ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல....அவர்கள் என்னைத் (இயேசு) துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்" (யோவான் 15:20)

3. "அன்றியும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." (2தீமோத்தேயு 3:12)

உ. இரத்த சாட்சிகளைப் பற்றி என்ன? யோவான்ஸ்நானன், ஸ்தேவான், யாக்கோபு மற்றும் அந்திப்பாசு ஆகிய இவர்கள் யாவரும் கிறிஸ்துவுக்காக இரத்தசாட்சிகளாக மரித்தனர். (மத்தேயு 14:9-10, அப்போஸ்தலர் நடபடிகள் 7:59-60, 12:1-2, வெளிப்படுத்தின விசேஷம் 2:13) முதல் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் மற்றும் பவுல் ஆகிய இவர்கள் யாவரும் இரத்த சாட்சிகளாக மரித்தனர் என்று பாரம்பரியம் கூறுகிறது. கிறிஸ்துவின் சீடர்கள், தங்களை ஜீவ பலியாக, அவருக்குப் படைத்தனர். அவருக்காக மரணத்தை சந்திக்க ஆயத்தமாயிருந்தனர். அவர்கள், தங்களை அடிக்கப்படும்படி பிரித்தெடுத்த ஆடுகளைப் போல, எண்ணினார்கள். (ரோமர் 12:1, ரோமர் 8:35)

ஊ. வச. 10. "அப்பொழுது, அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரை ஒருவர் பகைப்பார்கள்." கீழ்க்கண்ட மூன்று காரியங்களின் விளைவாக, விசுவாசத்தை விட்டு விலகிச் செல்வார்கள்:

1. கடைசிக்காலம் நெருங்கும்போது, விசுவாசிகள் சந்திக்க வேண்டிய உபத்திரவங்கள் மற்றும் இரத்தசாட்சியாக மரிக்கும் நிலை. (1தீமோத்தேயு 4:1, 2தீமோத்தேயு 4:3-4, 2பேதுரு 3:3)

2. கள்ளத் தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்களைப் பின்பற்றல். (மத்தேயு 24:4-5,11; மத்தேயு 7:15-23)

3. பாவத்திலும் பொல்லாப்புகளிலும் ஈடுபடுவது! (மத்தேயு 24:12) சபை மகிமையாக மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளப்படுவதற்குமுன் காணப்படும் இந்த விசுவாச துரோகத்தைக் குறித்து பவுலும் கூட நமக்குக் கூறுகிறார்.

எ. கிறிஸ்து என்ன கூறுகிறார் என்றால், விசுவாச துரோகம்; கடைசி காலம் நெருங்கி வரும்போது அதிகமாகவும் தீவிரமாகவும் இருக்கும் என்கிறார். இது அடுத்த படியாக, விசுவாசிகள் ஒருவரையொருவர் காட்டிக் கொடுப்பதிலும் பகைப்பதிலும் முடியும்.

கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் அடையாளங்கள்

மத்தேயு 24:4-14

4. பலாத்காரம், பாவம், நீதிநெறி தவறுதல், துன்மார்க்கம் ஆகியவைகள் கடைசி காலத்திற்கு நேராக நடத்தும். (வசனம் 12-13)

அ. வசனம் 12. "அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்" "அநேகர்" என்றால், அதிகம், பலர், அவர்களில் பெரிய அல்லது மிகுந்த எண்ணிக்கையுள்ளவர்கள், அவர்களில் அதிகமானபேர்கள். மலைப் பிரசங்கத்தில், கிறிஸ்து கூறியவைகளை இது ஞாபகப்படுத்துகிறது. "கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்" (மத்தேயு 7:13-14 விதைக்கிறவன் உவமைபார்க்கவும் மத்தேயு 13:18-22)

ஆ. "அன்பு" என்றால் ஒருவரிலொருவர் பிரியமாயிருப்பது, பாசத்தை வெளிப்படுத்துவது, தரும சிந்தைபோடிருப்பது, மற்ற விசுவாசிகளின் நலத்தில் கருத்தாயிருப்பது என்று இங்கு பொருள்படும். கடைசி நாட்களுக்கு நெருங்கிச் செல்லும் போது, இது (அன்பு) மிகக் குறைவாகக் காணப்படும். நாம் இவ்வாறு கூறலாம். "அன்பு கொடுக்க சிறிதளவே உள்ளது" இக்காரணத்தினால், லவோதிக்கேயா சபை, கடைசி காலத்திலுள்ள சபையின் சாயலை எடுத்துக் காட்டுகிறது என்று அநேகர் கூறுகின்றனர். (வெளிப்படுத்தின விசேஷம் 3:14-20, எபேசு சபையையும் பார்க்கவும் வெளிப்படுத்தின விசேஷம் 2:4-5)

இ. உபத்திரவப்படுத்தப்படுவது, கள்ளத்தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்களை பின்பற்றுவது மற்றும் "அக்கிரமத்தில்" ஈடுபடுவது ஆகிய இக்காரணங்களினால், இக்காரியங்கள் நேரிடுகிறது. "அக்கிரமம்" என்ற சொல், சட்டங்களை மீறுகிறவன், அநீதிசெய்கிறவன் என்று உண்மையில் பொருள்படும். பாலின சம்பந்தமான தாறுமாறு, சன்மார்க்க நெறி தவறுவது, விபச்சாரம், வேசித்தனம், போதைப் பொருட்கள், தேவபயமற்ற சங்கீதங்கள், குடிவெறி, இச்சையைத் தூண்டும் களியாட்டுகள், மாந்திரீகம், செத்தவர்களிடம் குறிகேட்பது, சாத்தானை ஆராதிப்பது மற்றும் புதிய கால கருத்துக்கள். ஓரினச் சேர்க்கை, கபடு, மற்ற பலவிதமான பாலின தாறுமாறுகள் ஆகியவையும் சேர்க்கப்படும்.

ஈ. காரணம் கருத்தில் கொள்ளாமல், கள்ளத்தீர்க்கதரிசிகளும், போதகர்களும், உபத்திரவங்கள் அநீதியான காரியங்களில் பங்கெடுப்பது, பலாத்காரங்கள், பாவம், சன்மார்க்கநெறி தவறுவது, மாந்திரீகம், சாத்தானுக்கு ஆராதனை மற்றும் துன்மார்க்கம் ஆகிய இந்த அக்கிரமங்கள், கடைசி நாட்களுக்கு நெருங்கிவரும் போது தீவிரமாக மூர்க்கத்துடன் பாய்ந்து பரவும். ஆனால் நாம் கிருபையிலிருந்து விழுந்து விட்ட விசுவாசிகளைக் குறித்து, பேசிக்கொண்டிருக்கிறோம்.

உ. வச. 13. "முடிவுபரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்." எபிரெயர் நிருபத்தை எழுதியவர், கிறிஸ்துவைச் சுட்டிக் காட்டி, உபத்திவங்களை நேருக்கு நேர் சந்திக்கும்போது, திடமாக நிற்கும்படி நம்மை உற்சாகப்படுத்துகிறார்: "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்." (எபிரெயர் 12:3)

கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் அடையாளங்கள்

மத்தேயு 24:4-14

ஊ. அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். ...எவன் நன்மை செய்கிறானோ (தொடர்ந்து செய்கிறவன்) அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும்." *(ரோமர் 2:7,10; கொலொசெயர் 1:22-23)*

5. கடைசிகாலம் நெருங்கிவர சுவிசேஷம் உலகமுழுவதிலும் பிரசங்கிக்கப்படும். (வசனம் 14)

அ. "இராஜ்ஜியத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்." சாத்தான் மற்றும் அக்கிரமக்காரர்கள் தீவிரமாக முயற்சி செய்தபோதிலும், சபை கட்டப்படும் மற்றும் சுவிசேஷம் முன்னேறிச் சென்று, உலகத்திலுள்ள (பூமி உருண்டையில், மக்கள் வாழும் எல்லா பிரதேசங்கள்) எல்லா தேசத்தாராலும் (புறஜாதிகளின் எல்லா சந்ததிகளும், ஜாதிகளும்) கேட்கப்படும்.

ஆ. இயேசு இவ்வாறு கூறுகிறார்: "... என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை." (அந்த அளவிற்கு பலமுள்ளதாக இருக்காது) *(மத்தேயு 16:18)*. அந்த பெரிய கட்டளை (சுவிசேஷம் அறிவித்தல்) நிறைவேற்றப்படும். *(மத்தேயு 28:19-20; ரோமர் 10:16-18)*

இ. "அப்போது முடிவு வரும்" இந்தக் காலத்தின் முடிவு, கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் இந்த எல்லா காரியங்களும், சபை மகிமையோடு மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளப்படும் நாளுக்கு முன், உபத்திரவகாலத்தின் ஆரம்பம், என்று நிச்சயமாக இது பொருள்படும்.

ஈ. நம்முடைய வாழ்நாள் காலத்தில், உலகத்திலுள்ள இன்னும் கேள்விப்படாத மக்கள் கூட்டத்திற்கு சுவிசேஷம் அறிவிக்கும்படி ஊழியர்களை அனுப்பும் முயற்சிகளில் நான் ஏன் இவ்வளவு தீர்மானமாக பங்கு கொள்ளுகிறேன் என்று நீங்கள் கேட்கலாம்! எவ்வளவு விரைவாக எல்லா குலமக்களையும் சென்று அடைகிறோமோ, அவ்வளவு சீக்கிரமாகக் கிறிஸ்து தோன்றுவார்!

முடிவுரை

அ. கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் சம்பவங்கள்:

1. சபை கொடூரமாக உபத்திரவப்படுத்தப்படும்.

2. கள்ளத் தீர்க்கதரிசிகள் மற்றும் போதகர்கள் ஏராளமாகக் காணப்படுவார்கள்.

3. சபையில் ஆவிக்குரிய அழிவும், துரோகமும் தீவிரமாகக் காணப்படும்.

4. ஏராளமான எண்ணிக்கையில் விசுவாசத்தை விட்டு விழுந்து, வஞ்சிக்கிற ஆவிகளின் போதனைகளைப் பின்பற்றுவார்கள்.

ஆ. ஆனால், உபத்திரவத்தைச் சகித்து, கிறிஸ்துவுக்கும், அவருடைய சன்மார்க்க போதனைகளுக்கும் உண்மையாக நிலைத்திருந்து, ஒருவரிலொருவர் தொடர்ந்து அன்புகூருகிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்!

கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் அடையாளங்கள்

மத்தேயு 24:4-14

உண்மையுடன் இருக்க நம்மை அர்ப்பணித்து, நம்மைச் சுற்றிலும் உள்ள மற்றவர்களும் அவ்வாறே செய்ய உற்சாகப்படுத்துவோமாக. ஏனெனில், நம்மில் ஒவ்வொருவருக்கும் கடினமான காலங்கள் வரும்!

இ. விசுவாசிகளின் ஐக்கியத்தில் இருந்து ஒருவர், மற்றொருவருடைய உணவு மேஜையைச் சுற்றி அடிக்கடி கூடிவருவோமாக! போதுமான அளவு சுவிசேஷ செய்தியைக் குறித்த சாட்சிகள் இன்னும் கிடைக்காத பல ஜாதி மக்களை நற்செய்தியைக் கேட்க, ஊழியர்களை அனுப்ப சோர்ந்து போகாமல் உழைப்போமாக.

உபத்திரவ காலத்தில் காணப்படும் அடையாளங்கள்

மத்தேயு 24:15-28

முன்னுரை

அ. மத்தேயு *24:4-51* வசனங்கள் சீடர்கள் இயேசுவிடம் கேட்ட கேள்விகளுக்குரிய பதில்கள். "...உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" *(24:3)* இது ஐந்து பாகமாக பிரிக்கப்படலாம்:

1. கடைசி காலத்திற்கு நேராக நடக்கும் அடையாளங்கள். *(24:4-14)*

2. உபத்திரவகாலத்தில் காணப்படும் அடையாளங்கள். *(24:15-28)*

3. உபத்திரவகாலத்தில், தேவனுடைய கோபாக்கினை ஊற்றப்பட்டு முடிவடையும்போதும் மற்றும் கிறிஸ்து அவருடைய இராஜ்ஜியத்தை நிலைநாட்ட தோன்றுகிற சமயத்திலும் நடக்கும் அடையாளங்கள். *(24:29-31)*

4. உபத்திரவகால பரிசுத்தவான்களுக்குரிய ஒருபாடம். *(24:32-35)*

5. சபை மகிமையோடு, மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன் வாழும் பரிசுத்தவான்களுக்கு ஒரு எச்சரிக்கை. *(24:36-51)*

ஆ. இந்தப்பாடம், உபத்திரவகால அடையாளங்களை மத்திய கருத்தாகக் கொண்டுள்ளது. (வசனம் 15-28) இவை, கிறிஸ்து அவருடைய இராஜ்ஜியத்தை நிலைநாட்ட தோன்றும் காலத்திற்கு நேராக நடக்கும்.

1. உபத்திரவ காலத்தில், பரிசுத்த ஸ்தலத்தில் பாழாக்கும் அருவருப்பு நிற்கும் (24:15)

அ. "பாழாக்குகிற அருவருப்பைக் குறித்து ... நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, ..." உபத்திரவ காலத்தில் வாழும் உண்மையுள்ளவர்களுக்கு, அவருடைய இராஜ்ஜியத்தை நிலைநாட்ட, கிறிஸ்துவினுடைய வருகை சீக்கிரமாக இருக்கும் என்று கூற இது ஒரு பெரிய அடையாளம்.

ஆ. "பரிசுத்தஸ்தலம்" என்பது, எருசலேமிலுள்ள யூதருடைய தேவாலயம். இது, இது நடப்பதற்கு முன்னால் கட்டப்பட வேண்டும். "பாழாக்கும் அருவருப்பு" என்பது, உபத்திரவகாலத்தின் மத்தியில் தேவாலயத்தில் நிறுத்தப்படும் அந்திக் கிறிஸ்துவின் விக்கிரகம் (சட்டத்துக்கு எதிராக நடக்கும் அக்கிரமக்காரன்)

இ. "அருவருப்பு" என்பது வெறுப்பூட்டும் ஒரு பொருள், அருவருக்கத்தக்க ஒரு விக்கிரகம், அல்லது வெறுப்பூட்டும் விக்கிரக ஆராதனை. "பாழாக்கும்" என்றால் அழித்துவிடுவது, ஒரு பொருளை ஒன்றுமில்லாமலாக்கி விடுவது; மதிப்பற்ற, பயனற்றதாக்குவது.

ஈ. அந்திக் கிறிஸ்துவின் விக்கிரகம் தேவாலயத்தில் நிறுத்தப்பட்டு, ஆராதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அது (தேவாலயம்) தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் பயனற்றதாகிவிடுகிறது. விக்கிரக ஆராதனை நடைபெறும் இடத்தில் நம்முடைய தேவன் வாசம் பண்ணமாட்டார். (எசேக்கியேல் *8:5-6, 8:7-18, 10:4, 18-19)*

உ. "தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே, வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன்." அந்திக் கிறிஸ்து, தான்தான் தேவன் என்று அறிவித்துக் கொள்ளுவான். தானியேல் புத்தகத்தில் இவையாவும் கூறப்பட்டுள்ளது. (தானியேல் *9:25-27*).

உபத்திரவ காலத்தில் காணப்படும் அடையாளங்கள்

மத்தேயு 24:15-28

தெசலோனிக்கேயருக்கு பவுல் எழுதின நிருபத்திலிருந்தும், யோவானுக்குக் கிறிஸ்து வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்தும் நாம் இப்பொழுது அறிகிறோம். (2 தெசலோனிக்கேயர் 2:3-4; வெளிப்படுத்தின விசேஷம் 13:5-8, 14-15)

ஊ. உபத்திரவ கால பரிசுத்தவான்கள், தேவாலயத்தில், அந்திக் கிறிஸ்துவின் விக்கிரகம் நிற்பதைக் காணும்போது, அவர்களுடைய உபத்திரவங்களுக்கும், இரத்த சாட்சி மரணத்திற்கும் முடிவு நெருங்கிவிட்டது, என்பதை விளங்கிக் கொள்ளுவார்கள். (கிறிஸ்துவின் வார்த்தைகள் மற்றும் தானியேல் தீர்க்கதரிசனத்தின்படி) சரியாக 3 1/2 வருடங்களில் (42 மாதங்கள்) கிறிஸ்து, அவர்களுடைய விரோதிகள் யாவரையும் அழித்துவிட்டு, எருசலேமில் அவருடைய இராஜ்ஜியத்தை நிலைநிறுத்துவார். (தானியேல் 9:27, 12:11, வெளிப்படுத்தின விசேஷம் 11:2, 12:6,14; 13:5)

2. உபத்திரவ காலத்தில் ஒப்பிட்டுக் கூற முடியாத அளவிற்கு, உலகத்தில் துயரம் உண்டாகும். (24:16-22)

அ. வசனம் 16-20. "யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக் கடவர்கள்." இது, அந்திக் கிறிஸ்துவின் கீழ்க்கண்ட காரியங்கள் நடைபெறும்போது செய்யப்படவேண்டும்:

1. யூத மக்களுடன் தான் செய்த உடன்படிக்கையை மீறும்போது.

2. அன்றாட பலி நீக்கப்படும்போது.

3. தேவாலயத்தில் தன்னுடைய சொரூபத்தை வைத்து அதை தேவன் போல் ஆராதிக்கவேண்டுமென்று கட்டளையிடுவான். கிறிஸ்துவுக்குள் உண்மையாக நிலைத்திருப்பவர்கள் மீது நரகத்தின் சக்திகளை ஏவி திறந்து விட்டதுபோல பாய்ந்து துன்புறுத்தும். அவர்கள் நாய்களைப் போல் வேட்டையாடப்பட்டு, பொருளாதாரம், சமுகம் மற்றும் அரசியல் ஆகிய அந்திக் கிறிஸ்துவின் ஒழுங்கு முறைகளின் பலனை பெறாதபடி தடைசெய்யப்படுவார்கள். (வெளிப்படுத்தின விசேஷம் 13:7-10, 16-17)

ஆ. "மலைகளுக்கு ஓடிப்போகக் கடவர்கள்." "மலைகளில் அடைக்கலம் பெறுங்கள்" என்று இன்று நாம் கூறுவோம். அந்திக் கிறிஸ்துவின் பயங்கரங்களிலிருந்து தப்பி, "மலைப்பிரதேசத்தில்" பாதுகாப்பாக இருங்கள் என்று கிறிஸ்து ஒரு சமயம், பொருள்படும்படி கூறியிருக்கலாம். உபத்திரவ காலங்களின் கொடூரத்தை அழுத்தமாகக் கூற, கிறிஸ்து கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

1. வீட்டின்மேல் இருக்கிறவன் (அன்றாடக வேலைகளைக் கவனித்துக்கொண்டு) வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக் கடவன்.

2. வயலில் இருக்கிறவன், தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் (குளிரான இரவில் பயன்படுத்தும் சிறந்த ஆடை) திரும்பாதிருக்கக் கடவன்.

3. உணவு வாங்கத் தடைவிதிக்கப்பட்டிருப்பதால் கர்ப்பவதிகளுக்கும், சிறுகுழந்தைகளையுடைய பெண்களுக்கும் ஓடிப்போவதும் அவர்களுடைய குழந்தைகளின் தேவையைக் கொடுப்பதும் மிக அதிகக் கடினமாக இருக்கும்.

உபத்திரவ காலத்தில் காணப்படும் அடையாளங்கள்
மத்தேயு 24:15-28

4. இது, மாரிகாலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள். (ஓய்வு நாளில் 3000அடி பயணம் செய்வது யூதச் சட்டத்தில் தடுக்கப்படுகிறது)

இ. வசனம் 21. "...உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்." "உபத்திரவம்" என்ற சொல், அழுத்தப்படுவது, மனபாரமடைவது, தொந்தரவுபடுத்தப்படுவது, துன்புறுத்தப்படுவது, தொல்லையுண்டாக்குவது, ஆவியில் பாரமடைவது என்று பொருள்படும். (24:9 பார்க்கவும்)

ஈ. உபத்திரவ காலத்திலுள்ள பரிசுத்தவான்கள் தேவனுடைய மக்களின் வரலாற்றில் முன்னறிவிக்கப்பட்ட வண்ணமாக அந்திக்கிறிஸ்துவின் கைகளில் துன்புறுத்தப்படுவார்கள். (வெளிப்படுத்தின விசேஷம் 12:13-17, 13:15,17; தானியேல் 12:1-2, எரேமியா 30:5-7). அவர்கள் தேவகோபாக்கினையினால் துன்பப்படமாட்டார்கள். ஆனால், உபத்திரவகாலத்தில், கிறிஸ்துவின்மீது உண்மைப் பற்றுடையவர்களாய் அசைக்கப்படாமல் உறுதியாய் நிலைத்திருப்பதினால், மிகுந்த உபத்திரவத்தையும், இரத்தசாட்சி மரணத்தையும் அடைவார்கள்.

உ. வசனம் 22. "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை, தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்."

"தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" என்பது உபத்திரவகால பரிசுத்தவான்கள். உபத்திரவகாலம், கொஞ்சகாலமாகக் குறைக்கப்படும் என்று இது பொருள்படாது. நாம் மனோபாவனை செய்து பார்க்கமுடியாத அளவுக்கு மிக அதிகமான நாசம் விளைவிக்கப்படும் என்பதை இது குறிக்கிறது. இது குறைந்த நாட்களுக்குட்படாவிட்டால், மனித இனம் முழுவதும் (உபத்திரவகால பரிசுத்தவான்கள் உட்பட) தேவகோபாக்கினையால் அழிக்கப்படும்.

3. உபத்திரவகாலத்தில் கள்ளக் கிறிஸ்துக்களும் தீர்க்கதரிசிகளும் தோன்றி அடையாளங்களும் அற்புதங்களும் செய்வார்கள். (24:23-28)

அ. வசனம் 24. "...கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்." அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "அந்த அக்கிரமக்காரனுடைய வருகை (அந்திக்கிறிஸ்து) சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்... இருக்கும்." (1தெசலோனிக்கேயர் 2:9) "பொய்யான" இங்கே இது உண்மையாகவே இயற்கைக்கு அப்பாற்பட்ட, அற்புதங்கள், மக்கள் பொய்யை நம்பி வஞ்சிக்கப்படத்தக்கதாக இருக்கும், என்று பொருள்படும். (வெளிப்படுத்தின விசேஷம் 13:3, 13-15 வசனங்களையும் பார்க்கவும்)

ஆ. வசனம் 24. "...கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக..." உபத்திரவகாலத்தில், தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் (பரிசுத்தவான்கள்) அவர்களுடைய அடையாளங்கள், அற்புதங்கள், மற்றும் அதிசயங்கள் மூலமாக வஞ்சிக்கபடத்தக்கதாக, அந்திக் கிறிஸ்துவும், கள்ளத்தீர்க்கதரிசியும் கிரியை நடப்பிப்பார்கள்.

உபத்திரவ காலத்தில் காணப்படும் அடையாளங்கள்

மத்தேயு 24:15-28

ஆனால் கடைசிமட்டும் அவ்வாறு இருக்கமுடியாது! அந்திக் கிறிஸ்துவும், கள்ளத் தீர்க்கதரிசியும், அவர்களுடைய கீழ்க்கண்ட காரியங்களினால் அறியப்படுவார்கள்.

1. தேவாலயத்தில் "பாழாக்கும் அருவெருப்பை" நிறுத்துவார்கள்.

2. தேவாலயத்தில் படைக்கும் பலிகளை 3 1/2 ஆண்டுகளுக்குப்பின் நிறுத்திவிடுவார்கள்.

3. மிருகத்தின் அடையாளத்தைப் பெற்றுக் கொள்ள நிர்பந்திப்பார்கள்.

இ. வசனம் 26. "...அதோ வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள்." (வசனம் 23 பார்க்கவும்) உபத்திரவம் மற்றும் இரத்தசாட்சிகளின் மரணம் ஆகிய இவற்றின் நிமித்தமாக, உபத்திரவகால பரிசுத்தவான்கள் அவர்களுடைய பகைஞரை அழித்து, அவருடைய இராஜ்ஜியத்தை நிலைநாட்ட, கிறிஸ்துவின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருப்பார்கள். ஆகவே, அவர் வந்துவிட்டார், (கீழ்க்கண்ட இடங்களில்) காணப்படுவார் என்ற வதந்திகளுக்குச் செவிசாய்க்கும் அபாயம் இருக்கும்:

1. தெரியாத, சில வெகு தொலைவான வனாந்தரமான (பாலைவனம்) இடங்கள்.

2. பட்டணத்தில் இரகசியமான, அறியாத மறைவான இடம்.

ஈ. வசனம் 27. "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்." கிறிஸ்து வந்து, அவருடைய இராஜ்ஜியத்தை உலகத்தில் ஸ்தாபித்து, அவருடைய மக்களின் பகைஞர் யாவரையும் அழிப்பது, ஒரு நொடிப்பொழுதில் சிருஷ்டிகள் யாவும் காணத்தக்கதாக நடைபெறும். (வெளிப்படுத்தின விசேஷம் 1:7;19:11-16) அது வனாந்தரத்தில் வெகுதூரமான இடத்திலோ, அல்லது பட்டணத்தில் இரகசியமான, மறைவிடத்திலோ, இருக்காது. இது நடைபெற தேவையான தொழில் நுணுக்கங்கள், ஏற்கனவே இன்று உலகத்தில் உள்ளது.

உ. வசனம் 28. "பிணம் எங்கேயோ, அங்கே கழுகுகள் வந்து கூடும்." மிருகம் அல்லது மனிதர் உடலைவிட்டு உயிர்போனபின் சரீரம் பிணமாகிறது. இதை உண்ண கழுகுகள் கீழே பறந்து வரும். கிறிஸ்து வந்து, அர்மகெதோன் என்ற இடத்தில், எருசலேமை முற்றுகையிட்ட எல்லா சேனைகளையும் அழிக்கும்போது, அந்த இறந்த உடல்கள் மீது கழுகுகள் இறங்கி, ஆசையோடு கொத்திவிழுங்கும். (வெளிப்படுத்தின விசேஷம் 19:17-18, 21).

முடிவுரை

அ. ஆகவே உபத்திரவ காலத்தில்,

1. பரிசுத்த ஸ்தலத்தில், பாழாக்கும் அருவெருப்பு நிறுத்தப்படும். கிறிஸ்து 3 1/2 ஆண்டுகளில் உலகத்தில் அவருடைய இராஜ்ஜியத்தை நிலைநாட்டி அவருடைய மக்களின் பகைஞரை அழித்துப் போட திரும்பவருவதற்கு இது ஒரு முக்கியமான அடையாளமாக, அவருடைய பரிசுத்தவான்களுக்கு இருக்கும்.

2. இரண்டிற்கும் இதுவரை இல்லாத துன்பம் காணப்படும்.

உபத்திரவ காலத்தில் காணப்படும் அடையாளங்கள்

மத்தேயு 24:15-28

1. உபத்திரவகால பரிசுத்தவான்கள்.

2. பூமியிலும் வானத்திலும் காணப்படும் இயற்கை யாவற்றிற்கும்

3. கள்ளக் கிறிஸ்துக்களும், தீர்க்கதரிசிகளும் தோன்றி பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். இவைகள் யாவும் தேசங்களை வஞ்சிக்க, சாத்தானுடைய கட்டளைப்படி, அந்திக் கிறிஸ்து மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி ஆகிய இவர்களின் கிரியைகள்.

ஆ. இயேசு, இவைகள் யாவற்றையும் குறித்து, இக்காலங்களுக்கு முன்பாகவே கூறியிருப்பதால், உபத்திரவ காலத்திலுள்ள பரிசுத்தவான்கள், இதை அறிந்து, விளங்கிக்கொள்வார்கள். அந்திக் கிறிஸ்துவின் கைகளில் அவர்களுடைய துன்பங்கள் மற்றும் உபத்திரவங்களின் மத்தியில் இது அவர்களுக்கு மிகுந்த ஆறுதலளிக்கும்.

உபத்திரவகாலம் முடிந்தவுடன் உடனடியாக நடக்கப்போகும் சம்பவங்கள்

மத்தேயு 24:29-35

முன்னுரை

அ. வசனம் 15-28. இவ்வசனங்களில், உபத்திரவ காலத்தில் நேரிடும் அடையாளங்களைக் குறித்து விவாதித்தோம். இன்றைய பாடப்பகுதியில், உபத்திரவ காலம் முடிந்தவுடன் உடனடியாக நடக்கப்போகும் சம்பவங்களை விவாதிப்போம். இந்த நேரத்தில் கிறிஸ்து பூமிக்குத் திரும்ப வந்து,

1. அவருடைய மக்களின் பகைஞர்கள் யாவரையும் அழித்துப்போடுவார்.

2. பூமியில் அவருடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார்.

1. உபத்திரகாலத்திற்குப் பின் வானலோகத்தில் அடையாளங்கள் தோன்றும். (24:29)

அ. "அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே..." ஏழுவருட உபத்திரவ காலம் முடிந்தவுடனே, கிறிஸ்து தோன்றுவார். "உபத்திரவம்" என்ற சொல். இந்த அர்த்தத்துடன் வசனம் 21 காணப்படுகிறது. மிகுந்த அழுத்தம் கொடுப்பது, மிகுந்த துன்பம் ஏற்படுவது, துன்புறுத்தப்படுவது, தொல்லைப்படுத்தப்படுவது ஆவியில் அதிக பாரம் உண்டாவது என்றும் பொருள்படும். (வசனம் 9. "உபத்திரவம்" இந்தப் பொருளுடன் உள்ளது)

ஆ. உபத்திரவ காலத்தில், அனுபவிக்கப்படும் துன்பங்கள். "இதுவரை சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் உண்டாயிருக்கும்" என்று இயேசு கூறுகிறார். (மத்தேயு 24:21)

இ. "சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் தத்துவங்கள் அசைக்கப்படும்" இது, தீர்க்கதரிசியாகிய ஏசாயா, உலகத்திலுள்ள தேசங்களுக்கு எதிராக நியாயந்தீர்த்துக் கூறிய தீர்க்கதரிசன வசனங்களிலிருந்து மேற்கோளாக எடுக்கப்பட்டது. (13:10, 34:4, யோவேல் 2:10,31) இது அடையாளமாகக் கூறப்படவில்லை. உபத்திரவ காலத்தின் முடிவில், கிறிஸ்து திரும்பவரப்போவதற்கு அடையாளமாக, வானலோகத்தின் இயற்கை தத்துவங்களில் பெரிய அழிவு ஏற்படும். அவர் வந்து,

1. அவருடைய மக்களின் பகைஞரை அழிப்பார். (எருசலேமை முற்றுகையிட்ட, அந்திக்கிறிஸ்துவுடன் சேர்ந்த பூமியின் இராஜாக்கள் மற்றும் அவர்களுடைய சேனைகள்)

2. அவருடைய இராஜ்ஜியத்தை பூமியில் நிலைநாட்டுவார்.

3. உலகமுழுவதையும் எருசலேமிலிருந்து (அவருடைய பரிசுத்தவான்களுடன் சேர்ந்து) ஆளும் அவருடைய 1,000 வருட அரசாட்சியை ஆரம்பம் செய்வார். (வெளிப்படுத்தின விசேஷம் 19:11-21, 20:1-6) வானலோகத்தில் ஏற்படும் இந்தக் குழப்பங்களில் அநேகம், உபத்திரவகாலத்தில், கிறிஸ்து ஆறாவது முத்திரையை உடைக்கும்போதும் நடைபெறும். (வெளிப்படுத்தின விசேஷம் 6:12-13)

ஈ. இந்த வானமண்டலத்தில் ஏற்படும் அடையாளங்கள், உலகமுழுவதிலும் ஏற்படும். பூமியிலுள்ள ஒவ்வொரு மனிதனும் அவைகளைக் காண்பான்.

உபத்திரவகாலம் முடிந்தவுடன் உடனடியாக நடக்கப்போகும் சம்பவங்கள்

மத்தேயு 24:29-35

"இயேசுவின் நாமத்தில்..முழங்கால்கள் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக, இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும்..." (பிலிப்பியர் 2:10-11) கிறிஸ்து எருசலேமிலிருந்து அரசாளுவார்.

உ. இது அண்டசராசரங்களின் முற்றிலுமான அழிவாக இராது. ஆனால் அது ஒவ்வொருவருடைய கவனத்தையும் ஈர்க்கும்! இது கிறிஸ்துவினுடைய சீடர்கள் அவரிடம் கேட்ட கீழ்க்கண்ட கேள்விக்கு உண்மையாகக் கூறப்பட்ட உத்தரவுகள். "...உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" (மத்தேயு 24:3)

2. உபத்திரவகாலம் முடிந்தவுடனே கிறிஸ்து, வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் மேகங்கள்மேல் வருவார். (24:30)

அ. "அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும்." "மனுஷகுமாரனுடைய அடையாளம்" என்பது, ஒருசமயம் கிறிஸ்துவாகவே இருக்கக்கூடும்.

ஆ. "...பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்." இதுவும் வெளிப்படுத்தினவிசேஷம் 1:7 வசனத்தில் கூறப்பட்டுள்ளது.

இது, நிச்சயமாக நடைபெறப் போகும் அளவிற்கு முக்கியமாக இருந்ததால், யோவானுக்கு வெளிப்படுதல் ஆரம்பமான நிலையிலேயே வெளிப்படுத்தப்பட்டது. இயேசுவின் தெய்வீக நியாயத்தீர்ப்பு அவர்கள் மீது விழப்போவதினிமித்தம், பூலோக தேசத்தார் எல்லாரும் "புலம்புவார்கள்" (சகரியா 12:10) இது நம்பிக்கையற்ற நிலையில் புலம்புவது தொடர்பானது. இனிமேல் அவர்கள் தப்பித்துக்கொள்ள ஒருவழியும் இல்லை.

இ. இயேசுவைக் கர்த்தரும் இரட்சகருமாக (கிறிஸ்துவாகிய மேசியா, தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவர்) ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் தொடர்பான தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் நியாயத்தீர்ப்பு இருக்கும். (வெளிப்படுத்தின விசேஷம் 19:15, 20:15, ரோமர் 2:7-11)

ஈ. "...மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும், வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதை... கண்டு..." பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு, தீர்க்கதரிசிகள் எல்லாரும், சபை மகிமையோடு மேகங்களின் மீது எடுத்துக் கொள்ளப்படும்போது, அவரோடு இருப்பது போல், இந்த நேரத்திலும் கிறிஸ்துவோடு திரும்பவருவார்கள். (வெளிப்படுத்தின விசேஷம் 17:14, 1 தெசலோனிக்கேயர் 4:14, 3:13)

உ. "வானத்தின் மேகங்கள் மேல்" இது ஒரு சமயம் தேவனுடைய பிரசன்னத்தின் மகிமை நிறைந்த மேகத்தைக் குறிக்கலாம். (SHEKINEH GLORY) (அப்போஸ்தலர் 1:9-11, தானியேல் 7:13, வெளிப்படுத்தின விசேஷம் 1:7) தேவனுடைய குமாரனுக்கு,

1. பிதாவினால், எல்லா அதிகாரமும், வல்லமையும், வானத்திலும் பூமியிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (தானியேல் 7:13-14; எபேசியர் 1:20-22)

உபத்திரவகாலம் முடிந்தவுடன் உடனடியாக நடக்கப்போகும் சம்பவங்கள்

மத்தேயு 24:29-35

2. "அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்." (அப்போஸ்தலர் 17:31, யோவான் 5:22, 27-30; அப்போஸ்தலர் 10:42)

ஊ. முதல் முறையாக அவர் பூமிக்கு துன்பத்தை அனுபவிக்கும் தாசனாக வந்தார். (ஏசாயா 53:4-6) இரண்டாம் முறை, நியாயதிபதியாக அவர் பூமிக்கு வருவார்!

3. உபத்திரவகாலத்திற்குப்பின் உடனே, கிறிஸ்து தெரிந்து கொள்ளப்பட்டவர்களை, நாலு திசைகளிலிருந்தும் கூட்டிச் சேர்க்க அவருடைய தூதர்களை அனுப்புவார் (24:31)

அ. "வலுவாய்த்தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்". இரட்சிப்பை சுதந்தரித்துக் கொண்ட எல்லாருக்கும், தேவனுடைய தூதர்கள், எப்போதும் ஊழியம் செய்வார்கள். (எபிரெயர் 1:14) இயேசு இந்தச் சம்பவத்தைக் குறித்து, "களைகளைக் குறித்த உவமையில்," குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், வானத்திலும், பூமியிலுமுள்ள எல்லா விசுவாசிகளையும், அவர்கள் அழைப்பார்கள்.

ஆ. "வலுவாய்த்தொனிக்கும் எக்காள சத்தம்" மரித்தோர் உயிர்த்தெழும்போதும், சபை மகிமையோடு மேகங்களுக்கு மேலாய் எடுத்துக்கொள்ளப்படும்போதும், எக்காள சத்தம் வலுவாய் தொனிக்கும். (1கொரிந்தியர் 15:52, 1தெசலோனிக்கேயர் 4:16, ஏசாயா 27:12-13) அவ்வாறே, கடைசி கால சம்பவங்கள் நடைபெறும்போதும், எக்காள சத்தம் வலுவாய் தொனிக்கும். (வெளிப்படுத்தின விசேஷம் 8:2, 10:7, 11:15)

இ. "அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும், நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்கள்." "நாலு திசைகளிலுமிருந்து" என்பது திசைகாட்டியின் அடிப்படையான நான்கு முக்கியமான திசைகளைக் குறிக்கும். இது, வானத்திலும் பூமியிலுமுள்ள எல்லாவற்றிற்கும் அடையாளமாக இருக்கிறது. உபத்திரவகாலத்திற்குப்பின், கிறிஸ்து பூமிக்கு வரும்போது நடைபெறப்போகும் தொடர்ச்சியான பல நிகழ்ச்சிகளில் இது ஒன்று:

1. அக்கிரமக்காரர், அந்திக் கிறிஸ்து மற்றும் சாத்தான் ஆகியவர்களின் நியாயத்தீர்ப்பு. (வெளிப்படுத்தின விசேஷம் 19:11-21, 20:1-3)

2. கிறிஸ்து வரும்போது, பூமியில் உயிரோடு இருக்கும் மக்கள், நியாயந்தீர்க்கப்பட்டு, பிரித்தெடுக்கப்படுவார்கள்.

3. எல்லாக் காலங்களிலுமுள்ள பரிசுத்தவான்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (பரலோகத்திலுள்ளவர்களும் சேர்த்து) (மத்தேயு 13:40; மாற்கு 13:27, வெளிப்படுத்தின விசேஷம் 19:14; 20:4-6)

4. கிறிஸ்து, அவருடைய பரிசுத்தவான்களுடன் சேர்ந்து ஆளும் ஆயிர வருட ஆட்சி (வெளிப்படுத்தின விசேஷம் 20:4)

உபத்திரவகாலம் முடிந்தவுடன் உடனடியாக நடக்கப்போகும் சம்பவங்கள்

மத்தேயு 24:29-35

முடிவுரை

அ. கிறிஸ்து இந்த போதனையை, அத்திமரத்தின் எடுத்துக்காட்டுடன் முடிக்கிறார்: "அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்." இந்த உவமையிலிருந்து, நாம் கீழ்க்கண்ட பாடத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும்:

1. "அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்." (மத்தேயு *24:32-33*) "இவைகளையெல்லாம்" என்பது, மகா உபத்திரவகாலங்களில் நடைபெறப் போகிற எல்லா சம்பவங்களையும் குறிக்கும்." (மத். *24:15-29*) மிகவும் வெளிப்படையான அடையாளம், "பாழாக்கும் அருவெருப்பு" *(24:15)*

ஆ. இந்த இறுதியான வாக்கியங்களில், கிறிஸ்து, கீழ்க்கண்டவற்றையும் கூறுகிறார்:

1. "இவைகளெல்லாம் சம்பவிக்கும் முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்". *(24:34)* "இந்தச் சந்ததி" என்பது, இவ்விரண்டில் ஒன்றைக் குறிக்கும்:

அ. மகா உபத்திரவ காலத்திற்கு நேராக நடத்தும் காலங்களில் உள்ள சந்ததி மற்றும் மகா உபத்திரவ காலத்தில் வாழும் மக்கள் உள்ளடங்க. *(வசனம் 4-14, 15-29)*

ஆ. யூத மக்களின் வம்சம் *(தலைமுறைகள்)*

2. "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" *(24:35)* கிறிஸ்து கடைசி காலங்களைக் குறித்துக் கூறியவைகள், நித்தியமாக, நியாயமாக ஏற்றுக் கொள்ளக்கூடியதும், சத்தியமுமானவைகள். ஏனெனில், அவைகள் பிதாவாகிய தேவனுடைய வார்த்தைகளும் ஆகும்.

இ. கிறிஸ்துவை, கர்த்தரும் இரட்சகருமாக ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாதவர்களும், பின்வாங்கிய நிலையில் இருப்பவர்களும், கிறிஸ்து கூறியவைகளுக்குச் செவிசாய்ப்பது மேலானதாக இருக்கும்! நீங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், அதன் பலனாக, நித்தியமாக தேவனையும், கிறிஸ்துவையும் விட்டு பிரிக்கப்பட்டு நரகத்தில் இருப்பீர்கள்! இப்பொழுது நீங்கள் தெரிந்துகொள்ள ஓர் தருணம். கிறிஸ்து இரண்டாம் முறை பூமிக்கு வரும்போது, உனக்குக் கிடைக்காது. உங்களுக்கு நியாயத்தீர்ப்பும், துயரமும், புலம்பலும் மட்டுமே காத்திருக்கும்!

சபை மகிமையாக மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளப்படுகையில் மனுஷகுமாரனின் வருகை

மத்தேயு 24:36-51

முன்னுரை

அ. அவருடைய சீடர்களின் இந்தக் கேள்விக்கு "உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" (மத்தேயு 24:3) இப்பொழுதுதான் பதிலளித்து முடித்தார். அவருடைய பதில் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

1. கடைசி நாட்களுக்கு நேராக நடத்தும் அடையாளங்கள். சபை மகிமையோடு மேகங்களின் மேல் எடுத்துக்கொள்ளப்படுவதும், உபத்திரவகாலத்தின் ஆரம்பமும். (24:4-14)

2. மகா உபத்திரவகாலத்தில் காணப்படும் அடையாளங்கள். (24:15-28)

3. உபத்திரகாலத்தின் முடிவில் நடக்கப்போகும் தனிச்சிறப்பான அடையாளங்கள் மற்றும் அவருடைய இராஜ்ஜியத்தை நிலைநாட்ட கிறிஸ்து தோன்றுவதும். (24:29-31)

4. உபத்திரவ கால பரிசுத்தவான்களுக்கு ஒருபாடம். (24:32-35)

ஆ. சபை மகிமையாக மேகங்களின்மேல் எடுத்துக் கொள்ளப்படும்போது, அவருடைய வருகையைக் குறித்து, இயேசு இப்போது ஞாபகப்படுத்துகிறார். இது பரலோகக் கால அட்டவணையில் குறித்துள்ளபடி, நடக்கப்போகும் அடுத்த நிகழ்ச்சி. ஆகவே இப்பொழுது நமக்கு மிகமுக்கியமான சம்பவம்.

1. சபை மகிமையாக மேகங்களில் எடுத்துக் கொள்ளப்படுகையில், கிறிஸ்துவின் வருகையின் நாள் அல்லது நேரம் ஒருவரும் அறியார். (24:36-44)

அ. வசனம் 36. "அந்த நாளையும் அந்த நாழிகையையும் ஒருவனும் அறியான்." "அந்த நாளையும், அந்த நாழிகையையும்" என்றால் கர்த்தர் அவருடைய சபைக்காக, ஆகாயத்தில் வரும் சரியான அந்தக் குறிப்பிட்ட நேரம் என்று பொருள்படும். இயேசு பரத்துக்கேறி செல்வதற்குமுன், கடைசி கால நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகையில், இவ்வாறு கூறினார்: "பிதாவானவர், தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல." (அப்போஸ்தலர் 1:7) தேவனுடைய தூதர்கள்கூட, சரியான குறிப்பிட்ட அந்த நேரத்தை அறியமாட்டார்கள் என்று இயேசு இந்த பாகத்தில் கூறுகிறார். சில கையெழுத்துப் பிரதிகள் கிறிஸ்துவையும் இத்துடன் சேர்த்துள்ளது. பூலோகத்தில் அவருடைய வாழ்க்கையில் அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கினார். (பிலிப்பியர் 2:7)

ஆ. வசனம் 37-39 "நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும்காலத்திலும் நடக்கும்." ஜலப்பிரளயத்திற்குமுன், நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் அந்தக் குறிப்பிட்ட நாள்வரை, அவிசுவாசிகள், நீதிமான்களும், அநீதிமான்களும், திருமணம் செய்வது, மற்றும் சாதாரண வாழ்க்கை நடைமுறை காரியங்களைக் கிரமமாக செய்துவந்தார்கள். (ஆதியாகமம் 6:1-2) சபை மகிமையாக எடுத்துக் கொள்ளப்பட கிறிஸ்து வரும்போது அவிசுவாசிகளுக்கு இவ்வாறே இருக்கும். அவர்கள் ஆச்சரியத்தில் அதிர்ந்து போவார்கள். அவருடைய வருகையை அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

சபை மகிமையாக மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளப்படுகையில் மனுஷகுமாரனின் வருகை

மத்தேயு 24:36-51

இ. தெசலோனிக்கேயருக்கு எழுதிய தன்னுடைய முதலாம் நிருபத்தில், பவுல் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வரும்...சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, ...அழிவு சடிதியாய், அவர்கள் மேல்வரும்... சகோதரரே, அந்த நாள், திருடனைப்போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே." (1தெசலோனிக்கேயர் 5:2-3, 2பேதுரு 3:10) எனவே, சபை மகிமையோடு மேகத்தின் மேல் எடுத்துக் கொள்ளப்படுகையில், கிறிஸ்துவின் வருகை, அவிசுவாசிகளுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் கொடுக்கும். ஆனால் நாம் பரலோகத்தில் அவரோடு இருக்கும்படியாக நம்மை அவர் எடுத்துக் கொண்டுபோக, அவருடைய வருகைக்காக ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறோம். (யோவான் 14:2-3)

ஈ. கிறிஸ்து அவருடைய சபைக்காக வரப்போவதை அறிவிக்கும் மூன்று அடையாளங்களைப் பவுலும் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

1. பெரிய எதிர்ப்பும் கலகமும் நேரிடும்-விசுவாசத்தையும், சுவிசேஷத்தின் சத்தியத்தையும் விட்டு வெகுவாக விலகிப்போய், விழுந்து போவார்கள்.

2. அந்திக் கிறிஸ்து (அக்கிரமக்காரன்) வெளிப்படுவான் - கர்த்தர். அவருடைய சபையை எடுத்துக் கொள்ள ஆகாயத்தில் வருவதற்கு முன் (அல்லது பின்னால் உடனே) இந்த மனிதனின் அடையாளம் வெளிக்குக் கொண்டுவரப்படும்.

3. பரிசுத்த ஆவியானவர் வழியில் தடுத்து நிறுத்துவார் - பரிசுத்த ஆவியானவர் தாமாகவும், சபையிலுள்ள விசுவாசிகள் மூலமாகவும், "அக்கிரமக்காரன்" வெளிப்படுவதை இப்பொழுது தடுத்து நிறுத்துகிறார். சபை மகிமையாக மேகங்களில் எடுத்துக் கொள்ளப்படும். அந்த நேரத்தில், இந்த இரண்டு தடுத்து நிறுத்தும் சக்திகளும் (பரிசுத்த ஆவி மற்றும் சபை) வழியிலிருந்து நீக்கப்படும். (2தெசலோனிக்கேயர் 2:3-7)

உ. இந்த நேரத்தில், நாம் விழிப்பாகக் கவனிக்கவேண்டிய காரியங்களைக் கர்த்தரும் நமக்குக் கொடுக்கிறார்:

1. கள்ளத்தீர்க்கதரிசிகளும், போதகர்களும் அநேகரை வஞ்சிப்பார்கள்.

2. யுத்தங்கள், பஞ்சங்கள், பூமிஅதிர்ச்சிகள் முதலியன அதிகரிப்பதுடன் அதிகக்கடுமையாகவும் இருக்கும்.

3. தேவனுடைய மக்களை உபத்திரவப்படுத்துவது அதிக வெளிப்படையாக இருக்கும்.

4. பலாத்காரம், குற்றம், துன்மார்க்கம் மற்றும் பொல்லாப்பு அதிகரிக்கும்.

5. பல ஜாதியான மக்கள் வாசம் பண்ணும் எல்லா தேசங்களிலும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும். (மத்தேயு 24:4-14)

சபை மகிமையாக மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளப்படுகையில் மனுஷகுமாரனின் வருகை

மத்தேயு 24:36-51

ஊ. வசனம் 40-41 "அப்பொழுது, இரண்டு பேர் வயலில் இருப்பார்கள்..இரண்டு ஸ்திரீகள் எந்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள். ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்" சபை மகிமையாக எடுத்துக் கொள்ளப்படும்போது இவ்வாறு தான் இருக்கும். அந்தக் காலத்தில் வாழும் விசுவாசிகளின் சரீரங்கள் நொடிப்பொழுதில் அழிவில்லாதவைகளாக மாற்றப்பட்டு, சரீரம் மற்றும் ஆவியுடன் கர்த்தரை ஆகாயத்தில் சந்திக்க உயர எழும்பிச் செல்வார்கள். (1கொரிந்தியர் 15:52, 1தெசலோனிக்கேயர் 4:17) ஆனால் அவிசுவாசிகள், அக்கிரமக்காரனைச் சந்திக்கவும் உபத்திரவகாலத்தில் ஊற்றப்படும் தேவகோபாக்கினையை அடையவும் விடப்படுவார்கள்.

எ. வசனம் 42,44. "...விழித்திருங்கள்... ஆயத்தமாயிருங்கள்" என்றால், ஆழமற்றகடலில் மிதந்து செல்லும் கப்பலைப்போல், "இடைவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும்." ஆவியில் ஆயத்தமாக இருக்கவேண்டும், ஆவியில் தகுதிபெற்றவர்களாகவும் இருக்கவேண்டும் என்றும் பொருள்படும்.

ஏ. பரலோக அட்டவணையில் அடுத்த நிகழ்ச்சி சபை. மகிமையாக மேகங்கள் மேலாக எடுத்துக் கொள்ளப்படுவது. சரியாக குறிப்பிட்ட நேரத்தை நாம் அறியமுடியாது. ஆனால் கவனமாகப் பார்க்கவேண்டிய அநேக அடையாளங்கள் உண்டு.

எனவே உனக்குக் கொடுக்கப்பட்ட அடையாளங்களுக்காக கவனமாக விழித்திருந்து பார்த்துக் கொண்டிரு. ஆத்துமாவிலும், ஆவியிலும் தூங்கச்சென்று விடாதே.

ஊ. வச. 43-44. "திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள்." அவருடைய கருத்தை விளக்க கிறிஸ்து ஒரு உவமையைப் பயன்படுத்துகிறார். நாம் ஆச்சரியத்தில் அதிர்ச்சியடையமல் இருக்கவேண்டுமானால், கிறிஸ்து வருவதற்கான அடையாளங்களுக்காக விழித்திருந்து காத்துக் கொண்டிருக்கவேண்டும்!

2. சபையை மகிமையாக மேகங்களுக்கு மேலாய் எடுத்துக்கொள்ள கிறிஸ்து வரும்போது, நம்மை உண்மையுள்ளவர்களாக அவர் கண்டு கொள்வாரானால் நன்றாக இருக்கும். (24:45-51)

அ. வசனம் 45-51 இந்த வசனங்களில், விழித்திருந்து, அவருடைய வருகைக்காக ஆயத்தமாக இருக்க வேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக கிறிஸ்து மற்றொரு உவமை, எடுத்துக்காட்டாக விளக்கப்பட்டுள்ளது. இந்த உவமையில் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆயத்தமாக, விழிப்பாக இருக்கவேண்டுமென்பதைவிட, நமக்குக் கொடுக்கப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றவேண்டுமென்பதைப் பற்றி அதிகமாகக் கூறப்பட்டுள்ளது.

ஆ. வசனம் 45-47. இங்கு உண்மையும் விவேகமும் உள்ள ஊழியக்காரன், ஒரு விசுவாசி. (மாற்கு. 13:34) அவன்,

சபை மகிமையாக மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளப்படுகையில் மனுஷகுமாரனின் வருகை

மத்தேயு 24:36-51

உலகத்திற்கு சுவிசேஷ செய்தியை அறிவிப்பதற்கும், மற்ற விசுவாசிகளை கரிசனையோடு விசாரித்து அவர்களில் அன்புகூரவும் பொறுப்புடையவனாயிருக்கிறான். அவன் நியாயாசனத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்துவுக்கு முன்பாக ஆசீர்வதிக்கப்பட்டவனாக இருந்து, அவருடைய சபையை எடுத்துக் கொள்ள வரும்போது அவரோடு ஆளுகை செய்வான். (2 கொரிந்தியர் 5:10, ரோமர் 14:10-12)

இ. வச. 48-51. பொல்லாத ஊழியக்காரன் என்பவன், விசுவாசியாகிய ஒருவன், ஆவிக்குரிய வாழ்க்கையில் தூக்கத்தில் ஆழ்ந்து, சுவிசேஷத்திற்கடுத்த காரியங்களில் அவனுடைய பொறுப்பை நிறைவேற்றாமல் இருப்பவன். அவன், விசுவாசத்திலிருந்து விலகி, அலைந்து திரிந்து, மறுபடியும் பாவத்தில் விழுந்து, மற்ற விசுவாசிகளை துன்புறுத்துகிறவனாகி விட்டான். அவன் சபைக்கு ஒழுங்காக வருகை தருபவனாக இருக்கலாம். ஆனால், சொல்வது ஒன்று செய்வதுவேறுமாக இருக்கும். மாய்மாலக்காரனாகிவிட்டான். சபை மகிமையாக எடுத்துக் கொள்ளப்படும்போது, இவன் விட்டுவிடப்படுவான். அவன் மனந்திரும்பாவிட்டால், நரக அக்கினியில் முடிவடைவான்.

முடிவுரை

அ. நமக்காக ஒரு இடத்தை அவர் ஆயத்தம் செய்ய சென்றிருக்கும் வேளையில், ஆவிக்குரிய வாழ்க்கையில் தூக்கத்தில் ஆழ்ந்துவிடும், விசுவாசிகளைக் குறித்து கிறிஸ்து கவலைப்படுகிறவராயிருக்கிறார். பலஜாதி மக்கள் கூட்டம் வாழும் ஒவ்வொரு தேசத்திலும், சுவிசேஷத்தை அறிவிப்பதில் அவர்களுடைய ஊக்கத்தையும் மற்றும் ஒருவரிலொருவர் அன்பு கூருவதைக் குறித்தும் அவர் கருத்துள்ளவராயிருக்கிறார்.

ஆ. கிறிஸ்து அவருடைய சபையை எடுத்துக் கொள்ள வருவதில் தாமதிப்பது போல் காணப்படலாம். ஆனால், அவர் எவ்வளவுக்கு அதிகமானவர்களை அவருடைய இராஜ்ஜியத்தில் சேர்க்கக் கூடுமோ, அவ்வளவுக்கு அதிகமானவர்களைச் சேர்க்க வேண்டும் என்று அவர் விரும்புவதால் அவ்வாறு தாமதிக்கிறார். அவர், ஆதியில் பிதாவோடு இருக்கும்போதும், அவருக்கு எப்போதும் இருக்கும் அந்த அவருடைய மகிமையை, அவர்கள் காண, அவர் விரும்புகிறார். (யோவான் 17:24)

இ. சபைக்காக கிறிஸ்து வரும் குறிப்பிட்ட அந்த சரியான நேரத்தை நாம் அறியாமல் இருக்கலாம், ஆனால் நாம் விழித்திருந்து கவனிக்க வேண்டிய அநேக அடையாளங்கள் நமக்கு இருக்கிறது. எல்லா தேசங்களுக்கும், உலகத்திலுள்ள பல ஜாதி மக்கள் கூட்டத்தினருக்கும் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொள்ளும் படியாகச் செய்யவேண்டிய காரியங்கள் இன்னும் அதிகம் இருக்கிறது. ஆகவே, விழிப்புடையவர்களாக நம்மைக் காத்துக்கொண்டு, நம்முடைய எஜமானானவர் நாம் செய்யும்படி கூறிய யாவற்றையும், செய்து கொண்டிருப்பதில் கவனமாயிருப்போமாக!

கெத்செமனேயில் இயேசுவும் அவருடைய சீடர்களும்

மத்தேயு 26:36-46

முன்னுரை

அ. இந்த வேதாகம வரலாற்றின் மத்திய கருத்து என்னவென்றால், நாம், நம்மிடம் ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டவர்களின் நன்மைக்காக மட்டும் அல்லாமல், நம்முடைய சொந்த நன்மைகளுக்காவும் நாம் கண்டிப்பாக விழித்திருந்து ஜெபிக்கவேண்டும்.

ஆ. கிறிஸ்து தம்மைத்தாமே பஸ்கா ஆட்டுக்குட்டியாக, மானிட வர்க்கத்தின் பாவங்களுக்காக படைத்த வெளிச்சத்தில், இந்த வேதாகம சம்பவம் விளங்கிக் கொள்ளப்படும். (1:21,20,28, யோவான் 1:29). இதுவே, அவரைவிட்டு நீங்கக்கூடாத உபத்திரவத்தின் பாத்திரம். ஆதியிலிருந்து இதுவே, அவருக்கான பிதாவின் சித்தம்.

இ. அவருடைய நெருங்கிய சீடர்கள் எப்படியும், அவரோடு தங்கி, நீண்டநேரம் விழித்திருந்து ஜெபித்திருக்கவேண்டும். நாம் இந்த வேத பாடத்தின் பாகத்தை ஆராய்ந்து பார்ப்போமானால், இயேசு ஜெபிப்பதைக் குறித்து அவருடைய சீடர்களிடம் கூறியது. அவருக்காகவும், அவருடைய மிகக் கடூரமான நிலைமைக்காக மாத்திரம் அல்லாமல், அவர்கள் சோதனைக்குள் விழாதபடிக்கும் அவர்கள் ஜெபிக்கவேண்டும் என்று அவர் கூறியதை நாம் பார்க்கலாம்.

1. நாம் மிகுந்த துக்கம் மற்றும் துன்பத்தின் மத்தியிலிருப்பதாக நம்மைக் காணும்போது, நாம் மற்றவர்களை நமக்காக ஜெபிக்கவும், நம்முடன் சேர்ந்தும் ஜெபிக்கவும் கேட்டுக் கொள்ள வேண்டும். (26:36-38)

அ. வசனம் 36. "அப்பொழுது, இயேசு அவர்களோடே கெத்செமனே எனப்பட்ட இடத்திற்கு வந்து..." "கெத்செமனே" என்றால் எண்ணெய் ஆட்டும் ஆலை அல்லது ஒலிவ எண்ணெய் பிழிந்து எடுக்கப்படும் இடம், என்று பொருள்படும். ஒலிவ மலையின் மேற்கு சரிவில், கீதரோன் பள்ளத்தாக்கிற்கு குறுக்காக எருசலேமை நோக்கி அமைந்துள்ளது. இயேசுவும் அவருடைய சீடர்களும் அங்கு அடிக்கடி சென்றார்கள். (யோவான் 18:1-2) "அப்பொழுது" என்றால், பஸ்கா போஜனத்திற்குப்பின், அவருடைய சீடர்கள் இயேசுவுடன் ஒலிவ மலைக்கு சென்று, அதன் பிறகு "கெத்செமனே" என்று அழைக்கப்பட்ட இடத்திற்குச் சென்றார்கள். *(26:17,30)*

ஆ. வசனம் *36-37* "......சீடர்களை நோக்கி, நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள்...." பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக் கொண்டு போனார். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய இவர்கள் இயேசுவுக்கு ஒரு மாதிரியான உள்வட்டத்தில் இருந்தனர். அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மிகக் கடினமான நேரத்தில், அவர் அருகில் இருக்கும் பாக்கியத்தை அவர்கள் பெற்றனர். மற்ற எட்டு சீடர்களும் தூரத்தில் ஒலிவ மலையின் மேல் இருந்தனர்.

இ. வசனம் *37*. "துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்". "துக்கமடைய" என்றால் துயரப்படுவது, மிக வருந்துவது, கொடூரமான கஷ்டம் அனுபவிப்பது, இருதயத்தில் மிகுந்த பாரப்படுவது, என்று பொருள்படும். "வியாகுலப்படவும்" என்றால் மனதில் ஆயாசப்படுவது, கலக்கமடையும் சிந்தனைகளைக் கொண்டிருப்பது, என்று பொருள்படும்.

ஈ. வசனம் 38. "அப்பொழுது அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது.

கெத்செமனேயில் இயேசுவும் அவருடைய சீடர்களும்

மத்தேயு 26:36-46

நீங்கள் (மூன்று பேர்கள்) இங்கே தங்கி, என்னோடே கூட விழித்திருங்கள்..." அவர், பூமியில் இருந்த நாட்களில், அவருக்கு மிக நெருக்கமாக இருந்த இந்த மூன்று பேர்களிடமும் நம்பிக்கை வைத்து தம் கவலையைக் கூறினார். அவர் தம்முடைய இருதயத்தைத் திறந்து, அவருடைய ஆவிக்குரிய மற்றும் மன உணர்ச்சிகளின் நிலையை விளக்கினார். "மரணத்துக்கேதுவான துக்கம்" என்றால், அவருடைய துக்கம் அவரைக்கொல்லும் அளவிற்கு கடுமையாக இருதயத்தின் ஆழத்தில் துயருற்று கலக்கமடைய வைத்தது. அது அவரை முற்றிலும் ஆட்கொண்டது.

உ. இந்த வார்த்தைகள் சங்கீதக்காரனின் வார்த்தைகளுக்கு ஒத்ததாக இருக்கிறது. "என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்?" (சங்கீதம் 42:11) அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாக விழும் அளவிற்கு அவருடைய வேதனையும் துயரமும் மிக அதிகக் கடுமையாக இருந்தது என்று லூக்கா நமக்குக் கூறுகிறார். பிதா, ஒரு தூதனை அனுப்பி அவரைப் பலப்படுத்த வேண்டிய அவசியமாயிற்று. (லூக்கா 22:43-44, எபிரெயர் 12:4)

ஊ. அவர் துன்பப்படவும், மரிக்கவும் பயந்ததினால், மிகுந்த துக்கமும், துயரமும் அடையவில்லை என்பதை நாம் அறிவோம். அவர், அவருடைய ஜீவனைக் கொடுக்கவும், திரும்பவும் எடுத்துக் கொள்ளவும், அதிகாரம் உடையவராய் இருந்தார் (யோவான் 10:18) இந்த நோத்திற்காகவும், நோக்கத்திற்காகவுமே அவர் உலகிற்கு வந்தார் (1:21, 20:28, 26:1-2) இயேசு, "மரணத்துக்கேதுவாக துக்கமும் துயரமும் அடைந்து வருந்தினார்"

ஏனெனில் அவர்,

1. தனிமையில், மானிடவர்க்கத்தின் பாவங்களுக்காக, நியாயத்தீர்ப்பையும், தேவ கோபாக்கினையையும் சுமக்க வேண்டும். (ஏசாயா 63:3, 51:22)

2. அவர் சிலுவையில் அறையப்பட்டிருக்கும் வேளையில் பிதா அவரோடு உறவாடவோ, அவரை இரட்சிக்க வரவோ கூடாது. எனவே சிறிதளவு நேரம் பிதாவினால் கைவிடப்படுவார். அவர் திட்டமாக பாவ நிவாரணபலியாக வேண்டும். (27:46, 2கொரிந்தியர் 5:21).

எ. "மரணத்துக்கேதுவாக துக்கங் கொண்டிருந்த படியினால்" அவருடைய மூன்று ஆவிக்குரிய சிநேகிதர்களிடமும், "என்னோடு விழித்திருங்கள்" என்று கேட்டுக் கொண்டார். இது, அவர்கள் சரீர பிரகாரமாக விழித்திருந்து, தொடர்ந்து அவருக்காகவும், அவரோடும் ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர், என்று பொருள்படும். இது ஆவிக்குரிய தயாரான நிலையையும், பரிந்து ஜெபித்து வேண்டுதல் செய்வதையும் குறித்துக் கூறுகிறது!

ஏ. கெத்செமனேயில் நடந்த இந்த சம்பவம் ஒவ்வொரு நாளும், உள்ளூர் சபையில் நடைபெறும் காரியத்தை ஒத்தது. அவருடைய உள் வட்டத்திலுள்ள சீடர்களுடன் ஜெபித்த இந்த சம்பவத்தின் மூலம் நாம் பின்பற்றவேண்டிய முன் மாதிரியை இயேசு நமக்குக் கொடுக்கிறார்:

1. ஆழ்ந்த துக்கத்திலும் துயரத்திலும், மரணத்தின் எல்லைக்கு வருவதுபோல காணப்படும் அநேக வேளையில் நாம் இருக்கும்போது, ஊக்கமாக விடாப்பிடியாக நாம் ஜெபிக்க துவங்கவேண்டும். (லூக்கா 22:44). நம்முடைய நெருங்கிய சிநேகிதர்கள் மற்றும் ஆவிக்குரிய தலைவர்களிடம்,

கெத்செமனேயில் இயேசுவும் அவருடைய சீடர்களும்

மத்தேயு 26:36-46

நம்பிக்கையுடன் நம் கவலைகளைக் கூறி "எங்களோடு விழித்திருங்கள்" என்று அவர்களைக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

2. அல்லது, கிறிஸ்துவுக்குள் நம்முடைய சிநேகிதர்கள் அவர்களுக்கு ஜெபிக்கும்படி நம்மிடம் கேட்டுக் கொள்ளும்போது, அவர்கள் துக்கமும் வேதனைகளும் கடந்து போயிற்று என்று நாம் கேட்கும்வரை, உண்மையுடன் ஜெபிக்க வேண்டும்.

2. நம்முடைய மற்றும் கிறிஸ்துவுக்குள் நமது சகோதர, சகோதரிகளின், ஆவிக்குரிய நல்வாழ்வு, நாம் விழித்திருந்து ஜெபிப்பதை அடிப்படையாகக் கொண்டது. (26:40-41)

அ. வசனம் 40. "...பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக் கூடாதா?" பிதாவிடம் முதன் முறையாக ஜெபித்துவிட்டு இயேசு திரும்பின போது, அவருடைய உள்வட்ட சிநேகிதர்கள் (நெருங்கின நண்பர்கள்) நன்றாக நித்திரை செய்வதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். "அவர்கள் துக்கத்தினாலே நித்திரையடைந்ததாக" லூக்கா நமக்குக் கூறுகிறார் (லூக்கா 22:45) உண்மையில் அவர்கள், இயேசு துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்படுவார் என்றும் அவர்கள் இதினிமித்தம் விழுந்து விலகிப்போவார்கள் என்றும் அவர் கூறியதை நினைத்து மிகுந்த சஞ்சலமடைந்தார்கள். (26:31-35)

ஆ. இயேசு அவசரமாக, மிகுந்த மன வியாகுலத்துடன் வருந்திக்கேட்டுக் கொண்ட போதிலும் அவர்கள், ஒரு மணி நேரம் விழித்திருந்து ஜெபிக்கத் தவறிவிட்டனர். "பேதுருவை நோக்கி" இந்த வாக்கியம் பன்மையில் அமைந்துள்ளது, இது அவர்கள் எல்லாரிடமும் கேட்டார் என்று பொருள்படும். அவர்களிடம் கேட்டுக்கொண்டபடி, இயேசுவோடு மற்றும் இயேசுவுக்காய் ஜெபிக்க ஒவ்வொருவரும் கடமைப்பட்டுள்ளனர் மற்றும் பொறுப்புடையவர்கள்.

இ. வசனம் 41. "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது", "விழித்திருந்து தொடர்ந்து ஜெபம்பண்ணுங்கள்" அப்பொழுது சோதனைக்குள் விழமாட்டீர்கள். (ஈட்டியினால் குத்தப்படுவதுபோல், பிசாசினால் ஊடுருவக்குத்தப்பட்டு ஆவியில் மரித்து விடுவீர்கள்- மத்தேயு 6:13) "மாம்சமோ பலவீனமானது" என்றால், அநேக நேரங்களில் சரீரம் பலனற்றுப் போய் விடுகிறது, மெலிந்து போய்விடுகிறது, சக்தியற்றுப்போகிறது, என்று பொருள்படும்.

ஈ. "ஆவி" என்பது மனிதனுக்குள் இருக்கும் ஆவி. இது விழித்திருந்து ஜெபிக்க விரும்புகிறது. ஆனால் சரீரம் பலவீனமாக உள்ளது. இது விழித்திருந்து ஜெபிக்க விரும்புகிறதில்லை. ஆகவே, ஒருவன் மற்றவர்களுக்காகவும், தனக்காகவும் (சோதனைக்குள் அவன் விழாதபடி) விழித்திருந்து ஜெபிக்க அவசியமான நேரங்களில் அவனுக்குள் இடைவிடாமல் யுத்தம் நடைபெறுகிறது.

உ. எப்படியிருப்பினும், இதை நம்மால் செய்யமுடிகிறது. ஏனெனில் நம்மில் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவருக்கு அடியில், அவருடைய வல்லமையினால் ஆட்கொள்ளப்பட்டு இருக்கிறோம்! (சங்கீதம் 51:12, கலாத்தியர் 5:16-18, 24-25)

கெத்செமனேயில் இயேசுவும் அவருடைய சீடர்களும்

மத்தேயு 26:36-46

நம்முடைய மற்றும் கிறிஸ்துவுக்குள் நமக்கு மிகவும் பிரியமான சிநேகிதர்களின் ஆவிக்குரிய நல்வாழ்வும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கும்! இந்த ஒழுக்கமுறை மற்றும் தனிஜெபம், வேதவாசிப்பு ஆகியவைகளின் பலன் இல்லாமல் இருக்குமானால், நாம், நமக்குள் மறைந்திருக்கும் இச்சைகளாகிய, பாவசுபாவம் மற்றும் மாம்சத்தின் தூண்டுதல்கள், முதலியவற்றால் இலகுவாக மேற்கொள்ளப்படுவோம். நமக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவர், நமது ஆத்துமாக்களை போஷிக்கும் போஜனம் இதுவே.

ஊ. அவர்கள் விடாமுயற்சியுடன் காத்திருந்து ஜெபிக்காததினால், இந்த சம்பவத்திற்குப் பின் உடனே, இயேசுவின் சீடர்கள் யாவரும், "அவரை விட்டு ஓடிப்போனார்கள்" என்று நீங்கள் காணலாம்! *(25:56)* அவர்கள் பிசாசினால் உருவக்குத்தப்பட்டு ஆவியில் மரித்துவிட்டனர்! பிதா மற்றும் வேத வசனங்களுடன் தன்னுடைய நேரத்தைச் செலவிடுவதை அசட்டை செய்து, ஆவியானவர் அவனுடைய வாழ்க்கைக்கு அது பயன்படும்படியாக கிரியை செய்ய அனுமதிக்காத எந்த விசுவாசிக்கும் இவ்வாறு நேரிடும். அவன் தனக்காகக் காத்திருந்து ஜெபிக்க முடியவில்லையானால், மற்றவர்களுடன் "ஒருமணிநேரம் காத்திருப்பது" கூடாதகாரியம்!

3. ஜெபத்தில் நம்முடைய முடிவான வார்த்தைகள், இயேசுவினுடையதுபோல், "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று எப்போதும் இருக்கவேண்டும் (26:39, 42-46)

அ. வசனம் 39. "சற்று அப்புறம் போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது..." "இந்தப் பாத்திரம்" என்பது, எல்லா மனிதர்கள் மீதும் ஊற்றப்பட ஆதியிலேயே தீர்மானிக்கப்பட்ட, தேவனுடைய நியாயத்தீர்ப்பும், கோபாக்கினையும் நிறைந்த பாத்திரம். இருதயங்களில் கடுமையான துயரத்திலும், துக்கத்திலும் இருப்பவர்கள், ஜெபத்தில் முற்றிலுமாக அடிபணிந்து, தேவனுக்கு முன்பாகத் தாழ தரையில் விழுவார்கள். நாம் நமக்காக ஜெபிக்கும்படி, யாரிடம் அல்லது எத்தனை அதிகமான பேர்களிடம் கேட்டுக்கொண்ட போதிலும், நம்முடைய ஆழ்ந்த துக்க, துயர நேரங்களில், நாம் தனியாக நம்முடைய பரலோகத் தந்தையிடம் உறவாடுவதால் மட்டுமே விடுதலை வரும்.

ஆ. நம்முடைய அல்லது மற்றவர்களுடைய கடுமையான துக்கத்திலும், துன்பத்திலும், ஜெபத்தில் நம்முடைய முடிவான வார்த்தைகள், "ஆகிலும் என்சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபிக்கவேண்டும். பிதா நம்மைவிட்டு நீக்கமுடியாத அநேக, துன்பம் மற்றும் துக்கம் நிறைந்த பாத்திரங்கள் உண்டு. ஏனெனில் அவை, முடிவாக நமக்கு அல்லது மற்றவர்களுக்கு ஏதாவது ஒரு வழியில், நன்மையைக் கொடுக்கும். இயேசுவுக்கு அது கூடாதகாரியமாக இருந்தது. ஏனெனில், பாவத்திற்கும், கீழ்ப்படியாமைக்கும், ஆதியிலே தீர்மானிக்கப்பட்ட தேவனுடைய நியாயத்தீர்ப்பையும், கோபாக்கினையையும் எடுத்துப்போட வேறு ஒருவழியும் இல்லை! வாழ்நாள் காலமுழுவதும் பிதாவுக்குக் கீழ்ப்படிவதிலும், ஜெபத்திலும் செலவிட்டவர்களுக்கு, இந்த முடிவான வார்த்தைகளை இலகுவாகக் கூறமுடியும். *(எபிரெயர் 5:7-9)*

கெத்செமனேயில் இயேசுவும் அவருடைய சீடர்களும்

மத்தேயு 26:36-46

இ. வசனம் 42-44. "அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய்: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது, என்று ஜெபம் பண்ணினார்". பிதாவின் சித்தம் இன்னதென்று அவர் அறிந்திருந்தபடியால், அதற்குத் தன்னை அர்ப்பணிக்க, முன்னதாகவே தீர்மானித்து விட்டார் என்று, இயேசுவின் இந்த வார்த்தைகள் காட்டுகிறது என்று சில விரிவுரையாளர்கள் கூறுகின்றனர். மானிட வர்க்கத்திற்கு எதிரான நியாயத்தீர்ப்பையும், கோபாக்கினையையும் நீக்கிவிட, பிதா, வேறொரு வழியை ஒருவேளை உண்டாக்குவார் என்று, அவருடைய முதல் ஜெபத்தில் அவர் ஒருசமயம் நினைத்திருக்கக்கூடும்.

ஈ. இது சந்தேகமின்றி அவருடைய மனிதத்தன்மையின் விளைவு. ஆனால் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை என்பதை அறிவோம். (மாற்கு 14:36) இப்பொழுது, வேறொருவழியும் இல்லை என்பது எப்படியும் அவருக்குத் தெரியும். எனவே அதற்குத் தம்மை அர்ப்பணித்து விட்டார்! அவருடைய மூன்றாவது, முடிவான ஜெபத்தில் இதே வார்த்தைகளைத் திரும்பக்கூறினார். (வசனம் 44)

உ. ஜெபத்தில் அதிகநேரம் செலவிடும் ஒருவனுக்கு, இவ்வாறே நடைபெறும்! சீக்கிரத்தில் பிதாவின் சித்தம் தெளிவாக வெளிப்படும். அந்த மனிதனும் அதற்குக் கீழ்ப்படிவான். காட்டிக்கொடுத்த யூதாசும், திரள் கூட்டமான மக்களும் அவரைக் கைது செய்யவந்தபோது அவர், "சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய்?" என்று பதிலளித்ததிலிருந்து, இயேசுவிடம், இந்த அர்ப்பணிப்பு தெளிவாக வெளிப்பட்டது. (26:49-50)

ஊ. வசனம் 43, 45-46. "அவர் திரும்ப வந்தபோது, அவர்கள் மறுபடியும் நித்திரைபண்ணுகிறதைக் கண்டார்; அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரை மயக்கம் அடைந்திருந்தது. ...இனி நித்திரை பண்ணி இளைப்பாறுங்கள்." "நித்திரை மயக்கம்" உள்ள கண்கள் என்பது கண் இமைகள் மேல் பாரம் இருந்து கீழே அழுத்தி கண்ணை மூட வைப்பதுபோல், என்று பொருள்படும். சிலர் வசனம் 45, இயேசு அவருடைய உள்வட்ட சிநேகிதர்கள், அவர் மூன்றாம்முறை திரும்பவரும்போது, இன்னும் தூங்கிக் கொண்டிருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டு இவ்வாறு கூறியதுபோல் மொழியாக்கம் செய்திருக்கின்றனர்: "நீங்கள் இன்னமும் தூங்கி இளைப்பாறுகிறீர்களா?" இந்தக் கட்டத்தில், எப்படியிருப்பினும் எல்லாம் முடிந்துவிட்டது. யூதாஸ், பட்டயங்களோடும் தடிகளோடும் வந்த ஒரு பெரிய கூட்டத்தை கூட்டிக்கொண்டு கெத்செமனேக்கு வந்துவிட்டான். (26:47-48)

முடிவுரை

அ. நம் ஒவ்வொருவர் மீதும் சரியானபடி வரவேண்டிய நியாயத்தீர்ப்பு மற்றும் ஊற்றப்படவேண்டிய தேவகோபாக்கினை ஆகியவற்றிற்காக பாவநிவாரண பலியானபோது அவர் அனுபவித்த மிகுந்த துக்கத்தையும், துயரத்தையும் பார்ப்பதிலிருந்து நம் கண்கள் வேறு பக்கம் திரும்புவதை, நான் விரும்பவில்லை. இந்த மிகுந்த துக்கம் மற்றும் துயரத்திற்கு அப்பால் நாம் பார்போமானால், நமது அன்றாடக கிறிஸ்தவ வாழ்க்கை நடையில் நமக்கு உதவும், அதிகப்படியான சில சத்தியங்களை நாம் கற்றுக்கொள்ளலாம்:

கெத்செமனேயில் இயேசுவும் அவருடைய சீடர்களும்

மத்தேயு 26:36-46

1. நாம் மிகுந்த துக்கம், துன்பம் ஆகியவற்றின் மத்தியில் இருக்கும்போது, மற்றவர்களை நமக்காகவும், நம்முடனும் ஜெபிக்கக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

2. நம்முடைய மற்றும் கிறிஸ்துவுக்குள் நமது சகோதர, சகோதரிகளின் ஆவிக்குரிய நல்வாழ்வு, நாம் விழித்திருந்து ஜெபிப்பதை அடிப்படையாகக் கொண்டது. மற்றபடி, நாம் சோதனைக்குள் விழுந்து விடுவோம். பிசாசினால் ஊடுருவிக்குத்தப்பட்டு ஆவியில் மரித்துவிடுவோம்!

3. ஜெபத்தில் நமது முடிவுரை வார்த்தைகள் இயேசுவினுடையது போலவே எப்போதும் இருக்கவேண்டும். "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது"

அவருடைய மரணத்தில் கிறிஸ்துவின் வெற்றி

மத்தேயு 27:45-56

முன்னுரை

அ. இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்தபோது, பிற்பகல் 3-6 காரிருள் பூமியை சூழ்ந்துகொண்டது. சுமாராக இந்த மணி நேரத்தில்தான் இயேசு, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று சத்தமிட்டுக் கூப்பிட்டார்.

ஆ. அங்கிருந்தவர்களில் அநேகர், இயேசு எலியா தீர்க்கத்தரிசியை உதவிசெய்ய வருமாறு கூப்பிட்டதாகக் கருதினார்கள். ஆகவே, இது நடைபெற்றால் அதைக் காணக்காத்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்கள், திராட்சரசம் கலந்த காடியை, கடற்காளானில் ஊற்றி அதை இயேசுவுக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர்கள் கிறிஸ்து, அவருடைய மரணத்தில் பெற்ற வெற்றியை முற்றிலும் அறியாதவர்களாயிருந்தனர்.

1. இயேசு மரித்தபோது தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது. (27:51)

அ. "அப்பொழுது" அப்பொழுது என்பது "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக்கா 23:46) என்று இயேசு சொன்ன நேரத்தில் இந்தச் சமயத்தில்தான் கிறிஸ்து தமது ஆவியை ஒப்புவித்து, கல்வாரி சிலுவைமீது மரித்தார்.

ஆ. "அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது." இந்தத் திரைச்சீலைதான் தேவாலயத்தின் பரிசுத்தஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்தது. இந்த மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டியும் அதைச் சூழ்ந்த கிருபாசனமும் இருந்தது. கிருபாசனத்தின் மீது இரண்டு கேருபின்கள் செட்டைகளை விரித்து, ஒன்றையொன்று பார்த்தவண்ணம் இருந்தன. இந்த இரண்டு கேருபின்களின் செட்டைகளுக்கு இடையே தேவனுடைய பிரசன்னம் வெளிப்படுத்தப்பட்டது. (எபிரெயர் 9:1-5, யாத்திராகமம் 26:31-33)

இ. தேவனுடைய பிரசன்னத்திற்கு மனிதர் செல்வதற்கான வழியை, திரைச்சீலை இரண்டாகக் கிழிந்து திறந்தது. பரிசுத்த ஸ்தலத்திலிருந்து, மகா பரிசுத்த ஸ்தலத்தைப் பிரித்த திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தபோது, இயேசுவில் விசுவாசம் வைப்பவர்கள், தேவனுடைய பிரசன்னத்திற்கு நேரடியாகச் செல்வது சாத்தியமாயிற்று. இயேசுவில் விசுவாசம் வைக்கும் எவருக்கும், இது தொடர்ந்து, வழியாக இருக்கும்.

ஈ. சிலுவையில் அவருடைய மரணத்திற்குப் பின், பிதாவாகிய தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்க, மனிதர்களுக்கு இயேசு புதிய வழியாக இருக்கிறார்:

1. இக்காரணத்தினாலேயே இயேசு தம்முடைய சீடர்களிடம் இவ்வாறு கூறுகிறார்: "...நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." (யோவான் 14:6)

2. இதே காரணத்தினால், சீமோன், பேதுரு யூத தலைவர்களிடம் இவ்வாறு கூறுகிறார்: "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை, என்றான்" (அப்போஸ்தலர் நடபடிகள் 4:12)

அவருடைய மரணத்தில் கிறிஸ்துவின் வெற்றி

மத்தேயு 27:45-56

3. எபிரெயர் நிருபத்தை எழுதியவரும் இக்காரணத்தின் அடிப்படையில் இவ்வாறு கூறுகிறார்: "...நாம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் (தேவனுடைய பிரசன்னத்திற்குள்) பிரவேசிப்பதற்கு ...அவருடைய இரத்தத்தினாலே... உண்மையுள்ள இருதயத்தோடும்...சேரக்கடவோம்." (எபிரெயர் 10:19,22)

உ. "பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது." இயேசுவானவர் மரித்தபோது மகாப்பெரிய பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. மூன்று நாட்களுக்குப் பின் இயேசு உயிரோடு எழும்பினபோதும் பயங்கர பூமி அதிர்ச்சி உண்டாயிருக்க வேண்டும். (மத்தேயு 28:2) தேவன் அநேக நேரங்களில், பூமி அதிர்ச்சிகள் மூலமாக முக்கியமான நிகழ்ச்சிகளை அறிவிக்கிறார். உலக முழுவதிலும் வரப்போகிற மகா உபத்திரவகாலத்திலும் இவைகள் சம்பவிக்கும். (6:12, 16:18)

ஊ. அவருடைய குமாரனுடைய மரணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் கவனத்தை ஈர்க்கதேவன் நினைத்தார். அவர் உன்னுடைய கவனத்தைக்கூட பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறார்! நீ, அவருடைய குமாரன் இயேசுவின் மூலம் அவருடைய பிரசன்னத்திற்குள், ஒருபோதும் வராதிருப்பாயானால் இதைச் செய்யும்படி இப்பொழுது, உடனே அவர் உன்னை அழைக்கிறார். பிதாவாகிய தேவனுடைய பிரசன்னத்திற்குள் நீ வரும்படியாக இப்பொழுது கிழிக்கப்பட்ட திரையின் மூலமாக வழி திறக்கப்பட்டிருக்கிறது.

2. இயேசு மரித்தபோது, அநேக மரித்த மக்கள் உயிரோடு எழுப்பப்பட்டனர். (27:52-53)

அ. வசனம் 52. "கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது" சிலுவையில் அவருடைய பாடுகள் மூலமாக, இயேசு மரணத்தை வென்றார் என்பதை, உலகத்திற்கு எடுத்துக்காட்டி விளக்க இந்த மகாப்பெரிய அற்புதம் நிகழ்ந்தது.

ஆ. வசனம் 53. "...இவர்கள் கல்லறைகளை விட்டுப்புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டார்கள்." இவர்கள் மறுபடியும் மரித்துப்போவார்கள். ஆனால், அவருடைய கல்வாரிபாடுகளினால், கிறிஸ்து மரணத்தின்மீது வெற்றி சிறந்ததற்குச் சாட்சியாக, இப்பொழுது அவர்கள் உயிரோடு இருக்கின்றனர்.

இ. மற்றொரு சந்தர்ப்பத்தில், இயேசு அவருடைய சிநேகிதனாகிய லாசருவை, மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பினார். (யோவான் 11:38-45) அந்த நேரத்தில் இயேசு, லாசருவின் சகோதரி மார்த்தாளிடம், இவ்வாறு கூறினார். "...நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான். இதை விசுவாசிக்கிறாயா, என்றார்." (யோவான் 11:25-26)

ஈ. யோவான் சுவிசேஷத்தை எழுதியவர், லாசருவின் மரணத்தை விளக்கமாக விவரிக்கிறார். அது அவன் நிச்சயமாக மரித்துவிட்டான் என்று நாம் அறியமுடிகிறது:

1. பெத்தானியாவில் அவனுடைய வீட்டிற்குப் போகுமுன், லாசரு மரித்து நான்கு நாட்கள் ஆகும் வரை இயேசு காத்திருந்தார்.

அவருடைய மரணத்தில் கிறிஸ்துவின் வெற்றி

மத்தேயு 27:45-56

3. எபிரெயர் நிருபத்தை எழுதியவரும் இக்காரணத்தின் அடிப்படையில் இவ்வாறு கூறுகிறார்: "...நாம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் (தேவனுடைய பிரசன்னத்திற்குள்) பிரவேசிப்பதற்கு ...அவருடைய இரத்தத்தினாலே... உண்மையுள்ள இருதயத்தோடும்...சேரக்கடவோம்." (எபிரெயர் 10:19,22)

உ. "பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது." இயேசுவானவர் மரித்தபோது மகாப்பெரிய பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. மூன்று நாட்களுக்குப் பின் இயேசு உயிரோடு எழும்பினபோதும் பயங்கர பூமி அதிர்ச்சி உண்டாயிருக்க வேண்டும். (மத்தேயு 28:2) தேவன் அநேக நேரங்களில், பூமி அதிர்ச்சிகள் மூலமாக முக்கியமான நிகழ்ச்சிகளை அறிவிக்கிறார். உலக முழுவதிலும் வரப்போகிற மகா உபத்திரவகாலத்திலும் இவைகள் சம்பவிக்கும். (6:12, 16:18)

ஊ. அவருடைய குமாரனுடைய மரணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் கவனத்தை ஈர்க்கதேவன் நினைத்தார். அவர் உன்னுடைய கவனத்தைக்கூட பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறார்! நீ, அவருடைய குமாரன் இயேசுவின் மூலம் அவருடைய பிரசன்னத்திற்குள், ஒருபோதும் வராதிருப்பாயானால் இதைச் செய்யும்படி இப்பொழுது, உடனே அவர் உன்னை அழைக்கிறார். பிதாவாகிய தேவனுடைய பிரசன்னத்திற்குள் நீ வரும்படியாக இப்பொழுது கிழிக்கப்பட்ட திரையின் மூலமாக வழி திறக்கப்பட்டிருக்கிறது.

2. இயேசு மரித்தபோது, அநேக மரித்த மக்கள் உயிரோடு எழுப்பப்பட்டனர். (27:52-53)

அ. வசனம் 52. "கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது" சிலுவையில் அவருடைய பாடுகள் மூலமாக, இயேசு மரணத்தை வென்றார் என்பதை, உலகத்திற்கு எடுத்துக்காட்டி விளக்க இந்த மகாப்பெரிய அற்புதம் நிகழ்ந்தது.

ஆ. வசனம் 53. "...இவர்கள் கல்லறைகளை விட்டுப்புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டார்கள்." இவர்கள் மறுபடியும் மரித்துப்போவார்கள். ஆனால், அவருடைய கல்வாரிபாடுகளினால், கிறிஸ்து மரணத்தின்மீது வெற்றி சிறந்ததற்குச் சாட்சியாக, இப்பொழுது அவர்கள் உயிரோடு இருக்கின்றனர்.

இ. மற்றொரு சந்தர்ப்பத்தில், இயேசு அவருடைய சிநேகிதனாகிய லாசருவை, மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பினார். (யோவான் 11:38-45) அந்த நேரத்தில் இயேசு, லாசருவின் சகோதரி மார்த்தாளிடம், இவ்வாறு கூறினார். "...நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான். இதை விசுவாசிக்கிறாயா, என்றார்." (யோவான் 11:25-26)

ஈ. யோவான் சுவிசேஷத்தை எழுதியவர், லாசருவின் மரணத்தை விளக்கமாக விவரிக்கிறார். அது அவன் நிச்சயமாக மரித்துவிட்டான் என்று நாம் அறியமுடிகிறது:

அவருடைய மரணத்தில் கிறிஸ்துவின் வெற்றி
மத்தேயு 27:45-56

1. பெத்தானியாவில் அவனுடைய வீட்டிற்குப் போகுமுன், லாசரு மரித்து நான்கு நாட்கள் ஆகும் வரை இயேசு காத்திருந்தார். ஒருவனுடைய ஆவி, சரீரத்தை சுற்றி தங்கி மூன்று நாட்களுக்கு எப்போதும் இருந்து, திரும்பிவர வாஞ்சிக்கிறது என்று யூதர்கள் நினைக்கின்றனர். ஆகவே இயேசு நான்கு நாட்கள் மட்டும் தூரமாய் தங்கியிருந்தார்.

2. அடக்கம் செய்யப்பட்ட கல்லறையின் வாசலில் ஒருமிகப்பெரிய கல் வைக்கப்பட்டது.

3. லாசருவின் உடல் அழுகிப்போய் நாறிற்று.

4. அவன் கல்லறையிலிருந்து வெளியே வந்தபோது, வாசனைத் தைலத்தில் தோய்ந்த சீலையால் அவன் உடல் சுற்றப்பட்டிருந்தது.

5. அவனுடைய முகம் இன்னும் பிரேதச் சீலையால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது.

உ. நடைபெற்ற இக்காரியங்கள்யாவும், அவர் கல்வாரியில் பாடுகளை அனுபவித்து துன்பப்பட்டபோது, மானிடர்களின் பெரிய சத்துருவாகிய மரணத்தின்மீது வெற்றி சிறந்தார் என்று நமக்குக் காட்டுகிறது. இப்பொழுது "லாசருவே, வெளியே வா!" என்ற இயேசுவின் சத்தத்தை நான் கேட்க முடிகிறது! நான் லாசருவைப் பார்க்கிறேன்.

1. அவனுடைய கண்கள் வெளிச்சத்தைக் காணமுடியாதவாறு மறைக்கப்பட்டிருக்கிறது.

2. அவன் உடல் சீலையால் சுற்றிக் கட்டப்பட்டிருக்கிறது, அவனுடைய முகம் பிரேதச் சீலையால் சுற்றப்பட்டிருக்கிறது.

3. 'ரபி, ரபி, இரட்சகரே, இரட்சகரே, கர்த்தாவே, கர்த்தாவே'' என்று சத்தமிட்டு, கைகளை நீட்டி அவர் பக்கமாக வருகிறான்.

ஊ. சீக்கிரத்தில் ஒருநாள் நாமும் கூட, அவர் இவ்வாறு கூறும்போது, இயேசுவின் சத்தத்தைக் கேட்போம்: "உங்களுடைய ஆவிகளுடன் மகிமைப்பட்ட சரீரங்களாக, எழும்பி மேலே வாருங்கள். மேலே எழும்பி ஆகாயத்தில் என்னைச் சந்தியுங்கள்''

எ. அப்போஸ்தலனாகிய பவுல் இதை இவ்வாறு விளக்குகிறார்:

1. "இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிடத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்". (1 கொரிந்தியர் 15:51-52)

2. கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம்..." 1 தெசலோனிக்கேயர் 4:16-17)

3. அவருடைய மரணத்தில், அவிசுவாசிகள், இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிவித்தனர் (27:54)

அவருடைய மரணத்தில் கிறிஸ்துவின் வெற்றி
மத்தேயு 27:45-56

அ. "நூற்றுக்கு அதிபதியும், அவனோடே கூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும், பூமி அதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு..." இந்த நிறைவேற்றப்பட்ட மரணதண்டனை சாதாரணமானதல்ல என்று சேனைவீரர்கள் அறிந்துகொள்ள துவங்கினார்கள்.

1. அப்பிரதேசத்தில் மூன்று மணிநேரங்கள் காரிருள் சூழ்ந்து கொண்டது. நடுப்பகல் முதல், பிற்பகல் 3 மணிவரை.

2. மிகப் பெரிய பூமிஅதிர்ச்சி

3. தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது.

4. "ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று இயேசு தேவனை நோக்கிக் கூப்பிட்டார்.

ஆ. "மிகவும் பயந்து" என்றால் அவர்கள் மிகவும் திகிலடைந்தனர் என்று பொருள்படும். அவர்களின் திடீர் அச்சத்திற்கு முக்கிய காரணமுண்டு. அவர்கள் இயேசுவுக்கு மிகுந்த கனத்தை கொடுக்கிறவர்களானார்கள். அவருக்கு பயபக்தியுடன், மரியாதை செலுத்தத் துவங்கினார்கள்.

இ. "...மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்" இயேசு இவ்வளவு காலமும், தம்மை உரிமையுடன் கூறிக்கொண்ட அந்த "ஒருவர்" என்று சேனை வீரர்கள் விசுவாசிக்க ஆரம்பித்தனர். அவர்கள் கிறிஸ்துவை தங்களுடைய கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக்கொண்டனர் என்பதை சந்தேகிக்க ஒரு காரணமும் இல்லை.

ஒரு சமயம் அவர்கள் இந்த நேரத்தில் இதைச் செய்யாதிருந்தாலும், பின்னால் இதை அவர்கள் செய்திருப்பார்கள். இயேசுவை, அவர் உயிர்த்தெழுந்தபின் பார்த்திருப்பார்கள். பெந்தெகொஸ்தே நாள் அன்று அல்லது மற்றொரு சந்தர்ப்பத்தில் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்க இவர்கள் வருகை தந்திருக்க சாத்தியமுண்டு.

ஈ. பரலோகத்திலிருந்து பூமிக்கு அவர் அனுப்பிய பரிசுத்த ஆவியானவர் மூலமாக, கிறிஸ்து இன்றும் நம் மத்தியில் பிரசன்னமாயிருக்கிறார். அவர் ஒவ்வொருவரும் கீழ்க்கண்டவற்றை அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்.

1. அவர் மெய்யாகவே தேவனுடைய குமாரன்.

2. தேவனுடைய சன்னிதானத்திற்குள் செல்ல அவர் ஒருவரே, ஒரே வழி.

3. எங்கள் யாவரையும்போல், நீங்களும் மரணத்தின்மீது வெற்றிபெற வேண்டுமானால், அவரை உங்கள் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளுங்கள். அவர் இப்பொழுதுதானே யாரேனும் ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்கிறார்!

முடிவுரை

அ. அவருடைய மரணத்தில் கிறிஸ்து சாவின்மீது வெற்றி சிறந்தார்.

1. தேவனுடைய சமூகத்திலிருந்து, மனிதரைப் பிரித்த திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது.

2. மரித்துப்போன அநேகர் உயிரோடு எழும்பினார்கள்.

அவருடைய மரணத்தில் கிறிஸ்துவின் வெற்றி

மத்தேயு 27:45-56

3. அவிசுவாசிகளும்கூட இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டனர்.

ஆ. உலகத்திலுள்ள எல்லா தலைமுறையினருக்கும், ஒவ்வொரு மனிதனுக்கும், எல்லாருக்கும் கல்வாரியில் மரணத்தின்மீது கிறிஸ்து வெற்றி சிறந்தார். நீ இயேசு கிறிஸ்து மூலமாக, பிதாவாகிய தேவனுடைய பிரசன்னத்தில், ஒருபோதும் பிரவேசிக்காவிட்டால், இன்றைய செய்தி உனக்காகவே உள்ளது. இதை இப்பொழுதே செய்யும்படி, முன்னால் வரும்படி, நான் உன்னை அழைக்கிறேன்!

இயேசுவின் உயிர்த்தெழுதல்
மத்தேயு 28:1-10

முன்னுரை

அ. இயேசு சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மரித்தோரிலிருந்து எழுந்தார். மரணம் அவரைக் கட்டிவைக்கக் கூடாமல் போயிற்று.

ஆ. இயேசு வெள்ளிக்கிழமையன்று சிலுவையில் அறையப்பட்டார். அவருடைய சரீரம், அவருடைய சீடர்களால் எடுத்துச்செல்லப்பட்டு, அருகிலுள்ள சுத்தமான, புதிய கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டது. கல்லறையின் வாசலில், மிகப்பெரிய கல் ஒன்று உருட்டிவைக்கப்பட்டது. இயேசுவுக்கு, அதிகமாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட மூன்று பெண்கள் சிறிது தூரத்திலிருந்து, இவையாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள் - அவருடைய தாயார் மரியாள், மரியாளுடைய சகோதரி, மற்றும் மகதலேனாள் மரியாள். (யோவான் 19:25)

இ. சனிக்கிழமை, இயேசுவின் சரீரத்தை ஒருவரும் திருடிச்சென்றுவிடாதபடிக்கு, பிலாத்து ரோம சேனை வீரர்களை, கல்லறை வாசலைக் காக்கும்படி நியமிக்கக் கட்டளையிட்டான். ஞாயிற்றுக்கிழமை அதாவது, யூதர்களின் ஓய்வுநாளுக்கு அடுத்தநாள் அன்று, மகதலேனாள் மரியாள், மரியாள் மற்றும் கர்த்தருடைய தாயாரின் சகோதரி ஆகிய இவர்கள் கிறிஸ்துவின் சரீரம் அடக்கம் செய்வதற்கான ஆயத்தங்களை முழுமையாக நிறைவேற்றச் சென்றனர். இச்சமயத்தில்தான், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதைக் கண்டுகொண்டனர்.

1. உயிர்த்தெழுந்தபோது, கல்லறையின் வாசலிலிருந்த கல்லை ஓர் தூதன் புரட்டித் தள்ளினான். (28:2-4)

அ. வசனம் 2. "பூமி மிகவும் அதிரும்படி" இயேசு உயிர்த்தெழுந்தபோது பூமி மிகவும் அதிர்ந்தது. அந்த ஸ்திரீகள், இயேசுவின் கல்லறைக்கு வருவதற்கு முன்பாகவே பூமி அதிர்ச்சி ஏற்பட்டு விட்டது. (மாற்கு 16:2-6, லூக்கா 24:1-7) மத்தேயு, இந்த ஒரே ஒரு பூமி அதிர்ச்சியைக் குறித்து மட்டும் எழுதவில்லை. இயேசு சிலுவையில் மரித்தபோதும் பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. அந்நேரத்தில்:

1. தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது.

2. பூமி அதிர்ந்தது, கன்மலைகள் பிளந்தன. கல்லறைகளும் திறக்கப்பட்டது.

3. அநேக மரித்த பரிசுத்தவான்களின் சரீரங்களும் உயிரோடு எழுப்பப்பட்டது. (மத்தேயு 27:51-54) அவர் உயிர்த்தெழுந்தபோது ஏற்பட்ட பூமிஅதிர்ச்சி, அவர் மரித்தபோது ஏற்பட்ட பூமி அதிர்ச்சியை ஒத்தது.

ஆ. வசனம் 2-4 (அப்பொழுது) "கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளினான்" அந்த தூதனுடைய தோற்றம் இவ்வாறு இருந்தது:

1. இருண்ட இரவு வானத்தில் ஒரு மின்னல் சடுதியாய் பாய்ந்து சென்றதுபோல்.

2. இரும்பை இணைக்கும் நெருப்புக் கோலில் இருந்து வரும் திடீர் பிரகாசம்போலும், பனிபோல் வெண்மையாகவும் அவனுடைய வஸ்திரம் இருந்தது. கல்லறையின் வாசலில் இருந்து அவன் புரட்டித் தள்ளின மிகப்பெரிய கல்லின்மீது உட்கார்ந்தான்.

இயேசுவின் உயிர்த்தெழுதல்
மத்தேயு 28:1-10

இ. வசனம் 4. "காவலாளர் அவனுக்குப் பயந்து..." ரோம சேனை வீரர்கள் பூமி அதிர்ச்சியின் சத்ததைக் கேட்டு, அந்த தூதனைக் கண்டபோது திகிலடைந்தனர். அவர்கள் பயத்தில் நடுங்கினார்கள். அவர்கள் மயங்கி, செத்தவர்கள்போல் ஆனார்கள்.

ஈ. காவலாளர்களான சேனை வீரர்கள் தூதனைக் கண்டதினால் நேரிட்ட காரியங்கள், வேதத்திலுள்ள, தூதர்களைச் சந்தித்த மற்ற மனிதர்களிடம் நடைபெற்றக் காரியங்களிலிருந்து வேறுபட்டது அல்ல.

1. யோவான் ஸ்நானனின் பிறப்பைக் குறித்து சகரியாவுக்கு ஒரு தூதன் தோன்றி அறிவித்தபோது, "சகரியா கலங்கி பயமடைந்தான்" (லூக்கா 1:12) என்று வேதம் கூறுகிறது.

2. இயேசுவின் பிறப்பின்போது, கர்த்தருடைய தூதன் மேய்ப்பர்களுக்குக் காட்சி அளித்தபோது, மேய்ப்பர்கள், "மிகவும் பயந்தார்கள்" (லூக்கா 2:8)

3. தானியேல், இதெக்கேல் ஆற்றங்கரையில் கர்த்தருடைய தூதன் அவனுக்கு முன் தோன்றினபோது, அவனுக்கு "பெலனெல்லாம் போயிற்று, உருவம் மாறி வாடிப்போயிற்று, அவன் திடனற்றுப் போனான்". (தானியேல் 10:8)

உ. நம்மில் ஒருவருக்குக் கர்த்தருடைய தூதன் தோன்றினால், நாம் திகிலடைந்து, அநேகமாக மயக்கமுற்று செத்தவர்கள் போலாகி விடுவோம் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இயேசு உயிர்த்தெழுந்தபோது, கல்லறை வாசலில் இருந்த, அந்த மிகப்பெரிய கல்லை உருட்டித்தள்ள ஒரு தூதன் அனுப்பப்பட்டான்.

2. உயிர்த்தெழுந்தபோது, இயேசுவுக்கு என்ன நேரிட்டது என்று ஓர் தூதன் விளக்கினான். (28:5-7)

அ. வசனம் 5-6. "தூதன் அந்த ஸ்திரீகளை (இரண்டு) நோக்கி:..." அந்த இரண்டு ஸ்திரீகளும் கல்லறையண்டை வந்து சேர்வதற்கு முன், பூமி அதிர்ச்சி கல் உருட்டித் தள்ளப்பட்டது, இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்பினது, ஆகிய இக்காரியங்கள் யாவும் நடந்து முடிந்துவிட்டது. அவர்கள் வந்து சேர்ந்தவுடன், கர்த்தருடைய தூதன் அவர்களோடு பேசத் துவங்கினான்:

1. பயப்படாதிருங்கள். திகிலடையவோ அல்லது அச்சமடையவோ வேண்டாம்.

2. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடி வந்திருக்கிறீர்களென்று நான் அறிவேன்.

3. இயேசு இங்கு இல்லை. அவர் கூறியபடியே அவர் மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டார்.

4. அவர் உங்களோடு இருக்கும் காலத்தில் என்ன கூறினார் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். "மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டும்.

5. அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். இது கனவு அல்ல, உங்கள் சொந்தக் கண்களால் பாருங்கள், நீங்களே பாருங்கள், அவர் மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல்
மத்தேயு 28:1-10

6. இப்பொழுது சீக்கிரமாய் சென்று, நீங்கள் கண்டவைகளை, மற்ற சீடர்களுக்குக் கூறுங்கள். அவர்களிடம், "இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார்..அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார். அங்கே அவரைக் காண்பீர்கள்..."

ஆ. மற்றொரு சந்தர்ப்பத்தில், இதுவே, அவர் மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்பின பின் செய்ய வேண்டிய காரியம் என்று, அவருடைய சீடர்களிடம் கூறியிருந்தார். அவர் கெத்செமனேக்குச் சென்று, அங்கு கைதியாக்கப்படும் முன், அவர் அவர்களிடம் இவ்வாறு கூறியிருந்தார். "நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன்." (மத்தேயு *26:32*)

இ. வச. 7. "இதோ, உங்களுக்குச் சொன்னேன்." தூதன் அந்த ஸ்திரீகளிடம், அவன் என்ன கூறவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டானோ அதைக் கூறிவிட்டான். அவனுக்குக் குறிக்கப்பட்ட வேலையை முடித்து விட்டான். கர்த்தருடைய செய்தியை அறிவிப்பவனாக, பரிசுத்தவான்களுக்குரிய அவனுடைய பணிவிடையாகிய அவனுடைய வேலையை, அவன் முடித்துவிட்டான். அந்த ஸ்திரீகள், இப்பொழுது விரைவாகச் சென்று, மற்ற சீடர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

3. உயிர்த்தெழுந்தபோது அந்த ஸ்திரீகள், இயேசுவை நேருக்குநேர் சந்தித்தனர். (28:8-10)

வசனம் 8. (அவர்கள்) "பயந்தார்கள் ஆனால் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள்."

கல்லறையில் அவர்களுடைய அனுபவம், அந்த இரண்டு ஸ்திரீகளையும் அதிகமாகப் பாதித்தது. தூதர்களைச் சந்தித்த மற்றவர்களைப் போல இவர்களும் திகிலடைந்து, அச்சமுற்றனர். இருந்தாலும், அவர்கள் அளவில்லாத மகிழ்ச்சியும் களிப்பும் அடைந்தனர். இயேசு மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டார். இது, இவ்வாறு காணப்பட்டது:

1. விலை மதிக்க முடியாத ஒரு வைரம் காணாமல் போய்விட்ட பின்பு, மறுபடியும் அதைக் கண்டுபிடிக்கப்பட்டதை ஒத்தது.

2. உன்னுடைய பணப்பை அல்லது பணம் வைத்த தோல் பெட்டி காணாமல்போய், அதைக் கண்டுபிடித்துவிட்டதாக ஒருவர் உன்னைக் கூப்பிட்டுக் கூறியதுபோல்.

3. பூட்டப்பட்ட உன்னுடைய மோட்டார் காரின் சாவிகள் தொலைந்துபோனபோது, நீ இரகசியமான இடத்தில் வைத்திருந்த, அதனுடன் சேர்ந்த அதிகப்படியான இரட்டையில் ஒன்றான மற்றொரு சாவிக்கொத்து கண்டுபிடிக்கப்பட்டது போல். அந்த ஸ்திரீகள் திகிலடைந்து, பயப்பட்டனர். ஆனால், பின் உடனே மிகுந்த சந்தோஷமடைந்தனர்.

ஆ. வசனம் 9. "இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு.." அவர்கள் சீக்கிரமாய் புறப்பட்டு மற்ற சீடர்களுக்குக் கூறச் செல்லும் வழியில், திடீரென்று இயேசுவை நேருக்கு நேர் பார்த்தார்கள். மறுபடி இனி ஒருபோதும் காணமுடியாது என்று நினைத்த ஒருவர், உயிரோடு இருக்கிறார். அவர்களுடைய கண்கள் கூறியவற்றை, அவர்களுடைய மனதினால் நம்ப முடியவில்லை!

இ. வசனம் 9. அந்த ஸ்திரீகள் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு, "தரையில் விழுந்து, அவருடைய பாதங்களைப் பற்றிக் கொண்டு அவரைப் பணிந்து கொண்டார்கள்."

இயேசுவின் உயிர்த்தெழுதல்
மத்தேயு 28:1-10

அவரைத் தொடர்ந்து பற்றிப் பிடித்துக் கொள்ளவேண்டாமென்று, அந்த ஸ்திரீகளை இயேசு கேட்டுக் கொண்டார். சீக்கிரத்தில் அவர், மறுபடியும் அவர்களை விட்டுச் சென்று விடுவார். அவர்கள் அவரைத் தொடவும், பார்க்கவும் முடியாது.

ஈ. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின் உடனே, அவர் பிரிந்து செல்வதற்கு, இயேசு அவருடைய சீடர்களை ஆயத்தம் செய்தார். அவர், 40, நாட்களுக்குப் பின், பிதாவினிடத்திற்குத் திரும்ப செல்லவேண்டும். இருந்தாலும், அனாதைகள் போல் அவர்களை விட்டுச் செல்லமாட்டார். அவர் பரிசுத்த ஆவியானவரை அவர்களுக்கு அனுப்பப் போகிறார். அவர், "அவர்களுடனே கூட இருப்பார்" மற்றும் அவர்களுடைய புதிய ஆலோசகராக, போதகராக, வழிகாட்டியாக இருப்பார். (யோவான் 16:7, 12-13, 14:16)

உ. வசனம் 10. அப்பொழுது இயேசு, அவருடைய சீடர்களுக்கு, இதற்குமுன் கூறியவற்றை மறுபடியும் கூறுகிறார்: "...நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள், அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்..."

ஊ. அந்த ஸ்திரீகள், அன்று காலையில், நம்பக்கூடாத அநேகக் காரியங்களைக் கண்டார்கள். மற்ற சீடர்களிடம் கூறவேண்டியவைகள் அதிகம் உண்டு. அவர்கள் கீழ்க்கண்டவைகளைப் பார்த்தார்கள்:

1. தூதன், உருண்டோடிய கல்.

2. காலியான கல்லறை, இயேசு வைக்கப்பட்ட இடம்.

3. சீலைகள் (பிரேதச் சீலை) ஒழுங்காக மடித்து வைக்கப்பட்டிருந்தது.

4. காவலர்களான சேனை வீரர்கள் செத்தவர்கள்போல் கிடந்தனர்.

5. எல்லாவற்றிற்கும்மேலாக, உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசுவை, அவர்கள் கண்டு, தொட்டு, அவரிடம் பேசினார்கள்.

எ. ஆனால், அந்த ஸ்திரீகள், இயேசுவைக் கண்டதாக மற்ற சீடர்களிடம் கூறினபோது, அவர்கள் அதை நம்பவில்லை. (மாற்கு 16:10-11) பிற்பாடு, கிராமப்புறமாக, இரண்டு சீடர்கள் நடந்து சென்றபோது, இயேசு அவர்களுக்குக் காணப்பட்டார். இவர்கள், தாங்கள் இயேசுவைக் கண்டதாக மற்ற சீடர்களிடம் கூறினபோது, இவர்களையும், அவர்கள் நம்பவில்லை. (16:12-13) எனவே, அப்போஸ்தலர்களுக்குச் சிறிதுகாலம் சென்றபின் இயேசு காணப்பட்டபோது, அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம், அவர் அவர்களைக் கடிந்து கொண்டார். (16:14)

ஏ. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின் மற்றவர்கள், நேருக்கு நேர் சந்தித்தார்கள். பேதுருவுக்கு, இரண்டு முறை, 12 அப்போஸ்தலர்களுக்கு, ஒரே நேரத்தில் 500 அதிகமான சீடர்களுக்கு, யாக்கோபு மற்றும் தமஸ்குவிற்குச் செல்லும் வழியில் பவுல் ஆகிய இவர்களுக்கு அவர் காணப்பட்டார். (1 கொரிந்தியர் 15:5-8)

ஒ. நாம் ஒவ்வொருவரும், இயேசுவின் ஆவியுடன் நேருக்கு நேர் வருகிறோம். அந்த ஸ்திரீகள் மற்றும் கிராமப்புறத்தில் அவரைக் கண்ட சீடர்கள் ஆகிய இவர்களின் சாட்சியை நாம் விசுவாசிக்கிறோம்.

இயேசுவின் உயிர்த்தெழுதல்
மத்தேயு 28:1-10

அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று நாம் விசுவாசிக்கிறோம். அந்த ஸ்திரீகளைப் போல், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நேருக்கு நேர் பார்த்தோம் என்று நாம் மற்றவர்களுக்குக் கூறுகிறோம். அவர்,

1. நம் பாவங்கள் யாவையும் மன்னித்தார்.

2. மனதிலுள்ள குற்ற உணர்வுகள் எல்லாவற்றையும் நீக்கிவிட்டார்.

3. துன்ப நேரங்களில், நமக்கு உதவி செய்கிறார்.

4. நம்முடைய வாழ்க்கையைக் கட்டுப்படுத்தின பொல்லாத சக்தியை அழித்தார்.

5. மரித்தோரிலிருந்து, உயிர்த்தெழும் நம்பிக்கையை நமக்குக் கொடுத்திருக்கிறார்.

6. நமக்கு நித்திய ஜீவனை வாக்குப் பண்ணியிருக்கிறார். மற்றவர்கள், நம்மை நம்புவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம்! அவர்களும் இயேசுவை அறிந்து, அவருடைய மகிமையைக் காண நாம் வாஞ்சிக்கிறோம்.

முடிவுரை

அ. இயேசு உயிர்த்தெழுந்த வரலாற்றில் ஒரு மொத்தக் கருத்து உள்ளது. சிலுவையிலறையப்பட்ட இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, மரித்தோரிலிருந்த எழும்பினார். மரணத்திற்கு அவரைப் பிடித்து வைத்துக் கொள்ள முடியவில்லை.

ஆ. 1. இயேசுவின் ஆவியை நேருக்கு நேர் சந்திக்காத சிலர் இங்கே இருக்கலாம்.

2. எங்களிலுள்ள மற்றவர்களைப்போல, அவரை சந்தித்து, அவரை உங்களுடைய கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக் கொள்ள நீங்கள் விரும்பலாம்.

3. அவருடைய உதவி, மன்னிப்பு, பொல்லாப்பின்மீது வல்லமை, உங்களுடைய சரீரம் அல்லது உங்களுடைய பாதிக்கப்பட்ட உணர்ச்சி அல்லது ஆவி குணமாக்கப்பட, மிகுந்த தேவையோடிருக்கிறீர்களா?

இ. இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்பினார். அவர் ஜீவிக்கிறார்! இன்று உங்களுடைய கவனத்தைப் பெற அவர் முயற்சிக்கிறார். அவர் உன்னை இரட்சிக்க, உனக்கு உதவி செய்ய வாஞ்சிக்கிறார்!

பிரதான கட்டளை
அல்லது
நாம் என்ன செய்யவேண்டுமென்று இயேசு கூறுகிறார்?

மத்தேயு 28:16-20

முன்னுரை

அ. இந்த அதிகாரத்தில் வசனம் 10, இயேசு மரித்தோரிலிருந்த உயிர்த்தெழுந்தபின், அந்த ஸ்திரீகளிடம் இவ்வாறு கூறினார்: "நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்.." (மத்தேயு *28:7, 26:32*)

ஆ. வசனம் 16. அவர் போகும்படி கூறிய கலிலேயாவிலுள்ள மலைக்கு (எந்த மலை என்று தெரியாது) பதினொரு சீடர்களும் சென்றார்கள் என்று வேதம் கூறுகிறது. அவர்கள் கலிலேயாவை அடைந்தபோது, பதினொருவரும் அவரைக் கண்டு பணிந்து கொண்டார்கள். இருப்பினும், சீடர்களில் சிலர், எம்மாவூருக்குப் போகும்வழியில் சென்ற சீடர்களைப்போல தயங்கினார்கள், ஏனெனில் இது தான் அவர்களுடைய உயிர்த்தெழுந்த எஜமானானவர் என்று இன்னமும் நிச்சயமாக அறியவில்லை.

இ. அப்பொழுது இயேசு சீஷர்கள் அருகில் நெருங்கிவந்து, இந்த "பிரதான கட்டளை" கொடுத்தார். எல்லா தலைமுறைகளிலுமுள்ள யாவராலும், இந்த கட்டளை "தங்களுக்குக் கொடுத்த சொந்த கட்டளையாக" ஏற்றுக் கொள்ளப்படுகிறது. "இயேசு, நம்மை என்ன செய்யக் கூறுகிறார்?" என்ற கேள்விக்கு இது பதிலளிக்கிறது.

1. இந்தக் கட்டளையில் நாம் எல்லா தேசத்தார்களையும் சீடர்களாக்கவேண்டுமென்று, இயேசு நமக்குக் கூறுகிறார். (28:18,19)

அ. வசனம் 18. "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது". "அதிகாரம்" என்பது இங்கு, பூரணமான நிபந்தனையற்ற, கட்டுப்பாடில்லாமல், சுதந்திரமாகக் கிரியை செய்யக்கூடியநிலை, என்று பொருள்படும். இது அவருடைய அதிகார எல்லையையும் சேர்த்துக் கூறுகிறது: வானத்திலும், பூமியின் மேலும், பூமிக்கு அடியிலும், சிருஷ்டிப்புக்கள் எல்லாவற்றிலும் நடைபெறுபவைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்.

ஆ. சுவிசேஷங்களில், இயேசுவின் அதிகாரத்தைக் குறித்து, அநேக இடங்களில் கூறப்பட்டுள்ளது.

1. அதிகாரமுடையவராய் போதித்தார். (மத்தேயு *7:29*)

2. பாவங்களை மன்னிக்க *(9:6)*

3. அசுத்த ஆவிகளைத் துரத்தவும், குணமாக்கவும், அவருடைய சீடர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். (10:1, 7-8)

4. சர்வ, தெய்வீக ஞானமுடையவர். அவர் தெரிந்து கொள்ளும் எவருக்கும், தேவனை வெளிப்படுத்தவும், தெய்வீக ஞானத்தைக் கொடுக்கவும். (11:27)

5. அவர் (இயேசு) இஸ்ரவேலின் தேவனால் சொல்லப்பட்ட, தாவீது இராஜாவுடைய கர்த்தர். அவர் (தேவன்) இவ்வாறு கூறினார்: "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்" *(22:43-44)*

பிரதான கட்டளை அல்லது நாம் என்ன செய்யவேண்டுமென்று இயேசு கூறுகிறார்?

மத்தேயு 28:16-20

6. அவருடைய வார்த்தைகள் ஒழிந்து போவதில்லை. (24:35)

7. அவரில் விசுவாசம் வைப்பவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும் அதிகாரம் அவருக்கு இருக்கிறது. (யோவான் 17:2) இப்பொழுது, இந்த அதிகாரம், வானத்தையும், பூமியையும் சேர்த்து விரிவாக்கப்பட்டுள்ளது! (பிலிப்பியர் 2:5-11, தானியேல் 7:13-14) காலத்தின் முடிவு வரை, பிதாவினுடைய சகல அதிகாரமும், அவருடைய கரங்களில் வைக்கப்பட்டுள்ளது. (1கொரிந்தியர் 15:27-28)

இ. வசனம் 19. "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய்..." நம்முடைய கர்த்தருக்கு, வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரமும் கொடுக்கப்பட்டிருப்பதால், நாம் சுவிசேஷ செய்தியுடன் உலகமெங்கும் செல்லவேண்டும்! வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரமும் உடைய கர்த்தர் நம்முடன் வருவதால், நாம் அவ்வாறு போகும்போது நல்ல பலனை எதிர்பார்க்கலாம்!

ஈ. இக்காரணத்தினால்தான், கிறிஸ்து திடமனதுடன் அவருடைய சீடர்களிடம் இவ்வாறு அறிவிக்கிறார்:

1. "...என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் (பொல்லாத சக்திகள்) அதை மேற்கொள்வதில்லை (அதைவிட பலமுள்ளதாக இருக்கமுடியாது) (மத்தேயு 16:18)

2. "பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை (அதிகாரமும், வல்லமையும்) நான் உனக்குத் தருவேன், பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" (மத்தேயு 16:19). "இந்த வேதபாகத்தின் இதைவிட நல்ல மொழிபெயர்ப்பு இவ்வாறு இருக்கலாம்: "பூமியில் ஆவியில் நீ கட்டுவது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூமியில் ஆவியில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ, அது உடனேதானே பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்". பூமியில், நாம் பகைஞனின் பிரதேசத்திற்குள் சென்று, ஆவிக்குரிய எதிரிகளைக் கட்டிபோடவும், அவைகளின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் மக்களை விடுவிக்கவும், கிறிஸ்துவினுடைய அதிகாரம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது!

உ. வசனம் 19 "சீஷராக்கி" மக்கள் இரட்சிக்கப்பட்டவுடன், அவர்கள் சீடர்களாக்கப்படுகிறார்கள். அவர்கள், சிறு மாணவர்களாக, உயர்கல்வி மாணாக்கர்களாக, கற்றுக் கொள்பவர்களாக வாழ்க்கைக் கல்விமுறை பாடசாலையில், தங்களை மாணாக்கர்களாக பதிவுசெய்து கொள்கிறார்கள் என்று இது பொருள்படும். இங்கு கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் போதனைகளைக் கற்றுக் கொள்ளுகிறார்கள்.

ஊ. வசனம் 19. "சகல ஜாதிகளையும் " உலகத்தில், அவருடைய ஊழிய காலத்தில், கிறிஸ்து, அவருடைய சீடர்களை, காணாமல்போன ஆடுகளாகிய இஸ்ரவேலருக்கு ஊழியம் செய்ய ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அனுப்பினார். (மத்தேயு 10:5) ஆனால், இப்பொழுது, எந்தவிதமான வேறுபாடுகளுமின்றி, உலகத்தில் எங்குமுள்ள எல்லா மனிதர்களுக்கும், எல்லா கூட்ட மக்களுக்கும், ஒவ்வொரு ஜாதி மற்றும் குல மக்களுக்கும் அறிவிக்கக் கட்டளையிடுகிறார்.

பிரதான கட்டளை அல்லது நாம் என்ன செய்யவேண்டுமென்று இயேசு கூறுகிறார்?

மத்தேயு 28:16-20

எ. அவருடைய சீடர்களுக்கு கொடுத்த முடிவான அறிவுரையில், நாம் சீஷராக்கும்போது (சுவிசேஷத்தைப் பரப்பும்போது) பின்பற்றவேண்டிய மாதிரி ஒன்றை நமக்குத் தருகிறார்: "எருசலேம், யூதேயா, சமாரியா, உலகத்தின் கடைசி மட்டும்." (அப்போஸ்தலர் 1:8) இவ்வாறு நாம் கீழ்க்கண்டவர்களைச் சீஷராக்கவேண்டும்:

1. நம்முடைய சிநேகிதர்கள், அயலகத்தார், உறவினர்கள், மற்றும் நமக்கு அறிமுகமானவர்கள்.

2. இந்த பட்டணத்தில் உள்ளவர்கள்.

3. இந்த மகாணத்தில் உள்ளவர்கள்.

4. இந்த தேசத்திலுள்ள மற்ற மாகாணங்களிலுள்ளவர்கள்.

5. மற்ற தேசங்களிலுள்ள மக்கள்.

ஏ. உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டு நம்முடைய, சிநேகிதர்கள், அயலகத்தார்கள், உறவினர்கள் மற்றும் இந்த பட்டணத்தில் அறிமுகமானவர்கள். நமது தேசத்தார்கள், மாகாணத்தை சேர்ந்தவர்கள், மற்றும் நமது தேசத்தைச் சேர்ந்தவர்கள், நரக அக்கினிக்குள் இருந்தால் அதில் என்ன நன்மை இருக்கிறது?

அடுத்த பக்கம் பார்ப்போமானால், நம்முடைய கர்த்தரும், எஜமானவருமானவருடைய, சர்வ சிருஷ்டிகளின் மேல் உள்ள அதிகாரத்திற்கு ஏற்றதாக நம்முடைய நோக்கம் உலக முழுவதிலும் பரவலாக இருக்கவேண்டும்.

2. புதிய சீடர்களை, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்று, இந்தப் பெரிய கட்டளையில் இயேசு நமக்குக் கூறுகிறார். (28:19)

அ. "அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து" "ஞானஸ்நானம்" என்ற சொல், அமிழ்த்து, அல்லது மூழ்கவை, முழுவதும் ஈரமாக்கு, நீரில் முழுவதும் மறைந்திருக்கும்படி செய், சாயம் ஏற்றவேண்டிய ஒரு துண்டு துணி எவ்வாறு பூரணமாக முற்றிலும் மூழ்கி வைக்கப்படுவது போல், என்று பொருள்படும். கிறிஸ்தவ ஞானஸ்நானத்தை ஒருவன் பெற்றுக் கொள்ளவேண்டுமானால், அவன் நீரில் மூழ்கி இருக்கவேண்டுமென்று இது சுட்டிக் காட்டுகிறது.

ஆ. அப்போஸ்தலர் 8:38-39, எத்தியோப்பிய மந்திரி, சுவிசேஷமாகிய பிலிப்புவினால் ஞானஸ்நானம் பெற்றபோது, நீரில் மூழ்கி எழுந்தான் என்று வேதம் கூறுகிறது. அவன் முழுவதும் ஈரமாகி விட்டான், முற்றிலும் நீரினால் மூடப்பட்டான்.

இ. ஆதித் திருச்சபையில், ஒருவன் ஞானஸ்நானம் பெறும்போது, அவர்கள் அவனை முழுவதும் நீரில் மூழ்கியிருக்கும்படியாகச் செய்தனர் என்று இது கூறுகிறது. இக்காரணத்தினாலேயே, இன்று நாம் விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது நீரில் மூழ்கியிருக்கும்படியாகச் செய்கிறோம்!

பிரதான கட்டளை
அல்லது
நாம் என்ன செய்யவேண்டுமென்று இயேசு கூறுகிறார்?
மத்தேயு 28:16-20

ஏ. இயேசுவானவர் அவர்களைச் செய்யும்படி கூறியவைகளுக்கு உண்மையுள்ளவர்களாக, ஆதி சீடர்கள், புதிதாக மனந்திரும்பினவர்களுக்கு, அவர்கள் இரட்சிக்கப்பட்டபின் உடனடியாக, ஞானஸ்நானம் கொடுத்தனர்.

1. பெந்தெகொஸ்தே நாளன்று விசுவாசிகளான 3000 பேர், அந்த நாளில், உடனே நீரில் ஞானஸ்நானம் பெற்றனர். (அப்போஸ்தலர் 2:41)

2. பிலிப்பு சமாரியாவில் பிரசங்கம் செய்தபோது, புதிதாக இரட்சிக்கப்பட்டவர்கள் உடனே நீரில் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்போஸ்தலர் 8:12)

3. பவுல் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்ட, சில நாட்களுக்குப்பின் நீரில் ஞானஸ்நானம் பெற்றான். (அப்போஸ்தலர் 9:18)

4. கொர்நெலியுவின் வீட்டார், சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசிகளான உடனே, நீரில் ஞானஸ்நானம் பெற்றனர்.

5. நீரில் ஞானஸ்நானம் பெறுவதற்கும், இரட்சிப்பிற்கும் இடையேயுள்ள சம்பந்தத்தை பவுல் விவரித்துக் கூறினபின், எபேசுவிலுள்ள விசுவாசிகள், உடனே நீரில் ஞானஸ்நானம் பெற்றனர். (அப்போஸ்தலர் 19:5)

உ. நாமும்கூட, "விசுவாசிகளுக்கு, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும்". இது "பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகியவர்களுக்கு சொந்தமானவர்களாக்க அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிறது என்று பொருள்படும். ஒரு விசுவாசி பிசாசினுடைய கட்டுப்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டு, திருத்துவத்தின் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளான் என்பதற்கு நீரினால் ஞானஸ்நானம் கொடுப்பது ஒரு அடையாளமாக இருக்கிறது.

ஊ. ஒரு விசுவாசி, கிறிஸ்துவுடன் அவருடைய மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் இணைக்கப்படுகிறான் என்பதற்கும் நீரில் ஞானஸ்நானம் பெறுவது ஒரு அடையாளமாக இருக்கிறது. நாம் நீரில் ஞானஸ்நானம் பெறக் கீழ்ப்படியும்போது நாம் நம்முடைய பாவ சுபாவத்தைக்குறித்து இவ்வாறு சாட்சி பகருகிறோம்:

1. அதற்கு இனிமேல் நம்மீது அதிகாரம் இல்லை.

2. அது மரணத்திற்குட்படுத்தப்பட்டு விட்டது.

3. அது இனி ஜீவிக்காது.

4. இயேசுவின் சரீரத்தைப் போல், அது சிலுவையில் அறையப்பட்டது. நாம் இனியும் பாவத்துக்கு அடிமைகள் அல்ல. நம்முடைய வாழ்க்கையில், பாவத்தின் சக்தியிலிருந்து, நாம் விடுதலையாக்கப்பட்டோம். இயேசு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததுபோல, புதுமையான வாழ்க்கையில் நாம் நடக்கிறோம். இப்பொழுது கிறிஸ்துவின் மூலமாக தேவனுக்குள் ஜீவிக்கிறோம். கிறிஸ்து நம்முடைய கர்த்தர். அவரை பிரியப்படுத்த நாம் ஜீவிக்கிறோம். (ரோமர் 6:5-11, 1பேதுரு 3:21)

-

பிரதான கட்டளை
அல்லது
நாம் என்ன செய்யவேண்டுமென்று இயேசு கூறுகிறார்?

மத்தேயு 28:16-20

உண்மையாக இரட்சிக்கப்பட்டவர்கள், இதைப்பற்றிய யாவையும் விளங்கிக்கொண்டவுடனே, நீரில் ஞானஸ்நானம் தங்களுக்குக் கொடுக்கும்படி சாதாரணமாகக் கேட்டுக் கொள்ளுவார்கள். நாங்கள் விசுவாசிகளுக்கு நீரில் ஞானஸ்நானம் கொடுக்கிறோம். ஏனெனில் இதுதான், இயேசு நாம் செய்யும்படி கூறிய காரியம்! புதிய சீடர்கள், எல்லாரும் அறியும்படியாக கீழ்க்கண்டவற்றை அறிவிக்க நாங்கள் விரும்புகிறோம்:

1. கிறிஸ்துவில் அவர்களுடைய விசுவாசத்தையும், நம்பிக்கையும்.

2. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியோடு அவர்கள் இணைக்கப்பட்டது.

3. அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட ஆவிக்குரிய மாறுதல், அவர்கள் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகள், பழையவை ஒழிந்துபோயின. புதியவை வந்துள்ளது. உலகிற்கு இதை அறிவிக்கஇது ஒரு தருணம்! (2 கொரிந்தியர் 5:17, கலாத்தியர் 6:15)

எனவே, சீஷராக்குவது என்பது, முதலில் அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும், பின் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் நீரில் ஞானஸ்நானம் பெறவேண்டும். நாம் அடுத்து பார்க்கப்போகிற குறிப்பிலுள்ளபடி இத்துடன் அவர்கள் உபதேசிக்கப்படவேண்டும்.

3. அவர் கட்டளையிட்டவைகள் யாவையும், புதிய சீடர்களுக்கு உபதேசிக்கவேண்டுமென்று, இயேசு பெரிய கட்டளையில் நமக்குக் கூறியிருக்கிறார். (28:28)

அ. "அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்றால் போதிக்கப்பட்டவை களுக்குக் கவனம் செலுத்த வேண்டும். கற்றுக் கொண்டவைகளைத் தொடர்ந்து கைக்கொள்ளவேண்டும். கற்றுக் கொண்டவைகளை உங்களுடைய சத்துருக்களுக்கு எதிராக விழிப்புடன் நிற்கப் பயன்படுத்த வேண்டும்.

ஆ. "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும்". ஆகவே, புதிதாக மனந்திரும்பியவர்களுக்கு, இயேசுவினுடைய கற்பனைகளை, உபதேசிக்க வேண்டுமென்பது நித்தியமாக முக்கியமானது. நாம் உபதேசிக்க வேண்டிய கருத்துக்கள்:

1. இயேசுவினுடைய வார்த்தைகள் மற்றும் வாழ்க்கையை மத்திய முக்கியக் கருத்தாக இருக்கவேண்டும். பழைய ஏற்பாட்டு வார்த்தைகளைப் போலவே, அவருடைய வார்த்தைகள் நித்தியமாக நிலைத்திருக்கும். (மத்தேயு 24:35) அவைகள், விசுவாசிக்கு என்றும் உண்மையுள்ளவைகள், அவசியமானவைகள், மற்றும் அவன் வாழ்க்கை மாதிரியை சார்ந்தது.

2. நாம் அவர்களுக்கு உபதேசித்தவைகளைக் கற்றுக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படியும், சபையிலுள்ள நம்பத்தகும் அங்கத்தினர்களால் இது மற்ற தலைமுறையினருக்கும் எடுத்துச் செல்லப்படும். (2 தீமோத்தேயு 2:2)

இ. "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும்" என்பது, இயேசு அப்போஸ்தலர்களுக்கு, (பவுல் உள்பட)

பிரதான கட்டளை
அல்லது
நாம் என்ன
செய்யவேண்டுமென்று
இயேசு கூறுகிறார்?

மத்தேயு 28:16-20

அவர் பரத்திற்கு ஏறிச் சென்ற பின்பு, பரிசுத்த ஆவியானவர் மூலமாகப் போதித்தவைகளும் இத்துடன் சேர்க்கப்படும். (யோவான் 16:12-14, 1கொரிந்தியர் 14:37, கலாத்தியர் 1:11-12, 2பேதுரு 3:15-16) ஆகவே, ஆவியானவரால் தூண்டப்பட்ட மற்ற புதிய ஏற்பாட்டு வேதவசனங்களும், இந்தக் கற்பனைகளுடன் சேர்க்கப்படும்.

ஈ. இந்த உபதேசம், சபையில் கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட, தனி சிறப்பான ஊழியங்கள் மூலமாக நடைபெறுகிறது. எபேசியருக்கு எழுதின பவுல் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "பரிசுத்தவான்கள்... சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைவதற்காகவும் ... தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்". (எபேசியர் 4:11-13)

உ. இக்காரணத்தினாலேயே, ஆதித்திருச்சபையில் சீடர்கள், "அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்". (அப்போஸ்தலர் 2:42) இக்காரணத்தினால்,

1. கிறிஸ்துவினுடைய கற்பனைகளையும், மற்ற புதிய ஏற்பாட்டு வேத வசனங்களையும் உபதேசிப்பதில், உங்கள் போதகர் கவனமாக இருக்கிறார்.

2. மற்றவர்களுக்கு இவற்றை உபதேசிப்பதில் தகுதிபெற்றவர்களிடம் இந்த போதனைகளை நம்பிக் கொடுக்கிறார்.

3. ஊழியர்களை அனுப்புகிறார்.

4. சபைக்கு சுவிசேஷகர்கள் வரவழைக்கப்படுகிறார்கள். விசுவாசிகளுக்கு இயேசுவினுடைய கட்டளைகளை உபதேசிப்பது, இயேசுவினுடைய பெரிய கட்டளையை நிறைவேற்றுவதில் ஓர் பாகம்.

ஊ. "இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம், சகல நாட்களிலும் எப்போதும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்..." "எப்போதும்" என்றால், "ஒவ்வொருநாள் முழுவதும்" அவர் நமக்குக் கொடுத்த கட்டளையை நிறைவேற்ற, பரிசுத்த ஆவியானவர் மூலமாக, ஒவ்வொரு நாளின், ஒவ்வொரு நிமிடமும், வானத்திலும், பூமியிலும், சகல அதிகாரத்துடன் கிறிஸ்து நம்மோடு இருக்கிறார். நாம் இருக்கிற இந்த காலத்தின் முடிவு மட்டும், ஒவ்வொரு தேசத்திலுமுள்ள தலைமுறைகளில் உள்ள, எல்லா விசுவாசிகளுக்கும், இந்த வார்த்தை உண்மையாக இருக்கும்.

முடிவுரை

அ. இயேசு, கீழ்க்கண்டவற்றைச் செய்யுமாறு, நம்மிடம் கூறுகிறார்:

1. புறப்பட்டுப்போய் எல்லா தேசங்களையும் சீஷராக்குங்கள்.

2. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்.

பிரதான கட்டளை
அல்லது
நாம் என்ன செய்யவேண்டுமென்று இயேசு கூறுகிறார்?

மத்தேயு 28:16-20

3. அவர் கற்பித்த எல்லாவற்றையும், புதிய சீடர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.

ஆ. சபையின் இந்த பொறுப்புகளுக்கு இரண்டு பாகங்கள் இருக்கிறது.

1. சபையிலுள்ள விசுவாசிகளில் சிலர் இரத்த சாட்சிகளாகும் அவசியம் நேரிடுகிறது. மற்றும் சிலர் உலகமுழுவதும் சென்று சுவிசேஷத்தைப் பரப்ப அர்ப்பணிக்கின்றனர்.

2. சபையிலுள்ள, முதிர்ந்த பயிற்சி அளிக்கப்பட்ட விசுவாசிகள், கிறிஸ்தவ மதத்திற்குள் புதிதாக மனந்திரும்பி வந்தவர்கள், நீரில் ஞானஸ்நானம் பெற்றார்களா என்றும், கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் வாழ்க்கை பற்றியும், உபதேசங்களைப் பற்றியும் அறிவுரைகளைப் பெற்றுக் கொண்டார்களா என்றும் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

3. புதிய சீடர்கள், மாணாக்கர்கள் போலவும், கற்றுக் கொள்பவர்கள் போலவும் தங்களைத் தாழ்த்தி, நீரில் ஞானஸ்நானம் பெறவும், அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ளவும் விரும்பி அதற்குத் தங்களை ஒப்புக் கொடுக்கவேண்டும். அநேகருக்கு முழு சுவிசேஷம் தெரியவில்லை அல்லது ஒரு பாகம் மட்டுமே அறிந்துள்ளனர். ஆகவே நீ கற்றுக் கொள்ள வேண்டியவைகள் அநேகம் உண்டு.

இ. இரண்டு பக்கத்திலும் உள்ளவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல், சபை அதனுடைய ஊழியத்தில் தோல்வியடையும்.

அநேகர், கிறிஸ்துவிடமிருந்தும், சபையிலிருந்தும் விலகி விழுந்து போவார்கள். நாம் எந்த விதமான வேலை செய்தாலும் அல்லது உள்ளூரிலுள்ள மற்ற சபைகளை மற்றும் தேசத்தில் அல்லது வெளிநாடுகளிலுள்ள சபைகளை ஆதரிக்கும்போதும் இது பொருந்தும்.

ஈ. ஆகவே கிறிஸ்து நமக்குக் கூறியவைகளின்படி நாம் செய்யவேண்டுமானால், நாம் உறுதியாகத் தனிப்பட்ட முறையில் புதிதாக மனந்திரும்பியவர்கள், நீரில் ஞானஸ்நானம் பெறுவதையும், சீடத்துவ பயிற்சி திட்டங்களில் ஈடுபடுவதையும் இந்த சபையிலும் மற்றும் இந்த சபை தாங்கும் உள்ளூர் எல்லைக்கு அப்பாற்பட்ட சபைகளிலும் ஆதரிக்கவேண்டும்.